# திருவரங்கக்கலம்பகம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண்.503

# திருவரங்கக் கலம்பகம்

## (எளிய உரையுடன்)

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் திருமதி. **சத்தியபாமாகாமேஸ்வரன்,**

எம்.ஏ., எம்.ஃபில்.,எம்.எட்., பிஎச்.டி.,

டி.ஐ.எம்., டி.ஏ.எஸ்ஸி.,

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்- 613 009.

2007 விலை : ரூ.230/-

# நூல்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : திருவரங்கக் கலம்பகம் |
| பதிப்பாசிரியர் | : முனைவர் சத்தியபாமாகாமேஸ்வரன் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர் |
| வெளியீட்டு எண் | : 503 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : முதல் பதிப்பு |
| வெளியீடு | : ஆகஸ்டு 2007 |
| தாள் | : டி.என்.பி.எல். 17.8 கி |
| நூல் அளவு | : 24 x 14 செ.மீ |
| பக்கங்கள் | : 404 |
| படிகள் | : 250 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : சரசுவதி மகால் நூலக ஒளியச்சகம் |
| புத்தகக் கட்டு | : லேமினேஷன் அட்டை |
| பொருள் | : சிற்றிலக்கியம் |
| பகுப்பு | : 031,1 P7 |
| விலை | : ரூ.230-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச்செல்வத்தை அள்ளித் தந்து கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிகளின் கருவூலகமாகவும், பன்மொழி நூற்கள் ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது.

இந்நூலகத்தின் முக்கிய நோக்கம் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம், சிற்பம் போன்ற அரிய சுவடிகளைப் பதிப்பித்து அச்சு நூலாக்கி மக்கட்குப் பயன்படச் செய்தலேயாகும். அவ்வாறு செய்துவருவதனுள் இத் 'திருவரங்கக் கலம்பகமும்' ஒன்றாகும்.

கலம்பகம் பலவகைச் செய்யுட்களும், அகம், புறம் முதலிய பொருட் கூறுபாடுகளும், நகை, பெருமிதம், வெகுளி, உவகை முதலிய பலவகைச் சுவைகளும் நிரம்பிய ஒரு கலவைப் பிரபந்தமே கலம்பகமாகும். பிரபந்த வகைகளுள் கலம்பகம் சற்றுப் பின்னர்த் தோன்றிய இலக்கியமே எனலாம். தனித்தனிப் பாக்களில் சிற்சில தனி மரபுகளில் பிரபந்தங்கள் சில தோன்றிய பின்னரே இவ்வகையான கலவைச் சுவையமைந்த பிரபந்தம் இயற்றுவதில் புலவர்களுடைய நாட்டம் சென்றிருத்தல் கூடும்.

பல்வேறு வகையான நிறமும் உருவமும் மணமும் கொண்ட மலர்களால் தொடுத்த மலர்மாலை போன்று இப்பிரபந்தமும் பல்வேறு வகைப் பாக்களையும் பொருள்களையும் சுவைகளையும் கொண்டுவரும் என்னும் உவமை நயம் பொருந்துவதே இது கலம்பகம் என்னும் பெயர் பெறுவதாயிற்று. 'பல்பூ மிடைந்த படலைக் கண்ணி'(174) என்ற பெரும்பாணாற்றுப்படை வரிக்குப் 'பல பூக்கள் கலந்து நெருங்கிய

கலம்பகமாகிய மாலை' என நச்சினார்க்கினியர் உரை வகுத்துள்ளார். யாப்பருங்கலவிருத்தியில் அடிகள் எழுத்து ஒவ்வாது வெவ்வேறு வகையில் அமைந்துவரும் கலிப்பாவிற்குக் 'கலம்பகக் கலி' என்று பெயர் தரப்படுகிறது. (யாப். வி.95) இவைகளும் இப்பெயர்க் காரணத்தை விளக்கும்.

தெய்வங்களையும் அரசர்களையும் தலைவர்களாகக் கொண்டு பிரபந்த வகைகள் பிறந்தன. பிரபந்த வகைகள் பலவாகத் தோன்றத் தொடங்கியதற்கு முக்கிய ஏதுவாக இருந்தது பக்தி எழுச்சி. ஆகவே, தெய்வங்கள் மீது பாடப்பெற்ற பிரபந்தங்களே மிக அதிகமாக உள்ளன. தெய்வங்களைப் பற்றிய கலம்பகங்கள் தெய்வப் பெயரோடு சார்த்திக் கூறப்பெறாது, தெய்வங்கள் எழுந்தருளியுள்ள ஊர்ப் பெயரொடு சார்த்தி வழங்கப்பட்டு வருகின்றன. மதுரைக் கலம்பகம், தில்லைக் கலம்பகம், திருவரங்கக் கலம்பகம் முதலிய உதாரணங்களாம்.

இந்நூலகத்தில் சுவடிஎண்.711-பி நூலை முனைவர் சத்தியபாமாகாமேஸ்வரன் அவர்கள் அரிதின் முயன்று கற்போரும் இலக்கிய ஆர்வலர்களும் எளிதில் பொருள் கொள்ளும் இனிய எளிய உரையில் ஒப்புமையுடன் தந்திருக்கிறார்கள். இந்நூலின் ஆசிரியரான பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் காலம், அவர் யாத்த இலக்கிய நூல்கள், அவர் இயற்றிய திருவரங்கக் கலம்பக நூலமைப்பு, அதில் வரும் கலம்பக உறுப்புகள், தலச்சிறப்பு, திருவரங்கமும் அதன் தொன்மையும், திருமாலின் அவதாரச் சிறப்புகள், திருவரங்கக் கலம்பகத்தின் இலக்கிய நயம், உவமையணி, உருவக அணி, சிலேடை, தற்குறிப்பேற்ற அணி இல்பொருள் உவமையணி, மடக்கணி, சொற்பொருள் பின்வருநிலையணி, ஏகதேச உருவக அணி, மயக்கவணி, உருவக உயர்வு நவிற்சியணி ஆகிய பொருண்மைச் சிறப்புகள் விரவியும் பரவியும் வந்துள்ளனவற்றை எடுத்துக்காட்டியுள்ளார்.

அடுத்து தொல்காப்பியம் சுட்டும்,

'நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப'

என்ற எண்வகைச் சுவை திருவரங்கக் கலம்பகத்தில் பாங்குற அமைந்து

படிப்பவர்களை இன்புறுத்தும் இயல்பை எடுத்துக் கூறியுள்ளார். இவ்வாறு பதிப்பாசிரியர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு என் இனிய பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர்(பொறுப்பு) வகிக்கும் சைவத் தமிழ்ப் புலவர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூல் கணினியில் வெளிவர துணைநின்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர்,
14.8.2007

**சா. விஜயராஜ் குமார்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.



# நன்றியுரை

தொன்மைமிகு தமிழுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பழமையான ஓலைச்சுவடிகளில் உள்ள பல மொழிகளைச் சார்ந்த பல்துறை நூல்கள் பலவற்றையும் தொடர்ந்து வெளியிட்டு வருகின்ற அரும்பெரும பணியாற்றிவரும் நிறுவனமாக விளங்குவது தஞ்சை தரணிக்குப் பெருமை சேர்க்கும் தஞ்சை சரசுவதி மகால் நூலகம். அந்நூலகத்தின் சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியராக இருந்து, 'திருவரங்கக் கலம்பகம்' நூலைப் பதிப்பிக்கவும் எளிய உரை எழுதவும் வாய்ப்பளித்த அந்நூலகத்தினருக்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவராகவும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் இயக்குநராகவும் விளங்கி, இந்நூலைப் பதிப்பிக்கும் பணிக்கு அனுமதி வழங்கிய திரு. சி. கோசலராமன், இ.ஆ.ப., அவர்களுக்கும் திரு. சா. விஜயராஜ் குமார், இ.ஆ.ப. அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன். இந்நூலைப் பதிப்பிக்கும் பணியில் எனக்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்கியவர் தஞ்சை சரசுவதி மகால் நிர்வாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம், எம்.ஏ., அவர்கள். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடித்துறை நான் ஈடுபடுவதற்குக் காரணமாக இருந்த பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய ஆசிரியப் பெருந்தகை முனைவர் பூ. சுப்பிரமணியம் அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இப்பணியில் நான் அடியெடுத்து வைப்பதற்குக் காரணமாக இருந்த என் பெற்றோருக்கும், இந்நூல் உருவாக்கத்திற்கு எனக்கு ஊக்கமளித்த என் கணவர் கேப்டன் அ. காமேஸ்வரன் அவர்களுக்கும் என் நன்றி உரியது.

இந்நூலைப் பதிப்பிக்க மேற்கொண்ட முயற்சிக்கு உதவிய அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலுக்குச் சிறந்தமுறையில் ஒளியச்சுக் கோப்புப் பணியைச் செய்தளித்த திரு. க. பத்மநாபன் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன். மேலும், அறிஞர் பெருமக்கள், இப்பதிப்புப் பணி குறித்த தங்களுடைய கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கி, வழிகாட்டி உதவுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
28.12.2006.

**சத்தியபாமாகாமேஸ்வரன்.**
பதிப்பாசிரியர்.



சரசுவதி மகால் நூலக

## தமிழ் வெளியீடுகளின் விலைப்பட்டியல்

| | ரூ. பை. |
|---|---|
| அரிச்சந்திரன் அம்மானை | 75.00 |
| ஆற்றுப்படைத் தொகுதி | 45.00 |
| சிதம்பரப் பாட்டியல் | 45.00 |
| ஞானக்குறவஞ்சி | 20.00 |
| குமரேசசதகம் | 65.00 |
| அருணகிரி அந்தாதி | 12.00 |
| இராமர் அம்மானை | 22.00 |
| வண்ணத்திரட்டு | 19.00 |
| புல்லையந்தாதி | 12.00 |
| பாரத அம்மானை | 90.00 |
| வைகுந்த அம்மானை | 160.00 |
| கணக்கதிகாரம் | 150.00 |
| தொல்காப்பியம் (எழுத்ததிகாரம்) | 55.00 |
| தொல்காப்பியம் (சொல்லதிகாரம்) | 100.00 |
| செந்தமிழ் | 35.00 |
| கொடுந்தமிழ் | 40.00 |
| திருமுருகாற்றுப்படை – உரை | 350.00 |
| தணிகைக் கலம்பகம் | 25.00 |
| தனிப்பாடல்திரட்டு பாகம் – 1 | 30.00 |
| தனிப்பாடல் திரட்டு பாகம் – 2 | 40.00 |
| மதுரை வீரன் அம்மானை | 20.00 |
| ஆஸ்தான கோலாகலம் | 80.00 |
| பொன்னர் சங்கர் அம்மானை | 40.00 |
| திருக்குறள் ஜைனஉரை | 75.00 |

ஓம் ஸ்ரீ மஹா கணாதிபதயே நம:

# பதிப்புரை

தொன்மைமிகு இந்து சமயத்தின் அறுவகை வழிபாட்டு மரபுகளில் தமிழகத்தில் தழைத்தோங்கி நிற்பன சைவ, வைணவ மரபுகளாகும். இவற்றுள் வைணவ மரபாகிய திருமால் வழிபாடு குறித்து பழந்தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களில் செய்திகள் பரந்து கிடக்கின்றன. 'மாயோன் மேய காடுறை உலகம்' , 'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பில், தாவர விழுப்புகழ் பூவை நிலையும்[2] என தொல்காப்பியம் மாயோனாகிய திருமாலின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றது. முல்லை நிலத் தெய்வமாகச் சங்ககாலத்தில் போற்றப்பட்ட திருமாலை, கணங்கொள் அவுணர் கறந்து பொலுந்தார், மாயோன் மேயஓண் நன்னாள்"[3] என்று மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கிறது. பெரும்பாணாற்றுப்படை, காந்தளம் சிலம்பில் களிறுபடிந் தாங்குப், பாம்பணைப் பள்ளியில் அமலர்ந்தேன்[4] என்று திருமாலைச் சுட்டுகிறது. திருமாலைப், புள்ளணி நீற்கொடி செல்வன்"[5] என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. பரிபாடலில் பாண்டிய நாட்டில் திருமாலிருஞ் சோலை, இருந்தையூர், குளவாய் ஆகிய இடங்களில் திருமாலுக்குக் கோயில்கள் இருந்ததையும் திருமாலின் சிறப்புகளையும் எடுத்துரைக்கிறது.

..............................................................................................

1. தொல்: அகத்திணையியல் : 5
2. தொல் : புறத்திணையியல் : 5
3. மதுரைக் காஞ்சி; பாடலடிகள் 590 – 591
4. பெரும்பாணாற்றுப்படை பாடலடிகள் 372 – 373
5. திருமுருகாற்றுப்படை ; பாடலடி 151

சிலப்பதிகாரத்தில், திருவரங்கத்தில் திருமாலின் கிடந்த கோலத்தை,

"நீல மேகம் நெடும்பொன் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரிந்தெழு தலையுடை அருந்திறல்
பாயல் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்"[6]

என்றுரைக்கும். திருவேங்கடத்தில் எம்பெருமானின் நின்ற கோலத்தைக் குறித்தும் விரிவாகப் பேசும்.[7] மேலும் ஆய்ச்சியர் குரவை, கண்ணனின் வரலாற்றை எடுத்துரைக்கும். மணிமேகலையில் குரவைக் கூத்து பற்றிய செய்தி கிடைக்கிறது.[8]

திருமால் அடியவர்கள் ஊர் ஊராகச் சென்று, அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமானை வணங்கி, பாடி, ஆடி மகிழ்ந்தனர். திருமாலைக் குறித்தும் திருத்தலங்களைப் பற்றியும் இலக்கியங்களைப் படைத்தனர். அத்தகைய திருமாலின் அருளைப் பெற்ற அடியவர்கள் ஆழ்வார்களாவர். இவர்கள் எழுதிய பாடல்களின் தொகுப்பு, 'நாலாயிரத் திவ்விய பிரபந்தம்' என்று அழைக்கப்படுகின்றது. இவை பிற்கால வைணவ தமிழ் இலக்கியங்களுக்கு வித்துக்களாக அமைந்தன. இத்தகைய பக்திப் பனுவல்கள், ஓலைச்சுவடிகளாகவும், அச்சு வடிவிலும் கிடைக்கின்றன. ஓலைச்சுவடிகளில் உள்ள நூல்கள் பலவும் அச்சேறாமலேயே உள்ளன. அச்சு வடிவில் உள்ள நூல்கள் பலவும் இன்று கிடைப்பதற்கு அரியனவாக உள்ளன.

அச்சில் ஏறி இருப்பினும் இன்று அரிதாகக் கிடைக்கும் நூல்களை, ஓலைச்சுவடிகளில் இருந்து பதிப்பித்து நூலாகக் கொண்டு

.......................................................................................

6. சிலப்பதிகாரம்; காடுகாண் காதை : பாடலடிகள் 35 – 40
7. சிலப்பதிகாரம்; காடுகாண் காதை : பாடலடிகள் 41 – 51
8. மணிமேகலை சிறைக்கோட்டந்தை அறக்கோட்டமாக ஆக்கிய காதை ; பாடலடிகள் 61 – 66.

வரவேண்டியது அவசியமானதாகும். அந்தவகையில் சோழநாட்டில் திருவரங்கப்பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருவரங்கத்தின்மீது பாடப்பட்டுள்ள திருவரங்கக் கலம்பக நூல் ஓலைச் சுவடியில் இருந்து பெயர்த்து எழுதப்பட்டு, வை.மு. சடகோபராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியார் ஆகியோரால் விரிவான உரை எழுதப்பட்டு 1914இல் வெளிவந்த 'அஷ்டப்பிரபந்தம்' நூலில் உள்ள திருவரங்கக் கலம்பக உரையை முதன்மையாகக் கொண்டு எளிய உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலையன்றி, 1903 ஆம் ஆண்டில் மூலம் மட்டுமே அமைந்த பதிப்பு ஒன்று வெளிவந்துள்ளது. இதைப் பதிப்பித்தவர் திருநாராயணபுரம் ஸ்ரீமான் கோவிந்தராஜ ஐயங்கார். மேலும் 1955இல் மே.வி. வேணுகோபாலப்பிள்ளை குறிப்புரைகளுடன் பதிப்பித்துள்ள அஷ்டப்பிரபந்தம் குறிப்பிடத்தக்க பதிப்பாகும். குறிப்புரை மட்டுமே அமைந்துள்ள காரணத்தால், நூலை அறியமுயல்வோருக்கு பொருளை முழுமையாக அறிய இயலாது.

ஆதலின் படிப்போரும் ஆர்வலர்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் எளிய உரையுடனும், ஒப்புமைப் பகுதிகளுடன் இப்பதிப்பு அமைந்துள்ளது.

**கலம்பகம்:**

சிற்றிலக்கியம், பிரபந்த இலக்கியம் என்று வழங்கப்படும். பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல்,

'பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாத்
தொண்ணூற்றாறு என்னும் தொகையதாம்'

என்று குறிப்பிடும். சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில், படிக்காசுப் புலவரால் 'தொண்ணூற்றாறு கோல பிரபந்தங்கள் கொண்ட பிரான்' என்று சிவபெருமான் சுட்டப்படுகிறார். இதனால் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் என்பது பெறப்படும். காலப்போக்கில் இவை பல்கிப் பெருகின. இச்சிற்றிலக்கிய வகையுள் ஒன்றாக விளங்குவது 'கலம்பகம்' என்ற சிற்றிலக்கிய வகையாகும்.

**கலம்பகம் – பெயர்க் காரணம்:**

'கலம்பகம்' என்ற சொல்லிற்குக் கலவை என்பது பொருள். கலம்பகம் என்ற சொல் கலம்பு + அகம் என்று பிரிக்கப்படும். கலம்பு என்ற சொல்லே 'கலம்பு' என நின்றதாகக் கொண்டு, பல்வேறு உறுப்புகளையும் தன்னகத்தே கொண்டநூல் ஆதலின் கலம்பகம் என்ற பெயர் பெற்றதாகக் கூறுவர்.

'கலம்' பன்னிரு மரக்கால் என்னும் முகத்தலளவைக் கருவி. 'பகம்' அதில் பாதியான ஆறுமரக்கால் இப்பன்னிரண்டும் ஆறுமாகிய பதினெட்டு உறுப்புகளை உடைமையால் கலம்பகம் என்று பெயர் பெற்றதென்றும் கூறுவர். இது ஏற்புடையதன்று என்று மறுப்போரும் உண்டு. இதற்குக் காரணம் கலம்பக நூல்கள் பல, பதினெட்டு உறுப்புகளையும் பெற்று வருவதில்லை.

பாக்களாலும் பொருளாலும் உறுப்பாலும் கலவைநிலை பெற்று விளங்குவது கலம்பகம் என்பது, அறிஞர் பெருமக்கள் ஏற்றுக் கொள்ளும் கலம்பகப் பெயர்க் காரணமாகும்.

**கலம்பகம் தனிச் சிற்றிலக்கியமாதல்:**

தொல்காப்பியத்தில், புயவகுப்பு, திருவடிவகுப்பு, வண்டு, அம்மானை, பாண், கைக்கிளை, ஊசல், ஊர், மறம், காலம், தழை, இரங்கல், களி, தூது, குறம் முதலான கலம்பக உறுப்புகளுக்கான வித்துக்களைக் காணமுடிகிறது. மயங்கிசை கொச்சகக் கலிப்பா என்னும் கொச்சக ஒரு போகு, தேவரைப் பாடும் யாப்பமைப்பு (தொல்.பொருள் 551) என்றும் கலம்பக யாப்பமைப்பைச் சுட்டுகிறது. சங்ககால அகத்துறை, புறத்துறைப்பாடல்கள் பொருண்மை நிலையில் வித்துக்களாக அமைந்துள்ளன. சிலம்பில் பயின்றுவரும் ஊசல்வரி, அம்மானை போன்றவை கலம்பகங்களில் தனித்த உறுப்புகளாக அமைந்துள்ளதால் சிலப்பதிகாரமும் கலம்பக இலக்கியத்தைப் பாட வழிகோலியுள்ளது எனலாம்.

இவ்வாறு தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும், காப்பியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் காணப்பட்ட உறுப்புகளில் சிலவற்றை மட்டும் விரிவாக எடுத்துரைத்துக் 'கலம்பகம்' என்ற புதுவகை இலக்கியத்தைத் தோற்றுவித்துள்ளனர் என்றால் மிகையாகாது.

**பாட்டியல் கூறும் கலம்பக இலக்கணம்:**

சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் பலவும் கலம்பகத்தின் இலக்கணத்தை விரிவாக எடுத்துரைக்கின்றன. குறிப்பாகப் பன்னிருபாட்டியல், சிதம்பரப்பாட்டியல், வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல், பிரபந்த தீபிகையில் இக்கலம்பக இலக்கணத்தைக் காணலாம்.

ஒருபோகு வெண்பாவும் கலித்துறையும் முதற் கவியுறுப்பாக முற்கூறப் பெற்றுப், புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் இப்பதினெட்டு உறுப்புகளும் பொருந்த மடக்கு, மருட்பா, ஆசிரியர்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலித்தாழிசை, வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை என்னும் இவற்றால் இடையே வெண்பா கலித்துறை விரவ அந்தாதித் தொடையால் முழுதுறக் கூறல் கலம்பகமாகும். இதனை இலக்கண விளக்கம் பாட்டியல்,

*"ஒருபோகு வெண்பாக் கலித்துறை உறமுன்*
*வருபுய மதங்கம் மானை காலம்*
*சம்பிர தம்சார் தவங்குறம் மறப்பாண்*
*களிசித் திரங்கல் கைக்கிளை தூது*
*வண்டு தழைமேற் கொண்டெழும் ஊசல்*
*மடக்கு மருட்பா வஞ்சி விருத்தம்*
*வஞ்சி வஞ்சித்துறை வெண்டுறை மருவி*
*இடையிடை வெண்பாக் கலித்துறை நடைபெற்*
*றந்தாதி மண்டலித் தாங்கலம் பகமே."*

– (இலக்கண விளக்கப் பாட்டியல்:15)

என்று எடுத்துரைக்கிறது. இக்லம்பகம் தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சருக்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும், உழவர்க்கு முப்பதுமாகப் பாடுதல் வேண்டும் என்பர்.

"அதுவே,
*இமையவர்க் கொருநூ றிழிபைந் தையர்க்*
*கமைதரும் அரசர்க் காகும் தொண்ணூ*
*றமைச்சருக் கெழுபான் வணிகருக் கைம்பான்*
*அமைத்தனர் பின்னவர் தமக்கா றைந்தே."*

– (இலக்கண விளக்கப் பாட்டியல்:53)

என இலக்கண விளக்கப்பாட்டியல் இதனை எடுத்தோதுகிறது. பாட்டியல் நூல்களுள்ளும் கலம்பகத்தின் இலக்கணத்தை வகுப்பதிலும், பாடல்களின் தொகைகளிலும் மாறுபட்ட கருத்துகள் நிலவுவதைக் காணலாம்.

**கலம்பகமும் கலம்பக மாலையும்:**

சிற்றிலக்கிய வகைகளுள் 'கலம்பகம்' விளங்குவதைப் போன்று கலம்பக மாலை என்ற வகையும் காணப்படுகிறது. ஒருபோகும் வெண்பாவும் கலித்துறையும் முதலாகக் கூறப்பெறும் கலம்பக உறுப்புகளுள் ஒருபோகு, அம்மானை என்னும் இரண்டும் நீக்கி மற்றவையனைத்தும் வரின் அது கலம்பகமாலை என்னும் பெயர் பெறும். இதற்குப் பன்னிருபாட்டியல்,

"ஒருபோ குடனே அம்மானை நீக்கி
வெள்ளை முதலா எல்லா உறுப்பும்
தள்ளா இயலது மாலை"

– (பன்னிருபாட்டியல் : 260)

எனவும்,

"ஒருபோ கம்மானை ஒழித்துவெண் பாடுதற்
கருதிற் பேரது கலம்பக மாலை"

– (பன்னிரு பாட்டியல் :261)

எனவும் இலக்கணம் கூறும். கலம்பகமாலை என்ற பெயரை, "பலபூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலை" என்றும் பெரும் பாணாற்றுப்படையின் 'பல்பூ மிடைந்த படலைக் கண்ணி'[9] என்ற தொடருக்கு நச்சினார்க்கினியர் கூறியுள்ள உரைவிளக்கமும் "களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலந் தொடையல் கொண்டு"[10] என்னும் தொண்டரிப்பொடியாழ்வாரின் பாசுரச் செய்தியும் கலம்பக மாலை என்னும் சிற்றிலக்கிய வகையைக் குறித்துக் கூறுவனவாக அமைந்துள்ளது. இவ்விரு சான்றுகளையும் எடுத்துரைத்து, பல்வகை மலரும் கலந்து தொடுக்கப்பட்ட மலர்மாலையைக் குறித்தலால், கலவை என்னும் அடிப்படை பொருண்மையின் சார்புடன் கலம்பகம் அமைந்தமை விளக்கும் என்று கலம்பகமும் கலம்பக மாலையும் ஒரே இலக்கியவகை

9. பெரும்பாணாற்றுப்படை : பாடல் அடி 174
10. திருப்பிள்ளியெழுச்சி : 5

என்ற கருத்துப் பலரிடையே நிலவி வருகின்றது. ஆனால் பாட்டியல் நூல்களில் காணலாகும் இலக்கணங்களின்படி கலம்பக இலக்கியமும் கலம்பகமாலை இலக்கியமும் வெவ்வேறானவை என்று அறிதல் வேண்டும்.

**கலம்பக நோக்கம்:**

கலம்பகத்தின் முதன்மை நோக்கம் பாட்டுடைத் தலைவரைப் புகழ்வதாகும். அத்தகைய புகழ்ச்சியையும் பலவிதக் கூற்றுகளில் வைத்துப்பாடுவது சிறந்த இலக்கிய உத்தியாகும்.

முதல் பாடல், புயவகுப்பு, பிறவும் கவிக் கூற்றாகவும்; தலைவன், தலைவி கூற்றுகளை உயர்தட்டு மக்கள் கூற்றாகவும்; தோழி, பாங்கன் கூற்றுகளை நடுத்தர மக்கள் கூற்றாகவும்; குறத்தி போன்றோர் கூற்றுகளை தாழ்த்தப்பட்ட மக்கள் கூற்றாகவும்; கட்குடியன் போன்றோர் கூற்றுகளை இழிநிலைப்பட்ட மக்கள் கூற்றாகவும் பலவாறு பாடுவது மரபாக உள்ளது. ஆக சமுதாயத்திலுள்ள எல்லாப்பிரிவு மக்களும் புகழ்வதாக அமைப்பது ஓர் சிறப்பாகும்[11] என்பது இங்கு சுட்டத்தக்கது.

கலம்பகத்தில், தமிழில் உள்ள பல யாப்புகளும் பயின்று வருகின்றன. பலவகையான பாக்களை ஒரே புலவர் பாடுதல் மிகவும் அருமையானதாகும். பலவகைத் திறம் மிக்க புலவர்களால் மட்டுமே இக்கலம்பக இலக்கியங்களை இயற்ற இயலும். எனவே கலம்பக இலக்கியங்கள் குறைந்த எண்ணிக்கையிலேயே இன்று கிடைக்கின்றன.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய நந்திக்கலம்பகம் இன்று நமக்குக் கிடைக்கும் முதல் கலம்பக இலக்கியமாகும். தமிழில் முதன்முதலாக வைணவக் கடவுள்மீது எழுந்த முதல் கலம்பகம் திருவரங்கக் கலம்பகமாகும். இதனை இயற்றியவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

***பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்:***

அழகிய மணவாளதாசன் என்றழைக்கப்படும் 'திவ்வியகவி' பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், சோழநாட்டில் திருமங்கை என்ற ஊரில் அந்தணர் குலத்தில் தோன்றினர். நல்லாசிரியரிடம் தொல்காப்பியம் முதலிய அரிய பெரிய இலக்கண நூல்களையும் பழைய சங்கச்

.............................................................................

**11. வீரகேரளம்புதூர் நவநீத கிருட்டிணன் கலம்பகம், ப.8.**

செய்யுள்களையும், அக்காலத்தில் வழங்கி வந்த மற்ற நூல்களையும் ஐயம் இன்றிக் கற்றவர்; அதைப் போலவே வடமொழியிலும் வேதம், வேதாங்கம், வேதாந்தம் முதலியவற்றில் வல்லவர். மேலும் தனது வைணவ சமயத்திற்கு உரிய கடைப்பிடிகளை நன்குணர்ந்தவர். அடக்கம் முதலான நற்குணங்கள் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர்; ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தத்தில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர்; திருவரங்கப் பெரிய கோயிலில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான் மீது பேரன்பு பூண்டு ஒழுகுபவர்.

**பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் காலம்:**

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் வாழ்ந்த காலம் குறித்து இரு மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

'இவர் ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைத மதஸ்தாபநாசாரியரான ஸ்ரீ பகவத் ராமாநுஜாசார்யரென்கிற ஸ்ரீ பாஷ்யகாரரது அந்தரங்க சிஷ்யரான கூரத்தாழ்வானுடைய குமாரராகிய ஸ்ரீபராசர பட்டரது சிஷ்யராதலாலும், அந்தப்பட்டரது திருவவதாரம் சாலிவாகன சகாப்பதம் ஆயிரத்து நாற்பத்தைந்தில் என்று தெரிதலாலும், இவரது காலம் இன்றைக்குச் சற்றேறக் குறைய எழுநூற்றறுபது வருஷத்துக்கு முன்னராகிறது. (இப்பொழுது நிகழ்கின்ற சாலிசகம் 1836) இவரை ஸ்ரீ பாஷ்யகாரரது ஸ்ரீபாதத்தி லாசிரயித்தவர்களுட் பிரதானரும் இராமநுச நூற்றந்தாதி அருளிச் செய்தவருமாகிய திருவரங்கத்தமுதரது திருக்குமார ரென்று பலரும் திருப்பேரனாரென்று சிலரும் வழங்கி வருவது, கீழ்க்கூறிய காலகணக்கையே வற்புறுத்தும்'' என்று வை.மு. சடகோபராமநுஜாசாரியரும், சே. கிருஷ்ணமாசாரியரும், வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியரும் எழுதிய விரிவான உரையுடன் கூடிய திருவரங்கக் கலம்பக பதிப்பின் முன்னுரையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், இராமனுசரின் அந்தரங்கச் சீடரான கூரத்தாழ்வாரின் மகனான பராசரப் பட்டரிடம் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், பஞ்ச சமஸ்காரம் பெற்று சீடரானார் என்பதை,

"வாளிட்ட கீர்த்தி வளர்கூரத் தாழ்வான் மகிழவந்த
தேனிட்டா தார்நம் பெருமாள் குமாரர் சிவனையயன்
தானிட்ட சாபம் துடைத்தார் அரங்கர்சந் காழிபுயம்
நாளிட்டன் என்றருள் பட்டர்பொன் தாங்கதி நந்தமக்கே."

– (திருவரங்கக் கலம்பகம்.பாயி.4)

என்று திருவரங்கக் கலம்பகப் பாடல் உணர்த்துகிறது. இங்கு 'பட்டர்' என்பது ஸ்ரீ பட்டரான பராசரபட்டரைக் குறிக்கும் என்பர்.

அஷ்டப்பிரபந்தங்களுள் மற்றொரு நூலான நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் ஆழ்வார்கள் காப்பு, நம்மாழ்வார், உடையவர், கூரத்தாழ்வான், பராசரபட்டர் என்ற வரிசையில் காப்புச் செய்யுட்களை அமைத்து பராசரபட்டரை,

"நான்கூட்டுழல் வந்தவன்றே நானறியா நன்மையெல்லாம்
தான்கூட்டி வைத்தநலந் தான்கண்டீர் – ஆங்கூட்டச்
சிட்டருக்கு வாய்ந்த திருவரங்கன் இன்னருளால்
பட்டருக்காட் பட்ட பயன்."

(நூற்றெட்டு திருப்பதி அந்தாதி பாயி:6)

என்று வணங்கி நூலைத் தொடங்குகின்றார். பராசர பட்டரின் காலம் 12ஆம் நூற்றாண்டு என்பதால் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் காலம் அதுவே எனப்பெறப்படுகிறது.

காப்புச் செய்யுட்களில் கூறப்பட்டுள்ள இத்தகைய செய்திகளை மட்டுமே கருத்தில் கொண்டு பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் காலம் 12ஆம் நூற்றாண்டு என முடிவு செய்ய இயலாது. காலத்தால் முந்தியவர் எனக் கூறிப் பெருமைப்படவும், இராமானுசரின் வழிவந்தவர் என ஏற்றம் கூறவும் விரும்பும் வைணவ சமய அறிஞர்கள் சிலர் இவரை, 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்கின்றனர் எனலாம். பராசரப் பட்டருடன் நேரடித் தொடர்பு உடையவராக இவர் இருந்திருப்பின், இவரைப் பற்றிய குறிப்புகள் குருபரம்பரை நூல்களிலோ, கோயில் வரலாறு உரைக்கும் கோயிலொழுகிலோ இடம் பெற்றிருக்கும். அவ்வாறு இடம்பெறவில்லையாதலால், பராசரப்பட்டரின் சீடராகக் கருத இயலவில்லை என்பார் V. இராமச்சந்திரன்[12]

அட்டப்பிரபந்தங்களுள் ஒன்றான திருவேங்கடத்தந்தாதி இறுதியில்,

..........................................................................................

12. திருவரங்கத்து அந்தாதி – ஓர் ஆய்வு, ப.12.

மட்டளை தண்டலை சூழ்வட வேங்கட வாணனுக்குத்
தொட்டளை உண்டபிரா னுக்கன்பாம் பட்டர் தூயபொற்றாள்
உட்டளை உண்ட மணவாள தாசன் உகந்துரைத்த
கட்டளை சேர்திரு வந்தாதி நூறு கலித்துறையே.
- (திருவேங்கடத்து அந்தாதி : 103)

இங்கு பட்டர் என்றுள்ளதே அல்லாமல் பராசரபட்டர் என்று கூறப்படவில்லை. பட்டர் என்பது பண்டிதரைக் குறிக்கின்ற சொல்லாகும். இவருடைய நூல்களில்,

'குணவாள ராம பட்டர்' (திருவரங்கத்துந்தாதி : 107)
'குணவாள பட்டர்' (திருவேங்கட மாலை : 101)
'குணவாள பட்டர்' (நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி : 109)

எனவும் "வேதாசாரிய பட்டர்க் கடிமையான வெண்மணிப் பிள்ளைப் பெருமான் விளம்பினானே[13] (சீரங்கநாயக ரூசல் : 33) எனவும் குறிப்பிட்டு, வேதாசாரிய பட்டர் என பலவாறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அழகரந்தாதியில், நலங்காத சொற்றொடை யந்தாதியைப் பற்பநாப பட்டன்" (அழகரந்தாதி : 103) என்று சொல்லப்பட்டுள்ளது. இவற்றுள் 'வேதாசாரிய பட்டர்' என்பது பட்டரைக் குறிக்கும் என்பதும் 'வேதாசாரிய' என்பது பட்டருக்குச் சொல்லப்பட்டுள்ள அடைமொழி எனக்கருத இடம் உண்டு. ஆனால் குணவாள பட்டர், பற்பநாபப் பட்டன் ஆகிய பெயர்கள் சிந்திக்கத் தக்கன.

குணவாளராம பட்டர், குணவாள பட்டர் என்ற தொடர்களுக்கு, குணம் + ஆள் + பட்டர் எனப் பிரித்து நற்குணத்தை உடையவரான ஸ்ரீபட்டர் எனக் கொண்டனர். குணத்தையாண்டாராயின் குணம் + ஆள என்பது குணமாள என்று காணப்படல் வேண்டும். அவ்வாறன்றி குணவாளர் என ஒரு சொன்னீர்மைத்தாய்க் காணப்படுகிறது என்பர்.[13] பற்பநாப பட்டன் என்பதற்குப் பராசர பட்டர் என்று உரைகாணுவர் தற்போதுள்ள உரையாசிரியர்கள். இது பொருந்தாமை வெள்ளிடைமலை என்பார். ச. சோமசுந்தர தேசிகர்.[14] ஆதலின் பிள்ளைப்

..............................................................................

**13. தமிழ்ப் புலவர் வரலாறு, (பதினேழாம் நூற்றாண்டு), ப.88.**
**14. ,, ,, ப. 90.**

பெருமாளய்யங்காரின் காலத்தைப் பராசர பட்டரின் காலத்தைக் கொண்டு தீர்மானிப்பது இயலாத காரியமாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதிய கா. சுப்பிரமணிய பிள்ளை, பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருமலை நாயக்கர் மதுரையை ஆண்டபோது மணவாளதாசர் என்னும் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் சைவ எல்லப்ப நாவலரும் குமரகுருபர சுவாமிகளும் தத்தம் சமயங்களை நிறுவுதலில் தலைநின்றனர் என்று கூறுகிறார்.[15] அபிதான சிந்தாமணி இவர் வாழ்ந்த காலம் பதினேழாம் நூற்றாண்டு என்கிற கருத்தையே வலியுறுத்துகிறது.[16]

ஐயங்கார் என்ற சொல்லாட்சியும் பிற்காலத்ததேயாகும். 'ஐயகாரு' என்ற தெலுங்குச் சொல்லின் மாற்று வடிவமே ஐயங்கார் என்பர். நாயக்கர் காலத்தில் தெலுங்குச் சொற்கள் தமிழில் புழக்கம் பெற்றன. இவ்வடிப்படையிலும் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் காலம் 17ஆம் நூற்றாண்டென்று துணியலாம் என்பார் ப. இராமச்சந்திரன்[17]. இங்ஙனம் பல்வேறு அறிஞர்களின் கருத்து ஒருமைப்பாடு கண்டு, பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் காலம் பதினேழாம் நூற்றாண்டு என்பது உறுதிப்படுகிறது எனலாம்.

**பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் திருமலை நாயக்கரும்**

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் சிறந்த தமிழ்ப்புலமையுடன் பக்திமானாக விளங்கினார். இவரது நற்குணங்களையும் திறமையையும் அறிந்த, மதுரையை கி.பி.1623 முதல் 1659 வரை ஆண்ட திருமலை நாயக்கர் என்றும் நாயக்க வமிசத்து அரசர் தம் அவையில் ஓர் அலுவலராய் அமர்த்திக் கொண்டார்.

ஐயங்கார் ஒரு நாள் அரசாங்க அலுவலில் ஈடுபட்டிருந்த போது, திடீரென்று உத்தரீயத்தை 'கிருஷ்ண! கிருஷ்ண! என்று சொல்லி தன் தோள்களில் இருந்து எடுத்து இருகைகளாலும் கசக்கினார். இது

.........................................................................................

15. *தமிழ் இலக்கிய வரலாறு*, ப.87.

16. *அபிதான சிந்தாமணி*, ப.746

17. *திருவரங்கத்து அந்தாதி – ஓர் ஆய்வு*,ப.13.

அரசவையில் செய்யக் கூடாத செயலாதலால், இதனைக் குறித்துக் கேட்டபோது, 'திருவரங்கம் கோயிலில் நம்பெருமாள் அருகில் பிடித்த கைப்பந்தத்தின் சுவாலைப் பட்டதால் பற்றி எரிகின்ற திரையை அவித்தேன்' என்றார். அதனைக் கேட்ட சபையோர், கோயிலில் நம்பெருமாள் திருத்தேர் உற்சவம் நடப்பது உமக்கு இங்கு எங்ஙனம் தெரிந்தது என்று நகைத்து, அரசனிடம் சென்று அறித்தனர்.

அதே நேரத்தில் கோயிலில் திருத்தேரின் திரையில் தீபந்தத்தின் சுவாலை பட்டு எரியும் பொழுது அருகில் பெருமானை வணங்கி நின்ற ஐயங்கார் தம் கைகளால் திரையைத் தேய்த்துத் தீயை அணைத்து விட்டதாக அர்ச்சகர் முதலியோர் தோஷ பரிகாரம் செய்தனர் என்பதைக் கேள்வியுற்ற அரசன், ஐயங்காரிடம், 'திருத்தேர் உற்சவத்திற்கு எவ்வாறு சென்றீர்கள், என்று வினவ, 'மனதினால் கண்டதேயன்றி கோயிலுக்குச் செல்லவில்லை என்று மறுமொழி கூறினார். அரசன் 'அவ்வுற்சவத்தின் பொழுது அங்கு இருந்தது பொய்யோ? என்று வினவ, அவையிலிருந்தோர் உத்தரீயத்தைக் 'கிருஷ்ண கிருஷ்ண' என்று தேய்த்ததைக் கூறினர். அதைக்கண்டு அரசன் வியப்படைந்தார்.

அன்றைய இரவு திருமலை நாயக்கர் உறக்கத்தில் தான் நம்பெருமாள் சன்னதிக்குப் போனதாகவும் தென்திருக் காவிரியில் ஐயங்கார் நீராடி நிற்கக் கண்டு, அவருடனே சென்று, பெரிய பெருமாளை வணங்கித் திரும்பும்போது, ஐயங்காரைக் காணாது மயங்கியதாகக் கனாக்கண்டு, கண் விழித்து, பொழுது விடிந்தவுடனேயே, நம்பெருமாளுக்கு அந்தரங்க பக்தராக இருக்கும் தாங்கள் என்னிடத்தில் அலுவல் செய்தல் வேண்டாம் எனக் கூறி, தான் செய்ய வேண்டிய பணியை வினவி நின்றார். அவருடைய வேண்டுகோளின்படி, பெரியகோயிலில் அன்று தொடங்கி அவருக்கு ஓர் இருப்பிடம் அமைத்துத் தளிகைப் பிரசாதமும் அவருக்குக் கிடைக்குமாறு செய்து அனுப்பிவிட்டார் என்பர்.[18]

.........................................................................................

**18. தமிழ்ப் புலவர் வரலாறு, (பதினேழாம் நூற்றாண்டு), ப.94. வேணுகோபால் பிள்ளை, மே.வி. அஷ்டப்பிரபந்தம், முன்னுரை, ப.6.**

**19. திருவரங்கத்து அந்தாதி – ஓர் ஆய்வு, ப. 14.**

மே.வி. வேணுகோலப்பிள்ளை, அஷ்டப் பிரபந்த முன்னுரையில் கூறும் செய்தி, தமிழ்ப்புலவர் வரலாறு கூறும் செய்தியினின்றும் சற்று மாறுபட்டதாக அமைந்துள்ளது. ஐயங்கார் அலுவலில் ஈடுபட்டிருந்த போது, திடீரென்று உத்தரியத்தை 'கிருஷ்ண கிருஷ்ண' என்று சொல்லிக் கொண்டு இருகைகளாலும் கசக்கினார். அது குறித்து கேட்டபோது, திருவரங்கத்திலே பெருமானது திருத்தேர்ச் சீலை பற்றி எரிந்ததாகவும் அதனை அணைத்ததாகவும் கூறினார். அரசர், திருவரங்கத்திற்கு ஆளை அனுப்பி, உண்மையை அறிந்துவரச் செய்து, ஐயங்காரிடத்து அளவிலா பெருமதிப்பு உடையவராக அவரை அழைத்து வியந்து அரசுப்பணியில் இருந்து விடுவித்தார் என்பர்.[19]

அரங்கனையன்றி பிறதெய்வம் தொழாத தீவிர நிலையிலிருந்த பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், 'தொலைவில் உணர்தல்'என்ற நுண்ணுணர்வின் மூலம் திருவரங்கத்தில் பற்றிய தீயை மதுரையிலிருந்தே உணர்ந்தார் எனக் கொள்வதில் வியப்பேதும் இல்லை. மேலும் சமயச் சான்றோரின் வாழ்க்கைச் சம்பவங்களை மிகைப்படுத்துவதன் மூலம் அவருக்குப் புகழ் சேர்ப்பதும் பக்தர்களின் பழக்கமாக இருந்தது[20] என்ற ப. இராமச்சந்திரனின் கருத்து இங்கு எண்ணத்தக்கது.

**பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய இலக்கியநூல்கள்**

திருமலை நாயக்கரிடத்துப் பணியாற்றிய பின்னர் தங்கியிருந்த நாட்களில், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் இயற்றிய எட்டு நூல்களின் தொகுப்பு, 'அஷ்டபிரபந்தம்' எனவும் ஐயங்கார் பிரபந்தம், எனவும் வழங்கப்படும். இத்தொகுப்பு நூலில், திருவரங்கத்துமாலை என்னும் கோயில்மாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம் என்னும் கோயில் கலம்பகம், திருவரங்க நாயகர் ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி ஆகிய எட்டுச் சிற்றிலக்கியங்கள் உள்ளன. மேலும் ஐயங்காருடைய திருப்பேரரான கோனேரியப்பன் ஐயங்கார் எழுதிய சீரங்கநாயகியார் ஊசற்றிருநாமம் எனும் ஒன்பதாக ஓர் இலக்கியமும் இணைத்துத் தொகுக்கப்பட்டுள்ளது.

................................................................

20. *திருவரங்கத்து அந்தாதி – ஓர் ஆய்வு*, ப.14

இத்தொகுப்பில் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் அந்தாதிகள் ஐந்து, மாலை இலக்கியம் ஒன்று, ஊசல் இலக்கியம் ஒன்று, கலம்பக இலக்கியம் ஒன்று ஆகிய நான்கு வகை சிற்றிலக்கியங்கள் அமைந்துள்ளன. இவற்றில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை 758. இப்பாடல்களிள் கட்டளைக் கலித்துறை, வெண்பா, கலித்துறை, விருத்தம் முதலான பல்வேறு யாப்பு அமைப்புகளில் அமைந்துள்ளன. இத்தொகுப்பில் உள்ள நூல்களில் திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருவரங்க நாயகர் ஊசல் ஆகிய நான்கு நூல்களும் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கரைப் போற்றும் வண்ணம் அமைந்தவை அவர் பாடிய பாடல்களுள் சுமார் ஐம்பது விழுக்காடு (347 பாடல்கள்) திருவரங்கர் மீது பாடப்பட்டவை. திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கடமாலை இரண்டும் திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கும் வேங்கடேசப் பெருமாளையும், அழகரந்தாதி திருமாலிருஞ் சோலையில் குடிகொண்டிருக்கும் அழகரையும் போற்றுவனவாக அமைந்துள்ளன. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில் திருவரங்கம் முதல் திருப்பதியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தாம் வாழ்ந்த ஊரான திருவரங்கத்தின் மீதும், அவ்வூரில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான் மீதும் கொண்ட பெரும்பற்றை எடுத்துரைப்பன வாகும்.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் செய்துள்ள இப்பிரபந்தங்களெல்லாம், ஶ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் உள்ள நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிச்செய்த திவ்வியப் பிரபந்தங்களின் ஸாரார்த்தங்களும், நாதமுனிகள் முதலிய ஆசாரியர்களுடைய அருளிச் செயல்களின் விசேஷார்த்தங்களும் பொதிந்திருத்தல் மட்டுமேயன்றி சொல் நோக்கும் தொடை நோக்கும் நடைநோக்கும் துறையின் நோக்கோடு எந்நோக்கும் காண இலக்கியமாகியும் இருப்பன.[21] என்ற மூவர் உரைச் செய்தி இங்கு சுட்டத்தக்கது.

அஷ்டப்பிரபந்தங்களையன்றி, பரப்பிரஹ்ம விவேகம் என்ற நூல் இவரால் இயற்றப்பட்டது என்பர். 'பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்'

..............................................................................................

21. அஷ்டப்பிரபந்தம் (மூவர் உரை) முன்னுரை, ப.6.

என்னும் தலைப்பில் அமைந்துள்ள கலைக் களஞ்சியக் கட்டுரை, பரப்பிரம விவேகம் இப்பொழுது கிடைக்கவில்லை என்று குறிப்பிடுகிறது[22]. பரப்பிரம விவேகம் 1908ஆம் ஆண்டு காரப்பங்காடு ஸ்ரீ கோபாலாசாரியர் சுவாமிகளால் பரிசோதிக்கப் பெற்று, சென்னை திருவல்லிக்கேணியில் அச்சிடப்பட்டுள்ளது. தற்பொழுது அந்நூலின் ஒரு படி தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் (நூலக எண்:த.11834) பாதுகாக்கப்பட்டு வருகிறது.

புறசமயங்களின் குறைகளை எடுத்துரைத்துத் தான் சார்ந்த வைணவ சமயத்தின் மேன்மைகளை உரைக்க, ஐயங்கார் இயற்றியது பரப்பிரம்ம விவேகம் என்று சொல்லப்படுகிறது. என்றாலும் இதனைப் பதிப்பித்த ஸ்ரீ கோபாலாசாரியர் ஸ்வாமி, இந்நூலின் அறிமுகப் பகுதியில் 'பரப்பிரம விவேகம் என்னும் இந்நூல் ஐயங்கார் செய்தருளியதென்று பலர் கூறுவராயினும் இதன் சொன் முடிவு, பொருண்முடிவு, கவியமைதி முதலியவற்றை நோக்குமிடத்து இது திவ்யகவிப் பிள்ளைப் பெருமாளையங்காருடைய வாக்கென்று துணிதற்கு இடமில்லை[23] என்கிறார்.

இவற்றைத் தவிர 'திருநறையூர் நம்பி மேகவிடு தூது' என்ற நூலும் இவர் செய்தது என்பர். கலிவெண்பா யாப்பினால் அமைந்த இந்நூல், மேகத்தை விளித்தல், மேகத்தின் சிறப்புரைத்தல், தன்துயர் கூறி மேகத்தை வேண்டுதல், வேட்கை பிறர்க்குரையே என்றல், இரக்கந் தோன்ற உரைத்துத் தூது வேண்டல் முதலானவற்றைக் கூறுவதாக அமைந்துள்ளது. ஐயங்கார் தனிப்பாடல்கள் சிலவற்றையும் பாடியுள்ளார் என்பர். அவர் இயற்றிய ஒரு தனிப்பாடல் ஒரு நிகழ்ச்சியோடு தொடர்புடையதாக அமைந்துள்ளது.

ஒருமுறை திருவரங்கத் தேர்விழாவின் போது தேர் இழுப்பதற்குப் போதிய மக்கள் இன்மையால் தேர் அசையவில்லை ; வடம்பிடிக்காமல் சிலர் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். வடிம்பிடிக்க அள்திரட்டுபவராய் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்,

..........................................................................

**22. கலைக் களஞ்சியம், தொகுதி 7, பக்.383.**

**23. பரப்பிரம விவேகம், ப.5**

"ஒன்று மறியாத வுமைகா ளென்னரங்கன்
இன்று திருத்தேரி லேறினார் – நின்று
வடம்பிடிக்க வாருங்கோள் வைகுந்த நாட்டில்
இடம்பிடிக்க வேண்டுமென்றக் கால்."

என்று பாடினார் என்பர்.[24] இதுபோன்ற செய்திகளை வரலாறு என்று ஏற்றுக் கொள்ளவோ, முற்றிலும் கற்பனைக் கதைகள் எனத் தள்ளவோ இயலாது என்ற ஸ்ரீ கோபாலாசாரியர் ஸ்வாமிகள் கருத்து இங்கு சிந்திக்கத்தக்கது.

**பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் திருவேங்கடவனும்**

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி முதலிய நூல்கள் இயற்றியதைக் குறித்து ஒரு செவிவழிச் செய்தி வழங்கி வருகிறது. ஐயங்கார் அரங்கனைத் தவிர பிற வைணவத் தலங்களில் உள்ள மூர்த்திகளை வணங்குவது இல்லை ; போற்றுவது இல்லை என்பதில் மாறாத உறுதியுடையவராக விளங்கினார். திருவரங்கத்தந்தாதி, திருவரங்க மாலை, திருவரங்கக் கலம்பகம், சீரங்க நாயகர் ஊசல் எனத் திருவரங்கன் புகழையே பாடி வந்தார். திருவேங்கடமுடையான், இவருடைய வாயால் பாடல்பெற விரும்பி, தமது உண்மை வடிவத்துடன் இவரது கனவில் தோன்றி, வேங்கடத்தின் விஷயமாகச் சில பிரபந்தம் பாடுக' என்று கட்டளையிட இவர் அதற்கு இணங்காமல் 'அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாடேன்.' (திருவேங்கடமுடையானைக் குரங்கன் என்றது, குரங்குகளுடன் மலையில் வாழ்தலால் ; 'மந்திபாய் வடவேங்கட மாமலை, 'வானரமும் வேடுமுடை வேங்கடம்' என்றார். ஆழ்வார்களும் என்று விளக்கமளிப்பர்) என்று கூறி மறுத்தார்.

எம்பெருமான் திருவேங்கடமுடையான் எவ்வாறாயினும் இவர் வாயால் பாடல்பெற விருப்பம் கொண்டது மட்டுமின்றி, எல்லாத் திருப்பதிகளிலும் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான் ஒருவனே என்று இவருக்குத் தெரிவித்து, இவர் கொண்டுள்ள மாறுபட்ட எண்ணத்தை மனதில் இருந்து அகற்ற கருதியதால், இவருக்கு 'கண்டமாலை' என்ற கொடிய நோய் உண்டாகும்படி செய்தார். ஐயங்காரை அந்நோய் மிகவும்

.............................................................................................

**24. பரப்பிரம விவேகம், ப.10**

வருத்தியது. அதன் காரணத்தை உணர்ந்து கொண்டு, தன்மீது தவறு இருப்பதை அறிந்து கொண்டு, அதனைப் போக்கும் பொருட்டுத் திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி என்னும் பிரபந்தங்களை இயற்றி அப்பெருமானைத் துதித்தார். அதனால் உள்ளம் மகிழ்ந்து திருவேங்கடமுடையான் இவரெதிரில் எழுந்தருளிக் காட்சி தந்து அருள்பாலிக்க, நோய் நீங்கப் பெற்றார்.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் மனதில் அதுநாள் வரை இருந்த மாறுபாடு நீங்கி, 'எங்கும் விளங்கக் கூடிய மூர்த்தி எம்பெருமானே' என்று மனம் தேறியவராக வடமலையான திருவேங்கட மலையானைப் பாடியது போல, தென்மலையின் மீது இலக்கியம் படைக்க வேண்டும் என்ற கருத்துடன், திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியுள்ள பெருமான்மீது அழகர் அந்தாதி பாடினார். அதன்பின்பு, எத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானையினும் திருமாலே என்பதை விளக்கும் வண்ணம் அனைத்துத் தலங்களிலும் எழுந்தருளியுள்ள மூர்த்திகளையும் போற்றுவகையில் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி பாடினார் என்பர்.[25]

திருவேங்கடமுடையான், ஐயங்காருக்குச் சேவை சாத்தித்த இடம் கோயிலின் சலவைகல் மண்டபம் பிரகாரம் என்றழைக்கப்படும் உட்பிரகாரத்தில் தென்கிழக்குப் பக்கத்தில் என்பர்.

**திருவானைக்காச் சைவருடன் வாதம்**

பிள்ளைப் பெருமாள் ஐயங்காருடைய கவிகளின் சொல்நோக்கு, பொருள் நோக்கு ஆகியவற்றைக் கண்டு வியந்து தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுவல்ல புலவர்கள் பலரும் அவரை அணுகி கேட்பது கண்டு, திருவானைக்காவின் சைவசமயவாதிகள், ஆனைக்காவில் எழுந்தருளியுள்ள இறைவரான ஜம்புகேஸ்வரர்மீது ஒரு சிற்றிலக்கியத்தைப் பாட வேண்டுமென்று தங்களுடைய விருப்பத்தை வெளிப்படுத்தி வேண்டிக் கொண்டார்கள். அதற்குப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் 'யாம் அரங்கனைப் பாடின வாயினால் மற்றொரு குரங்கனைப் பாடுவதில்லையே' எனப் பதிலளித்தார். (குரங்கம் : வடமொழியில் மான் ; அதனை இடக்கையில் ஏந்தியுள்ளவன் குரங்கன்) 'குளிக்கப் போய்ச்

.......................................................................................................

**25. தமிழ்ப்புலவர் வரலாறு: பக்.80.**

சேற்றைப் பூசிக்கொள்ளுபவரைப் போல நம்முடைய பரமசிவத்தின்மீது பாடல் பெற்றுக்கொள்ள வந்து குரங்கனென்றும் சொல்லைப் பெற்றுக் கொண்டோமே என்று மனம் வருந்தி, எவ்வகையினாலாவது உம்முடைய வாக்கினால் எங்கள் பரமசிவத்தின்மீது ஒரு பாடலாவது பெற்றுக்கொள்கிறோம்' என்று சூளுரைத்துத் திருப்பினார்கள்.

இவ்வாறு இருக்கின்ற காலத்தில், திருவரங்கம் கோயிலில் ஒவ்வொரு நாள் காலையிலும் திருக்காப்பு நீக்கி நம்பெருமாளுக்குச் செய்கின்ற, விசுவரூப தரிசனத்தின் போது, ஒரு கபிலைப் பசுவையும் அர்ச்சகர் சமர்ப்பிக்கின்ற பொருள்களில் ஒன்றாகப் பெருமாள் முன் கொண்டுவந்து படைப்பது வழக்கம். ஒரு நாள் அப்பசு திருவானைக்காவில் உள்ள வயலுக்குச் சென்று மேய்ந்தது. அதனைக் கண்ட சைவர்கள் எவ்வாறேனும் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரிடம் இருந்து சிவபெருமானைப் போற்றும் பாடலைப் பெறவேண்டும் என்னும் எண்ணங் கொண்டு, அதனை நிறைவேற்றிக் கொள்வதற்காக அப்பசுவைப் பிடித்துக் கட்டி வைத்தனர். அன்று இரவு அரங்கன் கோயிலின் அர்ச்சகரும் மற்றவர்களும் விசுவரூப தரி[illegible]ப் பசுவைக் காண[illegible]யல தேடியலைந்து இறுதியில் திருவானைக்காவில் சைவர்கள் கட்டி வைத்திருப்பதைக் கண்டு, கொடுக்கும்படி கேட்டனர். அதற்கு அச்சைவர்கள், உங்களுடைய பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் வந்து கேட்டால் தருகிறோம், என்றனர்.

விசுவரூப தரிசன காலத்திற்குள் கபிலைப்பசு கிடைத்துவிட வேண்டுமென்ற கவலையின் காரணமாகப், பிள்ளைப் பெருமாள் ஐயங்காரைச் சென்று கேட்டுவரச் செய்ய வேண்டுமென்ற கருத்தினால் அவரை அனுகினர். மறந்தும் புறம் தொழதவரான பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், 'துஷ்கர்ம காலம் தவிர மற்றைக் காலத்தில் ருத்திர பூமியில் அடிவைப்பது கூடுமோ? அன்றியும் அவ்வாலயத்தில் பிரவேசிப்பது வைதிக வைணவனுக்குத் தக்கதன்று ; ஆனை துரத்தி வந்தாலும் ஆனைக்காவில் நுழையாதே என்ற பழமொழியையேனும் கேட்டதில்லையோ ; ஆதலால் அந்த ஆகம வாதியர்களைக் கோயிலிடத்தில் அழைத்து வாருங்கள்' என்றார். சைவர்கள், எவ்வாறேனும் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரைச் சிவன்மீது ஒரு பாடலைப் பாடச் செய்துவிட வேண்டும் என்ற நோக்கோடு கபிலைப் பசுவையும் அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தனர். அவர்கள்

ஐயங்காரிடம் நீர்பாடுவது உண்மையாகில் அப்பாட்டில் இரண்டொரு சீர்களைக் கூறவேண்டும் என்ற கேட்க, அவரும் புன்னகையோடு, 'மங்கை பாகன்' என முதலிரண்டு சீர்களைக் கூறியதும், நினைத்ததைச் சாதித்துவிட்ட மகிழ்ச்சியோடு பசுவை விட்டனர். உடனே ஐயங்காரும் முன்னர் தாம் ஒப்புக்கொண்டபடி,

"மங்கை பாகன் சடையில் வைத்த
கங்கை யார்ப தத்துநீர்
வனச மேவு முனிவ னுக்கு
மைந்த னான தில்லையோ!
செங்கை யாலி ரந்த வன்க
பால மாற கற்றினார்
செய்ய தாளின் மலர ரன்சி
ரத்தி லான தில்லையோ!
வெங்கண் வேழ மூல மென்ன
வந்த துங்கள் தேவனோ!
வீறு வாண னமரி லன்ற
விறல ழிந்த தில்லையோ!
அங்கண் ஞால முண்ட போது
வெள்ளி வெற்ப கன்றதோ!
ஆத லால ரங்க னன்றி
வேறு தெய்வ மில்லையே!"

என்ற பாடலைப் பாடினார். மங்கை பாகன் எனத் தொடங்கப் பெறினும் திருமாலின் சிறப்புக்களை எடுத்தோதித் திருமாலின்றி வேறு தெய்வமில்லை' என்ற தம் கருத்தை நிலைநாட்டினார். ஏமாற்றமடைந்த சைவர்கள் தம் ஆகம புராணங்களைக் கொண்டு, பிள்ளைப் பெருமாள் ஐயங்காரிடத்தில் வாது செய்தனர். அதற்குப் பல புராணச் சான்றுகளை எடுத்துக் காட்டி, வாது செய்து சைவர்களை வென்றார்.[26] சைவர்களுக்குப் பதிலளிக்கும் வகையில் நேரிசை வெண்பாக்களால் ஆன விடைகள் பரப்பிரம விவேகம் என்ற நூலாக விளங்குகிறது.

.................................................................................

26. பரப்பிரம விவேகம், முன்னுரை பக். 1 – 4.

**பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் சைவ எல்லப்ப நாவலரும்.**

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தீவிர வைணவப் பற்று உடையவராக விளங்கியவர். சைவ எல்லப்ப நாவலர் தீவிர சைவப் பற்று உடையவராக விளங்கியவர். இவர்கள் இருவரையும் இணைத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் 'திவ்வியகவி' என்று போற்றப்பட்டவர். அதற்கு நிகராகச் சைவ எல்லப்ப நாவலரும் தருமபுர ஆதீனத்தாரால் 'திவ்விய கவி' என்ற பட்டம் அளிக்கப்பெற்றவர்.[27]

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் திருவரங்கக் கலம்பகத்தையும் சைவ எல்லப்ப நாவலர் திருவருணைக் கலம்பகத்தையும் இயற்றினர். திருவருணைக் கலம்பகத்திற்கு உரை எழுதிய சோம. இளவரசு, அந்நூலின் முன்னுரையில் இவ்விருவரைப் பற்றியும் பலர் கூறும் கருத்துக்களை ஒன்று திரட்டித் தொகுத்துரைத்துள்ளார்.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தாம் பாடிய திருவரங்கக் கலம்பகத்தைப் பார்க்குமாறு நாவலருக்க அனுப்பினார். நாவலர், தாம் பாடிய திருவருணைக் கலம்பகத்தைப் பார்க்குமாறு ஐயங்காருக்கு அனுப்பினார். இவ்வாறு இருபெரும் புலவர்களும் இரண்டு கலம்பகங்கள் பாடினர். இருவரும் நட்பு முறையில் திட்டமிட்டுப் பாடியதே இக்கலம்பகங்கள் என்பர் சிலர். ஒரு சமயம், நாவலருக்கும் ஐயங்காருக்கும் வாதம் நடைபெற்றது. நடுநிலையாளர்கள், அவ்விருவரையும் ஒரே இரவில் கலம்பகம் பாடுமாறு கூறினர். அவ்வாறே இவர்கள் இருவரும் பாடினர். நடுநிலையாளர்கள் அவற்றைப் பார்த்து ஐயங்கார் அம்மானையில் அடிசறுக்கினார் என்று கூறி, நாவலரின் கலம்பகத்தைப் போற்றினர் என்பர் வேறுசிலர்.

ஐயங்கார், கலம்பகம் பாடி நாவலருக்கு அனுப்ப, அதைப் படித்த நாவலர், ஐயங்கார் அம்மானையில் அடிசறுக்கினார் என்று சொல்லி, உடனே அருணைக் கலம்பகம் பாடி ஐயங்காருக்கு அனுப்பினார் ; ஐயங்கார் படித்துக் களித்தார் என்பர் மற்றும் சிலர். நாவலர் தருமை ஆதீனத்தில் தேசிகரோடு உரையாடிக் கொண்டு இருந்தார். அப்பொழுது

.................................................................................................

27. அருணாசலம்.மு, தமிழ் இலக்கிய வரலாறு (16 ஆம் நூற்றாண்டு) முதல் பாகம் பக்.206,

புலவர் ஒருவர், ஐயங்கார் பாடிய திருவரங்கக் கலம்பகத்தைப் புகழ்ந்து கூறினார். அது கேட்டு நாவலர், ஐயங்கார் அம்மானையில் அடி சறுக்கினார் எனக் கூறி அன்றிரவே அருணைக் கலம்பகம் பாடி முடித்தார் என்பர் வேறு சிலர்.[28]

மேற்காட்டிய கதைகள் எல்லாம் ஐயங்காரையும் நாவலரையும் ஒரு காலத்தவராகக் கூறுகின்றன. இக்கதைகளில் ஐயங்கார் அம்மானையில் அடிசறுக்கினார் என ஐயங்காரின் கலம்பக புலமைக்குக் குறை கூறப்பட்டுள்ளது. ஆயினும் திருவரங்கக் கலம்பகத்தில் உள்ள அம்மானைப் பாடலை நோக்கினால், அப்பாடல் குறையுடையதாகத் தோன்றவில்லை. அவ்வாறு இருக்க, குறையுள்ளது என்று கூறும் வழக்கு எவ்வாறு ஏற்பட்டதோ தெரியவில்லை என்றும் இவ்விரண்டு கலம்பகங்களையும் இணைத்துப் படிப்பவர்களுக்குத் திருவரங்கக் கலம்பகத்தை அடியொற்றியே அருணைக் கலம்பகத்தை நாவலர் பாடியுள்ளார். இதற்குப் பல ஒப்புமைகள் உள்ளன என்றும் கூறுகிறார்.

மேலும், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், தம் திருவரங்கக் கலம்பகத்தை எல்லப்ப நாவலரின் பார்வைக்கு அனுப்பி வைத்த பொழுது அந்நூலில் இருந்த,

“வாடி ஓட வனசம் அன்ன
இருகண் வெள்ளம் அருவிபோல்
மருவி யோட மதனன் வாளி
யுருவி யோட வாடையூ
டாடி யோட அன்றில் ஓசை
செவியில் ஓட வண்டுழாய்
ஆசை யோடும் எங்கள் பேதை
ஆவி யோடல் நீதியோ!
மோடி யோட அங்கி வெப்பு
மங்கி யோட ஐங்கரன்
முடுகி யோட முருக னோட
முக்க ணீசன் மக்களைத்

---

28. இளவரசு. சோம (உரை) திருவருணைக் கலம்பகம், பக் 17 – 18.

தேடி யோட வாண னாயி
ரம்பு யங்கள் குருதிநீர்
சிந்தி யோட நேமி தொட்ட
திருவ ரங்க ராசரே."
- (திருவரங்கக் கலம்பகம் : 39)

என்னும் பாடலில் துர்க்கை ஓடவும் அக்கினியும் காய்ச்சலும் வலிமை யிழந்து ஓடவும், ஐந்து கரங்களை உடைய விநாயகன் விரைந்து ஓடவும், அவன் தம்பியாகிய சுப்பிரமணியன் ஓடவும், மூன்று கண்களையுடைய சிவபெருமான் தன் மக்களைத் தேடிக் கொண்டு ஓடவும், பாணாசுரனது ஆயிரம் கைகளும் இரத்த வெள்ளத்தில் சிதறி ஓடும்படியாகச் சக்கராயுதத்தைப் பயன்படுத்திய திருவரங்க நாதனே! என்று திருமாலைப் போற்றுவதோடு, சிவபெருமான் பழிக்கப்பட்டு இருப்பதைக் கண்ணுற்ற நாவலரின் துணைவியார்,

கருட னோட மச்ச மாசை
கமல மோட முற்கரங்
காட்டி லோட மூன்றி ராமர்
கண்ட மட்டி லோடவே
மருளி வந்த சிங்க மோட
வாம னென்பு பாறவே
வஞ்ச முள்ள கண்ண னோட
மார வீரச் சேனனும்
இருளி னோட முண்ட தத்தன்
ஊங்கி யோட வென்றவர்
கீறு நாதங் குயிர ளித்த
வேந்தன் யாவன் வேதமே!
அருளு மந்த முதல்வன் யாவன்
அருணைக் கண்டு வாழ்மினோ
ஆர்அ நாதி மூலம் என்ப
தறிகி லாத மாக்களே!

என்னும் பாடலைப் பாடினார். அதனை அருணைக் கலம்பகத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு நாவலரை வேண்டினார் என்பர். ஆனால்

நாவலர், அதனை அருணைக் கலம்பகத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை என்ற செய்தியும் அந்நூலின் முன்னுரையில் காணக் கிடைக்கிறது.

**பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் குமரகுருபரரும்**

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் காலத்தில் வைணவர்களுக்கும் சைவர்களுக்கும் சமயம் தொடர்பாகக் கருத்து மாறுபாடு நிலவியது. ஐயங்காரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளைக் கொண்டு இதனை உறுதிசெய்ய முடிகிறது.

சைவ சமயப் பெருங் கவிஞராக விளங்கியவர் குமர குருபரர். இவரிடத்தே பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் வாது செய்த நிகழ்ச்சி கூறப்படுகிறது. சைவப் பெருமகனார், தருமபுரத்தில் தன் ஞானாசாரியாருடன் இருந்த காலத்தில், தன்னிடம் இருந்த, பிறர் தனக்குப் பரிசாக அளித்த செல்வங்களை அவரிடத்தில் வழங்க அவருடைய கட்டளையின்படி காசிக்குச் செல்லும் வழியில் காஞ்சிபுரத்தில், தம்மோடு சமய கோட்பாடுகளைப் பற்றி வாது செய்த பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் முதலியோரை வென்றார் என்பர்.[29]

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், திருவரங்கம் பெரிய கோயிலில் வசித்தாரென்று கேட்கப்படுகிறதேயன்றி, காஞ்சியில் வாழ்ந்ததாகக் கேட்கப்பெறுதல் இல்லை என்று கூறுவது சுட்டத்தக்கது. குமர குருபரர், திரிசிரபுரம் வந்து பிள்ளைப் பெருமாள் ஐயங்காருடன் வாதிட்டு வென்றதாகக் கூறுவர் வேறு சிலர்.[30]

இவையாவும் சைவ சமயத்தினருடன் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் மாறுபட்டக் கருத்து உடையவராக விளங்கினார் என்பதையே உணர்த்துகின்றன.

---

29. தமிழ்ப் புலவர் வரலாறு (பதினேழாம் நூற்றாண்டு) ப.49.
30. இலக்கிய வரலாறு (பாகம் – 2) ப.382.

**பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் சமயப்பற்று**

தெய்வம் ஒன்றென்றிரு என்னும் சான்றோர் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்தவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்; மறந்தும் புறந்தொழா மாண்பினை உடையவர். புலவர் புராணம் பாடிய முருகதாச சுவாமிகள் மணவாளதாசர் வரலாற்றை விவரிக்கையில், "இவரைச் சிவசிந்தனை செய்தவர் என்று சிலர் ஏசுவர்; அங்ஙனம் ஏசுவோர் பழுத்த சைவராகார் : நன்கு சிந்திக்குங்கால் இவருக்கு விரோத மனப்பான்மை இல்லை என்பது விளங்கும் என்ற கருத்து வெளிப்படை,

"சிவனை நிந்தனை செய்தவ னேயென
இவனைச் சிற்சில இளஞ்சைவர் ஏசுவர் ;
அவன்றன் மாயவன் ஆகத்திற் பாதியென்
றுவந்து பாடிய பாக்களும் உள்ளளே"

என்று சான்று பகர்கிறார் என்பர்.[31] ஆயினும் இக்கருத்தை மறுப்பதைப் போல,

"செங்கண் மால்க முன்மஞ் சனம்விழுந்
தொட்டி சங்கரன் தலைகளே!
சீர்கொள் கண்ண னல்லடி நின்மா
லியக்குப்பை சம்புவின் தலைகளே!
எங்கண் மாய வன்பாய்த் தூக்கிய
தூக்கு மாபதி செவிகளே!
எந்தெ ழில்புரு ஷோத்தம மன்றுதி
எழுது மேடர னாக்களே!
பொங்கு சீதர னெச்சி லார்படி
கம்பு ராரியின் கண்டமே!
புகலி ராமன தடிகொள் பாதுகை
புகலு முக்கணன் கரமதே!
திங்கள் சூழ்சித் திரகூட மேவிய
வெங்கன் கோவிந்த ராசற்குத்
தினமு மேசுடத் தாடி யானவன்
திருச்சிற் றம்பல வானனே"[32]

என்று அவர்தம் தனிப்பாடல் அமைத்திருப்பது இங்கு சுட்டத்தக்கது.

.................................................................................................

31. அஷ்டப்பிரபந்தம் (மூவர் உரை) முன்னுரை பக்.7

32. பரப்பிரம்ம விவேகம், பக்.10.

**பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் இறுதி நாட்கள்**

திருமலை நாயக்கரிடத்துப் பிள்ளைப் பெருமாள் பணியாற்றி, ஐயங்காரின் மேன்மையை உணர்ந்த திருமலைநாயக்கரிடத்து, பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் வேண்டிக் கொண்டபடி, திருவரங்கம் பெரிய கோயிலில் தளிகைப் பிரசாதமும் ஆண்டவனைத் தியானித்திருக்க ஆங்கோரிடமும்; அறித்தனர். ஐயங்கார், அங்கிருந்து ஆண்டவனின் திருத்தொண்டிலேயே தன் முழுநேரத்தையும் செலவிட்டு, ஆண்டவனின் புகழை, அரிய நூல்களாக இயற்றி ஆனந்தமுடன் விளங்கினர். சீடர்பலர் அவரிடத்து அருந்தமிழையும் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழியையும் கற்றறிந்து மகிழ்ந்தனர்.

ஐயங்கார் ஒரு நாள், தம் சீடரித்து, 'நமக்கு அந்திமதிசை பசுவினாலே நேரிடும்' என்று கூறினார். அதன்படியே, ஒரு நாள் ஸ்ரீ வைகுண்டநாதர் சந்நிதியில் சேவிக்கும் பொழுது ஒரு நொண்டிப்பசு கால் இடறி அவர்மீது விழ அவர் துன்பத்துடன்,

*"துவள் தூளவனச் சொல்லும்சொல் போச்சே*
*அளவில் நெடுமூச்சும் ஆச்சே – முளரிக்*
*கரங்கால் குளிர்ந்தவே கண்ணும்பஞ் சாச்சே*
*இரங்காய் அரங்கா இனி."*

எனச் சொல்லிக் கொண்டே திருநாட்டை அலங்கரித்தனர் என்பர் பெரியோர்.[33]

**வைணவத் திருக்கோயில்கள்**

திருமால் எழுந்தருளியிருக்கம் திருக்கோயில்களுக்கு விண்ணகரங்கள் என்று பெயர். திருமால் கோயில் கொண்டு விளங்கும் திருப்பதிகளுக்குத் திருப்பதி என்று பெயர். ஆழ்வார்களால் பாடல்பெற்ற வைணவத் தலங்களுக்கு மங்களாசாசனம் பெற்ற பதிகள் என்று பெயர். ஆசாரியார்களால் புனிதமாக்கப்பட்ட கோயில்களுக்கு அபிமான தலங்கள் என்று பெயர். எம்பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்களை

33. அஷ்டப்பிரபந்தம் (மூவர் உரை) முன்னுரை பக்.6

நூற்றெட்டு எனத் தொகைப்படுத்துவர். இந்த நூற்றெட்டுத் திருப்பதிகளை,

"ஈரிருப தாஞ்சோழ மீரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாமலை யோரிரண்டாம் – சீர்நடுநா
டாறோடீ ரெட்டுதொண்டை யவ்வடநா டாறிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள்"

– (நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி : 6)

என இடஅமைவுக்கு ஏற்ப பாகுபடுத்திக் காண்பர். இவற்றில் சோழ நாட்டுத் திருப்பதிகள் நாற்பது, பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டு, மலைநாட்டுத் திருப்பதிகள் பதிமூன்று, நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டு, தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்து இரண்டு, வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டு, திருநாட்டுத் திருப்பதிகள் ஒன்று. இவற்றுள் தொண்ணூற்றுறெட்டுத் திருப்பதிகள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவையாகும்.

நாராயணனாகிய திருமந்திரப் பொருளின் எல்லை நிலங்களாகவே வைணவர் நூற்றெட்டுத் திருப்பதிக...க் கருதுவர். அடியவர்கள், இவ்வுடலுடன் மகிழும்படிக்குப் பாங்காக எம்பெருமான் தன்னுடைய தலைமையும் எளிமையும் விளங்க எழுந்தருளியுள்ள இடங்களே இத்திவ்விய தேசங்கள் என்பதால் அவை திருமந்திர எல்லை நிலங்கள் எனப்படுகின்றன என்று முனைவர் பி.ஆர். நரசிம்மன் குறிப்பிடுகின்றார்.[34]

இந்தத் திவ்விய தேசங்களுள் முக்திதரும் திருப்பதிகளாகத் திருவரங்கம், திருவேங்கடம், சிரீமுட்ணம்,வானமாமலை, சாளக்கிராமம், புட்கரம், பத்திரிகாசிரமம், நேமிசாரணியம் அகிய எட்டுத்திருப்பதிகளை வைணவர்கள் சிறப்பித்துக் கூறுவர்.

திருவெட்டெழுத்துக்களாக விளங்கும் ஓம் நமோ நாராயணா என்ற மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்தும் இப்பகுதியில் உள்ள ஒவ்வொரு வடிவத்தை உணர்த்துகின்றன என்பது வைணவர்களின் கருத்து

..............................................................................

34. வைணவ மரபும் மெய்ப்பொருளியலும் ப.53,

35. ,, ,, ப.61

திருக்கண்ணபுரத்துப் பெருமாள் எட்டெழுத்தின் முடியானவன் என்பர். எனவே, முக்தி தருவதில் முதன்மையானது எனச் சிலர் கருதினாலும், கோயில் என்றாலே திருவரங்கத்தையே குறிக்கும் எனபார் வைணவர்.[35]

**திருவரங்கம்**

ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்று வைணவத் தலங்களுள் முதலானதாகவும் முதன்மையானதாகவும் விளங்குவது திருவரங்கமாகும். வைணவத் திருப்பதியாகிய திருவரங்கத்தைப் 'பூலோக வைகுந்தம்' என்றும் கூறுவர். இவ்வூர் இன்று ஸ்ரீரங்கம் என்று வழங்கப்படுகிறது. திருச்சி நகரில் இருந்து வடக்கே சுமார் 5 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது இவ்வூர். ஆறுகளுக்க இடையே அமைந்துள்ளதால் இயற்றை அழகுடன் திகழ்கிறது.

"வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை
கொண்டல்மீ தணவும் சோலை குயிலினம் கூவும் சோலை
அண்டர்கோன் அமரும் சோலை அணிதிரு அரங்கம் என்னா
மிண்டர்பாய்ந் துண்ணும் சோற்றை விலக்கிநாய்க் கிடுமின் நீரே.

– (திருமாலை : 14)

என்று தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கத்தின் இயற்றை அழகினை எழிலுற எடுத்தோதுகிறார்.

காவிரி – கொள்ளிடம் ஆகிய இரண்டு நதிகளுக்கு இடையே தென்னரங்கப் பெருமானின் திருக்கோயில் அமைந்துள்ளது. 'கோயில்' என்னும் சொல் இறைவன் எழுந்தருளித் திருக்காட்சியளிக்கும் இடமாயினும், வைணவர்களுக்குத் திருவரங்கத்தைச் சிறப்பாகக் குறிக்கும் சொல்லாக விளங்குகிறது. மேலும், தலைமைச் சிறப்புத்தலமாக விளங்கும் திருவரங்கத்தில் உள்ள கோயில் அளவில் பெரியது. ஆகையால் 'பெரிய கோயில்'என்ற பெயரையும் பெற்று விளங்குகிறது.

திருவரங்கக் கோயிலில் மூலவராக விளங்குபவர் திருவரங்க நாதர். தாயார் – திருவரங்கச் செல்வி ; தலவிருட்சம் – புன்னைமரம்; தீர்த்தம் – சந்திரபுஷ்கரிணி ; வீடணனுக்காகத் தென்திசை நோக்கி அனந்த சயனத் திருக்கோலம். இதனை வைணவப் பெரியோரொருவர்,

"சீரார்ந்த திருவரங்கம் பெரிய கோயில்
சிறந்தபிர ணவமான திருவ ரங்கா!
தாரார்ந்த திருவரங்கச் செல்வி புன்னைத்
திருசந்திர புட்கரிணி தகுந்தென் வாசல்
ஓரார்ந்த வீடணர்கொண் டிட்ட பொட்டத்
தகுந்தனந்த சயனத்தில் இலங்கு சோதி
காரார்ந்த திருவுருவும் கமலக் கண்கள்
கண்டுஅனு தினம்உள்ளத்தில் கருது வேனே"[36]
– (திருப்பதிக்கோவை : 1)

என்று போற்றி உள்ளம் உருகுகிறார்.

மிக்க பழமை வாய்ந்த சிறப்புடைய இத்தென்னரங்கர் திருக்கோயிலின் வரலாற்றை 'கோயிலொழுகு'என்ற நூல் ஆதியில் இருந்து பதினாறாம் நூற்றாண்டு வரை எடுத்துரைக்கிறது.

**திருவரங்கக் கோயில் தோற்றம்:**

திருவரங்கக் காயிலின் தோற்றம் குறித்த வரலாறு ஒன்று கூறப்படுகிறது. ஆதிகாலத்தில் பிரமன் சத்திய உலகில் அரங்கநாதரை ஆராதித்து வந்தான். பின்பு சூரிய குலத்து மனுவின் குமாரனான இட்சுவாகு மகாராசன் பிரமனை வணங்கி, அம்மூர்த்தியைப் பெற்று அயோத்தியில் ஆகம விதிப்படி வழிபட்டு வந்தான்.

ஆறாத அருளமுதம் பொதிந்த கோயில்
அம்புயத்தோன் அயோத்திமன்னர்க் களித்த கோயில்
தோறாத தனிவீரன் தொழுத கோயில்
துணையான வீடணர்க்குத் துணையாம் கோயில்
சேறாத பயனெல்லாம் சேர்க்கும் கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்
தீராத வினையனைத்தும் தீர்க்கும் கோயில்
திருவரங்கம் எனத்திகழும் கோயில் தானே.

என்ற பாடல் இதனை அழகுபெற எடுத்தோதுகிறது. அந்த அரங்கநாதனே இட்சுவாகு மகராசன் முதன் இராமபிரான் வரை சூரியகுல மன்னர்களுக்கெல்லாம் குலதெய்வமாக விளங்கினான்.

36. தஞ்சை சரசுவதி மகால் சுவடி எண்:243 f

மனித உருவம் கொண்ட பெருமாளாகிய இராமபிரானால் வணங்கப்பட்டதால், அரங்க நாதர் 'பெரிய பெருமாள்' என்று அழைக்கப்படுகிறார்.

இராமபிரான் வனவாசம் சென்ற பொழுது விபீடணனுக்கு அடைக்கலமளித்தான். கடல் கடந்து இலங்கையைச் சேர்த்து இராவணன் முதலான அரக்கர்களை அழித்து மீண்டும் அயோத்திக்குத் திரும்பி, பட்டாபிஷேகம் செய்து கொள்ளுகிறான். அதன்பின்பு விபீடணன், சுக்கிரீவன் முதலிய அனைவருக்கும் விடை கொடுத்து அவர்தம் ஊர்களுக்கு அனுப்பும்பொழுது, தம்வழிபாட்டு மூர்த்தியாக விளங்கிய அரங்கநாதரை விபீடணனுக்கு வழிபாடு செய்து வரும்படி கூறி, வழங்கினார். இதனைப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்,

"புண்டரிகத் தவன்தவம்செய் திறைஞ்சும் கோயில்
புரிசடையோன் புராணம்செய் தேத்தும் கோயில்
பண்டிரவி குலத்தரசர் பணிந்த கோயில்
பரிந்திலங்கைக் கோன்கொணர்ந்து பதித்த கோயில்
மண்டபமும் கோபுரமும் மதிலும் செம்பொன்
மாளிகையும் தண்டலையும் மலிந்த கோயில்
அண்டர்தொழும் திருவரங்கம் பெரிய கோயில்
அமர்ந்துறையும் பெருமானார் ஆடீர் ஊசல்"
– (சீரங்கநாதர் ஊசல் : 30)

என்ற பாடலின்வழி எடுத்துரைப்பதைக் காணலாம்.

இவ்வாறு இராமபிரானின் வழிபாட்டு மூர்த்தியைப் பெற்ற விபீடணன், இலங்கைக்குச் செல்லும் வழியில் இளைப்பாறுதல் பொருட்டுக் கீழே வைத்தான். இளைப்பாறியபின் அந்த மூர்த்தியை எடுக்க முயன்றபோது முடியவில்லை. அரங்கப் பெருமான் திருவரங்கமாகிய அவ்விடத்தில் சயனித்து விட்டார் என்பர்.

விபீடணன் விட்டுச் சென்ற அந்த ஆராதன மூர்த்திக்குத் தர்மவர்மன் என்ற சோழ மன்னன், மண்டபம், கோபுரம், புட்கரிணி முதலானவற்றை அமைத்து வழிபட்டான். அவன் காலத்திற்குப் பின்னர் காவிரி வெள்ளத்தால் அரங்கர் ஆலயம் மண்மேடிடப்பட்டது. பின்னர்

சோழன் கிள்ளி என்பவன் அதனை அகற்றி, ஆலயத்தைப் புதுப்பித்தான் என்று 'கோயிலொழுகு' நூல் கூறுகின்றது.

**திருவரங்கக் கோயிலின் அமைப்பு**[37]

திருவரங்கப் பெருமான் அரவணை மீது அறிதுயில் கொண்டருளுகின்ற திருக்கோயிலாக விளங்கும் இக்கோயில், மிகப்பெரிய கோயிலாகும். ஏழு பிரகாரங்களுடன் உத்தமோத்தமமான கோயில் எனச் சிறப்புப்பெற்று விளங்கும் கோயிலாகும். சிற்ப ஆகம நூல்கள் ஒன்று முதல் ஐந்து பிராகாரங்களை மட்டுமே கூறியிருக்க, திருவரங்கம் ஏழு பிரகாரங்களைப் பெற்று, ஒப்பற்ற தனிச் சிறப்புடன் விளங்குகிறது.

"மாட மாளிகை சூழ்தரு வீதியும்
மன்னு சேர்திரு விக்கிரமன் வீதியும்
ஆடல் மாறன் அகளங்கன் வீதியும்
ஆலி நாடன் அமர்ந்துறை வீதியும்
கூடல் வாழ்குல சேகரன் வீதியும்
குலவி ராச மகேந்திரன் வீதியும்
தேட ரியதர்ம வர்மாவின் வீதியும்
தென்ன ரங்கர் திருவா வரணமே."

என்ற பாடல் மாடமாளிகைப் பிரகாரம், திருவிக்கிரமன் பிரகாரம், அகளங்கன் பிரகாரம், ஆலி நாடன் பிரகாரம், குலசேகரன் பிரகாரம், இராச மகேந்திரன் பிரகாரம், தர்மவர்மன் பிரகாரம் ஆகிய ஏழு பிரகாரங்களின் பெயர்களையும் சுட்டுகின்றது. இத்திருக்கோயில் பிரகாரங்களில் ஆலிநாடன் மதிலே மிகப் பெரியது. இப்பெரிய மதிலைக் கட்டியவன் ஆலிநாடனான திருமங்கை மன்னன். இம்மன்னனே பின்னாளில் ஞானோதயம் பெற்று திருமங்கையாழ்வாரானார்.

திருவரங்கத் திருக்கோயிலில் அமைந்துள்ள ஏழு மதில்களின் அமைப்பைப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்,

---

37. புகழ் மணக்கும் வைணவத்தலங்கள் : பக்.116 – 117.

"அருமறை ஓதிய ஓரெட் டெழுத்தும் அயன்படைத்த
இருநில மீதினில் யாவரும் காண இலங்குதுத்தின்
குருமணி நாகத்தில் எங்கோன் விழிதுயில் கொண்டருளத்
திருமதில் ஏழும் விமானமும் ஆகிச் சிறக்கின்றவே"
- (திருவரங்கத்து மாலை : 95)

எனத் திருஎட்டெழுத்துக்களில் பிரணவம் விமானமும் ஏனைய எழுத்தேழும் ஏழு மதில்களுமாயின என்கிறார். மேலும், காவிரி கடலையும் ஏழு மதில்களுக்கு இடையேயுள்ள இடங்கள் கடலிலுள்ள ஏழு தீவுகளையும், இடையிலுள்ள விமானம் மேரு மலையையும் ஒக்கும் என்பதை,

"தாழா திபஞ்சொல் வந்தார் அரங்கர் தயங்குசெம்பொற்
தேழாம் விமானம் கிளர்செம்பொன் மேரு கிரிநிகர்த்த
ஏழா வரணத் திடையிடைத் தீவுகள் இவ்வனைத்தும்
சூழாறு மாகடல் எவ்வாறு நாமினிச் சொல்லுவதே."
- (திருவரங்கத்து மாலை : 96)

என்று கூறி, புதுவிளக்கமளித்து எழிலுற எடுத்தோதுகின்றார்.

இத்திருக் கோயிலில் இருபத்தொரு திருக்கோபுரங்கள் அமைந்து விளங்குகின்றன. அவற்றுள் கீழ்ப்பக்கம் உள்ள வெள்ளைக் கோபுரமும், தென் பக்கம் உள்ள நான்முகன் கோபுரமும் முக்கியமானவை. அரங்க மண்டபம், நாலுகால் மண்டபம், கார்த்திகை மண்டபம் ஆகிய மண்டபங்களைக் கடந்து சென்றால், கருடாழ்வார் அரங்கநாதரைச் சேவித்தவண்ணம் விளங்கும் பெரிய மண்டபம் அமைந்துள்ளது. இதனை அடுத்து பொன்போர்த்த கொடிமரம், பலி பீடம் ஆகியவையும் இவற்றைக் கடந்து கருவறையும் அமைந்துள்ளது.

இக்கோயிலின் கருவறை பிரணவாகாரத்தில் அமைந்துள்ளது. கருவறைமேல் உள்ள விமானம் அரங்க விமானமாகும். இந்த விமானம் பொன்தகடு வேயப்பட்டு விளங்குகிறது. கருவறையுள் கார்மேக வண்ணர் அரவணைமீது பள்ளிகொண்டு விளங்குகிறார்.

**தென்னரங்கரின் அறிதுயில் கோலம்**

கருவறை உள்ளிடம் முழுவதிலும் ஆதிசேடன் விரிந்து கிடக்க, அவனது பள்ளியில் தென்னரங்கப் பெருமான் தூங்காமல் தூங்குகிறார். எம்பெருமான், தன் ஒரு திருக்கரத்தால் தலையைத் தாங்கிய வண்ணம் கிடந்த திருக்கோலத்தினராகத் திகழ்கிறார். அவருடைய மற்றொரு திருக்கரம் முழங்கால்வரை நீண்டு கிடக்கிறது. அவர் திருமார்பிலே முத்தாரம், கௌஸ்துப இரத்தினம், வனமாலை அனைத்தும் புரள்கின்றன. தலையில் நீண்டுயர்ந்த மணிமுடி அழகு சேர்க்கிறது. இணைபிரியாத தேவியர், அருகில் இல்லாத நிலையில் யோகாசன மூர்த்தியாக விளங்குகிறார். எம்பெருமானும் ஆதிசேடனும் சுதை உருவில் அமைந்தவர்கள். ஆதிசேடன் பொன்தகட்டால் போர்த்தப்பட்டுள்ளான். தென்னரங்கப் பெருமான், தைலக் காப்புக்குள் புதையுண்டு காட்சி தருகிறார்.

மேற்குதிசை வாழுமாறு தனது திருமுடியை வைத்தருளி, உலகெலாம் போற்றும் திருப்பாதங்களைக் கீழ்த்திசை உய்யுமாறு அப்பக்கமாக நீட்டி, வடதிசைக்குப் பின்னழகைக் காட்டி, தென்திசை இலங்கை நோக்கி திருமுகம் காட்டித் துயில்கின்றார். எம்பெருமானின் இந்த எழில்மிகு கோலத்தைக் கண்டு,

> குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
> வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கிக்
> கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு
> உடலெனக்கு உருகு மாலோ என்செய்கேன் உலகத் தீரே.
>
> – (திருமலை : 19)

என்று தம் பாசுரத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார் எழிலுற எடுத்தோதுவார்.

> "ஞாலத் திகிரி பகலிரா வாக நடத்துமிந்த
> காலத் திகிரி நடக்கவற் றோவெங் கனலுமிழ்வாய்
> ஆலப் பணியணை மீதே அரங்கத் தமர்ந்துறையும்
> நீலக் கடல்கண் விழித்துறங் காவிழல் நிச்சயமே."
>
> – (திருவரங்கத்து மாலை : 97)

எனத் திருவரங்கத்தில் கொடிய நெருப்பை உமிழ்கின்ற வாயினையும் நஞ்சையும் உடைய திருவனந்தாழ்வானாகிய சயனத்தில் எழுந்தருளியிருக்கின்ற, நீலநிறமாகிய கடல்போன்ற நம்பெருமாள், தினந்தோறும் யோகநித்திரை செய்யாவிடில் பூமிச்சக்கரத்தை பகலும் இரவுமாக நடத்துகின்ற இந்தக் காலச் சக்கரம் இடையறாது நடக்காது என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

திருவரங்கப் பெரியகோயிலை, வைணவப் பெரியோர்கள் தேவர்கள் வந்து வாழ்த்தி வணங்கும் கோயில் எனப் போற்றுவர். கோனேரியப்பனையங்கார்,

"மேவியபங் கயன்தவம்செய் திறைஞ்சும் கோயில்
வேணியரன் புராணநூல் விளம்புங் கோயில்
தாவுதிரை காவிரி புடைசூழ் கோயில்
சந்திரவா வியின்மருங்கு தழைத்த கோயில்
பாவலர்சந் தாவரண முடைய கோயில்
பணியனிசோ ரோங்கார மான கோயில்
தேவர்தொழுந் திருவரங்கம் பெரிய கோயில்
சீரங்க நாயகியா ராடி ரூசல்.

- (சீரங்க நாயகியார் ஊசல் : 15)

என்று இக்கோயிலைப் போற்றுவதைக் காணலாம்.

பன்னிரு ஆழ்வார்களில், மதுரகவி ஆழ்வாரைத் தவிர ஏனைய பதினொரு ஆழ்வார்களும் தென்னரங்கப் பெருமானைப் போற்றித் தீந்தமிழ்ப் பாசுரங்களை அருளியுள்ளனர். திவ்விய பிரபந்த பாசுரங்களில் இருநூற்று நாற்பத்து ஏழு இடங்களில் இத்திருவரங்கம் இடம்பெற்ற, முதன்மை பெற்ற தலமாக விளங்குவது இங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமானின் புகழைச் சுட்டுவதாகும்.



# நூலாராய்ச்சி

திருவரங்கக் கலம்பகம் என்பது திருவரங்கத்தின் கலம்பகம் என விரியும். இவ்வூரின் சிறப்பையும், இங்கு அமைந்துள்ள கோயிலின் சிறப்பையும், இங்கு கோயில் கொண்டுள்ள திருவரங்கப் பெருமானின் சிறப்பையும் ஆசிரியர் நூல் முழுவதிலும் விளக்குவதைக் காணலாம்.

## நூலமைப்பு

திருவரங்கக் கலம்பகம் தனியன் இரண்டு பாடல்கள், காப்புச் செய்யுட்கள் நான்கு, நூலில் நூறு பாடல்கள், பதிகத்தில் ஒரு பாடல்கள் என 107 செய்யுள்களால் ஆனது. நூல், 'சீர்பூத்த செங்கமல' எனத் தொடங்கி, அந்தாதித் தொடைபெற்று நடந்து இறுதிப்பாடலில் 'சீரியோரே'என மண்டலித்து முற்றுப்பெறுகிறது. இது சொல் தொடர்நிலைச் செய்யுள் வகையைச் சார்ந்தது. இந்நூலில், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பாக்களும் பாவினங்களுமாகப் பல்வேறு யாப்பு வகைகள் இடம்பெற்றுள்ளன.

## கலம்பக உறுப்புகள்

புயவகுப்பு (7), மேகவிடு தூது (12, 707, தவம் (18,62,63) வண்டு (25), அம்மானை 926) நாரைவிடு தூது (30), சித்து (42,43) கைக்கிளை (47,57,75), சம்பிரதம் (49), மறம் (52,53), ஊசல் (58), தழை (60,87), முத்தம் (61) களி (65), குறம் (69), மதங்கு (80), பாண் (81), இரங்கல் (21,22,24,27,31,33,34,39,48,64,66,68,72,74,77,79,82,84,85,88,89,90) ஆகிய பல்வேறு உறுப்புக்களை இக்கலம்பகம் பெற்றுள்ளது. பக்திச் சுவைக்கு முதன்மையளிப்பனவாக இக்கலம்பக உறுப்புகள் சிறப்புடன் அமைக்கப்பட்டு பாடப்பட்டுள்ளன.

## தலச்சிறப்பு

திருவரங்கத் திருத்தலத்தைக் குறித்தும், அங்கு அமைந்துள்ள கோயிலைக் குறித்தும், அங்கு கோயில் கொண்டுள்ள திருவரங்கப் பெருமானைக் குறித்தும் பாடுதல் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின்

முதன்மை நோக்கமாதலால் நூல் முழுவதிலும் திருவரங்கச் சிறப்பினை எடுத்தோதியுள்ளார்.

திருவரங்கப் பெருநகர் - 4,66, தென்டிரைதொறுந் தரளமும் கனகமும் சிதறு தென்திருவரங்க நகர் - 6, பொன்னரங்கம் - 15, கோயிலரங்கம் - 18, அரிதான அரங்கம்-37, செழு திருவரங்கம் - 40, திருவரங்கம் - 44, 89, அரங்க நாடு - 56, செம்பொன்னரங்கம் 48, தென்னரங்கம் - 71, சீர்அரங்கம் - 94, நதிபொருதரங்கம் 97, வாரியரங்கம் 98 என இத்தலச் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**திருவரங்கமும் கோயிலும்**

திருவரங்கத்தில் உள்ள கோயில், சோழ நாட்டுத் திருப்பதிகள் நாற்பதில் முக்கியமானது, முதன்மையான தலங்களாகிய 'கோயில் திருமலை பெருமாள் கோயில்' ஆகிய மூன்றனுள் முதலாவதாகவும் விளங்குவது. 'கோயில்' என்றும் 'பெரிய கோயில்' என்றும் அழைக்கப்படுகிறது. திருவரங்கப் பெருமான் எழுந்தருளியுள்ள இக்கோயிலை பல பாடல்களால் எடுத்துரைத்துள்ளார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

செம்பொன் மதில் எழுடுத்த திருவரங்கப் பெரியகோயில் - 1, பொற்றாரையாள் கணவன் துயிலும் பொற்கோயில் - 5, திருவரங்கத் திருக்கோயில் – 41, திருமால் துயில் கோயில் –46, இலகு பொற்கோயில் – 50, தென் திருவரங்கப் பெரிய கோயில் - 75, கோயில் - 78, 83,87 மானார் கேசன் மேலார் மாலார் வாழ் கோயில் - 79 இளவேயினர் மன்னிண கோயில் - 85, திருவரங்கக் கோயில் - 93, தென்னரங்கக் கோயில் - 99 எனவும் அரங்க மாளிகை 38 எனவும் இக்கோயிலின் சிறப்புகள் பலவும் வலவாறு விளக்கப்பட்டுள்ளன.

**திருவரங்கமும் திருவரங்கப் பெருமானும்**

திருவரங்கத்தில் மூலவர் ஸ்ரீரங்கநாதன், பெரிய பெருமாள், நம்பெருமாள் என்ற அழைக்கப்படுகிறார். அழகிய மணவாளன் என்ற பெயருடையவரான எம்பெருமாள் அனந்தாழ்வான் மீது புசங்க சயனத்தில் காட்சியளிக்கிறார். அத்தகைய திருவரங்கரின் பல்வேறு பெயர்களை பாடல்களில் அமைத்துள்ளார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

திருவரங்கன் - 2, பொன்னரங்கன் (அ), அரவணை விரும்பி அறிதுயிலமர்ந்த அணிதிருவரங்ர் (7), பொன்னரங்கத்தான் - 8, அரங்கன் - 9,13,35,36,43,64,68,87, அரங்கா 17,61,90,96, அரங்கர் - 23,62,72,80,101, திருவரங்கனார் -14, திருவங்கர்- 24, 25,26,31,47,65,88, கோயிலிடத்தான் - 10, அரங்கத் தரவணைமேற் பள்ளி கொண்டவன் - 11, அண்டர் காணா அரங்கத்தம்மான் - 12, அலையார் திருவரங்கத் தெம்பிரான் 16, கோயிலரங்கன் - 21, பொன்னி நன்னீர் சீரரங்கா - 19, திருவரங்கத் தீசன் - 20, அணி அரங்கா - 27, 55, அரங்கேச - 22, அரங்கேசர் - 34, 45, திருவரங்கேசர் - 28, பெருவரங்கேசர் - 30, எழிலரங்கம் துயிலும் எம்பிரான் - 32, பெரிய பெருமான்-33, திருவரங்க ராசர் - 39, திருவரங்கேசனார் - 42,77, திருவரங்கத்து நெடிதூழி துயிலும் பிரான் - 49, அரங்கத்திறை 51 - திருவரங்கப் பெருமான் - 52, அருளரங்கன் - 53, மாலை அரங்கேசன் - 54, திருவரங்கன் - 62, 63, நம்பெருமாள் - 69, திருமாலரங்கர் - 70. அருள் அரங்கர்-57, திருவரங்கராசர் - 58, கோயிலரங்க நெடியோன் - 59, பண்கொண்ட வேயூது செவ்வாயரங்கர் - 74, திருவரங்கேசர் - 76, அருள் அரங்கர் - 77, சிலைகொண்ட செங்கை அரங்கேசர் - 82, அழகிய நம்பெருமாள் - 84, அரங்க நாயகன் - 86, பூவிரியும் துழாயரங்கன் - 100 என பலவாறாகப் புகழ்ந்துரைத்துள்ளதைக் காணலாம்.

**புராண கதைகள் :**

திருமாலின் அவதாரச் சிறப்புக்களை எடுத்துரைப்பனவாக அமையும் பாகவதம், இராமாயணம், மகாபாரதம், நாலாயிர திவ்விய பிரபந்தம் மற்றும் பழைய நூல்களில் கூறப்படும் கதைகள், திருவரங்கக் கலம்பகத்தில் பல இடங்களிலும் பயின்று வந்துள்ளன.

பிரமனை ஈன்றது 1 (தாழிசை), 32,73,80 கசேந்திரனுக்கு அருளியது - 10, 27. நரசிம்ம அவதாரம் எடுத்து இரணியனைக் கொன்றது 2 (தாழிசை), 2 (ஈரடி அராகம்) 7 திரௌபதிக்க ஆடை அளித்தது.-27, இராமாவதாரத்தில் அம்பினால் கடல் சுவறச் செய்தது - 1(முச்சீர் ஓரடி அம்போதரங்கம்), (நாற்சீர் ஈரடி அம்போதரங்கம்), 7,22,82, கோவர்த்தன கிரியை ஏந்தியது 3 (முச்சீர் ஓரடி அம்போரங்கம்), 4 (நாற்சீர் ஓரடி அம்போதரங்கம்), 7, 27, சீதையுடன் கானகம் சென்றது 16,37

விளங்கனி மேல் கன்று எறிந்தது -7, வாமன அவதாரத்தில் விண்ணும் மண்ணும் அளந்தது (ஆசிரியச் சரிதம்), 27,63,73,82 குவலயாபீடம் யானையைக் கொன்றது 4 (முச்சீர் ஓரடி அம்போதரங்கம்), 3 (நாற்சீர் ஈரடி அம்போதரங்கம், 7,37,83 அருச்சுனனைக் காக்க சக்கரத்தால் சூரியனை மறைத்தது 27, வாலியைக் கொன்றது 38, முரன், கரன் இருவரையும் கொன்றது 10, காண்டாவனத்தை அழித்தது - 17, சிவனுடைய சாபத்தைப் போக்குதல் 27, 37, 73, திருப்பாற் கடலைக் கடைந்தது 2 (முச்சீர் ஒரடி அம்போரங்கம்) 7, மருத மரங்களை முறித்தல் 3 (இருசீர் ஒரடி அம்போதரங்கம்) 7, நப்பின்னைக்காக ஏழு எருதுதளை அழித்தல் 2 (இமுசீர் ஓரடி அம்போதரங்கம்) 4 முச்சீர் ஒரடி அம்போதரங்கம்) 7, கடலில் அணை கட்டியது, 10, அரிஷ்டாசுரனைக் கொன்றது 83, மாரீசமானைக் கொன்றது 27, வாணாசுரனைக் கொன்றது 39, காளிங்க நடனம் ஆடியது 10,19,42 கோசி அசுரனைக் கொன்றது 83, வராக அவதாரம் எடுத்து 3 (தாழிசை), 3 (ஈரடி அராகம்), 1 (முச்சீர் ஓரடி அம்போரங்கம்) சிவனிடம் மான் சென்று ஒளிந்தது 87, உலகை உண்டு உமிழ்ந்தது 4 (ஈரடி அராகம்), 4, 47,64,73. இராவணனைக் கொன்றது 7,22,34,73,89, சிவபெருமான் சடாமுடியில் கங்கையைத் தாங்கியது 33,45,61,73, பகாசுரனைக் கொன்றது 7, சீதைக்காக வில் ஒடித்தது 10,37. இக்கதைகள் நூலில் தக்க இடங்களில் கூறப்பட்டுள்ளன.

**இலக்கிய நயம்**

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் எம்பெருமானின் புகழையும் அருளையும் எடுத்துக் கூறுவதில் இன்பம் கண்டவர். திருவரங்கக் கலம்பகப் பாடல்களில் இறையுணர்வே உயிரோட்டமாக அமைந்திருந்தாலும் இலக்கியச் சுவையும் இவற்றில் கலந்துள்ளது. கற்பனையாற்றலைப் புலப்படுத்தும் வகையில் உவமை, உருவகம், சிலேடை, மடக்கு, தற்குறிப்பேற்றம் முதலிய பல்வேறு அணிநலன்களை இப்பாடல்களில் கையாண்டுள்ளார்.

**உவமையணி**

செய்யுளில் ஏற்கனவே கண்டு வைத்த பொருளை புதிதாகக் காணும் பொருளோடு பொருத்திவைத்துக் காணுவது உவமையணி

எனப்படும். உவமையானது வினை, பயன், மெய், உரு என்ற நான்கு பற்றியும் அமையும் என்பார் தொல்காப்பியர்.

"ஊசல் வடம்போல் ஊர்சக டம்போல் ஒழியாமே
நாசவு டம்போ டாவிசு ழன்றே நலிவேனோ?
வாச னும்போ தாசன னுங்கூர் மழுவோனும்
நேசமு டன்சூழ் கோயில ரங்கா நெடியோனே"
- (பாடல் எண்:59)

இப்பாடலில் முதலடிக்கு, 'ஓடியோடே வருவதும் போவதும் போன்ற ஊஞ்சல் கயிறு போலவும் மாறி மாறி உருண்டு கொண்டு செல்லுகின்ற வண்டியின் உருளையைப் போலவும்' என்பது பொருளாகும். ஊஞ்சல் கயிற்றைப் போலவும் ஊர்சகடம் போலவும் ஓய்வில்லாதபடி அழியும் தன்மையுடைய உடம்புடன் உயிர் அலையப்பெற்று வருந்துவேனோ என்பது இப்பாடலின் பொருள். ஊஞ்சல் கயிற்றின் இயக்குமும் ஊர்சகடத்தின் இயக்கமும் ஓய்வில்லாதபடி இயங்கும் உடம்புடன், உயிர் அலைதலும் உவமிக்கப்படுவதால் இது உவமையணி.

**உருவக அணி**

உவமைக்கும் பொருளுக்கும் உள்ள வேறுபாட்டினை நீக்கி ஒன்று என்று குறிப்பிடுவது உருவக அணி. உவமையே பொருளாக மாறும் நிலையினை இது குறிக்கும். திருவரங்கக் கலம்பகத்தில்,

"பிறவியெனும் கடலழுந்திப் பிணிபசியோ டைந்திரிய
சுறுவருங்கக் கொடுவினையின் சுழலகப்பட் டுழல்வேனோ
அறமுடையாய் என்னப்பா அரங்காவென் னாருயிருக்
குறவுடையாய் அடியேனை உயக்கொள்வ தொருநாளே!
- (பாடல் எண்:96)

என்ற பாடலில் உருவக அணி அமைந்துள்ளது. இதில் பிறவி என்பது கடலாகவும் பசி, பிணி, உடைய ஐம்பொறிகள் சுறாமீன்களாகவும் கொடிய தீவினைகள் சுழலாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளதால் இது உருவக அணியாகும்.

**சிலேடை**

சொற்றொடர் ஒரு வகையாக நிற்கும் இயல்பிலேயே பலபொருள் படுவதாக அமைக்கும் செம்மொழிச் சிலேடை முறையில் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடல்களை இயற்றியுள்ளார்.

"திருப்பொற் பாவைக்குக் கஞ்சம்பொன் னாக்கிய
சித்த ரேம்சுத்தக் காயா மலரென
உருபொற் பானதி ருவரங் கேசனார்
ஊர கத்துநின் றார்சென் றிறைஞ்சினோம்
இருப்புப் பாடகம் காட்டினார் யாமவர்க்
கிரும்பை ஆடக மாக்கினம் ஈயத்தை
நருக்கி வெள்ளிய தாகவு ருக்குவோம்
நமது வித்தைக் கமுதே அருமையே."

- (பாடல் எண்:42)

என்ற திருவரங்கக் கலம்பகப் பாடலில் ஒருவகையாக நிற்கும் இயல்பிலேயே பலபொருள் படுவதாக அமைக்கும் செம்மொழிச் சிலேடை அமைந்துள்ளது. "திருப்பொற் பாவைக்குக் கஞ்சம் பொன்னாக்கிய சித்தரேம்" என்பது, பொற்சிலை செய்வதற்கு வெண்கலத்தைப் பொன்னாகச் செய்து கொடுத்த சித்தர்கள் நாங்கள்" எனவும், 'அழகே உருவான திருமகளுக்குப் பொற்றாமரை மலரைச் செய்து கொடுத்த இரசவாத சித்தர்கள் நாங்கள் எனவும், உரைப்படும். 'இருப்புப் பாடகம் காட்டினார்' என்பது, இரும்பினாலாகிய பாடகம் என்னும் காலில் அணியும் அணியைக் காடடினார் எனவும், 'திருப்பாடகம் என்னும் திருப்பதியைத் தாம் வீற்றிருக்கும் இடமாகத் தெரிவித்தார்' எனவும் உரைபடும். அதைப்போலவே, 'யாமவர்க்கு இரும்பை ஆடக மாக்கினம் என்பது, 'சித்தர்களாகிய நாங்கள் அந்த இரும்பாலாகிய காலணியாகிய பாடகத்தை ஆடகம் என்னும் பொன்னாலாகிய அணியாகச் செய்து கொடுத்தோம் என்றும், 'பெரிய காளியன் என்னும் பாம்பின் படத்தை நடனமாடும் இடமாகச் செய்தோம்' என்றும் உரைப்படும்.

**தற்குறிப்பேற்ற அணி**

பெயரும் பொருள்கள், பெயராப்பொருள்கள் ஆகிய இருவகைப் பொருள்களிடத்தும் இயல்பாக நிகழும் தன்மை அல்லாமல் வேறொரு நிலைமையை ஏற்றிச் சொல்லுதல் தற்குறிப்பேற்ற அணியாகும். புலவரின் கற்பனையாற்றலை இது விளக்குவதாகும். பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இவ்வணியைத் தம்பாடல் ஒன்றில், எழிலுற அமைத்துள்ளார்.

"வாயில் இரங்கினை; ஆரம் எறிந்தனை,
வாள்வளை சிந்தினைதன்
பாயலலை உந்தினை; மாலை அடைந்தனை;
பாரில் உறங்கிலையால்;
கோயில் அரங்கனை மாக னகந்திகம்
கோக னம்பொலியும்
ஆயிழை நண்பனை நீயும் விரும்பினை
ஆக நெருங்கடலே!

- (பாடல் எண்: 21)

என்ற திருவரங்கக் கலம்பகபாடல் தற்குறிப் பேற்ற அணி அமைந்துள்ளது. இப்பாடலில், தலைவனைப் பிரிந்து பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவி, தனக்கு நேர்ந்த துன்பத்தை கடலின்மேல் ஏற்றிக் கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது. போரெலி செய்தலும், முத்துக்களை வீசுதலும், சங்குகளைச் சிந்துதலும், அலைகளைத் தள்ளுதலும், மாலை நேரத்தை அடைதலும், அலைகளை அலைத்துக் கொண்டிருத்தலும் இயல்பானவை. ஆனால் தலைவியானவள், தலைவனைப்ப பிரிந்த வருத்தத்தால் கடல், தான் வாய்விட்டுப் புலம்புவது போல பேரொலி செய்வதாகவும், பிரிவாற்றாமையால் கழுத்தில் அணிந்துள்ள மணியாரத்தைத்தான் வீசுவது போல முத்துக்களை வீசுவதாகவும், பசலையினால் தன் கைகளில் இருந்து வளையல்கள் கழன்று விழுவது போன்ற ஒளி பொருந்தியதான சங்குகளைச் சிந்துவதாகவும், குளிர்ச்சியுடையதான படுக்கையைத் தான் தள்ளுவதைப் போல குளிர்ச்சியுடையனவாய்ப் பாய்ந்துவரும் அலைகளைத் தள்ளுவதாகவும், தான் வேட்கைமிகுதியால் மயக்கம் அடைவதைப் போல மாலை நேரத்தை அடைவதாகவும், தான் வேதனை மிகுதியால் இரவு நேரம் முழுவதும்

தூங்காமல் இருத்தலைப் போல எந்நேரமும் பூமியில் ஓயாத அலைகளை அலைத்துக் கொண்டு இருப்பதாகவும் எடுத்துரைத்து அதனால் நீயும் என்னைப் போலவே திருமகளது கணவனை விரும்பியிருக்க வேண்டும் என்று தன்குறிப்பினை ஏற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது.

**இல்பொருள் உவமையணி**

இல்லாத பொருளை உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமையணியாகும்.

"இருங்குங்கு மத்தோள் அரங்கேசர் முன்னாள்
இலங்கா புரங்கா வலன்காலி னால்வீழ்
கருங்குன்று போன்மண் முகங்குத்தி வீழக்
கண்டார் ............................................"

- (பாடல் எண்:34:1-2 அடிகள்)

என்ற திருவரங்கக் கலம்பகப் பாடலில் இல்பொருள் உவமையணி அமைந்துள்ளது. இலங்கை நகருக்க அரசனாகிய இராவணன், பலத்த காற்றினால், கரிய,பெரிய மலையானது அடியோடு வீழ்ந்தது போல, இராவணன் முகமானது பூமியைக் குத்தும்படியாக வீழக் கண்டவர் என்பது இதன் பொருளாகும். காற்றினால், கரிய பெரிய மலையானது அடியோடு வீழுதல் என்பது நடைபெற இயலாத ஒன்று. ஆதலின் இப்பாடலில் இல்பொருள் உவமையணி அமைந்துள்ளதை அறியலாம்.

**மடக்கணி**

மடக்கு என்ற சொல்லணியைப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் மூன்று பாடல்களில் அமைந்துள்ளார். மடக்கு என்பது சொல்லோ, சொற்றொடரே மீண்டும் மடங்கி வந்து வெவ்வேறு பொருளைத் தரும் அணியாகும்.

"வேலையுல இல்பிறக்கம் வேலைஒழிந் தோமில்லை
மாலையரங் கேசனைநா மாலையினும் ~ காலையினும்
உன்னிநைந்தோம் இல்லை உடலெடுத்த அன்றுமுதல்
என்னினைந்தோ நெஞ்சே இருந்து"

- (பாடல் எண்:54)

இப்பாடலின் முதலடிக்கு, 'கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் மீண்டும் பிறவியெடுத்தலாகிய தொழிலை நாம் நீக்கிக் கொள்ளவில்லை என்பது பொருளாகும்.

**சொற்பொருள் பின்வரு நிலையணி**

ஒரு செய்யுளில் ஒரு சொல் ஒரே பொருளிலேயே மீண்டும் பயின்றுவரில் சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

"வாடி ஓட வனச மன்ன
இருகண் வெள்ளம் அருவிபோல்
மருவி ஓட மதனன் வாளி
உருவி ஓட வாடையூ
டாடி ஓட அன்றி லோசை
செவியி லோட வண்துழாய்
ஆசை யோடும் எங்கள் பேதை
ஆவி ஓட நீதியோ?..."ஸ

- (பாடல் எண்: 39 : பாடலடிகள் 1-2)

என்ற இப்பாடலில் 'ஓட' என்ற சொல்லானது மீண்டும் மீண்டும் ஓடுதல் என்ற பொருளில் மீண்டும் மீண்டும் வந்துள்ளது நோக்கத்தக்கது.

**ஏகதேச உருவக அணி**

ஒரு செய்யுளில் உருவகத்தில் ஒரு பகுதியை உருவகித்து மற்றதை உருவகிக்காமல் அமைப்பது ஏகதேச உருவக அணியாகும்.

"வீரர்அறாங் காகிய ஐவரை மாற்றி விடஅரவில்
போர்அறாங் காக நடித்தபொன் தாள்பற்றி பொன்னிநன்னீர்ச்
சீர்அறாங் காநின் தொழும்பனென் றேசிந்தை செய்யிலது
கூர்அறாங் காநெஞ்ச மேவஞ்ச மாயக் கொடுவினைக்கே."

- (பாடல் எண்:19)

என்ற பாடலில் ஏகதேச உருவக அணி அழகுற அமைந்துள்ளது. இப்பாடலின் ஈற்றடிக்கு மிக்க வஞ்சனையையுடைய கொடிய இருவினைகளை அறுப்பதற்கு கூரிய வாளாகும் என்பதைக் காண்பாயாக'

என்பது பொருளாகும். எம்பெருமானைச் சரணமடைதலை கூரிய அரம் என்று உருவகித்து கொடுவினைகளை உருவகிக்காமல் இருப்பதால் இது உருவக அணிகாகும்.

**மயக்கவணி**

ஒன்றை மற்றொன்றாய்க் கருதி மயங்கியமை போல் பேசல் இவ்வணியின் இயல்பாகும்.

"தாஅட்தாமரைத் தவிசுறைதரு
சூஉட்டோதிமம் பேட்டுடனெழ
மயிற்சேவல் மனங்களிப்பக்
குயில்பேடைக் குலமொளிப்ப
மழைமுகிலென முழவதிர்தரு
திருவரங்கப் பெருநகருள்........."
- (பாடல் எண்:66)

இப்பாடலடிகளில் திருவரங்கப் பெரிய நகரில் மேகங்கள் ஒன்றோடொன்று மோதுவதால் ஏற்படும் இடியோசை போன்று முழவு முதலான தோல்கருவிகளில் இருந்து எழும் ஒலியானது எங்கும் அதிர, காம்புகளை உடைய தாமரை மலராகிய இருக்கையில் உறைந்திருக்கக் கூடிய உச்சியையுடைய அன்னப்பறவைகள் தங்கள் பேடைகளுடன் அச்சத்தினால் எழுந்திருக்கும். பெண்மயில்களும் ஆண்மயில்களும் மனம் மகிழ்ச்சியுற்று ஆடும். ஆண்குயில்களின் கூட்டமும் பெண் குயில்களின் கூட்டமும் அச்சத்தால் மறைந்துகொள்ளும். மழைக்காலத்தால் மயிலினம் மகிழ்தலும் குயிலினம் வருந்துதலும் இயல்பாதலால் மயிலும், குயிலும் முழவொலியைக் கேட்டு மழையொலியென மயங்கியதால் இது மயக்கணியாகும்.

**உருவக உயர்வு நவிற்சி அணி**

உள்ளதை மிகைப்பட புனைந்து கூறுதல் உயர்வு நவிற்சி அணி எனப்படும். உருவக அணியும் இணைந்திருப்பின் உருவக உயர்வு நவிற்சி அணி என்றழைக்கப்படும். திருவரங்கக் கலம்பகத்தில் 47, 83 ஆகிய இரண்டு பாடல்களால் உருவக உயர்வு நவிற்சி அணி எழிலுற அமைந்துள்ளது.

"அண்டம்முழு துண்டவர் உமிழ்ந்தவர் இடந்தவர்
அளந்தவர் வளர்ந்த ருளுமா
சண்டபண ஐந்தலை அனந்தசய னந்திகழ்
தரும்திருவ ரங்கர் வரைமேல்
கண்டதொரு கொம்பதில் இரண்டுமக ரங்களொடு
கஞ்சமிரு வெஞ்சி லைமணம்
கொண்டதொரு கொண்டலிரு கொண்டையொரு
தொண்டையிரு
கும்பமொரு செம்ப ணிலமே."
- (பாடல் எண்:47)

இப்பாடலில் திருவரங்கராகிய மலையின் மீதுள்ள பூங்கொடி போன்ற தலைவியது மேனியில் இரண்டு மகர குண்டலங்களும் ஒப்பற்றமுகமும் இரண்டு புருவங்களும், பூவின் மணங்கொண்டதொரு கூந்தலும் இரண்டு கண்களும், ஒப்பற்ற அதரமும், இரண்டு தனங்களும் ஒப்பற்ற கழுத்தும் உள்ளன என்பதை மறைத்து உவமைப் பொருளாக உயர்த்திக் கூறியதால் உருவக உயர்வு நவிற்சியணியாகும்.

அணிகளும் தத்தம் அளவில் மிகாது பயன்படின் செய்யுளுக்குச் சிறந்த அணிகலனாக விளங்கும் என்பதற்கு ஏற்ப பொருத்தமான இடங்களில் பல்வகை அணிகளைப் பாங்குற அமைத்துத் திருவரங்கக் கலம்பகத்தைப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் சிறப்புச் செய்துள்ளார் என்றால் மிகையாகாது.

**திருவரங்கக் கலம்பகத்தில் சுவைகள்**

இலக்கியத்திற்கு உயிரூட்டுவன சுவைகள் படிப்போரின் மனத்தில் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும் ஆற்றல் இச்சுவைகளுக்கே உண்டு. இறையனுபவத்திற்கு அடுத்தநிலையில் வைத்து எண்ணக் கூடிய இலக்கிய சுவையாகும். இலக்கியத்தில் அமையும் சுவைகளைத் தொல்காப்பியர்,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப"[38]

38. தொல். பொருளதிகாரம் : மெய்ப்பாட்டியல் : நூற்பா –2)

என எண்வகைப் படுத்துகின்றார். திருவரங்கக் கலம்பகத்தில் இந்த எண்வகைச் சுவைகளும் பாங்குற அமைந்து கற்பவர்கள் மனதில் களிப்பை உருவாக்க வல்லனவாக விளங்குகின்றன.

**நகை:**

தனது மகளை மணம்பேசும்படி அரசரால் அனுப்பப்பட்ட தூதனை நோக்கி மறவன் ஒருவன் மணம் மறுத்து, அவ்வரசரை இகழ்ந்து பேசுவதாக அமைவது 'மறம்' என்னும் கலம்பக உறுப்பாகும். திருவரங்கக் கலம்பகத்தில் அமைந்துள்ள 'மறம்' என்ற உறுப்பமைந்துள்ள பாடல் நகைச்சுவை உடையதாக அமைந்துள்ளது.

*"கொற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா !*
*குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய் ?*
*அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்*
*அவதரித்த திருக்குலமென் றறியாய் போலும்*
*மற்றதுதான் திருமுகமே ஆனா லந்த*
*வாய்செவிகண் மூக்கெங்கே மன்னர் மன்னன்*
*பெற்றவிள வரசானால் ஆலின் கொம்பைப்*
*பிறந்தகுலத் துக்கேற்கப் பேசு வாயே."*

- (பாடல் எண்:52)

என்று வெற்றியையுடைய வேந்தனுடைய திருமுகத்தைக் கொண்டு வந்த தூதனே ! முகமில்லாத குறை உடலுக்கோ வேடர்களாகிய எங்களுடைய பூங்கொம்பை மணம் செய்து தரும்படியாகக் கேட்டாய் !. இருவகைப் பற்றுமற்று முற்றும் துறந்த முனிவர்களெல்லாம் அடைக்கலமடைகின்ற திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவன் நம் பெருமான். அப் பெருமானின் தோழனாகிய குகப்பெருமாள் திருஅவதாரம் செய்த மேன்மையான குலம், எங்கள் குலமென்று அறியவில்லை போலும் ! நீ கொணர்ந்தது முகமானால் அதன் உறுப்பாகிய வாய், செவி, கண், மூக்கு எங்கே ! அரசர்க்கு அரசனாகிய சக்கரவர்த்தி பெற்ற இளைய அரசானால் (இளவரசு) அக்குலத்திற்குப் பொருந்த ஆலமரத்தின் கொம்பை மணம் பேசுவாயாக என்று கூறுகின்றான் மறவன்.

இப்பாடலில் சொல்லப்பட்டுள்ள 'திருமுகம்' என்பது 'திருமடல்' எனவும் 'அழகிய முகம்' எனவும் இருபொருள்படும். கொம்பு என்பது,

'பூங்கொம்பைப் போன்ற பெண்' எனவும், 'மரத்தின் கொம்பு' எனவும் இருபொருள் படும். இளவரசு என்பது 'அரசனின் மகன்' எனவும் 'அரசமரம்' எனவும் இருபொருள்படும். இவ்விரு பொருள்படும் நிலையைக் கொண்டு நயத்துடன் கூறும் பக்தி நகைச்சுவைக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

திருவரங்க நாதனுக்கே அடிமை பூண்ட எமது உயிர் மற்றொரு தெய்வத்திற்காவது மனிதருக்காவது சொந்தமாகாது என்பதும், அவ்வாறு மற்ற தெய்வங்களுக்கு அடிமையாக்க முயல்வாரை நோக்கி, பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கடிந்து கூறுவது, இப்பாடலில் மறைபொருளாகச் சொல்லப்பட்டிருப்பது சுட்டத்தக்கதாகும்.

**2. அழுகை**

தலைவன் பனிக்காலத்தில் வருவதாகக் காலம் கூறிச் சென்றான். பனிக்காலம் வந்தது. வெயில் காலம் வந்தது. அதன்பின்னர் பசிய கார்காலம் வந்தது. கார்காலம் வரையிலும் தலைவன் வராமையால் பிரிவு ஆற்றாத நெய்தல் நிலத்துத் தலைமகள் வருந்துகின்றாள். இரக்கம் சிறிதும் இன்றிப் பிரிந்து போனது மட்டுமல்லாமல் குறித்த காலத்தே வராமையால் நெய்தல் நிலத்துப் பறவைகளை நோக்கி, வருத்தமுற்று ஆற்றாது புலம்புகின்றாள்.

"செம்பொன ரங்கத்த ரங்கநீர்ச்
சீதள சந்திர வாவிசூழ்
கம்புள ருன்பயில் நாரைகாள்!
காதலை என்சொலி ஆறுவேன்
வெம்பனி வந்தது வந்தபின்
வேனிலும் வந்தது; வேனில்போய்ப்
பைம்புயல் வந்தது; சென்றநம்
பாதகர் வந்திலர் காணுமே."

- (பாடல் எண்:48)

என்று சிவந்த பொன்மயமாகிய திருவரங்கத்திலுள்ள அலைகளோடு கூடிய நீரையுடைய சந்திர பஷ்கரணியில் திரண்டுள்ள நீர்ப்பறவைகளுடன் பழகுகின்ற நாரைகளே ! என் காமநோயை என்னவென்று சொல்லித் தணிப்பேன். கொடிய பனிக்காலம் வந்தது; வந்தபின் அது மாறி வேனில்

காலம் வந்தது; வேனில் காலம் மாறி பசிய கார்காலம் வந்தது. அவ்வாறு வந்த பின்னும் என்னை விட்டுப் பிரிந்து போன பாதகர் வரவில்லை என்று வருந்துகிறார். அத்தலைவியின் அவலம் இங்குப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. இது போன்ற பல பாடல்கள் இக்கலம்பக நூலில் அமைந்துள்ளது சுட்டத்தக்கது.

### 3. இளிவரல்

'அருவருப்பு' அல்லது 'இழிவு' தோன்ற நிற்கும் செயல்களனைத்தும் இளிவரல் சுவையை நல்கும். நாணத்தக்க செய்கைகளாலும் இச்சுவை பிறக்கும். திருவரங்கத்தில் எழுந் தருளியிருக்கும் ஆதிமூலமாகிய அறிவதற்கரிய பெருமாளை, மனமிரங்கவேண்டும் என வலியுறுத்த வந்த பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தம் உடலை அருவருக்கத்தக்கது எனக் கூறுமிடத்து இச் சுவையைக் காணமுடிகிறது.

"தீண்டா வழும்பும் செந்நீரும்
சீயும் நரம்பும் செறிதசையும்
வேண்டா நாற்றம் மிகுமுடலை
வீணே சுமந்து மெலிவேனோ
நீண்டாய்! தூண்டா விளக்கொளியாய்
நின்றாய்! ஒன்றாய்! அடியாரை
ஆண்டாய் காண்டா வனமெரித்த
அரங்க! அடியேற் கிரங்காயே!

– (பாடல் எண்: 17)

என்ற பாடலில் தீண்டுவதற்கு அருவருப்பைத் தருவதான அசுத்தமான கொழுப்பும் இரத்தமும் நரம்பும் இடையிடையே நெருங்கிய சதையும் தீநாற்றமும் மிகுந்திருக்கின்ற இக்கடைப்பட்ட உடலைப் பயனில்லாமல் சுமந்து வருந்துவேனோ என மிகவும் இழிவாகிய பிறவியை ஒழித்து முக்தியை அளிக்கவேண்டி நிற்பது இழிவுச் சுவையை வெளிப் படுத்துவதாகும்.

**4. மருட்கை**

புதுமையைக் கண்டு மருட்சி அடைவது மருட்கையாகும். தொல்காப்பியர் மருட்கை தோன்றும் நிலைக்களன்களுள் புதுமையையும் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். யாதொன்றாலும் எவ்விடத்தும் எக்காலத்திலும் தோன்றாததொரு பொருள் தோன்றிய வழி வியத்தல் என்பார் இளம்பூரணர். இந்நூலில், இந்திரசாலம் முதலிய வித்தைகள் செய்ய வல்லவர் தமது சிறப்பைத் தாமே எடுத்துக் கூறுவதாக அமையும் பகுதி நம்மை வியப்புச் சுவையில் ஆழ்த்துவதாகும். பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் திருவரங்கக் கலம்பகத்தில் கூறும் மாயவித்தைக்காரன், இதுவரையிலும் கண்டறியாத பல அற்புதச் செயல்களைச் செய்து காண்பிப்பேன்; திசை நாகங்கள் எட்டையும் படமெடுத்து ஆடச் செய்வேன்; ஏழு கடல்களின் நீரையும் குடிப்பேன்; பொன் மயமான மேருமலையைக் கடுகினில் அடங்கும்படி சேர்த்து வைப்பேன்; வீணானப் பேரொலியைப் பழமையான அண்டங்களிலும் பொருந்தும்படிச் செய்வேன்; இரவைப் பகலாகவும், பகலை இரவாகவும் மாறச் செய்வேன்; ஆகாயம் முழுவதையும் மறைப்பேன்; ஏழு உலகங்களையும் எடுப்பேன். இவைகள் கூட சால வித்தைகள் அன்று என்று கூறுகிறான்.

திருவரங்கத்தில் நீண்ட ஆதிசேடனாகிய திருப்பள்ளி மெத்தையின் மேல் நெடிய பல ஊழிக்காலமாய் திருக்கண் வளர்கின்ற எம்பெருமாள், நெற்றியில் நெருப்புக் கண்ணையுடைய சிவனையும் பிரமனையும், இந்திரனையும் விளங்குகின்ற சூரிய சந்திரர்களையும் தமக்கு அடிமையாகக் கொண்டு, அத்தேவர்களது தலைகளில் பொறித்துவிட்ட திருச்சக்கரப்பொறி இல்லாத ஒரு தெய்வத்தை முன்கொண்டு வந்து விடுவேன் எனப் பெருமானின் பேராற்றலைப் புலப்படுத்துகின்றான். இது மருட்கை சுவைக்குத் தக்கதோர் சான்றாக அமைகிறது. அப்பாடல்,

"காணாத புதுமைபல காட்டுவன்; கட்செவிகள்
எட்டையும் எடுத்தாட்டுவன்;
கடல்பருகு வன்பெரிய கனகவரை யைச்சிறிய
கடுகினில் அடைத்து வைப்பன்;
வீணார வாரமு தண்டமுற விளைவிப்பன்;
இரவு பகல்மா றாடுவன்;

விண்ணையும் மறைப்பன்எழு மண்ணையும் எடுப்பன்இவை

விளையாடும் வித்தை அன்றால்;

நீணாக ணைப்பள்ளி யிற்றிருவ ரங்கத்து

நெடுதூ ழிதுயி லும்பிரான்

நெற்றிருக்க ணானவனை நான்முகனை வாசவனை

நிமிருமிரு சுடரை முதலாச்

சேணாடர் யாவரையும் அடிமைகொண் டவரவர்

சிரத்திற் பொறித்து விட்ட

திருச்சக்க ரப்பொறியி லாதவொரு கடவுளைத்

தேடி யினிமுன் விடுவனே!

- (பாடல் எண்:49)

என்பதாகும்.

**5. அச்சம்**

திருமாலிடம் அரங்கர், அசுரர் முதலிய பகைவர் செய்யும், துன்பங்களும் பிறவித் துன்பங்களும் தம்மை வருத்துவதை அடியவர்கள் எடுத்துரைத்து நடுங்கி நிற்கின்ற நிலையில்,

"மிருகளவின் நின்ற விளவுகனி சிந்தி

மடியவிடு கன்று குணிலென எறிந்து

பறவையின் அகல்வாய் கிழித்துப் பகிர்ந்தன;

வெறிபடு குருந்தை முறிபட அடர்ந்து

கூடநடம் மகிழ்ந்து குரவைகள் பிணைந்து

பொருதொழில் எருதேழ செற்றுத் தணிந்தன;

வெடிபட முழங்கி எழுமுகிலும் அண்ட

றொடுநிரை தியங்க எறிதிவலை கண்டு

தடவரை குடையா வெடுத்துச் சுமந்தன;

விழிவடவை பொங்க எதிர்பொர நடந்த

களிறுஎம் வெருண்டு பிளிறிட முனிந்து
புகர்முக இருகோரு பற்றில் பிடுங்கின."
- (பாடல் 7: பாடலடி 3)

என பெருமாள் அசுரர்களையும் அரக்கர்களையும் அழித்த செய்தி அமைந்துள்ளது.

மிகுந்த வஞ்சனையுடன் தன்னைக் கொல்லுவதற்காக நின்ற விளாமரத்தை அழியும்படிச் செய்தவன் ; கம்சனால் ஏவப்பட்ட மாயக்கன்றைக் குறுந்தடியாகக் கொண்டு அழித்தவன்; பறவை வடிவில் வந்த பகாசுரனது அகன்ற வாயை இரண்டுபடும் படியாகக் கிழித்துப் பிளந்தவன் ; மனம்பொருந்திய மலர்களைக் கொண்ட குருந்த மரத்தை முறிந்து விழும்படி அழித்து மனம் மகிழ்ந்து குடக் கூத்தாடியவன் ; குரவைக் கூத்து ஆடியவன்; போர் செய்கின்ற தொழிலையுடைய ஏழு எருதுகளைத் தழுவி அழித்துச் சினம் தணிந்தவன் ; ஏழு மேகங்களும் பேரொலியுண்டாகும்படி, இடையர்களும் திகைக்க இடியிடித்து மழைப்பொழிந்த காலத்துப் பசுக்களைக் காக்கும் பெரிய கோவர்த்தன கிரியைக் குடையாகத் தரித்தவன் ; கண்களில் வடவாக்கினி போலும் தீப்பொறி பறக்கும்படியாகத் தன்னோடு பொருவதற்கு வந்த குவலயாபீடம் என்னும் கம்சனது பட்டத்து யானை கோபத்துடன் பிளிறிட, அதன்மீது கோபம் கொண்டு செம்புள்ளிகளையுடைய அதன் முகத்தில் உள்ள இரண்டு தந்தங்களையும் பிடித்துப் பறித்தவன் எனக்கூறும் பகுதி அச்சச்சுவை பயப்பதாகும்.

### 6. பெருமிதம்

பெருமிதம், வீரத்தை வெளிப்படுத்துவதாகும். அஃது ஏனைப் பெருமைகளோடு ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்பதால் பெருமிதம் எனப்பட்டது என்பர் பேராசிரியர். எனவே அறிவு, ஆண்மை, பொருள் முதலிய சிறப்புகளால் எல்லோரோடும் ஒப்ப நில்லாது உயர்ந்து நிற்றல் பெருமிதமாகும். பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தென்னரங்கப்

பெருமானின் ஆற்றலைக் கூறும்போது பெருமிதச் சுவை வெளிப்படுவதை உணரலாம்.

"போனகம் பதினாலு புவனம் ; திருப்பள்ளி
பொறியரவ ணைப்பாற்கடல்
பூமடந் தையும்நில மடந்தையும் தேவியர்
புராதன மறைக்குமெட்டா
வானகம் பேரின்ப முடன்வீற் றிருக்குமிடம்
வாகனம் வயினதேயன் ;
மலர்வந்த நான்முகன் திருமைந்தன் ; அவன்மைந்தன்
மதிசூடி ; வாசவன்முதல்
தேனகும் தொடைமௌலி முப்பத்து முக்கோடி
தேவரு தேவல் செய்வார்
திங்களும் பரிதியும் சங்கமும் திகிரியும்
திரிவனவும் நிற்பனவுமாம்
ஏனைமன் னுயிர்முழுதும் விளையாட நீவகுத்
திட்டபல மாயையதனால்,
எழிலரங் கந்துயில் எம்பிரான் நின்பெருமை
யாவரே வாழ்த்துவாரே."

- (பாடல் : 32)

என்னும் பாடலின் திருவரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் தலைவனே ! உனக்கு உணவு பதினான்கு புவனங்கள், அழகிய பள்ளி, புள்ளிகளையுடைய ஆதிசேடனாகிய சயனத்தையுடைய திருப்பாற்கடல் ; மனைவியர், பூமடந்தையும் நிலமடந்தையும் ; பேரின்பமுடன் எழுந்தருளி இருக்குமிடம் வேதங்களும் அறியவொண்ணாத பரமபதம் ; வாகனமாக விளங்குபவன் கருடன் ; அழகிய குமாரனாக இருப்பவன் நாபிக்கமலத்தில் தோன்றிய பிரமதேவன்; அவன்மகன் பிறையை முடியில் சூடிய உருத்திரன்; இந்திரன் முதலிய தேனோடு மலர்கின்ற பூமாலைகளைச் சூடிய முடியையுடைய முப்பத்து மூன்று கோடி தேவர்கள் உனது

குற்றேவல்களைச் செய்வார்கள் ; திங்களும் சூரியனும் உனக்குச் சங்கும் சக்கரமும் ; நீவிளையாட ஏற்படுத்திய மாயைப் பொருட்கள் சந்திர சூரியர்கள் ; ஆகையால் திரிவனவும் நிற்பனவுமாகிய நிலைபொருந்திய உயிர்களில் உனது பெருமையை வாழ்த்த வல்லவர் யார்? என திருமாலின் ஆற்றலை எவராலும் வாழ்த்த இயலாது என்பதைக் கூறி பெருமிதச் சுவைக்குச் சான்று பகர்கிறது.

## 7. வெகுளி

திருவரங்கப் பெருமானின் திருவடிகளில் அன்பு வைத்த வேடர் மகள் ஒருத்தியை மன்னன் ஒருவன் பெண்கேட்டுத் தூதுவனை அனுப்புகிறான். அதுகேட்ட அப்பெண்ணின் தந்தையாகிய வேட்டுவ மறவன் கோபம் கொள்கிறான். 'பட்ட மன்னர் பட்டபாடுகளை எங்களூருக்குள் வந்து பார்' என்று கோபபாவத்தோடு,

"வாச லுக்கி டும்ப டலிக
    வித்து வந்த கவிகைமா
மகுட கோடி தினைய ளக்க
    வைத்து கால நாழியும்
வீசு சாம ரங்கு டிற்றோ
    டுத்த கற்றை சுற்றிலும்
வேலி யிட்ட தவர்க ளிட்ட
    வில்லும் வாளும் வேலுமே.

- (பாடல் எண்:53)

என்று,"எங்கள் வீட்டு வாசலில் வைத்து மூடும் படல், பகை மன்னர்கள் பிடித்து வந்த குடைகள்; இங்குள்ள மரக்கால், நாழி முதலிய தினையரிசிகளை அளக்க வைத்துள்ளவை அம்மன்னர் தரித்து வந்த பெரிய மணிமகுடங்கள்; எங்கள் குடிசைக்குமேல் மூடுகின்ற கற்றை அம்மன்னர்களுக்க வீசி வந்த சாமரங்கள்; எங்கள் வீட்டின் நாற்புறங்களிலும் போடப்பட்டுள்ள வேலி அம்மன்னர்களின் வில்லும் வாளும் வேலுமாகும்" என்கிறான். கோபத்தோடு உரைக்கின்ற இப்பகுதி

மறவனின் வீரத்தையும் வெகுளியையும் காட்டும் பகுதியாகும். இது வெகுளிச் சுவைக்குத் தக்கதோர் சான்றாகும்.

**8. உவகை :**

திருவரங்க ஆதிசேட சயனத்தில் யோகநித்திரை செய்தருளும் பெருமானை மனதினால் எண்ணி தியானம் செய்யும்பொழுது மிகுந்த மகிழ்ச்சியை உணர்கின்றார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், அதனைப் பாடலாக வடிக்கின்றார்.

"சிந்திக்கத் தித்திக்கும் செவ்வாய் துவர்த்துப்போம்
புந்திக்கு ளேயின் புவிமேவு – நந்துங்
கருவரங்கங் கைத்தழலுங் காவிரியி னூடே
திருவரங்கத் தேவளரும் தேன்."
- (பாடல் எண் : 44)

என்று காவிரியின் நடுவில் திருவரங்கத்தில் திருக்கண் வளர்ந்தருளுகின்ற தேன் போன்ற இறைவனைத் தியானம் செய்ய இனிக்கும்; மிகச் சிவந்த செந்நிறப் பவளம் போன்ற வாயை நினைக்க இன்பம் தரும் என்று பேரின்பமயமான பெருமாளைப் போற்றுவது, இச்சுவைக்கு எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறாகத் தொல்காப்பியர் சுட்டும் எண்வகையான சுவைகளையும் திருவரங்கக் கலம்பகத்தில் அமைத்துப் பக்திச் சுவையை நுகர வைத்திருக்கின்றார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

தமிழில் முதன்முதலாக வைணவக் கடவுள்மீது எழுந்த முதல்கலம்பகம் என்ற சிறப்பினை உடையதாக இந்நூல் விளங்குகிறது. திருமாலையன்றி வேறோர் தெய்வம் உலகில் இல்லை என்ற கருத்தை இந்நூலாசிரியர் மிகுதியாக இந்நூலில் வலியுறுத்தியுள்ளார். ஆழ்வார்களின் பாசுரங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவராக

விளங்குவதை இந்நூல் கற்போர் எளிதாக உணரமுடியும். திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான் இந்நூலுக்குத் தலைவனாக விளங்குகிறான் ஆதலின், அப்பெருமானுடைய அருளிச் செயல்களையும் திருமால் எழுந்தருளியுள்ள திருத்தலங்களின் பெருமையையும் எடுத்துரைப்பதாக இந்நூல் அமைந்து சிறக்கிறது. இத்தகைய சிறப்புக்களைத் தன்னுள் அடக்கியதாக விளங்கும் இந்நூல் படிப்போருக்கு இன்பம் பயப்பதோடு, சிற்றிலக்கிய ஆராய்ச்சிக்கு உதவுவதாக அமைந்துள்ளது. மேலும் பக்திச் சுவை மிகுந்து வைணவ அடியார்க்கு விருந்தாக அமையும் சிறப்புமிக்கதாகும்.

## தனியன்கள்[39]

### நேரிசை வெண்பா

ஆழ்வார்முன் பின்னவர்க்கு மாமறைதந் தார்தமிழால்
வாழ்வார் மணவாளர் மாண்பவருட் - டாழ்வாரும்
என்போ லியர்க்கு மிரங்கியரங் கக்கலம்ப
கம்போத நல்கவைத்தார் காண். (1)

### அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

சொன்னார்க்கு பொருணோக்குந் தொடைநோக்கு நடைநோக்குந்
துறையி னோர்க்கோ
டென்னோக்குங் காணவிலக் கியமாவ தன்றியிதி
லீடு பட்டோர்
நன்னோக்கும் புத்தியும்பத் தியும்பெறுவர் முத்தியுண்டா
நானென் சொல்கேன்
பன்னோக்க மணவாளர் பகரரங்கக் கலம்பகத்தைப்
பாரீர்! பாரீர்!

39. ஓலைச்சுவடியில் இவ்விரு பாடல்களும் இல்லை. வே.வி. வேணுகோபாலப்பிள்ளை அவர்களின் பதிப்பில் அமைந்த இப்பாடல் நூல் முழுமைக்காக இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

நூல்

# திருவரங்கக் கலம்பகம்

## ஆழ்வார்கள் பன்னிருவரின் வணக்கம்

### கட்டளைக் கலித்துறை

வேதந் தொகுத்துத் தமிழ்ப்பாடல் செய்ய விமலன்பொய்கை
பூதன் மயிலையர் கோன்புகழ்ச் சேரன்புத் தூரன்தொண்டர்
பாதம் தருந்துகள் மாமழி சைக்குமன் பாணன்மங்கை
நாதன் மதுர கவிகோதை பாதங்கள் நண்ணுதுமே.

வேதந் தொகுத்துத் தமிழ்ப்பாடல் செய்ய விமலன் பொய்கை வேதங்களின் பொருள் அனைத்தையும் தொகுத்துத் தமிழ்ப் பாசுரங்களாக அருளிச் செய்த நம்மாழ்வாரும் பொய்கையாழ்வாரும்,

பூதன் மயிலையர் கோன்புகழ்ச் சேரன் புத்தூரன் - பூதத்தாழ்வரும் பேயாழ்வாரும் புகழினையுடைய குலசேகராழ்வாரும் ஸ்ரீ வில்லிப்புத்தூர் பெரியாழ்வாரும்,

தொண்டர் பாதம் தருந்துகள் மாமழிசைக்கு மன்பாணன் - தொண்டரடிப் பொடியாழ்வாரும் பெருமை பொருந்திய திருமழிசையாழ்வாரும் திருப்பாணாழ்வாரும்,

மங்கைநாதன் மதுர கவிக்கோதை பாதங்கள் நண்ணுதுமே - திருமங்கையாழ்வார், மதுரகவியாழ்வார், ஆண்டாள் ஆகியோரின் திருவடிகளைச் சேருவோம்.

'காப்பு' என்பது காத்தல், பாதுகாத்தல் என்ற பொருளில் அமைவது. இங்கு பாதுகாப்பதற்குரிய தெய்வ வணக்கத்திற்கு ஆகுபெயர். நூலாசிரியர் தமக்கு நேரிடத்தக்க இடையூறுகளைப் போக்கித் தமது நூல் சிறப்புற நிறைவேற வேண்டும் என்பதைக் குறித்து இறைவனை வழிபடும்

பாடல். இத்தகைய காப்புச் செய்யுள், வழிபடு கடவுள் வணக்கம், ஏற்புடைய வணக்கம் என்ற இரண்டு வகையின. வைணவ சமயத்தவரான இந்நூலாசிரியரான பிள்ளைப் பெருமாள் ஐயங்காரால் பாடப்பட்ட இக்காப்புச் செய்யுள் திருமாலின் தொண்டர்களாகிய ஆழ்வார்களை வணங்குவதாக அமைவது.

தமது சமயத்திற்கு உரிய கடவுளை வணங்குதல் வழிபடு கடவுள் வணக்கமாகும். அக்கடவுளின் அடியார்களை வணங்குதல் ஏற்புடைத் தெய்வ வணக்கமாகும். ஆழ்வார்கள் பன்னிருவரையும் முதலில் போற்றி வணங்கி நூலைத் தொடங்குதல் வைணவ மரபு. அதற்கேற்ப இந்நூலின் காப்புச் செய்யுள் திருமாலின் அடியவர்களாகிய ஆழ்வார்களை வணங்கும் வகையில் ஏற்புடைத் தெய்வ வணக்கமாக அமைகிறது. திருமாலைப் போற்றும் இலக்கியமாகத் தான் இயற்றவிருக்கும் திருவரங்கக் கலம்பகம் இனிதே நிறைவேற இடையூறுகளை நீக்கிப் பாதுகாக்க வேண்டும் என்று வணங்குகிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

வாழ்த்து, வணக்கம், தலைமைப் பொருளுரைத்தல் என்ற மங்களங்களுள் இது வணக்கத்தின்பாற் படும். நூல் செய்தவர்க்கு மாத்திரமேயன்றி, இந்நூலைப் படிக்கத் தொடங்குவோர் முதலானவர்களுக்கும் எந்த இடையூறும் இல்லாமல் இந்நூல் முழுமை பெறவும் இக்காப்பு உளப்படுத்திய தன்மை உடையதாக அமைந்துள்ளது.

"பொய்கைபூ தன்பேயார் பொன்மழிசைக் கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரன்பிரான் – வையகமெண்
பட்டர்பிரான் கோதைதொண்டர் பாதப் பொடிபாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு."

– (நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி :2)

எனப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், பன்னிரு ஆழ்வார்களைப் போற்றிக் காப்பாகப் பாடியிருப்பதை, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி நூலில் காணமுடிகிறது.

"முதலாழ்வார் மூவர்தொண்டர் பாதப் பொடியார்
மதுரகவி மாறன் மழிசைக்கோ – விதவார்
குலசே கரன்கோதை பட்டர்பிரான் பாணன்
கலியன் திருவடிகள் காப்பு."

– (அழகர் கலம்பகம் : 3)

என அழகர் கலம்பகப் பாடலும் பன்னிரு ஆழ்வார்களைக் காப்புச் செய்யுளில் அமைத்துப் பாடுவதற்குச் சான்றாகக் காட்டலாம்.

விமலன் - குற்றமற்றவன், இங்கு நம்மாழ்வாரைக் குறிக்கும். வேதத்தின் உட்பொருளையெல்லாம் தமிழ்மொழியில் திருவாய் மொழியாகப் பாடி அருளியதால், வேதந் தொகுத்துத் தமிழ்ப்பாடல் செய்ய விமலன்' என்று நம்மாழ்வாரைச் சிறப்பித்துக் கூறுகிறார். ஆழ்வார்களுள் நம்மாழ்வாரே மிகவும் சிறப்பாகப் பாராட்டப் படுபவர். ஏனைய ஆழ்வார்களை 'உடல்' என்றும், 'பிரபந்தர்' என்றும் கூறுவர். நம்மாழ்வாரை, 'உயிர்' என்றம் 'பிரபந்த கூடசுதர்' (முதல்வர்) என்றும், கூறுவர். வைணவத்திற்கு நம்மாழ்வாரே பரமாச்சாரியார் (முதல்தாய்) என்றும் வணங்குவர். இவரது திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகியவை முறையே இருக்க வேதம், யசூர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்பர். நம்மாழ்வாருக்கு இதனால் 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்ற பெயரும் வழங்கப்படுகிறது.[1]

'முப்பழச் சாறுஒழுகு தமிழ் சடகோபாழ்வான்'[2] எனவும், 'ஏழ்வகையின் இசைத்தமிழ்ப்பாப்மொழி மேகம்'[3] எனவும் தமிழோடு இணைத்துக் கூறுவர் வண்ணசரபம் தண்டபாணி சுவாமிகள்.

பொய்கை - குளம். இங்கு பொய்கையாழ்வாரைக் குறிக்கும். தொண்டை வளநாட்டில் காஞ்சிமா நகரில், வேகவதி ஆற்றங்கரையில் உள்ள திருவெஃகா திருத்தலத்தில் ஒரு பொற்றாமரைப் பொய்கையில் பூத்ததொரு நற்றாமரையில் தோன்றியதால், பொய்கையாழ்வார் எனப்பட்டார்.

பூதன் - பூதத்தாழ்வார், தொண்டைநாட்டின் சிறந்த துறைமுகமான திருக்கடல்மல்லையில் ஒரு குருக்கத்தி மலரில் வெளிப்பட்டவர். வடமொழியில் 'பூ' என்ற வினையடிக்கு 'இருத்தல்' என்பது பொருள். எம்பெருமானைப் பாடி இருத்தலையே தன் பணியாகப் பெற்று இருந்தவர். ஆதலால் பூதத்தாழ்வார் என்னும் பெயர்பெற்றார் என்பர்.

..............................................................................................

1. வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், ப.50

2. வீரகேரளம்புதூர் நவநீதக் கிருட்டிணன் கலம்பகம், பாடல் எண்:50

3. சடகோபர் சதகந்தந்தாதி, பாடல் எண்.70

மயிலையர் கோன் – திருமயிலையில் உள்ளோர்க்குத் தலைவர். தொண்டைமண்டல நாட்டின் சிறப்பும் பெற்ற ஊரான திருமயிலையில் ஒரு கிணற்றில் பூத்த அல்லிப் பூவில் திருஅவதாரம் செய்தவர். இவருக்குப் பொய்கையாழ்வார் என்பது திருப்பெயராகும்.

பேயாழ்வார் – எம்பெருமான் மீது கொண்ட அளவற்ற பக்தி காரணமாக எப்பொழுதும் அழுதும் சிரித்தும் ஆடியும் பாடியும் தொழுதும் அலறியும் பேய்போலத் திரிந்தும் அலைந்ததால் பேயாழ்வார் என்று அழைக்கப்பட்டார் என்பர்.

சேரன் – சேர அரசர்குலத்தில் அவதரித்த குலசேகராழ்வார், புத்தூரன் – வில்லிப்புத்தூரில் திருஅவதாரம் செய்த, 'விஷ்ணுசித்தன்' என்ற இயற்பெயர் கொண்ட பெரியாழ்வார் தொண்டர் பாதம் தருந்துகள் – தொண்டரடிப் பொடியாழ்வார். (பாதம் – அடி, துகள் – பொடி) இப்பெயர் நயத்தோடு கூறப்பட்டுள்ளது காண்க. இவர் சோழ நாட்டுத் திருமாந்தன் குடியில் அவதரித்தவர். மெய்யடியாரான அடியவர்களது திருவடித்துளி போல அவர்களுக்குத் கீழ்ப்படிந்து அடிமை பூண்டு ஒழுகுபவராதல் இவருக்கு இத்திருநாமம் என்பர்.

மாமழிசைக்கு மன் – பெருமை வாய்ந்த திருமழிசைக்குத் தலைவர். இங்கு திருமழிசையாழ்வாரைக் குறிக்கும். இவர் தோன்றிய போது, 'வெறும் பிண்டம்' என்ற நிலையில் இருந்தவர்.

பாணன் – யாழினை மீட்டிக் கொண்டு இசைப்பாட்டினைப் பாடுவோர். இங்கு சோழநாட்டின் தொன்மைமிகு உறையூரில் பாணர் குலத்தில் அவதரித்த திருப்பாணாழ்வாரைக் குறிக்கும். மங்கை நாதர் – திருமங்கை என்னும் பட்டம் பெற்றவர். சோழநாட்டில் அமைந்துள்ள திருக்குறையலூர் என்னும் திருவாழி திருநகரை ஆண்ட சிற்றரசரான திருமங்கையாழ்வார்.

மதுரகவி – மதுரகவியாழ்வார். இவர் ஆழ்வார் திருநகரியின் அருகேயுள்ள திருகோளூரில் திருஅவதாரம் செய்தார். இவர் திருமாலைப் பாடாது, அவரது அடியவரான நம்மாழ்வாரைத் தன் குருவாக ஏற்றுக்கொண்டு, அவரைப் பாடினார்.

கோதை – ஆண்டாள். வில்லிப்புத்தூரில் பெரியாழ்வார், ஒரு திருத்துழாய்ச் செடியின் அடியிலிருந்து இவரைக் கண்டெடுத்து வளர்த்தார். கோதையை நோக்கி, என்னை ஆண்டாளே' என்று பெரியாழ்வார் கூறியதால், ஆண்டாள் என்ற பெயரும் ஏற்பட்டன என்பர். இவருக்குச் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என்ற பெயரும் உண்டு.

## நம்மாழ்வார்.

**கட்டளைக் கலித்துறை**

2. மறைப்பாற் கடலைத் திருநாவின் மந்தரத் தாற்கடைந்து
துறைப்பாற் படுத்தத் தமிழா யிரத்தின் சுவையமிர்தம்
கறைப்பாம் பணைப்பள்ளி யான்அன்பர் ஈட்டம் களித்திருந்த
நிறைப்பான் கழலன்றிச் சென்ம விடாய்க்கு நிழலில்லையே.

மறைப்பாற் கடலைத் திருநாவின் மந்தரத் தாற்கடைந்து – வேதமாகிய திருபாற்கடலைத் தன் திருநாக்காகிய மலையைக் கொண்டு கடைந்து,

துறைப்பாற் படுத்தத் தமிழா யிரத்தின் சுவையமிர்தம் – பல்வேறு துறைகளோடு பொருந்தச் செய்து, ஆயிரம் தமிழ்ப் பாசுரங்களைாகிய இனிய சுவையை உடையதான அமுதத்தை,

கறைப்பாம் பணைப்பள்ளி யான்அன்பர் ஈட்டம் களித்திருந்த – நஞ்சினையுடை திருவனந்தாழ்வானாகிய திருவணையில் பள்ளி கொள்ளுதலை உடைய, திருமாலின் தொண்டர்களது கூட்டம் மனமகிழ்வோடு பருகும்படி,

நிறைப்பான் கழலன்றிச் சென்ம விடாய்க்கு நிழலில்லையே – நிறைந்தருளிய நம்மாழ்வாரது திருவடிகளேயல்லாமல் பிறவித் துன்பமாகிய களைப்பிற்கு நிழலாவது வேறு இல்லை.

அறிதற்கரிய வடிமொழி வேதங்களில் நிச்சயித்துச்சொல்லப்பட்ட தத்துவார்த்தங்களின் சித்தாந்தமாக விளங்குவது திருவாய்மொழி. இனிய

சொற்களையுடைய அமுதம் போன்ற இனிமைமிக்க செந்தமிழில் உள்ள திருவாய்மொழியைப் போற்றி உரைப்பர் பெரியோர். இதனாலேயே ஆசிரியர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், வேதங்களாகிய திருப்பாற் கடலைத் தன் நாக்கைக் கொண்டு கடைந்து என்கிறார். இதனைத் திருவாய்மொழிக்குத் தனியன் ஒன்றை அருளிய அனந்தாழ்வான்,

"ஏய்ந்த பெருங்கீர்த்தி யிராமா னுசமுனிதன்
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகிறேன் - ஆய்ந்தபெருஞ்
சீரார் சடகோபன் செந்தமிழ்வே தந்தரிக்கும்
பேறாத வுள்ளம் பெற"

– (திருவாய்மொழி : தனியன்)

என்று போற்றுகின்றார். தமிழ் வேதங்களாகிய திருவாய்மொழி பாசுரங்களுக்குத் தாயாக விளங்குபவர் நம்மாழ்வார் என்பதை,

"வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும் - ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமா னுசன்."

– (திருவாய்மொழி : தனியன்)

என்று புகழ்கின்றார் பட்டர். தமிழ் மறை செய்து இறவாப் புகழ்பெற்றவர் நம்மாழ்வார் என்ற தண்டபாணி சுவாமிகள் இவரைச் சிறப்பித்துக் கூறுவர். தன் வரலாற்று நூலான குருபர தத்துவ நூலில்,

"தாயின் மென்முலைப் பாலமு துண்பதும் தணந்த
வாயி னாற்றமிழ் மறைசெய்து பிறப்புஇல் வாழ்வடைந்தோன்"

-(குருபர தத்துவம் 1 : வரலாற்றுச் சருக்கம், 6)

என்று குறிப்பிடுகின்றார். இத்தமிழாயிரம் கற்றறிந்தோர் உயர்ந்தோராகப் பிறந்தோராவார் என்பதை,

"அவாவறச் சூழ்அரியை அயனை அரனை அலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவாவிலந் தாதிகளால் இவையா யிரமும், முடிந்த
அவாவிலந் தாதியிப் பத்தறிந் தார்பிறந் தார்உயர்ந்தே."

(திருவாய்மொழி 10:10:11)

என்ற திருவாய்மொழி பாசுரம் உணர்த்துகிறது.

அளப்பதற்கரிய பரப்பளவையும், இன்சுவையையும் எம்பெருமானைப் போற்றதலையும் உடையதாக இருப்பதால் 'மறைப் பாற்கடல்' என்று மறையைப் பாற்கடலாக உருவகப் படுத்தினர். மேலும், திருநாக்கை மறையாகிய கடலைக் கடைந்த மலையாகவும் பிறவித் துன்பத்தைக் களைப்பாகவும், திருவடியை நிழலாகவும் உருவகப்படுத்தியுள்ளார்.

தமிழாயிரம் திருவாய்மொழி, பள்ளியான் - யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கும் பெருமான்.

## இராமானுசர் துதி

கட்டளைக் கலித்துறை

3. பிடிக்கும் பரசம யக்குல வேழம் பிளிறிவெகுண்
டிடிக்கும் குரற்சிங்க ஏறனை யான்எழு பாருமுய்யப்
படிக்கும் புகழெம் இராமா னுசமுனி பல்குணமும்
வடிக்கும் கருத்தினர்க் கேதிரு மாமணி மண்டபமே.

பிடிக்கும் பரசமயக்குல வேழம் பிளிற - சமயம் ஒன்றையே சிறந்ததாகக் கருதி மேற்கொள்ளுகின்ற வேறு மதத்தினராகிய யானைகள் அலறும்படியாக,

வெகுண்டிடிக்கும் குரற்சிங்க ஏறனையான் - கோபித்துக் கர்ச்சிக்கின்ற ஒலியையுடைய ஆண்சிங்கத்தை ஒத்தவனான,

எழுபாரு முய்ய படிக்கும் புகழெம் இராமா னுசமுனி - ஏழு உலகத்தவரும் நற்கதி அடையும்படி பாராயணம் செய்கின்ற புகழினையுடைய இராமானுசப் பெருமாளுடைய,

பல்குணமும் வடிக்கும் கருத்தினர்க்கே திருமாமணி மண்டபமே - பலகுணங்களையும் தியானிக்கின்ற மனதையுடையவர்கள் பரமபதத்திலுள்ள முக்தி மண்டபம் கிடைக்கப் பெறுவர்.

பிற சமயத்தவர்க்கெல்லாம் சிங்கம் போன்று விளங்கும் இராமானுசரை வணங்கினால், ஏழு உலகங்களிலும் உள்ளோர்க்கும் பரமபதம் வாய்க்கும் என்கிறார் ஆசிரியர்.

'இராமானுசன்' என்ற சொல்லுக்கு 'இராமனின் தம்பி' என்று பொருள். இராமானுசன் என்னும் இப்பெயரை இவருக்குச் சூட்டியவர் ஆளவந்தாருடைய மாணவரான பெருநம்பியாவார். இவர் துறவறம் பூண்டபொழுது திருக்கச்சியத் திகிரி பேரருளாளப் பெருமான, 'இராமானுச முனி' என்ற திருநாமத்தை வழங்கினார்.

இராமானுசருக்கு முன்பே வைணவ மரபுக்கு இறையியலான மெய்ப்பொருள் விளக்கங்கள் இருந்தனவெனினும் அதனை இவர் முழுமையாக்கி வருதலால் வைணவ மெய்ப்பொருளியலுக்கு 'இராமானுச சித்தாந்தம்' என்ற பெயரும் வழங்கி வருகிறது. இவருடைய மாணாக்கர்களுக்கம் பின்பற்றுவோருக்கும் 'உடையவராகவும், மெய்ப்பொருளியலாருக்குப் 'பாஷ்யகாரர்' அல்லது உரைகாரராகவும் விளங்குகிறார். துறவிகளில் முதன்மையானவர் எனக் கருதப்படுவதால் யதிசாகராகவும் விளங்ககிறார், பாஞ்சராத்திர வைணவ சமயத்தையும் தத்துவத்தையும் பாதுகாத்து வளர்க்க ஆசாரிய பீடம் நிறுவப்பட்டபோது, திருவரங்க ஆசாரியராகவும் குருபீடம் ஏறியவர்.[4]

திருமாலின் திருவருள் அனைவருக்கும் பொது என்ற உண்மையை நிலைநாட்டியவர் இராமானுசர். எம்பெருமான் என்ற பெயர், இவருக்க ஆசாரிய திருக்கோட்டி நம்பி அவர்களால் இடப்பெற்றது. வைணவக் கருத்துக்களுக்கு முழுமையான தத்துவ வடிவம் கொடுத்தவர். ஆதலினால் அபியுக்தர் என்பார் இராமானுரிடம்,

"சொல்லின் தொகைகொண் டுனதுடிப் போதுக்குத் தொண்டுசெய்யும்
நல்லன்பர் ஏத்துமுன் நாமமெல் லாமென்றன் நாவினுள்ளே
அல்லும் பகலும் அமரும் படிநல்கு அறுசமயம்
வெல்லும் பரம இராம னுசஇதென் விண்ணப்பமே."

- (இராமானுசர் நூற்றந்தாதி : தனியன்)

என்று அறுசமயங்களை வெல்லக்கூடியவராகிய அன்பர்கள் போற்றும்

.................................................................................................

4. வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், பக்.46.

இராமானுசர் தம் நாமங்கள் அல்லும் பகலும் நம் நாவில் அமரவேண்டும் என்று விண்ணப்பிக்கிறார்.

இவருடைய வேதாந்த சாரம், வேதாந்த தீபம், சிரீபாடியம், கீதாபாடியம், கத்யதிரயம், பகவத்தாராண கிரமம், வேதாந்த சங்கிரகம் முதலானவை வைணவத் தத்துவங்களை மண்ணுலகத்தோருக்கு ஐயமற எடுத்தோதுவன.

இவர், வடநாட்டுத் தலப்பயணம் மேற்கொண்டபோது, சாரதாபீடத்திற்கு எழுந்தருளினார். அப்பொழுது பிரமதேவனின் தேவியாகிய இறைவி சரசுவதி, இவர் முன்னே வந்து தனது ஐயங்களையெல்லாம் கேட்டுத் தெளிவாக்கிக் கொண்டாள். அவர்தம் விளக்கத்தைக் கேட்டு சரசுவதி, எம்பெருமானாருக்கு 'ஸ்ரீபாஷ்யகாரர்' என்ற திருநாமத்தைச் சாற்றினார் என்பர். மேலும் இப்பயணத்தின் போது பௌத்தர் முதலானோரை வாதில் வென்றார்.

பிறசமயங்கள் ஆறையும் புவியில் குலையும் படியாகச் செய்தவர் இராமானுசர். இதனைக்,

"கூறும் சமயங்கள் ஆறும் குலையக், குவலயத்தே
மாறன் பணித்த மறையுணர்ந் தோனை, மதியிலியேன்
தேறும் படியென் மனம்புகுந் தானைத் திசையனைத்தும்
ஏறும் குணனை, இராமா னுசனை இறைஞ்சினமே"

– (இராமானுசர் நூற்றந்தாதி:46)

என்பதன் வாயிலாக வெளிப்படுத்துகிறார் திருவரங்கத் தமுதனார்.

இப்பாடலில், பிறசமயத்தினர் அஞ்சக் கூடிய சிங்கத்தை ஒத்த இராமானுசருடைய புகழானது, பிறருடைய புகழைப் போல அல்லாமல் ஏழு உலகத்தவரும் படித்து முக்தி மண்டபத்தைப் பெறச் செய்யும் சிறப்புடையது என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

பரசமயம் – புறசமயம், புறச்சமயங்கள் – பௌத்தம், சமணம், வைரவம், காளாமுகம், லோகாயதம், சூனியவாதம் என்பன. வேழம் – யானை, சிங்க ஏறு – ஆண் சிங்கம், ஏழு பார் – ஏழு உலகங்கள், அவையாவன பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபலோகம், மகாலோகம், சத்தியலோகம். திருமாமணி மண்டபம் – அழகிய பெரிய இரத்தின மயமான மண்டபம்.

## பட்டர் துதி
### கட்டளைக் கலித்துறை

4. வானிட்ட கீர்த்தி வளர்கூரத் தாழ்வான் மகிழவந்த
தேனிட்ட தார்நம் பெருமாள் குமாரர் சிவனையயன்
தானிட்ட சாபம் துடைத்தா னரங்கர்சங் காழிபுயம்
நானிட்டன் என்றருள் பட்டம்பொற் றாட்கதி நந்தமக்கே.

வானிட்ட கீர்த்து வளர்கூரத் தாழ்வான் மகிழவந்த – தேவ லோகத்திலும் பரவிய புகழானது மேன்மேலும் மிகுதியாக வரப்பெற்ற கூரத்தாழ்வான் என்னும் ஆசாரியர் மனம் மகிழும்படியாக அவரது திருக்குமாரராக அவதரித்த,

தேனிட்ட தார்நம் பெருமாள் குமாரர் – தேன் துளிர்க்கின்ற மாலையையுடைய திருவரங்க நாதரது குமாரரும்,

சிவனையயன் தானிட்ட சாபம் துடைத்தாள் அரங்கர் – சிவனுக்கு பிரமன் முன்னாளில் இட்ட சாபத்தை நீக்கிக் காத்த திருவரங்கருடைய,

சங்காழி புயம் நானிட்டன் என்றருள் பட்டர் – சங்கு சக்கரங் களை என் தோள்களில் திருஇலச்சினையாக இட்டிருப்பதால் அன்பனாக ஏற்று அருளியவரான ஸ்ரீ பராசர பட்டருடைய,

பொற்றாள் கதி நந்தமக்கே – பொன் போன்ற திருவடிகளுக்கு நாம் அடைக்கலமாகும்.

இப்பாடலில், குரு வணக்கத்தைத் தெரிவிக்கின்றார் ஆசிரியர், கூரத்தாழ்வான் என்னும் ஆசாரியரின் குமாரரும் திருவரங்கப் பெருமானின் குமாரரும் (திருவரங்கப் பெருமானால் சீராட்டப் பட்டவர்) பிரமனிட்ட சாபத்தைச் சிவனுக்குத் தீர்த்த திருவரங்கருடைய சங்கு சக்கர இலச்சினைகளை தன் தோள்களில் இட்டிருப்பவருமாக விளங்கக்கூடிய ஸ்ரீ பராசர பட்டருடைய திருவடிகள், இந்நூல் இனிதே நிறைவேற நமக்கு அடைக்கலம் தரக்கூடியதாகும் என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

பராசரபட்டர் திருவரங்கநாதரது திருவருளால் கூரத்தாழ்வாரின் மகனாக அவதரித்தார். அரங்கப் பெருமான், பட்டரை இளங்குழந்தைப்

பருவத்திலேயே தமது புத்திரனாக அங்கீகரித்துத் தம்முடைய சன்னதியில் திருமணத் தூணின் அருகே தொட்டிலில் இட்டு அரங்க நாச்சியாரும் தாமுமாகச் சீராட்டி வளர்த்தார். ஆதலின் பராசரபட்டர், நம்பெருமாள் குமாரர் எனவும் அழைக்கப்பட்டார் என்பர்.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், தாம் படைத்த இலக்கியங்களில், 'குருவணக்கம்' செலுத்தியிருப்பது இவர்தம் குருமீது கொண்ட பற்றைப் புலப்படுத்தும்.

"நான்கூட்டில் வந்தவன்றே நானறியா நன்மையெல்லாம்
தான்கூட்டி வைத்தநலம் தான்கண்டீர் – ஆங்கூட்டச்
சிட்டருக்க வாய்த்த திருவரங்கன் இன்னருளால்
பட்டருக்காட் பட்ட பயன்."

– (நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி : பாயிரம் : 5)

என்று கூட்டமாகவுள்ள பெரியோர்களிடத்தே பொருந்தியிருக்கின்ற, திருவரங்கப் பெருமானின் இனிமை வாய்ந்த கருணையால், நான் இவ்வுடலெடுத்து வந்து பிரிந்த பொழுதே, நான் அறியாத நல்வினைகள் அனைத்தையும் தான் உண்டாக்கி, எனக்குக் கொடுத்தது ஸ்ரீபராசர பட்டருக்குச் சீடனான அமையப் பெற்றதால் கிடைத்த பலனாகும் என்கிறார். மேலும்,

"ஆதிதிரு வேங்கடமென் றாயிரம்பே ரானிடமென்
றோதிய வெண்பா வொருநூறும் – கோதில்
குணவாள பட்டரிரு கோகனகத் தாள்சேர்
மணவாள தாசன்றன் வாக்கு."

என்ற பாடலில், குற்றமில்லாத நற்குணங்களை உடையவரான பராசரபட்டர் என்னும் ஆசாரியருடைய தாமரை போன்ற இரண்டு திருவடிகளைச் சரணாக அடைந்த அழகிய மணவாள தாசனுடைய வாய்மொழியாக திருவேங்கடமாலை அமைந்துள்ளது என்கிறார். இவ்விரு பாடல்களும் பிள்ளைப் பெருமாள் ஐயங்காருடைய குருப்பற்றுக்குச் சான்றுபகர்வனவாக அமைந்துள்ளன.

**சிவனுக்கு அயன் சாபமிட்ட வரலாறு**

ஆதியில் பிரமனுக்கும் சிவனைப் போலவே ஐந்து முகங்கள் இருந்தன. ஒருமுறை உமாதேவி பிரமனைச் சிவபெருமான் என்றே கருதிவிட்டாள். இதைச் சிவபெருமான் அறிந்ததும் பிரமனின் ஐந்தாவது தலையைக் கிள்ளி எடுத்துவிட்டார். பிரமனை நான்முகனாக்கித் திருவிடையாடல் புரிந்தார். பிரமனது தலையைக் கிள்ளியதால், சிவபெருமானைப் 'பிரமஹத்தி' பிடித்துக் கொண்டது. பிரம காலமும் அவர் கரத்தில் ஒட்டிக் கொண்டது. பிரமஹத்தி தோஷத்தில் இருந்து விடுபெறச் சிவபெருமான் ஒட்டிய கபாலத்துடன் ஊரெங்கும் சுற்றி அலைந்தார். இறுதியில் திருக்கண்டியூர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள திருமால் மூர்த்தியைக் கண்டு வணங்கி வழிபட்டார். திருமாலும் சிவபெருமானுக்கு மனம் இரங்கி, கபால நிவர்த்தி செய்தருளினார்.

சிவனின் சாபத்தைத் தீர்த்ததால், கண்டியூரில் எழுந்தருளியுள்ள பெருமான், 'அரன் சாபம்தீர்த்த பெருமாள்' என்னும் திருநாமம் பூண்டார். சிவனாரின் சாபம் தீர்த்த கபாலதீர்த்தம், இக்கோயிலுக்கு அருகில் உள்ளது. இந்நிகழ்வைத் திருமங்கையாழ்வார்,

"பிண்டியார் மண்டை யேந்திப் பிறர்மனை திரிதந்து உண்ணும்
உண்டியான் சாபம் தீர்த்த ஒருவனூர் உலகம் ஏத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை என்று
மண்டினார் உய்யல் அல்லால் மற்றையார்க்கு உய்ய லாமே ?"

- (திருக்குறுந்தாண்டகம் : 19)

என்று தலையோட்டைக் கையில் ஏந்திக் கொண்டு அயலாருடைய வீடுகளில் திரிந்த பிச்சை யெடுத்துப் பிழைக்கும் ருத்ரனுடைய பிரம்மகத்திச் சாபத்தைப் போக்கின எம்பெருமானுடைய திருப்பதிகளில் ஒன்று கண்டியூர் என்றுரைக்கிறார். மேலும் பெரியதிருமொழியில்,

"வெந்தார் என்பும் சுடுநீறும் மெய்யில் பூசி கையகத்தோர்
சந்தார் தலைகொண்டு உலகேழும் திரியும் பெரியோன் தான்சென்றென்
எந்தாய் சாபம் தீரென்ன இலங்கு முதுநீர் திருமார்பில்
தந்தான் சந்தார் பொழில்சூழ்ந்த சாளக் கிராமம் அடைநெஞ்சே"

- (பெரிய திருமொழி :1: 5: 8)

என்ற பாசுரத்தில, எலும்புகளையும் சாம்பலையும் உடலில் அணிந்து கையில் மண்டையோட்டை ஏந்திக் கொண்டு திரியும் பரமசிவன், அருகில் வந்து 'என் சாபத்தை நீக்கியருள வேண்டும்' என்ற வேண்டத் தன் திருமார்பில் விளங்குகின்ற அமுதநீரை அளித்த எம்பிரான் என்று விளக்குவர்.

வைணவம் தனக்கென்று சில உடைபிடிகளைக் கொண்டுள்ளது. அவை தாபம், புண்டரம், நாமம், மந்திரம், இச்யை (யாகம்) என்பனவாகும்.

தாபம் - திருமாலின் அடையாளங்களாகிய திருவளை நராலையும் திருவட்டத் திகிரியையும் (சங்க, சக்கரம்) தோள்களில் முத்திரையிட்டுக் கொள்வது.

புண்டரம் - திருமண் காப்பையும், திருசூரணத்தையும் கொண்டு, உடலில் பன்னிரண்டு இடங்களில் நாமம் இட்டுக் கொள்ளுதல்.

நாமம் - திருமாலின் ஆயிரம் திருப்பெயர்களில் ஒன்றினையும், அடிமை என்பதனைக் குறிக்கும் தாசன் என்பதையும் சேர்த்துத் தன்னைக் குறிப்பிடுதல்.

மந்திரம் - ஆசார்ய பரம்பரையில் வந்த எழுபத்து நான்கு பேர்களிடமோ அவர்களின் வழித்தோன்றல்களிடமோ ஒரு வைணவன் தீக்சையும் மந்திரமும் பெறுதல்.

இச்யை - (யாகம்) திருமாலின் வழிபடும் முறையினை ஆசார்யன் வாயிலாகக் கேட்டு அறிதல்.

இவ்வைந்து கடைப்பிடிகளைப் 'பஞ்சசங்காரம்' எனவும் பஞ்சசமயரயணம் எனவும் குறிப்பிடுவர்.[5]

விட்டுணுவின் அடையாளங்களாகிய சங்கு, சக்கரம் ஆகிய இரண்டையும் ஒவ்வொரு வைணவனும் தோள்களில் முத்திரையிட்டுக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பிற கடைப்பிடிகளை மேற்கொள்ள முடியும். தான் ஒரு வைணவன் என்பதால், சங்கு சக்கரங்களைத் தன் தோள்களில் முத்திரையிட்டுக் கொண்டிருப்பதையும் அதனால் ஸ்ரீபராசரபட்டர் அன்பனாக ஏற்றுக் கொண்டார் என்பதையும், 'சங்காழி புயம் நானிட்டன் என்றருள் பட்டர்' என்றுரைக்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

5. வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், பக்.52 – 54.

கூரத்தாழ்வார் - 'கூரம்' என்னும் ஊரில் அவதரித்தவர். பட்டர் - பண்டிதரைக் குறிக்கும் வடசொல். இப்பாடலில் பராசரபட்டரைக் குறிக்கும்.

## நூல்

## மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

### தரவு - 1

சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசின் வீற்றிருக்கும்
நீர்பூத்த திருமகளும் நிலமகளும் அடிவருட
சிறைப்பறவை புறங்காப்பச் சேனையர்கோன் பணிகேட்ப
நறைப்படலைத் துழாய்மார்பில் ஞாயிறுபோல் மணிவிளங்க
அரியதா னவர்க்கடிந்த ஐம்படையும் புடைதயங்கக்
கரியமால் வரைமுளரிக் காடீன்று கிடந்தாங்குப்
பாயிரநான் மறைபரவப் பாற்கடலுள் பருமணிச்சூட்
டாயிரவாய்ப் பாம்பணைமேல் அரிதுயிலின் இனிதமர்ந்தோய்

### தரவி - 2

மண்ணகந் துயர்நீங்க வானகம் தொழுதேத்தக்
கண்ணகல்சோ ணாட்டுக் காவிரிவாய்ப் புளினத்துப்
பம்புகர் விசும்புரவி பசும்புரவி வழிவிலங்கும்
செம்பொன்னெயில்[1] ஏழுடுத்த திருவரங்கப் பெருங்கோயில்
ஆணிப்பொன் தகடுரிஞ்சும்[2] அணிக்கதவ நீள்வாயில்
மாணிக்க வெயில்பரப்பும் வைரமணி விமானத்துள்
மின்னிலங்கு தொடிவலய வியன்வலக்கை கீழ்க்கொடுத்துத்
தென்னிலங்கைத் திசைநோக்கி திருநயனந் துயில்வாய்கேள்[3]

### ஈரடித் தாழிசைகள்

தேவராய்த் தேவர்க்குந் தெரியாத ஒளியுருவாய்
மூவராய் மூவர்க்குள் முதல்வனாய் நின்றாய்நீ ! (1)

.........................................................................................

1. செம்பொன் மதில் 2. தகடுருஞ்சும் 3. துயில்வோய் கேள்

போற்றுவார் போற்றுவதுன் புகழ்பொருளே ஆதலினால்,
வேற்றுவா சகமடியேன் விளம்புமா றறியேனால்! (2)
பணித்தடங்கா திமையவர்க்கும் பங்கயத்தோன் முதலோர்க்கும்
பணித்தடங்காப் புகழடியேன் பணித்தடங்கற் பாலதோ! (3)
'யாம்கடவுள்' என்றிருக்கும் எவ்வுலகிற் கடவுளர்க்கும்
ஆம்கடவுள் நீயென்றால் அஃதுனக்கு வியப்பாமோ! (4)
அனைத்துலகும் அனைத்துயிரும் அமைத்தளித்துத் துடைப்பது நீ!
நினைத்தவிளை யாட்டென்றால் நின்பெருமைக் காளவாமோ! (5)
கருதரிய உயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும்
ஒருதினிநா யகமென்றால் உன்புகழ்க்கு வரம்பாமோ (6)

ஈரடி அராகம்

உருவென அருவென உளவென இலனென
அருமறை இறுதியும் அறிவரு நிலைமையை (1)
இவரிவர் இறையவர் எனமன வுறுதியொ
டவரவர் தொழஅறு சமயமும் அருளினை! (2)
கடுவளி கனல்புனல் ககனமொ டகலிடம்
உடுபதி கதிரவன் உருவமும் அருளினை! (3)
கடிமலர் அடியிணை கருதினர் பெறுகென
அடிநடு முடிவற அருள்பர கதியினை (4)

தாழிசை

ஒருநாலு முகத்தவனோ டுலகீன்றாய் என்பரதுன்
திருநாபி மலர்ந்ததல்லால் திருவுளத்தில் உணராயால், (1)
மேருகிரி உடலவுணன் மிடல்கெடுத்தாய் என்பரதுன்
கூருகிரே அறிந்ததல்லால், கோவே நீ! அறியாலால், (2)
பன்றியாய்ப் படியெடுத்த பாழியாய் என்பரது
வென்றியார் உனதெயிற்று1 மென்துகள்போன் றிருத்தலால்[2] (3)
அண்டவெல்லாம் உண்டவென்பர்[3] அறியாதார்; ஆங்கவை நீ
உண்டருளும் காலத்துக்[4] கொருதுற்றுக் காற்றாவால் (4)

.................................................................

1. உனதெயிற்றின் 2. இருத்தலால் 3. உண்டையென்பர் 4. காலத்தில்

நாற்சீர் ஈரடி அம்போதரங்கம்

நஞ்சமும் அமுதமும் நரகமும் வீடுமாய்
வஞ்சமும் ஞானமும் மறப்பும் ஆயினை.
இருவினைப் பகுதியும் இன்பமும் துன்பமும்
கருணையும் வெகுளியும் கருத்தும் ஆயினை.

முச்சீர் ஓரடி அம்போரங்கம்

அலைகடல் வயிறுக லக்கினை. (1)
அவுணரை மதுகைய டக்கினை. (2)
மலைகலை கவிழவெ டுத்தனை. (3)
மதகட[1] களிறுவ தைத்தனை (4)

இருசீர் ஓரடி அம்போதரங்கம்

மண்ணை உண்டனை[2] (1)
வெண்ணெய் உண்டனை. (2)
மருதி டந்தனை. (3)
எருத டர்ந்தனை. (4)
உண்ணி றைந்தனை. (5)
எண்ணி றைந்தனை. (6)
ஒருமை யாயினை. (7)
பெருமை யாயினை[3] (8)

தனிச்சொல்

என வாங்கு,

ஆசிரியச் சரிதகம்

மலர்தலை யுலகத்துப் புலமை சான்ற
பதின்மரும் பணித்த பாடலோ தையொடு
முதுமறை கறங்க முரசம் ஆர்ப்ப,
வலம்புரி பிளிறும் பொலம்புரி கோயில்
ஆழியஞ் செல்வ ! ஆதியம் பரம
வாழி வாழி! மறையோய்[4] வாழி !
நெடியோய் வாழி ! நின்மாட் டொன்றே
அடியேன் வேண்டுவ தஃதுநீ மறக்கேல்

1. மலைகட 2. விண்டனை 3. மேயினை

பூவரும் அயன்முதல் யாவரும் அறியா
மூவுல களந்தநின் சேவடி வாழ்த்தித்
தொழுதகைத் தொண்டர்தம் தொண்டரில் சேர்ந்தாங்கு[5]
எழுவகைத் தோற்றத் தின்னாப் பிறப்பின்
என்பொழி யாக்கையுள் சேர்த்தினும்[6] அவர்பால்
அன்பொழி யாமை அருள்னாதி[7] எனக்கே.

தரவு - 1

சீர்பூத்த ......................தமர்ந்தோய்

சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசின் வீற்றிருக்கும் - சிறப்புமிக்க செழுமை யான செந்தாமரை மலராகிய அழகிய ஆசனத்தில் எழுந்தருளி இருப்பவளும்,

நீர்பூத்த திருமகளும் நிலமகளும் அடிவருட - திருப்பாற்கடலில் திருஅவதாரம் செய்தவளாகிய திருமகளும் கடலால் சூழப்பட்ட நிலமகளும் தங்களது திருக்கரங்களால் திருவரங்கப் பெருமானாகிய நினது திருவடிகளைத் தடவிக் கொடுக்கவும்.

சிறைப்பறவை புறங்காப்பச் சேனையர்கோன் பணிகேட்ப - சிறகுகளை உடைய கருடாழ்வார் நின் ஒருபுறத்தில் பாதுகாத்து நிற்கவும், சேனை முதலியார் நினது ஏவலைக் கேட்டு நிற்கவும்,

நறைப்படலைத் துழாய்மார்பில் நாயிறுபோல் மணிவிளங்க - நறுமணம்மிக்க துளசிமாலையையுடைய நின் திருமார்பில் சூரியப் பிரகாசத்தை ஒத்து கௌஸ்துப மணியாகிய இரத்தினம் ஒளிரவும்,

அரியதா னவர்க்கடிந்த ஐம்படையும் புடைதயங்க - வெல்லுவதற்கு அரிய அசுரர்களை அழித்த சங்கு, சக்கரம், கதை, வில், வாள் முதலான ஐந்து படைக்கருவிகளும் இருபக்கங்களிலும் விளங்கவும்,

.............................................................

(பா.பே) 5. சேர்க்காது 6. சேர்ப்பினும் 7. அருள்மதி

கரியமால் வரைமுளரிக் காடீன்று கிடந்தாங்கு - கரிய பெரிய மலை ஒன்றைத் தாமரைக் காடொன்று பெற, அது விளக்கம் பெற்றுக் கிடப்பதைப் போன்று,

பாயிரநான் மறைபரவப் - முகவுரைச் சூத்திரங்களைத் தன்னகத்தே கொண்டே ரிக், யசூர், சாம, அதர்வண வேதங்கள் போற்றவும்,

பாற்கடலுள் பருமணிச்சூட்டு ஆயிரவாய்ப் பாம்பணைமேல் - பெரிய நாக இரத்தினத்தைத் தன்விரிந்த படத்தின் உச்சியில் கொண்டிருக்க கூடிய ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடப் பள்ளியில்,

அறிதுயிலின் இனிதமர்ந்தோய் - தூங்காமல் தூங்குதலாகிய யோக நித்திரையில் இனிதாக விளங்கியிருப்பவனே !

இப்பாடலில், திருமாலானவர் திருமகள், நிலமகள் ஆகிய தேவியர் அடிகளை வருடிக் கொடுக்க, ஒரு புறத்தில் கருடாழ்வாரும் மற்றொரு புறத்தில் சேனைத் தலைவரும் நிற்க, மார்பில் துளசிமாலையும், கௌஸ்துப மணிமாலையும் விளங்க, சங்கு, சக்கரம், கதை, வில், வேல் முதலான படைக்கருவிகள் பொலிய, வேதங்கள் போற்றி நிற்க, திருப்பாற்கடலில் தன் விரிந்த படத்தின் உச்சியில் நாகரத்தினத்தைக் கொண்டிருக்கக் கூடிய அனந்தாழ்வான்மீது அறிதுயில் கொண்டுள்ள காட்சியைப் பாடியுள்ளார் ஆசிரியர்.

எம்பெருமான், திருமகள், நிலமகள் ஆகியோரோடு விளங்கும் காட்சியைப்,

"பேரணிந்து உலகத் தவர்தொழு தேத்தும்
பேரரு ளாளன்எம் பிரானை
வாரணி முலையாள் மலர்மக ளோடு
மண்மக ளும்உடன் நிற்ப"

- (பெரிய திருமொழி: 4:3:1)

என்ற பாசுரத்தில் எடுத்துரைப்பர் திருமங்கையாழ்வார்.

............................................................................................................

1. உளநெயிற்றின் 2. இருந்ததால் 3. உண்டையென்பர் 4. காலத்தில்

"திருமாதும் நிலமாதும் பக்தியாலே திருவடிகள்
வருடியிட விழித்து றங்கும் கருணாகரா"

- (எம்பெருமான் சதகம்: 9)

என்று கோபால கிருஷ்ணதாசர் இதனை எடுத்தோதுவர்.

சிறகுகளை உடைய கருடாழ்வார் நின் ஒருபுறத்தில் பாதுகாத்து நிற்கின்றார் என்பதைச், 'சிறைப்பறவை புறங்காப்ப' எனக் குறிப்பார் ஆசிரியர். எம்பெருமான் கருடனைத் தன்னுடைய வாகனமாகக் கொண்டவர். ஒப்பற்ற கருடாழ்வார், வேதப்பொருளாகி தனது பொன்போன்ற கழுத்தில், திருவரங்கனாகிய உன்னை எழுந்தருளச் செய்து கொண்டு விரைந்துவரும் அழகை என்மனத்திலே கண்டு கொண்ட பிறகு வேறு யாரையும் நான் தெய்வமாகக் கருதேன் என்பதை,

"தெள்ளா வரும்பொன்னி சூழ ரங்கா வொருதே வரையு
முள்ளா தெனதுள்ளம் யானென் செய்வேன் விண்ணிலோ ருவணப்
புள்ளாகி வேதப் பொருளாகி யுன்னைத் தன்பொற் கழுத்திற்
கொள்ளா வருகின்ற கோலமுள் ளேகண்டு கொண்ட பின்னே."

- (திருவரங்கத்து மாலை : 105)

என்று பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் எடுத்துரைக்கிறார்.

அமுதம் கடைந்தபோது திருப்பாற்கடலில் வாசுகிப் பாம்பால் சுழற்றப்பட்டு இருந்த மந்தரமலை மத்தைப் போலவும் பூமி சக்கரம்போல ஆதிசேடனுடைய தலையில் சுழன்ற கொண்டிருந்த போது ஏற்பட்ட சுழற்சி வேகம் குறைந்தபோது, அவ்வேகக் குறைவால் அவற்றைப் பிடித்திருந்த ஆதிசேடன், வாசுகி ஆகிய இரு பெரிய பாம்புகளும் விழ, அவற்றைப் பற்றிக் கொள்ளும் பெருவலிமை உடையன் இந்தக் கருடன் என்பதையும், இக்கருடனைத் தன் கொடியில் கொண்டவன் எம்பெருமான் என்பதையும்,

"புக்கதுஒரு மந்தரமும் பூமியும் பம்பரமும்
சக்கரமும் போலத் தலைசுழன்ற – தொக்கவிசை
வற்றும் பொழுதுவிழ வாசுகியைச் சேடனைப்
பற்றும் கருடப் பதாகையான்"

- (அழகர் கிள்ளைவிடு தூது : கண்ணிகள் :120,121)

என்று பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் அழகாக எடுத்தோதுகிறார்.

மேலும், எம்பெருமான் எவ்விடத்திற்குச் செல்வதாயினும், ஓட்டுவோன் திருப்பச் செலுத்த அவசியமின்றி இறைவன் கருத்தைத் தானே அறிந்து செல்லுகின்ற கருடனுக்குப் பறவைகளின் அரசன் என்னும் பதவியை வழங்கியதைத், திருப்பாது உதைக்கும் செழும் கருடனுக்கும் திருப்பாதுகைக்கும் அரசு ஈந்தோன் (அழகர் கிள்ளைவிடு தூது : கண்ணி 137) என்கிறார்.

சேனைத்தலைவர் என்பவர் பரமபதத்திலுள்ள நித்திய முக்தர்களின் தலைவர், சேனாபதியாவர். அவர் 'விஷ்வக்ஸேநர்' என்றும் கூறப்படுவர். எக்காரியம் தொடங்கினாலும் அத்தொடக்கத்தில் விக்கினம் நேராக இருக்கும் பொருட்டுச் சைவர்கள் விநாயக பூஜையைச் செய்வதுபோல வைணவர்கள் விஷ்வக்ஸேநருக்கு ஆராதனை செய்ய வேண்டும். இதனை மரபாகக் கொண்டு செய்வர். முக்கியமான ஆசாரியருள் ஒருவர். பெருமானுக்குப் பணிசெய்து வணங்க நெருங்கிவரும் தேவர்கள் மற்றும் அசுரர்களின் கூட்டத்தை விலக்கும் பொழுது இச் சேனைத்தலைவரின் கைப்பிரம்பின் அடி, அத்தேவர்களின் தோள்களிலும், அவர்கள் இவரைச் சாஷ்டாங்கமாக வணங்குகையில் அவர்களது மணிமுடித் தழும்பு, சேனைத்தலைவரது திருவடிகளிலும் விளங்கும். இதனை,

"ஆளில மற்றாங் கேசர் சேவைக் கணுகுந்தொறும்
கோளில் திரளை விலக்கும் பிரம்பின் கொனைபடலால்
தோளி லழுத்த ழும்புண் டச்சுரர்க்கச் சுரர்தொழலால்
தாளின் முழுத்த ழும்புண்டு நஞ்சேனைத் தலைவருக்கே"
- (திருவேங்கடமாலை : 89)

என்பார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். மேலும்,

"ஓராழி வெய்யவன் சூழல கேழவந் தேத்தரங்கர்
காராழி வண்ணப் பெருமாளந் தாதிக்குக் காப்புரைக்கிற்
சீராழி யங்கையிற் பொற்பிரம் பேந்திய சேனையர்கோன்
கூராழி சங்கத் திருக்கதை நாந்தகங் கோதண்டமே."
- (திருவரங்கத்தந்தாதி : காப்பு)

என்ற பாடல், சேனைத் தலைவரைக் குறித்தும் பஞ்சாயுதங்களைக் குறித்தும் எடுத்துரைக்கும். சிறந்த மோதிரத்தை அணிந்த அழகிய கையில்

பொன்மயமான பிரம்பை ஏந்திய சேனை முதலியார் இங்கு சுட்டப்படுகின்றார்.

பஞ்சாயுதங்கள் எனப்படும் திருமாலின் படைக்கருவிகளாக விளங்கியவை சங்கு, சக்கரம், கதை, வில், வாள் ஆகியன. இந்த ஐந்து படைக்கருவிகளையும் குலசேகராழ்வார்,

"தோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற் சங்கம்
கொலையாழி கொடுந்தண்டு கொற்ற வொள்வாள்"
- (பெருமாள் திருமொழி 1:8)

என்பர். 'அங்கை யாழி சங்கு தண்டு வில்லும் வாளு மேந்தினாய்' (திருசந்த விருத்தம் :24) என்பார் திருமழிசை பிரான். 'அமர்கொள் ஆழிசங்கு வாள்தண் டாழி பல்படையன்' (திருவாய்மொழி 8:10:9) என்றார் நம்மாழ்வார்.' தாளும் கரமும் கரத்தில் சங்காழியுந் தண்டும் வில்லும் வாளும் துணைவருமே' (திருவரங்கத்துமாலை : காப்பு) என்று இதனை எடுத்துரைப்பார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். மேலும், அவற்றின் செயல்களையும், 'மின்னாழிப் படைபடைக்கும் துடைக்கும் கதை முக்தி மாற்றாது நல்கும் சுரிசங்கமே" (திருவரங்கத்துமாலை : 83) என்று மின்னலைப் போல விளங்குகின்ற சக்கராயுதம் உலகங்களைப் படைக்கும்; கதாயுதம் அழிக்கும்; உள்ளே சுழியைக் கொண்ட வலம்புரிச் சங்கம் பரமபத்தை நல்கும் என்பதை எடுத்தோதுகிறார். இவற்றுள் சங்கு சக்கரங்களை தொண்டைமான் சக்கரவர்த்திகளுக்கு வழங்கிய செய்தியை வேங்கடாசலமகாத்மியம் கூறும்.[6] இதனைப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், 'முனித்தொண்டை மான்கையில் சங்காழி நல்கி' (திருவேங்கடத்தந்தாதி : 53) என்று குறிப்பர்.

.................................................................................................

6. தொண்டைமான் சக்கரவர்த்தி க்ஷத்திரியசாதியா னாயினும் தவவொழுக்கத்தில் சிறந்து முனிவரையொக்கும் பெருமை வாய்ந்து, திருவேங்கடமுடையான் பக்கல் பக்தி மேலிட்டு, அப்பெருமானை எப்பொழுதுஞ் சேவித்துக் கொண்டு திருமலையிலேயே வாசம் செய்திருந்தலை உணர்ந்த பகையரசர்கள் அவனது நாட்டைக் கைக்கொள்ள, தொண்டைமான் அதனைத் திருவேங்கடமுடையான் சந்நிதியில் விண்ணப்பம் செய்து வணங்கி நிற்க, பெருமான் தனது சங்க சக்ரங்களைக் கொடுத்து, 'இவற்றைக் கொண்டு நீ, பகையரசரைத் தவறாது வென்றிடுக' என்று சொல்லி அருள, தொண்டைமான் அங்ஙனமே பகைவரை வென்று அரச பெற்றான் என்பர்.

திருமாலின் இந்த பஞ்சாயுதங்களுள் சக்கரம், 'சுதர்சநம்' என்றும், சங்கம், 'பாஞ்சநயம்' என்றும், கதை, 'கௌமோதகி' என்றும், வாள், 'நந்தகம்' என்றும், வில்,'சார்ங்கம்' என்றும் பெயர் பெறும்.

எம்பெருமானின் சயனத் திருக்கோலத்தைக் கூறப்புகும் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், பெரிய நாகரத்தினத்தைத் தன் விரிந்த படத்தின் உச்சியில் கொண்டிருக்கக் கூடிய ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடப் பள்ளியில் யோக நித்திரை கொள்ளுவதைப் பாற்கடலுள் பருமணிச்சூட்டு ஆயிரவாய் பாம்பணைமேல் அறிதுயிலின் இனிதமர்ந்தோய்' என்று இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் பரிபாடல்,

ஆயிரம் விரிந்த அணங்குடை அருந்தலை
தீஉமிழ் திறலொடு முடிமிசை அணவர
மாயுடை மலர்மார்பின்;........................

- (பரிபாடல் : பாடல் 1: 1-3)

என்று குறிப்பிடுகிறது. பூதத்தாழ்வார் இதனைப், 'பொங்கு படமூக்கின் ஆயிரவாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய்' (இயற்பா - இரண்டாம் திருவந்தாதி : 97) என்றும் 'அணிமணியின் துத்துசேர் நாகத்தின் மேல் துயில்வான்' (இயற்பா - இரண்டாம் திருவந்தாதி : 96) என்றும் சுட்டுவர்.

“அரவத் தமளியி னோடும் அழகிய பாற்கட லோடும்
அரவிந்தப் பாவையுந் தானும் அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரைபல மோதப் பள்ளிகொள் கின்ற பிரானை”

- (பெரியாழ்வார் திருமொழி - 5:2:10)

என்பார் பெரியாழ்வார்.

**திருமகள் - திருவாகிய மகள், ஸ்ரீதேவி, நிலமகள் - நிலமாகிய மகள், பூதேவி. பாற்கடல் - இது ஏழு கடல்களுள் ஒன்று. ஏழு கடல்கள் - உப்புநீர்க்கடல், கருப்பஞ் சாற்றுக் கடல், கள்ளுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், நல்ல நீர்க் கடல், ஐம்படை - சங்கு, சக்கரம், கதை, வில், வாள், முளரி, தாமரை, மறை - வேதம். பெருங்கருமலை, எம்பெருமானது திருமேனிக்கும் தாமரைக்காடு, வாய், கண்,கை, கால் முதலிய உறுப்புகளுக்கும் உவமை.**

தரவு - 2.

மண்ணகம்........கேள்

மண்ணகம் துயர்நீங்க வானகம் தொழுதேத்த - மண்ணுலகில் உள்ளவர்களும் விண்ணுலகில் உள்ளவர்களும் தங்கள் இம்மை, மறுமைத் துன்பங்கள் நீங்க வணங்கிப் போற்ற,

கண்ணகன் சோணாட்டுக் காவிரிவாய்ப் புளினத்துப் - இடம் அகன்ற சோழநாட்டில் காவிரி ஆற்றின் மணல் திட்டிடத்து,

பம்புகதிர் விசும்புரவி பசும்புரவி வழிவிலங்கும் - நெருங்கிய கிரணங்களையுடைய ஆகாயத்தே செல்லுகின்ற சூரியனது பச்சை நிறத்தை உடைய குதிரையானது தான் செல்லும் வழியில் இருந்து விலகிப் போவதற்குக் காரணமான,

செம்பொன்னெயி லேழுடுத்த திருவரங்கப் பெருங்கோயில் - சிவந்த பொன்மயமான ஏழு மதில்களைச் சுற்றுக்களாகக் கொண்ட திருவரங்கப் பெரிய கோயிலில்,

ஆணிப்பொன் தகடுரிஞ்சும், அஇணிக்கதவ நீள்வாயில் - சிறந்த பொன்தகடு வேயப்பட்டுள்ள அழகான கதவுகளைக் கொண்ட நீண்ட வாயிலையுடைய,

மாணிக்க வெயில்பரப்பும் வைரமணி விமானத்துள் - மாணிக்கம் போல ஒளியை வீசுகின்ற வைரக் கற்கள் பதிக்கப்பட்டுள்ள விமானத்திற்குள்,

மின்னிலங்கு தொடிவலய வியன்வலக்கை கீழ்க்கொடுத்து - ஒளிவிளங்குகின்ற வளையலென்னும் கைக்கடகத்தை அணிந்த பெரிய தன் வலத்திருக்கையைத் திருமுடி கீழே கொடுத்து,

தென்னிலங்கை திசைநோக்கி திருநயனம் துயில்வாய் கேள்! - தெற்குத் திக்கிலுள்ள இலங்கையை நோக்கித், திருக்கண் வளர்ந்தருள்கின்றவனே ! அடியவனாகிய என்னுடைய வேண்டுகோளினைக் கேட்பாயாக !

இப்பாடலில் திருவரங்கக் கோயிலின் அமைவிடம், கோயில், ஏழுசுற்றுக்களைக் கொண்டதாக விளங்கும் தன்மை, பொன் தகடுகளால் வேயப்பட்டு, அதில் வைரமணிகள் பதிக்கப்பட்டுள்ள விமானம் ஆகியவற்றை விளக்கியுள்ளார். தென்னிலங்கைத் திசையை நோக்கித் திருக்கண் வளர்ந்துள்ள செய்தியினை எடுத்துரைத்துள்ளார்.

திருவரங்கம் திருமாலின் திவ்விய தேசங்கள் நூற்று எட்டில் தலைமையுடையது ; சோழ நாட்டுத் திருப்பதிகள் நாற்பதில் முதன்மையானது ; 'கோயில் திருமலை பெருமாள் கோயில்' என்று வைணவர்களால் எடுத்துக் கூறப்படுகின்ற மூன்று தலங்களுள் முதலானது ; 'கோயில்' என்றும் 'பெரிய கோயில்' என்றும் போற்றப்படுவது. ஆதலின், 'திருவரங்கப் பெரியகோயில்' என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். சிற்ப ஆகம நூல்கள் ஒன்று முதல் திருவரங்கக் கோயிலில் ஏழு பிரகாரங்கள் உள்ளன. எனவே, 'எயிலேழுடுத்த' என்று கூறப்பட்டுள்ளது.

திருவரங்கத்து மாலையில், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், நம்பெருமாளது விளங்குகின்ற செம்பொன் மயமாகிய விமானம், விளங்குகின்ற சிவந்த பொன்மயமான மகாமேரு மலையையும், ஏழு மதில்களின் நடுவிலுள்ள இடங்கள் (கடலின்) நடுவிலுள்ள ஏழு தீவுகளையும், இவை அனைத்தையும் சூழ்ந்துள்ள காவிரி ஆறு, பெரிய கடலையும் ஒத்தது போல தோன்றின என்பதை,

"தாழாதி பஞ்சொல்ல வந்தா ரரங்கர் துயங்குசெம்பொற்
கேழா விமானங் கிளர்செம் பொன்மேரு கிரிநிகர்த்தவி
வேழா வரணத் திடையிடைத் தீவுக ளிவ்வனைத்துஞ்
சூழாறு மாகட லெவ்வாறு நாமினிச் சொல்லுவதே"

- (திருவரங்கத்து மாலை : 96)

என்று தம்பாடலில் எடுத்தோதியுள்ளார். எம்பெருமானைத் 'தென்னிலங்கை திசைநோக்கி திருநயனம் துயில்வாய்' என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். தென்னிலங்கைத் திசைநோக்கித் தென்னரங்கப் பெருமான், மேற்கு திசை வாழுமாறு தமது திருமுடியை அங்கு வைத்தருளி, உலகெல்லாம் போற்றும் திருப்பாதங்களை கீழ்த்திசை உய்யுமாறு அப்பக்கமாக நீட்டி, வடதிசைக்குப் பின்னழகைக் காட்டித், தென்திசை இலங்கையை நோக்கித் துயிலுகின்றார். எம்பெருமானின் இந்த எழில்கோலத்தைக் கண்டு வணங்கிய தொண்டரடிப் பொடியாழ்வார்,

"குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு
உடல்எனக் குருகு மாலோ என்செய்கேன் உலகத் தீரே"
- (திருமாலை : 19)

என்று தம் பாசுரத்தில் குறிப்படுகின்றார். வன்பெரு வானகம் வாழ, தேவர்கள் வாழ, இவ்வுலகம் வாழ, மண்ணுலக மாந்தர்கள் வாழ, பாவங்கள் நீங்க, அகமகிழும் தொண்டர்கள் வாழ அன்போடு தென்திசை நோக்கிப் பள்ளி கொண்டுள்ளார் திருவரங்கநாதன் என்பதை,

"வன்பெருவா னகம்உய்ய அமரர் உய்ய
மண்உய்ய மண்உலகில் மனிசர் உய்ய
துன்பமிகு துயர்அகல அயர்வொன் றில்லாச்
சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணிஅரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்
இம்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்
இசைந்துடனே என்றுகொலோ இருக்கும் நாளே."
- (பெருமாள் திருமொழி 1 : 10)

என்று அடியவர்கள் வாழ தென்திசை நோக்கிப் பள்ளி கொண்டதாகக் கூறுகிறார் குலசேகராழ்வார். அடியார்களுள்ளும், 'மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்க்கண் வைத்த என்னுடைய திருவரங்கன்" (பெரியாழ்வார் திருமொழி-4:9:2) என்பார் பெரியாழ்வார். பரவிய கீர்த்தியையுடைய இலங்கைக்கு அரசனாகிய விபீடணனுக்காக தெற்குத்திசையை நோக்கி எப்பொழுதும் மலர்ந்து அருளோடு விளங்குவது திருமுகமாகிய ஒரு தாமரை என்று இந்நூலின் பாடலில் குறிப்பிடுகின்றார். பிள்ளைப் பெருமாள் ஐயங்காார்.

"விரிந்தபுக ழிலங்கை வேந்தற்குத் தென்றிசை
புரிந்தருண் மலர்ந்தோர் புண்ட ரீகமே."
- (திருவரங்கக் கலம்பகம் : 73 : 19 - 20)

இலங்கை வேந்தன் விபீடணனுக்காக தென்திசை நோக்கித் திருமுகம் வைப்பதற்குக் காரணம் ஒன்று கூறப்படுகிறது. இராமாவதாரத்தில், இராமபிரான், வனவாசம் சென்று விபீடணனுக்கு அடைக்கலம் வழங்கிக், கடல்கடந்து இலங்கை சென்று, இராவணன் முதலாகிய அரக்கர்களை அழித்தான். பின், அயோத்திக்கு மீண்டு பட்டாபிஷேகம் செய்து கொண்டபின்பு, சுக்கிரீவன் முதலிய அனைவருக்கும் விடைகொடுத்து அவரவரை ஊருக்கு அனுப்பும்பொழுது, தனது திருஆராதன மூர்த்தியும் குலதனமுமாகிய திருவரங்கநாதனைத் தனக்கு மிகவும் நெருங்கியவனான விபீடணனிடம் கொடுத்து வழிபாடு செய்து வரும்படி அனுப்பினான். அங்ஙனமே விபீடணனும் விமானத்துடனே எடுத்துக் கொண்டு, இலங்கை நோக்கிச் செல்லும் பொழுது, இடைவழியில் உபய காவிரி மத்தியில் பெருமான் புடைபெயராது விமானத்துடனே நிலைநின்றருளினான். அங்கு நின்றருளிய பொழுதும் விபீடணன்மீது கொண்ட பேரன்பின் காரணமாக அவனிருக்கும் இலங்கையை நோக்கி திருமுகத்தைக் காட்டியருளினான் என்பர்.

**வானகம் – விண்ணுலகம், சோணாடு – சோழநாடு,**
**ஆணிப்பொன் – மாற்று உயர்ந்த பொன்.**

## ஈரமுத் தாழிசைகள்

தாழிசை – 1

தேவராய் ..........நீ

தேவராய்த் தேவர்க்குந் தெரியாத ஒளியுருவாய் – இந்திரன் முதலான தேவர்களது தோற்றமாய் அந்த தேவர்களும் அறியாத மிக்க ஒளிவடிவமாய்,

மூவராய் மூவர்க்குள் முதல்வனாய் நின்றாய் நீ – அயன், அரி, அயன் என்னும் மும்மூர்த்திகளாகவும், அந்த மூன்று மூர்த்திகளுள்ளும் தலைவனாகவும் நிற்கும் தன்மையுடையவனாக நீ விளங்குகின்றாய்.

எம்பெருமான், தேவனாகவும், தேவர்களுக்கு அப்பாற்பட்ட உயர்ந்தவனாகவும், மும்மூர்த்திகளாகவும், மும் மூர்த்திகளுள் தலைமை சான்றவனாகவும் விளங்கும்தன்மை இதில் பேசப்பட்டுள்ளது. தேவராகவும், அந்தத் தேவர்களில் மும்மூர்த்திகளாக விளங்குவதை,

"தேவராய் நிற்குமத் தேவும் அத்தேவரில்
மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும் – யாவராய்
நிற்கின்ற தெல்லாம் நெடுமாலென் றோராதார்
கற்கின்ற தெல்லாம் கடை."

– (நான்முகன் திருவந்தாதி : 54)

என்ற பாசுரத்தில், எல்லாத் தெய்வங்களுமாக இருப்பவன் திருமாலே என்பார் திருமழிசையாழ்வார். மும்மூர்த்திகளுள் தலைமை பெற்று விளங்குவதை,

"முதலாம் திருவுருவம் மூன்றென்பர் ஒன்றே
முதலாகும் மூன்றுக்கும் என்பர்................"

– (பெரிய திருவந்தாதி :72)

என்று குறிப்பிடும் நம்மாழ்வார், பிறைச் சந்திரனைச் சடைமுடியில் தரித்து விளங்கும் அரனும், நான்முகனும், இந்திரனும் எம்பெருமானைத் தெய்வமாகப் போற்றுவதை, "பிறையேறு சடையானும் நான்முகனும் இந்திரனும் இறையாதல் அறிந்தேத்த" (திருவாய்மொழி 3:1:10) என்றும் எடுத்தோதுவர்.

பொய்கையாழ்வாரும் மூவர்க்கு முதல்வனான தன்மையை, "முதலாவார் மூவரே அம்மூவ ருள்ளும் முதலாவான் மூரிநீர் வண்ணன்"(இயற்பா – முதல்திருவந்தாதி :15) எடுத்தோதுவர். மூவரில் முதல்வ னாய ஒருவனே உலகங் கொண்ட கோவினை" (திருக்குறுந்தாண்டகம் : 6) போற்றுவர் திருமங்கையாழ்வார்.

எம்பொருமானை, 'ஒளிஉரு' என்பார் ஆசிரியர். ஒளி உரு என்பது ஒளிப்பிழம்பின் வடிவம் எனப் பொருள்படும். எம்பெருமான், ஒளிப் பிழம்பாக விளங்குபவன். இதனை, சோதி யாகியெல் லாவுல கும்தொழும் ஆதிமூர்த்தி" (திருவாய்மொழி 3:3:5) என்பார் நம்மாழ்வார். வேதத்தின்

உட்பொருளாகச் சோதி உருவாக விளங்கும் பெருமானைத் திருவரங்கத் தமுதனார்,

"ஓதிய வேதத்தின் உட்பொரு ளாயதன் உச்சிமிக்க
சோதியை நாதனென அறியா துழல்கின்ற தொண்டர்"

என்று குறிப்பிடுகின்றார்.

தாழிசை - 2

போற்றுவார் ................அறியேனால்

போற்றுவார் போற்றுதுன் புகழ்ப்பொருளே - துதிசெய்யும் அடியவர்கள் போற்றுவார் துதிப்பது உன்னுடைய புகழாகிய பொருளாகும்.

ஆதலினால் வேற்றுவா சகமடியேன் விளம்புமா றறியேனால் - ஆகையால் அடியவனாகிய நான், அப்புகழையன்றி வேறு சொற்களைச் சொல்லும் தன்மையை அறியாதவனாக இருக்கிறேன் பெருமானே !

துதிசெய்யும் அடியவர்கள் போற்றுவது உன்புகழையன்றி வேறொன்றில்லை என்று போற்றுகின்றார்.

உன்னையன்றி மற்றொரு தெய்வத்தைப் போற்றி வீடுபேறு எய்துதல் என்பது உலகத்தில் இல்லை. ஆதலின், அடியவர்கள் போற்றுவது உன் புகழையே என்பதை நம்மாழ்வார், "போற்றி மற்றோர் தெய்வம் பேணப் புறத்திட்டு உம்மையின்னே, தேற்றி வைத்து எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லை (திருவாய்மொழி - 4:10:6) என்றும்,

"ஓதுவார் ஓத்தெல்லாம் எவ்வுலகத் தெவ்வெவையும்
சாதுவாய் நின்புகழின் தகையல்லால் பிறிதில்லை
போதுவாழ் புனந்துழாய் முடியினாய், பூவின்மேல்
மாதுவாழ் மார்பினாய் என்சொல்லி வாழ்த்துவனே"
- (திருவாய்மொழி- 3:1:6)

என்றும் போற்றுகின்றார். தன்னுடைய வாய் இறைவனின் புகழை மறவாது வாழ்த்த வேண்டும் என்பதை விரும்பும் பேயாழ்வார்,

"சென்றநாள் செல்லாத செங்கண்மா லெங்கள்மால்
என்றநா ளெந்நாளும் நாளாகும் – என்றும்
இறவாத எந்தை இணையடிக்கே யாளாய்
மறவாது வாழ்த்துகவென் வாய்."
– (இயற்பா – மூன்றாம் திருவந்தாதி : 17)

என்றுரைப்பது இங்கு சுட்டத்தக்கது.

தாழிசை – 3

பணத்தடங்கா .............பாலதோ ?

பணித்தடங்கா திமையவர்க்கும் பங்கயத்தோன் முதலோர்க்கும் – பாம்பைக் குழையாக அணிந்துள்ள பெரிய காதுகளை உடைய தேவனான சிவபெருமானுக்கும் பிரமன் முதலான தேவர்களுக்கும்,

பணித்துடங்காப் புகழடியேன் பணித்தடங்கற் பாலதோ – சொல்ல முடியாத உன்புகழைச் சொல்லில் கூறி முடிக்கத்தக்க தன்மை உடையதோ ?

மும்மூர்த்திகளுள் மற்ற இருவரான சிவபெருமான், பிரமன் போன்றோரும் எடுத்து இயம்ப இயலாத பெருமையுடையது உன் புகழ். அத்தகைய புகழை எளியன் யான் எடுத்துக் கூறி முடித்தல் இயலுமோ? அது இயலாதது என்ற ஆசிரியர் அனைவருக்கும் உணர்த்துவதாக இப்பகுதி அமைந்துள்ளது.

சிவபெருமானும் பிரம்மனும் போற்றும் தன்மை உடையனவாக எம்பெருமான் விளங்குகின்ற தன்மையைத் திருமங்கையாழ்வார் தம் பாசுரத்தில்,

"திரிபுர மூன்றெரித் தானும்மற்றை
மலர்மிசை மேலய னும்வியப்ப
முரிதிரை மாகடல் போல்முழங்கி
மூவுல கும்முறை யால்வணங்க...."

என்றெடுத்தோதுவர். நீரேறு செஞ்சடை நீலகண்டனும் நான்முகனும், முறையால் சீரேறு வாசகஞ் செய்யநின்ற திருமாலை.........." (பெரியாழ்வார் திருமொழி 4:1:5) என்று எம்பெருமானைப் போற்றியுரைப்பர் பெரியாழ்வார்.

பணி - பாம்பு, பணி+தடம் + காது, என்ற மூன்று சொற்களும் இணைந்தமையும். 'பணித்தடங் காது' என்ற தொடருக்குப் பாம்பணியான நாகாபரணத்தை அணிந்திருக்கக்கூடிய பெரிய காது என்பது பொருள். பணித்தடங்காப் புகழ் - சொற்களினால் சொல்லிமுடிக்க இயலாப்புகழ், பங்கயம் – தாமரை, பங்கயத்தோன் – திருமாலின் திருவுந்தித் தாமரையில் தோன்றியவன். "உந்தி யெழுந்த உருவ மலர்தன்னில் சந்தச் சதுமுகன் தன்னைப் படைத்தவன் (பெரியாழ்வார் திருமொழி 2:5:8) என்று இதனைக் குறிப்பர் பெரியாழ்வார். "புண்டரிக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே (பெருமாள் திருமொழி 8:2) என்பார் குலசேகராழ்வார்.

தாழிசை - 4.
யாம்கடவுள்..........வியப்பாமோ.

யாம்கடவுள் என்றிருக்கும் எவ்வுலகில் கடவுளர்க்கும் – 'தானே கடவுள்' என்று எண்ணி, அகந்தைகொண்டு இருக்கின்ற அனைத்து உலகங்களிலும் உள்ள தெய்வங்களுக்கு எல்லாம்.

ஆம்கடவுள் நீயென்றால் அஃதுனக்கு வியப்பாமோ – தலைமையாகிய தெய்வம்நீ என்று சொல்லிப் புகழ்ந்தால், அது உனக்க அதிசயமான செய்தியாகுமா ?

திருமாலே இவ்வுலகில் உள்ள அனைத்துத் தெய்வங்களுக்கும் தலைமைசான்ற தெய்வமாகும். ஆதலின் அதனைக் கூறிப் புகழ்தல் என்பது இயல்பான ஒன்றேயாகுமே தவிர அதிசயிக்கத்தக்க செய்தியாகாது என்கிறார் ஆசிரியர், இதனாலேயே,

"தனிமாப் புகழே எஞ்ஞான்றும் நிற்கும்படியாத் தான்தோன்றி
முனிமாப் பிரம முதல்வித்தாய் உலகம் மூன்றும் முளைப்பித்த
தனிமாத் தெய்வத் தளிரடிக்கீழ்ப் புகுதல் அன்றி அவனடியார்,
நனிமாக் கலவி இன்பமே நாளும் வாய்க்க நங்கட்கே."

(திருவாய்மொழி-8:10:7)

என்று, திருமால் எக்காலத்தும் நிலைத்து நிற்கும்படியான தனிப்புகழ் உள்ள தெய்வம். பிரமாவையும், மண்ணுலகம், விண்ணுலகம், பாதாள உலகம் மூன்றையும் தோற்றுவித்து தனிப்பெரும் தெய்வமாக விளங்குகின்றவர் என்கிறார் நம்மாழ்வார். அதனாலேயே பொய்கையாழ்வார் திருமாலையல்லாது வேறு எந்தத் தெய்வத்தையும் கண்டு வியக்க மாட்டோன். வேறு தெய்வங்களைப் போற்ற மாட்டோன் என்பதை, "வியவேன் திருமாலை யல்லது தெய்வமென் றேத்தேன் (இயற்பா முதல் திருவந்தாதி : 64) என்று பாடுகிறார்.

தாழிசை - 5

அனைத்துலகும்...............அளவாமோ.

அனைத்துலகும் அனைத்துயிரும் அமைத்தளித்துத் துடைப்பது நீ - எல்லா உலகங்களையும் அவற்றுள் எல்லா உயிர்களையும் படைத்து, காத்து, அழிப்பது நீ

நினைத்தவிளை யாட்டென்றால் நின்பெருமைக் களவாமோ இவையெல்லாம் நினைத்த பொழுதில் நீ நினைத்த விளையாட்டு என்றால் உன் பெருமையை அளவிட்டுக் கூறுதற்கு இயலமோ?

பிரமனாக இருந்து படைத்தல் என்பதும் தானான தன்மையில் நின்று உயிர்களைக் காத்தல் என்பதும் சிவபெருமானாக இருந்து இவ்வுலகில் அழித்தல் என்பதும் எம்பெருமான் ஒருகணத்தில் நடத்தும் விளையாட்டு என்கிறார் ஆசிரியர்.

உலக உயிர்களைப் படைத்து, காத்து, அழிக்கும் செயல்களை மூவுருவில் முடிப்பவனும் பெருமாள் என்பதை,

"படைப்பொடு கெடுப்புக் காப்பவன் பிரம
பரம்பரன் சிவபிரான் அவனே,
இடைப்புக்கோ ருருவும் ஒழிவில்லை யவனே
புகழ்வில்லை யாவையும் தானே."
- (திருவாய்மொழி 8:4:9)

என்றும், "பொங்கு மூவுலகும் படைத்தளித் தழிக்கும் பொழிந்து மூவுருவன் எம்மருவன்' (திருவாய்மொழி 8:4:2) என்றும் புகழ்ந்தோதுவார் நம்மாழ்வார்.

தாழிசை - 6.

கருதரிய .................. வரம்பாமோ

கருதரிய உயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும் - எண்ணுதற்கு அரிய அனைத்து உயிர்களுக்கும் உயிராக மறைந்து எல்லா இடங்களிலும் நிறைந்து தங்குகின்ற,

ஒருதனிநா யகமென்றால் உன்புகழ்க்கு வரம்பாமோ - தன்னிகரில்லா தலைவன் என்பது உனது பெரும் புகழுக்கு எல்லையாகுமோ ?

அனைத்து உலக உயிர்களுக்கெல்லாம் உயிராக எங்கும் நிறைந்த பெருமான் ஒப்பற்ற தலைவன். அவன் புகழ் வரையறுத்துக் கூற இயலாத எல்லையற்றது என்பதை எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

எம்பெருமான், ஐம்பூதங்களாகவும் சந்திரனாகவும் சூரியனாகவும் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களாகவும் அனைத்துப் பொருள்களுமாகவும் விளங்குபவன். ஆதலின், 'திடவிசும் பெரிநீர் திங்களும் சுடரும் செழுநிலத் துயிர்களும் மற்றும் படர்பொருள்களுமாய் நின்றவன்' (பெரிய திருமொழி4:3:2) என்பார் திருமங்கை யாழ்வார். "மண்ணொடு நீரம் எரியும் காலும் மற்றும் ஆகாசமு மாகி நின்றாய்'

(பெரியாழ்வார் திருமொழி 4:10:6) என்பார். இதனையே, 'உலகமும் ஊழியும் ஆழியும் ஒண்கேழ் அலர்கதிரும் செந்தீயும் ஆனான் (இயற்பா - மூன்றாம் திருவந்தாதி :44) என்று அனைத்துமாக விளங்குகின்ற தன்மையைப் பெரியாழ்வார் விவரிப்பர். இதனை நம்மாழ்வார்,

"திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே"
~ (திருவாய்மொழி ~ 1:1:7)

என்று தன் பாசுரத்தில் போற்றுகின்றார்.

அராகம் – 1

உருவென .................நிலைமையை.

உருவென அருவென உளனென இலனென – பெருமானே ! நீ உருவம் உடையவன் என்றும், உருவம் இல்லாதவன் என்றும், உள்ளவன் என்றும், இல்லாதவன் என்றும்,

அருமறை இறுதியும் அறிவரு நிலைமையை – அறிவதற்கு அரிய வேதங்களே அறிவதற்கு அரியவனான தன்மையைக் கொண்டவனாக இருக்கின்றாய்.

அறிவதற்கு அரிதான வேதங்களாலும் எம்பெருமானின் தன்மைகளை அறிய இயலாது என்பதைக் கூறுகிறார் ஆசிரியர்.

"ஒருருவ னல்லை ஒளியுருவம் நின்னுருவம்
ஈருருவ னென்பார் இருநிலத்தோர் – ஒருருவம்
ஆதியாம் வண்ணம் அறிந்தா ரவர்கண்டீர்
நீதியால் மண்காப்பார் நின்று"
-(இயற்பா – இரண்டாம் திருவந்தாதி.60)

என்ற பாசுரத்தில் ஓருரு, ஈருரு என்பர். ஆனால் பெருமானின் உருவம், ஒளியுருவம் என்பார் பூதத்தாழ்வார்.

எம்பெருமான், தேவர்களுக்கெல்லாம் கருவாக விளங்கக் கூடியவன். அனைத்துப் பொருட்களுக்கும் முதலானவன். ஆனாலும் அருவமானவன் என்கிறார் நம்மாழ்வார்.

"உருவாகிய ஆறு சமயங்கட் கெல்லாம்
பொருவாகி நின்றானவன் எல்லாப் பொருட்கும்
அருவாகிய ஆதியைத் தேவர்கட் கெல்லாம்
கருவாகிய கண்ணனைக் கண்டுகொண் டேனே"
- (திருவாய்மொழி - 9:4:8)

என்று எடுத்தியம்புகிறார். உருவம் உடையவனாகவும், உருவம் இல்லாதவனாகவும் மாயவேலைகள் செய்பவனாக விளங்குபவன் எம்பெருமான் என்று திருமழிசையாழ்வார்,

"ஆணினோடு பெண்ணுமாகி யல்லவோடு நல்லவாய்
ஊணொடோசை யுறுமாகி யொன்றலாத மாயையாய்
பூணிபேணு மாயனாகிப் பொய்யினோடு மெய்யுமாய்
காணிபேணு மாணியாய்க்க ரந்துசென்ற கள்வனே"
-(திருச்சந்த விருத்தம் :26)

என்ற தன் பாசுரத்தில் எடுத்தோதியுள்ளார்.

அராகம் - 2.

இவரிவர் .............அருளினை.

இவரிவர் இறையவர் எனமன வுறுதியொ - இந்த இந்தத் தேவர்கள், எங்களுக்குத் தலைவர் இவரே என்று மனத்துணிவுடன்,

அவரவர் தொழஅறு சமயமும் அருளினை - அந்தந்தச் சமயத்தைச் சார்ந்தவர்கள் வணங்கும்படியாக ஆறு சமயங்களையும்

எம்பெருமான், அனைத்துச் சமயத்தினரும் போற்றும் தெய்வமாக விளங்குபவன் என்பதைக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.

அறுவகைச் சமயங்களைக் படைத்து அவற்றை நான்முகனாகிய பிரமன், நீலகண்டனாக சிவபெருமான் ஆகியோருடன் இணைந்து காக்கக் கூடியவன் எம்பெருமான். இதனை, 'சமயங்கள் கண்டான் அவைகாப்பான் கார்கண்டன் நான்முகனோடு' (நான்முகன் திருவந்தாதி :87) என்பார் திருமழிசையாழ்வார்.

ஐம்புலன்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவனாக விளங்கும் எம்பெருமான், அறுவகை சமயங்களாகவும், அறுவகை சமயத்தினராகவும் விளங்குபவன் என்பதை,

"யாவையும் யவரும் தானாய் அவரவர் சமயம் தோறும்
தோய்விலன் புலனைந் துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி"
- (திருவாய்மொழி 3:4:10)

என்று எடுத்துரைப்பர். மேலும்,

"வணங்கும் துறைகள் பலபல வாக்கி மதிவி கற்பால்
பிணங்கும் சமயம் பலபல வாக்கி அவையவை தோறு
அணங்கும் பலபல வாக்கி நின்மூர்த்தி பரப்பி வைத்தாய்
இணங்கு நின்னோரை இல்லாய்! நின்கண்
வேட்கை எழுவிப்பனே"

என்ற பாசுரத்தில் எடுத்துரைக்கிறார் நம்மாழ்வார்.

அராகம் - 3

கடுவளி ...................அருளினை.

கடுவளி கனல்புனல் ககனமொ டகலிடம் - சுறாவளி, காற்று, தீ, நீர், ஆகாயம், அகன்ற பூமியொடு,

உடுபதி கதிரவன் உருவரும் அருளினை - நட்சத்திரங்களுக்கெல்லாம் தலைமைச் சான்றவனாகிய சந்திரன், சூரியன் ஆகியவற்றையும் படைத்தருளினாய்.

எம்பெருமான், ஐம்பூதங்களையும், சந்திர சூரியர்களையும் படைத்தவன் என்கிறார் ஆசிரியர்.

உலகங்களையும் உலகங்களை அழியச் செய்த ஊழிக்காலத்தையும் கரிய கடல்களையும், மலைகளையும், சிவந்த தீயையும் காற்றையும் வானத்தையும் படைத்தவன் எம்பெருமான்.

"உலகும் உலகிறந்த ஊழியும் ஒண்கேழ்
விலகு கருங்கடலும் வெற்பும் – உலகினில்
செந்தீயும் மாருதமும் வானும் திருமால்தன்
புந்தியி லாய புணர்ப்பு."

– (இயற்பா – முதல் திருவந்தாதி : 61)

என்றும், "வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்த் தேனாகிப் பாலாம் திருமாலே" (இயற்பா – முதல் திருவந்தாதி :92) என்றும், " இறையும் நிலனும் இருவிசும்பும் காற்றும் அறைபுனலும் செந்தீயும் ஆவான்" (இயற்பா – முதல் திருவந்தாதி : 29) என்றும் தன் பாசுரங்களில் போற்றுகின்றார் பொய்கையார்.

எம்பெருமான், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என ஐந்து பூதங்களாகவும், சூரியன், சந்திரன் ஆகிய இருசுடர்களாகவும் தானே விளங்குபவர் என்பதைத், 'திரியும் காற்றொடு அகல்விசும்பு திணிந்தமண் கிடந்தகடல் எரியும் தீயோடு இருசுடர் தெய்வம்' (திருவாய்மொழி 3:6:5) என்றுரைப்பார் நம்மாழ்வார்.

வானத்தையும் தீயையும் காற்றையும் கடலையும் மலைகளையும் வெப்பமுடைய சூரியனையும் குளிர்ந்த சந்திரனையும் மேலே விளங்குகின்ற மேகங்களையும் உயிரினங்களையும் எட்டுத் திசைகளையும் படைத்தவன் எம்பெருமான் என்பதை,

"வானுலவு தீவளி மாகடல் மாபொருப்பு
தானுலவு வெங்கதிரும் தண்மதியும் – மேனிலவு
கொண்டல் பெயரும் திசையெட்டும் சூழ்ச்சியும்
அண்டந்த திருமால் அகைப்பு"

– (நான்முகன் திருவந்தாதி : 37)

என்ற பாசுரத்தில் விளக்குவார் திருமழிசையாழ்வார்.

அராகம் - 4

கடிமலர் .............கதியினை.

கடிமலர் அடியிணை கருதினர் பெறுகென - நறுமணம் மிக்க செந்தாமரையை ஒத்த திருவடிகளை வேண்டி நின்றவர்கள். அருள்பெறுக என்று.

அடிநடு முடிவற அருள்பர கதியினை - முதல், இடை, கடையில்லாமல் அடியவர்க்கு அருளுகின்ற பரம பதத்தினை உடையவன்.

எம்பெருமான், அடியவர்கள் அனைவருக்கும் அருளை, வேறுபாடின்றி வழங்கும் அருளாளன் என்கிறார் பிள்ளை பெருமாள் ஐயங்கார்.

நான்கு குலங்களுள் கீழ்மையுடையதாகக் கொள்ளப்படும் சண்டாளர்களாக இருப்பினும், அவர்கள் சக்கராயுதப் படையையுடைய மணிவண்ணனாகிய எம்பிரானுக்கு அடியவராயின், அவ்வடியார்க்கு அடியவர் எமது தலைவராவர் என்கிறார் நம்மாழ்வார். இதனைக்,

> "குலம்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை
> நலந்தான் இலாத சண்டாள சண்டாளர் களாகிலும்
> வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற் காளென்றுள்
> கலந்தார் அடியார்தம் அடியார் எம்ம டிகளே"
>
> - (திருவாய்மொழி 3:7:9)

என்ற தன் பாசுரத்தில் எடுத்தோதுகிறார்.

தாழிசை - 1.

ஒருநாலு ..................உணராயால்.

ஒருநாலு முகத்தவனோ டுலகீன்றாய் என்பர் - நான்கு முகங்களைக் கொண்ட பிரம்மாவையும் அனைத்து உலகங்களையும் படைத்தாய் என்று சொல்லுவர்.

அதுஉன் திருநாபி மலர்ந்ததல்லால் திருவுளத்தில் உணராயால் - உனது அழகிய உந்தித் தாமரை விரிந்தது அல்லாமல் மனதால் நீ நினைக்கவும் இல்லை.

எம்பெருமானுக்குப் படைப்புத்தொழில் மிகவும் எளிமையானது என்று கூறி, எவ்வித முயற்சியும் இன்றி அத்தொழிலைச் செய்யும் வல்லமை உடையவனாக விளங்குகின்றான் என்பதை வெளிப்படுத்துகிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

தேவர்களும் அவர்களுக்கு இருப்பிடமான உலகங்களும் மனிதர் முதலிய உயிர்களும் மற்றும் உள்ள அனைத்தும் ஒரு சிறிதும் இல்லாத அந்த ஊழிக் காலத்தில், பிரம்மனையும் தேவர்களையும் உலகங்களையும் உயிர்களையும் படைத்தவன் எம்பெருமான். இதனை நம்மாழ்வார்,

*"ஒன்றுந் தேவு முலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா*
*அன்று நான்முகன் தன்னோடு தேவர் உலகோடு உயிர்படைத்தான்"*
- (திருவாய்மொழி 4:10:1)

என்றுரைப்பர். மேலும், பெருமை விளங்குகின்ற வானவர்கள், முனிவர்கள் முதலான யாவரையும் மற்றும் உள்ள பொருள்களையும் படைப்பதற்காக, நான்முகங்களைப் படைத்தவர் என்பதை,

*"மாயோ னிகளாய் நடைகற்ற வானோர் பலரும் முனிவரும்*
*நீயோ னிகளைப் படையென்று நிறைநான் முகனைப் படைத்தவன்"*
- (திருவாய்மொழி 5:1:3)

என்றும் போற்றுவர். திருமங்கையாழ்வார் தம் பாசுரம் ஒன்றில், எம்பெருமான் தனது நாபிக்கமல வட்டத்துள் பெரிய ஒளிமிக்க தாமரை மலரை மலரச் செய்து, அந்தத் தாமரை மலரில் நான்முகனைப் படைத்தான் என்பதை, "தன்நாபி வலயத்துப் பேரொளிசேர் மன்னிய தாமரை மாமலர் பூத்து அம்மலர்மேல் முன்னம் திசை முகனைத் தான்படைக்க" (பெரிய திருமடல்:17-19) என்று எடுத்தோதுகிறார். நாம்முகனை உந்தியில் தோற்றுவித்து காலனையும் படைத்ததை,

"உய்யஉலகு படைக்க வேண்டி உந்தியில் தோற்றினாய் நான்முகனை
வையமனிசரை பொய்யென் றெண்ணிக் காலனையும் உடனே படைத்தாய்"
-(பெரியாழ்வார் திருமொழி 4:10:5)

என்று இதனை பூதத்தாழ்வார் எடுத்தோதுவர். "சிட்டிக்கப் பிரமாவைக் கருணை யாலுன் திருநாபிக் கமலத்தே செனிக்கச் செய்தாய் (எம்பெருமான் சதகம்:11) என்பார் கோபாலகிருஷ்ண தாசர்.

நாலு முகத்தவன் - நான்கு திசைகளையும் நோக்கிய நான்கு முகங்களைக் கொண்டவன்.

தாழிசை - 2.

மேருகிரி............அறியாயால்

மேருகிரி உடலவுணன் மிடல்கெடுத்தாய் என்பர் - மேருகிரியைப் போன்ற உடலைக் கொண்டிருந்த அசுரனாகிய இரணியனின் வலிமையினை அழித்தாய் என்று கூறுவார்கள்.

அதுஉன் கூருகிரே அறிந்ததல்லால் கோவேநீ அறியாயால் - இறைவனே ! அச்செயல் உன் கூரிய நகம் மட்டுமே அறிந்தது அல்லாமல் நீ அறியவில்லை.

அசுரனாகிய இரணியனின் வலிமையை எம்பெருமான் அழித்தது, அவர்தம் நகம் மட்டுமே அறிந்த செயலாகும் என்றால், அப்பெருமானின் முழுவலிமை எத்தகையது என்பதை எண்ணி வியக்கின்றார் ஆசிரியர்.

## இரணியனின் வலிமையை அழித்த வரலாறு (நரசிங்க அவதாரத்தில்)

இரணியன் என்ற அசுரன், தனித்தனி தேவர், மனிதர், விலங்கு முதலிய பிராணிகளாலும் ஆயுதங்களாலும் பகலிலும் இரவிலும் பூமியிலும் வானத்திலும் வீட்டின் அகத்திலும் புறத்திலும் தனக்கு மரணம் இல்லாதபடி வரம் பெற்றவன். தேவர்கள் முதலான அனைவருக்கும் கொடுமைகளைச் செய்து, தன்னையே கடவுளாக வணங்கும்படி துன்புறுத்தி வருகையில், அவரது மகனான பிரகலாதன், இளமை தொடங்கி மகாவிஷ்ணுவின் பக்தனாய்த் தந்தையின் கட்டளைப்படி, அவன்பெயர் சொல்லி கல்வி கற்காமல் நாராயண நாமம் சொல்லி வரவே இரணியன் அவன்மீது கடுங்கோபம் கொள்கிறான். இரணியன், பிரகலாதனைத் தன்வழிப்படுத்துவதற்குப் பலமுறை முயன்றபின், அங்ஙனம் வழிபடாத அவனைக் கொல்லுதற்கு என்ன உபாயம் செய்து அவன் அவன் இறவாது இருப்பதைக் கண்டு ஒரு நாள் சாயங்காலத்தில் தந்தை மகனை நோக்கி, நீ சொல்லும் நாராயணன் என்பான் எங்கு உளன்? காட்டு என்ன, அப்பிள்ளை, 'தூணிலும் உளன், துரும்பிலும் உளன், எங்கும் உளன்' என்று சொல்ல, உடனே இரணியன், 'இங்கு உளனோ?' என்று சொல்லி, எதிரில் இருந்த தூணைப் புடைக்க, அதனில் இருந்து திருமால், மனித ரூபமும் சிங்க வடிவமும் கலந்த நரசிங்க மூர்த்தியாய்த் தோன்றி இரணியனைப் பிடித்து வாயிற்படியில் தன் மடியின்மீது வைத்துக் கொண்டு தனது திருக்கை நகங்களால் அவன் மார்பைப் பிளந்து அழித்திட்டுப் பிரகலாதனுக்கு அருள்செய்தான். இவ்வரலாற்றைப் பரிபாடலின் நான்காவது பாடல்,

"புகைந்த நெஞ்சின் புலர்ந்த சாந்தின்
பிருக லாதன் பலபல பிணிபட
வலந்துழி மலர்ந்த நோய்கூர் கூம்பிய நடுக்கத்து
அலர்ந்த புகழோன் தாதை ஆகலின்
இகழ்வோன் இகழா நெஞ்சினனாக நீஇகழா
நன்றா நட்ட அவன்நன் மார்பு முயங்கி
ஒன்றா நட்டவன் உறுவரை மார்பின்
படிமதம் சாம்ப ஒதுங்க
இன்னல் இன்னரொடு இடிமுரசு இயம்ப

வெடிபடா ஓடிதூண் தடியொடு
தடிதடிபல படிவகிர் வாய்ந்த உகிரினை
-(பரிபாடல்: 4 :10-21)

என்று முதன்முதலில் இக்கதையை விரிவாக எடுத்தியம்புகிறது.

"புகுந்திலங்கும் அந்திப் பொழுதத்து அரியாய்
இகழ்ந்த இரணியன தாகம் - சுகிர்ந்தெங்கும்
சிந்தப் பிளந்த திருமால் திருவடியே
வந்தித்தென் உள்ளமே வாழ்த்து"
-(இயற்பா - மூன்றாம் திருவந்தாதி:95)

என்ற பாசுரத்தில், மாலைக் காலம் வந்து சேர்ந்தபோது, நரசிம்ம மூர்த்தியாய்த் தோன்றி, தன்னை நிந்தித்துக் கொண்டிருந்த இரணியன் உடலைப் பலவாறாக வகிர்ந்து, எங்கும் இரத்தம் சிந்தும்படியாக அழித்ததை எடுத்துரைக்கிறார். பெரியாழ்வார் திருவரங்கக் கோயிலைக் குறிப்பிடும்பொழுது,

"உரம்பற்றி இரணியனை உகிர்நுதியால்
ஒள்ளரி மார்புறைக்க ஊன்றி
சிரம்பற்றி முடியிடியக் கண்பிதுங்க
வாயலரத் தெழிந்தான் கோயில்
- (பெரியாழ்வார் திமொழி-4:9:8)

என்று எம்பெருமான் இரணியனைக் கொன்ற நிகழ்வினை எடுத்துரைக்கிறார். மேலும்,

"எங்ஙனே உய்வர் தானவர் நினைத்தால்
இரணியன் இலங்குபூண் அகலம்
பொங்குவெங் குருதி பொன்மலை பிளந்து
பொழிதரும் அருவிஒத் திழிய
வெங்கண்வாள் எயிற்றோர் வெள்ளிமா விலங்கல்
விண்ணுறக் கனல்விழித்து எழுந்தது
அங்ஙனே ஒத்த அரியுரு வானான்
அரங்கமா நகர்அமர்ந் தானே."
- (பெரியதிருமொழி 5:7:5)

என்பார் திருமங்கையாழ்வார்.

மிடல் - வலிமை. மேருகிரி - மேருமலை, இங்கு மேருமலை அசுரனாகிய இரணியனின் நிறத்திற்கும் வலிமைக்கும் பெருமைக்கும் உவமையாகக் கூறப்பட்டது.

தாழிசை - 3.

பன்றியாய் ..............இருத்தல்லால்.

பன்றியாய்ப் படியெடுத்த பாழியா யென்பர் - வராக அவதாரம் எடுத்தபொழுது, பூமியை அகழ்ந்து எடுத்த வலிமையுடையவன் என்று உன்னைக் கூறுவர்.

அதுவென்றியார் உனதெயிற்று மென்துகள்போன் றிருத்தலால் - எம்பெருமானாகிய உன்னுடைய வெற்றி பொருந்திய கோடுகளில் அந்தப் பூமியானது சிறிய துகளை ஒத்து இருந்ததல்லவா !

எம்பெருமான், வராக வடிவமெடுத்துக் கடலினுள் மூழ்கிய பூமியைத் தன் கோட்டால் குத்தி எடுத்தபொழுது, பூமி சிறிய துகள் போன்று இருந்தது என்றால், அவனுடைய தோற்றம் எத்தகையதாக இருந்திருக்கும் என்று வியக்கிறார் ஆசிரியர்.

***பன்றியாய்ப் படியெடுத்த வரலாறு.***

இரணியன், இரணியாட்சன் என்ற அசுர சகோதர்கள் ஒரு சமயம் உலகில் தோன்றி, உலக உயிர்களுக்கு இன்னல்களை இழைத்தனர். இவர்களின் கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்தது. திருமாலும் தக்க சமயத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார். ஒருமுறை, பூமியைப் படிப்படியாக ஒழிப்பதற்குக் காலதாமதமாகும் என்று அதைப் பாயாகச் சுருட்டிக் கடலுக்கு அடியில் இரணியாட்சன் ஒளித்து வைத்துவிட்டான். திருமால் பன்றியின் தோற்றம் கொண்டு, பேருருவமாக வளர்ந்தோங்கி, பயங்கரமான கோரைப் பற்களுடன் கடலினுள் சென்று, அதன் அடியிலே புதைந்திருந்த பூமியைத் தன் கோட்டால் குத்தி எடுத்துக் கொண்டு வந்து பழையபடி விரித்தருளி, அக்கொடிய அசுரனையும் கொன்றார்.

விண்ணுலகத்தோர் அச்சப்படும்படியாகப் பேருருக் கொண்டு, அன்று நீ அளந்த இப்பூமியானது, கூர்மையான தந்தங்களை உடைய வராக வடிவமாகிய கடலினுள் கிடந்த பூமியை எடுத்த காலத்து, அப்பூமி உன்தந்தத்தின் ஓரிடத்தில் படிந்திருந்தது வியப்பானது என்பதை,

“பொருகோட்டோர் ஏனமாயப் புக்கிடந்தாய்க் கன்றுன்
ஒருகோட்டின் மேற்கிடந்த தன்றே ~ விரிதோட்ட
சேவடியை நீட்டித் திசைநடுங்க விண்துளங்க
மாவடிவில் நீயளந்த மண்”

-(இயற்பா - முதல் திருவந்தாதி :9)

தன் பாசுரத்தில் எடுத்துரைக்கும் பொய்கையார், மற்றொரு பாசுரத்திலும்,

“பிரான்உன் பெருமை பிறரார் அறிவார்?
உராய் உலகளந்த ஞான்று ~ வராகத்
தெயிற்றளவு போதாவா றென்கொலோ? எந்தை
அடிக்களவு போந்த படி”

-(இயற்பா - முதல் திருவந்தாதி :84)

என்று வியந்துரைக்கிறார். இந்நிகழ்வை நானொருவன் மட்டும் இன்று அறியவில்லை. நெடுங்காலமாக பலரும் அறிவர் என்பதைத்,

“தானொருவ னாகித் தரணி யிடந்தெடுத்
தேனொருவ னாய்எயிற்றில் தாங்கியதும் ~ யானொருவன்
இன்றா அறிகின்றேன் அல்லேன் இருநிலத்தைச்
சென்றாங் கடிப்படுத்த சேய்.”

-(இயற்பா - நான்முகன் திருவந்தாதி, 70)

என்று திருமழிசைபிரான் எடுத்துரைக்கிறார்.

படி - பூமி, பாழி - வலிமை, வென்றி - வெற்றி

தாழிசை - 4.

அண்டமெலாம் .....................கற்றாவால்

அண்டமெலாம் உண்டயென்பார் அறியாதார் - உன் ஆற்றலைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள், நீ எல்லா அண்டங்களையும் உண்டாய் என்று பெருமையோடு சொல்லுவார்கள்.

ஆங்கவைநீ உண்டருளும் காலத்துக் கொருதுற்றுக் கற்றாவால் - அவ்வண்டங்களை நீ உண்டருளிய காலத்தில் உன் ஒருவாய் கவளத்திற்கே அது போதாததாக இருந்தது.

எம்பெருமானின் ஒருவாய் கவளத்திற்கே அண்டங்கள் அனைத்தும் போதாதாக இருந்தது என்பதால், அச்செயலை அரிதானது என்று கூறல் அப்பெருமானின் பெருமைக்க ஏற்றதாகாது என்கிறார் ஆசிரியர்.

"மண்ணும் மலையும் மறிகடலும் மாருதமும்
விண்ணும் விழுங்கியது மெய்யென்பர் – எண்ணில்
அலகளவு கண்டசீ ராழியாய்க்கு அன்றிவ்
உலகளவும் உண்டோஉன் வாய் ?"
-(இயற்பா – முதல் திருவந்தாதி :10)

என்ற பாசுரத்தில் பூமியும் மலைகளும் கடல்களும் காற்றும் வானமும் ஆகிய இவற்றையெல்லாம் ஆராயுமளவில், சிறிய திருவாயால் உலகுண்ட அக்காலத்தில் அவ்வாயும் உலகங்களின் பரப்புக்கு ஏற்றவாறு பெரியதாக இருந்ததோ ? என வியக்கிறார் பொய்கையாழ்வார். திருமாலிருஞ் சோலையின் சிறப்பைக் கூறுமிடத்துப் பெரியாழ்வார்,

"கோட்டுமண் கொண்டிடந்து குடங்கையில்மண் கொண்டளந்து
மீட்டும தூண்டுமிழ்ந்து விளையாடும் விமலன்மலை"
- (பெரியாழ்வார் திருமொழி 4:3:9)

என்று பெருமானின் அருளிச் செயல்களில் உலகுண்ட செய்தியை எடுத்துரைப்பர். "ஆரே யறிவார் அனைத்துலகும் உண்டமிழ்ந்த பேராழி யான்தன் பெருமையை " (இயற்பா – நான்முகன் திருவந்தாதி :73) என்று திருமழிசையாழ்வார், எம்பெருமானின் உண்டுமிழ்ந்த செயலைப் போற்றுவார். 'மூவுல குண்டுமிழ்ந்த முதல்வ !' (திருமாலை : 1) என்று தொண்டரடிப் பொடியாழ்வாரும், 'ஆருயிரேயோ அகலிட முழுதும் படைத்திடந் துண்டு மிழ்ந்தளந்த பேருயிரேயோ' (திருவாய்மொழி 8:1:5) என்று நம்மாழ்வார் இதனை எடுத்துரைப்பர். (துற்று - ஒரு பிடி அளவு கொண்ட உணவு).

நாற்சீர் ஈரடி அம்போதரங்கம்

தாழிசை - 1

1. நஞ்சமும்................ஆயினை.

நஞ்சமும் அமுதமும் நரகும் வீடுமாய் - உயிரைக் கொல்ல வல்லதான விடமாகவும், சென்ற உயிரை மீட்கவல்ல அமுதமாகவும், துன்பத்தைத் தரக்கூடிய நரகமாகவும் பேரின்பத்தை வழங்கக் கூடிய சுவர்க்கமாகவும் விளங்குகின்றாய்.

வஞ்சமும் ஞானமும் மறப்பும் ஆயினை - மற்றவர்களை ஏமாற்றும் வஞ்சனையாகவும் உள்ளதன் தன்மையை அறியும் அறிவாகவும், அந்தத் தன்மையை அறிந்தபின் மறதியாகவும் ஆனவனாக இருக்கின்றாய்.

ஒன்றுக்கொன்று எதிரெதிரான பொருள்களை இறைவனின் தன்மைகளாகக் கூறுவது பெரியோர் இயல்பு. இதனால் எம்பெருமானை 'விருத்த விபூதியன்' என்பர் அறிஞர்.

"ஆணினோடு பெண்ணுமாகி அல்ல வோடு நல்லவாய்
ஊணொ டோசை ஊறுமாகி ஒன்ற லாத மாயையாய்
பூணி பேணும் மாயனாகிப் பொய்யி னோடு மெய்யுமாய்
காணி பேணும் மாணியாய்க் கரந்து சென்ற கள்வனே."

என்ற பாசுரத்தில் திருமழிசைபிரான், ஆண் - பெண், அல்ல - நல்ல, ஊண், ஓசை, ஊறு - மாயை, பொய் - மெய் முதலான இறைவனின் மாறுபட்டத் தன்மைகளைக் கூறுகிறார்.

"நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்"
- (திருவாய்மொழி 6:3:1)

எம்பெருமான் விளங்குகிறார் என்பர் நம்மாழ்வார். மேலும், நினைப்பாகவும் மறைப்பாகவும் உண்மையாகவும் பொய்மையாகவும் எம்பெருமான் இருக்கின்றார் என்பதை, 'எண்ணமாய் மறப்பாய்

உண்மையாய் இன்மையாய் அல்லனாய் திண்ண மாடங்கள்சூழ் திருவிண்ணகர் சேர்ந்தபிரான்'' (திருவாய்மொழி 6:3:4) என்று எடுத்தோதுவர்.

தாழிசை 2

இருவினை..........ஆயினை

திருவினை பகுதியும் இன்பமும் துன்பமும் - நல்வினை தீவினை என்னும் இருவினைகளாகவும் அவற்றால் உண்டாகும் இன்பதுன்பமும்

கருணை வெகுளியும் கருத்தும் ஆயினை - அருளாகவும், கோபமாகவும் எண்ணங்களாகவும் நீ விளங்குகின்றாய்.

எம்பெருமானின் மாறுபட்ட தன்மைகளை இங்கு எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

எம்பெருமான் புண்ணியம் - பாவம் ஆகியவையாகவும் இன்பம் - துன்பம் ஆகியவையாகவும் அருள் - கோபம் ஆகியவையாகவும் எண்ணங்களாகவும் விளங்கும் தன்மைகளை நம்மாழ்வார்,

"புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவென் றிவையாய்
எண்ணமாய் மறப்பாய் உண்மையாய் இன்மையாய் அல்லனாய்"
- (திருவாய்மொழி 6:3:4)

என்றும், 'கண்ட இன்பம் துன்பம் கலக்கங்களும் தேற்றமுமாய்'' (திருவாய்மொழி 6:3:2) என்றும், 'மூவுலகங்களுமாய் அல்லனாய் உகப்பாய் முனிவாய்' (திருவாய்மொழி 6:3:6) என்றும் எடுத்தோதுகின்றார்.

இருவினை - நல்வினை, தீவினை ஆகிய இரண்டு வினைகள், வெகுளி - கோபம்.

## மூச்சீர் ஓரடி அம்போதரங்கம்

1. அலைகடல் ....................கலக்கினை

அலைகடல் வயிறு கலக்கினை - அலைகின்ற கடலினது நடுவிடத்தைக் கலக்கமுறும்படி செய்தாய்.

எம்பெருமானின் பத்து அவதாரங்களில் (எடுக்க வேண்டிய கல்கி அவதாரத்தோடு சேர்த்து) கூர்ம அவதாரம், இராம அவதாரம் ஆகிய அவதாரங்களில் கடலைக் கலக்கிய நிகழ்வுகள் நடந்தன.

***கூர்ம அவதாரத்தில் பாற்கடலைக் கடைந்தது.***

தேவர்கள் அமிர்தத்தைப் பெறுவதற்காக மந்தரமலையை மத்தாகவும் வாசுகி பாம்பைக் கடைகயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்த போது, மத்தாக இருந்த மந்தரமலை சற்று நேரத்தில் தண்ணீரில் மூழ்கத் தொடங்கியது. நீரில் மூழ்க மூழ்க மலையை அசைக்க இயலவில்லை. அதனால் தேவர்களும் அசுரர்களும் செயலற்று நிற்பது கண்ட திருமால், பெரியதொரு ஆமையின் வடிவம் கொண்டார். அம்மலையைத் தன்முதுகின் நடுப்பகுதியான மேடான ஓட்டின்மீது நிறுத்திக் கொண்டு, மந்தரமலை சுழல உதவினார். சுழன்ற வேகத்தில் மேலே பிடிப்பு இல்லாததால் மலை சாயத் தொடங்கியது. உடனே திருமால், விண்ணைத் தொடும் உருவத்தை எடுத்துக் கொண்டு, மலை உச்சியைத் தன் கைகளால் சாய்ந்துவிடாமல் பிடித்துக் கொண்டார். பின்னர், மந்தரமலை மத்துபோல் சுழன்று அமிர்தம் தோன்றியது.

இங்கு கடல் கடையப்பட்டதை அலைகின்ற கடலினது நடுவிடமானது கலக்கமுறும்படி எம்பெருமான் செய்ததாகக் கூறுகிறார் ஆசிரியர்.

*"மன்னும் வடமலையை மத்தாக மாசுணத்தால்*
*மின்னும் இருசுடரும் விண்ணும் பிறங்கொளியும்*
*தன்னி னுடனே சுழல மலைதிரித்தாங்*
*கின்னமுதம் வானவரை ஊட்டி அவருடைய*
*மன்னும் துயர்கடிந்த வள்ளலை"*

- (பெரிய திருமடல்:60)

என்று இந்நிகழ்வை விளக்குகின்றார் திருமங்கையாழ்வார்.

"மலைமுகடு மேல்வைத்து வாசுகியைச் சுற்றி
தலைமுகடு தானொருகை பற்றி - அலைமுகட்
டண்டம்போய் நீர்தெறிப்ப அன்றுகடல் கடைந்தான்
பிண்டமாய் நின்ற பிரான்."

- (இயற்பா - மூன்றாம் திருவந்தாதி : 46)

என்று எடுத்தோதுகிறார் பேயாழ்வார்.

"பாட்டுக்கும் முத்தமிழ் வில்லிபுத் தூர்வரும் பாவைகுழற்
சூட்டுக்கம் நல்லவர் தென்னரங் கேசர், தொடுகடல்வாய்
மோட்டுக் கமடத் திருவுரு வாகி முதுமுதுகிற்
கோட்டுச் சயிலம் உழுவதென் னாத்துயில் கொண்டரே"

-(திருவரங்கமாலை : 23)

என்ற பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் திருவரங்கமாலையில் கூர்ம அவதாரம் குறித்துக் கூறியிருப்பது இங்கு எண்ணத்தக்கது.

***இராம அவதாரத்தில் கடல்வழி விட்டது.***

இராமாவதாரத்தில் சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனின் இருப்பிடத்தை அடைய, இலங்கையை நோக்கி இராமபிரான் வானரச் சேனையோடு சென்றான். வழியில் குறுக்கிட்ட கடலைக் கடந்து செல்ல, வருணன் வழிவிடாமையால் கடலைக் தன் பிரம்மாஸ்திரத்தினால் வற்றச் செய்யும் பொருட்டுச் சினந்து சரங்களைத் தொடுத்தான். பின்னர் வருணனின் வேண்டுகோளுக்கிணங்க, வானரங்களைக் கொண்டு, மலைகளைக் கொண்டு அடுக்கி, சேதுபந்தனத்தைக் கட்டினான்.

கம்பர், கம்ப இராமாயண யுத்தகாண்டத்தில், இராமன் அம்பு தொடுத்து கடலை வற்றச் செய்த நிகழ்வை,'வருணனை வழிவேண்டு படலத்தில்' விரிவாக எடுத்துரைத்துள்ளார். இராமனின் கூர்மையான அம்புகள் குறுகிய வடிவத்தைக் கொண்ட அகத்தியரைப் போல, நெருங்கிய செம்மையுடையனவாகவும், தீயை உண்டாக்குவனவாகவும், தக்கவழியில் செல்லுவனவாகவும், தவத்தில் நீண்டனவாகும் மிகுந்த கோபம்

உடையதாவையாதலால், பலவடிவங்களைக் கொண்டு கடலின் நீரைக் குடித்தன என்பதை,

"செறிவுறு செம்மைய தீயை யோம்புவ
நெறியுறு செலவின தவத்தின் நீண்டன
உறுசினம் உறப்பல உருவு கொண்டன
குறுமுனி எனக்கடல் குடித்த கூர்ங்கணை"
- (கம்ப.யுத்த. வரு:45)

என்கிறார். அழகிய வில்லை வளைத்து, கொலை அம்புகளைக் கொண்டு, வருணன் முதலில் 'அலட்சியம்' காட்டியது குறித்து சினந்து மறிகடல் நெறிபடச் செய்தான் இராமன். பின்னர் கோபம் தணிந்து வானர வீரர்களின் உதவியுடன் சேது அணையைக் கட்டினான். இதனை,

"கரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரிந்த
கொடுமையில் கடுவிசை அரக்கன்
எரிவிழித் திலங்கு மணிமுடி பொடிசெய்
திலங்கைபாழ் படுப்பதற்கு எண்ணி
வரிசிலை வளைய அடுசரம் துரந்து
மறிகடல் நெறிபட மலையால்
அரிகுலம் பணிகொண்டு அலைகடல் அடைத்தான்
அரங்கமா நகர்அமர்ந் தானே."
- (பெரிய திருமொழி 5:7:7)

என்று பாசுரத்தில் இந்நிகழ்வினைத் திருமங்கையாழ்வார் விரிவாக எடுத்தோதுவர்.

கடல்வழி விடவேண்டுமென்று வேண்டிய கைகளின் மேல் அலைகள் மோதி நிற்க, மறைந்து கிடந்த அக்கடலுக்கு உரிய தேவதையான வருணனைக் கலங்கி விடும்படி, அம்பைத் தொடுத்துவிட்ட கைகளைக் கொண்டவன் எம்பெருமான்.

"பரந்திட்டு நின்ற படுகடல் தன்னை
இரந்திட்டக் கைமேல் எறிதிரை மோத
கரந்திட்டு நின்ற கடலைக் கலக்க
சரந்தொட்ட கை................"
- (பெரியாழ்வார் திருமொழி 1:6:7)

என்று இதனை பெரியாழ்வார் எடுத்துரைப்பர்.

அவுணரை.....................அடக்கினை

அவுணரை மதுகை அடக்கினை - அசுரர்களின் வலிமையைக் கெடச் செய்து அவர்களைக் கொன்றாய்.

எம்பெருமான், தீய அசுரர்களை அழிக்கும் பொருட்டுப் பல அவதாரங்களை எடுத்து, அவர்களை அழித்த செய்தியைக் குறிப்பிடுகிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

அசுரர்களை அழிப்பதற்காக, எம்பெருமான் எடுத்த அவதாரங்களைத்,

*"தேவுடைய மீனாய் ஆமையாய் ஏனமாய் அரியாய்க் குறளாய்*
*மூவுருவின் இராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய் முடிப்பான் கோயில்*
-(பெரியாழ்வார் திருமொழி 4:9:9)

என்று வரிசைப்படுத்தித், திருவரங்கனைப் போற்றுகின்றார் பெரியாழ்வார்.

மச்சாவதாரத்தில் மீனாக வடிவெடுத்து சோமுகனையும் வராக அவதாரத்தில் பன்றியாக வடிவெடுத்து இரணியாட்சனையும், நரசிம்மாவதாரத்தில் இரணியனையும் குறள்வடிவினாக வாமன அவதாரத்தில் மாவலிச் சக்கரவர்த்தியையும் பரசுராமன் அவதாரத்தில் கார்த்த வீரியனையும், தசரத இராமன் அவதாரத்தில் இராவணனையும், பலராம அவதாரத்தில் கண்ணன் அவதாரத்தில், கம்சன், சகடாசுரன், வத்சாசுரன், தேனுகாசுரன், கேசி, கபிதாசுரன், பகாசுரன், அரிட்டாசுரன் முதலான் அசுரர்களை அழித்தவன் எம்பெருமான்.

3. மலைதலை...................எடுத்தனை.

மலைதலை கவிழ எடுத்தனை - கோவர்த்தன கிரியைத் தலைகீழாக எடுத்துக் குடையாகப் பிடித்தாய்.

எம்பெருமான், ஆயர்ப்பாடியில் இந்திரனால் கல்மழை பொழிந்தபொழுது, உயிர்களைக் காக்க, கோவர்த்தனகிரியைத் தலைக்கீழாக எடுத்துக் குடையாகப்பிடித்து செய்தியைக் கூறுகிறார் ஆசிரியர்.

### கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்த வரலாறு (கிருஷ்ணாவதாரத்தில்)

திருவாய்ப்பாடியில் இருந்து ஆயர்கள், இந்திரன் மழையைப் பொழிவிப்பதால் அவனைக் கடவுளாகப் போற்றி ஆண்டுதோறும் விழா நடத்திப் பொங்கலிட்டுப் பூசைசெய்து வந்தனர். கண்ணபிரான், இந்திரனுக்குப் பூசை செய்வதைத் தடுத்து மலைக்குப் பூசை செய்யும்படி செய்தான். இதனால் இந்திரவிழா தடைபட்டது. கோபம் கொண்ட இந்திரன், மேகங்களை ஏவி, ஏழு நாட்களுக்குக் கல்மாரி பொழியச் செய்து பிருந்தாவனத்தை மூழ்குவிக்கும்படி செய்தான். அப்பொழுது கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்துப் பசுக்கூட்டங்களையும் ஆயர்களையும் பாதுகாத்தான்.

இந்திரனுக்கு விழாயெடுப்பதற்காகச் செய்யப்பட்டுப் பலபல வண்டிகளில் கொண்டு வரப்பட்ட உணவையெல்லாம் பூதவடிவு எடுத்து எம்பிரான் வாரி உண்ட செய்தியை,

"ஆயிரங் கண்ணுடை இந்திர னாருக்கென்று
ஆயர் விழவெடுப்ப
பாசன நல்லன பண்டிகளால் புகப்பெய்த
அதனை யெல்லாம்
போயிருந்து அங்கொரு பூதவடிவு கொண்டு
உன்மகன் இன்றுநங்காய்
மாயன் அதனை எல்லாம் முற்றவாரி
வளைத்துண் டிருந்தான்போலும்"
– (பெரிய திருமொழி 10:7:7)

என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார், யசோதை பிராட்டியிடம், ஆய்ச்சியர்கள் வந்து முறையிடும்பொழுது கூறுவதாக அமைத்துள்ளார். இந்நிகழ்வை நம்மாழ்வார்,

"மேய்நிரை கீழ்புக மாபுர ளச்சுனை
வாய்நிறை நீர்பிளி றிச்சொ ரியஇன

ஆநிரை பாடிஅங்கே யொடுங்க அப்பன்
தீமழை காத்துக் குன்ற மெடுத்தானே."
- (திருவாய்மொழி 7:4:10)

என எடுத்தோதுகின்றார்.

இன்றும் கோவர்த்தனம் என்ற மலையை பிருந்தாவனத்தின் எல்லையில் காணலாம். ஏதோ ஒரு இயற்கையின் மாற்றத்தால் உயரே கிளப்பப்பட்டு மறுபடியும் கீழே தள்ளப்பட்டது போல இம்மலை காணப்படுகிறது என்கிறார் பேராசிரியர் கு. அருணாசலக்கவுண்டர்.[7]

6. மததட...............வதைத்தனை

மததட களிறு வதைத்தனை - கம்சனால் அனுப்பப்பட்ட பெரிய யானையாகிய குவலயாபீடத்தைக் கொன்றாய்.

***குவலயாபீடத்தைக் கொன்ற வரலாறு (கண்ணன் அவதாரத்தில்)***

கண்ணன், பலராமன் இருவரையும் கொல்லுவதற்காக மாமனான கம்சன் செய்த சூழ்ச்சிகளில் ஒன்றாகத் தான் தனுர் யாகம் செய்யப்போவதாக அறிவித்தான். அதற்குரிய பொருள்களைக் கண்ணனின் வளர்ப்புத் தந்தையாகிய நந்தகோபரைக் கொண்டுவரச் செய்து உடன்வரும் கண்ணனையும் பலராமனையும் கொல்ல எண்ணினான். கண்ணனையும் பலராமனையும் கொல்ல, அரண்மனையின் வாயிலில் 'குவலயாபீடம்' என்னும் பெயருடைய யானை பெரிய இரும்பு உலக்கை ஒன்றுடன் நிறுத்தப்பட்டிருந்தது. அங்கு வந்த இருவரையும் கொல்ல, ஆயிரம் யானைகளின் பலம்கொண்ட மதம்பிடித்த அந்த யானை இரும்பு உலக்கையை அவர்களின்மேல் எறிந்தது. ஆனால் கண்ணன், அதன் வாலைப்பற்றி இழுத்துக் களைப்படையும்படி செய்து, அதன் தந்தங்களைப் பற்றி வளைத்துக் கீழே

.................................................................................

1.தமிழ்ப் பண்பாட்டில் வைணவம். பக்.95

தள்ளினான். கால்களில் அதனை மிதித்துக் கொண்டு, தந்தங்களைப் பிடுங்கி எடுத்து, அத்தந்தங்களாலேயே அடித்துக் கொன்றான்.

பெரியகரிய மலை போன்றதும் மிகுதியாகக் கொண்ட கோபத்தையுடையதும் மிக்க வலிமையுடையதுமான குவலயாபீடம் என்னும் கம்சனது யானை மாண்டு ஒழியும்படி சீறி அருளியவன் எம்பெருமான் என்பதை,

"ஆவரிவை செய்தறிவா ரஞ்சனமா மலைபோலே
மேவுசினத் தடல்வேழம் வீழ முனிந்து"
- (பெரியதிருமொழி 3:3:7)

எனக் குறிப்பிடுவர் திருமங்கையார்.

"பொற்றையுற்ற முற்றல்யானை போரெதிர்ந்து வந்ததை
பற்றியுற்று மற்றதன் மருப்பொசித்த பாகனூர்"
-(திருச்சந்த விருத்தம் : 52)

என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார், மலைகளிலே திரிந்து வந்த குவலயாபீட யானையானது போர் செய்வதற்கு எதிர்ந்து வர, அந்த யானையை உறுதியாகப் பிடித்துக் கொண்டு அதனுடைய தந்தங்களை முறித்தெடுத்த பாகன் போன்ற கண்ணபிரான் என்று எடுத்தோதுவர். 'வெங்கட்டிண் கறிறடர்ந்தாய் வித்துவக்கோட் டம்மானே' (பெருமாள் திருமொழி 5:5) என்பார். குலசேகராழ்வார். கொலையானைப் போர்க்கோ டொசித்தனவும் (இயற்பா – முதல் திருவந்தாதி 27) என்பார் பெரியாழ்வார். "துங்க மதக்கரியின் கொம்பு பறித்தவனே" (பெரியாழ்வார் திருமொழி 1:5) என்று பெரியாழ்வார் இதனைச் சுட்டுவர்.

## இருசீர் ஓரடி அம்போதரங்கம்

1. 'மண்ணை உண்டனை' – மண்ணைத் தின்றாய்

### மண்ணை உண்ணுதல்

கிருஷ்ணாவதாரத்தில் குழந்தையாக இருந்த காலத்திலும் பிரளயகாலத்திலும் மண்ணை உண்டான் எம்பெருமான்.

தன்னை யசோதைப் பிராட்டியாகப் பாவனை செய்து கொண்டு, கண்ணனுடைய மேனியழகைக் கண்டு அனுபவித்துப் பாடும் பெரியாழ்வார் திருமொழியில் பெரியாழ்வார், பூமியையும், மலையையும், கடலையும் மற்றமுள்ள ஏழு உலகங்களையும் உண்ணும்போது, கண்ணனாகிய குழந்தைக்கு அழகைத்தரும் நிறத்தைக் கொண்டிருக்கின்ற மகர குண்டலங்களின் அழகைக் காண,

"மண்ணும் மலையும் கடலும் உலகேழும்
உண்ணுந் திறத்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு
வண்ணம் எழில்கொள் மகரக் குழையிவை
திண்ணம் இருந்தவா காணீரே சேயிழையீர்!
வந்து காணீரே!
- (பெரியாழ்வார் திருமொழி 1:2:18)

என்று அழைக்கிறார்.

பூமியையும், மலையையும், பொங்குகின்ற கடலையும், காற்று, விண் ஆகிய அனைத்தையும் சிறுபிள்ளையாய் இருந்து கொண்டு, உண்டு நின் வயிற்றுக்குள் அடக்கியது மெய்யென்பர் சான்றோர். எண்ணற்ற அருளிச்செயல்புகள் புரியும், திருச்சக்கரம் ஏந்தும் பெருமையுடைய உன்னுடைய வாய் இவ்வுலகத்தின் அளவு மட்டுமோ இருந்தது என்பது கண்டு வியந்து,

"மண்ணும் மலையும் மறிகடலும் மாருதமும்
விண்ணும் விழுங்கியது மெய்யென்பர் – எண்ணில்
அலகளவு கண்ட சீராழி யாய்க்கன்றிவ்
வுலகளவு முண்டோ உன்வாய்"
- (இயற்பா - முதல்திருவந்தாதி:10)

என்ற பொய்கையாழ்வார் தன் பாசுரத்தில் எடுத்துரைப்பர்.

ஏழுதீவுகளோடு கூடிய பூமிக்கும் ஏழு கடல்களுக்கும் ஏழு மலைகளுக்கும் தலைவனாய் இருந்து கொண்டு பிரளயம் வந்த காலத்தில் அழகுமிக்க உலகங்கள் ஏழையும் தன் வயிற்றில் அடக்கியவன் என்பெருமான் என்பதைப், 'பாரெழு கடல்எழு மலைஎழுமாய்ச் சீர்வுலகு

ஏழும்எல்லாம் ஆர்கெழ வயிற்றினில் அடக்கி'(பெரியதிருமொழி 6:1:5) என்று திருமங்கையாழ்வார் எடுத்தோதுகின்றார். மேலும் பூமி முழுவதும் குளிர்ந்து பரவியிருக்கிற அலைகள் ததும்ப மகாப்பிரளய காலம் ஏற்பட்டபொழுது இவ்வுலகத்தார்க்கு இனிமேல் பற்றுக்கோடு யாரும் இல்லை என்று உலகம் ஏழினையும் முறையால் வாங்கி திருவயிற்றில் வைத்து அனைவரையும் காத்தவர் என்பதையும்,

"பனிப்பரவைத் திரைத்ததும்ப பாரெல்லாம்
நெடுங்கடலே யான காலம்
இனிக்களைகண் இவர்க்கில்லை என்றுலகம்
ஏழினையும் ஊழில் வாங்கி
முனித்தலைவன் முழங்கொளிசேர் திருவயிற்றில்
வைத்தும்மை உய்யக் கொண்ட
கனிக்களவத் திருஉருவத்து ஒருவனையே
கழல்தொழுமா கல்லீர்களே"
- (பெரியதிருமொழி 11:6:4)

என்றும்,

"மண்ணாரும் விண்ணாரும் வானவரும்
தானவரும் மற்றும் எல்லாம்
உண்ணாத பெருவெள்ளம் உண்ணாமல்
தான்விழுங்கி உய்யக் கொண்ட
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன்
கழல்சூடி அவனை யுள்ளத்து
எல்லாத மானிடத்தை எண்ணாத
போதெல்லாம் இனியவாறே"
- (பெரியதிருமொழி 11:6:7)

என்றும் திருமங்கையாழ்வார் அழகுற எடுத்தோதியுள்ளார்.

2. வெண்ணெய் உண்டனை - வெண்ணெய் உண்டாய்.

கிருஷ்ணாவதாரத்தில் மண்ணை உண்டு, பேய்ச்சியாகிய பூதனையின் நச்சுப்பாலை உண்டவன் கண்ணன். இவற்றுக்கெல்லாம் மாற்றாக இருக்கும்பொருட்டு வெண்ணெயை உண்டு, அதனால் ஆய்ச்சியர்களின் கோபத்திற்கு ஆளாகி கயிற்றினால் கட்ட, தான் கட்டுண்டு இருந்தான் என்று கூறுவர். இதனை,

"மண்ணுண்டும் பேய்ச்சி முலையுண்டும் மாற்றுதாய்
வெண்ணெய் விழுங்கவெகுண் டாய்ச்சி – கண்ணிக்
கயிற்றினால் கட்டத்தான் கட்டுண் டிருந்தான்
வயிற்றினோ டாற்றா மகன்."

-(இயற்பா - மூன்றாம் திருவந்தாதி :91)

என்பார் பேயாழ்வார்.

கண்ணனுடைய இளம்பருவ விளையாட்டைக் கூறப்புகும் திருமங்கையாழ்வார், யசோதை ஆய்ச்சியரிடம், நங்கைகளே ! தெளிந்த திருப்பவளத்தையொத்த வாயையுடைய சிறுபிள்ளையானவன், உறியின் மேல் உள்ள பானைகளிலே நிரப்பி வைக்கப்பட்டிருந்த வெள்ளிமலைபோல் காட்சியளித்த, வெண்ணெயை வாரி விழுங்கிவிட்டுக் கள்ளத் தூக்கம் தூங்குகிறான் வந்து பாருங்கள் என்பதாக,

"தெள்ளியவாய்ச் சிறியான் நங்கைகாள் !
உறிமேலைத் தடாநிறைந்த
வெள்ளிமலை இருந்தாலொத்த வெண்ணெயை
வாரி விழுங்கியிட்டுக்
கள்வ னுறங்குகிறான் வந்து காண்மின்கள்"

- (பெரியதிருமொழி:10:7:3)

என்று எடுத்தோதுகிறார் திருமங்கையாழ்வார். இதனை,

"முழுதும் வெண்ணெ அளைந்துதொட் டுண்ணும்
முகிழ்க்கு ளஞ்சிறுத் தாமரைக் கையும்
எழில்கொள் தாம்புகொண் டடிப்பதற் கெள்கு
நிலையும் வெண்தயிர் தோய்ந்தசெவ் வாயும்
அழுகையும் அஞ்சி நோக்குமந் நோக்கும்
அணிகொள் செஞ்சிறு வாய்நெளிப் பதுவும்
தொழுகை யும்இவை கண்டஅ சோதை
தொல்லை இன்பத்து இறுதிகண் டாளே !"

-(பெருமாள் திருமொழி 7:8)

.......................................................................................

1. விண்டனை

என்று இச்செயல்களையெல்லாம் நேரில் கண்ணால் கண்டு அனுபவித்த யசோதைப் பிராட்டியின் பரமானந்தினுடைய எல்லையைக் காணப் பெற்றேன் என்று பேரானந்தத்தை எடுத்தோதுகிறார் குலசேகராழ்வார்.

3. மருது இடந்தனை -- மருத மரங்களை முறித்தாய்.

***மருத மரங்களை முறித்த வரலாறு.***

குபேரனுக்கு நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் இரண்டு பிள்ளைகள் இருந்தனர். இருவரும் கைலாசத்தில் சிவபெருமானிடத்துப் பணியாற்றியதால் கர்வம் உடையவர்களாக விளங்கினர். ஒரு நாள் 'வாருணி' என்னும் மதுவை அருந்தி கங்கை ஆற்றிற்குச் சென்று ஆடையின்றி நீராடிக் கொண்டிருந்த பெண்களோடு தாங்களும் சேர்ந்து நீர் விளையாட்டு விளையாடினர். அப்பொழுது அங்கு நாரத மகரிஷி வரவே, நீரில் விளையாடிக் கொண்டிருந்த பெண்கள் கரையேறித், தங்கள் ஆடைகளை அணிந்து கொண்டு அங்கிருந்து சென்றனர். மதுமயக்கத்தில் இருந்த நளகூபரனும் மணிக்கிரீவனும் நாரதரைக் கண்டு எவ்வித அச்சமும் அடையவில்லை. இதனால் தேவ முனிவராகிய நாரதர் இருவரையும் மருத மரங்களாக இருக்கும்படி சபித்தார். பின்னர், தம் தவற்றுக்காக வருந்திய அவ்விருவருக்கும் கண்ணனால் சாப விமோசனம் கிடைக்கும் என்று கூறி அருள் புரிந்தார்.

நிருவாணத் துடன்குளித்துப் பனைகள் போல
நின்றமையாற் சுரர்கள்முனி சாபத் தாலே
மருதாகி நிற்குமிடத் துன்னை யாயர்
மதிக்காமல் வெண்ணெய்க்கா உரலிற் கட்ட
வெருவாம லேதவழ்ந்து மருதைக் கட்டி
விறற்திகிரி யாவிரலா லறுத்து வீழ்த்தி
இருளான சாபந்தீர்த் தவரைப் பண்டில்
ஏற்றமுற வைத்தனையே எம்பி ரானே.

- (எம்பிரான் சதகம் :77)

என்று கோபால கிருஷ்ணதாசர் விளக்குவர்.

கண்ணனின் குழந்தைப் பருவத்தில் வெண்ணெயை எடுப்பதற்காக உரலில் ஏறியதைக் கண்டு கோபித்த யசோதை, கண்ணனைக் கயிற்றில் கட்டி மற்றொரு முனையை உரலில் கட்டினாள். கண்ணன் மெதுவாகத் தவழ்ந்தபடி தோட்டத்தின் பக்கம் தவழ்ந்துவர, பிணித்திருந்த கயிற்றின் மறுமுனையில் இருந்த உரலும் இழுத்துவரப்பட்டு மருதமரங்களுக்கு இடையில் மாட்டிக் கொண்டது. கண்ணனால் உரல் இழுக்கப்பட்டபோது, இரண்டு மருத மரங்களும் முறிந்து கீழே விழுந்தன. அப்பொழுது இதுநாள்வரை நாரதரின் சாபத்தால் மருத மரங்களாக நின்ற நளகூபரனும் மணிக்கிருவனும் சாப விமோசனம் அடைந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியை பெரியாழ்வார் தம் பெரியாழ்வார் திருமொழியில்,

"பெருமா வுரலில் பிணிப்புண்டிருந்து அங்கு
இருமா மருதம் இறுத்தஇப் பிள்ளை"
- (பெரியாழ்வார் திருமொழி 1:2:10)

என்பர். வெகு தூரம் வழிநடந்து போய் கங்கை முதலிய தீர்த்தங்களில் நீராடாமல் நாரத சாபத்தால் மரமாய் நின்ற இரட்டை மருத மரத்தை முறித்துத் தள்ளிய கண்ணபிரானைக் குறிப்பிடும் ஆண்டாள்,

"போய்த்தீர்த்தம் ஆடாதே நின்ற புணர்மருதம்
சாய்த்தீர்த்தான் கைத்தலத்தே ஏறிக் குடிகொண்டு
சேய்த்தீர்த்த மாய்நின்ற செங்கண்மால் தன்னுடைய
வாய்த்தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய் வலம்புரியே"
~ (நாச்சியார் திருமொழி~7:6)

எனத் தன்பாசுரத்தில் குறிப்பிடுவதைக் காணலாம்.

4. எருது அடர்ந்தனை – ஏழு எருதுகளோடு சண்டையிட்டு அவற்றின் வலிமை அடக்கினாய்.

கண்ணபிரானுக்குத் தேவிமார் பலர் இருந்தாலும் ஆய்ப்பாடியிலே நப்பின்னையே மிகச் சிறந்த தேவியாவாள். வடமொழிப் புராணங்களில் 'பின்னை' என்ற பெயர் சுட்டப்படவில்லை. வடமொழியினர்

கண்ணனை மணந்த தேவியர்களான, ருக்மணி, சத்யபாமை, ஜாம்பவதி, காளிந்தி, மித்ரவிந்தை, சத்யவதி, பத்திரை, லட்சுமணை ஆகியோரை அட்டமகிஷிகள் என்பர். கண்ணனின் இந்த எட்டு மனைவியரில் சத்யவதி என்பவள், 'நக்னஜித்' என்ற அரசனின் மகள். இவள் தந்தை, தன் பசுமந்தையை மேய்த்து வருபவனும், யசோதையின் சகோதரனுமான கும்பாண்டானிடமுள்ள ஏழு எருதுகளையும் தழுவிப் பிடிப்பவனுக்குத் தன்மகள் சத்தியவதியை மணம் செய்விப்பதாக அறிவித்தான். அந் எருதுகளுக்கு அஞ்சி அரசர்கள் ஒதுங்க, கண்ணன் முன்வந்து ''கன்யாசுக்லமாக' வைக்கப் பெற்ற ஏழு எருதுகளையும் அடக்கி சத்யவதியை மணந்தான் என்று பாகவதம் கூறுகிறது. 'பின்னை' ஆயர் குலமகள், சத்யவதியோ சத்திரிய மகள். ஆயருள் ஒரு பிரிவினர் சத்திரியராகக் கருதப்பட்டனர் போலும் என்பார் பேரா.கு. அருணாசலம்.

எம்பொருமான் ஒப்பற்ற நப்பின்னையோடும் பூமிப்பிராட்டியோடும் திருமகளோடும் கூடி வருகின்றவன் என்பதை,

"கருமுகில் போல்வதோர் மேனி கையன ஆழியும் சங்கும்
பெருவிறல் வானவர் சூழ ஏழுல கும்தொழ தேத்த
ஓர்மகள் ஆயர்மடந்தை ஒருத்தி நிலமகள் மற்றை
திருமக ளோடும் வருவான் சித்திர கூடத்துள் ளானே."
- (பெரியதிருமொழி 3:3:9)

என்பார் திருமங்கையாழ்வார். அம்மூவருள்ளும் நப்பின்னைப் பிராட்டியை அடைவதற்காக வலிய காளைகளை வலியடக்கி அவளை மணந்து கொண்டதை,

"வாராரும் முலைமடவாள் பின்னைக் காகி
வளைமருப்பின் கடுஞ்சினத்து வன்தாள் ஆர்ந்த
காரார்திண் விடையடர்ந்து வதுவை யாண்ட
கருமகில்போல் திருநிறத்தென் கண்ணன் கண்டீர்"
- (பெரியதிருமொழி 4:4:4)

என்று தன் பாசுரத்தில் விரிவாக எடுத்துரைப்பர். நப்பின்னையோடு எம்பெருமான் மகிழ்ந்திருந்ததைத் திருத்தக்கதேவர்,

"நிலமகட்குக் கேள்வனும் நீள்நிறை நப்பின்னை,
இலவலர்வாய் இன்னமிர்தம் எய்தினான் அன்றே."
- (சீவக. சிந்; கோவிந். இலம்.74)

என்று எழிலுற எடுத்தோதுவர் திருத்தக்கதேவர்.

5. உண்ணி றைந்தனை - எல்லாவற்றிலும் முழுமையாக நிறைந்திருக்கின்றாய்.

எம்பெருமான், உலகிலுள்ள அனைத்துப் பொருள்களிலும் நிறைந்து விளங்குபவன். யாவர்க்கும் சுவாமியாய், பூமியுள்ளும், எட்டுத் திசைகளில் உள்ள எல்லாப் பொருள்களிலும் நிறைந்து இருப்பவனாய் விளங்குகின்றான். வேதங்களாக விளங்கி, அவ்வேதங்களின் உட்பொருளாகவும் அனைத்திலும் நிறைந்து விளங்குவதோடு இறைவனாய் என் உள்ளத்துள்ளும் நிறைந்திருக்கின்றான் என்பதை,

"இறையாய் நிலனாகி யெண்டிசையும் தானாய்
மறையாய் மறைப்பொருளாய் வானாய் - பிறைவாய்ந்த
வெள்ளத் தருவி விளங்கொலிநீர் வேங்கடத்தான்
உள்ளத்தி னுள்ளே உளன்."
- (இயற்பா - மூன்றாம் திருவந்தாதி : 39)

என்று அழகாகப் பேயாழ்வார் எடுத்துரைப்பர். மேலும் பஞ்ச பூதங்களாக விளங்குபவன் எம்பெருமான் என்பதை எழிலுற எடுத்துரைக்கிறார். 'வருங்கால் இருநிலனும் மால்விசும்பும் காற்றும், நெருங்குதீ நீருருவு மானான்' (இயற்பா - மூன்றாம் திருவந்தாதி :24) என்று, அகன்ற பூமியும், அளவிடற்கரிய ஆகாயமும், காற்றும், பிரிக்க முடியாமல் சேர்ந்திருக்கும் நெருப்பும் தண்ணீருமாகிய ஐந்து பூதங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பதைக் கூறக் காணலாம்.

எம்பெருமான் ஐம்புலன்கள் மற்றும் ஐம்பூதங்களால் ஆன உடலாக இருக்கக்கூடியவன். இந்த உலக உயிர்களின் உடலாய் விளங்கக் கூடியவன். 'அவன்கண்டாய் ஐம்புலனாய் நின்றான் அவன்கண்டாய் காற்றுத்தீ நீர்வான் கருவரைமண்' (இயற்பா - இரண்டாம் திருவந்தாதி :24) என்பார் பூதத்தாழ்வார். அங்ஙனம் உடலாக விளங்கக் கூடிய எம்பெருமான் மனதில் நிறைந்தவனாகவும் விளங்குவதை,

'மனத்துள்ளான் மாகடல் நீருள்ளான்' (இயற்பா – மூன்றாம் திருவந்தாதி :3) என்று பேயாழ்வாரும், மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான்' (இயற்பா - இரண்டாம் திருவந்தாதி : 28) என்று பூதத்தாழ்வாரும் அழகுற எடுத்துரைக்கின்றனர்.

6. எண் இறந்தனை – அனைவரது எண்ணங்களுக்கெல்லாம்
அப்பாற்பட்டவனவாக விளங்குகின்றாய்

எம்பெருமான் எண்ணங்களுக்கொல்லாம் அகப்படாதவனாக இருப்பதை எண்ணி வியக்கிறார் ஆசிரியர்.

மண்ணிலும் விண்ணிலும் விளங்குகின்ற எம்பெருமான், மண்ணுள் மயங்கி நின்று, எண்ணும் எண்ணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவனாக விளங்குகிறான் என்று எம்பெருமானின் எளிமை, மேன்மை ஆகிய இரண்டு குணங்களையும் எண்ணிப்பார்த்து எடுத்துரைக்கும் திருமழிசையாழ்வார்,

"மண்ணுளாய்கொல் விண்ணுளாய்கொல்? மண்ணிளே மயங்கிநின்று
எண்ணுமெண்ணம் அகப்படாய்கொல்? என்னமாயை நின்றமர்
கண்ணுளாய்கொல்? சேயைகொல்? அனந்தன்மேல் கிடந்தவெம்
புண்ணியா! புனந்துழாய் அலங்கலம் புனிதனே"
– (திருச்சந்த விருத்தம் :45)

என்று அடுக்கடுக்காய் வினாக்களைத் தொடுக்கிறார். மேலும், வாமனனாக இவ்வுலகத்தை இரந்துபெற்று, மூன்றடிகளால் இவ்வுலகை அளந்த உன்னை அளக்கக் கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்? நீயோ விண்கடந்த சோதியாக, ஞான மூர்த்தியாக, பாவ நாசனாக விளங்குகின்றாய். எண்ணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவனாக விளங்கும் உன்னை அளவிட வல்லவர்கள் யார்? என்று வியந்து போற்றுவதை,

"விண்கடந்த சோதியாய் விளங்குஞான மூர்த்தியாய்
பண்கடந்த தேசமேவு பாவநாச நாதனே
எண்கடந்த யோகினோடு இரந்துசென்று மாணியாய்
மண்கடந்த வண்ணநின்னை யார்மதிக்க வல்லரே."
– (திருச்சந்த விருத்தம் :27)

என்ற பாசுரத்தால் அறியலாம்.

7. ஒருமை யாயினை - ஒப்பற்றவனாக விளங்குகின்றாய்.

எம்பெருமான், தனக்கு உவமையாகத் தானே என்று சொல்லும்படியான ஒப்பற்றவனாக விளங்குபவன். பிரமனாகவும், நட்சத்திரக் கூட்டங்களாகவும், அக்கினி, பெரிய மலைகள், எட்டுதிசைகள், சூரிய சந்திரர்கள் ஆகியவற்றையும் பெற்றிருக்கக் கூடிய இறைவன் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பவன் என்பதைத்,

> தானே தமக்குவமன் தன்னுருவே எவ்வுருவும்
> தானே தவவுருவும் தாரகையும் - தானே
> எரிசுடரும் மால்வரையும் எண்டிசையும் அண்டத்
> திருசுடரும் ஆய இறை.
>
> - (இயற்பா - மூன்றாம் திருவந்தாதி :38)

என்பார் பேயாழ்வார்.

எம்பெருமான் தானே தோன்றியவன்; தனக்குத் தானே ஒப்புமை ஆனவனே அன்றி வேறு இல்லாதவன்; உலக உயிர்கள் அனைத்திலும் விளங்குபவன் அவனே இவன் தன் காத்தல் தொழிலில் சிறிது தளர்ந்தாலும் தலைகீழாகி விடும். தலைகீழாக மாறும் உலகத்தை மீண்டும் சரிப்படுத்தும் வல்லமையுடையவன் அவன்; இத்தகைய அவனுடைய ஆளும் தன்மையை இவ்வுலகத்தில் யாரால் அளவிட்டுச் சொல்ல முடியும் என்று வியக்கும் நம்மாழ்வார்,

> தானே தனித்தோன்றல் தன்னளப்பொன் றில்லாதான்
> தானே பிறர்கட்கும் தற்றோன்றல் - தானே
> இளைக்கிற்பார் கீழ்மேலாம் மீண்டமைப்பான் ஆனால்
> அளக்கிற்பார் பாரின்மேல் யார்?
>
> - (பெரிய திருவந்தாதி : 24)

என்ற பாசுரத்தில் அவனை விட காக்கும் தெய்வம் வேறு இல்லை. எம்பெருமானே ஒப்பற்ற தனித்தெய்வம் என்கிறார். எம்பெருமானை, "உலகம் மூன்றும் முறைப்பித்த தனிமாத் தெய்வம்" (திருவாய்மொழி 8:10:7) என்று மற்றொரு பாசுரத்தில் எடுத்துரைப்பர்.

8. பெருமை மேயினை - எல்லாச் செயற்கரிய செயல்களிலும் பொருந்தி விளங்குகின்றாய்.

எம்பெருமான், வானவர்கள் காண்பதற்கு அரியவனாக விளங்குபவன். திருமகளைத் தன் திருமேனியில் எக்காலத்தும் கொண்டு விளங்கம் தாமரைக் கண்ணுடையவன். அப்பரமன் என்னுடைய நல்வினை தீவினை ஆகியவற்றைக் கடிந்து ஆட்கொள்ளக்கூடிய பெருமையுடையவன் என்பதை,

"பெருமையனே! வானத்திமை யோர்க்குங் காண்டற்கு
அருமையனே! ஆகத்தணை யாதார்க்கு என்றும்
திருமெய் யுறைகின்ற செங்கண்மால் நாளும்
இருமை வினைகடிந்து இங்கென்னையாள் கின்றானே"
- (திருவாய் மொழி 10:4:3)

என்று தன் பாசுரத்தில் அழகாக நம்மாழ்வார் எடுத்தோதுகிறார்.

**எனவாங்கு - அசைநிலை. இது, தனிச்சொல்**

## *ஆசிரியச்சுரிதகம்.*

மலர்தலை ............எனக்கே.

மலர்தலை உலகத்துப் புலமை சான்ற - அகன்ற இடத்தையுடைய புவியுலகில் துறைபோகிய,

பதின்மரும் பணித்த பாடலோ தையொடு - பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய பத்துப் பேரும் திருவாய் மலர்ந்தருளிய பாசுரங்களின் இனிய ஓசையும்,

முதுமறை கறங்க, முரசம் ஆர்ப்ப - பழமையுள்ள மறைகளின் ஒலி எங்கும் முழங்கி நிறையவும், முரசு ஒலிக்கவும்,

வலம்புரி பிளிறும் பொலம்புரி கோயில் – வலம்புரிச் சங்குகள் ஒலிக்கின்ற, பொன்னால் வேயப்பட்ட விமானங்களைக் கொண்ட திருவரங்கப் பெரியக் கோயில்கள் எழுந்தருளியுள்ள,

ஆழியஞ் செல்வ ! ஆதியம் பரம ! வாழி வாழி ! – அழகிய சக்கராயுதத்தை தன் திருக்கையில் ஏந்தியுள்ள அழகுச் செல்வத்தை உடையவனே ! மூல முதலாக விளங்கும் அழகைக்கொண்ட பரம்பொருளாக விளங்குபவனே ! வாழ்வாயாக ! வாழ்வாயாக !

மறையோய் வாழி ! நெடியோய் வாழி ! – வேதங்களின் பொருளாக விளங்கபவனே ! வாழ்வாயாக ! நீண்டு வளர்ந்தவனே ! வாழ்வாயாக !

நின் மாட்டு அடியேன் ஒன்றை வேண்டுவ ! – உன்னிடத்தில் அடியவனாகிய நான் ஒன்றை மட்டும் வேண்டி நிற்கிறேன்.

அஃது நீ மறுக்கேல் ! – எக்காரணத்தைக் கொண்டும் மறுக்காமல் நீ அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பூவரும் அயன்முதல் யாவரும் அறியா – உனது உந்திக் கமலமாகிய தாமரை மலரில் இருந்து தோன்றிய, இவ்வுலகைப் படைத்தருளிய நான்முகன் முதலாக யாவராலும் அறியமுடியாத,

மூவுலக களந்தநின் சேவடி வாழ்த்தி – விண்ணுலகம், மண்ணுலகம், பாதாள உலகம் என்னும் மூவுலகங்களையும் அளந்த செந்தாமரையை ஒத்த சிவந்த உன்னுடைய திருவடிகளைப் போற்றி செய்து,

தொழுவகை தொண்டர்தம் தொண்டரில் சேர்ந்தாங்கு – நின்னை வணங்குகின்ற தன்மையுடைய அடியவர்களின் அடியவர்களுள் ஒருவனாகச் சேர்ந்து,

எழுவகைத் தோற்றத்து இன்னாப் பிறப்பின் – எழுவகையான பிறவித் தோன்றலையுடைய துன்பம் தருவதாகிய பிறவிகளில்,

என்பொழி யாக்கையுள் சேர்த்தினும் அவர்பால் – எலும்பில்லாத உடலையுடைய புழுவாக இவ்வுலகில் பிறக்கச் செய்தாலும் அவ்வடியவர்களிடத்தில்,

அன்பொழி யாமை அருளனாதி எனக்கே – நான் கொண்ட அன்பு நீங்காமல் இருக்க யாரும் இல்லாதவனாகிய எனக்கு அருள் வழங்குவாயாக !

ஆழ்வார்கள் பதின்மரால் போற்றப்படுகின்ற மூவுலகையும் அளந்த திருவடிகளையுடைய எம்பெருமான், தன்னைத் துன்பம் தரக்கூடிய எழுவகைப் பிறவிகளில், இழிந்ததாகக் கருதப்படும் புழுவாகப் பிறக்கச் செய்தாலும், அடியார்க்கு அடியாரிடத்தில் அன்பு நீங்காமல் இருக்க, தனக்கு அருளை வழங்க வேண்டும் என்று இறைஞ்சி நிற்பது இப்பாடலில் பேசப்படுகிறது.

பன்னிரு ஆழ்வாரும் நம்மாழ்வாரைப் பற்றி மட்டும் பாடிய மதுரகவி ஆழ்வாரும் பெண் ஆழ்வாராக விளங்கும் ஆண்டாள் நாச்சியாரையும் தவிர்த்த பத்து ஆழ்வார்களைப் பதின்மர் என்று சுட்டுகின்றார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். இப்பாடலில் 'பதின்மரும் பணிந்த பாட லோதையொடு' என்று குறிப்பிடுவதைப் போன்று, 'பாடுகின் றிலைநினை கிலைபதின்மர் தம்பாடலின் படியாயே' என்று இந்நூலின் முப்பத்து ஐந்தாம் பாடலிலும் குறிப்பிட்டிருப்பது சுட்டத்தக்கது. இவரை அடியொற்றி, வீறு சடகோபன்முதற் பதின்மர் மேய பெரும்புகழ் எய்த வேண்டும்' (திருவரங்கத் திருவாயிரம் புகழ்ப்பத்து.10) என்பார் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். அரங்கநாதனுக்கு 'பதின்மர்பாடும் பெருமாள்' என்ற விருது ஒன்று இருத்தல் கருதத்தக்கது என்பர் பெரியோர். 'அழகர் கிள்ளை விடு தூது இயற்றிய பலபட்டடைச் சொக்கநாதப் புலவர், ஆழ்வார்கள் பதினொருவர் என்ற தம் கருத்தை, 'ஆதிமறை நான்கையும் நாலாயிரத்து நற்காவியம் ஓதும் பதினொருவர் உள்ளத்தான்' (அழகர் கிள்ளைவிடு தூது : கண்ணி 87) என்று நம்மாழ்வாரைப் பாடிய மதுரகவி ஆழ்வாரையன்றி மற்றையோரைக் குறிப்பிடுவர்.

'எழுவகைத் தோற்றம்' என்பது எழுவகைப்பட்ட தோன்றல்களாகும். இந்த ஏழு வகையான தோற்றத்துள்ளும் இன்னாத பிறப்பு எனக் கருதப்படுவது புழுவாகும். இது எலும்பு இல்லாத பிறவி என்பதால், 'என்பொழி (என்புள்ஒழி) யாக்கை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவர், மனிதர், புள், விலங்கு, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பன எழுவகைத் தோற்றங்களாகும்.

"மக்கள் விலங்கு பறவை யூர்வன
நீருட் டிரிவன பருப்பதம் பாதபம்
எனஇலை எழுபிறப் பாகு மென்ப."

என்பதால் இதனை அறியலாம்.

எம்பெருமானின் அடியவர்கள் ஏழுபிறவிகளிலும் எம்பெருமானை மறவாமல் வணங்குகின்ற தன்மையை அருளவேண்டும் என்று வேண்டுகின்றனர். அவ்வழியில் பூதத்தாழ்வாரும்,

'என்றும் மறந்தறியேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
நின்று நினைப்பொழியா நீர்மையால் – வென்றி
அடலாழி கொண்ட அறிவனே இன்பக்
கடலாழி நீயருளிக் காண்'

– (இயற்பா – இரண்டாம் திருவந்தாதி : 55)

என்று வேண்டுகிறார். மேலும் எம்பெருமானின் திருவடிச் சிறப்புகளைத் தமிழில் பாடுவதற்கு ஏழ்பிறவியிலும் எப்பொழுதும் என்ன தவம் செய்தேனோ ! என்று வியக்கிறார். இதனை,

"யானே தவஞ்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான் – யானே
இருந்தமிழ் நன்மாலை இணையடிக் கேசொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது"

– (இயற்பா – இரண்டாம் திருவந்தாதி :74)

என்னும் பாசுரத்தின் வாயிலாக உணர்த்துகின்றார்.

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் ஏழுபிறவிகளிலும் இழிந்ததான புழுவாகப் பிறக்க நேரினும் எம்பெருமானின் அடியவர்களிடத்து அன்புகொண்டு ஒழுக, அருள்வழங்க வேண்டுகிறார். திருப்பாதிரிப் புலியூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானிடம்,

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே

– (தேவாரம் : நான்காம் திருமுறை :920)

என்று திருநாவுக்கரசர் வேண்டுகிறார். இப்பாடலோடு ஒப்பு நோக்கத்தக்கதாக இது அமைந்துள்ளது.

கறங்குதல் – முழங்குதல்; ஆர்ப்ப – ஆரவாரம் செய்ய, பொலம் – பொன்; ஆழி – சக்கராயுதம்.

### நேரிசை வெண்பா

2. எனக்கே திருவரங்க னேபிரா னெம்மான்
தனக்கே அடிமை தமியேன் - புனக்கேழ்
மருத்துளவோன் மேலன்றி மற்றொருவர் மேலென்
கருத்துளவோ ஆராயுங் கால்?

எனக்கே திருவரங்கனே பிரான் - எனக்குத் திருவரங்கத்தில் எழுந்தருளி யிருக்கக் கூடிய திருவரங்கனே தலைவனாவான்.

எம்மான் தனக்கே அடிமை தமியேன் - அந்த எம்பெருமானுக்குத் தனியனாகிய நான் அடிமை.

புனக்கேழ் மருத்துளவோன் மேலன்றி - வனத்திலுள்ள நிறத்தையும் வாசனையையும் உடைய துளசி மாலையை அணிந்துள்ள அந்த எம்பெருமானே யன்றி,

மற்றொருவர் மேலென் கருத்துளவோ ஆராயுங்கால் - ஆராய்ந்து பார்க்கும்பொழுது வேறு ஒருவரிடத்து என் எண்ணம் செல்லுமோ (செல்லாது)

எம்பெருமானையன்றி வேறு எந்தத் தேவரையும் தன் மனம் நினையாது என்பதை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். உலகில் எல்லாப் பொருள்களையும் உயிர்களையும் உள்ளடக்கிக் காப்பாற்றும் இறைவனான எம்பெருமானே பெருந்தெய்வம் என்று ஆழ்வார் போற்றுவர். அவ்வழியில் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் போற்றியுள்ளார்.

தொண்டரடிப்பொடியாழ்வார், தத்துவ ஞானம் இல்லாத மனிதர்களே ! சரணமாக அடையக்கூடிய தெய்வம் வேறு உண்டோ ? உற்றபோது அன்றி, அவனை ஒப்பற்றவன் என்று அறிய மாட்டீர்கள், நீங்கள் அறியாமையோடு விளங்கக் காரணம் வேத மறைபொருளை உணராததே! அந்த எம்பிரானைத் தவிர சரணம் அடையக் கூடிய தெய்வம் வேறு ஒன்றும் இல்லை என்பதை,

"மற்றுமோர் தெய்வம் உண்டே? மதியிலா மானி டங்காள்
உற்றபோது அன்றி நீங்கள் ஒருவனென்று உணர மாட்டீர்

அற்றமேல் ஒன்று அறியீர் அவனல்லால் தெய்வம் இல்லை
கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணியின் நீரே"
- (திருமாலை -9)

என்று தன்பாசுரத்தில் எடுத்துரைப்பர்.

பிரான் - தலைவன், தமியேன் - தனிமையானவன், கருத்து - எண்ணம், புனம் - தோட்டம், மரு - நறுமணம், துளவோன் - திருத்துழாய் மாலையையணிந்த திருமால், தேவர் - தெய்வம்.

**கட்டளைக் கலித்துறை**

3. காலா யிரம்முடி யாயிரம் ஆயிரம் கைபரப்பி
மேலா யிரத்தலை நாகம் கவிப்பவின் பூத்தகஞ்சம்
போலா யிரங்கண் வளரும் பிரான்பொன் னரங்கனென்றே
மாலாய் இரங்கவல் லார்க்கெய்த லாந்திரு வைகுந்தமே.

காலாயிரம் முடியாயிரம் ஆயிரம்கை பரப்பி - ஆயிரம் திருவடிகளையும் ஆயிரம் திருமுடிகளையும் ஆயிரம் கைகளையும் விரித்துக் கொண்டு,

மேலாயிரம் தலைநாகம் கவிப்ப - தலைக்கு மேலே ஆயிரம் தலைகளைக் கொண்ட திருவனந்தாழ்வான் கவிந்திருப்ப,

விண்பூத்த கஞ்சம்போல் ஆயிரம் கண் வளரும் பிரான் - வானத்தில் மலர்ந்த தாமரை மலரைப் போன்று ஆயிரம் கண்களைக் கொண்டு அறிதுயில் கொள்ளும் தலைவன்.

பொன்னரங்கன் என்றே மாலாய் - பொன்போன்று பொலிகின்ற அரங்கநாதன் என்று அன்புடையவர்களாய்,

இரங்கவல் லார்க்கெய்த லாந்திரு வைகுந்தமே - மனம் உருகிப் போற்ற வல்லவர்களாக விளங்கும் அடியவர்கள் பரமபதத்தை அடைய முடியும்.

பேராற்றல் மிக்கவனான திருவரங்கநாதனை வேண்டி வழிபடும் அடியவர்களுக்குப் பரமபதம் வாயக்கும் என்கிறார் ஆசிரியர். காலாயிரம், முடியாயிரம், கண்கள் ஆயிரம் ஆகியன இறைவனின் அளவில்லா ஆற்றலைக் குறிப்பதற்காகச் சொல்லப்பட்டது.

"தோள்கள் ஆயிரத்தாய் முடிகள் ஆயிரத்தாய்
துணைமலர்க் கண்கள் ஆயிரத்தாய்
தாள்கள் ஆயிரத்தாய் பேர்கள் ஆயிரத்தாய்
தமியனேன் பெரிய வப்பனே!
- (திருவாய்மொழி 8:1:10)

என்ற நம்மாழ்வாரின் பாசுரம் காட்டும் பெருமானின் தோற்றம் இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

இப்பாடலில் ஆயிரம் தலைகொண்ட தினவனந்தாழ்வானைக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர். ஆயிரம் வாய்களையும் ஈராயிரம் கண்களையும் கொண்ட அனந்தாழ்வான்,

"விடத்தவா யொராயிரம் இராயிரங்கண் வெந்தழல்
வீடுத்துவீழ் விலாத போகம் மிக்கசோதி தொக்கசீர்
தொடுத்துமேல் விதான மாய பௌவநீர் அராவணை
படுத்துபாயல் பள்ளிகொள்வது என்சொல் வேலை வண்ணனே."
- (திருச்சந்த விருத்தம் : 18)

என்று, கருங்கடல் வண்ணனான எம்பிரானே! விடத்தைக் கொண்டதான ஓராயிரம் வாய்களினாலும், ஈராயிரம் கண்களினாலும் வெப்பமான தழலை வெளிப்படுத்திக் கொண்டு குறைவற்ற சிறப்போடு மிகுந்த ஒளியோடு, மேற்கட்டி போன்ற படங்களினுடைய மேற்புறத்தில் திரண்ட அழகோடு விளங்கும் கடல்நீரில் படுக்கையாக அமைந்த பாம்பணையில் பள்ளிகொள்வது ஏன் என்ற வினாவினைத் தொடுக்கிறார் திருமழிசையாழ்வார்.

எம்பெருமான், ஆயிரம் தோள் பரப்பி ஆயிரம் முடி விளங்குவது போன்று, ஆயிரம் தலைகளையுடைய திருவனந்தாழ்வான் மீது பள்ளி கொண்டருளிய காட்சியை, 'ஆயிரம் தோள்பரப்பி முடிஆயிரம் மின்இலக, ஆயிரம் பைந்தலைய அனந்தசயனன்' (பெரியாழ்வார் திருமொழி 4:3:10) என்று பெரியாழ்வார் தன் பாசுரத்தில் எழிலுற எடுத்துரைத்துள்ளார்.

**கஞ்சம் - தாமரை. இது நீரில் முளைப்பது.**

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

4. வைகலந்த மூவிலைவேல் ஈசற்கும் வாசவற்கும் வாசப் பூமேல்
மெய்கலந்த நால்வேத விரிஞ்சனுக்கு மேலாய்வீற் றிருப்பர் மாதோ!
பைகலந்த பாம்பணைமேல் திருவரங்கப் பெருநகருட்பள்ளி கொள்ளும்
கைகலந்த நேமியான் திருநாமத் தொருநாமம் கற்றார் தாமே.

வைகலந்த மூவிலைவேல் ஈசற்கும் – கூர்மை பொருந்திய மூன்று இலை வடிவமான முனைகளையுடைய சூலாயுதத்தைக் கொண்ட சிவபெருமானுக்கும்,

வாசவற்கும் வாசப்பூமேல் மெய்கலந்த – தேவேந்திரனுக்கும், நறுமணம் பொருந்திய தாமரை மலரின்மேல் தோன்றிய,

நால்வேத விரிஞ்சனுக்கும் மேலாய் வீற்றிருப்பர் மாதோ நால்வேதங்களையும் உடைய பிரமதேவனுக்கும் மேலான நிலையில் விளங்குவார்கள் (யாரெனில்)

பைகலந்த பாம்பணைமேல் திருவரங்கப் பெருநகரில் பள்ளிகொள்ளும் – படம்பொருந்திய அனந்தாழ்வானாகிய படுக்கையின் மீது, திருவரங்கமான பெரியநகரில் பள்ளிகொண்டு அருளுகின்ற,

கைகலந்த நேமியான் – கையில் பொருந்திய சக்கரப்படையைக் கொண்டவனாகிய திருவரங்கப் பெருமான்,

திருநாமத் தொருநாமம் கற்றார் தாமே – திருநாமங்களில் ஏதேனம் ஒருநாமத்தை உச்சரிக்கும் அடியவர்கள்.

எம்பெருமானின் திருநாமத்தின்பெருமையை எடுத்துரைக்கிறார் ஆசிரியர். அவனுடைய ஆயிரம் திருநாமங்களில் ஏதேனும் ஒரு நாமத்தை உச்சரித்தாலே சிவன், பிரமன், தேவேந்திரன் ஆகியோரைக் காட்டிலும் மேலான பதவியில் விளங்குவார்கள் என்கிறார் ஆசிரியர்.

விஷ்ணுவே முழுமுதற் கடவுள் என்பதை வைணவம் என்ற பெயர் புலப்படுத்துகிறது. ஆனால் நாராயணன் என்ற பெயரைத்தான் ஆசாரியர்கள் வழங்குவர். நாராயணன் என்ற சொல்லாலேதான் கடவுள் வழிபட வேண்டும் என்பர் வேதாந்த தேசிகர். திருமங்கையாழ்வார் 'நாராயணா' என்னும் நாமத்தைப் போற்றி பல பாசுரங்களை

இயற்றியுள்ளார். நாராயண நாமம், தன்னை வணங்குபவர்க்கு உயர்ந்த குலத்தைத் தரும்; செல்வத்தை அளிக்கும்; அடியவர்க்கு வரும் துன்பங்களை அழிக்கும் ; பரமபதத்தை நல்கும்; வலம் தரும்; வேண்டிய நன்மைகள் எல்லாவற்றையும் செய்யும்; பெற்ற தாயைக் காட்டிலும் நல்லவற்றைச் செய்யும் என்கிறார். இதனை ஒரு பாசுரத்தில்,

"குலந்தரும்; செல்வம் தந்திடும் ; அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும்; நீள்விசும்பு அருளும் ;
அருளொடு பெருநிலம் அளிக்கும் ;
வலம்தரும்; மற்றும் தந்திடும் ; பெற்ற
தாயினும் ஆயினச் செய்யும் ;
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்"
- (பெரியதிருமொழி 1:1:9)

என்று எழிலுற எடுத்துரைக்கிறார்.

விஷ்ணு சகஸ்ரநாமம், ஆயிரம் பெயர்களைக் கொண்டது; ஆயிரம் பெயர்களிலும் ஆயிரம் கருத்துக்கள் அமைந்த திருமாலின் பெயர்களைக் கூறி, அவனுடைய குணங்களை அனுபவிக்கவே சகஸ்ரநாமம் ஏற்பட்டது. ஏக தெய்வக் கொள்கையை வளர்த்து, அதற்கு ஒரு பெயரைக் கொடுத்து, மற்ற பெயர்களையும் குறிப்பிட்ட அப்பெயரோடு இணைத்துப் பல பெயர்களையுடைய பிறதெய்வங்களையும் உள்ளடக்கி, அந்த முழுமுதற் கடவுள், 'நாராயணன்' என்று தமிழக வைணவம் கூறுகின்றது என்பார் பேரா. கு. அருணாசல கவுண்டர்.[8]

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தம் பாடலில் ஏதேனும் ஒரு திருமாலின் நாமத்தை உச்சரிப்பின் மேலான நிலை கிடைக்கும் என்கிறார். அந்த நாமம் 'எனக்கு எப்பொழுதும் தேனும் பாலும் அமுதும் போல மிகவும் இனிமையாய் இருக்கின்ற, திருநாமமாகிற பெரிய திருமந்திரத்தை நானும் உச்சரித்தேன். நம்மைச் சேர்ந்தவர்களிடமும் சொல்லுங்கள் என்பதை,

8. தமிழ்ப் பண்பாட்டில் வைணவம், பக்.48 – 50.

"தேனும் பாலும் அமுதுமாய் திருமால் திருநாமம்
நானும் சொன்னேன் நமரும் உரைமின் நமோநாராயணமே."
- (பெரியதிருமொழி 6:10:6)

என்கிறார் திருமங்கையாழ்வார். தாம் இயற்றிய பெரிய திருமொழியில் முதல் பத்துப் பாடல்களில் பெரிய திருமந்திரத்தின் மகிமைகளை விரிவாக எடுத்தோதியுள்ளார். இடைப்பெண்கள் தங்களுடைய சிற்றில்களைச் சிதைக்க வேண்டாமென்று கண்ணனிடத்து, 'நாம மாயிரம் ஏத்த நின்ற நாராயணா' (நாச்சியார் திருமொழி 2:1) என விளிப்பதாக ஆண்டாள் பாசுரம் பகர்கிறது. பேயாழ்வார்,

"நாமம் பலசொல்லி நாராயணா வென்று
நாமங்கை யால்தொழுதும் நன்னெஞ்சே"
- (இயற்பா - மூன்றாம் திருவந்தாதி :8)

என்று நாராயணனை வணங்க, தன் நெஞ்சிடத்துக் கூறுகின்றார்.

வைணவர்களின் மூலமந்திரமான எட்டெழுத்துக்களைக் கொண்ட 'ஓம் நமோ நாராயணாய' என்பதன் பொருள் பரம்பொருளாகிய நாராயணனை வணங்குகிறேன் என்பதாகும். இந்தத் திருமந்திரமாகிய திருவெட்டெழுத்தினை வேதமந்திரமாகக் கூறும் மரபும் வைணவர்களிடத்தில் காணப்படுகிறது - திருவெட்டெழுத்தினை, 'நால்வேதக் கடலமுது' என்று குறிப்பிடுவதில் இருந்தும், இருக்கார் மொழி என்னும் சொற்களின் மூலம் வேதங்களின் அடிப்படையாகக் குறிப்பிடுவதில் இருந்தும் இதன் சிறப்பினை உணரலாம் என்பர் முனைவர் பி.ஆர் நரசிம்மன்.[9]

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இந்த எட்டெழுத்தின் மகிமையை எங்ஙனம் சொல்லுவது என வியக்கிறார்.

"நம்பெரு மாளெழுத் தெட்டின் பெருமை நவிலுமதோ
சம்பிரன் மாயம் புரோகிதர் சூழ்வினை தாரணிவாள்
வெம்படை மாசுண மாமத வேழம் விடந்தழல்கா
லம்பர பேமுதலானவை பாலனுக் கஞ்சினவே."

---

9. வைணவ மரபும் மெய்ப்பொருளியலும். பக்.52-53.

என்ற திருவரங்கத்து மாலையின் பாடலில், சம்பரனென்றும் அசுரனின் மாயையும், பிரகலாதனைக் கொல்வதற்காகப் புரோகிதர்களை ஆலோசித்துச் செய்த செயல்களும், வெற்றி மாலையை அணிந்த வாள் முதலிய கொடிய ஆயுதங்களும், பெரும் பாம்புகளும், பெரிய மதயானைகளும், விஷமும், தீயும் காற்றும், கடலும் திருஎட்டெழுத்தின் மகிமையை அறிந்து உச்சரித்த சிறுவனாகிய பிரகலாதனுக்கு பயந்து நடந்தன என்றால், எம்பெருமானின் எட்டெழுத்து மந்திரத்தின் மகிமையை சொல்லுதல் என்பது இயலாது என்கிறார்.

மூவிலை வேல் ஈசர் – சூலத்தையுடைய சிவபெருமான், வாசவர் – இந்திரன், நால்வேத விரிஞ்சன் – பிரமன். பைகலந்த – படம்பொருந்திய, கைகலந்தை நேமி – கையில் பொருந்திய சக்கராயுதம்.

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

5.
கற்றார் எனினும் பதினா லுலகும்
கண்டார் எனினும் தண்டா மிகுதிபற்
றற்றார் எனினும் திருமால் அடியார்
அல்லா தவர்வீ டில்லா தவரே!
பொற்றா மரையாள் கணவன் துயிலும்
பொற்கோ யிலையே புகழ்வார் பணிவர்
மற்றார் எனினும் பெற்றார் அவரே
வானோர் திருமா மணிமண் டபமே.

கற்றார் எனினும் பதினாலுலகும் கண்டார் எனினும் – கற்க வேண்டிய சிறந்த நூல்கள் அனைத்தையும் கற்றவராக இருப்பினும், பதினான்கு உலகங்களையும் கண்டவர்களாக விளங்கினார்கள் என்றாலும்,

தண்டா மிகுதிபற்று அற்றார் எனினும் – நீக்குவதற்கு அரிய மிகுந்த பற்றுக்களை நீக்கியவர்களாக இருப்பினும்,

திருமால் அடியார் அல்லாதவர் வீடில்லா தவரே – எம்பெருமானின் அடியார்களாக இல்லாதவர்கள் வீடுபேற்றை அடையாதவர்கள்.

பொற்றாமரையாள் கணவன் துயிலும் – பொன் தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகளின் கணவரான எம்பெருமான் அறிதுயில் கொண்டு விளங்குகின்ற,

பொன் கோயிலையே புகழ்வார் பணிவார் - பொன்னால் வேயப்பட்ட விமானங்களைக் கொண்ட அழகிய திருவரங்கக் கோயிலைப் போற்றித் தொழுபவர்கள்,

மற்றார் எனினும் - மற்றவர்களே ஆனாலும்,

பெற்றார் அவரே வானோர் திருமாமணி மண்டபமே - அத்தகைய அடியவர்கள் தேவர்களுடைய முக்தி மண்டபத்தை அடைந்தவர்கள் ஆவார்கள்.

சிறந்தபல நூல்களைக் கற்றவர்களாக இருந்தாலும் பதினான்கு உலகங்களையும் கண்டவராக விளங்கினாலும் 'யான்' என்னும், தன்னோடு இயைபு இல்லாத பொருளைத் தன்னுடையது என்று கருதுகின்ற இரு பற்றுக்களையும் நீக்கியவர்களாக விளங்கினாலும் திருமாலடியார் அல்லாதவர் முக்திப்பேறு அடைதல் இயலாது என்கிறார் ஆசிரியர்.

கற்றார் - கற்பதற்கு உரிய நூல்களைக் கற்றவர், தண்டா - நீக்குதலரிய, வீடு - முக்திபேறு. திருமாமணி மண்டபம் - முக்தி மண்டபம்.

...

### எழுசீர் ஆசிரிய சந்த விருத்தம்

6. மண்டலமும் விண்டலமும் நின்றுவட குன்றமும்
வளர்ந்தமலை யுங்க டலுமே
தண்டமும் அகண்டமும் அயின்றவர் துயின்றருள்
அரும்பதி விரும்பி வினவின்
கொண்டல்குமு றுங்குடகி ழிந்துமத குந்தியகில்
கொண்டுநுரை மண்டி வருநீர்
தெண்டிரைதொ றுந்தரள முங்கனக மும்சிதறு
தென்திருவ ரங்க நகரே.

மண்டலமும் விண்டலமும் நின்று வடகுன்றமும் - மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும், மண்ணுலகத்திடையே நின்ற மகாமேரு மலையையும்,

..........................................................................................

தமிழ்ப் பண்பாட்டில் வைணவம், பக். 48 – 50.

வளைந்த மலையும் கடலமும் மூதண்டமும் அகண்டமும் - அம்மேரு மலையைச் சூழ்ந்துள்ள மலைகளையும், கடலையும், இவையடங்கிய பழைய அண்டங்களையும், அதிலுள்ள அசையும், அசையாப் பொருள்கள் அனைத்தையும்,

அயின்றவர் துயின்றருள் அரும்பதி விரும்பி வினவின் - அமுதுசெய்து அருளி, பள்ளிகொண்டிருக்கக் கூடிய அரிய திருப்பதி எது என அறிய விரும்பும் விருப்பத்துடன் கேட்டால்,

கொண்டல் குமுறு குடகிழிந்து மதகுந்தி - மேகங்கள் முழங்குகின்ற, குடகு மலையினின்றும் நீர்பெருகி வழிந்து மதகுகளை உந்தித் தள்ளி,

அகில்கொண்டு நுரைமண்டி வருநீர் - மிகுதியான அகில்கட்டைகள் மிதக்கும் நுரைமிகுந்து வருகின்ற காவிரி நீரானது,

தெண்டிரைதோறும் தரளமும் கனகமும் சிதறு - தெளிந்த அலைகள் ஒவ்வொன்றும் முத்துக்களையும் பொன்னையும் கரையில் வீசுகின்ற,

தென்திரு அரங்க நகரே - தென்திருவரங்கமென்று போற்றப்படுகின்ற அழகிய நகரமேயாகும்.

மண்ணுலகையும் விண்ணுலகையும் மகாமேரு மலையையும் கடலையும் அனைத்தையும் அமுது செய்தருளிய எம்பெருமான் அனந்தாழ்வான் மீது பள்ளி கொண்டிருக்கக் கூடிய அரிய திருத்தலம் தென்திருவரங்கம் என்று கூறி, பெருமானின் பேராற்றலையும் தென்திருவரங்க நகரின் சிறப்பையும் போற்றுகின்றார் ஆசிரியர்.

எம்பெருமான், முக்காலமும் காப்பவனாகிய, உலகங்கள் ஏழையும் பிரளய வெள்ளம் அழிக்காமல் இருக்கும் பொருட்டு அமுது செய்ததை,

"ஏழுலகும் தாழ்வரையும் எங்கும் மூடி
எண்திசையும் மண்டலமும் மண்டி அண்டம்
மோழையெழுந்து ஆழிமிகும் ஊழி வெள்ளம்
முன்கட்டி லொடுக்கியஎம் மூர்த்தி கண்டீர்"
~ (பெரியதிருமொழி 4:4:9)

என எழிலுற எடுத்தோதுகின்றார் திருமங்கையாழ்வார்.

'திருவரங்கம்', திருமாலின் திவ்விய தேசங்கள் நூற்றெட்டனுள் தலைமைபூண்ட சிறப்புடையது, பூலோக வைகுண்டம் எனப்படுகின்ற மகிமையுடையதும் போகமண்டபம் எனப்படுவதுமாகிய தலம். திருவரங்கத்தில் எம்பெருமான் பள்ளிகொண்டுள்ள எழிலை,

"நீல மேகம் நெடும்பொன் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரிந்தெழு தலையுடை அருந்திறல்
பாயல் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்"

- (சிலப்பதிகாரம், மதுரை1:35-40)

என கரியமேகம் உயர்ந்த பொன்மலைமீது விரிந்து பரந்து படிந்த தன்மையைப் போல, ஆயிரம் தலைகளையுடைய அரிதான வலிமையைப் பெற்றுள்ள பாம்பணையாகிய பள்ளியில் பலரும் போற்றி வணங்க, மிக்க அலைகளையுடைய காவிரியாற்றின் இடைக்குறையில் திருவரங்கத்தில், திருமகள் விரும்பி அமர்ந்த மார்பையுடைய திருமாலின் கிடந்த கோலத்தை, மாங்காட்டு மறையோனின் கூற்றாக அமைந்துள்ளார் இளங்கோவடிகள்.

தென்திருவரங்கத்தின் அழகினைக் கண்டு வியந்த திருமங்கையாழ்வார், மூங்கில்களில் இருந்து முதிர்ந்த முத்துக்களையும் இரத்தினங்களையும் தள்ளிக்கொண்டு வந்து நிறைந்திருக்கிற நீரையுடைய திருக்காவிரியாலும் தகுதியான அழகிய பெரிய திருமதில்களாலும் சூழப்பட்டு விளங்குகின்றது என்பதை,

"சேயன் என்றும் மிகப்பெரியன் நுண்நேர்மையி னாயஇம்
மாயையை ஆரும் அறியா வகையான் இடமென்பரால்
வேயின் முத்தும் மணியும் கொணர்ந்தார் புனல்காவிரி
ஆய பொன்மா மதிள்சூழ்ந்து அழகார்தென் அரங்கமே."

- (பெரியதிருமொழி 5:4:9)

என்ற தன்பாசுரத்தில் போற்றுகின்றார்.

திருவரங்கம், எம்பெருமானாகிய பெரிய பெருமாள் தெற்கு நோக்கிய சயனத்திருக்கோலம் கொண்ட கோயில். பெரியநம்பிகள் பட்டர், வடக்கு திருவீதிப் பிள்ளை, பிள்ளை லோகாச் சாரியார் முதலிய பல ஆசாரிய புருடர்கள் திருஅவதாரம் செய்த தலம், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், குலசேகராழ்வார் எழுந்தருளிய ஒப்பற்ற தலம். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டு, 247 பாசுரங்களால் பாடப்பட்ட தலமாக விளங்குகின்றது.

மண்டலம் - மண்தலம். விண்டலம் - விண்தலம். அகண்டம் - அண்டத்திலுள்ள அசையும், அசையாப் பொருள்கள். கொண்டல் - மேகம். தெண்டிரள் (தெள் + திரள்) - தெளிந்த அலை. தரளம் - முத்து. கனகம் - பொன், அயின்றவர் - உண்டவர்.

## புயவகுப்பு

நாற்பத்தெண்சீர் ஆசிரிய வண்ண விருத்தம்.

(முதலடி)

நகுகதிர் வழங்கு தகடுபடு செம்பொன்
நவமணி குயின்ற தொடியணி அணிந்து
ககனவி லிடுநீல வெற்பொத் திருந்தன ;
நறியபுது மன்ற திசைமுழுது மண்ட
நறவுகுடி கொண்ட துளவணி அலங்கண்
மதுகர மொருகோடி சுற்றப் புனைந்தன ;
நளினமட மங்கை குவலய மடந்தை
சனகன தணங்கு பொதுவர்மக ளென்றிவ்
வனிதையர் தனபார மொத்தக் குழைந்தன ;
நதிபதி சுழன்று கதறிநுரை சிந்தி
வரவக டுரிஞ்சி யலறவல மந்து
வடவரை யுடறேய நட்டுக் கடைந்தன ;

(இரண்டாம் அடி)

இகலியிரு குன்றி லிருசுட ரெழுந்து
பொருவதென விம்ப மதிமுக மிலங்கும்
இருகுழை இருபா டலைப்பச் சிறந்தன ;
இணையற நிமிர்ந்து வலியொடு திரண்டு
புகழொடு பரந்து புழுகொடும் அளைந்து
கலவிய னணிசேறு துற்றுக் கமழ்ந்தன ;
எதிரொருவ ரின்றி அகிலவுல குந்தன்
அடிதொழ விருந்த இரணியன் மடங்கன்
முரணிய வரைமார்பம் ஒற்றிப் பிளந்தன ;
எறிகடல் கலங்கி முறையிட வெகுண்டு
நிசிசரர் இலங்கை அரசொடு மலங்க
ஒருசிலை இருகால் வளைத்துச் சிவந்தன ;

(மூன்றாம் அடி)

மிகுகளவி நின்ற விளவிகனி சிந்த
மடியவிடு கன்று குணிலென வெறிந்து
பறவையின் அகல்வாய் கிழித்துப் பகிர்ந்தன ;
வெறிபடு குருந்தை முறிபட அடர்ந்து
குடநட மகிழ்ந்து குரவைகள் பிணைந்து[1]
பொருதொழி லெருதேழு செற்றுத் தணிந்தன[2]
வெடிபட முழங்கி எழுமுகிலும் அண்டர்
இனநிரை தியங்கி வருதிவலை[3] கண்டு
தடவரை குடையாய் எடுத்துச் சுமந்தன ;
விழிவடவை பொங்க எதிர்பொர நடந்த
களிறுளம் வெகுண்டு பிளிறிட முளைந்து
புகர்முக விருகோடு பற்றிப் பிடுங்கின ;

(பா-டு) 1. புனைந்து 2. துணிந்தன 3. தயங்கி வெறிதிவலை

(நான்காம் அடி)

அகலிடமும் உம்பர் உலகமும் நடுங்கி
அபயமடி எங்கள் அபயமென வந்து
விழுதொறும் இடையூ றகற்றிப் புரந்தன ;
அருகுற விளங்கும் எறிதிகிரி சங்கம்
வெயிலொரு மருங்கு நிலவொரு மருங்கும்
எதிரெதிர் கதிர்வீச விட்டுப் பொலிந்தன ;
அருமறை துணிந்து பொருண்முடிவை இன்சொல்
அமுதொழுகு கின்ற தமிழினில் விளம்பி
அருளிய சடகோபர் சொற்பெற் றுயர்ந்தன ;
அரவணை விரும்பி அறிதுயில் அமர்ந்த
அணிதிரு வரங்கர் மணிதிகழ் முகுந்தர்
அழகிய மணவாளர் கொற்றப் புயங்களே.

(முதலடி)

நகுகதிர் வழங்கு தகடுபடு செம்பொன் நவமணி குயின்ற – விளங்குகின்ற ஒளியை வீசுகின்ற செம்பொன் தகட்டினால் செய்யப்பட்டு, நவரத்தினங்கள் பதிக்கப்பட்டுள்ள,

தொடியணி அணிந்து ககனவிலிடு நீலவெற்பொத் திருந்தன - தோள்வளை அணிந்திருந்து, ஆகாயத்தில் தோன்றுகின்ற இந்திரவில் இடப்பட்ட கரியமலைகளை ஒத்து விளங்கின ;

நறிய புதுமன்றல் திசைமுழுதும் ஆண்ட நறவுகுடி கொண்ட – இனிய புதிய நறுமணமானது திசைகள் எங்கும் சேர்ந்து பரவி நிற்கும்படி, தேன்பெருகுதலைத் தன்னிடத்தே கொண்ட,

துளவணி அலங்கல் மதுகர மொருகோடி சுற்றப் புனைந்தன - திருத்துழாயினால் தொடுக்கப்பட்ட அழகிய மாலையை, வண்டுகள் சூழ்ந்து மொய்க்கும்படி சூடின ;

நளின மடமங்கை குவலய மடந்தை சனகன தணங்கு – தாமரை மலரில் வீற்றிருக்கின்ற அழகிய திருமகளும் நிலமகளும், ஜனகனின் மகளாகிய சீதையும்,

பொதுவர் மகளென்று இவ்வனிதையர் தனபாரம் மொத்தக் குழைந்தன - ஆய்ச்சியரின் மகளாகிய நப்பின்னைப் பிராட்டியும் என்று,

இந்தத் தேவியரது பருத்த கொங்கைகள் மோதலினால் நெகிழ்ந்தன ;

நதிபதி சுழன்ற கதறி நுரைசிந்தி அரவக டுரிஞ்சி - நதிகளுக்கெல்லாம் தலைமை சான்றதான திருப்பாற் கடலானது, சுழற்சியடைந்து பேரொலி செய்து, நுரைகளைச் சிந்தியிருக்கவும், பாம்பாகிய வாசுகியானது, உடல் உராய்ந்து,

அலற அலமந்து வடவரை உடல்தேய நட்டுக் கடைந்தன - கதறி துன்புறுதலோடு, உடல் தேய்வடையவும், அம்மலையை மத்தாக நிறுத்திக் கடைந்தன ;

(இரண்டாம் அடி)

இகலிமயிரு குன்றில் இருசுட ரெழுந்து பொருவதென - தம்முன் மாறுபட்டு இரண்டு குன்றுகளில் சூரிய சந்திரர்கள் தோன்றி போர்செய்வது போன்று,

விம்பமதி இலங்கும் இருகுழை இருபால் அலைப்பச் சிறந்தன - சந்திரபிம்பம் போன்ற முகத்தின் இருபக்கக் காதுகளிலும் விளங்குகின்ற இரண்டு குண்டலங்களும் அசைவதில் சிறந்தன ;

இணையற நிமிர்ந்து வலியொடு திரண்டு புகழொடு பரந்து - ஒப்பற்ற தன்மையுடன் உயர்வாக விளங்கி, வலிமையுடனும் திரட்சியுடனும் புகழுடனும் பரவி,

புழுகொடும் அளைந்து கலவையிள் அணிசேறு துற்றக் கமழ்ந்தன - புழுகுடன் கலந்த கலவையின், அழகிய சந்தனக் கலவையாகிய சேறு மிகுதியாகப் பூசப்பெற்று நறுமணத்துடன் விளங்கின ;

எதிரொருவர் இன்றி அகிலஉல குந்தன் அடிதொழ இருந்த - எதிர்ப்பதற்கென்ற வேறு ஒருவர் இன்மையால் அனைத்து உலகங்களும் தன்னுடைய பாதங்களையே வணங்கும்படியாக,

இரணியன் மடங்க முரணிய மார்பம் ஒற்றிப் பிளந்தன - ஆணவத்துடன் இருந்த இரணிய அசுரன் அழியும்படியாக, அவனுடைய வலிமைமிக்க மலைபோன்ற மார்பை, நகங்கள் பதியும்படி அழுத்திப் பிளந்தன ;

எறிகடல் கலங்கி முறையிட வெகுண்டு நிசிசரர் இலங்கை அலைகளை எறிகின்ற கடல் கலங்கி முறையுடவும் கோபத்துடன் இலங்கையில் அரக்கர்களின்,

அரசொடு மலங்க ஒருசிலை இருகால் வளைத்துச் சிவந்தன– தலைவனாக விளங்கிய இராவணனுடன் சினந்து அவர்கள் கலங்கும்படியாக தன்னிகரற்ற கோதண்டத்தின் இரு கோடிகளையும் வளைத்துச் சிவந்தன ;

(மூன்றாம் அடி)

மிகுகளவின் நின்ற விளவிகனி சிந்தி மடிய விடுகன்று – மிகுந்த வஞ்சனையுடன் தன்னைக் கொல்லுவதற்காக நின்ற விளாமரம் தன்னுடைய பழங்களை உதிர்த்து அழியும்படி, கம்சனால் ஏவப்பட்ட மாயக்கன்றை,

குணிலென எறிந்து பறவையின் அகல்வாய் கிழித்துப் பகிர்ந்தன – குறுந்தடியாகக் கொண்டு அதன்மீது வீசியடித்து, பறவை வடிவில் வந்த பகாசுரன் என்ற அசுரனின் அகன்ற வாயை இரண்டாகப் பிளந்து கிழிந்தன ;

வெறிபடு குருந்தை முறிபட அடர்ந்து குடநடம் மகிழ்ந்து – நறுமணம் வீசும் மலர்களைக் கொண்ட குருந்த மரமானது முறிந்து விழும்படியாக அழித்து, குடக்கூத்தாடி மகிழ்ந்து,

குரவைகள் பிணைந்து பொருதொழில் எருதேழு செற்றுத் தணிந்தன – குரவைக் கூத்தாடி, போர்த்தொழிலையுடைய ஏழு எருதுகளை அடக்கி, அழித்துக் கோபம் தணிந்தன ;

வெடிபட முழங்கி எழுமுகிலும் அண்டர் இனநிரை தியங்க பேரொலி உண்டாகும்படியாக இடி முழக்கம் செய்த புஷ்கலா வர்த்தம் முதலாகிய ஏழு மேகங்களும், இடையர்களோடு பசுக்கூட்டங்களும் திகைப்படையும்படியாக,

வருதிவலை கண்டு தடவரை குடைய எடுத்துச் சுமந்தன – பொழிந்த நீர்த்துளிகளைக் கண்டு, பெரிய மலையான கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்துச் சுமந்தன ;

விழிவடவை பொங்க எதிர்பொர நடந்த களிருளம் வெகுண்டு –வழிகளில் வடிவாமுகாக்கனி போல தீப்பொறி பறக்கும்படி எதிரில் தன்னோடு போரிடுவதற்கு வந்த ஆண்யானையான

குவலயாபீடம் என்னும் கம்சனது பட்டத்து யானை கோபத்தோடு,
பிளிறிட முனிந்து புகர்முக இருகோடு பற்றிப் பிடுங்கின. பேரொலி செய்ய,
அதன்மீது சினந்து, செம்புள்ளிகளை உடைய அதன்முகத்தில் விளங்கிய இரண்டு தந்தங்களையும் பிடித்துப் பறித்தன.

(நான்காம் அடி)

அகலிடமும் உம்பர் உலகும் நடுங்கி அபயமடி எங்கள் - அகன்ற இந்த நிலவுலகத்தில் வாழ்வோரும் விண்ணுலகில் வாழும் தேவர்களும் அச்சத்தினால் நடுங்கி அடியவர்களாகிய நாங்கள் உங்கள் திருவடியில்,
அபயம் எனவந்து விழுதொறும் இடையூறகற்றிப் புரந்தன - அடைக்கலம் என்று வந்து விழுந்து விளங்கும் பொழுதெல்லாம் அவர்களது இன்னல்களைப் போக்கிப் பாதுகாத்தன ;
அருகுற விளங்கம் எறிதிகிரி சங்கம் வெயிலொரு மருங்கும் - அருகில் உள்ள பகைவர்மீது வீசி எறியப்படுகின்ற சக்கரமும் சங்கும், கதிரவன் ஒரு பக்கத்திலும்,
நிலவொரு மருங்கும் எதிரெதிர் கதிர்வீச விட்டுப் பொலிந்தன- சந்திரன் ஒரு பக்கத்திலுமாக, எதிருக்கு எதிராக மாறுபட்ட தன்மைகளைக் கொண்ட ஒளிக்கதிர்களை வீசி நிற்க, அவை ஒளிர்ந்தன.
அருமறை துணிந்த பொருள்முடிவை இன்சொல் அமுதொழுகு கின்ற - அறிவதற்கு அரிய வேதங்களில் உறுதிபடுத்திச் சொல்லப்பட்ட பரம்பொருளின் முடிவானக் கருத்தை இனிய சொற்களால் அமிர்தம் ஒழுவது போன்ற இனிமை நிறைந்த,
தமிழினில் விளம்பி அருளிய சடகோபர் சொற்பெற் றுயர்ந்தன - தமிழால் எடுத்துரைத்து, திருவாய் மலர்ந்தருளிய நம்மாழ்வாரது பாசுரங்களினால், மேன்மை அடைந்தன ;
அரவணை விரும்பி அறிதுயில் அமர்ந்த அணிதிரு அரங்கர், அனந்தாழ்வான் மீது பள்ளிகொண்டு யோக நித்திரை செய்தருளுகின்ற அழகிய திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்க நாதப் பெருமானும்,

மணிதிகழ் முகுந்தர் அழகிய மணவாளர் கொற்றப் புயங்களே ! - நீலமணியைப் போல விளங்குகின்ற முகுந்தர் என்ற திருநாமத்தைக் கொண்டவருமாகிய அழகிய மணவாளரது வெற்றியையுடைய திருத்தோள்களாகும்.

பாட்டுடைத் தலைவனது தோள்களின் ஆற்றலை வகுத்து, வருணித்துக் கூறுதல் 'புயவகுப்பு' என்று உறுப்பாகும். இது புறத்திணையுள் பாடாண் திணையைச் சார்ந்தது. 'வகுப்பு' என்பது வண்ணக்கவியாகும். வகுத்துக் கூறுவதால் 'வகுப்பு'என்பதை பெயர்பெற்ற இப்பாடல், 8,16,32 அல்லது 64 கலைகளை உடையதாகவும், நான்கு எதுகைகளைப் பெற்றதாகவும், எடுத்துக் கொண்ட ஒரு பொருளின் புகழையே வகுத்துக் கூறுவதாகவும் அமைவது இதன் இலக்கணம் என்று அறுவகை இலக்கண நூல் கூறும்.

திருவரங்க நாதரின் தோள் சிறப்பினைக் கூறவந்த ஆசிரியர், அத்திருத்தோள்களின் தோற்றச் சிறப்பினை எடுத்துக்கூறி, தேவர்களுக்காகத் திருப்பாற்கடலைக் கடைந்ததையும், இரணியனைக் கொன்றழித்ததையும், இராவணனை அழித்து அறத்தை நிலைநாட்டியதையும், கண்ணனாக அவதாரம் எடுத்த நாளில் கம்சனால் ஏவப்பட்ட விளாமரம், கன்று, பறவை முதலான வடிவங்களில் வந்த அசுரர்களை அழித்து, குடகூத்து, குரவைக்கூத்து முதலியன ஆடியதையும் விளக்குகின்றார். மேலும், நப்பின்னையை மணம்புரிய ஏழு எருதுகளை அடக்கியதையும் கோவர்த்தனகிரியைக் குடையாகக் கொண்டு இடையர்களையும் பசுக்கூட்டங்களையும் காத்ததையும், கம்சனால், கண்ணனைக் கொல்வதற்காக அனுப்பப்பட்ட குவலயாபீடம் யானை கொல்லப்பட்டதையும், மண்ணுலகோரும் விண்ணுலகோரும் அடைக்கலம் என்று வந்து வணங்க, அவர்களது இன்னல்களைப் போக்கிய மாட்சிமையையும் கூறுகின்றார். வேதங்கள் துணிந்த பொருள் தமிழ்ப் பாசுரங்களால் மேன்மை அடைந்தமையை இப்பாடலில் எடுத்துக் கூறுகிறார்.

குயிற்றல் - செய்தல், தொடியணி - தோள்வளை, ககனவில் - இந்திர தனுசு, வானவில், அலங்கல் - மாலை, மதுகரம் - தேனீ, குவலயம் - பூவுலகம், சனகனது அணங்கு - சீதை, பொதுவர் - ஆயர், பொதுவர்

மகள் - ஆயர் மகள், நப்பின்னை, நதிபதி - நதிகளுக்குத் தலைவன். அகடு - நடுவுடல், உரிஞ்சி - தேய்த்து, அலமறல் - துன்பமுறல், வடவரை - மந்தரமலை.

புழுகு - கஸ்தூரி, புனுகு, கலவை - பலவித வாசனைப் பொருள்களுடன் சேர்ந்த சந்தனம், அலைப்ப - அசைய, அளைதல் - கலத்தல், மடங்கல் - அழிதல், முரணுதல் - மாறுபடுதல், நிசிசரர் - அசுரர். சிலை - கோதண்டம். மிகுகளவு - வஞ்சனை, குணில் - குறுந்தடி, பறவை - பறவையின் வடிவில் வந்த பகாசுரன் என்ற அசுரன். குருந்தை - குருந்த மரம், குடநடம் - குடக்கூத்து, குரவை - குரவைக்கூத்து, பிணைதல் - கூத்தாடுதல், பொருதல் - போர் செய்தல், செறுத்தல் - அழித்தல், எழுமுகில் - எழுவகை மேகங்கள், அவை சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலா வர்த்தம், சங்காரித்தம், துரோணம், காள முகி, நீலவருணம் என்பன. வடவை - வடவை முகாக்கினி, கடலிடத்துள் படபை என்னும் பெண் குதிரையின் முகத்தில் தோன்றி மழை முதலியவற்றால் மிகுதியாக வரும் நீரை வற்றச் செய்வதொரு தீ. களிறு - ஆண். யானை, குவலயாபீடம் என்ற பெயரினையுடைய கம்சனுடைய பட்டத்து யானை, முனிதல் - கோபித்தல், கோடு - தந்தம்.

உம்பர் - தேவர். அபயம் - அடைக்கலம், புரத்தல் - பாதுகாத்தல், திகிரி - சக்கரம், சக்கராயுதம், சங்கம் - சங்கு, அருமறை - அரிய வேதம், சடகோபர் - நம்மாழ்வார், கொற்றம் - வெற்றி, முகுந்தர் - முக்தி இன்பத்தையும் இவ்வுலக இன்பத்தையும் கொடுப்பவர்.

அழகிய மணவாளன் - திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் திருநாமங்களுள் ஒன்று. ஸ்ரீ ரங்கநாதன், பெரிய பெருமாள், நம்பெருமாள் ஆகியன இத்தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் மற்றுமுள்ள திருநாமங்களாகும்.

ஃ

**பாற்கடலைக் கடைந்த வரலாறு (கூர்ம அவதாரத்தில்)**

துர்வாச முனிவரின் சாபத்தால் தேவலோகத்தில் உள்ள செல்வங்கள் அனைத்தும் கடலில் வீழ்ந்து மறைந்தன. தேவர்கள் மூப்பும் மரணமும் இல்லாமல் மூவுலக ஆட்சியை பெற விரும்பினர். இவ்விரண்டிற்காக அமிர்தத்தைப் பெறவும் கடலில் வீழ்ந்த செல்வங்களை மீட்கவும் பாற்கடலைக் கடைய முனைந்தனர். மந்தர மலையை மத்தாகவும் வாசுகிப் பாம்பைக் கடைக்கயிறாகவும் கொண்டு ஒருபுறம் அசுரர்களும் மற்றொருபுறம் தேவர்களுமாக இருந்து கொண்டு பாற்கடலைக் கடைந்தார்கள். அவ்வாறு வாசகியின் தலைப்பக்கம் அசுரர்களும் வால்பக்கம் தேவர்களுமாக நின்று கொண்டு கடையும் பொழுது மத்தாக இருந்த மந்தரகிரியானது கடலில் ஆழ்ந்து போயிற்று. எம்பெருமான் ஆமை வடிவெடுத்து மூழ்கிப்போன மலையை எழுப்பி கடைவதற்கு உதவினார். இதை,

*"அரங்கனே! தரங்கநீர் கலங்கஅன்று குன்றுசூழ்*
*மரங்கள்தேய மாநிலம் குலுங்கமாசு ணம்சுலாய்*
*நெருங்கநீ கடைந்தபோது நின்றசூரர் என்செய்தார்."*

- (திருச்சந்த விருத்தம் :21)

என்று அலைகளையுடை கடல்கலங்க, மந்தர மலையைச் சூழ்ந்த மரங்கள் தேயவும், பூமியானது குலுங்கவும், வாசுகி என்ற நாகத்தை அழுந்தச் சுற்றி பாற்கடலைக் கடைந்தருளின காலத்தில், தேவர், அசுரர் என்ன செய்தார்கள் என்ற வினாவை அரங்கர் முன் வைக்கிறார் திருமழிசையாழ்வார். பாற்கடலைக் கடைந்தபோது, மந்தரமலையின் தலையான ஒருபாகத்தைத் தன் ஒருகையால் பற்றி அலையின் நீர்த்திவலைகள் அண்டத்தின் மேற்சென்று தெறிக்கும்படி செய்தவன் எம்பெருமான் என்பதை,

*மலைமுகடு மேல்வைத்து வாசகியைச் சுற்றித்*
*தலைமுகடு தானொருகை பற்றி – அலைமுகட்(டு)*
*அண்டம்போய் நீர்தெறிப்ப அன்று கடல்கடைந்தான்*
*பிண்டமாய் நின்ற பிரான்.*

- (இயற்பா - மூன்றாம் திருவந்தாதி :46)

என்று எடுத்தோதுவார் பேயாழ்வார்.

"எதிரொருவ ரின்றி அகிலவுல குந்தன்
அழுதொடி விருந்த இரணியன் மடங்கண்
முரணிய வரைமார்பன் ஒற்றிப் பிளந்தனை."

என்ற பாடலடியில் எம்பெருமான், இரணியனை அழித்த செய்தியை எழிலுற எடுத்துரைத்துள்ளார் ஆசிரியர். எம்பெருமான் நரசிம்ம அவதாரமெடுத்து இரணியனைக் கொன்ற கதை முதல் பாடலின் உரையில் அமைந்துள்ளது.

**இராவணனை அழித்தது (இராம அவதாரத்தில்)**

இராவணனால் கவரப்பட்ட சீதை இலங்கையில் அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டிருக்கின்ற செய்தியை, அனுமன் சென்று அறிந்து வந்து சொன்னபின்பு, இராம இலட்சுமணர் வானர சேனைகளுடன் கடல்கடந்து இலங்கையைச் சேர்ந்து இராவணனோடு பெரும்போர் நிகழ்த்தினார்கள். அப்போரின் பொழுது இராமன் எய்த கணையால், தன்னுடைய பத்துத் தலைகளும் அறுபட இராவணன் அழிந்துபோனான். அவனுடைய தம்பியாகிய வீடணனுக்கு இலங்கை அரசை வழங்கினான் இராமன்.

வைகுந்த விண்ணகரத்தின் சிறப்பினை எடுத்தோதப் புகும் திருமங்கையாழ்வார், முன்னொரு காலத்தில் சீதா பிராட்டிக்காக இராவணனுடைய பத்துத் தலைகளும் இருபது தோள்களும் சிதறும்படி ஒப்பற்ற தனது கோதண்டவில்லை வளையச் செய்து அம்புகளைச் செலுத்தி இலங்கயைப் பொடி செய்த தடந்தோளன் இனிது மருவி உறையும் கோயில் என்பதாக,

"மின்னனைய நுண்மருங்குல் மெல்லியற்கா இலங்கை
வேந்தன்முடி ஒருபதும் தோளிருபதும் போயுதிர,
தன்நிகரில் சிலைவளைத்து அன்றிலங்கை பொடிசெய்த
தடந்தோளன் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்."
- (பெரிய திருமொழி 3:9:5)

என்று பாசுரத்தில் எடுத்துரைப்பார். அதன் பின்னர் இராவணனின் தம்பியான வீடணனுக்கு அரசளித்து அருளியதை,

"முனைமுகத்து அரக்கன் மாள முடிகள் பத்துறுத்து வீழ்த்தாங்கு
அனையவற்கு இளைய வற்கே அரசளித்து அருளி னானே"
(பெரியதிருமொழி 4:6:4)

என்று மேலும் எடுத்துக் கூறியுள்ளார்.

இப்பாடலில்,"எறிகடல் கலங்கி முறையிட நிசிசரர் இலங்கை அரசொடு மலங்க, ஒரு சிலை இருகால் வளைத்துச் சிவந்தன" என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். இதில் ஒருசிலை ஒருகால் வளைத்துச் சிவந்தன' என்ற தொடருக்கு இருபொருள்களை அறியலாம். ஒரு சிலையாகிய கோதண்டத்தின் இரு கோடிகளையும் வளைத்துச் சிவந்தன என்பது ஒருபொருள் என்பர். ஒரு சிலையாகிய கோதண்டத்தை இரண்டு முறை வளைத்துச் சிவந்தன என்பது மற்றொரு பொருள். ஒருமுறை ஆணவம் கொண்ட வருணனின் செருக்கை அழிப்பதற்கு, மற்றொரு முறை சீதையைச் சிறைப்பிடித்த இராவணனை அழிப்பதற்க என்பர் சிலர்.

**கடல் வற்றின வரலாறு [இராமாவதாரத்தில்]**

சீதை இலங்கையில் இருக்கின்ற செய்தியை அனுமனின் வாயிலாக அறிந்துகொண்ட இராமபிரான், வானர சேனையுடன் புறப்பட்டுச் சென்று கடற்கரையை அடைகிறான். கடலைக் கடக்க வழி இல்லாததால், அக்கடலரசனாகிய வருணனை வணங்கி, நிற்க, கடலரசன் இராமபிரானின் மகிமையை உணராமல் அலட்சியமாக இருந்தான். இராமபிரான் அதனைக் கண்டு கோபம் கொண்டு, 'அனைவரும் நடந்து செல்லும்படி கடலை வற்றச் செய்வேன்' என்று கோதண்டத்தை வளைத்து அம்புகளைத் தொடுக்கத் தொடங்கிய அளவில், அதன் உக்கிரத்தால், வருணன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து, அப்பெருமானைச் சரணடைந்து, கடல்வடிவமான தன்மேல் அணைகட்டுவதற்கு ஒடுங்கி நிற்க, பின்பு இராமமூர்த்தி வானரங்களைக் கொண்டு மலைகளால் சேதுபந்தனம் அமைத்தான் என்பது வரலாறு.

சீதா பிராட்டியை வேறுபடுத்தின கொடுமையால், இராவணனுடைய மணிமுடிகளைக் கடுவேகத்தில் பொடிப்படுத்தி

இலங்கையைப் பாழாக்கிட வேண்டுமென்ற எண்ணிக் கடலைக் கடக்க வேண்டி, கடலரசனை நோக்கி அழகிய வில்லை வளைத்துக் கொலை அம்புகளைப் பிரயோகித்து மறிகடல் நெறிபட வானரவீரர்களைக் கொண்டு அலைகடலில் மலைகளினால் அணைகட்டின பெருமான் அரங்கமா நகர் அமர்ந்தான் என்பதைக்,

> கரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரிந்த
> கொடுமையில் கடுவிசை அரக்கன்
> எரிவிழித் திலங்க மணிமுடி பொடிசெய்து
> இலங்கைபாழ் படுப்பதற்கு எண்ணி
> வரிசிலை வளைய அடுசரம் துரந்து
> மறிகடல் நெறிபட மலையால்
> அரிகுலம் பணிக்கொண்டு அலைகட லடைத்தான்
> அரங்கமா நகர்அமர்ந் தானே.
> - (பெரிய திருமொழி-5:7:7)

என்ற பாசுரத்தில் கூறும் திருமங்கையாழ்வார் எடுத்தோதுவார். இராமன் இருமுறை வில்லை வளைத்ததை,

> "குரைகடலை அடலம்பால் மறுக வெய்து
> குலைகட்டி மறுகரையை அதனால் ஏறி
> எரிநெடுவேல் அரக்கரொடு இலங்கை வேந்தன்
> இன்னுயிர்கொண் டவன்தம்பிக் கரசும் ஈந்து
> திருமகளோ டினிதமர்ந்த செல்வன் தன்னைத்
> தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
> அரசமர்ந்தான் அடிசூடும் அரசை அல்லால்
> அரசாக எண்ணேன்மற் றரசு தானே."
> - (பெருமாள் திருமொழி 10:7)

என்று விவரிப்பார் குலசேகராழ்வார்.

## விளாமரத்தின்மீது கன்றினை எறிந்த வரலாறு
## (கிருஷ்ணாவதாரத்தில்)

கண்ணனைக் கொல்லுவதற்காக, கம்சன் விளாமர வடிவாக இருந்த கபிதாசுரனையும் கன்று வடிவமாக இருந்த வத்சாசுரனையும் ஏவினான். விளாமர வடிவில் இருந்த கபிதாசுரன், கண்ணன் மரவடிவில் இருந்த தன்னடிகீழ் வரும்போது, மேலே விழுந்து கொல்ல எண்ணி நின்றான். அதனை அறிந்த கண்ணபிரான், தன்னைக் கொல்லும் பொருட்டுக் கன்று வடிவமாக வந்த வத்சாசுரனின் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்து, விளாமரத்தின்மீது எறிந்தார். விளாமரத்தின் கனிகள் உதிர, கபிதாசுரனும் வத்சாசுரனும் ஒரே நேரத்தில் மரணத்தைத் தழுவினார்கள். இதனைப்,

> பன்றியும் ஆமையும் மீனமும் ஆகிய
> பாற்கடல் வண்ணா! உன்மேல்
> கன்றின் உருவாகி மேய்புலத் தேவந்த
> கள்ள அசுரன் தன்னை
> சென்று பிடித்துச் சிறுக்கைக ளாலே
> விளங்காய் எறிந்தாய் போலும்
> என்றுமென் பிள்ளைக்குத் தீமைசெய் வார்கள்
> அங்ஙனம் ஆவர்களே.

– (பெரியாழ்வார் திருமொழி 3:3:7)

என்று, தன்னைக் கொல்ல கன்றின் உருவாக வந்த அசுரனைப் பிடித்து விளாமரத்தின் காய்களை நோக்கி விட்டெறிந்ததைத் தன்னுடைய பாசுரத்தில் விளக்குகிறார் பெரியாழ்வார். 'விளங்கனியை இளங்கன்று கொண்டுதிர எறிந்து' (பெரிய திருமொழி - 3:9:7) என்று இதனைக் குறிப்பர் திருமங்கையாழ்வார். மேலும் கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்த காளை' (பெரிய திருமொழி-3:10:8) என்ற மற்றொரு பாசுரத்திலும் குறிப்பிட்டுள்ளார்.

'கனிசாயக் கன்றெறிந்த கோமான்' (இயற். முதல் திரு.87) எனப் பொய்கையாரும், விளவின் காய் கன்றினால் வீழ்ந்தவனே (இயற். இரண்.

திரு:100) எனப் பூதத்தாழ்வாரும், கற்றுக் குணிலை விளங்கனிக்குக் கொண்டெறிந்தான் (இயற். மூன். திரு.60) என்று பேயாழ்வாரும் இந்நிகழ்வைக் கூறுவர்.

**குருந்த மரத்தை முறித்த வரலாறு (கிருஷ்ணாவதாரத்தில்)**

கிருஷ்ணனைக் கொல்லும் பொருட்டுக் கம்சனால் ஏவப்பட்ட பல அசுரர்களில் ஒருவன், அக்கண்ணபிரான் மலர் கொய்யும் பொருட்டு விரும்பி ஏறும் குருந்தமரம் ஒன்றில் புகுந்து கொண்டான். கண்ணன் வந்து குருந்தமரத்தில் ஏறும்பொழுது, தான் முறிந்து வீழ்ந்து அவனை வீழ்த்த வேண்டும் என்று கருதி இருந்தான். அதனை அறிந்த மாய வேலைகளில் வல்லவனாகிய கண்ணபிரான் அம்மரத்தைப் பிடித்துத் தன்வலிமையைக் கொண்டு முறித்து அழித்தான்.

கண்ணனுடைய பல்வேறு அருளிச் செயல்களைச் சொல்லிச் செல்லும் பொய்கையாழ்வார்,

*"மலையால் குடைகவித்து மாவாய் பிளந்து*
*சிலையால் மராமரமேழ் செற்று – கொலையானை*
*போர்க்கோ டொசித்தனவும் பூங்குருந்தம் சாய்த்தனவும்*
*கார்க்கோடு பற்றியான் கை."*

- (இயற்பா முதல் திருவந்தாதி:27)

என்ற பாசுரத்தில் பூங்குருந்த மரத்தைச் சாய்த்து முறித்ததைக் குறிப்பிடுவர். திருமங்கையாழ்வார், 'பூங்குருந்து ஒசித்தான் (பெரியதிருமொழி 9:10:8) என்பார். "குருந்தமொன் றொசித்தானொடும் சென்று" (பெரியாழ்வார் திருமொழி 4:4:7) என்று பெரியாழ்வார் இதனைச் சுட்டுவர். "எதிர்ந்த பூங்குருந்தம் சாய்த்து" (திருச்சந்த விருத்தம்.37) என எதிரிட்ட அழகிய குருந்த மரத்தில் இருந்த அசுரனை அழித்த நிகழ்வை" திருமழிசையாழ்வார் எடுத்துரைக்கிறார்.

**புள்ளின் வாயைக் கிழித்த வரலாறு (கிருஷ்ணாவதாரத்தில்)**

கண்ணனைக் கொல்லுவதற்காக ஏவப்பட்ட பல்வேறு அசுரர்களில் ஒருவன், கொக்கின் வடிவம் கொண்ட பகாசுரனாவான். யமுனை நதிக்கரையில் கண்ணன், பலராமன் மற்ற பிள்ளைகளும்

விளையாடிக் கொண்டிருந்தனர். அங்கு சென்ற பகாசுரன், கண்ணனை விழுங்கினான். கொக்குவடிவில் இருந்த அந்த அசுரனின் தொண்டைக்குக் கீழே செல்லாமல், வாய்ப்பகுதியில் நின்று கொண்ட கண்ணன், தன் உடலின் மீது தாங்கமுடியாத வெப்பத்தை உண்டாக்கிக் கொள்ள, அதைத் தாங்க முடியாமல் அசுரன், கண்ணனை வெளியிலே உமிழ்ந்து கொத்தத் தொடங்கினான். உடனே, கண்ண பெருமான் அப்பறவையின் வாயின் பிளவுபட்ட இரண்டு அலகுகளையும் தன் கைகளால் பற்றி இரண்டாகக் கிழித்து எறிந்து அவனைக் கொன்றான்.

பெரியாழ்வார், கண்ணன் குழல் வாரக் காக்கையை வாவென்று அழைத்து, பள்ளத்தில் மேயும் கொக்கின் உருவில் வந்த பகாசுரனைப் பார்த்து, அதனைப் பறவையே என்று எண்ணுமாறு விரைவாக வாயைக் கிழித்துப் போட்ட நிகழ்வை,

"பள்ளத்தில் மேயும் பறவை உருக்கொண்டு
கள்ள அசுரன் வருவானைத் தான்கண்டு
புள்ளிது வென்று பொதுக்கோவாய், கீண்டிட்ட
பிள்ளையை வந்துகுழல் வாராய் அக்காக்காய்"

- (பெரியாழ்வார் திருமொழி-2:5:4)

என்ற பாசுரத்தில் எடுத்துரைத்துள்ளார்.

ஆண்டாள் நாச்சியார் இவ்வருளிச் செயலைக் குறிப்பிடும்பொழுது, புள்ளின்வாய் கீண்டான்" (திருப்பாவை :13) என்பர்.

"நான்ற முலைத்தலை நஞ்சுண்டு உறிவெண்ணெய்
தோன்றஉண் டான்வென்றி சூழ்களிற்றை ~ ஊன்றி
பொருதுடைவு கண்டானும் புள்ளின்வாய் கீண்டானும்
மருதிடைபோய் மண்ணளந்த மால்."

- (இயற்பா - முதல் திருவந்தாதி :18)

என்ற பாசுரத்தில் புள்ளின் வாயைப் பிளந்ததைக் குறிப்பிடுவார் பொய்கையாழ்வார். 'புள்ளின்வாய் பிளந்த புனிதா' (பெரிய திருமொழி 7:1:4) என்று கண்ணனை அழைக்கிறார் திருமங்கையாழ்வார்.

இப்பாடலில், குடநட மகிழ்ந்து குரவைகள் பிணைந்து' என கண்ணபிரான் குடக்கூத்து, குரவைக் கூத்து ஆடிய செய்தியைக் குறிப்பிடுகிறார் ஆசிரியர். இவற்றுள் குடக்கூத்து என்பது குடம் எடுத்து ஆடும் கூத்தாகும். இடையர்களுக்கு ஐசுவரியம் மிகுந்தால் செருக்கினைப் போக்குவதற்காக ஆடும் ஆட்டமாகும். அதாவது தலையிலே அடுக்குக் குடங்கள் இருக்க, இரண்டு தோள்களிலும் குடங்கள் இருக்க, இரண்டு கைகளிலும் குடங்களை ஏந்தி, ஆகாயத்தில் எறிவதும் ஏற்பதுமாய் ஆடுகின்ற கூத்தாகும். அக்கூத்தினை ஆடுவதில் கண்ணபிரான் வல்லவனாக விளங்கியதை, குடங்களெடுத் தேறவிட்டுக் கூத்தாட வல்ல எம்கோவே' (பெரியாழ்வார் திருமொழி 2:7:7) என்ற தொடரால் விளக்குவார் பெரியாழ்வார். இக்கூத்தின்போது, பறை ஒலிக்க, ஆயக்குலப் பெண்கள் ஆடலைக் கண்டு மகிழ்ந்திருப்பர். என்பதை,

"மன்னு பறைகறங்க, மங்கையர்தம் கண்களிப்பக்
கொன்னவிலுங் கூத்தனாய்ப் பெயர்த்தும் குடமாடி"
- (பெரியதிருமடல் : 73 - 74)

என்று எடுத்துரைப்பர் திருமங்கையாழ்வார். பிரிவற்றாது போலிப் பொருள்களைக் கண்டு வருந்தும் தலைவியின் நிலையைக் கூறும் தாயின் கூற்றாக, 'கூத்தாடுபவர் யாரேனும் குடத்தைக் கொண்டு ஆடினால், என்மகள், கண்ணபிரானின் குடக்கூத்தை எண்ணிக் 'கோவிநதனோ ஆடுவது" என ஓடுவாள்' என்பதை "கூத்தர் குடமெடுத் தாடில் கோவிந்த னாம்எனா ஓடும்" (திருவாய்மொழி 4:4:6) என்பார் நம்மாழ்வார்.

'குரவைக் கூத்து' என்பது கைகளைக் கோத்து ஆடும் ஒரு கூத்தாகும். சிலப்பதிகாரம் 'ஆய்ச்சியர் குரவை' என்ற காதையில் இக்குரவைக் கூத்துக் குறித்த விரிவான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

'குரவை யென்பது – காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைப்பிணைத்து ஆடுவது என்பார் அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரையில்.

கண்ணன் ஆடிய குரவைக் கூத்தின் தன்மையை, "தன் முன்னவனாகிய பலதேவனுடனும் கண்ணன், அழகிய

வளையலையணிந்த நப்பினையுடனும், ஆயர்குலச் சிறுமியர் கூந்தலில் சூடிய மாலைகள் கழுத்துப் புறத்திலே வீழ்ந்து அசைய, கைகளில் அணிந்த அழகிய வளையல்கள், ஒலிக்கின்ற தாளத்திற்கு ஏற்ப அடிபெயர்த்து, யசோதைப் பிராட்டி வணங்கிப் புகழ, துவாரகையில் தாதாகிய எருப்பொருந்திய மன்றத்தில் ஆடிய குரவைக் கூத்து மிகுதியும் தகுதியுடையதாக இருந்தது" என்பதை, சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை காதையில் ஆடுநர் புகழ்தல் பகுதியில் மாதரி கூறுவதாக அமைந்துள்ளது. இதனை,

"மாயவன்தன் முன்னினோடும் வரிவளைக்கைப் பின்னையொடும்
கோவலர்தம் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர
ஆய்வளைச்சீர் கடிபெயர்த்திட்டு அசோதையார் தொழுதேத்த
தாதெரு மன்றத்து ஆடும்குரவையோ தகவுடைத்தே."

(சிலப்.ஆய்ச்சியர் குரவை: ஆடுநர் புகழ்தல் 1–4)

என்று கூறும் மாதரி, கறவைப் பசுக்களும் கன்றுகளும் துயர்நீங்க குரவையாடுவோம் என்று ஆய்ச்சியர்களை அழைக்கிறாள்.

"...........ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன்
தன்முன் ஆடிய வாலசரிதைநாடங்களில்வேல்
நெடுங்கண் பிஞ்ஞையோடு ஆடிய குரவை ஆடுதும்
யாமென்றாள் கறவைகன்று துயர்நீங்குக எனவே"

– (சிலப். ஆய்ச்சியர் குரவை:கருப்பம்)

என இளங்கோவடிகள் இதனைக் கூறுவார். இதே செய்தி,

"கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம்நம்
ஆத்தலைப் பட்ட துயர்தீர்க்க.........."

– (சிலப். ஆய்ச்சியர் குரவை : படர்க்கை பரவல்)

என அக்காதையின் இறுதியில் மீண்டும் எடுத்துரைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

"குரவை யாய்ச்சிய ரோடு கோத்ததும்"

(திருவாய்மொழி 6:4:1) என்று கூறுவர் நம்மாழ்வார், "இளையாரொடும் மன்றில் குரவை பிணைத்த மால் என்னை மால் செய்தான்(பெரியதிருமொழி : 11:2:1) என்று இளம் பெண்களோடு

மன்றங்களில் கைகோத்துக் குரவைக் கூத்து ஆடியவனுமான கண்ணபிரான் என்னை மயங்கும் படியாகச் செய்துவிட்டான் என தலைவியின் கூற்றாகத் திருமங்கையாழ்வார் எடுத்துரைக்கிறார்.

**ஏழு எருதுகளை அடக்கிய வரலாறு (கிருஷ்ணாவதாரத்தில்)**

கண்ணன், நப்பின்னைப் பிராட்டியைத் திருமணம் செய்து கொள்வதற்காக, யாவருக்கும் அடங்காத ஏழு எருதுகளையும் ஏழு திருவுருக் கொண்டு சென்று, அவற்றில் வலிமையை அடங்கித் தழுவினான்.

"மன்னுமா மலர்க்கிழத்தி வையமங்கை மைந்தனாய்
பின்னுமாயர் பின்னைதோள் மணம்புணர்ந்த தன்றியும்
உன்னபாதம் என்னசிந்தை மன்னவைத்த நல்கினாய்
பொன்னிசூழ் அரங்கம்மேய புண்டரீகன் அல்லையே"
- (திருச்சந்த விருத்தம் : 55)

என்ற பாசுரத்தில், தாமரை மலரில் வாசம் செய்கின்ற திருமகளுக்கும் பூமிப் பிராட்டிக்கும் மணாளனாய், மேலும், ஆயர் குலத்தில் உதித்த நப்பின்னைப் பிராட்டியினுடைய தோளோடு மணம் புணர்ந்தவன் நம்பெருமாள் என்கிறார் திருமழிசையாழ்வார்.

"மின்னின் அன்ன நுண்மருங்குல் வேயேய் தடந்தோள் மெல்லியற்கா
மன்னு சினந்த மழவிடைகள் ஏழன்று அடர்த்த மாலது இடம்."
- (பெரிய திருமொழி 5:1:6)

என்று நுட்பமான இடையையும் பருத்த தோள்களையும் உடைய நப்பின்னைக்காக மாறாத கோபத்தையுடைய ஏழு இளம்காளைகளை வென்றொழித்ததைத் திருமங்கையாழ்வார் எடுத்துரைப்பார்.

**மலையைக் குடையாய் பிடித்த வரலாறு (கிருஷ்ணாவதாரத்தில்)**

திருவாய்ப்பாடியில் ஆயர்கள் எல்லோரும் கூடி, மழைக்காக இந்திரனை வழிபாடு செய்வது வழக்கம். அப்பொழுது சமைத்த சோற்றை கண்ணபிரான் ஒருமுறை, அவனுக்குத் தராமல் கோவர்த்தனகிரிக்கு

இடச்சொல்லி, தானே ஒரு தெய்வமாக, அமுது செய்தருள, அவ்விந்திரன் கோபம் கொண்டான், அதனால் புஷ்கலாவர்த்தம் என்று சொல்லக்கூடிய பலமேகங்களை ஏவி, ஏழுநாட்களுக்கு இடைவிடாத பெருமழையைப் பொழியும்படி செய்தான். இதனால் திருவாய்ப்பாடியில் இருந்த இடையர்களும் இடைச்சியர்களும் பெருத்த துன்பத்திற்கு ஆளாயினர். பசுக்களும் கன்றுகளும் மிகுதியாகத் துன்புற்று வருந்தின. அதனைக் கண்ட கண்ணன் கோவர்ததனம் என்னும் மலையை எடுத்துக் குடையாகப் பிடித்து, மழையில் இருந்து அனைத்து உயிர்களையும் காத்தருளினான்.

“அண்ட ரானவர் வானவர் கோனுக்கென்று
அமைந்தசோ றதுவெல்லாம்
உண்டு கோநிரை மேய்த்தவை காத்தவன்
உகந்தினிது உறைகோயில்”
- (பெரிய திருமொழி 4:2:3)

என்னும் பாசுரத்தில், தேவேந்திரனுக்குப் பொங்கலிட வேண்டுமென்று ஆய்ச்சியர்கள் சமைத்த சோறு முழுவதும் அமுது செய்தவனாயும் பசுக்கூட்டங்களை காத்தவனாயும் விளங்குபவன் கண்ணபிரான் என்று போற்றுகின்றார் திருமங்கையாழ்வார். மேலும் ‘ஆநிரைக்கு அன்று இடர்தீர்ப்பான் கூடிய மாமழை காத்த கூத்தன்’ (பெரிய திருமொழி 3:3:1) என்றும் கூறுவர். இதனை நம்மாழ்வார்,

“மேல்நிரை கீழ்புக மாபுர ளசுனை
வாய்நிரை நீர்பிளி றிச்சொரி யஇன
ஆநிரை பாடியங்கே ஒடுங்க அப்பன்
தீமழை காத்துக் குன்றமெடுத் தானே”
- (திருவாய்மொழி 7:4:10)

என்ற பாசுரத்தில் மேயும் பசுக்கூட்டங்கள் யாவும் மண்ணில் அழியும்படியாகவும், சுனைநீர் பெருகி, வெள்ளப் பெருக்கெடுத்து ஆயர்ப்பாடியே ஒடுங்கிக் கலங்குமாறும், தீமை செய்யும் கருத்தில் உண்டாக்கிய கொடிய மழையைத் தடுத்து, எந்தையாகிய பெருமான், கோவர்த்தன மலையை எடுத்துக் குடையாகப் பிடித்துக் காத்தருளியவர் என்று விளக்கி, எடுத்துரைக்கின்றார். ‘குன்றெடுத்து ஆநிரை காத்த ஆயா’ (பெரியாழ்வார் திருமொழி 4:10:9) என்று பெரியாழ்வார் இதனைச் சுட்டுவர்.

ஆண்டாள் நாச்சியார், 'காலிகள் உய்ய மழைதடுத்துக் கொற்றக் குடையாக ஏந்திநின்ற கோவர்தனத்து என்னை உய்த்திடுமின்' (நாச்சியார் திருமொழி 12:8) என்று தலைவி ஒருத்தி புலம்புவதாக எடுத்துரைத்திருப்பதை நாச்சியார் திருமொழி சுட்டுகிறது.

யானையைக் கொன்ற வரலாற்றை முதல்பாடலில் முச்சீர் ஓரடி அம்போதரங்கம் நான்கின் உரையில் காண்க.

இந்நிகழ்ச்சியைத் திருமங்கையாழ்வார், தன் பாசுரத்தில்,

"பருந்தாள் யானையின் கொம்பினைப் பறித்து அதன்
பாகனைச் சாடிப்புக்கு
ஒருங்க மல்லரைக் கொன்றுபின் கஞ்சனை
உதைத்தவ னுறைகோயில்"

- (பெரிய திருமொழி 4:2:4)

என்று, பருத்த துதிக்கையையுடைய குவலயாபீடம் என்னும் யானையினது தந்தங்களைப் பிடுங்கிக் கொன்று, அந்த யானையின் பாகனையும் கொன்று, உள்ளே நுழைந்து, மல்லர்களை அழித்து, அதன்பின் கம்சனை முடித்தவன் என்று விளக்குகிறார். மேலும், மற்றொரு பாசுரத்தில்,

"வெஞ்சினக் களிறும் வில்லொடு மல்லும்
வெகுண்டிறுத் தடர்ந்தவன் தன்னை
கஞ்சனைக் காய்ந்த காளையம் மானைக்
கருமுகில் திருநிறத் தவனை..........."

- (பெரிய திருமொழி 4:3:7)

என்றும் குறிப்பிடுவர்.

**நேரிசை வெண்பா**

8. புயநான் குடையானை பொன்னரங்கத் தானை
அயனாம் திருவுந்தி யானை – வியனாம்
பரகதிக்குக் காதலாய்ப் பாடினேன் கண்டீர்
நரகதிக்குக் காணாம னான்.

புயநான் குடையானை பொன்னரங்கத் தானை – நான்கு திருக்கைகளை உடையவனும் பொன் வேயப்பட்ட விமானங்களைக் கொண்ட திருவரங்கத்தில் எழுந்தருளி இருப்பவனும்,

அயனாம் திருவுந்தி யானை - நான்முகனாகிய பிரமதேவன் தோன்றி அழகான நாபிக் கமலத்தை உடையவனுமாகிய,

வியனாம் பரகதிக்குக் காதலாய்ப் பாடினேன் - பெருமை பொருந்திய பரமபதத்தை அடைவதற்கு விருப்பம் கொண்டு உன்னைப் போற்றிப் பாடினேன்.

கண்டீர் நரகதிக்குக் காணாம னான் - நரகதிக்குச் செல்லுதலாகிய நிலையை நான் அடையாமல் இருப்பதற்கென்று. காண்பீர்களாக.

திருவரங்கத்தில் எழுந்தருளி இருக்கக்கூடிய பெருமானைப் போற்றுவோருக்குச் சிறப்புமிக்க பரமபதம் நிச்சயம் வாய்க்கும். நரகத்திற்குச் செல்லுதலாகிய நிலை இருக்காது. ஆதலால் எம்பிரானைப் போற்றிப் பாடினேன் என்று மற்றோருக்கும் உணர்த்துவது. இப்பாடலில், பிரமதேவனைத் தோற்றுவித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

**பிரமன் தோன்றிய வரலாறு.**

உலகம் தோன்றுவதற்கு முன்பு திருமால் ஒருவரே விளங்கினார். யோகநித்திரையில் இருந்த அவர், கால சக்தியால் தூண்டப்பட்டு விழிப்படைந்தார். 'நான் பல சந்ததிகள் ஆவேன் என்று மனஉறுதி கொண்டார். அதனால் தம்மிடத்தில் அமைந்துள்ள சித்து, அசித்து முதலான் தத்துவங்களைக் கொண்டு, தன் உந்திக் கமலத்தில் இருந்து, நான்முகனாகிய பிரம்மாவைத் தோற்றுவித்தார். அவரிடம், 'வேதங்களின் வலிமையைக் கொண்டு உலகங்களைப் படைப்பாயாக' என்று கட்டளையிட்டார். அதன் பிறகு முதன் முதலில் தாமே நீரைப் படைத்து அதன்மீது பிரம்மாண்டத்தை உண்டாக்கினார். அந்தப் பிரம்மாண்டத்தினுள் பிரம்ம தேவரை வைத்துத் தாம் இலட்சுமி தேவியுடன் பாற்கடலை அடைந்து யோக நித்திரையில் அமர்ந்தார். இவ்வாறாக நான்முகனின் தோற்றம் நிகழ்ந்தது என்பர்.

சங்க இலக்கியப் பரிபாடல் முதன்முதலில் பிரமனின் தோற்றம் குறித்துப் பேசுகிறது. போரில் மேன்மையையுடைய, அவுணருடைய வலிமைகெட குற்றம் நீங்கிய தலைமையை உடைய திருமால், காமன், சாமனாகிய நான்முகன் ஆகிய இருவருக்கும் தந்தை என்பதை எடுத்துரைக்கும்.

"பொருவேம் என்றவர் மதம்தபக் கடந்து
செருமேம் பட்ட செயிர்தீர் அண்ணல்
இருவர் தாதை..............."

- (பரிபாடல் பாடல் 1:29 -30)

மற்றொரு பாடலில்,

"வாய்மொழி ஓடை மலர்ந்த
தாமரைப் பூவினுள் பிறந்தோனும் தாதையும்
நீயென மொழியுமால் அந்தணர் அருமறை"

- (பரிபாடல் : பாடல் 3 12-14)

என, 'உண்மையான வேதம்' என்ற ஓடையில் மலர்ந்த தாமரை மலரில் பிறந்த நான்முகனும் அவனுடைய தந்தையும் நீயே ஆவாய் என்று வேதங்கள் சொல்லுகின்ற செய்தியினை எடுத்தோதும்.

எம்பெருமானின் உந்திக் கமலத்தில் நான்முகன் தோன்றியதைப் பெரியாழ்வார் திருமொழியில்,

'உந்தி யெழுந்த உருவ மலர்தன்னில்
சந்தச் சதுமுகன் தன்னைப் படைத்தவன்'

- (பெரியாழ்வார் திருமொழி 2:5:8)

என்று பெரியாழ்வார் எடுத்தோதுவர்.

பொன்னரங்கம் - பொன்னால் வேயப்பட்ட விமானத்தையுடைய திருவரங்கம். வியன் - பெருமை, காதல் - விருப்பம், திக்கு - திசை.

### கட்டளைக் கலித்துறை

9. நானந்த வைகுந்த நாடெய்தி வாழிலென் ஞாலத்தன்றி
ஈனம் தவாத நிரயத்து வீழிலென் யானடைந்தேன்
கோனந்தன் மைந்தனை நான்முகன் தந்தையைக் கோயிலச்சு
தானந் தனையெக் காறா அமுதை அரங்கனையே !

நானந்த வைகுந்த நாடெய்தி வாழிலென் - நான் அந்தப் பரமபதமாகிய வைகுண்ட வாழ்வை அடைந்து பேரின்பம் அடைந்தால் அதனால் என்ன பயன்?

ஞாலத்தன்றி ஈனம்தவாத நிரயத்து வீழிலென் - இவ்வுலகத்தில் அல்லாமல் இழிவு மாறாத நரக உலகில் விழுந்த பெருந்துன்பம் அடைந்தாலும் என்ன பயன்?

கோனந்தன் மைந்தனை நான்முகன் தந்தையை - இடையர்களுக்குத் தலைவனாகிய நந்தகோபரது புதல்வனும் பிரமனின் தந்தையுமாகிய,

கோயிலச்சு தானந் தனையெனக் காரா அமுதை அரங்கனையே - பெரியகோயிலெனப் போற்றப்படும் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள அச்சுதன், அநந்தன் என்ற திருநாமங்களைப் பெற்று விளங்குபவனும், அடியவனாகிய எனக்குத் தெவிட்டாத தேவ அமிர்தம் போன்றவனுமாகிய திருவரங்கனுடைய திருவடிகளை,

யானடைந்தேன் - நான் சரணமென்ற தஞ்சமடைந்தேன்.

தென்னரங்கரின் பெறுவதற்கு அரிதான திருவடிகளைத் தஞ்சம் அடைந்ததால், இனி வைகுந்தமாகிய சுவர்க்கம் கிடைப்பினும் இழிவு மாறாத நரகம் கிடைப்பினும் அதனால் எனக்கு எந்தப் பயனும் இல்லை என்று ஆசிரியர் கூறுவதாக அமைந்துள்ளது.

இன்பத்தைத் தரும் சுவர்க்கம் எனக்குக் கிட்டினால் என்ன பயன்? துக்கமயமான எல்லையற்ற நரகங்கள் நான் தப்ப இயலாதவாறு வளைத்துக் கொண்டால் என்ன பயன்? நான் விரும்புகின்ற எம்பெருமானின் பேரருள் கிடைத்துவிட்டது என்பதை,

"இன்பந் தருபெரு வீடுவந் தெய்திலென்? எண்ணிறந்த
துன்பந் தருநிர யம்பல சூழிலென்? தொல்லுலகில்
மன்பல் லுயிர்கட் கிறைவன் மாயன் எனமொழிந்த
அன்பன் அனகன் இராமா னுசன்என்னை ஆண்டனனே"

- (இராமானுச நூற்றந்தாதி :30)

என்று எடுத்துக் கூறும் திருவரங்கத்தமுதனாரின் பாடல், இப்பாடலோடு ஒப்பிட்டு நோக்கத் தக்கதாகும்.

எம்பெருமானை, 'கோனந்தன் மைந்தன்' என்பார் ஆசிரியர். கண்ணனுக்குத் தாய்மாமனாகிய கம்சனால் தீங்கு நேர்ந்து விடக்கூடாது என்பதால் கோகுலத்தில, ஆயர்களின் தலைவனாகிய நந்தகோபரின் மகனாக வளர்க்கப்படுகிறான். நம்மாழ்வார், 'எடுத்த பேராளன் நந்த கோபன்தன் இன்னுயிர்ச் சிறுவனே' (திருவாய்மொழி 8:1:2) என்பார். திருமங்கையாழ்வார் 'நந்தன் மதலை' (பெரிய திருமொழி 8:4:9) என்றரைப்பார் பெரியாழ்வார் 'நந்தன் மதலையைக் காகுந்தனை' (பெரியாழ்வார் திருமொழி 3:9:11) என்பர். திருப்பாவையில் ஆண்டாள், 'கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்' (திருப்பாவை :1) என்று எழிலுற எடுத்தோதுவர்.

எம்பெருமானின் ஆயிரம் நாமங்களிலும் ஆயிரம் கருத்துக்கள் அமைந்த பெயர்களைச் சொல்லி, அவனுடைய குணங்களை அனுபவிக்கும் அடியார், அவ்வாயிரத்துள் 'அச்சுதன்' என்ற பெயரையும் ஒன்றாகக் குறிப்பர். தொண்டரடிப் பொடியாழ்வார், அச்சுதா ! அமரரேறே ! ஆயர்தம் கொழுந்தே ! (திருமாலை :2) என்ற இறைவனை விளிப்பர்.

ஈனம் - இழிவு, நிரயம் - நரகம், கோனந்தன் - கண்ணனின் வளர்ப்புத் தந்தையாகிய நந்தகோபர். அச்சுதன் - அழிவில்லாதவன். அநந்தன். எல்லையற்ற குணங்களை உடையவன்.

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

10. அரவில் நடித்தானும் உரவில் ஒடித்தானும்
அடவி நடந்தானும் புடவி இடந்தானும்
குரவை பிணைத்தானும் பரவை அணைத்தானும்
கோசலை பெற்றானும் வீசலை உற்றானும்
முரனை அறுத்தானும் கரனை ஒறுத்தானும்
முத்தி அளித்தானும் அத்தி விளித்தானும்
பரம பதத்தானும் சரம விதத்தானும்
பாயல் வடத்தானும் கோயில் இடத்தானே.

அரவில் நடித்தானும் உரவில் ஒடித்தானும் - காளியனெனும் நாகத்தின் மீது நர்த்தனம் செய்தவனும், வலிமை பொருந்திய சிவபெருமானின் வில்லை ஒடித்தவனும்,

அடவி நடந்தானும் புடவி இடந்தானும் - காட்டைக் கடக்க நடந்தவனும், பிரளய காலத்தில் பூமியைக் கோட்டால் குத்தி எடுத்தவனும்,

குரவை பிணைத்தானும் பரவை அணைத்தானும் - குரவைக்கூத்து ஆடிய்வனும், கடலில் அணை கட்டியவனும்,

கோசலை பெற்றானும் வீசலை உற்றானும் - கோசலை பெற்ற தவப்புதல்வனாக விளங்குபவனும், வீசுகின்ற அலைகளை உடைய திருப்பாற்கடலில் பள்ளிகொண்டு இருப்பவனும்,

முரனை அறுத்தானும் கரனை ஒறுத்தானும் - முரன் என்னும் அசுரனைக் கொன்றவனும், கரன் என்னும் அரக்கனை அழித்தவனும்,

முத்தி அளித்தானும் அத்தி விளித்தானும் - தம் அடியவர்களுக்கு மோட்சத்தை அருளுகின்றவனும், கஜேந்திரன் என்னும் யானையை முதலையிடமிருந்து மீட்டபோது 'ஆதிமூலமே' என்று அழைக்கப்பட்டவனும்,

பரம பதத்தானும் சரம விதத்தானும் - பரமபதத்தில் எழுந்தருளியுள்ளவனும் சரோமபாயத்தைத் தன்னை அடையும் வழியாகக் கொண்டவனும்,

பாயல் வடத்தானும் கோயில் இடத்தானே - ஆலிலையைச் சயனமாகக் கொண்டவனும், திருவரங்கத்தை இடமாக உடைய எம்பெருமானாவான்.

திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் செயற்கரிய பல்வேறு செயல்களையும் தொகுத்தமைந்துள்ளார் ஆசிரியர்.

அரவில் நடித்ததும், குரவை பிணைத்ததும், முரணை அறுத்ததும் கிருஷ்ணாவதாரத்தில் எனவும், உரவில் ஒடித்ததும் அடவி நடந்ததும், பரவை அணைத்ததும், கோசலை பெற்றதும் கரனை அறுத்ததும் இராமவதாரத்தில் எனவும் புடவி இடந்தது வராக அவதாரத்தில் எனவும், அத்தி விளித்தது கஜேந்திர மோட்சத்தில் எனவும், பரம பதத்தான் என்றது பரத்துவநிலையில் எனவும், பாயல் வடத்தான் என்றது பிரளய காலத்தில் எனவும் கோயில் இடத்தான் அர்ச்சாவதாரத்தில் எனவும் முக்தி அளித்தலும் கரமவிதத்தான் ஆதலும் எல்லா நிலைகளிலும் அறிக கலம்பகம் கூறுவது இங்குச் சுட்டத்தக்கது.[10]

..........................................................................................

10. திருவரங்கக் கலம்பகம் (மூவர் உரை), பக்.38.

**காளிய நடனம் ஆடியது. (கிருஷ்ணாவதாரத்தில்)**

யமுனை மடுவிலே காளியன் என்ற கொடிய நச்சுப் பாம்பு, தன் இனத்தாருடன் வசித்து வந்தது. அதன் விஷக்கடுமையால் மேலே பறக்கும் பறவைகள் கூட, சிறகுகள் கருகி, அம்மடுவில் விழுந்து மடிந்து விடும். இக்கொடுமையை ஒழிப்பதற்காக, கண்ணன் ஒரு நாள், கரையிலிருந்த கடம்ப மரத்தின்மேல் ஏறி, மடுவில் குதித்துப் புகுந்து கலக்கி, காளிங்கனின் படத்தை மிதித்துத் தனது திருவடிகளில் அணிந்து கொண்டிருந்த சிலம்புகள் ஒலிக்கும்படி, குதித்து நடனம் ஆடினான். ஆயர்கள் மகிழ குழலை ஊதினான். இதைத் தாங்க இயலாத பாம்பு, விழிகள் பிதுங்கி, நஞ்சைக் கக்கி, கடலுக்குள் சென்று விட்டதாம்.

இந்நிகழ்வினைப் பெரியாழ்வார், கொதிக்கின்ற மடுவின் நீரில் புகுந்து கலக்கி, கரைமீது இருந்த கடம்ப மரத்தின் மேல் ஏறி, அந்தக் காளியனுடைய கொடிய படத்தின் தன்கால் சிலம்பு ஒலிக்கம்படி குதித்தும் கூத்தாடி, வேய்க்குழலை ஊதி, வித்தகனாய் நின்ற கண்ணபிரான் இப்பொழுது குழந்தையாக இருந்து அப்பூச்சி காட்டுகிறான் என்பதை,

"தாயும் நீர்ப்புக்குக் கடம்பேறி காளியன்
தீய பணத்திற் சிலம்பார்க்கப் பாய்ந்தாடி
வேயின் குழலூதி வித்தகனாய் நின்ற
ஆயன் வந்து அப்பூச்சி காட்டுகிறான்."

- (பெரியாழ்வார் திமொழி - 2:1:3)

என்பர். இதனைத் திருமங்கையாழ்வார், கடுவிடம் உடைய காளியன் நாகம் கிடந்த பொய்கையைக் கலங்கச் செய்து, அந்த நாகத்தை வருந்தும்படிச் செய்து அதனுடைய படங்கள் முறியும்படியாக, கடம்ப மரத்தினின்று பாய்ந்து படத்திலுள்ள மணிகள் எல்லாம் சிந்தும்படியாகச் செய்து, அப்படங்களின்மீது நின்று பலவகையான நடனங்களைச் செய்த பெருமான் என்றுரைப்பர். இதனை,

"கடுவிடம் உடைய காளியன் தடத்தைக்
கலக்கிமுன் அலக்கழித்து அவன்தன்
படம்இறப் பாய்ந்து பன்மணி சிந்தப்
பல்நடம் பயின்றவன் கோயில்"

- (பெரியதிருமொழி 4:10:3)

என்ற பாசுரத்தில் விளக்குவர்.

**வில் ஒடித்தது.**

விதேக தேசத்து மதிலாபுரியில் வாழ்ந்த ஜனகமகாராஜன், தன்னுடைய முன்னோரான தேவராதனிடம் சிவபிரானால் தரப்பட்டிருந்த பெரிய வலிய வில்லை எடுத்து வளைத்தவனுக்கே தான்வளர்த்த மகளான சீதையைத் திருமணம் செய்து கொடுப்பதென்று அறிவித்திருந்தான். வேள்வி முடித்த விசுவாமித்திர முனிவருடன் மிதிலைக்குச் சென்ற இராமபிரான், அவ்வில்லை வளைத்து நாணேற்றுகையில் அது பேரொலிபடுமாறு முறிந்திட, அதனால் சனகன் இராமனின் ஆற்றலைக் கண்டு வியந்து, களிப்புற்றுச் சீதையை இராமனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

இந்நிகழ்ச்சியை ஆழ்வார்கள் தம்பாசுரங்களில் எடுத்தோதியுள்ளனர். சீதையை மணம்புரிந்து கொள்வதற்காகச் சிவனுடைய வில்லை முறித்ததை,

"வேய்போலும் எழில்தோளி தன்பொருட்டா
விடையோன்தன் வில்லைச் செற்றாய்"
- (பெருமாள் திருமொழி 9:4)

செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக்கு ஆகிச்
சினவிடையோன் சிலையிறுத்து மழுவாள் ஏந்தி
வெவ்வரிநற் சிலைவாங்கி வென்றி கொண்டு
வேல்வேந்தர் பகைதடிந்த வீரன்.........."
- (பெருமாள் திருமொழி 10:3)

என்றும் குலசேகராழ்வார் இதனை எடுத்துரைப்பர்.

"வாறாரும் இளம்கொங்கை மைதிலியை மணம்புணர்வான்
காறார்திண் சிலையிறுத்த தனிக்காளை.................."
- (பெரியதிருமொழி 4:1:8)

என்று, சீதாபிராட்டியை மணம் செய்து கொள்வதற்காக வலிமையுள்ள வில்லை முறித்த ஒப்பற்ற காளைபோன்றவன் இராமபிரான் என்பர் திருமங்கையாழ்வார்.

"நெறிகருங் குழல்மடவாய் நின்னடியேன் விண்ணப்பம்
செறிந்தமணி முடிச்சனகன் சிலையிறுத்து நினைக்கொணர்ந்து
அரசு களைகட்ட அருந்தவத்தோன் இடைவியக்க
செறிந்தசிலை கொடுதவத்தைச் சிதைத்ததுமோர் அடையாளம்"
- (பெரியாழ்வார் திருமொழி 3:10:1)

என்று பெரியாழ்வார் தன்பாசுரத்தில் இதனை எடுத்தோதுவார்.

**அடவிகடந்தது (இராம அவதாரத்தில்)**

இராமன், சீதையைத் திருமணம் செய்து கொண்டபிறகு, தசரதன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய நாள் குறிக்கிறான். மந்தரையின் சூழ்ச்சியால் மனம் கலங்கிய கைகேயி, தசரதனிடம், முன்பு தனக்குக் கொடுத்திருந்து இரண்டு வரங்களுக்கப் பயனாகத் தன் மகனான பரதனுக்குப் பட்டம் கட்டவும், கோசலையின் மகளான இராமனைப் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய அனுப்பவேண்டுமென்றும் கேட்கிறாள். பின் இராமனை வரவழைத்து, 'உன் தந்தை பரதனுக்கு நாடுகொடுத்துப் பதினான்கு ஆண்டுகள் உன்னைக் காடேகச் சொல்லுகிறார்' என்று சொல்ல, இராமபிரான் தந்தை சொல்லைத் தட்டாமல் சீதையோடும் இராமனோடும் அயோத்தியை விட்டுப் புறப்பட்டு வனவாசம் சென்றான்.

போர் செய்வதில் சிறந்தவனாகிய இராமபிரான், தன்னுடைய தந்தை தசரதனின் சொல்லால் அரசை இழந்து, அயோத்தியில் உள்ளவர்கள் அனைவரும் பின்சென்றுமுறையிடவும், தான்கொண்ட உறுதியைக் கைவிடாமல் செல்வமுடைய கோசல வளநாட்டைக் கைவிட்டுக் காட்டிற்குச் செல்லலானான். திசைகள் தோறும் மின்னல் போன்று கானலே பரவியிருக்கப் பெற்றதும், வெறுந்தரையாக விளங்கக் கூடியதும், கற்கள் நிறைந்து, புற்கள் கருகி, மூங்கில் வெடித்து, அழல்காற்று அழற்றியடித்து விளங்கக் கூடியதும், கொலையைப் பற்றிய ஓசைகளே எங்கும் நிறைந்திருக்கும் கொடிய கானகத்தில் வெப்பக் கதிர்களையுடைய சூரியனுடைய வெயிலோடு கொடியனவான பருக்கை கற்களின் மேலே சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமபிரான் தன்னுடைய பஞ்சுபோன்ற மெல்லிய அடிகளையுடைய சீதாபிராட்டி பின்தொடர காட்டைக் கடந்தான் என்பதனை,

–போர் வேந்தன்

"தன்னுடைய தாதை பணியால் அரசொழிந்து
பொன்னகரம் பின்னே புலம்ப வலங்கொண்டு
மன்னும் வளநாடு கைவிட்டு மாதிரங்கள்
மின்னுருவில் விண்தேர் திரிந்து வெளிப்பட்டு
கல்நிறைந்து தீய்ந்து கழையுடைந்து கால்சுழன்று
பின்னும் திரைவயிற்றுப் பேயே திரிந்துலவா
சொன்னவிலும் வெங்கானத் தூடுகொடுங் கதிரோன்
துன்ன வெயில்வறுத்த வெம்பரல்மேல் – பஞ்சடியால்
மன்னன் இராமன்பின் வைதேகி யென்றுரைக்கும்
அன்ன நடைய அணங்கு நடந்திலளே?"

- (பெரிய திருமடல் :27)

என்ற பாசுரத்தால் திருமங்கையாழ்வார், இராமபிரான் காடு கடந்ததை விரிவாக எடுத்துரைப்பர்.

பெரியாழ்வார், கைகேயி மந்தரையினால் மனம் வேறுபட்டு தசரதன் தனக்குக் கொடுத்த வரங்களைக் கேட்க, மனம் கலங்கிய தசரதச் சக்கரவர்த்தி மறுத்துச் சொல்லமுடியாமல் மயக்கம் அடைய, கைகேயி, 'குலக்குமரா ! காடுறையப் போ' என்று சொல்லி விடை கொடுக்க, காட்டுக்குச் சென்றதை,

"கலக்கிய மா மனத்தனளாய்க் கைகேசி வரம்வேண்ட
மலக்கிய மா மனத்தனனாய் மன்னவனும் மறாதொழிய
குலக்குமரா ! காடுறையப் போஎன்று விடைகொடுப்ப,
இலக்குமணன் தன்னோடும் அங்கேகியதோர் அடையாளம்"

- (பெரியாழ்வார் திருமொழி 3:10:3)

என்று, சீதைக்கு அனுமன் தெரிவித்த அடையாளங்களுள் ஒன்றாக எடுத்துரைப்பர்.

மனுகுலத்தில் பிறந்த அரசர்களில் சிறந்தவனே ! மலர் அணிந்த கூந்தலையுடைய கோசலையும் சுமத்திரையும் மனம் வருந்தக் கூனியின் சொல்லைக் கேட்ட கைகேயியின் சொல்லை ஏற்றுக் கொண்டு கானகமே மிகவிரும்பி இன்று நீ துறந்த இந்த நகரத்தை நானும் துறந்து வானகமே

விரும்பிப் போகிறேன் என்று 'தனயன் கான்புகத் தசரதன் புலம்பல்' என்ற தலைப்பிலமைந்த பாசுரங்களில் ஒன்றில்,

"தேன்நகுமா மலர்க்கூந்தல் கௌசலையும்
சுமித்திரையும் சிந்தை நோவ
கூனுருவில் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட
கொடியவள்தன் சொற்கொண் டின்று
கானகமே மிகவிரும்பி நீதுறந்த
வளநகரைத் துறந்து நானும்
வானகமே மிகவிரும்பிப் போகின்றேன்
மனுகுலத்தார் தங்கள் கோவே"

- (பெருமாள் திருமொழி 9:10)

என விரிவாகக் குலசேகராழ்வார் எடுத்தோதியுள்ளார்.

'புடவி இடந்தது' என்பதற்கு 'பூமியைக் குத்தி எடுத்தல்' என்ற பொருட்பட அமைத்துள்ளார் ஆசிரியர்.

**புடவி இடந்தது**

இரணியது உடன்பிறந்தவனாக இரணியாட்சன் என்னும் கொடிய அசுரன் தன் வலிமையால் பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக் கொண்டு கடலில் மூழ்கிச் சென்றபோது, தேவர்
, முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் வராக அவதாரமாக அவதரித்துக் கடலினுள் புக்க அவ்வசுரனை நாடிக் கண்டு பொருது, கொன்று பாதாள உலகத்தைச் சார்ந்திருந்த பூமியை அங்கு நின்று கோட்டால் குத்தி எடுத்துக்கொண்டு வந்து பழையபடி விரித்தருளினார் என்பர்.

இந்நிகழ்வை சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான பரிபாடல் விளங்குகிறது.

"புருவத்துக் கருவல் கந்தத்தால்
தாங்கிஇவ் உலகம்தந்து அடிப்படுத்ததை நடுவண்
ஓங்கிய பலர்புகழ் குன்றினோடு ஒக்கும்"

- (பரிபாடல் 4: 22-24)

என்று முன்னாளில் இந்த நிலம் வெள்ளத்தில் முழுகியபோது, பன்றியாகி வன்மையுடைய கழுத்தால் தாங்கி, இந்த உலகத்தை மேலே கொண்டுவந்து திருத்திய செய்கை, நிலத்தின் நடுவே நின்று அதைத் தாங்கி உயர்ந்த எம்பெருமானின் அருளிச்செயல் பலராலும் புகழப்படும் செய்கையை ஒக்கும் என்ற விளக்கும்.

ஒரு கரிய நிறமுடைய மலையானது இரு பிறையைக் கவ்விக்கொண்டு புறப்பட்டது போல ஒப்பற்ற அழகிய வராகமாகி, பாதாளத்தில் அழுந்திக் கிடந்த பூமியைத் தந்தத்திலே கொண்டு காத்த எந்தையே ! என்பதை,

"நீலவரை இரண்டு பிறைகவ்வி நிமிர்ந்தது ஒப்பக்
கோல வராகமொன் றாய்நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்"
- (திருவாய்மொழி 10:10:7)

என்று நம்மாழ்வார் தம் பாசுரத்தில் எடுத்தோதுவர்.

"புண்ணியந்தெய் வதமுஞ்சேர் பூலோ கத்தைப்
புற்பாய்போற் சுருட்டிக்கொண் டேபா தாளம்
நண்ணிரணி யாட்சனைப்பின் தொடர்ந்தே யேகி
நலமுடனே யாதிவரா கத்தே வாகி
மண்ணுலுக மனைத்துமிடந் தெடுத்தோர் கோட்டில்
வைத்துவர வவன்மறிக்க வதைத்துத் தேவர்
எண்ணவுல கீரேழும் படியப் பண்ணாய்
இறைவாநா ராயணனே எம்பி ரானே"
- (எம்பிரான் சதகம் : 86)

என்னும் எம்பிரான் சதகம் பாடலும் திருமால் வராக அவதாரம் எடுத்து பூமியைத் தன் கோடுகளில் தாங்கிய செய்தியை எடுத்துரைக்கும்.

'குரவை' என்பதற்குக் கைகோத்தாடுவது என்பது பொருள். 'குரவைக் கூத்தே கைகோத்தாடல்' என்பது திவாகர நிகண்டு தரும் பொருளாகும். பல நாட்டியப் பெண்கள் வட்டமாக நின்று சித்திரமான தாளையங்களுடன் மெதுவாகவும் உன்னதமாகவும் கூத்தாடுதல் என்பது

இதன் இலக்கணம். காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைத்தாடும் இந்தக் கூத்தைக் குறித்த செய்திகள் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான காப்பிய நூல்களில் காணக் கிடைக்கின்றன.

சிலப்பதிகார 'ஆய்ச்சியர் குரவை' காதையில் ஆடுநர் புகழ் பகுதியில், கறவைப் பசுக்களும் கன்றுகளும் துயர்நீங்க, குரவையாடுவதற்கு, முதுமகளாகிய மாதரி பிற ஆய்ச்சியர்களை அழைப்பதாக அமைந்துள்ளது. மணிமேகலையில், கண்ணபிரான் குரவைக்கூத்து ஆடியது குறித்துச் செய்தி காணப்படுகிறது. மணிமேகலை, தன் துணையாகியப் பேடினைப் பிரிந்த குளத்தில் வாழும் அன்னப் பறவையுடன் மடப்பம் பொருந்திய மயில்பேடையும் ஆண்மயிலும் சேர்ந்து இரண்டு சிறகுகளையும் விரித்து ஒருங்கே எழுந்து சுழல்வனவற்றைக் கண்டு மகிழ்கிறாள். நீலமணி போன்ற நிறமுடைய கண்ணனும், அவன் முன்வனுமாகிய பலதேவனும் நப்பின்னையும் துவாரகையின் எருமன்றத்தே ஆடிய குரவையாகும் இது என்று எண்ணி வியக்கின்றாள். இதனைச் சாத்தனார்,

> "புணர்துணை நீங்கிய பொய்கை அன்னமொடு
> மடமயிற் பேடையுந் தோகையுங் கூடி
> இருசிறை விரித்தாங் கெழுந்துடன் கொட்பன
> ஒருசிறை கண்டாங் குண்மகிழ் வெய்தி
> மாமணி வண்ணனுந் தம்முடன் பிஞ்ஞையும்
> ஆடிய குரவையிஃ தாமென நோக்கியும்"
>
> – (மணிமேகலை ; சிறைக்கோட்டம்
> அறக்கோட்டம் ஆக்கிய காதை :61-61)

என்று எழிலுற எடுத்தோதுகிறார். 'குரவை ஆய்ச்சியரோடு கோத்ததும் குன்றம் ஒன்ற ஏந்தியதும், உரவுநீர் பொய்கை நாகம் காய்ந்ததும்..(திருவாய்மொழி 6:4:1) முதலான செயல்கள் ஆதிசேட சயனத்தை உடைய பெருமான் செய்த வியப்புக்குரிய செயல்கள் என எடுத்துரைக்கிறார் நம்மாழ்வார்.

இராவணனால் கவரப்பட்ட சீதையை மீட்பதற்காக இராமபிரான், வானர சேனையுடன் சென்று, மலைகளைக் கொண்டு சேது அணையைக்

கட்டிய செய்தி, இப்பாடலில் 'பரவை அணைத்தது' என்று சொல்லப்பட்டுள்ளது.

இலங்கையைச் சென்றடைய பழைய மரங்களைக் கடலுள்புக வெட்டிப்போட்டு, நீர்த்திவலைகள் கிளர்ந்து வானத்திலே அளாவும்படியாக வானரங்களைத் துணைகொண்டு மலைகளால் அணைகட்டினவன் எம்பெருமான்.

"மல்லை முந்நீர் அதர்பட விரிவெஞ் சிலைகால் வளைவித்து
கொல்லை விலங்கு பணிசெய்ய கொடியோன் இலங்கை புகலுற்று
தொல்லை மரங்கள் புகப்பெய்து துவலை நிமிர்ந்து வான் அணவ
கல்லால் கடலை அடைத்தானூர் கண்ண புரம்நாம் தொழுதுமே"
- (பெரியதிருமொழி 8:6:4)

என்று இதனை எழிலுற எடுத்தோதுகிறார் திருமங்கையாழ்வார். மேலும் மற்றொரு பாசுரத்தில்,

"கரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த
கொடுமையில் கடுவிசை அரக்கன்
எரிவிழித் திலங்கு மணிமுடி பொடிசெய்து
இலங்கைபாழ் படுப்பதற்கு எண்ணி
வரிசிலை வளைய அடுசரம் துரந்து
மறிகடல் நெறிபட மலையால்
அரிகுலம் பணிகொண்டு அலைகடல் அடைத்தான்
அரங்கமா நகரமர்ந் தானே.
- (பெரியதிருமொழி 5:7:7)

என்று இந்நிகழ்வினை விரிவாக எடுத்துரைப்பர்.

**முரனை அறுத்தது (கிருஷ்ணாவதாரத்தில்)**

நரகாசுரன் என்ற கொடிய அசுரன் தேவர்களுக்கெல்லாம் துன்பம் கொடுத்து வந்தான். அவனுடைய கொடுமைகளைக் கண்டு அஞ்சிய தேவேந்திரன் கண்ணனிடம் வந்து முறையிட்டான். இந்த நரகாசுரனின் அமைச்சனாக விளங்கியவன் முரன். அறிவும் ஆற்றலும் நன்கு

அமையப்பெற்றிருந்தாலும், வஞ்சகம் முதலிய தீக்குணங்கள் இவனுடைய நெஞ்சகத்தில் நிறைந்திருந்தன. நரகாசுரனை அடக்குவதற்குப் புறப்பட்ட கண்ணன், முதலில் முரனை வெற்றி கொண்டு, நரகாசுரனின் இருப்பிடத்திற்குள் நுழைந்தான். அப்பொழுது தன்னைத் தாக்க வந்த முரனின் ஏழு புதல்வர்களும் ஒன்ற சேர்ந்து ஒடிவந்து கண்ணனை எதிர்த்தனர். அவர்களையும் வென்று நரகாசுரனையும் அழித்தான் கண்ணன்.

முரன் என்ற இந்த அசுரனைப் பல அசுரர்களைக் கொன்ற செயல்களோடு இணைத்து, குரூரமான கவந்தன், தந்தவக்கரன், கரன், முரன் இவர்களுடைய தலைகளைச் சின்னாபின்னம் ஆக்கியவனும், பலவகைப்பட்ட ஆயுதங்களையும் திருக்கையில் உடையவன் என்பதை,

"கடுங்க வந்தன் வக்கரன் கரன்முரன் சிரமவை
இடந்து கூறு செய்தபல் படைத்தடக்கை மாயனே
கிடந்திருந்து நின்றியங்கு போதும் நின்ன பொற்கழல்
தொடர்ந்து விள்வ லாததோர் தொடர்ச்சிநல்க வேண்டுமே."
- (திருச்சந்த விருத்தம் : 104)

என்று தன்பாசுரத்தில் திருமழிசையாழ்வார் எடுத்தோதுகின்றார். மேலும் இதே செய்தியை,

"கால நேமி வக்கரன் கரன்முரன் சிரமவை
கால னோடு கூடலில் குனித்தவிற்கை வீரனே"
- (திருச்சந்த விருத்தம் 59:3-4)

என்று மற்றொரு பாசுரத்தில் எடுத்துரைப்பர்.

**கரனை ஒறுத்தல் [இராமவதாரத்தில்]**

இலட்சுமணரால் மூக்கு, காதுகள், முலைகள் முதலியவைகளை இழந்த சூர்ப்பணகை தன்னுடைய சபையில் இருந்த, பெருமை மிகுந்த கரனுடைய கால்களில் விழுந்து, தனக்கு நேர்ந்த அவமானத்தைக் கூறி முறையிட்டாள். சூர்ப்பணகையின் மொழி கேட்டு கரன், பெருஞ்சினம் கொண்டான். மிகப்பெரிய படையோடும் அறுபது லட்சம்

படைவீரர்களோடும் படைத்தலைவர்கள் பதினால்வரோடும், தூடணன், திரிசிரா என்னும் படைத்தலைவர்கள் இருவரோடும் புறப்பட்டு வந்து இராம இலட்சுமணர்களோடு பெரும்போர் தொடங்கினான். இராமபிரான் சீதாபிராட்டிக்குக் காவலாக இலட்சுமணரை இலைக்குடிலில் தங்குமாறு செய்தார். தாம் தனியே சென்று எதிர்த்துப் பெரும்போர் செய்தார். அரக்கர்கள் அனைவரையும் கொன்று வெற்றி பெற்றார்.

கம்பராமாயணம், ஆரணிய காண்டத்தில் கரன் வதைப் படலத்தில் இந்நிகழ்ச்சி விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

"காற்றினிலும் கனலினிலும் கடியானை
கொடியானைக் கரனை உங்கள்
கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன்
என்றுசலம் கொண்டு போனாள்"
- (கம்ப: ஆரணிய: சூர்ப்பணகைப் படலம் : 359)

என்று, காற்றைக் காட்டிலும் விரைவுள்ளவனும் தீயைக் காட்டிலும் கொடுமையுள்ளவனுமான கரனை - உங்கள் எமனை, இப்பொழுதே அழைத்து வருகிறேன்' என்ற சூர்ப்பணகையின் கூற்றாகக் கம்பர் இப்பாடலில் கரனின் பண்புகளை எடுத்துரைத்துள்ளார்.

எம்பெருமாள், சூர்ப்பணகையின் மூக்கை அறுத்து, கரன், தூடணன் என்னும் அரக்கர்களின் உயிர்களைக் கவர்ந்தவன் என்பதைக்,

"கலைவணங்கு நோக்கரக்கி மூக்கை நீக்கி
கரனோடு தூடணன்தன் உயிரை வாங்கி"
-(பெருமாள் திருமொழி 10:5)

என்று தம் பாசுரத்தில் குலசேகராழ்வார் எடுத்தோதுவர்.

'கரன்முரன் சிரமவை இடந்து' (திருச்சந்த விருத்தம் :104) என்றும் 'கரன்முரன் சிரமவை காலனோடு கூடலில் குனித்த விற்கை வீரனே" (திருச்சந்த விருத்தம் :59) என்றும் கரனை எம்பெருமான் ஒறுத்ததைத் திருமழிசையாழ்வார் எடுத்துரைப்பர்.

எம்பெருமானை 'முத்தி அளித்தான்' என்பர் ஆசிரியர். அடியவர்களுடைய வினைகளை நீக்கி முக்திபேறு வழங்குபவன் என்பதை, பத்துத் திக்குகளுக்குள்ளும் பத்துத் திக்குப் பாலர்களுக்குள்ளும் நிறைந்திருப்பவனாய் ஏழு சுரங்களுக்கும் ஒன்பது சுவைகளுக்கும் இருப்பிடமாய், பதினான்கு வகைப்பட்ட உலகங்களில் உள்ளவர்கள் பெறக்கூடிய நன்மைக்காகத் தசாவதாரங்களோடு, பொறுமையினால் முழுமையானவனான எம்பெருமானிடம் பக்தியுடையவராய் இருப்பவர்களுக்கன்றி மற்றையோர்க்கு முக்தி அடைய இயலாது என்பர். இதனைப்,

> "பத்தி னோடு பத்துமாயோர் ஏழி னோடோர் ஒன்பதாய்
> பத்தி னால்திசைக் கண்நின்ற நாடு பெற்ற நன்மையாய்
> பத்தி னாய தோற்றமோ டோராற்றல் மிக்க ஆதிபால்
> பத்தராம் அவர்க்க லாது முத்தி முற்றல் ஆகுமே"
>
> - (திருச்சந்தவிருத்தம் :79)

என்ற எழிலுற திருமங்கையாழ்வார் எடுத்தோதுவர்.

'அத்தி விளிந்தது' என்ற ஆசிரியர் குறிப்பது கஜேந்திரன் என்னும் யானை,'ஆதிமூலமே' என்று அழைத்ததையாகும்.

**கஜேந்திரனைக் காத்த கதை**

திருமால்மீது அன்பு பூண்ட இந்திரத்யும்நன் என்ற அரசன், ஒரு முனிவரின் சாபத்தால் ஒரு காட்டில் கஜேந்திரன் என்னும் யானையாகப் பிறந்தான். அப்பொழுதும் திருமால்மீது பூண்ட அன்பு மாறாமல் நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு இறை வழிபாடு செய்து வந்தான். ஒருநாள், பெரிய தடாகமொன்றில் பூப்பறிப்பதற்காக இறங்கியபோது, தேவலன் என்னும் முனிவன் தவம்செய்தபோது அவனுடைய காலைப் பற்றி இழுத்து, அவனது சாபத்தால் பெரிய முதலையாகிக் கிடந்த ஹூஹூ என்னும் கந்தருவன், யானையின் காலைக் கவ்வினான். காலை விடுவித்துக் கொள்ள முடியாமல் கஜேந்திரன் என்ற அந்த யானை 'ஆதி மூலமே' என்று கூவியழைக்க, திருமால் அங்கு கருட வாகனத்தில் எழுந்தருளி, சக்கராயுதத்தால் முதலையைக் கொன்று அதனைக் காத்து முத்தியை அருளினான்.

தன் காலை விழுங்கின முதலையினது பாதாளவழி போன்ற பெரிய வாயிலுள்ள வெண்மையான பற்கள் ஊன்ற அம்முதலையினுடைய பல்லிடத்திற்கு மிகவும் வருந்திய யானையாகிய கஜேந்திரனுடைய பெரிய துன்பத்தைப் போக்கிய, எம்பெருமானுடைய அருளிச் செயலை,

"விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயிறுற அதன்விடத் தினுக்கு அனுங்கி
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த
அரங்கத்தம் மாபள்ளி எழுந்தரு ளாயே"
- (திருப்பள்ளியெழுச்சி :2)

என்று தன் பாசுரத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார் எடுத்துரைப்பர். இந்நிகழ்வினைக்,

"கொழுந்தலரும் மலர்ச்சோலைக் குழாங்கொள் பொய்கைக்
கோள்முதலை வாளெயிற்றுக் கொண்டதற்கு எள்கி
அழுந்தியமா களிற்றினுக்கு அன்றாழி ஏந்தி
அந்தரமே வரத்தோன்றி அருள்செய் தானே"
- (பெரிய திருமொழி 2:10:3)

என்றும்,

"குலத்தலைய மதவேழம் பொய்கை புக்குக்
கோள்முதலை பிடிக்கஅதற் கனுங்கி நின்று
நிலத்திகழும் மலர்ச்சுடரோய் சோதி என்ன
நெஞ்சிடர்தீர்த் தருளியஎன் நிமலன் காண்மின்"
- (பெரிய திருமொழி 7:8:3)

என்றும் தம் பாசுரங்களில் திருமங்கையாழ்வார் எடுத்தோதியுள்ளார்.

'பாயல் வடத்தான்' என்பதற்கு ஆலிலையைப் படுக்கையாகக் கொண்டவன் என்பது பொருள். முன்பு பெரிய பிரளயம் வந்த காலத்தில் ஓர் ஆலந்தளிரிலே குழந்தை வடிவம் கொண்டு உலகங்களையெல்லாம் திருவயிற்றிலே வைத்து நோக்கியவன் திருமால். இதனை, "ஆலினிலைப் பாலகனாய் அன்றுலக முண்டவனே' (பெருமாள் திருமொழி 8:8) என்பார் குலசேகராழ்வார். "ஆலி னிளிலை ஏழுலகு முண்டு அன்றுநீ கிடந்தாய்" (திருவாய்மொழி 6:2:4) என்று நம்மாழ்வார் இதனைச் சுட்டுவர்.

"பாலனாகி ஞாலம் ஏழும் உண்டுபண்டு ஆலிலைமேல்
சாலநாளும் பள்ளிகொள்ளும் தாமரைக் கண்ணன்......"
- (பெரியதிருமொழி 2:2:5)

என்று தன் பாசுரத்தில் திருமங்கையாழ்வார் கூறுவர்.

உரம் - வலிமை, புடவி - பூமி, இடத்தல் - பிளத்தல். குரவை - குரவைக்கூத்து. பரவை - கடல், அத்தி - யானை, சரமம் - முடிவு.

## கட்டளைக் கலித்துறை

11. தானே தனக்கொத்த தாட்டா மரைக்குச் சரண்புகுந்தாள்
ஆனேன் ; இனியுன் அருளறி யேன்என தாருயிரே
தேனேஎன் தீவினைக் கோர்மருந் தேபெருந் தேவர்க்கெல்லாம்
கோனே ! அரங்கத் தரவணை மேற்பள்ளி கொண்டவனே !

தானே தனக்கொத்த தாட்டா மரைக்குச் சரண்புகுந்தாள் ஆனேன் - தன்னிகரில்லாத எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளுக்கு அடைக்கலமாகி, இன்று அடிமையானேன்.

இனியுன் அருளறியேன் என தாருயிரே ! தேனே ! - இனிமேல் உன்னுடைய திருவருளையன்றி வேறு ஒன்றையும் அறிய மாட்டேன். அரிய உயிரானவனே ! தேனாகத் தித்திப்பவனே !

என் தீவினைக்கோர் மருந்தே ! பெருந்தேவர்க் கெல்லாம் கோனே - எனது தீவினைகளையெல்லாம் நீங்கச் செய்யக்கூடிய அரிய மருந்தாக விளங்கபவனே ! பெரிய தேவர்களுக்கெல்லாம் தலைவனாக இருப்பவனே !

அரங்கத் தரவணை மேற்பள்ளி கொண்டவனே ! - தென்னரங்கத்தில் அனந்தாழ்வான் மீது பள்ளிகொண்டருளிய எம்பெருமானே !

தன்னகரில்லாத தென்னரங்கரின் திருவடித் தாமரைகளில் அடைக்கலமாகி, அடிமையாகி விட்டமையால், எம்பெருமானின் திருவருளையன்றி வேறு ஒன்றையும் விரும்பாத தன்மையை எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

பேயாழ்வார், எம்பெருமான் தானே தனக்கொத்தவனாக ஒப்பற்றவனாக விளங்குபவன் என்பதைத், 'தானே தனக்குவமன் தன்னுருவே எவ்வுருவும்' (மூன்றாம் திருவந்தாதி :38) என்கிறார்.

இப்பாடலில், எம்பெருமான், தென்னரங்கத்தில் அரவணை மேல் பள்ளிகொண்டு விளங்குபவன் என்கிறார் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். இதனையே, பிரளய காலத்தில் பூமியை உண்டு, ஆலந்தளிரில் கண்வளரும் மாயத்தைச் செய்த, நீண்ட முடி அணிந்தவனும் திருவனந்தாழ்வானைப் படுக்கையுமாகக் கொண்டுள்ளவனான எம்பெருமான் என்றும் எழுந்தருளியுள்ள இடம் தென்னரங்கம் என்பதை,

"வையமுண்டு ஆலிலை மேவும் மாயம் மணிநீள்முடி
பைகொள் நாகத் தணையான் பயிலுமிட மென்பரால்
தையல் நல்லார் குழல்மலையும் மற்றவர் தடமுலை
செய்ய சாந்தும் கலந்திழி புனல்சூழ்தென் அரங்கமே."
- (பெரிய திருமொழி 5:4:2)

என்று திருமங்கையாழ்வார் தம் பாசுரத்தில் எடுத்தோதுவார்.

தனக்குத் தானே ஒத்த - தன்நிகரில்லாத, தாள் - திருவடி, சரண் - அடைக்கலம், ஆள்ஆனேன் - அடிமையானேன்.

**மேகவிடு தூது**

**12.** கொண்டல்காள்! உம்மைக் குறித்தே தொழுகின்றேன்
அண்டர்கா ணாவரங்கத் தம்மானைக் - கண்டு
மனத்துளவத் தைப்படுமென் மையலெல்லாம் சொல்லி
புனத்துளவத் தைக்கொணரீர் போய்.

கொண்டல்காள் ! உம்மைக் குறித்தே தொழுகின்றேன் - கரிய மேகங்களே! உங்களை வணங்குகிறேன்.

அண்டர் காணா அரங்கத் தம்மானை - தேவர்களும் காண்பதற்கு அரிதான தென்னரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானை,

கண்டு மனத்துளவத் தைப்படுமென் மையலெல்லாம் சொல்லி - நேரில் கண்டு, மனதிற்குள் துன்முற்று விளங்குகின்ற என்னுடைய வேட்கை மயக்கத்தை எடுத்துச் சொல்லி,

புனத்துளவத் தைக்கொணரீர் போய் - வனத்தில் வளர்கின்ற திருத்துழாய் மாலையை வாங்கி வாருங்கள்.

தலைவி, பிரிந்துசென்ற தலைவன் திரும்பிவரும் காலம் வரை ஆற்றியிருக்க மாட்டாமல், அவன்வரவை வேண்டி, ஆற்றாமை மிகுதியால் ஏதேனும் ஒரு பொருளைத் தூதாக அனுப்பி தலைவனிடமிருந்து 'மாலை வாங்கி வா' என அனுப்புதல் தூது இலக்கியங்களில் பயின்று வருவது இயல்பு. கலம்பகங்களில் இத்தகைய தூது ஒரு உறுப்பாக அமையக் காணலாம். பக்தி இலக்கியங்களில் அகப்பொருட் கிளவித் துறைகளை இடையிடையே அமைத்துக் கூறுதல் ஆங்காங்கே காணப்படுகிறது. பக்தி இலக்கியமான இத்திருவரங்கக் கலம்பகத்துள்ளும் அகப்பொருட் கிளவித் துறைகளை இடையிடையே அமைத்துக் கூறுதல் காணப்படுகிறது.

தலைவியொருத்தி தன் மையலைத் தீர்க்கும் பொருட்டுத் தென்னரங்கரிடமிருந்து திருத்துழாய் மாலையை வாங்கி வரும்படி மேகங்களைத் தூதாக அனுப்பி ஆற்றியிருப்பதாக இப்பாடலில் அமைந்துள்ளார். ஆசிரியர்

தோத்திரப் பிரபந்தங்களில் அகப்பொருட்கிளவித் துறைகளை இடையிடையே கூறுதல் கவிசமயமாதலை இலக்கியங்கள் கொண்டு உணர்க. சிருங்கார ரசப்பிரதானமான அகப்பொருட் கிளவித்துறைகளை ஞான நூலாகிய தோத்திரப் பிரபந்தங்களில் கூறுவதற்குக் காரணம், கடுத்தின்னாதானைக் கட்டிப் பூசிக் கடுத்தின்பிப்பார் போலச் சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பத்தைக் காட்டி நாட்டுதல் என்று மூவர் உரை அமைந்த திருவரங்கக் கலம்பக நூல் கூறும்.[11]

.................................................................................................

11. திருவரங்கக் கலம்பகம் (மூவர் உரை), பக்.40.

மேகங்களைத் தூதனுப்புகின்ற தலைவியின் நிலையை நம்மாழ்வார் எடுத்தோதும் பொழுது,

*"தெளிவிசும்பு கடிதுஓடித் தீவளைத்து மின்இலகும்*
*ஒளிமுகில்காள்! திருமூழிக் களத்துறையும் ஒண்சுடர்க்குத்*
*தெளிவிசும்பு திருநாடாத் தீவினையேன் மனத்துறையும்*
*துளிவார்கள் குழலார்க்கென் தூதுரைத்தல் செப்புமினே"*
- (திருவாய்மொழி 9:7:5)

என்ற தன் பாசுரத்தில், 'ஆகாயத்தில் விளங்கி வளையம் போன்ற அழகிய மின்னல்களைக் கொண்டு மகிழும் மேகங்களே ! திருமூழிக் களத்தில் மேவும் ஒண்சுடராகிய எம்பெருமானுக்குத் தூதாகச் செல்வீராக ! தெளிந்த பரமபத்தில் மேவும் அப்பெருமானுக்கு எனது தூது உரையைச் சொல்வீராக ! என்றுரைப்பதாக அமைந்துள்ளார்.

இப்பாடலோடு ஒப்பு நோக்கத்தக்க வகையில் இப்பாசுரம் அமைந்துள்ளது.

கொண்டல் - மேகம், அவத்தை - துன்பம், மையல் - வேட்கை மயக்கம், புனல் - வனம்.

## கலிவிருத்தம்

**13.** *போயவ னியில்சில புலைச்சமய நாடும்*
*பேயறிவை விட்டெழு பிறப்பையும் மறுப்பீர் !*
*ஆயமு குந்தனை அனந்த சயனத்தெம்*
*மாயனை அரங்கனை வணங்கி மருவீரே.*

போயவ னியில்சில புலைச்சமய நாடும் - உலகத்தில் சென்று கீழான வேறு சமயங்களை விரும்பித் திரிகின்ற.

பேயறிவை விட்டெழு பிறப்பையும் மறுப்பீர் - பேய்த்தன்மை உடைய தீய அறிவை விட்டுவிட்டு ஏழுவகை பிறவிகளையும் போக்கிக் கொள்ளுங்கள்.

ஆயமு குந்தனை அனந்த சயனத்தெம் - இடைச்சாதியில் வளர்ந்தவனும் முகுந்தன் என்ற திருநாமத்தை உடையவனும், திருவரங்கத்தில் பாம்பணையில் பள்ளிகொண்டு அருளுபவனுமாகிய எம்முடைய,

மாயனை அரங்கனை வணங்கி மருவீரே - மாயவேலைகள் செய்வதில் வல்லவனும், திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ளவனுமாகிய திருவரங்கனைச் சேர்ந்து வணங்குங்கள்.

இப்பாடலில், எச்சமயத்தில் சார்வது என்று மனக்குழப்பம் அடையாது, திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள பெருமானின் திருவடிகளில் மனது வைத்து, அவனை வணங்கி எழுவகைப் பிறவிகளையும் போக்கிக் கொள்ளுங்கள் என்று ஆசிரியர் அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது.

ஏழு பிறப்புக்களாவன - தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் அகியவை. ஏழு பிறவிகளிலும் திருவரங்கனுக்குப் பணிசெய்ய வேண்டும் என்ற தன் ஆசையினை "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்" (திருப்பாவை :29) என்கிறார் ஆண்டாள்.

இப்பாடலில் எம்பெருமானின் திருவடிகளில் மனது வைத்து, 'ஏழு பிறப்பையும் மறுப்பீர்' என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். பேயாழ்வார், உன் திருவடிகளைக் கண்டு கொண்டேன். ஏழு பிறவிகளும் என்னைத் தொடராது நீக்கிக் கொண்டேன் என எம்பெருமானிடத்தே கூறுவதாக,

"இன்றே கழல்கண்டேன் ஏழ்பிறப்பும் யானறுத்தேன்
பொன்தோய் வரைமார்பில் பூந்துழாய் – அன்று
திருக்கண்டு கொண்ட திருமாலே உன்னை
மருக்கண்டு கொண்டென் மனம்."

- (இயற்பா - மூன்றாம் திருவந்தாதி :2)

என்று பாசுரத்தில் அமைத்துப் பாடியுள்ளார். இது ஒப்புநோக்கத்தக்கது.

புலைச்சமயம் - கீழான சமயம், மாயன் - மாயவேலைகள் செய்பவன்.

## எண்சீர் ஆசிரியர் விருத்தம்

14. மருவு தந்தையும் குருவும் எந்தையும்
மருள்கெ டுப்பதும் அருள்கொ டுப்பதும்
உருகு நெஞ்சமும் பெருகு தஞ்சமும்
உரிய வானமும் அரிய ஞானமும்
திருவ ரங்கனார் இருவர் அங்கனார்
செங்கண் மாயனார் எங்கள் ஆயனார்
அருள்மு குந்தனார் திருவை குந்தனார்
அமல நாதனார் கமல பாதமே.

மருவு தந்தையும் குருவும் எந்தையும் - விரும்பி வளர்க்கின்ற தந்தையாகவும் ஆசிரியனாகவும் என்னுடைய இறைவனாகிய எம்பிரானாகவும்,

மருள் கெடுப்பதும் அருள் கொடுப்பதும் - இவ்வுலகப் பற்றாகிய அஞ்ஞானத்தை அழிக்கும் தன்மை உடையதாகவும், கருணையை வாரி வழங்கும் தன்மையை உடையதாகவும்,

உருகு நெஞ்சமும் பெருகு தஞ்சமும் - எண்ணிய பொழுதெல்லாம் அன்பினால் மனதை உருகச் செய்வதும் சிறந்த பற்றுக் கோடாக விளங்கி நிற்பதும்,

உரிய வானமும் அரிய ஞானமும் - அடியார்க்கு ஏற்ற பரமபதத்தையும் அரிய ஞானத்தையும் வழங்குபவராகவும்,

திருவ ரங்கனார் இருவர் அங்கனார் - திருவரங்கத்தில் எழுந்தருளி இருப்பவராகவும் சிவபெருமானையும் பிரமனையும் தன் உடலில் கொண்டிருப்பவராகவும்,

செங்கண் மாயனார் எங்கள் ஆயனார் - சிவந்த திருக்கண்களைப் பெற்று மாய வேலைகளில் வல்லவராகவும், அடியவர்களாகிய எங்களுக்கு ஆயனாராகவும்,

அருள்மு குந்தனார் திருவை குந்தனார் - அருள் நிறைந்த முகுந்தன் என்ற திருநாமத்தைக் கொண்டவராகவும், திரு வைகுந்தத்தை ஆள்பவராகவும் விளங்குவது,

அமலநாதனார் கமல பாதமே - குற்றமற்ற தலைவரான எம்பெருமானது செந்தாமரை மலர்போன்ற திருவடிகளாகும்.

எம்பெருமானுடைய திருவடிகளின் சிறப்பை ஆசிரியர் இப்பாடலில் கூறியுள்ளார்.

திருவரங்க நாதராகவும் சிவபெருமானையும் பிரமனையும் தன்உடலில் கொண்டிருப்பவராகவும், மாயவேலைகளில் வல்லவராகவும் விளங்கும் ஆயனார், முகுந்தன் என்ற திருநாமத்தைக் கொண்டிருப்பவராகவும் திருவைகுந்தத்தை ஆள்பவராகவும் விளங்குகிறார். அத்தகைய பெருமைக்குரிய எம்பெருமானின் திருவடிகள், தந்தையாகவும் ஆசிரியனாகவும், எனக்கு இறைவனாகவும் விளங்குவன தன் மனதில் தோன்றும் அஞ்ஞானத்தைப் போக்கி, கருணையை அளிப்பன ; மனத்தை உருக்கி, பற்றுக் கோடாக விளங்குவன; அடியார்க்கு அரிய ஞானத்தையும் பரமபதத்தையும் நல்குவன எனத் தன்னுடைய கருத்தை எடுத்துரைத்துள்ளார்.

சிவபெருமானைத் தன் அங்கத்திலே கொண்டுள்ள வடிவமாகக் காணும் பேயாழ்வார், தாழக் கட்டின சடையும், நீண்ட முடியும், அழகிய மழுவாயுதமும், திருவாழி என்னும் படையும், சுற்றிலும் அணிந்துள்ள நாகாபரணமும், பொன்னாலாகிய அரைஞாணுமாக ஒன்றுக் கொன்று சேரா நேர்த்தியாய் இருக்கிற இரண்டு வடிவும் நாற்புறமும் திரள் திரளாக அருவிகள் பாயப்பெற்ற திருமலைமேலுள்ள என் அப்பனுக்கு ஒரு வடிவமாய் அமைந்துவிளங்குகிறது என்பதை,

"தாழ்சடையும், நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் – சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து."

– (இயற்பா–மூன்றாம் திருவந்தாதி:63)

என்று தன் பாசுரத்தில் கூறி வியக்கிறார்.

"........மறையான் நின்னுந்தியான் மாமதிள் மூன்றெய்ய
இறையான் நின்னாகத் திறை"

– (இயற்பா – முதல்திருவந்தாதி : 28)

என்று அயனும், அரனும், அரியின் உடலில் இருப்பதைப் பொய்கையாழ்வார் உரைப்பர்.

"தடம்புனல் சடைமுடியன் தனியொருகூ றமரந்துறையும் உடம்புடையான்" - (திருவாய் மொழி 4:8:10) என்று கங்கையைச் சடாமுடியில் கொண்டு விளங்கும் சிவபெருமானைத் தன்னுடைய உடலின் ஒரு கூறாகக் கொண்டுள்ளவன் எம்பிரான் என்பதை நம்மாழ்வார் எடுத்தோதுகின்றார். மற்றொரு பாசுரத்தில்,

"புணர்க்கும் அயனாம் அழிக்கும் அரனாம்
புணர்த்ததன் னுந்தியோடு ஆகத்து மன்னி"
- (திருவாய்மொழி 2:8:3)

என்று தமது உந்திக் கமலத்தில் மேவும் நான்முகனைக் கொண்டு படைக்கும் கடவுளாகவும், தமது அங்கத்தில் மேவும் உருத்திரனைக் கொண்டு அழிக்கும் கடவுளாகவும் விளங்குவர் என்றுரைக்கிறார்.

மருள் - அஞ்ஞானம், தஞ்சம் - பற்றுக்கோடு, சிறந்த வானம் - பரமபதம், அங்கம் -உறுப்பு, இருவர் அங்கனார் - பிரமனையும் சிவபெருமானையும் தன் உடலின் உறுப்பாகக் கொண்ட திருமால், ஆயன் - ஆயர்ப்பாடியில் வளர்ந்தவன், அமலன் - குற்றமற்றவன்.

**எண்சீர் ஆசிரிய விருத்தம்**

15. பாதியாய் அழுகியகால் கைய ரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியாய் அரவணையாய் என்ப ராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிக ளாவார்
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதில்நான் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே.

பாதியாய் அழுகியகால் கைய ரேனும் - நோயின் காரணமாகப் பாதியாகக் குறைந்து அழுகிய நிலையில் உள்ள கால்களையும் கைகளையும் கொண்டவராக விளங்கினாலும்,

பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும் - பிறரால் பழிக்கப்படுகின்ற செய்கைகளை உடையவராகவும், இழிந்த குலத்தில் தோன்றியவர்களாக இருப்பார்களேயாயினும்,

ஆதியாய் ! அரவணையாய் என்பா ராகில் - எல்லா உயிரிகளுக்கும் மூலமுதலாக விளங்குபவனே ! என்று உன்னைப் போற்றி வணங்குவார்களாயின்,

அவரன்றோ யாம்வணங்கும் அடிக ளாவார் - அத்தகையவர்களே நாம் வணங்குவதற்கு ஏற்ற அடியவர்களாவார்

சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும் - உயர்குடியில் பிறந்தவர்களாக இருப்பினும், அக்குடிக்கு உரிய உயர்ந்த ஒழுக்கங்களைக் கடை பிடிப்பவராக விளங்கினாலும்,

சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும் - நான்கு வேதங்களிலும் யாகங்கள் செய்வதிலும் சிறந்து விளங்குபவராக இருப்பினும்,

போதில்நான் முகன்பணியப் பள்ளி கொள்வான் - தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன் பணிந்து போற்ற, பாம்பணையில் பள்ளி கொள்பவனான,

பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே - பொன்னால் வேய்ப்பட்ட விமானத்தை உடைய திருவரங்கத்தைப் போற்றாதவர்கள் கீழ்மக்களாவார்.

எம்பெருமானிடம் அன்பு பூண்டு விளங்குதலே ஒருவனுக்கு மேன்மையைத் தரவல்லது. அவ்வாறு அன்பு பூண்டு ஒழுகாமல் இருப்பதே தாழ்விற்குக் காரணம். ஆகவே உடல் குறைபாடு உடையவர்களாக இருப்பினும், ஒழுக்கத்தில் குறைபாடு உடையவர்களாக இருப்பினும், குலத்தால் தாழ்ந்தவர்களாக இருப்பினும் எம்பெருமானிடம் அன்பு பூண்டு ஒழுகுபவர்கள் பெரியோராவார். நான்கு மறைகளிலும் கற்றுத் தேர்ச்சி பெற்று விளங்கினாலும் குலத்தால் சிறந்து இருப்பினும் ஒழுக்கத்தில் உயர்ந்து விளங்கினாலும், உயர்ந்தவர்களாகப் போற்றப்படினும் எம்பெருமானைப் போற்றாதவர் சண்டாளரேயாவர் என்கிறார் ஆசிரியர்.

பிராமண, சத்திரிய, வைசிய, இழிகுலத்தோர் என்னும் நான்கு குலங்களாகக் கருதப்படுவனவற்றுள், கீழ்மையுடையதாகக்

கொள்ளப்படும் நலமில்லாத சண்டாளர்களாக இருப்பினும், அவர்கள் சக்கராயுதப் படையையுடைய மணிவண்ணனாகிய எம்பெருமானுக்கு அடியவராயின், அவ்வடியார்க்கு அடியவர் எமது தலைவராவார்.

"குலம்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந் தெத்தனை
நலந்தான் இல்லாத சண்டாள சண்டாளர் களாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற் காளென்றுள்
கலந்தார் அடியார் தம்அடி யார்எம் மடிகளே"

- (திருவாய்மொழி 3:7:9)

என்று இதனை நம்மாழ்வார் தம் பாசுரத்தில் கூறக் காணலாம். தொண்டரடிப் பொடியாழ்வார் இக்கருத்தை வலியுறுத்திக் கூறியிருப்பதை அவர்தம் பாசுரங்களின் வாயிலாக அறியலாம். குற்றமில்லாதவர்களாகவும் நான்கு மறைகளையும் கற்றவர்களாக விளங்குபவர்களே! நமக்கு அடிமைப் பட்டவர்களாக இருந்தாலும், தாழ்ந்த குலத்தில் பிறந்தவரானாலும் அவர்களைத் தொழுமின். உபதேசம் செய்மின், அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொள்ளுங்கள் என்று உபதேசித்தருளி எனக்குச் சமமாக அவர்களை ஆராதிக்கும்படி உரைத்தருளினாய் என்பதைப்,

"பழுதிலா ஒழுக லாற்றுப் பலசதுப் பேதி மார்கள்
இழிகுலத் தவர்க ளேலும் எம்மடி யார்க ளாகில்
தொழுமின்நீர் கொடுமின் கொள்மின் என்றுநின் னோடும் ஒக்க
வழிபட அருளி னாய்போல் மதிள்திரு வரங்கத் தானே."

- (திருமாலை : 42)

என்ற தம் பாசுரத்தில் எழிலுற எடுத்தோதுகிறார். மேலும் உன்னிடத்தே அன்பில்லாத நான்கு வேதங்களையும் ஓதின அந்தணர்களைக் காட்டிலும், இழிகுலத்தில் பிறந்தவர்களானாலும் உன் நெருங்கிய திருவடிகளிடத்துப் பக்தி செய்கின்ற அடியார்களையே நீ விரும்பிவாய் போலும் என்கிறார்.

"அடிமையில் குடிமை யில்லா அயல்சதுப் பேதி மாரில்
குடிமையில் கடைமைப் பட்ட குக்கரில் பிறப்ப ரேலும்
முடியினில் துளபம் வைத்தாய் ? மொய்கழற் கன்பு செய்யும்
அடியரை உகத்தி போலும் அரங்கமா நகரு ளானே."

- (திருமாலை :39)

என்று இதனை எழிலுற எடுத்தோதுவர். மேலும், அடியார்களைப் பழிக்கும் அந்தணர்கள் கீழ்மக்கள் என்பர். இதனை,

"அமரவோர் அங்கம் ஆறும் வேதமோர் நான்கும் ஓதி
தமர்களில் தலைவ ராய சாதியந் தணர்க ளேலும்
நுமர்களைப் பழிப்ப ராகில் நொடிப்பதோர் அளவி லாங்கே
அவர்கள்தாம் புலையர் போலும் அரங்கமா நகரு ளானே."
- (திருமாலை : 43)

என்று சிறப்புற எடுத்துரைக்கிறார்.

ஆதி - முதல், மிக்கோர் - உயர்ந்தோர், வேள்வி - யாகம், போது - மலர்ந்தும் மலராத பாதி மலர், நான்முகன் - பிரமன், புலையர் - சண்டாளர்.

**எண்சீர் ஆசிரிய விருத்தம்**

16. புலையாம் பிறவி பிறந்தென்செய் தோம்பொன்னி பொன்கொழிக்கும்
அலையார் திருவரங் கத்தெம்பி ரான்நம தன்னையொடும்
தொலையாத கானகம் கடந்தஅந் நாள் தடம் தோறும்புல்லாய்ச்
சிலையாய்க் கிடந்தில மேநெஞ்ச மேகழல் தீண்டுதற்கே.

புலையாம் பிறவி பிறந்தென் செய்தோம் - இழிந்த தன்மையுடையதான இப்பிறப்பில் இவ்வுலகில் பிறந்து என்னற் செயல்களைச் செய்தோம்.

பொன்னி பொன்கொழிக்கும் அலையார் திருவரங்கத்து - அலைகள் நிறைந்த, பொன்னை அலைகளால் அடித்துத் தள்ளுகின்ற காவிரி நதியின் கரையில் அமைந்துள்ள திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள,

எம்பிரான் நமது அன்னையொடும் - திருவரங்கப்பெருமான், இராமாவதாரத்தில் நமது தாயாராகிய சீதா பிராட்டியுடன்,

தொலையாத கானம் கடந்த அந்நாள் - கடப்பதற்கு அரிதான காட்டைக் கடந்து வந்த அந்த நாளில்,

புல்லாய்ச் சிலையாய்க் கிடந்திலமே நெஞ்சமே ! கழல் தீண்டுதற்கே ! -

மனமே எம்பெருமானது வீரக்கழல் அணிந்த திருவடிகள் நம்மீது தீண்டும் பொருட்டு, நம் புல்லாகவும், கல்லாகவும் கிடக்காமல் இருந்தோமே !

எம்பெருமானது திருவடிகளால் தீண்டப்படும் புல், கல் முதலான எப்பொருளாக இருப்பினும் முத்திப்பேறு அடையும். அப்பொருள்களாகப் பிறவாமல், பல பிறப்பெடுத்து வருந்துகின்ற தன்நிலையை மனதிற்குக் கூறுவதாக அமைந்துள்ளார் ஆசிரியர்.

தொலையாத கானம் கடந்த அந்நாள், இராமவதாரம் எடுத்த பொழுது, கல்லாக இருந்த அகலிகை சாபவிமோசனம் பெற்றதைக் குறித்து, தான் அவ்வாறு கிடக்கவில்லையே என்ற மனதிற்குக் கூறுவதாக அமைந்துள்ளது.

**அகலிகையின் சாப விமோசனம் வரலாறு**

கௌதம முனிவனது பத்தினியான அகலிகையிடத்தில் பலநாளாய்க் காதல் கொண்டிருந்த தேவேந்திரன், ஒருநாள் நடுஇரவில் அம்முனிவனின் ஆசிரமத்துக்கு அருகே வந்து பொழுது விடியும் காலத்துக்குக் கோழி கூவுவது போலக் கூவ, அதுகேட்ட கௌதமமுனிவன் விடியற்காலை வந்துவிட்டது என்று கருதி எழுந்து காலைக்கடன் கழித்தற்பொருட்டு நீர்நிலை நோக்கிப் புறப்பட்டுச் சென்றான். அப்பொழுது இந்திரன் இதுவே சமயமென்று அம்முனிவரின் வடிவு கொண்டு ஆசிரமத்திற்குச் சென்று அவளுடன் சேர்கையில் தன் கணவன் அல்லன், இந்திரன் என உணர்ந்து அவ்வகலிகை விலக்காமல் உடன்பட்டிருந்தாள். அதனை ஞானக்கண்ணால் அறிந்த அம்முனிவன் அவளைக் கருங்கல் உருவமாகப் போகும்படி சபிக்க, உடனே அவள் நடுங்கி அஞ்சிப் பலவாறாக வேண்டிக் கொண்டதற்கு இணங்க, 'இராமனது திருவடி இக்கல்மீது படுகின்ற காலத்து உன் சுயவடிவத்தைப் பெறுக' எனக் கூறினான். அவ்வாறே கல்லுருவமாய்க் கிடந்த அகலிகை இராம இலட்சுமணர்கள், விசுவாமித்திரரோடு மிதிலைக்குச் செல்லும் பொழுது, இராமமூர்த்தியின் திருவடி பட்டமாத்திரத்திலேயே கல்வடிவம் நீங்கி இயற்கையான வடிவத்தைப் பெற்றாள் என்பர்.

புலை - இழிவு. பொன்னி - காவிரி. அன்னை - சீதாதேவி. கானம் - காடு. தடம் - வழி. சிலை - கல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

17. *தீண்டா அழும்பும் செந்நீரும் சீயும் தசையும் செறிந்தனவும்[1]*
*வேண்டா நாற்றம் மிகுஉடலை வினையேன்[2] சுமந்து மெலிவேனோ*
*நீண்டாய் தூண்டா விளக்கொளியாய் நின்றாய் ஒன்றாய் அடியேனை[3]*
*ஆண்டாய் காண்டா வனமெரித்த அரங்கா அடியேற் கிரங்காயே.*

தீண்டா அழும்பும் செந்நீரும் சீயும் தசையும் செறிந்தனவும் - அருவருப்பினால் பிறர்தொடாத, கொழுப்பு, இரத்தம், சீழ், சதை, எலும்பு ஆகியவற்றாலான,

வேண்டா நாற்றம் மிகுஉடலை வினையேன் சுமந்து மெலிவேனே - பிறரால் விரும்பப்படாத நாற்றம் மிகுந்திருக்கக்கூடிய இந்த இழிவான உடலை, தீவினையை உடையவனாகிய நான் சுமந்து மெலிந்து போவேனோ !

நீண்டாய் தூண்டா விளக்கொளியாய் ஒன்றாய் நின்றாய் - திருவிக்கிரம அவதாரத்தில் மூவடிகளால் இவ்வுலகை அளக்க, விசுவரூபம் எடுத்து நீண்டவனே ! தூண்டப்படாமல் தானே எரிகின்ற விளக்கின் ஒளியாக விளங்குபவனே ! உலகுக்கெல்லாம் மூலமுதல்வனாக ஒப்பற்றவனாக நின்று,

அடியேனை ஆண்டாய் கண்டாவனம் எரித்த அரங்கா ! அடியவனாகிய என்னை அன்பினால் ஆட்கொண்டாய், காண்டாவனத்தை எரிக்கச் செய்த திருவரங்கனே !

அடியேற்கு இரங்காயே ! - அடியவனாக விளங்கும் எனக்கு இரங்கி, அருளை வழங்க வேண்டும்.

இப்பாடலில், பிறரால் விரும்பப்படாத அருவருக்கத் தக்க, நாற்றமுடைய நிலையற்ற உடலைச் சுமந்து, தீவினையை உடையவனாகிய நான், இவ்வுலகில் வாழ விரும்பவில்லை, எனக்குப்

........................................................................................................

**(பா.டு) 1. சீயும் நரம்பும் செறிதசையும் 2. வினேன் 3. அடியாரை**

பரமபதத்தை வழங்க வேண்டும் என்று ஆசிரியர் வேண்டுவதாக அமைந்துள்ளது.

தீவினையை உடையவனாகிய எனக்கும் இன்னமுதமாக விளங்கும் பிரமனே ! ஒன்றினைச் சொல்லுங்கால் அதன்வழியில் ஒன்றி செயல்படாத ஐம்புலன்களை வென்று, பரம பதத்தை எவ்வாறு நான் அடைய முடியும் ! தேவரீருடைய அருளின்றி இவர்களை வெல்ல இயலாதாகையால், அருளை வழங்க வேண்டும் என்பதை,

"குலமுதலடும் தீவினைக் கொடுவன் குழியினில் வீழ்க்குமைவரை
வலமுதல் கெடுக்கும் வரமே தந்தருள் கண்டாய்
நிலமுதலினி எவ்வுல குக்கும் நிற்பன செல்வன எனப்பொருள்
பலமுதல் படைத்தாய் என்கண் ணாஎன் பரஞ்சுடரே"
- (திருவாய்மொழி 7:1:9)

என்ற தன்பாசுரத்தில் வழி எம்பெருமானை வேண்டுவர் நம்மாழ்வார்.

உடலை, அருவருக்கத்தக்க, பிறரால் விரும்பப்படாத, நாற்றமுடைய நிலையற்ற உடல் என்கிறார் ஐயங்கார். மிகவும் இழிவானது இப்பிறவி ஆதலின், பிறவிப்பிணியை ஒழித்து முக்தியைத் தரவேண்டுகின்றார்.

"குடருங் கொழுவுங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு – மிடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்று
ளெத்திறத்தா ளீரங்கோதை யாள்."

என்றும்,

"என்பினை நரம்பிற் பின்னி உதிரந்தோய்த் திறைச்சி மெத்திப்
புன்புறந் தோலைப் போர்த்து மயிர்புறம் பொலிய வேய்ந்திங்
கொன்பது வாயி லாக்கி யுன்பயில் குரம்பை செய்தான்
மன்பெருந் தச்ச னல்லன் மயங்கிர் மருள வென்றான்"

என்றும் அமைந்துள்ள பாடல்கள்[12] உடலின் இழிவை விளக்குவனவாகும்.

12. திருவரங்கக் கலம்பகம் (மூவர் உரை) பக்.45.

**காண்டவனம் எரித்த கதை**

அக்கினி என்னும் தீக்கடவுள் திக்கு பாலகர்களில் ஒருவன். இவன் கொடிய பசி உடையவன். பாண்டவர்கள் காலத்தில் காண்டவம் என்னுங்காடு ஒன்று யமுனையாற்றங்கரையில் அமைந்திருந்தது. அது இந்திரனுக்குச் சொந்தமானது. அக்காடு பலவகை அரிய மரங்களை உடையதாகவும் அதிக கனிகளைக் கொண்டும் விளங்கியது. அக்காட்டினை உண்டு தன்னுடைய பசியைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்று தீக்கடவுள் எண்ணினான். ஒரு முறை கண்ணனும் அருச்சுனனும் உரையாடிக் கொண்டிருந்த போது அந்தணவடிவில் அங்கு சென்று, தன்னுடைய மிகுந்த பசிக்குச் சிறிது உணவு தர வேண்டினான் அவர்கள் இருவரும் உணவைத் தருவதாக வாக்குறுதியளித்த பின்னர் தனது உண்மை வடிவத்தைக் காட்டினான். பின், காண்டவக் காடே உணவாக வேண்டும் என்றான். கூறிய வாக்கை மீற முடியாமல் இருவரும் காண்டவக் காட்டைத் தீக்கடவுள் உண்ணச் செய்தனர்.

இந்நிகழ்ச்சியினைக் குறிப்பிடும் திருமங்கையாழ்வார், தேவர்களுக்குத் தலைவனான இந்திரன் பார்த்துக் கொண்டிருக்கையில் அவன் கண்முன்னே காண்டாவனத்தைத் தீ உண்ணும்படி சீறியவன் என்கிறார். இதனைக்,

"காண்டாவனம் என்பதோர் காடு அமரர்க்கு
அரையனது கண்டவன் நிற்கமுனே
மூண்டாரழல் உண்ணமுனிந் ததுவும்..........."
~ (பெரிய திருமொழி 2:4:2)

என்று தன் பாசுரத்தில் எடுத்தோதியுள்ளார்.

தீண்டுதல் - தொடுதல். வழும்பு - கொழுப்பு. செந்நீர் - குருதி. நாற்றம் - விரும்பப்படாத மணம். மெலிதல் - வருந்துதல். தூண்டா விளக்கு - தூண்டுதல் இல்லாமல் தானே எரிகின்ற விளக்கு. காண்டாவனம் - காண்டவக்காடு.

## தவம்

### கலிநிலைத்துறை

18. காய்இலை தின்றும் கானில்உ றைந்தும் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரிவீர்காள்!
தாயிலும் அன்பன் பூமகள் அன்பன் தடநாகப்
பாயன் முகுந்தன் கோயில் அரங்கம் பணிவீரே.

காண்இலை தின்றும் கானில் உறைந்தும் - காட்டில் கிடைக்கக் கூடிய காய்கள், இலைகள் போன்றவற்றை உணவாகக் கொண்டும், அச்சம் தரத்தக்க அக்காட்டில் தங்கியிருந்தும்,

கதிதேடித் தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரிவீர்காள்! நல்ல கதியைப் பெறவேண்டுமெனக் கருதி, தீயிடையே நின்று தவம் மேற்கொண்டும், இப்பூமியை வலமாக வந்தும் திரிபவர்களே!

தாயிலும் அன்பன் பூமகள் அன்பன் - பூமாதேவியின் அன்பிற்கு உரிமையானவனாக விளங்கக் கூடிய எம்பெருமான் பெற்ற தாயைக் காட்டிலும் மிகுந்த அன்பை உடையவன்;

தடநாகப் பாயன் முகுந்தன் - பெரிய பாம்பைத் தன்னுடைய படுக்கையாகக் கொண்டிருக்கக் கூடியவன்; முகுந்தன் என்ற திருநாமத்தைப் பெற்று விளங்குபவன்;

கோயில் அரங்கம் பணிவீரே - திருவரங்கக் கோயிலில் எழுந்தருளியிருக்கக் கூடிய திருவரங்கப் பெருமானைச் சென்று வணங்குங்கள்.

கொடிய தவத்தை விலக்கி, இறை தியானத்தை வற்புறுத்துதல், 'தவம்' என்னும் உறுப்பின் இலக்கணம். பரமபதத்தை நாடி, உடலை வருத்திக் கொண்டு, கொடிய நோன்புகளை மேற்கொள்வதைக் காட்டிலும் திருவரங்கனை வழிபடுங்கள் என்பதாக இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

காட்டில் வாழ்ந்து, அங்குக் கிடைக்கும் காய், இலைகளை உண்டும், தீயில் நின்றும், உலகை வலம் வந்தும் செய்யும் தவத்தை உடையவர்களே! பூமகளின் அன்பனாகிய எம்பெருமான் தாயைக்

காட்டிலும் மிகுந்த அன்பு கொண்டவன். அத்தகைய, பாம்பணையில் பள்ளிகொண்டுள்ள அரங்கனை, திருவரங்கக் கோயிலுக்குச் சென்ற வணங்குங்கள் என்று ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

"பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும்நீர் வேண்டா – விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர்தூய்க் கைதொழுதால்
அஃகாவே தீவினைகள் ளாய்ந்து."

– (இயற்பா – மூன்றாம் திருவந்தாதி: 79)

என்ற பாசுரத்தில் இறைவனை மலர்தூவி வணங்கினாலே போதும் என்பதை அறியாமல், மலையில் நின்றும், நீரில் மூழ்கியும், தீயிடையே நின்றும் தவம் செய்வோர், தவம் என்ற பெயரில் வீணாகத் துயருர வேண்டாம் என்கிறார் பேயாழ்வார்.

"தேறாது வனம்போய்வன வனமும் போனீர்
சிறுகிழங்கைக் கொண்டுபெருங் கிழங்கை கொண்டீர்
ஊறாத பலஞ்சுவைத்தோர் பலமும் காணீர்
இலைமேய்ந்தும் பேறிலையே இதுவோ யோகம்
மாறாது சருகுதின்று சருகு பட்டீர்
வாயுநுகர் தீர்வாய் மௌன மானீர்
ஆறாத தீயினிற்பீர் தீய ரேறும்
மருத்தவமே தவம்அழகர்க் காட்ப டீரே."

~ (அழகர்க் கலம்பகம் : 14)

என்னும் அழகர்கலம்பகப் பாடலில், இறைவனைச் சென்று அடைந்தற்கரிய சரியான வழிவகையை அறிந்து கொள்ளாமல், 'தவம்' என்ற பெயரில் வீணாக உடலை வருத்துவோரைத் 'தீயர்' என்கிறார் அரபத்த நாவலர். இவ்விரு பாடல் கருத்துகளும் இப்பாடலோடு ஒப்புநோக்கத் தக்கன.

கான் – காடு, தீயிடை நிற்றல் – பஞ்சாக்கினிக்கு நடுவே நிற்றல். பஞ்சாக்கினி என்பது தவம் செய்வோனைச் சுற்றி நாற்றிசையிலும் மூட்டப்பெற்ற அக்கினிகள் நான்கும் சூரியனாகிய அக்கினி ஒன்றும் சேர்ந்தது. தடம் – பெரிய.

### கட்டளைக் கலித்துறை

19. வீரர்அரங் காகிய ஐவரை மாற்றி விடஅரவில்
போர்அரங் காக நடித்தபொன் தாள்பற்றிப் பொன்னிநன்னீர்ச்
சீர்அரங் காநின் தொழும்பனென் றேசிந்தை செய்யிலது
கூர்அரங் காநெஞ்ச மேவஞ்ச மாயக் கொடுவினைக்கே.

வீரர்அங் காகிய ஐவரை மாற்றி வலிமைமிக்க வீரர்களாக விளங்கும் ஐவர்களான ஐம்பொறிகளைத் தத்தமது புலன்களுக்கு உரிய உணர்வின்வழி செல்லாதவாறு மாற்றி,

விடஅரவில் போர்அரங் காகநடித்த பொன்திரள் பற்றி - விடத்தை உடைய காளிங்கராயன் என்னும் பாம்பின், படத்தின்மீது நின்று போர்செய்து, கூத்தாடி அருளிய பொன்னினை ஒத்த அழகான திருவடிகளைச் சரணமடைந்து,

பொன்னி நன்னீர் சீரரங்கா ! - காவிரி நதியின் தூய நீரால் சூழப்பட்ட திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கக் கூடிய திருவரங்கா!

நின்தொழும்பன என்றே சிந்தை செய்யில் - என்னை உன்னுடைய அடியவன் என்று நீ நினைத்தால்,

அதுகூர் அரங்கா நெஞ்சமே வஞ்சமாயக் கொடுவினைக்கே - அவ்வெண்ணமே வஞ்சனை உடைய இருவினைகளையும் அறுக்கும் கூர்மையுடைய வாளாகும் என்பதை மனமே நீ அறிவாயாக.

ஐம்பொறிகளையும் அடக்கி, எம்பெருமானின் திருவடிகளைச் சரணமடைந்தால் இருவினைகளும் நம்மைவிட்டு நீங்கி முத்தி கிடைக்கும் என்ற தன் மனத்திற்குக் கூறுவதாக ஆசிரியர் இப்பாடலை அமைத்துள்ளார்.

ஐம்பொறிகளை உணர்வின்வழி செல்லாதவாறு அடக்குதல் அரியது. ஆகையால் வலிமைமிக்க வீரர்களாகிய ஐவர் என்ற பொருட்பட, 'வீரர்அங் காகிய ஐவர்' என்றார். (அங்கு - அசைச் சொல்). மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளை 'ஐவர்' என உயர்திணையாகக் கூறியுள்ளார்.

புலன்களின் வாயிலாகச் செயல்படும் இந்திரிய நாட்டத்தை விடுத்து நலம் மிக்கதாகவும் பேரானந்தம் அளிக்கக் கூடியதாகவும் விளங்கும் அப்பரமனே நாடிப் பரமபதம் சேர்வீர்களாக என்று நம்மாழ்வார்,

"புலனைந்து மேயும் பொறியைந்தும் நீங்கி
நலமந்தம் இல்லதோர் நாடு புகுவீர்
அலமந்து வீய அசுரரைச் செற்றான்
பலமுந்து சீரில் படிமினோ வாதே."
- (திருவாய்மொழி 2:8:4)

என்று தன் பாசுரத்தில் எடுத்தோதுவது இப்பாடலோடு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

**வீரராங்காகிய ஐவர்** - வலிமையுடைய ஐம்பொறிகள், **விடத்தரவு** - விடத்தைக் கொண்ட பாம்பு, காளிங்கன், **அரங்கு** - நடனசாலை. **கூத்தாடுதல்** - நடனமாடுதல். **பொன்னி** - காவிரி ஆறு. **தொழும்பன்** - அடியவன். **கொடுவினை** - தீவினை. **கூர்அரம்** - கூரியவாள்.

### நேரிசை வெண்பா

20. கேசவனை யேசெவிகள் கேட்க திருவரங்கத்
தீசனையே சென்னி இறைஞ்சிடுக – நேசமுடன்
கண்ணனையே காண்கஇரு கண்ணிணைகொள் காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துகஎன் வாய்.

**கேசவனையே செவிகள் கேட்க** - கேசவனைப் போற்றுவதையே என்காதுகள் கேட்க வேண்டும்.

**திருவரங்கத் தீசனையே சென்னி இறைஞ்சிடுக** - திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானை என் தலை வணங்க வேண்டும்.

**நேசமுடன் கண்ணனையே காண்க இருகண்** - திருவரங்கப் பெருமானின் அவதாரமாகிய கண்ணபிரானை என் இரு கண்களும் கண்டு மகிழ வேண்டும்.

இணர்கொள் காயாம்பூ வண்ணனையே வாழ்த்துக என் வாய் - கொத்தாக மலர்ந்துள்ள நீலநிற காயாம்பூ மலரின் வண்ணத்தையுடைய எம்பெருமானை என்னுடைய வாய் வாழ்த்துதல் வேண்டும்.

எம்பெருமானால் படைக்கப்பட்ட காது, தலை, கண், வாய் முதலான உறுப்புக்களால் பிறவியின் நன்மையை உணர்ந்து எம்பெருமானின் புகழைச் செவிகளால் கேட்டு, தலையினால் அவனை வணங்கி, கண்ணார அவனைக் கண்டு, வாயார வாழ்த்த வேண்டும் என்கிறார் ஆசிரியர்.

*"வாயவனை அல்லது வாழ்த்தாது கையுலகம்*
*தாயவனை அல்லது தாம்தொழா - பேய்முலைநஞ்*
*சூணாக வுண்டான் உருவொடு பேரல்லால்*
*காணாதகண் கேளாச் செவி."*

- (இயற்பா - முதல் திருவந்தாதி, 11)

என்று எம்பெருமானை அல்லாது என் வாய் வேறொருவரை வாழ்த்தாது; தாவி உலகளந்த அவன் திருவடிகளையல்லாமல் வேறு எவற்றையும் என் கைகள் தொழமாட்டா; பூதனை என்கிற பேய் முலையின் நஞ்சினைத் தனக்கு உணவாகக் கொண்ட அவனது திருமேனியைத் தவிர வேறு எவற்றையும் என் கண்கள் காணா; அவனது திருநாமங்களைத் தவிர வேற எவற்றையும் என் காதுகள் கேட்க மாட்டா என்கிறார் பொய்கையாழ்வார்.

*"வாழ்த்துகவாய் காண்கசுண் கேட்கசெவி மகுடம்*
*தாழ்த்தி வணங்குமின்கள் தண்மலரால் - சூழ்ந்த*
*துழாய்மன்னு நீண்முடியென் தொல்லைமால் தன்னை*
*வழாவண்கை கூப்பி மதித்து"*

(இயற்பா - நான்முகன் திருவந்தாதி, 11)

என்ற பாசுரத்தில், எம்பெருமானை ஒரு நொடிப் பொழுதும் விடாமல் கைகளைக் கூப்பித் தியானம் செய்து, தலையால் வணங்கி, குளிர்ந்த மலர்களைக் கொண்டு வழிபாடு செய்யுங்கள். உங்களுடைய வாய் அவனைத் துதிக்கட்டும்; கண்கள் அவனையே சேவிக்கட்டும்; காதுகள் அவன் சரிதங்களையே கேட்கட்டும் என்று எழிலுற எடுத்தோதுகிறார் திருமழிசையாழ்வார்.

"பேசவரிற் றென்னரங்கன் பேரெல்லாம் பேசுகவாய்
கேசவனைக் காண்கவிழி கேட்கசெவி - ஈசனார்
உண்டியூர் தோறுமுழன் றிரவாமற் றவிர்த்தான்
கண்டியூர் கூப்புகவென் கை"

- (நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி : 15)

என்ற பாடலில், பேசத்தொடங்கினால் தென்னரங்கன் நாமங்களை எல்லாம் பேச வேண்டும்; என்னுடைய கண்கள் கேசவனெனும் திருநாமத்தையுடைய எம்பெருமானை தரிசிக்க வேண்டும்; என்னுடைய காதுகள் எம்பெருமானது புகழையே கேட்க வேண்டும்; என்னுடைய கைகள் சிவபெருமானை ஊர்கள் தோறும் சென்று இரவாமல், அவனுடைய சாபத்தை நீக்கிய எம்பெருமானுடைய திருக்கண்டியூர் என்னும் தலத்தை நோக்கியே வணங்கவேண்டும் என்று அழகாக எடுத்துரைக்கிறார் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். இப்பாடலுடன் ஒப்புநோக்கத் தக்க வகையில் இவை அமைந்துள்ளன.

## இரங்கல்

(தலைவனைப் பிரிந்த தலைவி கடலை நோக்கி இரங்கிக் கூறுதல்)

### அறுசீர் விருத்தம்

வாயின் இரங்கினை ; ஆரம் எறிந்தனை ;
வாள்வளை சிந்தினைதண்
பாயலை உந்தினை ; மாலை அடைந்தனை ;
பாரில் உறங்கிலையால் ;
கோயில் அரங்கனை மாக வகந்திகழ்
கோக னம்பொலியும்
ஆயிழை நண்பனை நீயும் விரும்பினை
ஆக நெடுங்கடலே !

வாயில் இரங்கினை ஆரம் எறிந்தனை - பேரொலி எழுப்புகின்றாய் ; முத்துக்களைக் கரையில் வீசுகின்றாய் ;

வால்வளை சிந்தினைதன் பாயலை உந்தினை - ஒளி பொருந்தியதான சங்குகளைச் சிந்தினாய்; குளிர்ச்சியுடையனவாய் பாய்ந்துவரும் அலைகளைக் கடலிலிருந்து வெளியே தள்ளுகிறாய் ;

மாலை அடைந்தனை பாரில் உறங்கிலையால் - மாலை நேரம் வந்ததனை அடைந்தாய் ; பூமியில் உறங்காமல் ஓயாத அலைகளை அலைத்துக் கொண்டு இருக்கிறாய்;

கோயில் அரங்கனை - திருவரங்கக் கோயிலில் எழுந்தருளியுள்ள திருவரங்கநாதனாகிய எம்பிரானை,

மாகனகம் திகழ் கோகனம் பொழியும் ஆயிழை நண்பனை - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் பெருமை பொருந்திய பொன்போல் திகழ்கின்ற, ஆராய்ந்தெடுத்து அணிந்த ஆபரணங்களை உடைய திருமகளது கணவனை,

நீயும் விரும்பினை நெடுங்கடலே ! - என்னைப் போலவே நீயும் விரும்பியிருக்க வேண்டும் பெரிய கடலே !

தலைவனைப் பிரிந்து, பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவி, தன்னிடத்துக் காணப்பட்ட வாயின் இரங்குதல் வால்வளை சிந்துதல் முதலிய செயல்கள் கடலினிடத்தும் காணப்பட்டதாலும், இரங்கல் நெய்தல் நிலத்திற்கு உரியதாலும் அந்த நெய்தல் கடலும் கடல்சார்ந்த இடமாக இருந்ததாலும் கடலை முன்னிலைப்படுத்திக் கூறுகின்றாள்.

இத்துறை, 'தன்னுட்கையாறெய்திடு கிளவி' எனப்படும். அதாவது, தமக்கு நேர்ந்த துன்பத்தைத் தம் ஆற்றாமமையால் பிறிதொன்றின்மேல் இட்டுச் சொல்லும் சொல்.

அ. வாயின் இரங்குதல்

கடலுக்கு - பேரொலி செய்தல்

தலைவிக்கு - தலைவனைப் பிரிந்த வருத்தத்தால் வாய்விட்டுப் புலம்புதல்.

ஆ. ஆரம் எறிதல்

கடலுக்கு - மணியாரங்களில் கோக்கப்படும் முத்துக்களை வீசுதல்.

தலைவிக்கு - பிரிவாற்றாமையால் கழுத்தில் அணிந்துள்ள மணி ஆரத்தைக் கழற்றி வீசுதல்

இ. வால்வரை சிந்துதல்

கடலுக்கு - ஒளி பொருந்தியதான சங்குகளைச் சிந்துதல்

தலைவிக்கு - பசலையினால் கைகளிலிருந்து சங்கு வளையல்கள் கழன்று விழுதல்.

ஈ. தண்பாயலை உந்துதல்.

கடலுக்கு - குளிர்ச்சியுடையனவாய்ப் பாய்ந்துவரும் அலைகளைத் தள்ளுதல்.

தலைவிக்கு - குளிர்ச்சியுடையதான படுக்கையைத் தள்ளுதல்

உ. மாலை அடைதல்.

கடலுக்கு - மாலை நேரத்தை அடைதல்.

தலைவிக்கு - வேட்கை மிகுதியால் மயக்கம் அடைதல்.

ஊ. பாரில் உறங்கிலையால்

கடலுக்கு - அல்லும் பகலும் பூமியில் ஓயாத அலைகளை அலைத்துக் கொண்டு இருத்தல்.

தலைவிக்கு - வேதனை மிகுதியால் இரவுநேரம் முழுவதும் தூங்காமல் இருத்தல்.

என இப்பாடலில் சிலேடை பயின்று வந்துள்ளதைக் காணலாம்.

காமுற்ற கையறவோடு எல்லே! இராப்பகல்
நீமுற்றக் கண்துயிலாய் நெஞ்சுருகி யேங்குதியால்
தீமுற்றத் தென்னிலங்கை ஊட்டினான் தாள்நயந்த
யாமுற்ற துற்றாயோ வாழிகனை கடலே!

- (திருவாய்மொழி 2:1:3)

என்ற பாசுரத்தில், அலைகளை வாரி இரைத்து ஒலிக்கும் கடலே! நான் பெருமூச்செறிந்து ஏங்குவது போல, கடலே ? நீயும் அலைகளால் பேரொலி செய்து பெருமூச்சு விடுகிறாயோ ? நீயும் என்னைப் போல உறங்காது இரவும் பகலும் ஏங்குகிறாய். எம்மைப்போன்று நீயும் இலங்கையைத் தீக்கிரையாக்கிய இராமபிரானின் திருவடிகளிடத்து அன்பு கொண்டாயோ என்று கூறுவதாக நம்மாழ்வார் எடுத்தோதி இருப்பது இப்பாடலோடு ஒப்பிடத்தக்கது.

வால் - ஒளி, பார் - பூமி, கனகம் - பொன், கோகனம் - தாமரை.

### இரங்கல்

(பிரிவு ஆற்றாது வருந்திய தலைகள் இரங்கல்)

கலித்துறை - வண்ணத்துறை

22. கடல்வழி விடநிசி சரர்பொடி படவிரு கண்சீறி
வடகயி லையின்எழு விடைதழு வியது மறந்தாரே
அடலர அமளியில் அறிதுயில் அமரும் அரங்கேசர்
இடர்கெட வருகிலர் முருகலர் துளவும் இரங்காரே.

கடல்வழி விடநிசி சரர்பொடி படவிரு கண்சீறி - முன்பு இராம அவதாரத்தில் சீதைக்காகக் கடலைக் கடக்க விரும்பிய காலத்தில் வழிபடச் செய்து, இராவணன் முதலான அரக்கர்கள் அழியும்படியாக இரு கண்களும் சிவக்க சீற்றம் கொண்டு,

வடகயிலையின் எழுவிடை தழுவியது மறந்தாரோ - முன்பு கிருஷ்ணாவதாரத்தில் வடக்கேயுள்ள கயிலாய மலையைப் போன்று விளங்கிய பெரிய ஏழு எருதுகளை நப்பின்னைக்காக அடக்கியதை மறந்துவிட்டாரோ ?

அடல்அர அமளியில் அறிதுயில் அமரும் அரங்கேசர் - வலிமைப் பொருந்திய ஆதிசேடனின் சயனத்தில் யோகநித்திரையில் அருளுகின்ற திருவரங்கப் பெருமான்,

இடர்கெட வருகிலர் முருகலர் துளவும் இரங்காரே - தலைவியாகிய என்னுடைய தனிமை வேதனை வந்து தீரும்படி வந்து அணைத்துக் கொள்ளவும் இல்லை. என்மீது இரங்கி, வாசனை வீசுகின்ற துளசிமாலையைத் தரவும் இல்லை.

இயற்கைப் புணர்ச்சி முதலிய வகைகளால் தலைவியைக் களவில் கூடிநின்ற தலைவன் அங்குப் பழியெழுந்ததென்று, சிலநாள் ஒருவழிப் பிரிந்து உறைதல் உண்டு. அது ஒருவழி தணத்தல் எனப்படும். அன்றி, களவுப் புணர்ச்சி பெற்ற தலைமகன் தோழியால் வரைவு முடுக்கப்பட்டுத் தலைமகளை வரைந்து கொள்ளுதற்கு வேண்டியபொருள் தேடல் பொருட்டும் பிரிவான். அது வரைபொருட் பிரிதல் எனப்படும். அங்ஙனம் தலைமகள் பிரிந்த சமயங்களில், அப்பிரிவை ஆற்றாத தலைவி, நெஞ்சொடு கூறலாகத் தன்னிலே தான் இரங்குதலும் மனமொத்த உயிர்த்தோழியோடு இரங்குதலும் செய்வள்.

தலைவனைப் பிரிந்த நிலையில் தலைவனது மாலை கிடைக்கப் பெற்றால் அது கொண்டேனும் ஆற்றி இருக்கலாம் என்று தலைவி கருதுகிறாள். இந்நிலையில் தலைவனின் மாலையும் கிடைக்கப் பெறாமையால், வருந்தி தன்நிலைக்காக இரங்கிக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

இப்பாடலில், தலைவனாக விளங்குபவன் திருவரங்கப் பெருமான், தன்னுடைய தலைவர் தன்னை மறவாராயின் சனகர் மகளுக்கும் ஆயர்மகளுக்கும் இரங்கியது போலவே தனக்கும் இரங்குவான் என்று எண்ணுகிறாள். சீதாபிராட்டியினிடத்து ஆராத அன்பினால் அவள் பிரிவை ஆற்றாது, அவளைக் கூடுதல் பொருட்டுத் தன்னிலும் தாழ்ந்தவனாகிய வருணனைத் தலையால் வணங்கிக் கடலை அடைத்தலாகிய செயற்கரும் செயலைச் செய்தவரும், நப்பின்னைப் பிராட்டியை மணம்செய்து கொள்ளும் விருப்பினால், ஓர் இடையனது அடங்காத ஏழு எருதுகளை வலியடக்கித் தழுவியவருமாகிய தலைவர் என்னைப் பற்றி எண்ணாது இருப்பது அவருடைய பெருமைக்கு இழுக்கைத் தருவதாகும் என்று உணர்த்துகிறாள் என்று மூவர் உரையில் உள்ள செய்தி இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

'கடல்வழிவிட' என்றது கடலைக் கடக்க எண்ணி, வருணனிடம் வேண்டிநிற்க, அவன் அலட்சியம் செய்தமையால் அவனுடைய ஆணவத்தை அழிக்க, கடலில் உள்ள நீர் வற்றும்படியாகக் கணையைச் செலுத்தியதும், இலங்கைக்குச் செல்வதற்கு வழி வேண்டியதாக இருத்தலின், வானரப்படைகளின் உதவியோடு மலைகளைக் கொண்டு சேது அணையைக் கட்டியதுமாகும்.

"குரைகடலை அடலம்பால் மறுக வெய்து
குலைகட்டி மறுகரையை அதனால் ஏறி"
- (பெருமாள் திருமொழி 10:3)

என்று குலசேகராழ்வார் இதனை எடுத்துரைப்பர்.

"பரந்திட்டு நின்ற படுகடல் தன்னை
இரந்திட்ட கைமேல் எறிதிரை மோத
கரந்திட்டு நின்ற கடலைக் கலங்க
சரந்தொட்ட கைகளால் சப்பாணி
சார்ங்கவிற் கையனே! சப்பாணி.
- (பெரியாழ்வார் திருமொழி 1:6:7)

என்ற பாசுரத்தில் ஆழமான கடற்கரையில் அலைவீசியடிக்க, மறைந்து கிடந்த வருணன் கலங்கும்படி அம்பினைத் தொடுத்த நிகழ்ச்சியை எடுத்துரைக்கும் பெரியாழ்வார், சப்தமிடுகின்ற கடலைத் தேங்கும்படி செய்து குரங்குகளைக் கொண்டு அணையைக் கட்டி முடித்தவன் எம்பெருமான் என்கிறார். இதனைக்,

"குரங்கினைத் தாலே குரைகடல் தன்னை
நெருக்கி அணைகட்டி நீணீர் இலங்கை
அரக்கர் அவிய அடுகணை யாலே
நெருக்கிய கைகளால் சப்பாணி
நேமியங் கையனே ? சப்பாணி"

- (பெரியாழ்வார் திருமொழி 1:6:8)

என்று எழிலுற எடுத்தோதுகிறார். வடகயிலைமலையில் ஏழு எருதுகளைக் நப்பின்னையை மணந்தார் எம்பெருமான். இதனை ஏழ் உலகங்களும் அறியும்படி திருவாய்ப்பாடியில் நப்பின்னை பிராட்டியின் திருமேனியை அணைவதற்காக எருதுகளைத் கொன்றவன் எம்பெருமான் என்பர்.

"அம்பொனார் உலகம் ஏழும் அறிய ஆய்ப்பாடி தன்னுள்
கொம்பனார் பின்னை கோலம் கூடுதற்கு ஏறுகொன்றான்"

- (பெரிய திருமொழி 5:9:8)

என்று திருமங்கையாழ்வார் அழகாக எடுத்துரைப்பர்.

இப்பாடலில் கூறப்பட்டுள்ளதைப் போன்ற சீதைக்காகக் கடலை அடைத்துத் திரிகூடமலையில் சென்று சேரும்படியாக வானர சேனைகளைக் கொண்டு, கடலில் வழி ஏற்படச் செய்ததையும் நப்பின்னைக்காக ஏழு எருதுகளை அடக்கியதையும் ஒரே பாசுரத்தில் திருமங்கையாழ்வார்,

"விடையேழ் அன்றடர்த்து வெகுண்டு விலங்கலுற
படையால் ஆழிதட்ட பரமன் பரஞ்சோதி"

- (பெரிய திருமொழி 8:9:3)

என்ற எழிலுற எடுத்தோதியுள்ளார்.

இராமாவதாரத்தில் சீதாபிராட்டியின் அன்பினால் கட்டுண்டு உண்ணாமலும் உறங்காமலும் வருந்தி ஒலிகடலின் நடுவே அணைகட்டி தாம் அடைந்த வருத்தத்தை மறந்து இப்பொழுது தம்முடைய பெருமைகளையே எண்ணுகிறார். என்னை எண்ணிப் பார்க்கவில்லை என்னும் பொருளில் திருவரங்கர் மீது காமுற்ற தலைவி கூறுவதாக.

"உண்ணாது உறங்காது ஒலிகடலை ஊடறுத்து
பெண்ணாக்கை யாப்புண்டு தாமுற்ற பேதெல்லாம்
திண்ணார் மதில்சூழ் திருவரங்கச் செல்வனார்
எண்ணாத தம்முடைய நன்மைகளே எண்ணுவரே"
- (நாச்சியார் திருமொழி 11:7)

என்ற பாசுரத்தில் ஆண்டாள் பாடுவது இப்பாடலுடன் ஒப்புநோக்கத் தக்கதாகும்.

நிசரர் - அரக்கர்கள், கண் சீறுதல் - கண்கள் சிவக்க சீற்றம் கொள்ளுதல், விடை - எருது, அடல் - வலிமை, முருகு - நறுமணம்.

### நேரிசை வெண்பா

23. இரங்கத் தனித்தனியே எய்துகின்ற துன்பத்
தரங்கத்தை ஏதால் தடுப்பீர் ? – அரங்கருக்குக்
கஞ்சத் திருப்பாதம் கார்மேனி என்றவர்மேல்
நெஞ்சம் திருப்பாத நீர்.

இரங்கத் தனித்தனியே எய்துகின்ற - உடலும் மனமும் வருந்தும் - படியாகப் பல்வேறு வகையாகவும் வந்து அடைகின்ற,

துன்பத் தரங்கத்தை ஏதால் தடுப்பீர் - துன்பமாகிய அலைகளை எதனைத் துணையாகக் கொண்டு தடைசெய்வீர்கள் ?

அரங்கர்க்குக் கஞ்சத் திருப்பாதம் கார்மேனி - திருவரங்க நாதருடைய செந்தாமரை மலர்போன்ற திருவடிகளையும் கார்மேகத்தை ஒத்த மேனியையும்,

என்றவர்மேல் நெஞ்சம் திருப்பாத நீர் - தன்னகத்தே கொண்ட எம்பெருமான் மீதன்றி, தீயவழிகளில் செல்லாது தம் மனத்தைத் திருப்பாத நீங்கள்.

எம்பெருமானின் திருவடிகளிடத்துத் தன் மனதைச் செலுத்தாதவர்கள், துன்பத்திலிருந்து தங்களை எதனைக் கொண்டு காத்துக் கொள்ள முடியும் ? என்ற வினாவினை எழுப்பி, இறைவனின் அருளைப்பெற அவனையே இடையறாது எண்ணுதல் வேண்டும் என்ற விடையினை உய்த்துணர வைக்கிறார் ஆசிரியர்.

பிறவியாகியப் பெருங்கடலைக் கடப்பதற்கு இறைவனடியை இடையறாது சிந்தித்தல் வேண்டும். அங்ஙனம் சிந்தியாதவர் பிறவியாகியப் பெருங்கடலைக் கடக்க இயலாது என்பதைப்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் ; நீந்தார்
இறைவனடி சேரா தார்."

- (திருக்குறள் : அறத்துப்பால் :10)

என்பார் வள்ளுவர்.

"எருத்துக் கொடியுடை யானும் பிரமனும் இந்திரனும் மற்றும்
ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்குமருந் தறிவாரு மில்லை
மருத்துவ னாய்நின்ற மாமணி வண்ணா! மறுபிற விதவிர
திருத்திஉன் கோயில் கடைப்புகப் பெய்திருமா லிருஞ்சோலை எந்தாய்"

- (பெரியாழ்வார் திருமொழி 5:3:6)

என்ற தன் பாசுத்தில், எருதுக் கொடியையுடைய சிவபெருமானும் பிரமனும் தேவேந்திரனும் மற்றுமுள்ள தேவர்களும் இந்தப் பிறவி என்னும் நோய்க்கு மருந்து அறிவார் இல்லை. இப்பிறவி நோய்க்கு மருத்துவனான நீலமணி வண்ணனே ! எனக்கு மறுபிறவி நேராதபடி காப்பாற்றி உன் கோயில் வாசலில் வாழுமாறு அருள்புரிய வேண்டும் என்று கூறுவர் பெரியாழ்வார். இப்பாசுரத்தோடு ஒப்பிட்டு நோக்கத்தக்க வகையில் இப்பாடல் அமைந்துள்ளது.

இரங்குதல் - வருந்துதல். தரங்கம் - அலை, கஞ்சம் - தாமரை. கார் - மேகம், மழை.

### இரங்கல்

(பதினான்குசீர் ஆசிரிய விருத்தம்)

24. நீரி ருக்கமட மங்கை மீர்கிளிகள்
தாமி ருக்கமது கரமெலாம்
நிறைந்தி ருக்கமட அன்ன முன்னநிரை
யாயி ருக்கஉ ரை யாமலியா
னாரி ருக்கிலும்என் நெஞ்ச மல்லதொரு
வஞ்ச மற்றதுணை இல்லைஎன்
றாத ரத்தினொடு தூது விட்டபிழை
யாரி டத்துரைசெய் தாறுவேன்
சீரி ருக்குமறை முடிவு தேடரிய
திருவ ரங்கரை வணங்கியே
திருத்து ழாய்தரில் விரும்பி யேகொடு
திரும்பி யேவருதல் இன்றியே
வாரி ருக்குமுலை மலர்ம டந்தையுறை
மார்பி லேபெரிய தோளிலே
மயங்கி இன்புற முயங்கி என்னையும்
மறந்து தன்னையும் மறந்ததே.

நீரிருக்க மடமங்கைமீர் கிளிகள் தாமிருக்க - பேதமையுடைய குணத்தையுடைய தோழிகளே! நீங்களெல்லாம் எனக்கு உதவுவதற்கு இருக்கவும், சொன்னதையே சொல்லும் கிளிகளெல்லாம் இருக்கவும்,

மதுகரமெல்லாம் நிறைந்திருக்க மடஅன்ன முன்ன நிரையாய் இருக்க-எம்மொழியைக் கேட்க வண்டுகளெல்லாம் சூழ்ந்து நிறைந்து நிற்கவும், அழகிய அன்னப்பறவைகளெல்லாம் கூட்டமாகத் திரண்டு இருக்கவும்,

உரையாமல் யான் ஆர் இருக்கிலும் - அவைகளிடத்தில் நான் உரையாது, வேறே யார், இருக்கினும் (அவைகளைத் தூதாக அனுப்பக் கருதாது)

நெஞ்ச மல்லதொரு வஞ்சமற்ற துணை இல்லை என்றாதரத்தினொடு - என் மனதைக் காட்டிலும் வஞ்சகமில்லாத துணை நமக்கு யாரும் இல்லை என்று எண்ணியதன் காரணமாக,

தூது விட்டபிறை யாரிடத்துரை செய் தாறுவேன் - என்னுடைய மனதையே தூதாக அனுப்பிய தவறை யாரிடத்தில் கூறி மனம் தணிவேன்.

சீரிருக்கு மறைமுடிவு தேடரிய திருவரங்கரை வணங்கியே - (நான் தூதாக அனுப்பிய என்னுடைய மனம்) சிறப்புப் பொருந்திய வேதங்களும் தேடிச் கண்டறிவதற்கு ஒண்ணாத திருவரங்க நாதரை வணங்கி,

திருத்துழாய் தரில் விரும்பியே கொடு - (நான் உன்னிடத்துக் கூறியவற்றை எடுத்துக் கூறி) திருத்துழாய் மாலையைத் திருவரங்கப் பெருமான் விரும்பியே வழங்கினால், அதனைக் கொண்டு வந்துகொடு என்று கூறி அனுப்பவும்,

திரும்பி வருதல் இன்றியே - திரும்பி வருதல் இல்லாமலேயே,

வாரிருக்கும் முலைமலர் மடந்தையுறை மார்பிலே பெரிய தோளிலே - கச்சினால் இழுத்துக் கட்டப்பட்ட தனங்களை உடைய செந்தாமரை மலரில் தங்கியிருக்கக் கூடிய திருமகள் உறைகின்ற திருவரங்கரது திருமார்பிலும் பெரிய தோள்களிலும்,

மயங்கி இன்புற முயங்கி என்னையும் மறந்து தன்னையும் மறந்ததே - மயக்கம் (விருப்பம்) கொண்டு, இன்பம் உண்டாகும்படியாகத் தழுவிக் கொண்டு, தலைவியாகிய என்னையும் மறந்து, தான் தூதாகப் போன வேலையையும் மறந்துவிட்டது.

இது நெஞ்சத்தைத் தூதுவிடுத்த தலைமகள், அது மீண்டும் வராததைக் கண்டு தோழியரிடத்துத் தனக்காக இரங்கிக் கூறியது. இப்பாடலில், 'அரங்கநாதனின் அழகில் ஈடுபட்ட மனம் திரும்பாத தன்மை உடையது' என்று ஆசிரியர் உணர்த்துவதாக அமைந்துள்ளது.

தலைவி தோழியரை நோக்கி, சுகதுக்கங்களில் எனக்குத் துணையாயிருந்து உதவிகின்ற பாங்கியர்களாகிய உங்களைத் தூதனுப்பலாம் என்று பார்த்தாலோ நீங்கள் என்னோடொத்த பருவமுடைய இளமகளிராதலால், அந்தலைவரழகில் ஈடுபட்டு ஆழ்ந்திடுவீரேயன்றி என்காதலை அவரிடம் சொல்லி மறுமொழி கொண்டு மீண்டு வருவீரல்லீர். கிளியைத் தூதுனுப்பலாம் என்றாலோ அதனை மன்மதனது குதிரையாகக் கூறுவராதலின், அதுவும் இணங்கி வராது; மேலும், அது சொல்லியதே

சொல்லும் இயல்புடைய தன்றோ ? வண்டோவெனின் மன்மதனது வில்லின் நாணாதலால், அதுவும் என்திறத்து அன்புடையதாகாது. அன்னப் பறவை சிரமம் பொறாததும் மந்தகதியுடையதும் இனியவிடத்து வீற்றிருந்து கிடைத்த இரையையுண்டு பிரிவுத் துயரறியாது தானும் தன் துணையும் கூடி வாழ்ந்து களித்திருப்பதும் நலம்பேணுவதும் நட்புப்பிரிக்கும் குணமுடையதுமாதலால், அது அந்தப் போகத்தை விட்டு எனக்காக அவ்வளவு தூரம் வருந்திச் சென்று விரைவில் என் நிலைமையைத் தலைவர்க்குச் சொல்லி, நேரில் மீண்டு வந்து அச்சொல்லை எனக்குச் சொல்ல மாட்டாது. ஆதலின், அப்பொருள்களுள் எதனிடத்தும் நம்பிக்கை கொள்ளாமல், 'நெஞ்சையொளித்தொரு வஞ்சக மில்லை' என்றபடி எனது நெஞ்சினிடத்து நம்பிக்கை கொண்டு அதனைத் தலைவர்பால் தூதுனுப்பி மீண்டு வராமையால், இதனை யாரிடத்துக் கூறியாறுவே னென்று இரங்கினள் என்க.[13] என நெஞ்சைத் தூதாக அனுப்பி தலைவி தேந்தெடுத்ததற்கான காரணங்களை அழகாக விளக்கும் மூவர் உரையில் நயம் இங்கு சுட்டத்தக்கது.

மடமங்கை - பேதைமையுடைய தோழி. மதுகரம் - வண்டு, மட அன்னம் - அழகிய அன்னம், நிறையாய் - கூட்டமாக, ஆறுவேன் - மனந்தணிவேன், சீர் - சிறப்பு. முயங்குதல் - தழுவுதல்.

13. திருவரங்கக் கலம்பகம் (மூவர் உரை). பக்.53.

## வண்டுவிடு தூது

நேரிசை வெண்பா

25. மறக்குமோ காவின் மதுஅருந்தி அப்பால்
பறக்குமோ சந்நிதிமுன் பாமோ – சிறக்கத்
திருவரங்கன் கேட்குமோ தாழ்க்குமோ நெஞ்சே !
திருவரங்கர் பால்போன தேன்.

மறக்குமோ காவின் மதுஅருந்தி – திருவரங்கரிடத்து வண்டைத் தூதாக அனுப்பினால், இடைவழியில் உள்ள சோலைகளில் உள்ள மலர்களில் தேனைப் பருகி, தேனுண்ட மயக்கத்தால் தலைவியாகிய என்னை மறந்துவிடுமோ !

அப்பால் பறக்குமோ சந்நதிமுன்பு ஆமோ – அல்லது அச்சோலைகளுக்கு அப்புறத்தேச் செல்லுமோ அல்லது திருவரங்கக் கோயிலின் சந்நதிமுன் சென்று சேருமோ !

சிறக்கத் திருவரங்கன் கேட்குமோ தாழ்க்குமோ நெஞ்சே ! – சேர்ந்தபின் எனக்குச் சிறப்பினைத் தரக்கூடிய வரங்களை அவர் அருளுவாராயின் அதனைக் கேட்குமோ ! கேட்கின் உடனே என்னிடத்துக் கூறாது காலம் தாழ்த்துமோ ஏதென்று அறியேன் மனமே !

திருவரங்கர் பால்போன வண்டு – திருவரங்கரிடத்துத் தூதாகச் சென்ற வண்டு.

இப்பாடலில் தலைமகள் ஒருத்தி வண்டைத் திருவரங்கரிடத்துத் தூதாக அனுப்பி, அது திரும்பி வாராமையினால் ஐயமுற்று தன் நெஞ்சிற்குக் கூறுமாறு அமைத்துள்ளார் ஆசிரியர்.

"வாயான் மலர்கோதி வாவிதொறு மேயுமோ
மேயாம லப்பால் விரையுமோ – மாயன்
திருமோகூர் வாயின்று சேருமோ – மாயன்
வருமோகூர் வாயன்னம் வாழ்ந்து"[14]

என்ற சான்றுப் பாடலோடு, இப்பாடல் ஒப்பு நோக்கத்தக்கது.

தேன் – வண்டு. மது – தேன். தாழ்க்குதல் – தாழ்த்துதல்.

---

14. திருவரங்கக் கலம்பகம் (மூவர் உரை) பக்.54.

அம்மானை

26. தேனமரும் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலிஅலர்காண் அம்மானை
ஆனவர்தாம் ஆண்பெண் அலிஅலரே யாமாகில்
சானகியைக் கொள்வரோ தாரமாய் அம்மானை
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை.

தேனமரும் சோலைத் திருவரங்கர் எப்பொருளும் ஆனவர்தாம் - வண்டுகள் தேனைப் பருக விரும்பும் பூஞ்சோலைகள் சூழ்ந்த திருவரங்கத்தில் எழுந்தருளி இருக்கக்கூடிய திருவரங்கப் பெருமான் இவ்வுலகிலுள்ள அனைத்துப் பொருள்களாகவும் விளங்கக் கூடியவர்.

ஆண் பெண் அலிஅலர்காண் அம்மானை - (என்றாலும்) ஆணாகவும் பெண்ணாகவும் அலியாகவும் இல்லாதவர் என்பதைக் காண்பாயாக.

ஆனவர்தாம் ஆண்பெண் அலிஅலரே யாமாகில் - இவ்வுலகிலுள்ள அனைத்துப் பொருள்களாகவும் விளங்கக் கூடியவர், ஆணாகவும் பெண்ணாகவும் அலியாகவும் அல்லாதவரேயானால்,

சானகியை கொள்வாரோ தாரமாய் அம்மானை - (அங்ஙனம் ஆணாக அல்லாதவரானால்) சீதையை மனைவியாக ஏற்றுக்கொள்வாரோ அம்மானை.

தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை - அவ்வாறு சீதையை மனைவியாக ஏற்றுக் கொண்டதும் ஒரு சாபத்தினால் அம்மானை.

மூன்று பெண்கள் அம்மானை ஆடும் பொழுது, பாட்டுடைத் தலைவனது தன்மையை வார்த்தையாடுவது அம்மானை என்னும் உறுப்பின் இலக்கணமாகும்.

இப்பாடலில் மூன்று பெண்கள் அமர்ந்து ஒருவர் ஒரு செய்தியைக் கூற, மற்றொருவர் அதற்கொரு மறுமொழி தர, வேறொருவர் அவ்வினாவையும் விடையையும் தொடர்புறுத்தி உரைக்கப் பாடிக்

கொண்டு அம்மானைக்காய் விளையாடுதலைப் போல அமைந்துள்ளது முதல்வெண், திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கக் கூடிய எம்பெருமான், இவ்வுலகிலுள்ள அனைத்துப் பொருள்களாகவும் விளங்க் கூடியவர், என்றாலும் ஆணாகவும் பெண்ணாகவும் அலியாகவும் அல்லாதவர் என்பதைக் காண்பாயாக என்கிறாள். அதற்கு மற்றொருத்தி, இவ்வுலகிலுள்ள அனைத்துப்பொருள்களாகவும் விளங்கக் கூடியவர் அணாகவும் பெண்ணாகவும் அலியாகவும் அல்லாதவரானால் சீதையை மனைவியாக ஏற்றுக் கொள்ளுவாரோ என்று மறுமொழி தர, வேறொருத்தி இவ்விரண்டையும் தொடர்புப் படுத்தி சீதையை மனைவியாக ஏற்றுக் கொண்டதும் ஒரு சாபத்தினால் அம்மானை என்றுரைக்கிறாள். இங்கு சாபம் என்பது பிருகுமுனிவரிடத்துப் பெற்ற சாபம் எனவும், (சிவபெருமானின்) வில் எனவும் இருபொருள்படும்.

எம்பெருமான், ஆண், பெண், அலி அல்லன் ; காண்பதற்கு அரியவன் ; உண்டு என்றும் இல்லை என்றும் புகல்வதற்கு அரியவன் ; போற்றி ஏத்தும் போதும் அத்தகைய வடிவத்தை மேவுபவன். அத்தகைய உருவமற்றவரும் ஆவான் என்பதை,

"ஆணல்லன் பெண்ணல்லன் அல்லால் அலியுமல்லன்
காணலு மாகான் உளனல்லன் இல்லையல்லன்
பேணுங்கால் பேணும் உருவாகும் அல்லனுமாம்
கோணை பெரிதுடைத்து எம்பெருமானைக் கூறுதலே.
(திருவாய்மொழி 2:5:10)

என்று கூறுவது இங்குச் சுட்டத்தக்கது.

**பிருகு முனிவரிடம் சாபம் பெற்ற கதை.**

பிருகு முனிவர் பல கலைகளிலும் தேர்ச்சிபெற்று விளங்கியவர். பிறக்கும் பொழுதே சிறந்த ஒளியுடன் இவர் திகழ்ந்தமையால் பிருகு என்ற பெயர் பெற்றார். இவர் புலோமசை, கியாதி என்னும் பெயருடைய மங்கையர் இருவரை மணந்தார். ஒருமுறை திருமாலுக்கும் அசுரர்களுக்கும் போர் நிகழ்ந்த காலத்தில், திருமாலிடம் தோல்வியடைந்த அசுரர்களில் சிலர், பிருகு முனிவரின் மனைவியான புலோசமையிடம் வந்து அடைக்கலம் புகுந்தனர். புலோசமை தன்னுடைய கற்பாற்றலால்

அவ்வசுரரைப் பாதுகாத்து அனுப்பினாள். அதனால் சினம் கொண்ட திருமால், அவள் இறந்தொழியுமாறு சாபமிட்டார். அவளும் அவ்வாறே இறந்தாள். இதனைக் கண்ட பிருகு முனிவர், நீ மண்மேல் பிறந்து மனைவியைப் பிரிக என்று சாபமிட்டார். அதனால் திருமால், இராமாவதாரத்தில் சீதையைப் பிரிந்து துயருற நேரிட்டது என்பர்.

சிவபெருமானின் வில்லை இராமன் வளைத்த கதையைப் பத்தாம் பாடலின் உரையில் காணலாம்.

தேன் - வண்டு, அலர் - அல்லர் - அல்லாதவர், சாபம் - பிருகு முனிவரின் சாபம், (சிவபெருமானின்) வில்.

**இரங்கல்**

(பிரிவாற்றாத தலைவியைக் கண்ட நற்றாய் இரங்கல்)

பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்

27. மானே எய்தவர் இன்ன மென்மட
மானை எய்திலர் நேமியான்
மாலை தந்தவர் பைந்து ழாய்மது
மாலை தந்திலன் இந்திரன்
சோனை மாரி விலக்கி விட்டவர்
சொரிகண் மாரி விலக்கிலார்
சுரர்க ளுக்கமு தங்கொ டுத்தவர்
சோதி வாயமு தங்கொடார்
தானை ஐவர் கொடிக்க ளித்தவர்
தானை கொண்டு தளிக்கிலார்
சங்க ரற்கிர வைத்த டுத்தவர்
தைய லுக்கிர வைதடார்
ஆனை முன்வரும் அன்பு ளார்முலை
யானை முன்வரும் அன்பிலார்
அணிஅ ரங்கர் நடத்து நீதி
அநீதி யாக இருந்ததே.

மானை எய்தவர் இன்னமென்மட மானை எய்திலர் - சீதைக் காக மாய மானாக வந்த மாரீசனை அம்பினால் எய்தவர், இன்னமும் என்னுடைய இளமைப் பொருந்திய பெண்மான் போன்ற பார்வையையுடைய மகளை வந்து அடையவில்லை.

நேமியால் மாலை தந்தவர் பைந்துழாய் மது மாலை தந்திலன் - பாரதப்போர் நடைபெற்ற அந்நாளில் சக்கராயுதத்தால் சூரியனை மறைத்து மாலை நேரத்தைத் தோற்றுவித்தவர், பசுமையான தேனையுடைய துளசிமாலையை என்மகளுக்குத் தரவில்லை.

இந்திரன் சோனைமாரி விலக்கிவிட்டார் சொரிகண்மாரி விலக்கிலார் - கிருஷ்ணாவதாரத்தில் இந்திரனால் விடாது பெய்த மழையைக் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து உயிர்களைத் துன்பத்தில் இருந்து காத்ததைப் போல என் மகளின் கண்களில் இருந்து சொரிகின்ற கண்ணீர் மழையை விலக்கவில்லை.

சுரர்களுக்கமு தம்கொடுத்தவர் சோதிவாயமுதம் கொடார் - பாற்கடலைக் கடைந்த அந்நாளில் தேவர்களுக்குத் தேவ அமிர்தத்தைக் கொடுத்தவர், என் மகளின் துயரைப் போக்க, அதர அமிர்தத்தைக் கொடுக்கவில்லை.

தானை ஐவர் கொடிக்க ளித்தவர் தானை கொண்ட தளிக்கிலார்- மகாபாரத காலத்தில் பெரிய படையை உடைய பாண்டவர் ஐவரின் மனைவியாகிய திரௌபதிக்கு (துரியோதனனின் தம்பி துச்சாதனனால் துகிலுரியப்பட்ட காலத்தில் ) மேன்மேலும் வளரும் துகிலை அளித்தவர். என் மகளுக்குத் (விரக வேதனையால் நெகிழ்ந்து போகின்றதைக் குறித்து) தான் கொண்ட துகிலைக் கொடுத்தருளவில்லை.

சங்கரற்கு இரவைத் தந்தவர் தையலுக் கிரவைத் தடார் - முன்னொரு காலத்தில் சாபத்தின் காரணமாகச் சிவபெருமான் கபால ஒட்டில் பிச்சையேற்று உண்டதைப் போக்கி அருளியவர், என்மகளுக்கு (தலைவன் அருகில் இல்லாததால் வளர்கின்ற) இரவுப் பொழுதை வளராமல் தடுக்கவில்லை.

ஆனை முன்வரும் அன்புளார் முலை ஆனைமுன்வரும் அன்பிலான் - முன்னொரு காலத்தில், முதலையால் கவ்வப்பட்ட கஜேந்திரன் என்னும் யானைக்கு 'அபயம்' அளித்த அன்புள்ளவர், என் மகளின் யானையை ஒத்துத் தோன்றுகின்ற தனங்களுக்கு முன்னே வந்து தோன்றுகின்ற அன்பில்லாவர்

அணிஅரங்கர் நடத்துநீதி அநீதியாக இருந்ததே ! - அழகிய அரங்கநாதப் பெருமாள் நடத்துகின்ற நீதி முறைகள் பாரபட்சம் உடையதாக அநீதியாக இருக்கின்றதே !

இது தலைமகனோடு புணர்ந்து பிரிந்து தலைமகள் பிரிவு ஆற்றாமையால் வருந்துகின்ற வருத்தத்தைக் கண்டு ஆற்றாளாக, அவளுடைய நற்றாய் ஆற்றாமை மிகுதியால் இரங்கிக் கூறியது. இப்பாடலில், பிரிவாற்றாத தலைவியைக் கண்டு நற்றாய் இரங்குகின்றாள். மாயமானை அந்நாளில் எய்தவர் என் பெண்ணாகிய மானை வந்து சேரவில்லை என்கிறாள்.

**மாயமானைப் பிடிக்கச் சென்ற கதை (இராமாவதாரத்தில்)**

விசுவாமித்திர முனிவர் தமது யாகத்தைப் பாதுகாத்தல் பொருட்டு இராம இலட்சுமணர்களை அழைத்துச் செல்லும் வழியிடையே தாடகை என்னும் அரக்கியைக் கொல்கின்றனர். இந்த அரக்கிக்கு மாரீசன், சுபாகு என்று இருமக்கள். அவர்களுள் மாரீசன் மாயவேலைகளில் வல்லவன். இராவணனுக்கு மாமன் முறை உள்ளவன். தாடகையை வதைத்தபின் இராமன், விசுவாமித்திரரின் யாகத்தைக் கலைத்த சுபாகுவைக் கொன்றான். மாரீசனைக் கடலில் தள்ளிவிட்டான். இராமன் தண்டகாரணியம் வந்தபோது மான்வேடம் பூண்டு, இராமனைக் கொல்ல வந்தான். அப்பொழுது இராமனால் இவனுடன் மான் வடிவில் வந்த இரண்டு அரக்கர்கள் அழிந்துவிட இவன் தப்பியோடி இலங்கைக்கு வந்து சேர்ந்தான்.

பின்னாளில் சீதையைக் கவர்ந்து செல்லக் கருதிய இராவணனது தூண்டுதலால், பஞ்சவடியில் சீதையின் எதிரில் சென்று உலாவுகையில், சீதாதேவியின் வேண்டுகோளின்படி அதனைப் பிடிப்பதற்குத் தொடர்ந்து சென்ற இராமபிரான், நெடுந்தூரம் ஓட்டம் காட்டிய அம்மானை மாயமான் என்று அறிந்தவுடனேயே அதன்மீது அம்பெய்து வீழ்த்தினான் என்பர். இதனை,

"திரிந்தது வெஞ்சமத்துத் தேர்கடவி அன்று
பிரிந்தது சீதையைமான் பின்போய் – புரிந்ததுவும்
கண்பள்ளி கொள்ள அழகியதே ! நாகத்தின்
தண்பள்ளி கொள்வான் தனக்கு"

– (இயற்பா – இரண்டாம் திருவந்தாதி :15)

என்று தன் பாசுரத்தில் குறிப்பிடுவார் பூதத்தாழ்வார்.

"இலைமலி பள்ளி எய்தி இதுமாயம்
என்ன இனமாய மான்பின் எழில்சேர்
அலைமலி வேற்க ணாளை அகல்விப்ப
தற்கோர் உருவாய மானை அமையா
கொலைமலி எய்து வித்த கொடியோன்
இலங்கை பொடியாக வென்றி அமருள்
சிலைமலி செஞ்ச ரங்கள் செலவுய்த்த
நங்கள் திருமால் நமக்கோர் அரணே."
- (பெரிய திருமொழி 11:4:7)

என்று 'பர்ணசாலையின் அருகே வந்து சீதாபிராட்டியைப் பிரிப்பதற்காக மான்களின் பின்னே இது மாயமான் என்று சொல்லும்படியாக வந்த மாரீசனாகிய மாயமானைக் கொன்றவன் எம்பெருமான்' என்று திருமங்கையாழ்வார் எழிலுற எடுத்தோதுகிறார்.

சக்கரத்தால் மாலை மறைத்தவர் என் மகளுக்குத் திருத்துழாய் மாலையைத் தரவில்லை என்று வருந்துகிறாள்.

**கதிரவனை மறைத்த கதை**

மகாபாரதப் போர் நடந்தபொழுது சயத்திரன் என்பான், அருச்சுனனின் மகனாகிய அபிமன்யுவைக் கொன்றான். தன் மகன் அபிமன்யுவைக் கொன்ற சயந்திரதனை "நாளை, சூரிய மறைவதற்கு முன் கொல்வேன் இல்லையெனில் தீப்பாய்வேன்'என்று சபதம் செய்தான் அருச்சுனன். மறுநாள் வெகுநேரம் போர் செய்தும் சயந்திரதனை அருச்சுனனால் நெருங்க முடியவில்லை. அதனால் கண்ணன் தன் சக்கரத்தைக் கொண்டு சூரியனை மறைத்து இரவை உருவாக்கினான். அதைக் கண்டு, அருச்சுனன் தீப்பாய்வான் என்ற மகிழ்ச்சியோடு சயந்திரதன் வெளிவர, கண்ணனும் தன் சக்கரத்தை விலக்க, பகற்பொழுது இருத்தலை அறிந்த அருச்சுனன் சயந்திரதனைக் கொன்றான். அவனது சபதமும் நிறைவேறியது என்பர், இதனை,

"மயக்க வலம்புரி வாய்வைத்து வானத்
தியங்கும் எறிகதிரோன் தன்னை – முயங்கமருள்
தேராழி யால்மறைத் தென்நீ திருமாலே
போராழிக் கையால் பொருது"

என்று தன் பாசுரத்தில் பொய்கையாழ்வார் எழிலுற எடுத்தோதுவர்.

தன்மகள் மாலையைப் பெறாமல் வருந்தவதைக் கூறுவதாக,

"வண்டமரும் வனமாலை மணிமுடிமேல்
மணநாறும் என்கின் றாளால்
உண்டிவர்பால் அன்பெனக்கு என்றொருகாலும்
பிரிகிறேன் என்கின் றாளால்"
– (பெரிய திருமொழி 8:1:9)

எடுத்துரைப்பர் திருமங்கையாழ்வார்.

கிருஷ்ணாவதாரத்தில் இந்திரனால் விடாது பெய்த மழையைக் கோவரத்தனகிரியைக் குடையாகப் பிடித்து உயிர்களைத் துன்பத்தில் இருந்து காத்ததைப் போல என் மகளின் கண்களில் இருந்து சொரிகின்ற கண்ணீர் மழையை விலக்க வில்லை என்கிறாள்.

**கோவர்த்தனகிரியை குடையாகப் பிடித்த கதை**

"எய்யச் சிதைந்தது இலங்கை ; மலங்க வருமழை காப்பான்
உய்யப் பருவரை தாங்கி ஆநிரை காத்தானென் றேத்தி
வையத்து எவரும் வணங்க அணங்கெழு மாமலை போலே
தெய்வப்புள் ஏறி வருவான் சித்திர கூடத்துள் ளானே"
– (பெரிய திருமொழி 3:3:6)

என்று தன் பாசுரத்தில், 'ஆயர் கூட்டம் துன்பமுற ஓயாமல் பெய்த மழையைத் தடுக்கவும், ஆநிரைகள் பிழைக்கவும் பெரிய கோவர்த்னமலையைக் குடையாகப் பிடித்து எல்லோரையும் காப்பாற்றினான் எம்பெருமான்' என்பார் திருமங்கையாழ்வார். (இந்தக் கதையை, பாடல் ஒன்றில் முச்சீர் ஓரடி அம்போதரங்கத்தின் உரையில் காண்க.) பாற்கடலைக் கடைந்த அந்நாளில், தேவர்களுக்கு தேவாமிர்தத்தைக் கொடுத்துவர் என் மகளின் துயரைப் போக்க அதர அமிர்தத்தைக் கொடுக்கவில்லை என்கிறாள்.

**தேவர்களுக்காகப் பாற்கடலைக் கடந்தது**

வடதிசையிலுள்ள மந்தரமலையை மத்தாகக் கொண்டு, வாசுகி என்னும் பாம்பினை கடைநாணாக்கி, ஒளியடர்ந்த சூரிய சந்திரர்களும் வானமும் ஒளிமிக்க பிறவும் தன்னோடு சுழலும்படி, அந்த மந்தரமலையைச் சுழற்றி கடலைக் கடைந்து, தேவர்களுக்கு அமுதத்தை அளித்து. அவர்களுடைய நீண்டநாள் துன்பத்தைப் போக்கியவன் எம்பெருமான். இதனைத்,

"திகழொளி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத்
திகழ்பெற வாங்கித்தம் சீர்சிரத் தேற்றி
மகர மறிகடல் வைத்து நிறுத்திப்
புகழ்சால் சிறப்பின் இருதிறத் தோர்க்கும்
அமுது கடைய இருவயின் நாணாகி
மிகாஅ இருவடம் ஆழியான் வாங்க"
- (பரிபாடல் திரட்டு ; பாடல் எண்.1 ; 64-69)

என்று பரிபாடல் எடுத்துரைக்கிறது. திருமங்கையாழ்வார்,

"செருமிகு வாள்எயிற் றரவு ஒன்று
சுற்றி திசைமண்ணும் விண்ணும் உடனே
வெருவர வெள்ளை வெள்ளம் முழுதும்
குழம்ப இமையோர்கள் நின்று கடைய
பருவரை யொன்று நின்று முதுகிற்
பறந்து சுழலக் கிடந்து துயிலும்
அருவரை யன்ன தன்மை அடலாமை
யான திருமால் நமக்கோர் அரனே."
- (பெரிய திருமொழி 11:4:2)

என்று தம் பாசுத்தில் இதனை எழிலுற எடுத்தோதுவர்.

மகாபாரத காலத்தில் பெரிய படையையுடைய பாண்டவர் ஐவரின் மனைவியாகிய திரௌபதிக்கு மேன்மேலும் வளரும் துகிலை அளித்தவர் தன்மகளுக்குத் தான் கொண்ட துகிலைக் கொடுத்தருளவில்லை என்கிறாள்.

**கண்ணன் துகில் அளித்த கதை**

துரியோதனன், தருமருடன் சூதாடிய காலத்தில் தருமர், பாண்டவர் ஐவரின் மனைவியாகிய திரௌபதியையும் சூதாட்டத்தில் இழந்தார். அவர்களை அவமானப் படுத்தவேண்டும் என்று காத்திருந்த துரியோதனன் திரௌபதியை அரச சபைக்குக் கொண்டு வருமாறு தன் தம்பியாகிய துச்சாதனனுக்குக் கூறினான். அங்கு வந்ததும் தன் தம்பியிடம், திரௌபதையின் துகிலை உரியச் சொன்னான். திரௌபதை தனக்கு நேரிட்டிருக்கும் இத்தொல்லையில் இருந்து காப்பாற்றுமாறு கண்ணனை எண்ணினாள். முதலில் ஆடையை விடாமல் கைப்பற்றி இருந்தவள். பிறகு ஆடையை விட்டுக் கையைத் தலைமீது சேர்த்துக் கண்ணனைத் தொழுதாள். துச்சாதனன் திரௌபதையின் ஓர் ஆடையை உரிய இரண்டாவது ஆடை தோன்றியது. துச்சாதனன் அதனையும் உரிய மூன்றாவது ஆடை தோன்றியது. இவ்வாறு கணக்கற்ற ஆடைகள் கண்ணன் அருளால் வளர்ந்தன என்பர். இதனை,

"பொல்லார்தம் புன்சபையிற் புண்படும்ஓர் பூவைஉய்ய
எல்லாரும் கண்டுமெச்சும் எண்ணில்கலைப் பேறீந்தாய்"
- (வீரகேரளம்புதூர் நவநீத கிருட்டிணன் கலம்பகம் 1:3) (தாழிசை)

என்று வண்ணசரபம் தண்டபாணி சுவாமிகள் எடுத்துரைப்பர்.

முன்னொரு காலத்தில் சாபத்தின் காரணமாகச் சிவபெருமான் கபால ஓட்டில் பிச்சையேற்று உண்டதைப் போக்கி அருளியவன் என் மகனுக்கு இரவுப் பொழுதை வளராமல் தடுக்கவில்லை.

**சிவபெருமான் பிச்சையேற்ற கதை.**

ஒரு காலத்தில் நான்முகன் தானே முதற்கடவுள் என்ற மிகுந்த செருக்குற்றிருந்தான். சிவபெருமான், தாமே முதற்கடவுள் என்பதை நான்முகனுக்கு உணர்த்த எண்ணினார். (ஒரு காலத்தில் சிவபெருமான் தன்னைப் போலவே ஐந்துதலையுடையவனாக இருப்பது பலரும் பார்த்து மயங்கும் வண்ணம் இருந்ததால், பிரமனின் ஒருதலையை நீக்கக் கருதினர் என்பர்) சிவபெருமான், நான்முகன் எதிரில் தோன்றியதும் நான்முகனுடைய ஐந்தாவது தலை, 'எனது நுதலில் இருந்து தோன்றிய

நீயோ முதல்வன் என்று கூறிப் பழித்தது. அவ்வளவில் சிவபெருமான், தம்முடைய கூறான வைரவமூர்த்தியை நோக்கியருளினார். வைரவமூர்த்தி, தமது இடக்கை விரலின் நக நுனியில் அந்த ஐந்தாவது தலையைக் கொய்து விட்டார். அத்தலை அப்படியே அவருடைய கையில் ஒட்டிக் கொண்டது. இத் தீவினை தீர பிச்சை என்று உண்ண வேண்டும்' என்றதற் கிணங்க, பல இடங்களுக்கும் சென்று பிச்சையேற்று உண்டார். இருப்பினும் கையில் ஒட்டியிருந்த கபாலம் கையைவிட்டு நீங்கவில்லை. பின்பு ஒருநாள் பதரிகாச்சிரமத்தையடைந்து அங்கு எழுந்தருளியருந்த நாராயண மூர்த்தியை வணங்கி இரந்த போது, அப்பெருமான் பிச்சையிட, அது நிறைந்து கையைவிட்டு அகன்றது. (திருமால் தம் மார்பின் வியர்வை நீரைக் கொண்டு அக்கபாலத்தை நிறைத்து ஒழித்ததாகவும் கூறுவர்.) என்பர். இதனை,

"ஆறும் பிறையும் அரவமும் அடம்பும் சடைமேல் அணிந்துடலம்
நீறும் பூசி ஏறூரும் இறையோன் சென்று குறையிரப்ப
மாறொன்று இல்லா வாசநீர் வரைமார் பகலத் தளித்துகந்தான்
நாறும் பொழில்சூழ்ந் தழகாய நறையூர் நின்ற நம்பியே"

- (பெரிய திருமொழி 6:7:9)

என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார் இதனை எழிலுற எடுத்துரைப்பர்.

தலைவனைப் பிரிந்த பிரிவாற்றாமையோடு இருக்கும் தலைவிக்கு இரவுப் பொழுது வளர்கின்றது. இதனைக் கண்டு வருந்தும் நற்றாய், 'என் மகளுக்கு இரவுப்பொழுது வளராமல் தடுக்கவில்லை' என்று வருந்துகிறாள். தலைவனைப் பிரிந்த தலைவிக்கு ஒவ்வொரு நாழிகையும் ஓர் ஊழிக் காலமாகத் தோன்றுகின்றதாம். இதனை, அலைகளையுடைய கடல் தீப்பிடிக்கும்படி தீ அம்புகளையுடைய கொடிய வில்லை வளையச் செய்த மகாவீரனான இராமபிரானும் வரவில்லை. என் செய்வேன் ? ஒளிவிடும் சூரியனும் மறைந்து விட்டான் பாவியான என்னுடைய இரண்டு பெரிய கண்களும் உறங்கவில்லை. ஊழியைக் காட்டிலும் பெரிய இரவுகள் எப்படிக் கழியப் போகின்றனவோ அறியேன் என்பதை,

"மூரியும் வெண்டிரை முதுகயம் தீப்பட முழங்கழல் எரியம்பின்
வரிகொள் வெஞ்சிலை வளைவித்த மைந்தனும் வந்தில னென்செய்கேன்
எரியும் வெங்கதிர் துயின்றது பாவியேன் இணைநெடுங் கண்துயிலா
கரிய நாழிகை ஊழியில் பெரியன கழியுமாறு அறியேனே"

- (பெரிய திருமொழி 8:5:6)

என்னும் திருமங்கையாழ்வார் பாசுரத்தின் வாயிலாக உணரலாம்.

முன்னொரு காலத்தில், முதலையால் கவ்வப்பட்ட கஜேந்திரன் என்னும் யானைக்கு 'அபயம்' அளித்த அன்புள்ளவர், என்மகனின் யானையை ஒத்துத் தோன்றுகின்ற தனங்களுக்கு முன்னே வந்து தோன்றுகின்ற அன்பில்லாதவர்.

மான் - மாரீசனாகிய மான், எய்துதல் - அடைதல், நேமி - சக்கரம், சோனை மாரி - விடாத மழை, தானை - துகில், ஆனை - கஜேந்திர யானை.

**எண்சீர் ஆசிரிய விருத்தம்**

28. இருளினும் வெளியினும் மருளினும் தெருளினும்
இன்பமே அடையினும் துன்பமே மிடையினும்
ஒருவர்முன் புகழினும் இருவர்பின் இகழினும்
ஊன்இறந் தழியினும் யான்மறந் தொழிவனோ
சுருதிநின் றோலிடும் கரதலம் நாலுடன்
துவளும்நூல் மார்பமும் பவளவாய் முறலும்
திருவரங் கேசர்தம் சுருள்கருங் கேசமும்
செய்யநீண் முடியுமத் துய்யசே வடியுமே.

இருளினும் வெளியினும் மருளினும் தெருளினும் - இருள் பொழுதாக இருக்கும் பொழுதிலும், பகல் பொழுதாக இருக்கும் பொழுதிலும் அஞ்ஞானத்தால் உலகப் பற்றுக்கொண்டு மயங்குகின்ற பொழுதிலும், நன்றாக மெய்ஞ்ஞானத்தால் தெளிவு பெற்றிருக்கும் பொழுதிலும்,

இன்பமே அடையினும் துன்பமே மிடையினும் - மிகுதியான இன்பம் தானே வந்து சேர்ந்தாலும் மிகுந்த துன்பம் வந்தாலும்,

ஒருவர்முன் புகழினும் இருவர்பின் இகழினும் - கண்முன்னே ஒருவர் வந்து போற்றிப் புகழ்ந்தாலும், இருவர் பின்னே நின்ற பலகூறி இகழ்ந்தாலும்,

ஊன்இறந் தழியினும் யான்மறந்து ஒழிவனோ - தசையாலான இவ்வுடலானது அழிந்து ஒழிந்தாலும் (திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கநாதனை) நான் எந்நாளும் மறவேனோ!

சுருதிநின் றோலிடும் கரதலம் நாலுடன் - நான்கு வேதங்களும் புகழ்ந்து முறையிடுகின்ற நான்கு திருக்கரங்களுடன்,

துவளும் நூல் மார்பமும் பவளவாய் மூரலும் - மார்பில் துவளுகின்ற முப்புரி நூலும் பவளம்போல் சிவந்த திருவாயின் புன்சிரிப்பும்,

திருவரங்கேசர்தம் சுருள்கரும் கேசமும் - எம்பெருமானாக விளங்கும் திருவரங்கரின் சுருள்சுருளாக விளங்கும் கரிய மயிர்க் கற்றையும்

செய்யநீண் முடியுமத் துய்யசே வடியுமே - அழகியதாக விளங்கக் கூடிய திருமுடியையும் தூய்மையான சிவந்த திருவடிகளையும், (யான் மறவனோ ஒருநாளும் மறவேன்)

எங்கும் எப்பொழுதும் எம்பெருமானுடைய திருவுருவத்தை மறவேன் என்கிறார் ஆசிரியர்.

வெற்றியைப் பெறக்கூடிய அளவில் எதிரிகளோடு போர் புரியும் இயல்புடைய திருச்சக்கரத்தைக் கொண்டிருக்கின்ற வாலறிவனான எம்பெருமானே ! நீ எல்லா நிலைகளிலும் எல்லாப் பிறப்புக்களிலும் நிலைபெற்று நின்று விளங்குவதால் என்றும் நீங்காது நினைத்து உன்னை ஒருநாளும் மறவாதவனானேன் என்பதை,

"என்று மறந்தறியேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
நின்று நினைப்பொழியா நீர்மையால் - வென்றி
அடலாழி கொண்ட அறிவனே ! இன்பக்
கடலாழி நீயருளிக் காண்"

- (இயற்பா - இரண்டாம் திருவந்தாதி :55)

என்று தன் பாசுரத்தில் எடுத்தோதுகிறார் பூதத்தாழ்வார். கருவிருந்த நாள் முதலாகவே எம்பெருமானால் காக்கப் பெற்றேன். ஆதலின் அவனை என்றும் மறந்தறியேன் என்கிறார் திருமழிசையாழ்வார்.

"என்றும் மறந்தறியேன் என்னெஞ்சத் தேவைத்து
நின்றும் இருந்தும் நெடுமாலை - என்றும்
திருவிருந்த மார்பன் சிரீதரனுக் காளாய்
கருவிருந்த நாள்முதலாக் காப்பு"

- (இயற்பா - நான்முகன் திருவந்தாதி :92)

என்ற பாசுரம் இதனை விளக்கும்.

மருள் - மயக்கம், தெருள் - தெளிவு, ஊன் - உடல், கரதலம் - திருக்கை, துய்ய - தூய்மையான.

### நேரிசை வெண்பா

29. சேவடியால் மூவடிமண் தென்னரங்கத் தம்மாநீ
மாவலியால் வாங்கியநாள் மண்ணுலகோ – மூவுலகும்
வீசுங்கா லோவலிய வெவ்வினையே நெஞ்சமோ
பேசுங்கால் ஏதோ பெரிது.

சேவடியால் மூவடிமண் தென்னரங்கத் தம்மா - சிவந்த திருவடிகளால் மூன்றடி நிலத்தை அளந்த, தென்னரங்கத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானே !

நீ மாவலியால் வாங்கிய நாள் மண்ணுலகோ - மாவலி சக்கரவர்த்தியிடம் சென்று வேண்டி இரந்து, இவ்வுலகு அனைத்தையும் ஓரடிக்குள் அடங்கும் வண்ணம் அளந்த நாள், இம் மண்ணுலகை அளந்த திருவடியோ !

மூவுலகும் வீசுங்காலே - மண்ணுலகம், விண்ணுலகம், பாதாள உலகம் என்னும் மூவகை உலகங்களிலும் பரவிய திருவடியோ !

வலிய வெவ்வினையேன் நெஞ்சமே - வன்மை உடையதாகிய தீவினைகளையுடைய எனது மனமோ !

பேசுங்கள் ஏதோ பெரிது - ஆராய்ந்து சொல்லுமிடத்து எதுவோ பெரியது.

எம்பெருமானை எண்ணும் மனதின் பெருமையை எடுத்துரைக்கிறார் ஆசிரியர். எம்பெருமானது திருவடிகள், மண்ணுலகம், விண்ணுலகம், பாதாள உலகம் ஆகிய மூவுலகங்களிலும் பரவியது. அத்திருவடியை என் மனம் தன்னுள் அடக்கிக் கொண்டு விளங்குதலால், இவ்வுலகைக் காட்டிலும் என் மனமே பெரியது என்பதாகக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய பெருமையுடையது இம்மனம் என்கிறார். உலகங்களுக்கெல்லாம் தலைவனாகிய நீ என்னுள் அடங்கி இருப்பதால் நீ பெரியவன் இல்லை. நானே பெரியவன் என்று தம் மனதில் எம்பெருமானை எண்ணி ஆனந்தமடைகின்ற நிலையில் எடுத்தோதுகின்றார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

உலகங்களுக்கெல்லாம் தலைவனாகிய நீ எனக்குள் அடங்கி இருப்பதால் நீ பெரியவன் அல்லை ; நானே பெரியவன் என்ற பொருள்பட,

"புவியும் இருவிசும்பும் நினைகத்த நீயென்
செவியின் வழிபுகுந்தென் னுள்ளாய் – அவிவின்றி
யான்பெரியன் நீபெரியை என்பதனை யாரறிவார்
ஊன்பருகு நேமியாய் உள்ளு"

என்னும் பாசுரத்தில் எடுத்தோதுகிறார் திருமங்கையாழ்வார்.

**மாவலி சக்கரவர்த்தி கதை**

பிரகலாதனின் பேரன் மாவலி சக்கரவர்த்தி. இவன் அசுர வேந்தனாயினும் கொடைத்திறத்தில் சிறந்தவனாக விளங்கினான். இவனுடைய சிறப்பான வாழ்க்கை இந்திரனுக்குப் பொறாமையை உண்டாக்கியது. எவ்வாறேனும் மாவலியைத் தொலைக்க வேண்டுமென்று எண்ணினான். திருமாலிடம் சென்று தன்னுடைய நோக்கத்தைத் தெரியப்படுத்தினான். திருமால், தேவர்கோன் வேண்டுகோளுக்கு இணங்கினார். வாமன வடிவம் கொண்டு பிரமச்சாரியாக, மகாபலியினுடைய வேள்வி செய்யும் இடத்தில் எழுந்தருளி, யாசிப்பதற்காக வந்தவனைப் போன்று, 'மன்னா ! என் காலடியால் நானே அளந்து கொள்ளும்படி மூவடி நிலம் கொடு' என்று வேண்ட , 'தந்தேன் என்றான். குறளாய் வந்த மால் நெடுமாலாக உடனே மாறி, மண்ணையும் விண்ணையும் ஈரடியால் அளந்தார். "மூன்றாவதடிக்கு இடம் எங்கே ? என்றார். மாவலி தன் தலையைக் காட்டினான். தமதடியை மாவலி தலைமேல் வைத்து அழுத்தி அவனையும் ஆட்கொண்டார் என்பர்.

கண்டவர்தம் மனம்மகிழ மாவலிதன் வேள்விக்
களவின்மிகு சிறுகுறளாய் மூவடியென்று இரந்திட்டு
அண்டமும்இவ் வலைகடலும் அவனிகளும் எல்லாம்
அளந்தபிரான் ..................................
- (பெரிய திருமொழி 3:10:5)

என்று தன்பாசுரத்தில் இதனைத் திருமங்கையாழ்வார் அழகுற எடுத்துரைக்கிறார். மற்றொரு பாசுரத்தில்,

வெந்திறல் வானவன் வேள்வியிடம் எய்தி
அங்கோர் குறளாகி மெய்ம்மை உணர
செந்தொழில் வேத நாவின்முனி யாகி
வையம்அடி மூன்று இரந்து பெறினும்
மந்தர மீது போகிமதி நின்று
இறைஞ்ச மலரோன் வணங்க வளர்சேர்
அந்தரம் எழி னூடுசெல வுய்த்த
பாதமது நம்மை ஆளும் அரசே.
- (பெரிய திருமொழி 11:4:5)

என்று வாமன அவதாரத்தையும் திருவிக்கிர அவதாரத்தையும் பேசுகிறார்.

பொய்கையாழ்வார் இவ்வருளிச்செயலை செய்த எம்பெருமானை, 'நின்று நிலமங்கை நீரேற்று மூவடியால், சென்று திசையளந்த செங்கண் மால்' என்பார்.(இயற்பா முதல் திருவந்தாதி :21)

வெவ்வினை - தீவினை.

## நாரைவிடு தூது

### கட்டளைக் கலித்துறை

30. பெருவரம் கேசவன் அல்லா தருள்செய்யும் பேரிலைவே
றொருவரங் கேசற்றும் ஓதாரென் காதலை ஒழியெங்கும்
கருவரங் கேசலிக் கத்திரி வோர்க்குக் கருணைசெய்யும்
திருவரங் கேசர்க்கு நீசொல்லல் வேண்டும் செழுங்குருகே.

பெருவரம் கேசவன் அல்லா தருள்செய்யும் பேரிலை - அடியவர்க்குப் பெரிய வரங்களைக் கொடுத்து அருளிகின்றவன் கேசவன் அல்லால் வேறொருவர் இல்லை.

வேறொருவர் அங்கே சற்றும் ஓதாரென் காலை ஓடி - வேற யாரும் அவ்வெம்பினானிடத்து ஓடிச்சென்று என்னுடைய விருப்பத்தைச் சிறிதும் சொல்லமாட்டார்.

எங்கும் கருவரங்கே சலிக்கத் திரிவோர்க்குக் கருணைசெய்யும் - அனைத்துப் பிறவிகளிலும் கருப்பையானது துன்பம் அடையும்படி மாறி மாறிப் பிறந்து இறந்து அங்கும் இங்கும் திரிந்து அலைபவர்களுக்கு அருளை வாரி வழங்குகின்ற,

திருவரங் கேசர்க்கு நீசொல்லல் வேண்டும் செழுங்குருகே ! - திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்க நாதரிடம் செழுமையான நாரையே ! விரைவாகச் சென்று, நீ என்னுடைய காதலை அவரிடத்து எடுத்துக் கூறுதல் வேண்டும்.

தலைவனைப் பிரிந்து தலைவி, அப்பிரிவினை ஆற்றாது வருந்துகின்றாள். இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல் திணைக்கு உரிப்பொருளாகும். குருகு நெய்தல் திணைக்குரிய கருப்பொருள்களுள் ஒன்றாகும். தலைவனைப் பிரிந்த தலைவி, அவனை எண்ணி வருந்தி நிற்கையில், நாரைகள் கழிமுகக் கரைக்கு இரையைத் தேடி வருகின்றன. அதனைக் காணுகிறாள் தலைவி. விரைவாகச் சென்று தூது செல்வதற்கு ஏற்றதாகக் கருதி, நாரையைத் தூதனுப்புகிறாள். வேறு ஒருவரும் தன் காதலைத் திருவரங்க நாதரிடம் சென்று கூறமாட்டார்கள் என்றும் விரைந்து சென்று தன் காதலை திருவரங்கப் பெருமானிடம் கூறவேண்டும் என்றும் நாரையிடம் தலைவி வேண்டிக் கொள்கிறாள்.

சோலைகள் சூழ்ந்த கால்வாய்களில் இரையைத் தேர்ந்து இனிது உறையும் செங்கால் நாரைகளே ? கண்ணபிரானிடம் தூதாகச் சென்று திரும்பி வாருங்கள் என்று தலைவியொருத்தி நாரைகளைத் தூதாக அனுப்பியதை,

*"எங்கானல் அகங்கழிவாய் இரைதேர்ந்திங் கினிதமரும்*
*செங்கால் மடநாராய் ! திருமூழிக் களத்துறையும்*
*கொங்கார்பூந் துழாய்முடியெங் குடக்கூத்தற் கென்தூதாய்*
*நுங்கால்கள் என்தலைமேல் கெழுமீரே நுமரோடே"*

- (திருவாய்மொழி 9:7:1)

என்று எழிலுற எடுத்தோதுவது இப்பாடலோடு ஒப்புநோக்கத்தக்கது.

திருவரங்கப்பெருமான் பிறவிப் பணியைப் போக்கக் கூடிய அருளை வழங்கக்கூடியவர் என்கிறார் தலைவி.

"பிறப்பி னோடு பேரிடர்ச் சுழிக்கண் நின்ற நீங்குமஃது
இறப்ப வைத்த ஞான நீசரைக் கரைக்கொடு ஏற்றுமா
பெறற் கரிய நின்ன பாத பத்தியான பாசனம்
பெறற் கரிய மாயனே எனக்கு நல்க வேண்டுமே
- (திருச்சந்த விருத்தம் : 100)

என்று பிறப்பு முதலிய பெருந்துன்பங்களை விளைவிக்கின்ற இந்த உலக வாழ்விலிருந்து நீங்குவதற்க உறுப்பான வழிவகைகளை மறந்தொழிந்த அறிவற்றவர்களைக் கரையில் சேர்க்கும் அருளை வழங்கக் கூடியவன். தனக்கும் வழங்க வேண்டும் என்கிறார் திருமழிசையாழ்வார்.

பெருவரம் – பெரிய வரங்களை. ஓதார் – சொல்லார். எவ்விடத்தும் – எல்லாப் பிறப்புகளிலும். சலிக்க – துன்பம் உண்டாக. திரிவோர் – அலைவோர்.

## இரங்கல்
## எண்சீர் விருத்தம்

31. குருகுறங்கு கானலே ! கருநிறங்கொள் பானலே !
கொடியகண்டல் ஞாழலே ! நெடியகண்டல் நீழலே !
பொருதறங்க வேலையே ! நிருதறங்க மாலையே !
போதயின்ற கம்புளே ! ஏதைஇன் றியம்புகேன்
திருவரங்கர் இணையிலா ஒருபுயங்க வணையிலே
திகழிலங்கை கீழதாய் முகிழ்மலர்க்கண் வளர்வதோர்
கருணைநம்பு வதனமும் அருணவிம்ப அதரமும்
காவிகொண்ட மேனிஎன் ஃ ஆவிகொண்டு போனவே.

குறங்குறங்கு கானலே ! கருநிறங்கொள் பானலே ! - குருகுகள் வந்து

தங்குவதற்கு இடமாக அமைந்த கடற்கரைச் சோலையே! கரிய நிறத்தைத் தன்னகத்தே கொண்ட கருங்குவளை மலரே!

கொடியகண்ட ஞாழலே ! நெடிய கண்ட நீழலே ! - பல்வேறு கொடிகள் கொழுக்கொம்பாகச் சுற்றிக்கொண்டு இருக்கின்ற காரணத்தால் அகன்றதாகக் காட்சியளிக்கும் குங்கும மரமே! நீண்ட தாழம்புதர்களின் நிழலே !

பொருதரங்க வேலையே ! திருதரங்க மாலையே ! -- மோதுகின்ற அலைகளை உடைய கடலே! அரக்கர்களது உருவம் போன்று காட்சியளிக்கக் கூடிய கரிய நிற மேகக் கூட்டங்கள் நிறைந்திருக்கக் கூடிய மாலைப் பொழுதே !

போது அயின்ற கம்புளே ! ஏதைஇன் றியம்புவேன் - மலர்களை உணவாகக் கொண்டு உயிர்வாழும் நீர்வாழ்ப் பறவையே ! இன்று நான் என்னவென்று எடுத்துக் சொல்லப் போகிறேன்.

திருவரங்கர் இணையிலா ஒருபுயங்க அணையிலே - திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான், ஒப்பற்றதாக விளங்கக் கூடிய ஒரு தோளாகிய தலையணையிலே,

திகழ் வலக்கை கீழதாய் முகிழ்மலர்க்கண் வளர்வதோர் - ஒளி திகழ்கின்ற வலத்திருக்கையைத் தலையின் கீழே அணையாகக் கொடுத்து, அரும்புகின்ற சிவந்த தாமரை மலர்போன்ற கண்கள் அறிதுயில் கொண்டு,

கருணைநம்பு வதனமும் அருணவிம்ப அதரமும் - அருள் நிறைந்ததான திருமுகத்தில் ஒளிபொருந்தியதான சிவந்த இதழ்களும்

காவிகொண்ட மேனியும் ஆவிகொண்டு போனவே - கருங்குவளை நிறத்தைக் கொண்ட கரிய திருமேனியும், எனது உயிரைக் கொள்ளை கொண்டு போய்விட்டன.

தலைவனைப் பிரிந்த தலைவி அதனை ஆற்றாதவளாக இரங்குகிறாள். இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல் திணைக்கு உரிய உரிப்பொருட்கள். குருகு, கருங்குவளை, ஞாழல், தாழை, கம்புள், முதலான கருப்பொருட்களைக் கடற்கரைச் சோலையில் காணும் தலைவி, அவற்றை விளித்து, தன் நிலையை எடுத்துரைக்கிறாள்.' கு ரு கு ற ங் கு கானல்' , 'பொருதரங்க வேலை' முதலானவை நெய்தல் திணைக்காக நில

.............................................................................................

(பா.பே) 1. மேனியும்

முதற்பொருளையும், 'நிருதரங்கமாலை' என்ற கால முதற்பொருளையும் உணர்த்துவன.

"ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுதலிய நெறியாற்
சொல்லிந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்"

- (தொல். பொருள்.8 நூற்பா 192)

என்னும் சூத்திரத்தால் மக்கள் அஃறிணைப் பொருட்களிடம் தலைவி கூறுவது போலவும், அவை கேட்பன போலவும் சொல்லப்பட்டன.

குருகு - நாரை, ஞாழல் - குங்குமமரம். தரங்கம் - அலை. வேலை - கடல். கம்புள் - நீர்ப்பறவை. வதனம் - திருமுகம். ஆவி - உயிர்.

### பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்

32. போனகம் பதினாலு புவனம் திருப்பள்ளி
பொறியர வணைப்பாற்கடல்
பூமடந் தையுநில மடந்தையும் தேவியர்
புராதன மறைக்குமெட்டா
வானகம் பேரின்ப முடன்வீற் றிருக்குமிடம்
வாகனம் வயினதேயன்
மலர்வந்த நான்முகன் திருமைந்தன் அவன்மைந்தன்
மதிசூடி வாசவன்முதல்
தேனரும் தொடைமௌலி முப்பத்து முக்கோடி
தேவருன தேவல்செய்வோர்
திங்களும் பரிதியும் சங்கமும் திகிரியும்
திரிவனவும் நிற்பனவுமாம்
ஏனைமன் னுயிர்முழுதும் விளையாட நீவகுத்
திட்டபல மாயையதனால்
எழிலரங் கத்துயிலும் எம்பிரா னின்பெருமை
யாவரே வாழ்த்துவரே.

போனகம் பதினாலு புவனம் திருப்பள்ளி பொறியர வணைப்பாற்கடல் - (திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானே!) உனக்கு உணவாக விளங்குவது பதினான்கு உலகங்களாகும். அழகிய படுக்கையாக இருப்பது பாற்கடலில் உள்ள புள்ளிகளுடன் கூடிய பாம்பாகிய ஆதிசேடன்.

பூமடந்தையும் நிலமடந்தையும் தேவியர் - திருமகளும் புவிமகளும் உன்னுடைய மனைவியர்.

புராதன மறைக்கும் எட்டா வாகனம் பேரின்பமுடன் வீற்றிருக்குமிடம் - பழமைமிகு வேதங்களும் அறிந்துகொள்ள இயலாத வைகுந்தம் நீ பெரும் மகிழ்ச்சியுடன் அமர்ந்திருக்கும் இடமாகும்.

வாகனம் வயினதேயன் மலர்வந்த நான்முகன் திருமைந்தன் - உனக்கு வாகனமாக விளங்குபவன் கருடதேவன். உன்னுடைய அழகிய மைந்தனாக இருப்பவன், நாபிக் கமலத்தில் இருந்து தோன்றிய பிரமன்.

அவன் மைந்தன் மதிசூடி - பிரமனின் மைந்தனாக விளங்குபவன் மூன்றாம் பிறையைத் தன் சடாமுடியில் தரித்தவனாகிய சிவபெருமான்.

வாசவன் முதல் தேனரும் தொடை மௌலி - இந்திரன் முதலாக தேன் சிந்துகின்ற மலர்மாலையைச் சூடிய முடியையுடைய,

முப்பத்து முக்கோடி தேவருன தேவல் செய்வோர் - முப்பத்து முக்கோடி தேவர்களும் நீ இடும் பணிகளை ஏற்றுச் செய்வோராவார்.

திங்களும் பரிதியும் சங்கமும் திகிரியும் திரிவனவும் நிற்பனவுமாம் - சூரியன், சந்திரன், சங்கு, சக்கரம் முதலானவை நீ ஆணையிட திரியக் கூடியவையும், நிற்கக் கூடியவையுமாகும்.

ஏனை மன்னுயிர் முழுவதும் விளையாட நீ வகுத்திட்ட மாயையதனால் - மற்றும் உள்ள நிலைபெற்ற உயிர்கள் அனைத்தும் நீ விளையாட வகுத்திட்ட மாயையான நிலையற்ற பொருள்களாகும்.

எழிலரங் கம்துயிலும் எம்பிரானின்பெருமை யாவரே வாழ்த்துவரே - அழகுமிக்க திருவரங்கத்தில் அறிதுயில் கொள்ளும் திருவரங்கப் பெருமானின் இத்தகைய பெருமைகளை வாழ்த்த வல்லவர் யார் ? (வாழ்த்துதல் அரிதானதாகும்)

எம்பெருமானின் உண்மையான வடிவம், அருளிச் செயல்கள் முதலானவை கூறப்பட்டுள்ளன. திருமாலின் நாபிக் கமலத்தில் தோன்றியவன் பிரமன்.

"மாநிலம் இயலா முதன்முறை அமயத்து
நாம வெள்ள நடுவண் தோன்றிய
வாய்மொழி மகனொடு மலர்ந்த
தாமரைப் பொகுட்டுநின் நேமி நிழலே"

- (பரிபாடல் :3)

என்று பரிபாடல் எடுத்துரைக்கும். 'உந்தியெழுந்த உருவமலர் தன்னில், சந்தச் சதுமுகன் தன்னைப் படைத்தனன்' (பெரியாழ்வார் திருமொழி 2:5:8) என்பார் பெரியாழ்வார்.

பிரமனின் மைந்தனாக விளங்குபவன். மூன்றாம் பிறையைத் தன்சடாமுடியில் தரித்தவனாகிய சிவபெருமான் என்பார் ஐயங்கார்,

"நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான் - யான்முகமாய்
அந்தாதி மேலிட்டு அறிவித்தேன் ஆழ்பொருளை
சிந்தாமல் கொண்மின்நீர் தேர்ந்து"

- (இயற்பா - நான்முகன் திருவந்தாதி :1)

என்று திருமழிசையாழ்வார் தன்பாசுரத்தில் எடுத்துரைப்பர். இயற்பா நான்முகன் திருவந்தாதி தனியனில் சீராமப்பிள்ளை,

"நாராயணன் படைத்தான் நான்முகனை நான்முகனுக்கு
ஏரார் சிவன்பிறந்தான் என்னும்சொல் - சீரார்
மொழிசெப்பி வாழலாம் நெஞ்சே மொய்பூ
மழிசைப் பிரானடியே வாழ்த்து."

(இயற்பா - நான்முகன் திருவந்தாதி, தனியன்)

என்று எழிலுற எடுத்தோதுவர்.

நான்முகனாகிய பிரமனும், பிறையை முடியில் சூடிய உருத்திரனும் இந்திரன் முதலான தேவர்களும் திருமாலைப் போற்றியிருந்து அவருக்குக் குற்றேவல்களைச் செய்பவர்கள்.

"எண்மர் பதினொருவர் ஈறறுவர் ஓரிருவர்
வண்ணமல ரேந்தி வைகலும் – கண்ணி
ஒருமாலை யால்பரவி ஓவாது, எப்பொழுதும்
திருமாலைக் கைதொழுவர் சென்று."
- (இயற்பா - முதல்திருவந்தாதி :52)

என்று தன்பாசுரத்தில் பொய்கையாழ்வார் இதனை எடுத்தோதுவர். இங்கு வசுக்கள் எண்மர். உருத்திரர் பதினொருவர், ஆதித்தியர் பன்னிருவர், மருத்துவர் இருவர் ஆகிய முப்பத்து மூவரையும் தலைவராகக் கொண்ட தேவர்கள் திருமாலைத் தொழுபவர்கள் என்கிறார். இதே கருத்தை,

"இருநால்வர் ஈரைந்தின் மேலொருவர் எட்டோடு
ஒருநால்வர் ஓரிருவர் அல்லால் – திருமாற்கு
யாமார்? வணக்கமார்? ஏபாவம்? நன்னெஞ்சே!
நாமா மிகவுடையோம் நாழ்"
- (பெரிய திருவந்தாதி : 10)

என்று நம்மாழ்வார் கூறுவதோடு, அத்தகை முப்பத்து மூவர் அமரர் கூட்டத்தைத் தவிர நம்முடைய வணக்கமும் ஒரு வணக்கமாகுமா என்று தன் நல்ல மனதைக் கேட்டுக் கொள்கிறார் இவை இப்பாடலோடு ஒப்பிடத்தக்கவை.

போனகம் – உணவு. பதினாலு புவனம் – பதினான்கு உலகங்கள். இவற்றுள் மேல் உலகங்கள் ஏழு, அவை, பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்பன. கீழ் உலகங்கள் ஏழு. அவை, அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதாளம் என்பன, பொறி – புள்ளி, தேவியர் – திருமகள், நிலமகள், புராதனம் – பழமை, வானகம் – பரமபதம், வயினதேயம் – கருடன், மதிசூடி – சிவபெருமான், மௌலி – சூடி; முடி.

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

33. வாழும் மவுலித் துழாய்மணமும்
மகரக் குழைத்தோய் விழியருளும்
மலர்ந்த பவளத் திருநகையும்
மார்பில் அணிந்த மணிச்சுடரும்

தாழும் முளரித் திருநாபித்
தடத்துள் அடங்கும் அனைத்துயிரும்
சரண கமலத் துமைகேள்வன்
சடையில் புனலும் காணேனால்
ஆழ முடைய கருங்கடலில்
அகடு கிழியச் சுழித்தோடி
அலைக்கும் குடகா விரிநாப்ப
ணைவாய் அரவில் துயிலமுதை
ஏழு பிறப்பில் அடியாரை
எழுதாப் பெரிய பெருமானை
எழுத அரிய பெருமானைன்
றெண்ணா தெழுதி இருந்தேனே!

வாழும் மவுலித் துழாய் மணமும் மகரக்குழைத்தோய் விழியருளும் - என்றும் அடியார் உள்ளத்தில் நிறைந்திருக்கின்ற எம்பெருமானின் திருமுடியில் சூட்டப்பட்டுள்ள மணம்பொருந்திய திருத்துழாயையும், விழிவரை அசையும் மகரக் குழைகளையும் அருள் நிறைந்த பார்வையையும்,

மலர்ந்த பவளத் திருநகையும் மார்பில் அணிந்த மணிச்சுடரும் - பவழம் போல சிவந்திருக்கும் இதழ்களில் தோன்றும் புன்சிரிப்யையும் திருமார்பில் அணியும் கௌஸ்துப மணி ஒளியையும்

தாழும் முளரித் திருநாபித் தடத்துள் அடங்கும் அனைத்துயிரும் - ஆழ்ந்த தாமரை மலரை ஒத்த திருநாபிக் கமலத்தில் அடங்கியிருக்கின்ற அனைத்து உயிர்களையும்,

சரண கமலத் துமைகேள்வன் சடையில் புனலும் காணேனால் - தாமரை மலரை ஒத்த திருவடிகளில் உமையவளின் கணவனாகிய சிவபெருமானின் சடாமுடியையும் அச்சடா முடியில் தங்குகின்ற கங்கையையும் என்னால் காண இயலவில்லை.

ஆழமுடைய கருங்கடலில் அகடு கிழியச் சுழித்தோடி - ஆழத்தை உடைய கரிய கடலின் நடுவிடமானது பிளவுபடும்படியாகச் சுழித்துக் கொண்டு விரைவாக ஓடி,

அலைக்கும் குடகா விரிநாப்ப ணைவாய் அரவில் துயிலமுதை - மேற்கு திசையிலிருந்து வருகின்ற அலைக்கின்ற காவிரி ஆற்றின்

நடுவில் ஐந்தலைகளை விரித்துள்ள திரு அனந்தாழ்வான்மீது அறிதுயில் கொண்டுள்ளவனும் அடியவர்க்கெல்லாம் அமுதொத்த இனிமையான வனாகவும் விளங்குகின்ற.

ஏழுபிறப்பில் அடியாரை எழுதாப் பெரிய பெருமானை - எழுவகைப் பிறவிகளில் தன் அடியாரைச் சேர்க்காத, பெரிய அருளே உருவான எம்பெருமானை,

எழுத அரிய பெருமானென் றெண்ணா தெழுதி இருந்தேனே ? - ஓவியமாக எழுதுவதற்கு அரிய எம்பெருமான் என்று கருதாது எழுதி (இப்பொழுது இயலாத் தன்மையினால்) செயலற்று இருக்கிறேன்.

எம்பெருமானைப் பிரிந்து வருந்தி எம்பெருமானது திருவுருவத்தைச் சித்திரத்தில் எழுதியேனும் தனது துயரத்தை ஒருவாறு தணியக் கருதி அவ்வாறு எழுதியதனுள் அவ்வுருவம் முழுவதும் அமையாமையால், தான் எண்ணிய கருத்து நிறைவேறாத தலைவியின் கூற்று. இது எழுதரிது என்னும் துறையாகும்.

எம்பெருமானது திருவுருவத்தை எழுதத்தொடங்கி, திருத்துழாய் மாலையோடு கூடிய திருமுடி, திருக்கண்கள், திருப்பவளவாய், திருமார்பத்தில் கௌஸ்துப இரத்தினம், நாபிக்கமலம், திருவடிகள் முதலிய வடிவங்களை எழுதுகையில் துளசி மாலையின் நறுமணத்தையும், திருக்கண்களின் திருவருளையும், திருப்பவளத்தின் பெருமையையும், கௌஸ்துப இரத்தினத்தின் ஒளியையும் நாபிக் கமலத்தில் உயிர்கள் யாவும் அடங்கியிருப்பதையும், திருவடிகளில் கங்கை அடங்கியிருப்பதையும் எழுதுவது அரிதாகையால், உருவத்தினை மட்டுமே சித்திரமாக எழுதமுடியுமே அல்லாது குணம் முதலியவற்றை எழுத இயலாததாகும். இதனை, ஓவியத்தெழுத ஒண்ணா உருவம் என்பர்.

*"அலைவாய்வளம் நந்தூர்இள நிலவாய்விரி செந்தூர்*
*அடல்நாட்டிய கதிர்வேலவர் கூடநாட்டான மனையாள்*
*முலைதானெழு துவையேலவை குழையாமுழு மதிபோல்*
*முகம்நேரெழு துவையேல்நகை புரியாதிருப் புருவம்*
*சிலைபோலெழு துவையேலவை குனியாஅடி தளிர்போல்*
*திடமாய்எழு துவையேலவை நடவாகிளி துவர்வாய்*

இலவாய்எழு துவைவயேலது கலவாநிறை யமுதம்
ளங்கேளழு துவைநீகிழி செங்கேழ்அயி லவனே."

என்ற திருச்செந்திற் கலம்பகப் பாடலில் ஓவியத்து அழகை எழுதலாமேயன்றி உறுப்புகளின் இயக்கத்தை உணர்தல் ஒவ்வாதே என்பர்.[15] இப்பாடலோடு ஒப்புநோக்கி எண்ணத்தக்கதாக இது அமைந்துள்ளது.

**சிவபெருமான் சடாமுடியில் கங்கையைத் தாங்கிய வரலாறு.**

வாமன அவதாரம் எடுத்து மாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்கேட்டு உலகளந்து, பின்னர் சத்தியலோகத்தில் திருமாலிருந்த நாளையில், பெருமான் தனக்கு நாயகன் என்பதை உணர்ந்து, தன் கமண்டலத்தில் உள்ள தீர்த்தத்தைப் பெய்து, வேதங்களிலுள்ள மந்திரங்களால் வாழ்த்தி, அண்டங்களுக்கு அதிபதியான உலகளந்த பெருமானுடைய திருவடிகளை கழுவ, கங்கை நதியாகப் பெருக்கெடுத்து, மேலுலகத்தில் இருந்து கீழ் உலகத்திற்குக் கொண்டு வருகையில் அதன் வெள்ளப் பெருக்கைத் தாங்க பூமிக்கு இயலாததால் பரமசிவன் அந்நதியைத் தன் சடாமுடியில் ஏற்றுச் சிறிதுசிறிதாகப் பூமியில் விட்டருளினர் என்பர். இதனை,

"குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர் பெய்து
மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி – கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமே லேறக் கழுவினான்
அண்டத்தான் சேவடியை யாங்கு"

– (இயற்பா – நான்முகன் திருவந்தாதி :9)

என்று தம் பாசுரமொன்றில் திருமழிசையாழ்வார் எழிலுற எடுத்தோதுவர்.

"தவம்செய்து நான்முகனே பெற்றான் தரணி
நிவந்தளப்ப நீட்டிய பொற்பாதம் – சிவந்ததன்
கையனைத்தும் ஆரக் கழுவினான் கங்கைநீர்
பெய்தனைத்தும் பேர்மொழிந்து பின்"

– (இயற்பா – இரண்டாம் திருவந்தாதி : 78)

என்று பூதத்தாழ்வார் இதனை அழகுற எடுத்துரைக்கிறார்.

.........................................................

15. கலம்பகத்திறன், ப.88

மகரக்குழை - முதலையின் வடிவமாகச் செய்த குண்டலம். மார்பில் அணிந்த மணி - கௌதுப இரத்தினம், முளரி - தாமரை, உமைகேள்வன், உமையின் கணவன் - சிவபெருமான், ஐவாய் அரவு - ஐந்தலை நாகம், எழுவகைப் பிறவி - தேவர் மக்கள், விலங்கு, ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வன, தாவரங்கள் இருந்தேன் - செயலற்று இருந்தேன்.

### இரங்கல்
(தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை)

34. இருங்குங்கு மத்தோள் அரங்கேசர் முன்னாள்
இலங்கா புரங்கா வலன்காலி னால்வீழ்
கருங்குன்று போல்மண் முகங்குத்தி வீழக்
கண்டா ரெனக்கென்று தண்தார் அளித்தால்
மருங்கெங்கும் வம்போதும் வார்வாய் அடங்கும்
வாடைக்கு நிலமங்கை ஆடைக்க நோகேன்
நெருங்கும் தனஞ்சற் தனம்பூச லாகும்
நீளாதி ராமையன் மீளாதி ராதே!

இருங்குங்கு மத்தோள் அரங்கேசர் முன்னாள் - பெரிய குங்குமம் அணிந்த தோள்களையுடைய திருவரங்கப் பெருமான் இராமவதாரம் எடுத்த அந்நாளில்,

இலங்கா புரம்காவலன் காலினால்வீழ் கருங்குன்றுபோல் - இலங்கை நகருக்கு அரசனாகிய இராவணன், பலத்த காற்றினால், கரிய பெரிய மலையானது அடியோடு வீழ்ந்தது போல,

மண்முகங் குத்தி வீழக்கண்டார் எனக்கென்று தண்தார் அளித்தால் - இராவணன் முகமானது பூமியைக் குத்துமபடியாக வீழக் கண்டவர் எனக்கு என்றும் உரிமையாகும்படியாகக் குளிர்ச்சி பொருந்திய திருத்துழாய் மாலையை அளிக்க, அருள்செய்வாராயின,

மருங்கெங்கும் வம்போதும் வார்வாய் அடங்கும் - சுற்றுப் பக்கங்களில் இருந்து வம்பளக்கின்ற பெண்கள் வீண் வார்த்தைகளைக் கூறாது அடங்குவர்.

வாடைக்கு, நிலமங்கை ஆடைக்கு நோகேன் - குளிர்ச்சியுடையதாகிய வாடைக்காற்றுக்கு வருந்தேன்; நிலமகளது ஆடையான கடலுக்கும் வருந்தேன்.

நெருங்குதனம் சந்தனம் பூலோகும் - நெருங்கியுள்ள கொங்கைகளில் சந்தனம் பூசுவேன்.

நீளாதி ராமையன் மீளாதி ராதே - இரவு நீளாது, காதல் நோயும் நீங்காமல் போகாது (நிச்சயம் நீங்கிவிடும்)

தலைவனைப் பிரிந்து தவிக்கின்ற நிலையில் வாடைக்காற்று, கடல் முதலியவற்றிற்கு ஆற்றாது வருந்திய தலைவி திருத்துழாய் மாலையும் பெறாது வருந்திக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

தலைவனைப் பிரிந்து வருந்தும் நிலையில் தலைவி அத்தலைவன் சாத்தியமாலை கிடைக்கப் பெற்றால், அதனை அவனாகவே பாவித்து மகிழ்வுறக் கருதினளாகையால் 'எம்பெருமான் தனது மாலையைத் தந்தானாயின், அப்பொழுது தமக்குத் தோன்றியபடி யெல்லாம் பேசுகின்ற மகளிர் வாயும் அடங்கும். வாடை முதலியனவும் என்னை வருத்தமாட்டா நானும் இனிது இருப்பேன் என்றனள்' என்பதாம் தனது தளர்ச்சியை ஊரலர் முதலியவற்றால் அறிந்த செவிலித்தாயர் முதலியோர், அதற்கேதும் செய்யாது முனிந்து கூறும் வார்த்தைகள் தன் வருத்தத்தை மிகுவித்தலால், மருங்கெங்கும் வம்போதுவார் வாயடங்கும் என்கிறார். துணையோடு கூடியுள்ளோர்க்கு இன்பம் செய்யும் வாடைக்காற்றும் கடலும் பிரிந்தார்க்குத் துன்பம் செய்யக் கூடியது. கூடிய நிலையில் ஒரு கணமாகக் கழிகின்ற இரவு பிரிந்த நிலையில் பல ஊழிகளாகத் தோன்றுகின்ற காரணத்தால் 'நீளாதிரா' என்றாள் என்ற மூவர் உரை இங்குச் சுட்டத்தக்கது. [16]

தலைவனைப் பிரிந்த தலைவி, தலைவனைப் பிரிந்த நிலையில், குளிர்ச்சியை இயல்பாகவுடைய குளிர்ந்த வாடைக் காற்றானது இக் காலத்தில் இவ்வூரில் குளிரச் செய்யும் தன் இயல்பினை விட்டு விட்டு வெப்பத்தை வீசுகின்றதே அழகிய குளிர்ந்த திருத்துழாய் மாலைக்காக தன் அகன்ற கண்களில் இருந்து மேகம் மழையைப் பொழிவது போல, கண்ணீர் விட்டு வருந்துகின்ற இத்தலைவியினுடைய நிறத்தை அழிப்பதற்கென்றே, இயல்புக்கு மாறாக வாடையை அனுப்பி துன்புறுத்துகிறான் என்பதாகப்,

16. திருவரங்கக் கலம்பகம் (மூவர் உரை), பக்.65

"பனிப்பு இயல்பாக உடைய தண்வாடைக்கு இக்காலம் இவ்வூர்ப்
பனிப்பு இயல்வெல்லாம் தவிர்த்து எரிவீசும் அந்தண்ணந் துழாய்
பனிப்புயல் சோரு தடங்கண்ணி மாமை திறத்துக்கொலாம் ?
பனிப்புயல் வண்ணன் செங்கோல் ஒருநான்று தடாவியதே"

- (இயற்பா - திருவிருத்தம் :5)

என்று தோழியின் கூற்றாக நம்மாழ்வார் எடுத்தோதியுள்ளது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

நீண்ட இரவை எண்ணி கவலையுறுகின்ற தலைவி, 'இப்பரந்த இருட்டை பழைய காலத்திலேயும் பார்த்துள்ளோம். என்றாலும் இன்று இவ்வாறு எங்கும் பரந்து இருண்டிருக்கிற துன்பம் தரும் இருட்டைப்போல வேறு ஒன்றைக் கண்டதும் இல்லை. கேட்டதும் இல்லை என்பதை,

"பண்டும் பலபல வீங்கிருள் காண்டும்இப் பாயிருள்போல்
கண்டும் அறிவதும் கேட்பதும் யாமிலம்"

- (இயற்பா - திருவிருத்தம் :49)

என்றும்,

"அளப்பருந் தன்மைய ஊழியங் கங்குல் அந்தண்ணந் துழாய்க்கு
உளப்பெரும் காதலின் நீளிய வாயுள...."

- (இயற்பா - திருவிருத்தம் :59)

என்றும் தலைவனைப் பிரிந்து தலைவியின் இரவு துன்பத்தை நம்மாழ்வார் எடுத்தோதுவர்.

இராவணன் வீழ்ந்த கதையினை ஏழாம் பாடலின் உரையில் காண்க.

கால் - காற்று, குங்குமத்தோள் - குங்குமம் அணிந்த பெரிய தோள், தண்தார் - குளிர்ந்த மாலை, வாடை - வாடைக் காற்று, நிலமகள் ஆடை - கடல், நோதல் - வருந்துதல், இரா - இரவு, மையல் - காதல் நோய்.

## நெஞ்சொடு புலம்பல்
### அறுசீர் ஆசிரிய விருத்தம்

35. தேடு கின்றனை ஐம்பொறி களுக்கிரை
தேடியும் கிடையாமல்
வாடு கின்றனை வீடுசென் றென்றினி
மருவுவை மடநெஞ்சே !
ஆடு கின்றிலை அழுகிலை தொழுகிலை
அரங்கனைக் கரம்கூப்பி
பாடு கின்றிலை பணிக்கிலை[1] பதின்மர்தம்
பாடலின் படியாயே.

தேடுகின்றனை ஐம்பொறிக் கிரை - ஐம்பொறிகளால் நுகரலாகும் சிற்றின்பத்தை நாள்தோறும் தேடி அலைகின்றாய்.

தேடியும் கிடையாமல் வாடுகின்றனை - அவ்வாறு தேடியும் அகப்படாமையால், துன்பமுற்று வருந்துகின்றாய்.

வீடு சென்றென்றினி மருவுவை மடநெஞ்சே ! - இனி, என்றைக்குப் பரமபதம் சென்று சேருவாய், அறியாமையை உடைய மனமே !

ஆடு கின்றிலை அழுகிலை தொழுகிலை அரங்னை - திருவரங்கத்தில் எழுந்தருளியுள் திருவரங்கப் பெருமானின் முன்னே ஆனந்தத்தால் கூத்தாடவில்லை மனம் உருகி அழவில்லை ; திருவடிகளில் வீழ்ந்து வணங்கவில்லை.

கரங்கூப்பி, பாடுகின்றிலை பணிகிலை - எம்பெருமானுக்கு முன்னே இரு கரம் கூப்பி மனமுருகிப் போற்றிப் பாடவில்லை ; அவனுடைய திருப்பாதங்களைச் சரணடையவில்லை

பதின்மர்தம் பாடலின் படியாயே - பத்து ஆழ்வார்கள், (மதுரகவியாழ்வார், ஆண்டாள் நாச்சியார் நீங்கலாக) கூறியுள்ள முறைமையின்படி இச்செயல்களையெல்லாம் செய்யாமல் காலத்தை வீணாக்கி விட்டாயே !

எம்பெருமானைத் தியானித்து ஆடிப்பாடி வணங்கி, ஆழ்வார்களின் வழியில் செல்லாமல் ஐம்பொறிகளின் வசப்பட்டு வாடும்

.................................................................................

(பா.பே) 1. நினைக்கிலை

தமது மனதிற்கு, இனியாகிலும் அரங்கனைத் தொழுதல் முதலியன செய்து வீடுபேறு அடைவாயாக என்று அறிவுறுத்தும் போக்கில் இப்பாடல் அமைந்துள்ளது.

"கற்றிலேன் கலைகள்; ஐம்புலன் கருதும்
கருத்துளே திருத்தினேன் மனத்தை
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை
பெருநிலத்து ஆருயிர்க் கெல்லாம்
செற்றமே வேண்டி திரிதர்வேன்; தவிர்ந்தேன்;
செல்கதிக்கு உய்யுமாறு எண்ணி
நற்றுணை யாகப் பற்றினேன், அடியேன்
நாராயணா என்னும் நாமம்"

- (பெரிய திருமொழி : 1:18)

என்ற பாசுரத்தில், 'ஐம்புலன்கள் செலுத்திய வழியில் நடந்து நன்மை எதுவும் பெறாது, உயிர்களுக்குத் துன்பமே செய்தேன். ஆனால் இப்பொழுது மனம் திருந்தி, கடைத்தேறும் வழியைச் சிந்தித்து நாராயணா எனும் நாமத்தை நல்துணையாகப் பற்றினேன்' என்று எடுத்துரைக்கிறார் திருமங்கையாழ்வார். இப்பாசுரம், இப்பாடலோடு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

மடநெஞ்சே - அறியாமையையுடைய மனம். அழுகிலை - அழவில்லை. நினைக்கிலை - நினைக்கவில்லை. ஐம்பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி, வீடு - பரமபதம்.

## எழுசீர் ஆசிரிய விருத்தம்

36. ஆயினை மனையைச் சேயினைப் பிதாவை
அனத்தினைத் தனத்தினை விரும்பும்
பேயினை மறந்து நோயினை மூப்பைப்
பிறப்பினை இறப்பினைத் துடைப்பீர்!
ஆயினை முளரி வாயனை எங்கள்
அமலனைக் கமலனைப் பயந்த
தாயனை நெடிய மாயனை வடபால்
தரங்கனை அரங்கனைத் தொழுமே.

ஆயினை மனையைச் சேயினைப் பிதாவை - பெற்ற தாயையும் மனைவியையும், தான் பெற்ற மக்களையும், தந்தையையும்,

அனத்தினை தனத்தினை விரும்பும் பேயினை மறந்து - அன்னமாகிய சோற்றையும் நிலையற்ற செல்வங்களையும் விரும்புகின்ற அறியாமை என்னும் பேயினை மறந்து,

நோயினை மூப்பைப் பிறப்பினை இறப்பினைத் துடைப்பீர் ! - இப்பிறப்பில் உடலில் உண்டாகின்ற நோய்களையும், உடலில் தோன்றும் முதுமையினையும் உலகில் தோன்றுவதையும் மரணம் அடைவதையும் ஒழிக்க எண்ணுபவர்களே !

ஆயனை முளரி வாயனை எங்கள் அமலனை - திருவாய்ப்பாடியில் வளர்ந்தவனாகிய, செந்தாமரைப் போன்ற சிவந்திருக்கக் கூடிய வாயை உடையவனை, குற்றமற்ற எம்பெருமானாக எங்களுக்கு விளங்குபவனும்,

கமலனைப் பயந்த தாயனை, நெடிய மாயனை - நாபிக் கமலத்தில் பிரமனைத் தோற்றுவித்த தாயாக விளங்குபவனும், மிகுந்த மாய வேலைகளைச் செய்பவனுமாக இருப்பவனும்,

வடபால் தரங்கனை அரங்கனைத் தொழுமே - ஆலிலையிலும் பாற்கடலிலும் பள்ளி கொள்பவனுமாகிய திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கனை வணங்குங்கள்.

இப்பாடலில், 'தாய், மனைவி, மக்கள், தந்தை முதலான சுற்றங்களையும் உணவு, செல்வம் இவற்றை விரும்பும் அறியாமையையும் விட்டுத், திருவரங்கப் பெருமானை வணங்கி, நோய், முதுமை, பிறப்பு, இறப்பு ஆகியவற்றை நீக்கிக் கொள்ளுங்கள்' என்று அறிவுறுத்துவதாக அமைத்துள்ளார் ஆசிரியர்.

திருமழிசையாழ்வார், நோய்களால் உடல்குன்றி நோய் உண்டாகி, முதுமை அடைந்து மரணம் நேருவதற்கு முன் இறைவனை வணங்கி வாழ்த்த வேண்டும் என்பதை,

> "வாள்கள் ளாகி நாள்கள் செல்ல நோய்மை குன்றி மூப்பெய்தி
> மாளும் நாளது ஆதலால் வணங்கி வாழ்த்தென் நெஞ்சமே !
> ஆளதாகும் நன்மை யென்று நன்கு ணர்ந்த தன்றியும்
> மீள்வி லாத போகம் நல்க வேண்டும் மால பாதமே"
>
> - (திருச்சந்த விருத்தம் : 112)

இதனைத் தலைவியின் கூற்றாக அமைந்துள்ள பாசுரமொன்றில்,

“காரும் வார்பனிக் கடலும் அன்னவன்
தாரு மார்வமும் கண்டது அண்டமோ
சோரு மாமுகில் தூளியி னூடுவந்து
ஈர வாடைதான் ஈரும் என்னையே”

- (பெரிய திருமொழி 11:1:2)

என்று ‘மழை பெய்யும் மேகத்தினுடைய குளிரைச் சுமந்து கொண்டு வாடைக்காற்று என்னைத் துன்புறுத்துகிறது. இது எம்பெருமானுடைய திருத்துழாய் மாலையையும் திருமார்பையும் நான் காணவேண்டுமென்று, ஆசைப்பட்டதற்கு தண்டனையோ ? (இது நீதியாகுமோ)’ என்பர் திருமங்கையாழ்வார்

**வாணாசுரனை அழித்த கதை**

மாபலி சக்கரவர்த்தியின் சந்ததியில் பிறந்தவனான பாணாசுரன் ஒரு காலத்தில், சிவபெருமானின் நடனத்தைக் கண்டு மகிழ்ந்து இரண்டு கரங்களால் மத்தளம் தட்ட, சிவபெருமான் அருள்கூர்ந்து அவனுடைய ஆயிரம் கைகளையும், நெருப்பு மதிலையும், அளவில்லாத வலிமையும், மிகுந்த செல்வத்தையும் தந்நதருளி, தன் கூட்டத்தாரோடு வரத்தையும் வழங்கினார்.

அந்தப் பாணாசுரனுடைய மகளாகிய உஷை என்பவள்,தான் கனவில் கண்ட, கிருஷ்ணனுடைய பேரனான அநிருத்தன் மீது காதல் கொண்டாள். அவளுடைய உயிர்த்தோழியான சித்திரலேகையிடம், உஷை தன்காதலைக் கூறி, உதவும்படி வேண்ட, தன் யோக மகிமையினால் அவள் துவாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக் கொண்டு வந்து அந்தப்புரத்தில் விட, அவ்விருவரும் மகிழ்ந்திருந்தனர். இச்செய்தியைக் காவலர்களால் அறிந்த பாணாசுரன், நாகாஸ்திரத்தால் அநிருத்தனைக் கட்டிப் போட்டான்.

துவாரகையில் அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லோரும் வருந்தியிருக்கும் பொழுது, நாரத முனிவரால் நடந்ததை அறிந்த கிருஷ்ணன், கருடன்மீது ஏறி, பலராமன் முதலியவர்களோடு பாணபுரமாகிய சோணிதபுரத்திற்குச் சென்றார். அப்பொழுது அப்பட்டணத்திற்குக் காவலாய் இருந்த பிரதம கணங்கள்

எதிர்த்துவர கிருஷ்ணர் அவர்களை அழித்தார். சிவபெருமானால் ஏவப்பட்ட சுரதேவதை, அக்கினி தேவர் முதலியோரோடு போர் செய்து அழித்தார். பின்னர் பாணாசுரனோடு போர் செய்யத் தொடங்க, அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும், சுப்பிரமணிரும் கூட்டத்தாரோடு வந்து எதிர்த்துப் போரிட, ஜ்ரும்பணாஸ்திரம் என்ற அஸ்திரத்தைப் பயன்படுத்தி, சிவபெருமான், சுப்பிரமணியர், விநாயகர் அனைவரையும் செயலிழக்கச் செய்தார். அதன் பின்னர் சுதர்சனம் என்ற சக்கராயுதத்தைப் பயன்படுத்தி, அப்பாணாசுரனடைய ஆயிரம் தோள்களையும் குருதி ஒழுகும்படி அறுத்தார். சிவன் வணங்கிப் போற்றியதால், நான்குகைககளோடும் உயிரோடும் விட்டருளினார். பின்னர் தன்பேரனான அநிருத்தனுக்கு உஷையைத் திருமணம் செய்துவைக்க, அதன்பின் மீண்டார் என்பர்.

இப்பாணாசுரனை அழித்த நிகழ்வினை,

"மோடி யோடு இலச்சையாய சாபம் எய்தி முக்கணான்
கூடு சேனை மக்களோடு கொண்டு மண்டி வெஞ்சமத்து
ஓட வாணன் ஆயிரம் கரங்க ழித்த ஆதிமால்
பீடு கோயில் கூடுநீர் அரங்கம் என்ற பேரதே"

- (திருச்சந்த விருத்தம் : 53)

என்றும்,

"குந்த மோடு சூலம்வேல்கள் தோம ரங்கள் தண்டுவாள்
பந்த மான தேவர்கள் பறந்து வான கம்உற
வந்த வாணன் ஈரைஞ்ஞூறு தோள்க ளைத்து ணித்தநாள்
அந்த அந்த ஆகுலம் அமர ரேஅ றிவரே"

(திருச்சந்த விருத்தம் :70)

என்றும் தம்பாசுரங்களில் எடுத்தோதுவர். "வாணனை ஆயிரம் தோள்களும் துணிந்தவன்" (பெரியதிருமொழி 4:2:5) என்றும் "சடையான் ஓட அடல்வாணனன் தடந்தோள் துணிந்த தலைவன்" (பெரியதிருமொழி 5:1:7) என்று இத்திரு அருளிச் செயலை எம்பிரான் நிகழ்த்தியதை திருமங்கையாழ்வார் எடுத்துரைப்பர்.

"கார்த்திகை யானும் கரிமுகத் தானும் கனலும் முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு மூவுலகும்
பூத்தவனே என்று போற்றிட வாணன் பிழைபொறுத்த
தீர்த்தவனை யேத்தும் இராமா னுசன்என்றன் சேமவைப்பே"
- (இராமானுச நூற்றந்தாதி :22)

என்னும் பாசுரத்தில் இந்நிகழ்வினை எடுத்துரைப்பர் திருவரங்கத்தமுதனார்.

**ஊர்**

எண்சீர் ஆசிரியச் சந்த விருத்தம்

40. சருக ருத்திஜம் பொறிவ ருந்தரும்
தவர்கள் அண்டர்குஞ் சரமு கன்குகன்
பரிதி சந்திரன் சிவன யன்புரந்
தரன்நி ரந்தரம் பரவும் எந்தையூர்
குருகை தஞ்சைதென் கணபு ரம்குறுங்
குடிக டந்தைவண் டுவரை இந்தளூர்
திருவை குந்தமஞ் சனசி லம்பயிந்
திரிபு ரம்செழும் திருவ ரங்கமே.

சருக ருத்திஜம் பொறிவ ருந்தரும் தவர்கள் - காட்டில் கிடைக்கின்ற உலர்ந்த இலைகளையே தங்கள் உணவாகக் கொண்டு, ஐம்புலன்களையும் வருத்திக் கொண்டு அரிய தவத்தின் மேற்கொண்டுள்ள முனிவர்களும்,

அண்டர்குஞ் சரமு கன்குகன் பரிதி சந்திரன் - தேவர்களும், யானை முகத்தைக் கொண்ட விநாயகனும், முருகப் பெருமானும், சூரியனும் சந்திரனும்,

சிவன யன்புரந் தரன்நி ரந்தரம் பரவும் எந்தையூர் - சிவபெருமானும், பிரமதேவனும், தேவேந்திரனும் எக்காலத்தும் இடைவிடாமல் போற்றி வணங்குகின்ற எம்பெருமானது திருப்பதிகளானவை,

குருகை தஞ்சைதென் கணபு ரம்குறுங் குடிகு டந்தை - திருக்குருகூரும், திருத்தஞ்சை நகரும், அழகிய திருக்கண்ணபுரமும், திருக்குறுங்குடியும், திருக்குடந்தையும்,

வண்டுவரை இந்தளூர் திருவைகுந் தம்அஞ் சனசிலம்பு - வளப்பம் பொருந்திய துவாரகையும், திருஇந்தளூரும், திருவைகுந்தமும், திருவேங்கட மலையும்,

அயிந்திரபுரம் செழும்திரு வரங்கமே - திருவயிந்திரபுரமும் திருவரங்கப்பெருமான் எழுந்தருளியுள்ள செழுமையான திருவரங்கமுமாகும்.

பல திருப்பதிகளில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் பெருமையைக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. அரிய தவத்தை மேற்கொண்டுள்ள முனிவர்களும், தேவர்களும், விநாயகனும் முருகப் பெருமானும், சூரிய சந்திரர்களும், சிவபெருமானும், தேவேந்திரனும் போற்றி வணங்குகின்ற திருத்தலங்கள், திருக்குருகூர், திருத்தஞ்சை, திருக்கண்ணபுரம், திருக்குறுங்குடி, திருக்குடந்தை, துவாரகை, திருஇந்தளூர், திருவைகுந்தம், திருவேங்கடமலை, திருவரங்கம் முதலியனவாகும்.

தவம் செய்யும் முனிர்வர்கள் மேற்கொள்ளுவனவற்றைத் திருமங்கையாழ்வார், கீழே விழுந்த பழங்களையும், சருகான இலைகளையும் உண்டு, உடலை ஒடுக்கி, அடர்ந்த இலைகள் வேய்ந்த குடிசைகளில் தூங்கி, சூரியனுடைய வெப்பக்கதிர்களை நுகர்ந்து, அழகிய குளங்களில் மூழ்கி தவம் செய்வர் என்பார்.

"தொன்னெறியை வேண்டுவோர் வீழ்கனியும் ஊழிலையும்
என்னும் இவையே நுகர்ந்துடலம் தாம்வருந்தி
துன்னும் இலைக்குரம்பை துஞ்சியும் - வெஞ்சுடரோன்
மன்னும் அழல்நுகர்ந்தும் வண்தடத்தின் உட்கிடந்தும்
இன்னதோர் தன்மையராய் ....................."

- (பெரிய திருமடல் :7)

என்ற அவர்தம் பாசுரம் இதனை எடுத்தோதும்.

தேவர்களும் மற்றுமுள்ள தெய்வங்களும் வணங்கக் கூடியவன் எம்பெருமான். தாமரை மலரில் தோன்றிய பிரமனும் சிவனும்

இந்திரனோடு மற்ற தேவர்களும் அரம்பை முதலிய தேவ மாதரும் மற்றுமுள்ள முனிவர் கூட்டங்களும் முந்திக் கொண்டு வந்து வணங்குவர் என்பதை,

"அளிமலர்மேல் அயனரன் இந்திரனோ டேனை
அமரர்தம் குழுவும்அரம் பையரும் மற்றும்
தெளிமதிசேர் முனிவர்கள்தம் குழுவும் உந்தித்
திசைதிசை உயில் மலர்த்தூவி சென்று சேரும்"
- (பெருமாள் திருமொழி 1:6)

என்று தம் பாசுரத்தில் எழிலுற எடுத்தோதுவர் குலசேகராழ்வார்.

சருகு - காய்ந்த இலை, அருந்தவர் - அரிய தவத்தினை உடையவர், அண்டர் - தேவர், குஞ்சர முகன் - விநாயகன், குகன் - முரகன், பரிதி - சூரியன், அயன் - பிரமன், புரந்தரன் - இந்திரன்.

## மடக்கு

### கொச்சகம் கலிப்பா

41. திருவரங்கம் திருக்கோயில் சேர்ந்துமது திருக்கோயில்
தருவரென்றும் வைகுந்தம் தயங்கொலிசேர் வைகுந்தம்
ஒருமருங்கின் நந்துடையார் ஒழிந்தசன நந்துடையார்
மருவமறந் திருப்பீரே வணங்கமறந் திருப்பீரே.

திருவரங்கம் திருக்கோயில் சேர்ந்துமது திருக்கோயில் - திருவரங்கத்தில் உள்ள பெரிய கோயிலைச் சென்று அடைந்து, உங்களுடைய மாறுபாட்டினைப் போக்கிக் கொண்டால்,

தருவரென்றும் வைகுந்தம் தயங்கொளிசேர் வைகுந்தம் - எந்நாளும் தாம் எழுந்தருளி இருக்கின்ற தமது ஒளிபொருந்தியதாக விளங்குகின்ற பரமபதத்தைத் தந்தருளுவார்.

ஒருமருங்கி னந்துடையார் ஒழிந்தசன னம்துடையார் - தமது உடலின் ஒரு பக்கத்தில் (இடது) சங்கினை ஏற்றிக் கொண்டுள்ள பெருமானை வணங்காது இருக்கும் மற்றையோர் தங்களுடைய பிறப்பைப் போக்கிக் கொள்ள மாட்டார்கள். (ஆதலின்)

மருவ மறந்திருப்பீரே வணங்க மறந்திருப்பீரே - அப்பெருமானின் திருவடியைச் சென்று பணிந்து வணங்குவதற்கு மறந்திருப்பவர்களே ! உங்கள் மனதில் ஏற்பட்டுள்ள மாறுபாட்டை மாற்றுங்கள் (மறவாது, விரைந்து சென்று எம்பெருமானைப் போற்றி வழிபடுங்கள்)

இப்பாடலில், திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்க எம்பெருமானை இது நாள்வரை போற்றி வணங்காதவர்கள், தங்கள் மனதை மாற்றிக்கொண்டு, பரமபத்தை அளிக்கக் கூடிய பரந்தாமனைப் போற்றுவீராக. அதுவே உங்களுடைய பிறவிப் பிணியை நீக்கும் மருந்து என ஆசிரியர் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

திருக்கு - மாறுபாடு, ஒயில் - ஒழிந்தால், நந்து - சங்கு, வைகுந்தம் - பரமபதம்.

## சித்து

### எண்சீர் விருத்தம்

42\. திருப்பொற் பாவைக்குக் கஞ்சம்பொன் னாக்கிய
சித்த ரேம்சுத்தக் காயா மலரென
உருப்பொற் பானதி ருவரங் கேசனார்
ஊர கத்துநின் றார்சென் றிறைஞ்சினோம்
இருப்புப் பாடகம் காட்டினர் யாமவர்க்
இரும்பை ஆடக மாக்கினம் ஈயத்தை
நருக்கி வெள்ளிய தாகவு ருக்குவோம்
நமது வித்தைக் கழுதே அருமையே !

திருப்பொற் பாவைக்குக் கஞ்சம் பொன்னாக்கிய சித்தரேம் - (அழகே உருவான திருமகளுக்கு) பொற்சிலை செய்வதற்கு வெண்கலத்தைப் பொன்னாகச் செய்து கொடுத்த (பொற்றாமரை மலரைச் செய்த கொடுத்த இரசவா சித்தரகள் நாங்கள்.

சுத்தக் காயா மலரென உருப்பொற்பான திருவரங்கேசனார் - தூய்மையான காயம்பூ மலரைப் போன்ற நிறமும் பொலிவும்பெற்ற அழகுடையவரான திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான்,

ஊரகத்து நின்றார் சென்றிறைஞ்சினோம் - திருஊரகம் என்ற திருப்பதியில் நின்ற கோலத்தில் எழுந்தருளினார். அங்கு சென்று அவருடைய அருளை வேண்டி நின்றோம்.

இருப்புப் பாடகம் காட்டினார் - அப்பொழுது எம்பெருமான் இரும்பினாலாகிய பாடகம் என்னும் காலில் அணியும் அணியைக் காட்டினார் (திருப்பாடகம் என்னும் திருப்பதியைத் தாம் வீற்றிருக்கும் இடமாகத் தெரிவித்தார்)

யாமவர்க்கு இரும்பை ஆடக மாக்கினம் - சித்தரகளாகிய நாங்கள், அந்த இரும்பாலாகிய காலணியாகிய பாடகத்தை, ஆடகம் என்னும் பொன்னாலாகிய அணியாகச் செய்து அளித்தோம் (பெரிய காளியன் என்னும் பாம்பின் படத்தை நடிக்கும் இடமாகச் செய்தோம்)

ஈயத்தை நருக்கி வெள்ளியதாக உருக்குவோம் - ஈயம் என்னும் உலோகத்தை இரசவாதம் செய்து வெள்ளியாக உருக்கிக் காட்டுவோம்.

நமது வித்தைக்கு அமுதே அருமையே ! - இத்தகைய எம்முடைய வித்தை அனைத்தைக் காட்டிலும் அமுதை, உணவாகக் கொள்ளக் கூடிய திருவைகுந்தம் கிடைப்பது மிகவும் அரிதாகும்.

இரசவாதிகள் தமது திறமையை ஒரு தலைவனுக்கு எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் அமைத்தல் 'சித்து' என்னும் உறுப்பின் இலக்கணமாகும். 'இரசம்' என்பது பாதரசத்தைக் குறிப்பதாகும். 'வாதித்தல்' என்பதற்கு மாற்றுதல் என்பது பொருளாகும். இரும்பு முதலான தாழ்ந்த உலோகங்களை பொன் முதலான உயர்ந்த உலோகமாகச் செய்யும் வல்லமையைப் பெற்றவர்கள் இரசவாதிகள்.

இப்பாடலில் வெண்கலத்தையும் இரும்மையும் பொன்னாக மாற்றியும் ஈயத்தை வெள்ளியாக மாற்றியும் தமது சித்து வேலைகளைச் செய்து காட்டிய சித்தர்கள், அதனைக் காட்டிலும் அமுதை உணவாகக் கொண்டிருக்கக் கூடிய திருவைகுந்தம் கிடைப்பது அரிதானது என்ற கூறி வியப்பதாக ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

'எம்பெருமானைச் சரணாக அடைந்தவர்கள் தாம் அப்பிரானையடைவதற்கு முன்பிருந்த தாழ்வான நிலையினின்று மாறி உயர்ச்சி பெறுவரென்பது. இங்குக் கருதத் தக்கது. இச்செய்யுள் சிலேடையாக மற்றோர் பொருள் தருகின்ற நயம் பாராட்டத்தக்கது' என்ற மூவர் உரை இங்குச் சுட்டத்தக்கது.[17]

திருபொற்பாவை - திருமகள், கஞ்சம் - வெண்கலம். காயாமலர் - காயாம்பூ. ஊரகம் - திருஊரகம் என்னும் ஊர். பாடகம் - திருப்பாடகம் என்னும் காலில் அணியும் ஓர் அணி. ஆடகம் - பொன், நடிக்கும் இடம்.

### சித்து

### கட்டளைக் கலித்துறை

43. *அரும்பித் தளையவிழ் நாள்மாலை மார்பன் அரங்கனெங்கள்*
*பெரும்பித் தளையும் பிறப்பறுத் தாண்ட பிரான்சித்தரேம்*
*தரும்பித் தளையும் தராவும்பொன் னாக்கித் தருவெமப்பா*
*திரும்பித் தளையினும் நெய்பால் அமுதினும் சிந்தனையே!*

அரும்பித் தளையவிழ் நாள்மாலை மார்பன் - அரும்புகள் அரும்பி முறுக்கு அவிழ்ந்து மலர்ந்த புத்தம்புதிதாக அன்று மலர்ந்த பூக்களாலான மாலையை அணிந்த மார்பை உடையவனாகிய திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான்,

எங்கள் பெரும்பித் தளையும் பிறப்பறுத்து ஆண்ட பிரான் - அடியாராகிய எங்களுடைய பெருமயக்கம் பொருந்திய பிறவியைப் போக்கி, அடிமையாக எம்மை ஆட்கொண்ட பெருமானாவான்.

சித்திரேம் தரும்பித் தளையும் தராவும் பொன்னாக்கித் தருவெம் அப்பா - (அத்தகைய அடிமையான) சித்தர்களாகிய நாங்கள் எங்களிடம் தரப்பட்ட பித்தளையையும் வெண்கலத்தையும் பொன்னாகச் செய்துத் தருவோம். அப்பனே!

---

17. திருவரங்கக் கலம்பகம், பக்.72

இதனைத் தலைவியின் கூற்றாக அமைந்துள்ள பாசுரமொன்றில்,

"காரும் வார்பனிக் கடலும் அன்னவன்
தாரு மார்வமும் கண்டது அண்டமோ
சோரு மாமுகில் துளியி னூடுவந்து
ஈர வாடைதான் ஈரும் என்னையே"

- (பெரிய திருமொழி 11:1:2)

என்று 'மழை பெய்யும் மேகத்தினுடைய குளிரைச் சுமந்து கொண்டு வாடைக்காற்று என்னைத் துன்புறுத்துகிறது. இது எம்பெருமானுடைய திருத்துழாய் மாலையையும் திருமார்பையும் நான் காணவேண்டுமென்று, ஆசைப்பட்டதற்கு தண்டனையோ ? (இது நீதியாகுமோ)' என்பர் திருமங்கையாழ்வார்

**வாணாசுரனை அழித்த கதை**

மாபலி சக்கரவர்த்தியின் சந்ததியில் பிறந்தவனான பாணாசுரன் ஒரு காலத்தில், சிவபெருமானின் நடனத்தைக் கண்டு மகிழ்ந்து இரண்டு கரங்களால் மத்தளம் தட்ட, சிவபெருமான் அருள்கூர்ந்து அவனுடைய ஆயிரம் கைகளையும், நெருப்பு மதிலையும், அளவில்லாத வலிமையும், மிகுந்த செல்வத்தையும் தந்நதருளி, தன் கூட்டத்தாரோடு வரத்தையும் வழங்கினார்.

அந்தப் பாணாசுரனுடைய மகளாகிய உஷை என்பவள்,தான் கனவில் கண்ட, கிருஷ்ணனுடைய பேரனான அநிருத்தன் மீது காதல் கொண்டாள். அவளுடைய உயிர்த்தோழியான சித்திரலேகையிடம், உஷை தன்காதலைக் கூறி, உதவும்படி வேண்ட, தன் யோக மகிமையினால் அவள் துவாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக் கொண்டு வந்து அந்தப்புரத்தில் விட, அவ்விருவரும் மகிழ்ந்திருந்தனர். இச்செய்தியைக் காவலர்களால் அறிந்த பாணாசுரன், நாகாஸ்திரத்தால் அநிருத்தனைக் கட்டிப் போட்டான்.

துவாரகையில் அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லோரும் வருந்தியிருக்கும் பொழுது, நாரத முனிவரால் நடந்ததை அறிந்த கிருஷ்ணன், கருடன்மீது ஏறி, பலராமன் முதலியவர்களோடு பாணபுரமாகிய சோணிதபுரத்திற்குச் சென்றார். அப்பொழுது அப்பட்டணத்திற்குக் காவலாய் இருந்த பிரதம கணங்கள்

எதிர்த்துவர கிருஷ்ணர் அவர்களை அழித்தார். சிவபெருமானால் ஏவப்பட்ட சுரதேவதை, அக்கினி தேவர் முதலியோரோடு போர் செய்து அழித்தார். பின்னர் பாணாசுரனோடு போர் செய்யத் தொடங்க, அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும், சுப்பிரமணிரும் கூட்டத்தாரோடு வந்து எதிர்த்துப் போரிட, ஜ்ரும்பணாஸ்திரம் என்ற அஸ்திரத்தைப் பயன்படுத்தி, சிவபெருமான், சுப்பிரமணியர், விநாயகர் அனைவரையும் செயலிழக்கச் செய்தார். அதன் பின்னர் சுதர்சனம் என்ற சக்கராயுதத்தைப் பயன்படுத்தி, அப்பாணாசுரனடைய ஆயிரம் தோள்களையும் குருதி ஒழுகும்படி அறுத்தார். சிவன் வணங்கிப் போற்றியதால், நான்குகைககளோடும் உயிரோடும் விட்டருளினார். பின்னர் தன்பேரனான அநிருத்தனுக்கு உஷையைத் திருமணம் செய்துவைக்க, அதன்பின் மீண்டார் என்பர்.

இப்பாணாசுரனை அழித்த நிகழ்வினை,

"மோடி யோடு இலச்சையாய சாபம் எய்தி முக்கணான்
கூடு சேனை மக்களோடு கொண்டு மண்டி வெஞ்சமத்து
ஓட வாணன் ஆயிரம் கரங்க ழித்த ஆதிமால்
பீடு கோயில் கூடுநீர் அரங்கம் என்ற பேரதே"

- (திருச்சந்த விருத்தம் : 53)

என்றும்,

"குந்த மோடு சூலம்வேல்கள் தோம ரங்கள் தண்டுவாள்
பந்த மான தேவர்கள் பரந்து வான கம்உற
வந்த வாணன் ஈரைஞ்ஞூறு தோளக ளைத்து ணித்தநாள்
அந்த அந்த ஆகுலம் அமர ரேஅ றிவரே"

(திருச்சந்த விருத்தம் :70)

என்றும் தம்பாசுரங்களில் எடுத்தோதுவர். "வாணனை ஆயிரம் தோள்களும் துணிந்தவன்" (பெரியதிருமொழி 4:2:5) என்றும் "சடையான் ஓட அடல்வாணனன் தடந்தோள் துணிந்த தலைவன்" (பெரியதிருமொழி 5:1:7) என்று இத்திரு அருளிச் செயலை எம்பிரான் நிகழ்த்தியதை திருமங்கையாழ்வார் எடுத்துரைப்பர்.

"கார்த்திகை யானும் கரிமுகத் தானும் கனலும் முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு மூவுலகும்
பூத்தவனே என்று போற்றிட வாணன் பிழைபொறுத்த
தீர்த்தவனை யேத்தும் இராமா னுசன்என்றன் சேமவைப்பே"
- (இராமானுச நூற்றந்தாதி :22)

என்னும் பாசுரத்தில் இந்நிகழ்வினை எடுத்துரைப்பர் திருவரங்கத்தமுதனார்.

**ஊர்**

எண்சீர் ஆசிரியச் சந்த விருத்தம்

40. சருகு ருத்திஜம் பொறிவ ருந்தரும்
தவர்கள் அண்டர்குஞ் சரமு கன்குகன்
பரிதி சந்திரன் சிவன யன்புரந்
தரன்நி ரந்தரம் பரவும் எந்தையூர்
குருகை தஞ்சைதென் கணபு ரம்குறுங்
குடிக டந்தைவண் டுவரை இந்தளூர்
திருவை குந்தமஞ் சனசி லம்பயிந்
திரிபு ரம்செழும் திருவ ரங்கமே.

சருகு ருத்திஜம் பொறிவ ருந்தரும் தவர்கள் - காட்டில் கிடைக்கின்ற உலர்ந்த இலைகளையே தங்கள் உணவாகக் கொண்டு, ஐம்புலன்களையும் வருத்திக் கொண்டு அரிய தவத்தின் மேற்கொண்டுள்ள முனிவர்களும்,

அண்டர்குஞ் சரமு கன்குகன் பரிதி சந்திரன் - தேவர்களும், யானை முகத்தைக் கொண்ட விநாயகனும், முருகப் பெருமானும், சூரியனும் சந்திரனும்,

சிவன யன்புரந் தரன்நி ரந்தரம் பரவும் எந்தையூர் - சிவபெருமானும், பிரமதேவனும், தேவேந்திரனும் எக்காலத்தும் இடைவிடாமல் போற்றி வணங்குகின்ற எம்பெருமானது திருப்பதிகளானவை,

குருகை தஞ்சைதென் கணபு ரம்குறுங் குடிகு டந்தை - திருக்குருகூரும், திருத்தஞ்சை நகரும், அழகிய திருக்கண்ணபுரமும், திருக்குறுங்குடியும், திருக்குடந்தையும்,

வண்டுவரை இந்தளூர் திருவைகுந் தம்அஞ் சனசிலம்பு - வளப்பம் பொருந்திய துவாரகையும், திருஇந்தளூரும், திருவைகுந்தமும், திருவேங்கட மலையும்,

அயிந்திரபுரம் செழும்திரு வரங்கமே - திருவயிந்திரபுரமும் திருவரங்கப்பெருமான் எழுந்தருளியுள்ள செழுமையான திருவரங்கமுமாகும்.

பல திருப்பதிகளில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் பெருமையைக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. அரிய தவத்தை மேற்கொண்டுள்ள முனிவர்களும், தேவர்களும், விநாயகனும் முருகப் பெருமானும், சூரிய சந்திரர்களும், சிவபெருமானும், தேவேந்திரனும் போற்றி வணங்குகின்ற திருத்தலங்கள், திருக்குருகூர், திருத்தஞ்சை, திருக்கண்ணபுரம், திருக்குறுங்குடி, திருக்குடந்தை, துவாரகை, திருஇந்தளூர், திருவைகுந்தம், திருவேங்கடமலை, திருவரங்கம் முதலியனவாகும்.

தவம் செய்யும் முனிர்வர்கள் மேற்கொள்ளுவனவற்றைத் திருமங்கையாழ்வார், கீழே விழுந்த பழங்களையும், சருகான இலைகளையும் உண்டு, உடலை ஒடுக்கி, அடர்ந்த இலைகள் வேய்ந்த குடிசைகளில் தூங்கி, சூரியனுடைய வெப்பக்கதிர்களை நுகர்ந்து, அழகிய குளங்களில் மூழ்கி தவம் செய்வர் என்பார்.

> "தொன்னெறியை வேண்டுவோர் வீழ்கனியும் ஊழிலையும்
> என்னும் இவையே நுகர்ந்துடலம் தாம்வருந்தி
> துன்னும் இலைக்குரம்பை துஞ்சியும் - வெஞ்சுடரோன்
> மன்னும் அழல்நுகர்ந்தும் வண்தடத்தின் உட்கிடந்தும்
> இன்னதோர் தன்மையராய் .................... "
>
> - (பெரிய திருமடல் :7)

என்ற அவர்தம் பாசுரம் இதனை எடுத்தோதும்.

தேவர்களும் மற்றுமுள்ள தெய்வங்களும் வணங்கக் கூடியவன் எம்பெருமான். தாமரை மலரில் தோன்றிய பிரமனும் சிவனும்

இந்திரனோடு மற்ற தேவர்களும் அரம்பை முதலிய தேவ மாதரும் மற்றுமுள்ள முனிவர் கூட்டங்களும் முந்திக் கொண்டு வந்து வணங்குவர் என்பதை,

"அளிமலர்மேல் அயனரன் இந்திரனோ டேனை
அமரர்தம் குழுவும்அரம் பையரும் மற்றும்
தெளிமதிசேர் முனிவர்கள்தம் குழுவும் உந்தித்
திசைதிசை உயில் மலர்த்தூவி சென்று சேரும்"
- (பெருமாள் திருமொழி 1:6)

என்று தம் பாசுரத்தில் எழிலுற எடுத்தோதுவர் குலசேகராழ்வார்.

சருகு - காய்ந்த இலை, அருந்தவர் - அரிய தவத்தினை உடையவர், அண்டர் - தேவர், குஞ்சர முகன் - விநாயகன், குகன் - முரகன், பரிதி - சூரியன், அயன் - பிரமன், புரந்தரன் - இந்திரன்.

## மடக்கு

### கொச்சகம் கலிப்பா

41. திருவரங்கம் திருக்கோயில் சேர்ந்துமது திருக்கோயில்
தருவரென்றும் வைகுந்தம் தயங்கொலிசேர் வைகுந்தம்
ஒருமருங்கின் நந்துடையார் ஒழிந்தசன னந்துடையார்
மருவமறந் திருப்பீரே வணங்கமறந் திருப்பீரே.

திருவரங்கம் திருக்கோயில் சேர்ந்துமது திருக்கோயில் - திருவரங்கத்தில் உள்ள பெரிய கோயிலைச் சென்று அடைந்து, உங்களுடைய மாறுபாட்டினைப் போக்கிக் கொண்டால்,

தருவரென்றும் வைகுந்தம் தயங்ககொளிசேர் வைகுந்தம் - எந்நாளும் தாம் எழுந்தருளி இருக்கின்ற தமது ஒளிபொருந்தியதாக விளங்குகின்ற பரமபதத்தைத் தந்தருளுவார்.

ஒருமருங்கி னந்துடையார் ஒழிந்தசன னம்துடையார் - தமது உடலின் ஒரு பக்கத்தில் (இடது) சங்கினை ஏற்றிக் கொண்டுள்ள பெருமானை வணங்காது இருக்கும் மற்றையோர் தங்களுடைய பிறப்பைப் போக்கிக் கொள்ள மாட்டார்கள். (ஆதலின்)

மருவ மறந்திருப்பீரே வணங்க மறந்திருப்பீரே - அப்பெருமானின் திருவடியைச் சென்று பணிந்து வணங்குவதற்கு மறந்திருப்பவர்களே ! உங்கள் மனதில் ஏற்பட்டுள்ள மாறுபாட்டை மாற்றுங்கள் (மறவாது, விரைந்து சென்று எம்பெருமானைப் போற்றி வழிபடுங்கள்)

இப்பாடலில், திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்க எம்பெருமானை இது நாள்வரை போற்றி வணங்காதவர்கள், தங்கள் மனதை மாற்றிக்கொண்டு, பரமபத்தை அளிக்கக் கூடிய பரந்தாமனைப் போற்றுவீராக. அதுவே உங்களுடைய பிறவிப் பிணியை நீக்கும் மருந்து என ஆசிரியர் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

திருக்கு - மாறுபாடு, ஒயில் - ஒழிந்தால், நந்து - சங்கு, வைகுந்தம் - பரமபதம்.

## சித்து

எண்சீர் விருத்தம்

42. திருப்பொற் பாவைக்குக் கஞ்சம்பொன் னாக்கிய
சித்த ரேம்சுத்தக் காயா மலரென
உருப்பொற் பானதி ருவரங் கேசனார்
ஊர கத்துநின் றார்சென் றிறைஞ்சினோம்
இருப்புப் பாடகம் காட்டினர் யாமவர்க்
கிரும்பை ஆடக மாக்கினம் ஈயத்தை
நருக்கி வெள்ளிய தாகவு ருக்குவோம்
நமது வித்தைக் கமுதே அருமையே !

திருப்பொற் பாவைக்குக் கஞ்சம் பொன்னாக்கிய சித்தரேம் - (அழகே உருவான திருமகளுக்கு) பொற்சிலை செய்வதற்கு வெண்கலத்தைப் பொன்னாகச் செய்து கொடுத்த (பொற்றாமரை மலரைச் செய்த கொடுத்த இரசவா சித்தரகள் நாங்கள்.

சுத்தக் காயா மலரென உருப்பொற்பான திருவரங்கேசனார் - தூய்மையான காயம்பூ மலரைப் போன்ற நிறமும் பொலிவும்பெற்ற அழகுடையவரான திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான்.

ஊரகத்து நின்றார் சென்றிறைஞ்சினோம் - திருஊரகம் என்ற திருப்பதியில் நின்ற கோலத்தில் எழுந்தருளினார். அங்கு சென்று அவருடைய அருளை வேண்டி நின்றோம்.

இருப்புப் பாடகம் காட்டினார் - அப்பொழுது எம்பெருமான் இரும்பினாலாகிய பாடகம் என்னும் காலில் அணியும் அணியைக் காட்டினார் (திருப்பாடகம் என்னும் திருப்பதியைத் தாம் வீற்றிருக்கும் இடமாகத் தெரிவித்தார்)

யாமவர்க்கு இரும்பை ஆடக மாக்கினம் - சித்தரகளாகிய நாங்கள், அந்த இரும்பாலாகிய காலணியாகிய பாடகத்தை, ஆடகம் என்னும் பொன்னாலாகிய அணியாகச் செய்து அளித்தோம் (பெரிய காளியன் என்னும் பாம்பின் படத்தை நடிக்கும் இடமாகச் செய்தோம்)

ஈயத்தை நருக்கி வெள்ளியதாக உருக்குவோம் - ஈயம் என்னும் உலோகத்தை இரசவாதம் செய்து வெள்ளியாக உருக்கிக் காட்டுவோம்.

நமது வித்தைக்கு அமுதே அருமையே ! - இத்தகைய எம்முடைய வித்தை அனைத்தைக் காட்டிலும் அமுதை, உணவாகக் கொள்ளக் கூடிய திருவைகுந்தம் கிடைப்பது மிகவும் அரிதாகும்.

இரசவாதிகள் தமது திறமையை ஒரு தலைவனுக்கு எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் அமைத்தல் 'சித்து' என்னும் உறுப்பின் இலக்கணமாகும். 'இரசம்' என்பது பாதரசத்தைக் குறிப்பதாகும். 'வாதித்தல்' என்பதற்கு மாற்றுதல் என்பது பொருளாகும். இரும்பு முதலான தாழ்ந்த உலோகங்களை பொன் முதலான உயர்ந்த உலோகமாகச் செய்யும் வல்லமையைப் பெற்றவர்கள் இரசவாதிகள்.

இப்பாடலில் வெண்கலத்தையும் இரும்மையும் பொன்னாக மாற்றியும் ஈயத்தை வெள்ளியாக மாற்றியும் தமது சித்து வேலைகளைச் செய்து காட்டிய சித்தர்கள், அதனைக் காட்டிலும் அமுதை உணவாகக் கொண்டிருக்கக் கூடிய திருவைகுந்தம் கிடைப்பது அரிதானது என்ற கூறி வியப்பதாக ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

'எம்பெருமானைச் சரணாக அடைந்தவர்கள் தாம் அப்பிரானையடைவதற்கு முன்பிருந்த தாழ்வான நிலையினின்று மாறி உயர்ச்சி பெறுவரென்பது, இங்குக் கருதத் தக்கது. இச்செய்யுள் சிலேடையாக மற்றோர் பொருள் தருகின்ற நயம் பாராட்டத்தக்கது' என்ற மூவர் உரை இங்குச் சுட்டத்தக்கது.[17]

திருபொற்பாவை - திருமகள், கஞ்சம் - வெண்கலம். காயாமலர் - காயாம்பூ, ஊரகம் - திருஊரகம் என்னும் ஊர். பாடகம் - திருப்பாடகம் என்னும் காலில் அணியும் ஓர் அணி. ஆடகம் - பொன், நடிக்கும் இடம்.

## சித்து

### கட்டளைக் கலித்துறை

43. அரும்பித் தளையவிழ் நாள்மாலை மார்பன் அரங்கனெங்கள்
பெரும்பித் தளையும் பிறப்பறுத் தாண்ட பிரான்சித்தரேம்
தரும்பித் தளையும் தராவும்பொன் னாக்கித் திருவெம்பா
திரும்பித் தளையினும் நெய்பால் அமுதினும் சிந்தனையே!

அரும்பித் தளையவிழ் நாள்மாலை மார்பன் - அரும்புகள் அரும்பி முறுக்கு அவிழ்ந்து மலர்ந்த புத்தம்புதிதாக அன்று மலர்ந்த பூக்களாலான மாலையை அணிந்த மார்பை உடையவனாகிய திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான்,

எங்கள் பெரும்பித் தளையும் பிறப்பறுத்து ஆண்ட பிரான் - அடியாராகிய எங்களுடைய பெருமயக்கம் பொருந்திய பிறவியைப் போக்கி, அடிமையாக எம்மை ஆட்கொண்ட பெருமானாவான்.

சித்திரேம் தரும்பித் தளையும் தராவும் பொன்னாக்கித் தருவெம் அப்பா - (அத்தகைய அடிமையான) சித்தர்களாகிய நாங்கள் எங்களிடம் தரப்பட்ட பித்தளையையும் வெண்கலத்தையும் பொன்னாகச் செய்துத் தருவோம். அப்பனே!

..............................................................................................

17. திருவரங்கக் கலம்பகம், பக்.72

திரும்பித் தளையினும் நெய்பால் அமுதினும் சிந்தனையே - (பிறவியைப் போக்கும் அரிய செயலை செய்யும்) உங்களுடைய எண்ணமெல்லாம் வெண்ணெய் உண்பதிலும் நெய்யைப் பருகுவதிலும் பால்உணவு உண்ணுவதிலும் திரும்பியது.

பிறவியைப் போக்குதலாகிய அரிய செயலைச் செய்யும் எம்பிரானுக்க, வெண்ணெய் உண்பது நெய்யைப் பருகுவது முதலானவற்றில் விருப்பமாதலின், எளிய பொருளைக் கொடுத்து மிகப் பெரிய நன்மையைப் பெறலாம் என்பதை உணர்த்துகிறார்.

தரா - ஒருவகை உலோகம்.

நேரிசை வெண்பா

44. சிந்திக்கத் தித்திக்கும் . . வ்வாய் துவர்த்துப்பாம்
புந்திக்க ளேயின் புளிமேவு – நந்தம்
கருவரங்கம் கைத்தழலும் காவிரியி னூடே
திருவரங்கத் தேவளரும் தேன்.

சிந்திக்கத் தித்திக்கும் செவ்வாய் துவர்த்துப்பாம் - மனத்தினால் எண்ணும் அடியவர்களுடைய சிந்தனையில் இனிப்பாக விளங்கக்கூடிய எம்பெருமானின் செந்நிறம் பொருந்திய இதழ்கள் பவளம் போன்று விளங்கும்.

புந்திக்கு ளேஇன் புளிமேவும் - அறிவினுள்ளே நினைக்க நினைக்க ஆனந்தத்தைத் தந்து பொருந்தி நிற்கும்.

நந்தம் கருவரங்கம் கைத்தழலும் - நம்முடைய கருவறையாகிய கர்ப்ப வீட்டைக் கோபித்து ஒழிக்கும்.

காவிரியி னூடே திருவரங்கத் தேவளரும் தேன் - திருக்காவிரியின் இடையே அமைந்துள்ள திருப்பதியான திருவரங்கத்தில் ஆதிசேடனாகிய படுக்கையில் ஆனந்த சயனமாகிய யோகநித்திரை செய்தருளுகின்ற இனிமையுடையவனான திருவரங்கப் பெருமான்.

திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை எண்ணினால், மனதில் ஆனந்தம் பொங்கி நிறையும்; பிறவியாகிய துன்பம் நம்மைவிட்டு அகலும் என்பதை ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

'கருவரங்கம் கைத்தழலும் என்பதற்கு நம் கருவறையாகிய கர்ப்ப வீட்டை கோபித்து அழிக்கும் என்பது பொருள். அதாவது இனி பிறவி என்பது இருக்காது. இதனை, நம்மாழ்வார் குறிப்பிடும் பொழுது எம்பெருமான்,'எஞ்சாப்பிறவி இடர் கடிவான்' (இயற்பா - திருவிருத்தம்:98) என்கிறார்.

புந்தி - அறிவு, இன்பு உளி - நினைக்க இன்பம், மேவும் - பொருந்தும். நந்தம் (நம்தம்) - நமது, கருஅரங்கம் - கர்ப்பமாகிய சிறு வீடு, கைத்து - கோபித்து. அழலும் - ஒழிக்கும்.

**கட்டளைக் கலித்துறை**

45. தேனந்து சோலை அரங்கேசர் சேவடி மேல்விசயன்
தானந்த நாளையில் சாத்திய மாலையும் தாள்விளங்க
வானம் தரும்கங்கை நன்னீரும் சென்னியில் வைக்கப்பெற்ற
அனந்தம் தானல்ல வோமுக்க ணான்மன்றுள் ஆடுவதே.

தேனந்து சோலை அரங்கேசர் சேவடி மேல் - தேன் மிகுதியாகப் பெருகுகின்ற பூஞ்சோலைகளையுடைய திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானின் சிவந்த திருவடிகளின்மீது,

விசயன் தானந்த நாளையில் சாத்திய மாலையும் தாள் விளங்க - பாரதப்போர் நடந்த காலத்தில், பதினான்காம் நாள் அர்ச்சுனன் அணிவித்த பூமாலையையும், உலகமளந்த காலத்தில் பிரமன் தன் கைக்கமண்டலதீர்த்தத்தால் திருவடிகளைக் கழுவச் சேர்ந்த,

வானம் தரும்கங்கை நன்னீரும் சென்னியில் வைக்கப்பெற்ற - ஆகாய கங்கையின் புண்ணிய தீர்த்தத்தையும் தனது தலையின்மீதுள்ள சடாமுடியில் தரிக்கப்பெற்ற,

ஆனந்தம் தானல்லவோ முக்கணான் மன்றுள் ஆடுவதே - மிக்க மகிழ்ச்சியினால் அல்லவா மூன்று கண்களையுடைய சிவபெருமான் திருச்சபையில் ஆனந்தநடனம் செய்வது.

திருவரங்கப் பெருமானின் திருவடிகளோடு தொடர்புடைய மாலையும் புண்ணிய தீர்த்தமும் சிவபெருமானை ஆனந்தத் தாண்டவம் ஆடச்செய்தன என்று ஆசிரியர் தன்கருத்தைக் கூறியுள்ளார்.

**அருச்சுனனுக்கு மாலை கிடைத்த கதை**

பாண்டவர் ஐவருள் வெற்றிபொருந்தியவனாக விளங்கியவன் அருச்சுனன். பாரதயுத்தத்தில் பதினான்காம் நாளில் அருச்சுனன் ஒரு அஸ்திரத்தைப் பெற வேண்டிச் சிவனை அருச்சிக்க விரும்ப, கண்ணன் அவனினைப்பை ஆற்றுகைக்காக, 'மலர்களை நமது காலிலே இடு' என்று அருளிச் செய்ய, அவனும் கண்ணனது திருவடிகளிலே இட்டு அருச்சிக்க, அன்றிரவில் பரமசிவன், அம்மாலையைத் தலையில் தரித்துக் கொண்டு தோன்றி, அந்த அஸ்திரத்தைக் கொடுத்தார் என்பர்.

இந்நிகழ்வை நம்மாழ்வார்,

தீர்த்தன் உலகளந்த சேவடிமேல் பூந்தாமம்
சேர்த்தி யவையே சிவன்முடிமேல் தான் கண்டு
பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை
பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே.
- (திருவாய்மொழி 2:8:6)

என்று தம் பாசுரமொன்றில் எடுத்தோதுகிறார்.

நந்துதல் - பெருகுதல், சேவடி - சிவந்த திருவடி, விசயன் - அருச்சுனன், முக்கணான் - சிவபெருமான், மன்று - சபை.

## இரங்கல்

(தலைமகளது உருவெளிப்பாடு கண்ட தலைமகன் இரங்குதல்)
எண்சீர் ஆசிரியவிருத்தம்.

46. ஆடும் படநா கணைமேல் அணையும்
அமலன் கமலத் தவனும் சிவனும்
நாடும் திருமால் துயில்கோ யிலின்வாய்
நறைவாய் பொழிலூ டுறைவார் அளகக்
காடும் குழையைச் சாடும் குவளைக்
கண்ணும் குதலைப் பண்ணும் கரியின்
கோடும் தரளத் தோடும் புருவக்
கோதண் டமுமே மூதண் டமுமே.

ஆடும் படநா கணைமேல் அணையும் அமலன் - படமெடுத்து ஆடுகின்ற ஆதிசேடனாகிய பாம்பின் படுக்கையில் மேல் பள்ளி கொண்டு அருளுகின்ற குற்றமற்றவனாகிய,

கமலத் தவனும் சிவனும் நாடும் திருமால் துயில் கோயிலின் வாய் - திருமாலின் நாபிக் கமலத்தில் அவதரித்த பிரமனும், சிவபெருமானும் எந்நாளும் விரும்புகின்ற எம்பெருமான் யோக நித்திரைக் கொண்டருளுகின்ற திருவரங்கப் பெரியகோயிலில்,

நறைவார் பொழிலூ டுறைவார் அளகக் காடும் - தேன் சொரிகின்ற மலர்ச் சோலையில் தங்குகின்ற மகளிரது கூந்தல் கற்றையும்,

குழையைச் சாடும் குவளைக் கண்ணும் கதலைப் பாண்ணும் - காதோடு மோதுகின்ற கருங்குவளை மலர்ப்போன்ற கண்களும் இசைப்பண் போன்ற இனிய மழலை மொழியும்,

கரியின் கோடும் தரளத் தோடும் - யானையின் தந்தங்களை ஒத்த தனங்களும் முத்துக்களாலான காதணியான தோடும்,

புருவகோ தண்டமுமே மூதண் டமுமே - வில் போன்ற வளைந்த புருவங்களும் ஆகிய இவையே பழமைமிகு இந்த அண்டகோளம் முழுவதிலும் நிறைந்துள்ளன.

தலைவன் ஒருவன் சோலையிடத்துத் தலைமகளைக் கண்டு மையல் கொள்ளுகிறான். பின்னர் அவளது உருவ எழிலை உருவெளித் தோற்றத்திலே கண்டு இரங்கிக் கூறியது.

ஒரு பொருளின் மீது கொண்ட பெருவிருப்பத்தினால், அப்பொருள்மீது தம்மனதை முழுமையாகச் செலுத்த, அப்பொருள் எங்கும் நிறைந்து கண்ணெதிரே தோன்றுவதுபோல் தெரிவது இயல்பு. இப்பாடலில், திருவரங்கப் பெரிய கோயிலின் சோலையில் தலைவியைக் கண்டு மையல் கொண்ட தலைவன், தன்னால் விரும்பப் பட்ட தலைமகளது தோற்றம் எங்கும் தெரிவது கண்டு இரங்கிக் கூறுவதாக அமைந்துள்ளது.

நம்மாழ்வாரின் பாசுரம் ஒன்றில் இத்தகைய உருவெளிப்பாடு அமைந்து காணப்படுகிறது. தலைவனின் கண்ணழகில் ஈடுபட்ட தலைவி, அக்கண்களின் அழகினை வியந்து தோழியிடம் கூறுவதாக அமைந்த அப்பாசுரத்தில், அலைகள் பொங்கி எழுகின்ற கடல்சூழ்ந்த இவ்வுலகத்திற்குத் தலைவனும், தேவர் உலகத்திற்குத் தலைவனும், நல்லோர்களுக்குத் தலைவனும், கரியமேனியை உடையவனுமாகிய எம்பிரானது திருக்கண்கள், நீலநிறமான அகன்ற பெரிய மலையின் மேலே செந்தாமரை மலர்ந்துள்ள பூம்பொய்கைகள் விளங்குவது போன்று எனக்கு எல்லா இடங்களிலும் தெரிகின்றன என்கிறார்.

“நீலத் தடவரைமேல் புண்டரீக நெடுந்தடங்கள்
போல பொலிந்தெமக்கு எல்லா விடத்தவும் பொங்குமுந்நீர்
ஞானப் பிரான் விசும்புக்கும் பிரான்மற்றும் நல்லோர்பிரான்
கோலங் கரியபிரான் எம்பிரான் கண்ணின் கோலங்களே”
- (இயற்பா - திருவிருத்தம் : 39)

என்பது அப்பாசுரமாகும்.

மதுரைக் கலம்பகத்தில் இத்தகைய உருவெளிப்பாடு அமைந்த பாடல் அமைந்துள்ளது. தலைவன் தன்வினையை செப்பமுறச் செய்து மீண்டும் வருகிற பொழுது, இடைவழியில் தலைவியின் உருவெளித் தோற்றத்தைக் கண்டு, தேர்ப்பாகனிடம், ‘மதுரை சொக்கநாதரின் மலையிலுள்ள, எழு குதிரைகளையுடைவனான கதிரவனும்

விரும்பும்படியான அழகிய தேரினைச் செலுத்தும் பாகனே ! இந்த இடம் கொடிய வெப்பத்தினையுடைய பாலைநிலமன்றே ! எல்லாவிடத்தும் கரும்பையும் தெங்கின் இளங்காயையும் காண்பாயாக" என்கிறான் தலைவியின் இனிமையும் உருவத்தையும் எண்ணுதலினால் அவ்வாறு கூறுகிறான் தலைவன். இதனை,

"வரும்புண் டரீக மிரண்டாலலொர் கல்லுமென் வன்னெஞ்சமா
மிரும்புங் குழைத்த மதுரைப் பிரான்வெற்பி லேழ்பரியோன்
விருபுந் தடமணித் தேர்வல வாவெஞ் சுரமிதன்றே
கரும்புங் கனியு மிளநீரும் பாரெங்குங் கண்களினே"

- (மதுரைக்கலம்பகம் : 84)

ஆடும் – படமெடுத்தாடும், நாகணை – பாம்பணை, அணையும் – பள்ளி கொள்ளும், கமலத்தவன் – பிரமன், அளகம் – கூந்தல், கரியின் கோடு – யானையின் தந்தம், தரளம் – முத்து, மூதண்டம் – பழமையான அண்டகோளம்.

## கைக்கிளை

எழுசீர் ஆசிரிய விருத்தம்

47. அண்டம்முழு துண்டவர் உமிழ்ந்தவர் இடந்தவர்
அறந்தவர் வளர்ந்தருளமா
சண்டபண ஐந்தலை அனந்தசய னம்திகழ்
தரும்திருவ ரங்கர் வரைமேல்
கண்டதொரு கொம்பதில் இரண்டுமக ரங்களொடு
கஞ்சமிரு வெஞ்சி லைமணம்
கொண்டதொரு கொண்டலிடு செண்டையொரு தொண்டையிரு
கும்பமொரு செம்ப ணிலமே.

அண்டமுழு துண்டவர் உமிழ்ந்தவர் இடந்தவர் அளந்தவர் – பிரளயகாலத்தில் அனைத்து உலகங்களையும் காக்கும் பொருட்டுத் தன் திருவயிற்றில் கொண்டு பின் வெளிக்கொணர்ந்தவரும் வராக அவதாரத்தில் கோட்டால்

பூமியைக் குத்தி எடுத்தவரும், திருவிக்கிர அவதாரமெடுத்து வாமனனாக மூவடி மண்கேட்டு மூவுலகையும் அளந்தவரும்,

வளர்ந்தருளும் மாசண்ட பண ஐந்தலை அனந்தசயனம் - பெரிய கொடிய படங்களை உடைய ஐந்து தலைகளைக் கொண்ட பாம்பான ஆதிசேடனாகிய திருப்பள்ளி மெத்தையில் திருக்கண் வளர்நது அருளுகின்ற,

திகழ்தரும் திருவரங்கர் வரைமேல் கண்டதொரு கொம்பதில் - பொலிவுடன் விளங்குகின்ற திருவரங்கராகிய மலைமேல் இளவஞ்சியாகிய கொம்பொன்று காணப்படுகின்றது.

இருமகரங்களொடு கஞ்சமிரு வெஞ்சிலை - அதில் இரண்டு முதலைகளும், ஒரு தாமரை மலரும், இரண்டு வளைந்திருக்கக் கூடிய விற்களும்,

மணம் கொண்டதொரு கொண்டல் இரு கொண்டை - வாசனைப் பொருந்தியதாகிய ஒரு மேகமும் இரண்டு கெண்டை மீன்களும்,

ஒரு தொண்டை இரு கும்பமொரு செம்பணிலமே - ஒரு கொவ்வைக் கனியும் இரண்டு குடங்களும் ஒரு சிவந்த சங்கும் அமைந்துள்ளன.

இப்பாடலில், தலைவியின் அழகைக் கண்டு வியந்து, தலைவன் அவளது எழிலை நயம்பட உரைப்பதாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது. மலை பேன்ற எம்பெருமானிடத்தே பூங்கொம்பு போன்றவளாகத் திருமகள் காணப்படுவதாக ஆசிரியர் உருவம் செய்துள்ளார்.

தலைமகளின் உருவம் பூங்கொம்பாகவும் முகம் தாமரை மலராகவும், காதில் அணிந்திருக்கக் கூடிய மகரக் குழைகள் இரு மகரங்களாகவும், வளைந்த இரு புருவங்களும் இரு விற்களாகவும், கூந்தல் மனம் பொருந்திய மேகமாகவும் கண்கள் இரண்டும் இரண்டு கெண்டை மீன்களாகவும், இதழ்கள் கொவ்வைக் கனியாகவும், தனங்கள் இரண்டும் இரண்டு குடங்களாகவும், கழுத்து,சிவந்த சங்காகவும் உருவகப் படுத்துப்பட்டுள்ளன.

இப்பாடல் புதிர் அமைப்பை உடையதாக விளங்குகிறது எனலாம். அண்டம் முழுதும் உண்வர், உமிழ்ந்தவர், இடந்தவர், அளந்தவர்,

ஐந்தலை நாகத்தில் உறங்குபவர் யார்? திருவரங்கர் என கேள்வியும் விடையுமான விடுகவிதை எனலாம். அடுத்து வரும் ஒரு கொம்பு, இரண்டு மகரம், ஒரு கஞ்சம், ஒரு வெஞ்சிலை, ஒரு மணம் உடைய மேகம், இரு கெண்டை, ஒரு தொண்டை, இரு கும்பம், ஒரு செம்பணிலம் (சிவந்த சங்கு) அது யார் ? என்பதை விடுகவிதையாக எண்ணிக் காணும் பொழுது திருமகள் என்ற விடையைக் கூற முடியும். திருமகள் என்ற விடையைக் காண உதவுவதாக அமைவது திருவரங்கராகிய மலையின்மீது ஒரு கொம்பு அமைந்திருப்பதும் அதன் தொடர்பானதாகப் பிற பொருட்கள் கூறப்பட்டிருப்பதாகும். இங்குத் தலைவனுடைய சிறப்புகளை எடுத்தோதவும் தலைவியினுடைய அழகை தலைவன் வியந்துரைக்கவும் புது உத்தியை பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறியுள்ள நயம் இன்புறத் தக்கதாகும்.

இப்பாடலில், திருமால், பிரளய காலத்தில் இவ்வுலகங்களைத் திருவயிற்றில் வைத்து நோக்கியும், பிரளயம் முடிந்தபிறகு உமிழ்ந்து வெளிப்படுத்தியதையும், வராக அவதாரம் எடுத்து கடலினுள் கிடந்த பூமியைத் தோண்டி எடுத்ததையும் மாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்ணை யாசித்துப் பெற்று அளந்து கொண்டதையும் கூறி, எம்பெருமானின் அருளிச் செயல்களைக் காட்டியுள்ளார் ஐயங்கார்.

முன்னொரு காலத்தில் பிரளயம் ஏற்பட்ட பொழுது அடியார்களுக்கும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அருள் செய்து உலகங்கள் ஏழினையும் திருவயிற்றில் வைத்து வெளிப்படுத்தினார் என்பதை,

"மறங்கிளர்ந்து கருங்கடல்நீர் உரம்துரந்து
பரந்தேறி அண்டத் தப்பால்
புறம்கிளர்ந்த காலத்துப் பொன்னுலகம்
ஏழினையும் ஊழில் வாங்கி
அறம்கிளர்ந்த திருவயிற்றின் அகம்படியில்
வைத்தும்மை உய்யக் கொண்ட
நிறம்கிளர்ந்த கருஞ்சோதி நெடுந்தகையை
நினையாதார் நீசர் தாமே."

- (பெரிய திருமொழி 11:6:8)

என்று இதனை அழகாகவும் விரிவாகவும் திருமங்கையாழ்வார் எடுத்துரைப்பர்.

வராக அவதாரச் செய்தியினைப் பத்தாம் பாடலின் உரையில் காணலாம். மாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்ணைப் பெற்ற கதையை இருபத்து ஒன்பதாம் பாடலின் உரையில் காணலாம்.

அண்டம் - உலகம். உண்டவர் - திருவயிற்றில் கொண்டவர், உமிழ்ந்தவர் - வெளியேற்றியவர், இடந்தவர் - குத்தியவர், அளந்தவர் - உலகைத் தன் திருவடிகளால் அளந்தவர், கண்ட - கொடிய, பண - படம். வரை - மலை. கொம்பு - பூங்கொம்பு, இளவஞ்சி, மகரம் - முதலை, தொண்டை - கொவ்வை, கும்பம் - குடம், செம்பணிலம் - சிவந்த சங்கு.

## கார்காலம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

48. செம்பொன் அரங்கத் தரங்கநீர்ச்
சீதள சந்திர வாவிசூழ்
கம்பு ளுடன்பயில் நாரைகாள்!
காதலை என்சொலி ஆறுவேன்
வெம்பனி வந்தது வந்தபின்
வேனிலும் வந்தது வேனில்போய்ப்
பைம்புயல் வந்தது சென்றாம்
பாதகர் வந்திலர் காணுமே.

செம்பொன் அரங்கத் தரங்கநீர்ச் சீதள - சிவந்த பொன்னால் செய்யப்பட்டுள்ள, திருவரங்கப் பெரியகோயில் அமைந்துள்ள திருவரங்கத்தில் உள்ள அலைகளையுடைய நீரைக் கொண்ட குளிர்ந்த சந்திரபஷ்கரிணி பொய்கையினை,

சூழ் கம்புளுடன் பயில் நாரைகாள் - சூழ்ந்திருக்கக் கூடிய நீர்ப் பறவைகளோடு பழகுகின்ற நாரைகளே !

காதலை என்சொலி ஆறுவேன் - தலைவன் பிரிந்து சென்றமையால் எனக்கு ஏற்பட்டுள்ள காதல்நோயை என்ன சொல்லி தணித்துக் கொள்வேன்.

வெம்பனி வந்தது வந்தபின் வேனிலும் வந்தது - கொடிய பனிக்காலம் வந்தது. பிறகு கோடைக்காலமும் வந்தது.

வேனில் போய்ப் பைம்புயல் வந்தது – கோடைக்காலம் சென்றபிறகு, (தலைவன் திரும்பி வருவதாகக் கூறிச்சென்ற, பசுமையையுடைய கார்காலம் வந்தது.)

சென்றாம் பாதகர் வந்திலர் காணுமே – (அவ்வாற கார்காலம் வந்த பிறகும்) என்னை விட்டுப் பிரிந்து சென்று, எனக்குப் பெரிய தீவினையைச் செய்துள்ளவராகிய (பிரிவாற்றாமையாகிய துன்பத்தை அளித்த) தலைவர் இன்னும் வந்து சேரவில்லை.

கார்காலம் வந்ததும் திருப்பி வருவேன் என்று கூறிச் சென்ற தலைவன் வராமையால், பிரிவாற்றாதவளாகிய தலைவி நாரைகளிடம் தன்நிலையைக் கூறுவதாக ஆசிரியர் இப்பாடலை அமைத்துள்ளார்.

தலைவன் பொருளீட்டுதலின் பொருட்டு வேற்றுப்புலம் சென்றான். அங்ஙனம் செல்லும் பொழுது, மழை பொழியும் கார்காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிச் சென்றான். பனிக்காலம் வந்தது. அதன்பிறகு கோடைகாலம் வந்தது. அதன் பின் தலைவன் வருவதாகக் கூறி சென்ற கார்காலம் வந்தது. தலைவன் அப்பொழுது வராதது கண்டு தலைவி மிகுந்த துன்பமுற்றாள். பிரிவுத்துயரை ஆற்றாதவளாகி, திருவரங்கப் பெருமாள் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெரியகோயிலில் சந்திர புஷ்கரணியினைச் சூழ்ந்துள்ள நீர்ப்பறவைகளுடன் பழகும் நாரைகளைக் கண்டு, தன் பிரிவாற்றாமையைக் கூறி வருந்துகின்றாள்.

'பாதகர்' என்பதற்குத் தீவினையை உடையவர் என்பது பொருள். தன்மீது இரக்கம் சிறிதும் இன்றி, பிரிந்து சென்றமையாலும், தான் சென்ற காலத்தில் திரும்பி வராமையாலும் சினத்தால் தலைவி, தலைவனைப் பாதகர் என்கிறாள்.

"சிவனை முழுதும் மறவாத சிந்தையான்
செயமுன் உறவு தவிராத நந்தியூர்க்
குவளை மலரின் மதுவாகும் வண்டுகாள்!
குமிழி சுழியில் விளையாடு தும்பியே!
அவனி மழைபெய் குளிர்காலம் வந்ததே
அவரும் அவதி சொனநாளும் வந்ததே
கவலை பெரிது பழிகாரர் வந்திலார்
கணவர் உறவு கதையாய் முடிந்ததே."

– (நந்திக் கலம்பகம் :101)

என்ற நந்திக்கலம்பகப் பாடலில் தலைவி, 'பழிகாரர் என்று தலைவனைக் குறிப்பிடுவது ஒப்பு நோக்கத் தக்கது.

செம்பொன் - சிவந்த பொன், தரங்கம் - அலை, கம்புள் - நீர்ப்பறவை. ஆறுவேன் - தணிவேன். வெம்பனி - கொடிய பனிக்காலம். வேனில் - வெயில்காலம். பைம்புயல் - பசிய கார் காலம். பாதகர் - தீவினை உடையவர்.

**சம்பிரதம்**

பன்னிருசீர் விருத்தம்

49. காணாத புதுமைபல காட்டுவன் கட்செவிகள்
எட்டை யும்எடுத் தாட்டுவன்
கடல்பருகு வன்பெரிய கனகவரை யைச்சிறிய
கடுகினில் அடைத்து வைப்பன்
வீணாரு வாரமுதண் டமுறவிளை விப்பன்இர
வுபகல்மா றாட்டுவன் என்றால்
விண்ணையும் மறைப்பனெழு மண்ணையும் எடுப்பனிவை
விளையாடும் வித்தை யன்றால்.
நீணாக ணைப்பள்ளி யுடன்திருவ ரங்கத்தில்
நெடுதூ ழிதுயி லும்பிரான்
நெற்றிக்க ணானவனை வாசவனை நான்முகனை
நிமிருமிரு சுடரை முதலாய்ச்
சேணாடர் யாவரையும் அடிமைகொண் டவரவர்
சிரத்தினில் பொறித்து விட்ட
திருச்சக்க ரப்பொறியி லாதவொரு கடவுளைத்
தேடி இனிமுன் விடுவனே.

காணாத புதுமைபல காட்டுவன் - இதுவரை யாரும் காணாத பல வியக்கத்தகு செயல்களைச் செய்து காண்பிப்பேன்.

கட்செவிகள் எட்டையும் எடுத்தாட்டுவன் - அட்டமகா நாகங்கள் எனப்படும் எட்டு நாகங்களையும் அச்சமின்றி கைகளினால் பற்றி ஆட்டுவேன்.

கடல் பருகுவன் பெரிய கனக வரையைக் கடுகினில் அடைத்து வைப்பவன் - ஏழு கடல்களில் உள் நீரையும் குடிப்பேன். பெரியதாக விளங்கும் பொன்போல் பொலிந்திருக்கும் மேரு மலையை ஒரு சிறிய கடுகுக்குள் அடங்கும்படியாகச் செய்து வைப்பேன்.

வீணார வாமூ தண்டமுற விளைவிப்பன் - வீணான பேரொலியை பழமைமிகு அண்டங்களில் எல்லாம் ஒலிக்கும்படிச் செய்வேன்.

இரவுபகல் மாறாட்டுவன் என்றால் விண்ணையும் மறைப்பன் - இரவைப் பகலாகவும் பகலை இரவாகவும் மாற்றிக் காட்டுவேன். ஆகாயம் முழுவதையும் மறைப்பேன்.

எழுமண்ணையும் எடுப்பனிவை விளையாடும் வித்தையன்றால் - ஏழு உலகங்களையும் கைகளில் எடுப்பேன். இவை அனைத்தும் விளையாட்டாகச் செய்யும் மாயா ஜால வித்தைகள் அல்ல.

நீணாக ணைப்பள்ளியுடன் திருவரங்கத்தில் நெடுதூழி - திருவரங்கத்தில் எழுந்தருளி, நீண்ட ஆதிசேடனாகிய திருப்பள்ளி மெத்தையின்மீது மிக நீண்ட காலமாய்,

துயிலும் பிரான் நெற்றிக்க ணானவனை வாசவனை நான்முகனை - யோக நித்திரையில் உள்ள எம்பிரான், நெற்றிக் கண்ணைக் கொண்ட சிவபெருமானையும், இந்திரனையும், நான்முகனையும்

நிமிருமிரு சுடரை முதலாய்ச் சேணாடர் யாவரையும் - கிளர்ந்தெழுகின்ற இரு சுடர்களான சூரிய சந்திரர்கள் முதலான தேவர்கள் அனைவரையும்,

அடிமைகொண் டவரவர் சிரத்தினில் பொறித்துவிட்ட - தன் அடிமைகளாக ஏற்றுக் கொண்டு அவரவர் நெற்றியில் அடையாளம் செய்து வைத்த,

திருச்சக்கரப் பொறியிலாதவொரு கடவுளை - அழகிய சக்கர முத்திரை இல்லாத ஒரு இறைவனை

தேடி இனிமுன் விடுவனே - தேடிக்கொண்டு வந்து உங்கள் முன் விடுவேன் (இதுவே சிறந்த இந்திர ஜாலம் முதலிய மாய வித்தையாகும். )

'சம்பிரதம்' கலம்பக உறுப்புகளுள் ஒன்றாக விளங்குவது. இந்திரஜாலம் முதலான மாயவித்தைகளைக் குறிப்பது இது. மாயவித்தைகளில் வல்லவனான ஒருவன், தான் செய்யும் மிகப் பெரிய வித்தைகளெல்லாம் மாயவித்தைகள் அல்ல என்றும் இவ்வுலகில் கடவுளர் முதலான தேவர்கள் அனைவரும் திருவரங்கப் பெருமானுக்கு அடிமைகளாக் விளங்கி, அவர்தம் தலைகளில் சக்கர முத்திரையைப் பெற்றவர்கள். ஆதலின் அத்தகைய சக்கர முத்திரையைப் பெற்றிராத தெய்வத்தைத் தேடிக் கொண்டு வந்து முன்னே விடுவதே சிறந்த மந்திரஜால வித்தை என்று கூறுவதாக அமைத்துள்ளார் ஆசிரியர்.

"மட்டறுக டற்புவிய னைத்துமொரி மைப்பினின்ம
றைத்துடன்வி டுத்தி டுவனேற்
றெட்டுவரை யைக்கடலை முட்டியுள டக்கிடுவேன்
இத்தனையும் வித்தை அலவால்
துட்டமத னைப்பொடிப டுத்திமது ரைக்குளுறை
சொக்கரகுணம் எட்டு னொடுமா
சிட்டர்களது தித்திடும கத்துவம னைத்துமொரு
செப்பினுள் அடக்கி டுவனே"
- (மதுரைக்கலம்பகம் : 81)

என்ற பாடல், இப்பாடலோடு ஒப்புநோக்கத்தக்கது.

கட்செவி - கண்களையே காதுகளாகக் கொண்ட பாம்பு, அட்டமா நாகங்கள் - வாசுகி, அநந்தன், தக்ஷகன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்கோடகன். இவை முறையே கிழக்கு முதலிய எட்டுத் திக்குகளிலும் நின்று அனந்தாழ்வானுக்குத் துணையாய்ப் பூமியைத் தாங்குவன.

## ஊர்

### எண்சீர் விருத்தம்

50. முன்னம்ஏழ் புரவிவான் இரவிவான் வெயிலினால்
முத்தரும்பி யதகலா முழுமதித் திருமுகத்
தன்னமே ! இன்னமோர் காவதம் போதுமேல்
அகலுமிப் பாலைஅப் பாலரைக் காவதம்
என்னையா ளுடையவன் துயிலரா அமளியும்
இலகுபொற் கோயிலும் இந்துவின் பொய்கையும்
புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரப்
பூவிரித் துறையுமக் காவிரித் துறையுமே.

முன்னம்ஏழ் புரவிவான் இரவிவான வெயிலினால் - கண்ணெதிரில் ஏழுவண்ணக் குதிரைகளையுடைய வானில் தெரியும் சூரியனால் வான்முழுதும் பரந்து நிறைந்த வெயில் எறித்தலால்,

முத்தரும்பிய தகலா முழுமதித் திருமுகத் தன்னமே ! - முத்துக்கள் போல வியர்வை அரும்பி நிற்கின்ற பூரண சந்திரனைப் போன்ற அழகிய முகத்தையுடைய அன்னம் போன்றவளே !

இன்னமோர் காவதம் போதுமேல் அகலுமிப் பாலை - இன்னம் ஒரு காததூர வழியைக் கடந்து செல்வோமாயின், இப்பாலை நில வழியானது நீங்கிவிடும்.

அப்பால் அரை காவதம் என்னை யாருடையவன் துயில் - அதன் பின்னர் அரைகாத தூர வழியைக் கடந்து சென்றால், என்னைத் தன் அடிமையாக ஏற்றுக் கொண்டுள்ள திருவரங்கப் பெருமான் யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கும்,

அரா அமளியும் இலகுபொற் கோயிலும் இந்துவின் பொய்கையும் - ஆதிசேடனாகிய பள்ளி மெத்தையும் பொலிவு பெற்று விளங்குகின்ற திருவரங்கப் பெரிய பொன் மயமானக் கோயிலும், சந்திரபுஷ்கரிணி பொய்கையும்,

புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரம் - புன்னை மரத்தின் நிழலும், மதிலும், வண்டுகள்,

பூவிரித் துறையும்அக் காவிரித் துறையுமே – மலர்களின் மேல் அமர்ந்து விரித்து அவற்றில் தங்கி தேனைப் பருகுகின்ற காவிரித் துறையும் உள்ளன (எனவே, தளர்வு இன்றி நடக்க வேண்டும்)

தலைமகன், தலைமகனைப் பாலைநில வழியில் செல்லும்பொழுது வெயிலால் மிகவும் வருந்தி இளைப்புற்ற நிலையினைக் கண்டு, அவளுக்கு நடைகளைப்புத் தோன்றாமல் இருக்க, தான் போகுமிடம் அருகில் உள்ளது என்பதை உணர்த்தியது.

"மணிபொன் சொரியுங்கை வானவன்தென் மாறை மருவினர்போல்
தணிபொன் சொரியுந் தடமுலை யாயுயர் சந்தமுந்தி
அணிபொன் சொரி மருவியெஞ் சார லகத்தவர்தேங்
கணிபொன் சொரியுநின் சாரல்மென் காந்தளம் கையத்தே"

– (துஞ்சை வாணன் கோவை :25)

என்ற பாடல், இப்பாடலோடு ஒப்புநோக்கத் தக்கது.

நீர்வளமுள்ள மருதநிலத்து வாழும் அன்னப்பறவை போன்ற இத்தலைவிக்கு இந்தக் கொடிய பாலை வருத்தத்தை விளைவிக்கும் என்பது தோன்ற 'இரவிகாய் வெயிலனான் முத்தரும்பிய கலாமுழுமதித் திருமுகத்தன்னம்' என்றான் அப்பால் அரைகாவதம் சென்றவாறே அங்கு அன்னத்துக்கு உவப்பாகிய சந்திர புஷ்கரிணி காவிரியாற்றுத்துறை முதலிய இருப்பதையும் கூறியதும்[17] இங்கு எண்ணத்தக்கது.

முன்னம் – எதிரில், புரவி – குதிரை, காய்தல் – எறித்தல், கலாமுழுமதி – கலைகள் நிறைந்த பூரணசந்திரன், காவதம் – காதம், அமளி – படுக்கை, இந்துவின் பொய்கை – சந்திர புஷ்கரணி, புரிசை – மதில், மதுகரம் – வண்டுகள்.

17. திருவரங்கக் கலம்பகம் – (மூவர் உரை), பக்.80

## [தோழி தலைமகனது இரவுக்குறி விலக்கல்]

கட்டளைக் கலித்துறை

51. துறைமதி யாமலிக் கான்யாறு நீந்திச் சுரங்கடந்த
நிறைமதி யாளர்க் கொழுக்கமன் றானெடு மாலரங்கத்
திறைமதி யாவரும் ஆரா அமிர்தன்ன இந்துநுதல்
குறைமதி யாள்பொருட் டால்கங்குல் வாரலெங் கொற்றவனே!

துறைமதி யாமலிக் கான்யாறு நீந்திச் சுரம்கநடந்த - செல்லும் வழியைப் பற்றி நன்கு ஆராய்ச்சி செய்யாமல், இந்தக் காட்டாற்றை நீந்திக் கடந்து, கொடிய காடுகளைத் தாண்டி வருதல்

நிறைமதி யாளர்க் கொழுக்கமன் றானெடு மாலரங்கத்து - நிறைந்த அறிவினைப் பெற்றவர்க்கு நல்லொழுக்கமாகக் கருதப்படுவது அன்று. ஆகையால் நீண்ட திருவரங்கப் பெரியகோயிலில்,

இறைமதி யாவரும் ஆரா அமிர்தன்ன - கடையாமலேயே தோன்றிய தெவிட்டதாத அமிர்தத்தை ஒத்த எம்பெருமான்,

இந்து நுதல் குறைமதியாள் பொருட்டால் கங்குல் வாரலெங் கொற்றவனே - பிறைச் சந்திரனைப் போன்ற ஒளிபொருத்திய நெற்றியையுடைய இத்தலைவியின் அச்சத்தைப் போக்கும் பொருட்டுத் தலைவனே! நீ இரவில் வருவதை ஒழிப்பாயாக.

இயற்கைப் புணர்ச்சி பெற்ற தலைமகன். தலைமகளைத் தோழியின் உதவியுடன் இரவிலும் பகலிலும் களவு நெறியில் தனிமையில் சந்தித்தல் இயல்பு. அங்ஙனம் ஒரு நாள் இரவுக் குறியிடத்துத் தலைவனையும் தலைவியையும் ஒருவரை ஒருவர் சந்திக்கச் செய்த தோழி, தலைமகன் வரும் நெறியின் தன்மையையும், அதனால் தலைவி அடையும் துயரத்தையும் கூறி, இனி, இரவு நேரத்தில் வருவதைத் தவிர்த்தல் வேண்டும் என்று உரைக்கிறாள்.

துறை - செல்லும்வழி. கான்யாறு - காட்டாறு, சுரம் - காடு, குறைமதி - பிறைச்சந்திரன்.

## மறம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

52. கொற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா!
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலமென் றறியாய் போலும்
மற்றதுதான் திருமுகமே யானால் அந்த
வாய்செவிகண் மூக்கெங்கே மன்னர் மன்னன்
பெற்றஇள வரசானால் ஆவின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்கப் பேசு வாயே.

கொற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா! - வெற்றியை உடைய வேந்தனது திருமடலைக் கொண்டு வந்துள்ள தூதுவனே!

குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய் - தலையற்ற குறை உடலுக்கோ வேடர்களின் பூங்கொம்பைத் திருமணம் செய்துத் தரும்படி கேட்டாய்!

அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன் - இருவகையான பற்றுகளையும் முற்றும் துறந்து முனிவர்களுக்கெல்லாம் அடைக்கலம் தருகின்ற திருவரங்கப் பெருமானின் (இராமாவதாரத்தில்) தோழனான வேட்டுவர் தலைவனான குகப்பெருமான்,

அவதரித்த திருக்குலமென் றறியாய், போலும் - பிறந்த வேட்டுவக் குலத்தில் தோன்றியவர்கள் நாங்கள் என்பதை அறியவில்லை போலும்.

மற்றதுதான் திருமுகமே ஆனாலந்த வாய்செவிகண் மூக்கெங்கே! - அதனைவிடுத்து, நீ கொண்டு வந்தது மன்னனின் அழகான முகமானால் மற்று அந்த முகத்திற்கு உரிய

உறுப்புகளாகிய வாய், செவி, கண், மூக்கு முதலான உறுப்புகள் எங்கே !
மன்னர் மன்னன் பெற்றஇள வரசானால் - மன்னாது மன்னன் பெற்ற இளவரசராக இருப்பாரானால்,
ஆலின்கொம்பைப் பிறந்த குலோத்துக் கேற்கப் பேசுவாயே ! ஆல மரத்தின் கிளையைக் குலத்திற்கு ஏற்பப் பேசுவாயாக

தன் மகளைப் பெண் கேட்டு வரும்படி மன்னனால் அனுப்பப்பட்ட தூதுவனிடம், அம்மன்னனுக்குத் தன் மகளை மணம் செய்து கொடுக்க மறுப்பதோடு, இகழ்வாகப் பாடுவது 'மறம்' என்னும் உறுப்பின் இலக்கணமாகும்.

இதனைப் பறப்பொருள் வெண்பமாலையில் 'மகட் கொடை மறுத்தல்' என்ற துறையாக அமைத்துக் கூறுவர்.

"வெம்முரணான் மகள் வேண்ட
அம்மதிலோர் மறுத்துரைத் தன்று"

என்பது இதன் இலக்கணம்.

"ஒள்வாள் மறவர் உருத்தெழுந் தும்பர்நாட்
கள்வர் நறுங்கோதை காரணமாக் - கொள்வான்
மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடு
கருங்கண்ணி வெண்கட்டூற் கால்.[18]

என்பது அதற்குரிய பாடலாகும்.

திருவரங்க நாதனுக்கே உரிமை பூணுபவளான தமது மகளை மணம் பேசும்படி ஓர் அரசனால் ஓலை கொடுத்து அனுப்பப்பட்ட தூதன், அவ்வரசன் கட்டளைப்படி தம்பக்கல் வந்து ஓலை, கொடுத்துச் சிலவார்த்தை கூறி மணம் பேசுவானாக, அம்மகட்கு உரியார் மிகக் கோபம் கொண்டு அந்த மணப்பேச்சை மறுத்து அவ்வரசனைக் குறித்துக் பரிகசித்துக் கூறினரென்க. திருவரங்க நாதனுக்கே அடிமை பூண்ட எமது

..........................................................................................

18. புறப்பொருள் வெண்பாமாலை, நொச்சித்திணை : 9

உயிர் பிறிதொரு கடவுளர்க் கேனும் மானிடர்க்கேனும் உரிமை பூணாது என்று, அங்ஙனம் பிறர்க்கு ஆட்படுத்த முயல்வாரை நோக்கி ஐயங்கார் கடிந்து கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறை பொருள்[19] என்பது மூவர் உரையில் கூறும் விளக்கமாகும்.

இப்பாடலில், 'கொற்றவன் தன் திருமுகம் என்பது மன்னன் அனுப்பிய திருமடல் எனவும், மன்னனினுடைய திருமுகம் எனவும், இரு பொருள்படும். மன்னனுடைய திருமுகம் என்ற பொருளில் மன்னனுடைய திருமுகத்தை இங்கே கொண்டு வந்து விட்டதால் தலையில்லாத குறையை உடலுக்கா வேடர்களின் பெண்ணைத் திருமணம் செய்து தருமாறு கேட்டாய் என்கிறான். மேலும், மன்னனுடைய 'திருமுகம் என்றால், மன்னனின் வாய், செவி, கண், மூக்கு முதலானவை எங்கே என்று இகழ்கிறான். 'மன்னர் மன்னன் பெற்ற இளவரசு' என்பது மன்னர் மன்னன் பெற்றெடுத்த இளவரசன் எனவும், மன்னர் மன்னன் பெற்ற இளமையான அரச மரம் எனவும் பொருள்படும். மன்னர் மன்னர் பெற்ற இளமையான அரச மரம் என்ற பொருளில், இளமையான அரச மரத்திற்கு அதன் இனத்தைச் சேர்ந்த ஆலமரத்தைப் பெண் கேட்டுப் பேசுவாயே என்கிறான் மறவன்.

**மறம்**

**பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்**

53. பேச வந்த தூத செல்ல
 ரித்த வோலை செல்லுமோ!
பெருவ ரங்கர் அருள ரங்கர்
 பின்னை கேள்வன் தாளிலே
பாசம் வைத்த மறவர் பெண்ணை
 நேசம் வைத்த முன்னமே
பட்ட மன்னர் பட்ட தெங்கள்
 பதிபு குந்து பாரடா
வாச லுக்கி டும்ப டல்க
 வித்து வந்த கவிகைமா
மகுட கோடி தினைய ளக்க
 வைத்த காலு நாழியும்

19. திருவரங்கக் கலம்பகம் (மூவர் உரை) ப.82

வீசு சாம ரங்கு டில்தொ
டுத்த கற்றை சுற்றிலும்
வேலி யிட்ட தவர்க ளிட்ட
வில்லும் வாளும் வேலுமே.

பேசவந்த தூத ! செல்லரித்த ஓலை செல்லுமோ – (உன் மன்னனுக்குப் பெண்கேட்டு, மறவனாகிய என்னிடம்) திருமணம் பேசுவதற்கு வந்திருக்கின்ற தூதனே ! உன்னிடம் உள்ள கரையான்களால் அரிக்கப்பட்ட திருமுகமாகிய ஓலை என்னால் மதிக்கப்படுமா ?

பெருவரங்கர் அருளரங்கர் பின்னைகேள்வன் தாளிலே – திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கக் கூடிய பெருமான் அடியார்களுக்குப் பெரிய வரங்களை அருளுபவன்; நம்பின்னையின் கணவராகிய அவ்வரங்கப் பெருமானுடைய திருவடிகளிலே,

பாசம் வைத்த மறவர் பெண்ணை நேசம் வைத்து – அன்புகொண்ட வேட்டுவக்குலப் பெண்ணாகிய எங்கள் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள ஆர்வம் கொண்டு,

முன்னமே பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா – முன்பு தோல்வியுற்ற மன்னர் பட்ட பாட்டினை எங்களுடைய வீடுகளில் வந்து காண்பாயாக.

வாசலுக் கிடும்படல் கவித்தவந்த கவிகைமா – எங்கள் வீட்டு வாசலில் வைத்துள்ள மறைப்புத்தட்டி, பகை மன்னர்களுக்குக் கவிக்கப்பட்ட வெண்கொற்றக் குடைகளாகும்.

மாமகுடகோடி திணையளக்க வைத்தநாலு நாழியும் – அம்மன்னர்களின் தலையில் சூட்டப்பட்டிருந்த கோடிக் கணக்கான பெரிய மணிமகுடங்கள் (எங்கள் வீடுகளில்) தினையளக்க வைத்த மரக்கால், நாழி முதலான முகத்தல் அளவைக் கருவிகளாகும்.

வீசுசா மரங்குடில் தொடுத்த கற்றை சுற்றிலும் – அம்மன்னர்களுக்குப் பக்கத்தில் இருந்து வீசப்பெற்ற சாமரங்கள் குடிசைக்கு மேல் பொருத்தப்பட்டுள்ளன. எங்கள் வீட்டைச் சுற்றி,

வேலியிட்ட தவர்களிட்ட வில்லும்வாளும் வேலுமே – வேலியாக அமைக்கப்பட்டு இருப்பவை பகைமன்னர்கள் தோல்வியடைந்து விட்டுச் சென்ற வில், வேல், வாள் போன்ற படைக்கருவிகளாகும்.

இப்பாடலும் சென்ற பாடலைப் போல 'மறம்' என்னும் உறுப்பின்கீழ் அமைந்ததாகும். தமது பெண்ணைத் திருமணம் பேச வந்த மன்னனின் தூதனிடம், திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானின் திருவடிகளில் அன்பு பூண்ட என்மகளை, உன்னுடைய மன்னருக்குத் திருமணம் செய்து தருவதற்கில்லை என்பதை, வீரம் உடைய வேட்டுவர்களாதலால், சினத்தோடு மறுமொழி உரைக்கின்றனர். இதற்குமுன் மணம் பேசவந்த மன்னர்களுக்கு ஏற்பட்ட தோல்வியே உன்னுடைய மன்னனுக்கும் நேரும் என வீரத்துடன் உரைப்பதாக அமைந்துள்ளது. திருவரங்கப் பெருமானிடம் அன்பு பூண்ட உயிர் பிறருக்கு உரிமையாகாது என்பது இதன் உட்பொருள்.

நந்திக்கலம்பகத்தில் தன் மறப்பண்பைப் போர் மறவன் கூறுவது இக்கருத்தோடொத்ததாக அமைந்துள்ளது. அரசர் அனுப்பிய தூதுவனே! அம்பினைக் கொள்ளும் என்னுடைய வில்லானது ஒடிந்துள்ளது. அதன் பூட்டுக் கயிறும் தேய்ந்துபோய் உள்ளது. நானோ மூப்படைந்தேன். தளர்ந்து போயிருக்கிறேன் என்று கருதியோ நறுமணம் பொருந்திய கூந்தலாளாகிய என் புதல்வியைத் திருமணம் பேசி முடிவு செய்வதற்கு அம்மன்னன் உன்னை இங்கே வரவிட்டார். எம் நந்திமன்னனுடைய திருவடிகளைப் பணியாத பகை வேந்தர்களுடைய போர் யானைகளின் கொம்புகள் எம் குடிசையின் சிறிய தூண்களாகவும் நீண்ட வளைச்சட்டங்களாகவும் அமையப் பெற்றுள்ளன என்று சினந்து பேசுகின்றான்.

"அம்பொன்று வில்லொடிதல் நாண்அறுதல் நான்கிழவன்
அசைந்தேன் என்றோ
வம்பொன்று குழலாளை மணம்பேசி வரவிடுத்தார்
மன்னர் தூதர்
செம்பொன்செய் மணிமாடத் தெள்ளாற்றில் நந்திபதம்
சேராார் ஆனைக்
கொம்பன்றோ நம்குடிலில் குறுங்காலும் நெடுவளையும்
குனிந்து பாரே"

- (நந்திக்கலம்பகம் :82)

என மிக இகழ்ந்துரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

கொற்றவன் - வெற்றியையுடைய வேந்தன். குறை உடல் - முகமற்ற உடல். மறவர்கொம்பு - வேடர் மகள். அற்றவர் - இருவகைப் பற்றும் அற்றவர். திருகுலம் - மேன்மையான குலம். திருமுகம் - திருமடல், அழகிய முகம். இளவரசு - அரசன் மகள், இளைய அரசமரம்.

## மடக்கு

### நேரிசை வெண்பா

54. வேலையுல கில்பிறக்கும் வேலைஒழிந் தோமில்லை
மாலையரங் கேசனைநா மாலையினும் - காலையினும்
உன்னிநைந்தோம் இல்லை உடலெடுத்த அன்றுமுதல்
என்னினைந்தோ நெஞ்சே இருந்து.

வேலையுல கில்பிறக்கும் வேலைஒழிந் தோமில்லை - கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் மீண்டும் பிறவியெடுத்தலாகிய பணியை நாம் நீக்கிக் கொள்ள வில்லை,

மாலையரங் கேசனைநா மாலையினும் காலையினும் - மணிமாலைகளும் மலர்மாலைகளும் அணிந்துள்ள திருவரங்க எம்பெருமானை மாலையிலும் காலையிலும் நம்முடைய நாவானது அவன் புகழைப் பாடவில்லை. நம்

உன்னி நைந்தோம் இல்லை - மனம் அவனையே தியானித்து உருகவில்லை.

உடலெடுத்த அன்றுமுதல் என்னினைந்தோம் நெஞ்சே இருந்து - நெஞ்சே! இவ்வுலகில் பிறவியெடுத்த நாள் முதலாக நாம் எதனை நினைத்திருந்தோம். (எதையும் எண்ணாமல் காலத்தை வீணாக்கி விட்டோம். மனமே !)

நம் பிறவிப் பிணியைப் போக்க வல்லவன் திருவரங்கப் பெருமான். ஆதலின் அவனை தியானித்து உள்ளம் உருக வழிபாடு செய்வது நம்கடமை என்பதை உணராமல் என்ன நினைத்து நம் வாழ்நாட்களை வீணாக்கினோம் என்று தம் மனதிடம் கூறுவதாக அமைத்து, அனைவருக்கும் அறிவுறுத்தியுள்ளார் ஆசிரியர்.

மடமையுள் ஆழ்ந்த நெஞ்சமே! சரீரத்தின் தொடர்பால் பிறவிக்கடலிலும் அவற்றை அடைகின்ற ஆன்மாவிலும் பற்றி விளங்கினும், யாவற்றையும் ஆள்பவர் பாற்கடலில் பள்ளி கொள்ளும் பெருமானும் சக்கராயுதத்தை உடையவனமான எம்பிரானாவார். அப்பரமனைக் கண்டு, ஒன்றுபட்டு மகிழும்வரை நீங்காது பற்றுக என்கிறார் நம்மாழ்வார். இதனை,

"உடலாழி பிறப்புவீடு உயிர்முதலா முற்றுமாய்
கடலாழி நீர்தோற்றி அதனுள்ளே கண்வளரும்
அடலாழி அம்மானைக் கண்டக்கால் இதுசொல்லி
விடலாழி மடநெஞ்சே ! வினையோமொன் றாமளவே"

- (திருவாய்மொழி 1:4:10)

என்ற தன் பாசுரத்தில் குறிப்படுவது, இப்பாடலுடன் ஒப்பு நோக்கத் தக்கது.

வேலை - கடல், பிறக்கும் வேலை - பிறக்கும் தொழில், ஒழிதல் - நீக்குதல். மாலை - திருமாலை, உன்னி - தியானித்து, நைந்தோம் - நெகிழ்தோம்.

**இயலிடம் கூறல்**

அறுசீர் ஆசிரிய விருத்தம்

55. இரும்புவனம் விரும்புவனம் அணியரங்கர் பணியரங்கர்
இமய நண்ப !
வருங்கொடியின் மருங்கொடியின் மனங்குழைக்கும்
கனங்குழைக்கு
அனங்கன் சாப கரும்புருவம் பொரும்புருவ முத்தநகை
ஒத்தநகை காந்தள் பூந்தேன்
மருங்குழலும் கருங்குழலும் முருகுவளை இருகுவளை
மழைகண் மாயே !

இரும்புவனம் விரும்புவனம் அணியரங்கர் பணியரங்கர் - பெரிய உலகங்கள் முழுவதையும் விருப்பத்தோடு உண்ட வனமாலையை அணிந்த திருவரங்கப் பெருமான்,

பணியரங்கர் இமய நண்ப ! – அனந்தாழ்வானைப் பள்ளி மெத்தையாகக் கொண்டவர். அத்தகையவரது இமயமலை போன்ற மலையிடத்து உள்ள தோழனே !

வருங்கொடியின் மருங்கொடியின் மனங்குழைக்கும் கனங் குழைக்கு – கனமான மகரக்குழையாகிய காதணியையுடைய வளர்ந்து வருகின்ற இளங்கொடி போன்ற பெண்ணின் இடையானது கனம் தாங்காது முறியுமாயின் (இளம் ஆடவரது) நெஞ்சமானது நெகிழும்.

அனங்கன் சாப கரும்புருவம் பொரும் புருவ – மன்மதனுடைய வில்லாகிய கரும்பின் வடிவை உடையதாகிய புருவமானது போர் செய்யும் தன்மையைக் கொண்டதாக விளங்கும்.

முத்தநகை ஒத்தனகை காந்தள் – புன்னகை செய்யும் பற்கள் முத்துக்களை ஒத்தனவாக விளங்குவன ; கைவிரல்கள் காந்தள் மலர் போல் தோன்றவன.

பூந்தேன் மருங்குழலும் கருங்குழலும் – கரிய நீண்ட கூந்தலில் சூடியுள்ள பூக்களில் உள்ள தேனைப் பருகுவதற்காக வண்டுகள் பக்கங்களிலே சுற்றி பறந்து கொண்டிருக்கும்.

முருகுவளை இருகுவளை மழைகண் பாயே – குளிர்ச்சியையுடைய கண்கள், மணம் பொருந்தியிருக்கக் கூடிய இரண்டு நீலோற்பவ மலரை ஒத்தனவாக விளங்குவன.

தலைவியைக் கண்டு பிரிந்து தலைமகள், தன்னுடைய தோழனின் துணையோடு, அந்தத் தலைமகளைச் சந்திப்பான். இது 'பாங்கற் கூட்டம்' எனப்படும். அதில் இயலிடங் கூறலாக இப்பாடல் அமைந்துள்ளது. உள்ளத் தெளிவு பெறாது வருந்துகின்ற தலைவனின் வருத்தத்தைக் கண்டு பாங்கன் காரணம் வினவியதற்குத் தலைமகன், தான் கண்ட தலையின் வடிவத்தன்மையைக் கூறுதல் இதில் அமையும்.

தஞ்சைவாணன் கோவையில், அமைந்துள்ள,

*"கனமே குழல்செங் கயலே விழிமொழி கார்க்குயிலே*
*தனமே முகையென் தனிநெஞ்ச மேயிடை தன்பகைக்கு*
*வனமே யருளிய வாணன்றென் மாறை மணிவரைசூழ்ப்*
*புனமே யிடமிங்ங னேயென்னை வாட்டிய பூங்கொடிக்கே"*

– (தஞ்சை வாணன் கோவை : 49)

என்ற பாடல், இப்பாடலோடு ஒப்புநோக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

இரும்புவனம் விரும்புவன மணிரங்கர் என்பதற்கு, பெரிய உலகத்தவர் யாவராலும் விரும்பப்படுகின்ற வனப்பையுடைய நீலமணி போலும் நிறத்தினையுடைய அரங்கர் என்றும், பணியரங்கர் என்பதற்குக் காளியனென்னும் பாம்பைக் கூத்தாடும் இடமாகக் கொண்டவர் என்றும் வேறு பொருள் கொள் இடம் உண்டு என்பர்.[20]

இரும்பு வனம் - பெரிய உலகம், வனம் அணி - வனமாலை, மருங்க - இடை. குழைக்கும் - தளரச் செய்யும். அனங்கன் - மன்மதன்.

**இயலிடம் கூறல்**

பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்

56. மழைபிறை சிலைவேல் வள்ளைஎள் ளிலவின்
மலர்முல்லை மதிவளை கழையாழ்
வாரிசங் கெளிறு தத்தைவாய் கலச
மணிவட பத்திர மெறும்பூர்
அழுகுநீர்த் தரங்கம் துடிசுழி அரவம்
அரம்பைஞெண் டுளவரால் ஆமை
அணிதரா சிணைகந் துகம்துகிர் தரள
அம்புயம் அரங்கர்நா யனையார்
குழல்நுதல் புருவம் விலோசனம் காது
நாசிவாய் நகைமுகம் கண்டம்
குலவுதோள் முன்கை அங்கமெல் விரல்கள்
கூருகிர் கொங்கைகண் வயிறு
விழைதரும் உரோமம் வரையிடை உந்தி
விரும்புமல் குல்தொடை முழந்தாள்
மிளர்கணைக் கால்கள் புறவடி பரடு
மென்குதி விரல்நகம் தானே.

மழைபிறை சிலைவேல் வள்ளைஎள் ளிலவின் மலர் - மேகமும், பிறைச் சந்திரனும், விற்களும், வேல்களும், வள்ளை இலைகளும், எள்ளின் பூக்களும், இலவ மரத்தின் பூக்களும்,

..............................................................................................

20. திருவரங்கக் கலம்பகம் (மூவர் உரை) ப.85.

முல்லை மதிவளை கலழயாழ் வாரிசங் கெளிறு - முல்லை மலர்களும், பூரணச் சந்திரனும், சங்குகளும், மூங்கில்களும், யாழும், தாமரை மலர்களும், கெளுத்தி மீன்களும்

தத்தைவாய் கலசமணி வடபத்திர மெறும்பூர் அழகு - கிளியின் அலகுகளும், கம்பங்களும், நீலமணிகளும், ஆலிலையும் எறும்புகள் ஊர்ந்து செல்லும் அழகும்,

நீர்த்தரங்கம் துடிசுழி அரவம் அரம்பைஞெண் டிளவரால் - நீரின் அலைகளும், உடுக்கையும், நீர்ச்சுழியும், பாம்பின் படமும் வாழை மரங்களும், நண்டுகளும், இளம் வரால் மீன்களும்,

ஆமை அணிதரா சிணைகந் துகிர் தரளம் - ஆமைகளும் அழகிய இரண்டு தராச தட்டுகளும் பந்துகளும் பவளங்களும் முத்துக்களும்

அம்புயம் அரங்கநா டணையார் குழல்நுதல் புருவம் - தாமரைமலர்களும் முறையே திருவரங்க நாட்டை ஒத்த பெண்களின் கூந்தலும், நெற்றியும், புருவங்களும்

விலோசனம் காது நாசிவாய் நகைமுகம் கண்டம் - கண்களும், காதுகளும், மூக்கும், வாயும், பற்களும், முகமும் கழுத்தும்,

குலவுதோள் முன்கை அங்கைமேல் விரல்கள் கூருகிர் - விளங்ககின்ற தோள்களும், முன்கைகளும், உள்ளங் கைகளும், மெல்லிய விரல்களும், கூரிய நகங்களும்,

கொங்கை கண் வயிறு விழைதரும் உரோமம் வரையிடை உந்தி - தனங்களும், கண்களும், வயிறும், விருப்பத்தை ஏற்படுத்தும் மயிரொழுங்கும், வயிற்றின் மடிப்புகளும், இடையும், நாபியும்,

விரும்புமல் குல்தொடை முழந்தாள் மிளிர்கணைக் கால்கள் விரும்பப்படுகின்ற அல்குலும் தொடையும், முழங்கால்களும், ஒளி பொருந்தியதாக விளங்குகின்ற கணைக்கால்களும்

புறவடி பரடி மென்குதி விரல்நகம் தானே ! - புறங்கால்களும் காலின் கணுப் பகுதியும், மென்மையான குதிகால்களும், விரல்களும் நகங்களுமாக விளங்குகின்றன.

முடிமுதல் அடியும் அடிமுதல் முடியும் புனைந்துரைக்கும் அழகு புலவர்களிடத்தில் காணப்படுதல் இயல்பு. இத்தகைய புனைந்துரைகள் பல

இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன. கலம்பகத்தில் ஒரு உறுப்பாக விளங்குகின்ற இவ்வழகு பின்னாளில் தனித்த சிற்றிலக்கிய வகையாக மலர்ந்துள்ளது.

இப்பாடலில், திருவரங்க நாட்டை ஒத்த மகளிரது கூந்தல், மேகத்தைப் போன்றும், நெற்றி, பிறைச் சந்திரனைப் போன்றும், புருவம் விற்களைப் போன்றும் , கண்கள், வேல்களைப் போன்றும், காது, வள்ளை இலையைப் போன்றும், நாசி, எள்ளின் பூவைப் போன்றும், வாய் இலவம் பூவைப் போன்றும், பற்கள் முல்லை மலரைப் போன்றும், முகம் பூரணச் சந்திரனைப் போன்றும், கழுத்து சங்கினைப் போன்றும் தோள்கள், மூங்கில்களைப் போன்றும், முன்கை, யாழினைப் போன்றும், உள்ளங்கை, தாமரை மலரைப் போன்றும், மெல்லிய விரல் கெளுத்தி மீன்களைப் போன்றும், கூரிய நகங்கள், கிளியின் அலகுகளைப் போன்றும், தனங்கள், கும்பங்களைப் போன்றும், முலைக்கண், நீலமணியைப் போன்றும், வயிறு ஆலிலையைப் போன்றும், மயிரொழுங்கு எறும்பு ஊர்கின்ற ஒழுங்கினைப் போன்றும், வயிற்று மடிப்பு, நீரின் அலைகளைப் போன்றும், இடையானது உடுக்கையைப் போன்றும், நாபி, நீர்ச்சுழியைப் போன்றும், அல்குல், பாம்பின் படத்தைப் போன்றும், தொடை, வாழை மரங்களைப் போன்றும், முழங்கால் நண்டுகளைப் போன்றும், கணைக்கால் இளைய வரால் மீனைப் போன்றும், புறங்கால் ஆமையைப் போன்றும், கால்பரடு, அழகிய இரண்டு தராசுத் தட்டுகள் போன்றும், குதிகால்கள் பந்துகள் போன்றும், கால்விரல் பவளம் போன்றும், கால் நகம் முத்தைப் போன்றும், பாதங்கள் தாமரை மலர்களைப் போன்றம் விளங்கின என்று கூறப்பட்டுள்ளது. கேசம் முதல் பாதம் வரையிலான முப்பத்து இரண்டு உறுப்புக்களும் உவமிக்கப் பட்டிருப்பது சிறப்பாகும்.

திருக்கோவையார்க் காதலன் ஒருவன் தன் பாங்கனிடத்து,

“விழியால் பிணையாம் விளங்கிய லான்மயி லாம்மிழற்று
மொழியாற் கிளியாம் முதுவா னவர்தம் முடித்தொகைகள்
கழியாக் கழல்தில்லைக் கூத்தன் கயிலைமுத் தம்மலைத்தேன்
கொழியாத் திகழும் பொழிற் கெழிலாமெம் குலதெய்வமே.”[22]

.................................................................................................

21. திருக்கோவையார் : பாடல் எண்.26.

என, மானின் பார்வையும், தோகை மயிலின் அழகையும் கிளி மொழியையும் கூறுவது இப்பாடலோடு ஒப்பு நோக்கத்தக்கது.

**கைக்கிளை**

57. தாளிரண்டும் பாறொன்றும் தார்வாடும் வேர்வாடும்
வாளிரண்டும் காதிரண்டில் வந்திமைக்கும் – கோளிரண்டும்
ஐவகைப் பூதம் அமைந்தருள ரங்கர்
மைவளர் சோலை மலையில்
தெய்வ மல்லள்இத் திருவுரு வினளே.

தாளிரண்டும் பாறொன்றும் தார்வாடும் வேர்வாடும் - இரு கால்களும் பூமியில் பொருந்தும். கழுத்தில் அணிந்துள்ள மாலையானது வாடியுள்ளது. வியர்வை அரும்பியுள்ளது.

வாளிரண்டும் காதிரண்டில் வந்திமைக்கும் - வாளை ஒத்த கண்கள் இரண்டும் இரு காதுகள் வரை சென்று மீண்டு, இமைக்கும்

கோளிரண்டும் ஐவகைப் பூதம் அமைத்தருள் அரங்கர் - இராகு, கேது என்று சொல்லக்கூடிய கோள்களையும், நீர், நிலம், தீ, காற்று, விசும்பு என்னும் ஐம்பூதங்களையும் இவ்வுலகில் அமைத்து அடியர்வர்களுக்கெல்லாம் அருளை வாரி வழங்கும் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான்,

மைவளர் சோலை மலையில் - மேகங்கள் தவழ்கின்ற பொழில்களை உடைய மலையிடத்தில்,

தெய்வம் அல்லள்இத் திருவுரு வினளே - (தோன்றும்) இவ்வழகிய வடிவினையுடைய பெண்ணானவள் தெய்வம் அல்லள் (மானுடப் பெண்ணே !)

ஒருதலைக் காமம், கைக்கிளை எனப்படும் காமம் நுகர்தற்கமைந்த இளமையையுடைய தலைமகளிடத்து உண்டாகிய குறிப்பினைத் தானறியுமளவும் தலைமகன் அவளைச் சாராது நின்று தன்வசமாகிய நெஞ்சோடு சொல்லுதல். இது ஒருதலைக் காமமாகிய

கைக்கிளையாகும். திருவரங்கப் பெருமான் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பொழில்கள் நிறைந்த மலையினிடத்தே தலைவியைக் காணுகிறான் தலைவன். தெய்வ மகளை ஒத்த அழகுடன் விளங்கிய அவளைக் கண்டு தெய்வ மகளோ ! என்று ஐயுறுகின்றான். கால்கள் பூமியில் பதிதல் கண்டும், கழுத்தில் அணிந்துள்ள மாலை, வாடியிருப்பதைப் பார்த்தும், வியர்வை அரும்பியுள்ளதை நோக்கியும், கண்களிரண்டும் இமைப்பதைக் கண்டும் இவள் தெய்வமகள் அல்லள் என்ற மனம் தெளிவுறுகின்றான்.

கால் நிலத்தில் பொருந்துதலும், மாலை வாடுதலும், வியர்வை அரும்புதலும், கண் இமைத்தலும், தேவர்க்கு இல்லையாதலால், 'இவள் மானுடப் பெண்ணே! 'எனத் தெளிகின்றான் தலைவன். தேவர்களுக்கு உள்ள இயல்புகளாக,

*கண்ணிமைத்தலா லடிகள் காசினியிற் றோய்தலால்*
*வண்ண மலர்மாலை வாடுதலால் – எண்ணி*
*நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னா*
*ளறிந்தா ளளென்றன்னை யாங்கும்*

- (நளவெண்பா : 162)

கைக்கிளையுள் 'ஐயம்' என்பதில் தலைவியைக் கண்ணுற்ற தலைமகன், கொடி அல்லள் பெண் என்று அறிந்து, அங்ஙனம் காட்சியில் சிறந்து தோன்றிய இவள் தெய்வப் பெண்களில் எத்தெய்வப் பெண்ணோ என்று ஐயப்பட்டுக் கூறுதல் அமையும். இப்பாடலிலும் திருவரங்கச் சோலையில் தலைவியைக் காணும் தலைவன், இவள் தெய்வமகளோ என்று ஐயுறுகின்றான்.

*"பாரணங் கோதிருப் பாற்கடல் ஈன்றபங் கேருகத்தின்*
*ஓரணங் கோவெற் புறையணங் கோஉயர் பாவலர்க்கு*
*வாரணங் கோடி தருந்தஞ்சை வாணன்தென் மாறைவையை*
*நீரணங் கோநெஞ்ச மேதனி யேஇங்கு நின்றவரே"*

- (தஞ்சைவாணன் கோவை : 2)

என்ற பாடல் இப்பாடலோடு ஒப்பு நோக்கத் தக்கது. அதன் பின்னர், அவன் தெய்வமகள் அல்லாததற்குக் காரணம், கால் நிலத்தில் பொருந்துதலும், மாலை வாடுதலும், வியர்வை அரும்புதலும், கண் இமைத்தலும் தேவர்க்கு

இல்லையாதலால், இவள் மானுடப் பெண்ணே ! என்று தெளிகிறான் தலைவன். ஆதலின் இது 'துணிவு' என்னும் துறையுள் அமையும்.

தலைவியைக் கண்ட தலைவன், தன் மனதிடம், 'நல்லநெஞ்சமே ! இக்காரிகைக்கு நம்மினம் தனது நெய்யார்ந்த கருங்குழலில் சூடிய செம்மலர் வாடின ; அன்றியும் நீலம் போன்ற மையுண்டகண் கையினால் வாயென்று அழைப்பன போலும் இமைத்தன ஆதலால், கருமைபொருந்திய குவளை மலர்ந்த வயல் சூழ்ந்த தஞ்சைவாணனை வாழ்த்தாததெவ்வர்போல நீ இனி நையாது ஒழிவாயாக" எனத் தெளிகின்றான். இதனை,

"மையார் குவளை வயல்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
நையா தொழிமதி நன்னெஞ்ச மேஇனி நம்மினுந்தன்
நெய்யார் கருங்குழற் செம்மலர் வாடின நீலஉண்கண்
கையால் அழைப்பன போலிமை யாநிற்கும் காரிகைக்கே"

- (தஞ்சைவாணன் கோவை :3)

என்ற பாடலால் அறியலாம். இதுவும் இப்பாடலோடு ஒப்புநோக்கத் தக்கதாகும்.

தாள் – கால், பார் – பூமி, தார் – மாலை, வேர் ஆடும் – வியர்வை அரும்பும். இரண்டு கோள்கள் – இராகு, கேது. ஐம்பூதம் – நிலம், நீர், தீ, காற்று, விசும்பு.

**ஊசல்**

எண்சீர் ஆசிரிய விருத்தம்

58. உருமாறி பலபிறப்பும் பிறந்து செத்தும்
ஊசலாடு வதடியேன் ஒழியும் வண்ணம்
கருமாயத் தென்னெஞ்சைப் பலகை யாக்கிக்
கருணையெனும் பாசத்தைக் கயிறாப் பூட்டி
மருமாலைத் துளவசைய ஆடி ரூசல்
மணிமகரக் குழையசைய ஆடி ரூசல்
திருமாது புவிமாதோ டாடி ரூசல்
திருவரங்க ராசரே ஆடி ரூசல்.

உருமாறி பலபிறப்பும் பிறந்தும் செத்தும் - பல்வேறு வடிவங்களாக மாறி மாறி, பலவகைப்பட்ட பிறவிகளாக இவ்வுலகில் தோன்றியும் இறந்தும்,

ஊசலாடு வதடியேன் ஒழியும் வண்ணம் - ஊஞ்சல் போல மாறி மாறி வரும் அலைவதனில் இருந்து நீக்கும்படியாக,

கருமாயத் தென்னெஞ்சைப் பலகையாக்கி - மிகுந்த வஞ்சனையை உடையதாக விளங்கும் என் மனத்தை ஊஞ்சல் பலகையாகக் கொண்டு,

கருணை எனும் பாசத்தைக் கயிறாப் பூட்டி - எம்பெருமானின் அருளென்னும் கயிற்றினை அந்த ஊஞ்சலில் மாட்டி,

மருமாலை துளவசைய ஆடி ரூசல் - நறுமணம்மிக்க திருத்துழாய் மாலை அசையும்படியாக ஊஞ்சல் ஆடுவீர்களாக !

மணிமகரக் குழையசைய ஆடி ரூசல் - இரத்தினங்கள் பதிக்கப்பட்ட மகர குண்டலங்களானவை காதுகளில் அசைய ஊஞ்சல் ஆடுவீர்களாக !

திருமாது புவிமாதோ டாடி ரூசல் - திருமகளோடும் புவிமகளோடும் ஊஞ்சலில் ஆடுவீர்களாக.

திருவரங்க ராசரே ஆடி ரூசல் - திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானே ! ஊஞ்சலில் ஆடுவீர்களாக !

என்னுடைய பிறப்பும் நீங்கிப் பரமபதத்தை அடைய எம்பெருமான் என்னுடைய மனதில் எப்பொழுதும் தங்கியிருக்க வேண்டும் என்று வேண்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

அன்பால் நினைவாரது உள்ளக் கமலம், எம்பெருமானுக்குத் தங்குமிடமாதலால், 'நெஞ்சைப் பலகையாக்கி' என்றும் கடவுளது திருவருள் அவ்வுள்ளத்தைக் கட்டி தன்வயப்படுத்து மாதலால் கருணையெனும் 'பாசத்தைக் கயிறாப் பூட்டி' என்றும் கூறினார்.

"பொருளலா விடயத்தைப் பொருளென் றெண்ணிப்
போவது மீள்வதுமா யெப்பொழுது மாடு
மருளுலா மனவூசல் சுந்தஞ் செய்து
மாறாது வளர்பத்தி வடத்தைப் பூட்டி
இருளைசேர் குழனிலப்பெண் ணலர்மேன் மங்கை
இருவரொடு மேயதன்மே லேறி வீறு
மருளினான் மெள்ளவசைந் தாடி ரூசல்
வடமலையா மாய ராடி ரூசல்."

- (திருவேங்கடக் கலம்பகம் : 101)

என்று திருவேங்கடக் கலம்பகத்துள்ளும் அமைந்துள்ளது.

இப்பாடலில் எம்பெருமான் ஊசலாடத் தாம் ஊசலாடுவது நீங்குமெனக் கூறிய நயம் கருதத்தக்கதாகும். மேலும்,

"அண்டப்பந் தீரிற்பற்றுக் கால்க ளாக
வறிவுவிட்டங் கரணஞ்சங் கிலிக ளாகக்
கொண்டபிறப் பேபலகை வினைய சைப்போர்
கொடுநரக சுவர்க்கப்பூ வெளிக டம்மிற்
றண்டிலிலேற் றம்மிறக்கந் தங்க லாகத்
தடுமாறி யிடருழக்க முசன் மாற
தொண்டர்க்கா மணவாளர் பேரர் கூடித்
தொடுத்திட்டார் திருவரங்கத் தூச றானே."

- (சீரங்கநாயக ரூசல் : தனியன்)

என்ற பாடல், இப்பாடலுடன் ஒப்புநோக்கத்தக்கது.

உரு - உருவம், பல பிறப்பு - பல பிறவிகள். கருமாயம் - மிக்க வஞ்சனை. திருமாது - திருமகள். புவிமாது - பூமிப்பிராட்டி.

## கலிநிலைத்துறை

59. ஊசல் வடம்போல் ஊர்சக டம்போல் ஒழியாமே
நாசவு டம்போ டாவிசு ழன்றே நலிவேனோ?
வாச னும்போ தாசன னுங்கூர் மழுவோனும்
நேசமு டன்சூழ் கோயில ரங்கா! நெடியோனே!

ஊசல் வடம்போல் ஊர்சக டம்போல் ஒழியாமே - ஊஞ்சலின் கயிறு போலவும், ஊர்ந்து செல்கின்ற வண்டியின் உருளையைப் போலவும் எந்நாளும் ஓய்வில்லாமல்,

நாசவுடம்போ டாவி சுழன்றே நலிவேனோ - அழியும் தன்மையை உடைய இந்த உடலோடு உயிர் அலைய வருந்தி மெலிய வேண்டியவனோ?

வாசவனும் போதசனனும் கூர்மழுவோனும் - தேவர் தலைவனாகிய இந்திரனும் தாமரை மலரைத் தன் தவிசாகக் கொண்டிருக்கக் கூடிய பிரமதேவனும் கூர்மையான மழு ஆயுதத்தைத் தன்கையில் ஏந்திய சிவபெருமானும்,

நேசமுடன்சூழ் கோயிலரங்கா ! நெடியோனே ! - பக்தியுடனே சூழ்ந்து வழிபடுகின்ற திருவரங்கப் பெரியகோயிலில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானே ! நீண்ட பெரியோனாக விளங்குபவனே !

இப்பாடலில், 'நான், முன்னும் பின்னும் போவதும் வருவதுமாக இருக்கக் கூடிய ஊசல் வடத்தைப் போலவும், மாறி மாறி உருண்டு கொண்டிருக்கும் ஊர் சகடத்தைப் போன்றும், அழியும் இவ்வுடலோடு உயிரும் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து அலைய வேண்டியவனாக இருப்பவனோ ! ' என்ற வருந்தி தேவர்களால் வணங்கப் படுபவனான எம்பெருமான் தனக்கு அருளை வழங்க வேண்டும் என்று உணர்த்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

பிறவிப் பிணியைப் போக்கக் கூடியவனான திருவரங்கப் பெருமான், தேவர் தலைவனாகிய இந்திரனும் தாமரை மலரைத் தன் தவிசாகக் கொண்டிருக்கக் கூடிய பிரமதேவனும் கூர்மையான மழு ஆயுதத்தைத் தன்கையில் ஏந்திய சிவபெருமானும் சூழ்ந்து வழிபடும் தன்மையுடையவன் என்பார் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். இக்கருத்தினை நம்மாழ்வாரின் பாசுரமொன்றில்,

*"வைம்மின் நம்மனத் தென்று யான்உரைக் கின்ற மாயவன் சீர்மையை*
*எம்ம னோர்கள் உரைப்ப தென்னது நிற்க நாள்தொறும் வானவர்*
*தம்மை யாளும் அவனும் நான்கு கனும்ச டைமுடி யண்ணலும்*
*செம்மை யாலவன் பாத பங்கயம் சிந்தித் தேத்தித் திரிவரே"*

- (திருவாய்மொழி 3:6:4)

என்று வானவர்களின் அரசனான இந்திரனும், நான்முகக் கடவுளும், சடைமுடியுடைய அண்ணலாகிய சிவபெருமானும் செம்மையுடன் அப்பெருமானின் பாத மலர்களைச் சிந்தித்து ஏத்துகின்றனர் என்றொடுத்தோதுகிறார்.

வாசவன் - இந்திரன், போது ஆசனன் - தாமரை மலரைத் தன் இருப்பிடமாக உடைய பிரமன், கூர்மழுவோன் - கூர்மையான மழுவாயுதத்தை உடைய சிவபெருமான், நேசம் - பக்தி, ஊசல் வடம் - ஊஞ்சல் கயிறு, ஊர்சகடம் - ஊர்ந்து செல்லும் வண்டியின் சக்கரம், ஆவி - உயிர், சுழல்தல் - அலையப்பெறுதல் நலிதல் வருந்துதல்.

## தழை

கட்டளைக் கலித்துறை

60. நேசத் தழைக்கு மதயானை முன்புநின் றோனரங்கம்
பேசத் தழைக்குமென் அன்பனை யாய்பெருங் கற்பகத்தின்
வாசத் தழைக்கு நறுந்தழை காணிது மந்தந்தென்றல்
வீசத் தழைக்கும் தழைபோல் கெடாது விலையில்லையே.

நேசத் தழைக்கு மதயானை முன்புநின் றோனரங்கம் - 'ஆதிமூலமே'என்று தன்னை அன்புடன் அழைத்த அழைப்பிற் கிணங்கி மதயானையான கஜேந்திராழ்வான் முன்னே வந்து நின்று காத்தருளின எம்பெருமானுடைய திருவரங்கத்தைக் குறித்து,

பேசத் தழைக்கும் என் அன்பனையாய் பெருங் கற்பகத்தின் - கூறுந்தொறும் கூறுந்தொறும் மகிழ்கின்ற என்னுடைய அன்பை ஒத்திருப்பவளே ! (நான் கொடுக்கும் இத்தழை கற்பக மரத்தினுடைய,

வாசத் தழைக்கும் நறுந்தழை காணிது - வாசனை மிகுதியான தழையைக் காட்டிலும் இனிமையான மணம் உடைய தழை என்பதைக் காண்பாயாக.

மந்தத்தென்றல் வீசத் தழைபோல் கெடாது விலையில்லையே - இளந்தென்றல் காற்று வீசுவதனால் தழைக்கின்ற தழைகளைப் போல் அல்லாது, அழிந்து போகாதது. மேலும், விலை கூற முடியாத மதிப்பினை உடையது. (ஆதலால் இதனை நீ ஏற்றுக் கொள்வாயாக.)

தலைமகளிடத்துத் தழையாடையைத் தர எண்ணுகின்ற தலைவன், தோழியிடத்து அதனைக் கொடுத்து, அத்தழையின் சிறப்பைக் கூறுதல் 'தழை' என்ற உறுப்பாகும். தழை என்பது மலர்களை இடையிடையே இட்டுத் தளிர்களால் செய்வதோர் உடை. இவ்வாறு தொடுத்த தழையை ஆடையாக உடுத்திக் கொள்ளுதல் குறிஞ்சி நிலத்து மகளிர் இயல்பு. கையுறை ஏற்கப் பாங்கியைத் தலைவன் வேண்டல் ; பாங்கி தலைவியை வேண்டல் அல்லது தலைவி கையுறை ஏற்றமை, பாங்கி தலைவர்க்கு உரைத்தல் ஆகிய துறைகளில் இது அமையும்.

தஞ்சைவாணனது சிறுமலைமேல் இருக்கும் மூங்கில் போன்ற பெரிய தோள்களையுடைய அன்னம் போன்றவளே ! இத்தழைக்கு நிகர் உமையாள், இறைவனாகிய சிவன் பிரியாது பழகியிருக்கும் கயிலாயத்திலும், தேவர் பிரியாதிருக்கும் இமாசலத்தும் முற்றும் இல்லை ஆதலால் அணியத்தகும் என்பதை,

*"சிமையார் மலயத் தமிழ்த்தஞ்சை வாணன் சிறுமலைமேல்*
*அமையா கியதடந் தோளன்ன மேயணி யத்தகுமால்*
*உமையாள் இறைவன் பயில்கயி லாயத்தும் உம்பர்தங்கும்*
*இமையா சலத்துமெல் லாமில்லை யால்நிகர் இத்தழைக்கே"*

- (தஞ்சைவாணன் கோவை : 97)

என்ற பாடல், இப்பாடலோடு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

'நேசத் தழைக்கும் மதயானை நின்றோன்' என்று கசேந்திரனைக் காத்த செய்தியைக் கூறுகின்றார் ஆசிரியர். இந்நிகழ்ச்சியைத் திருமங்கையாழ்வார்,

*"கடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை*
*வைகு தாமரை வாங்கிய வேழம்*
*முடியும் வண்ணமோர் முழுவலி முதலை*
*பற்ற மற்றது நின்சரண் நினைப்ப*
*கொடியவாய் விலங்கு இன்னுயிர் மலங்கக்*
*கொண்ட சீற்றமொன் றுண்டுளது அறிந்துன்*
*அடியனேனும் வந்து அடியிணை அடைந்தேன்*
*அணிபொ ழில்திரு வரங்கத்து அம்மானே"*

-(பெரிய திருமொழி 5:8:3)

என்ற பாசுரத்தில், மணமிக்க சோலைகளால் சூழப்பட்ட அழகிய பொய்கையில் இருந்த தாமரை மலரை அர்ச்சனைக்காகப் பறித்த

கசேந்திரன் என்னும் யானை முடியும் வண்ணம் ஒருமுழுவலி முதலைப் பற்ற, அதனால் வருந்தி அந்த யானை தன் வலிமையினால் விடுவித்துக் கொள்ள முடியாமல் உன் திருவடிகளைத் தியானிக்க நீ முதலை அழியும்படி கோபம் கொண்டாய்' என்று விரிவாக எடுத்தோதியுள்ளார். மேலும் இந்த நிகழ்வினைக் குறித்த செய்திகளை பத்தாம் பாடலின் உரையில் காணலாம்.

நேசம் - அன்பு, மந்தம் - இளந்தென்றல்.

**முத்தம்**

61. விலையான திலையென்று நீதந்த முத்தம்
வேய்தந்த முத்தாகில் வெற்பாவி யப்பால்
இலையார் புனற்பள்ளி நாராய ணன்பால்
எந்தாய் அரங்கா இரங்காய் எனப்போய்த்
தலையால் இரக்கும் பணிப்பாய் சுமக்கும்
தன்தாதை அவர்தா மரைத்தாள் விளங்கும்
அலையாறு சூடும்பு ராணாங்கள் பாடும்
ஆடும்பொடிப் பூசியா னந்த மாயே.

விலையான திலையென்று நீதந்த முத்தம் - விலைமதிப்பற்றது என்று சொல்லி நீதந்த முத்தானது,

வேய்தந்த முத்தாகில் வெற்பாவி யப்பால் இலை - மூங்கிலில் இருந்து பெறப்பட்ட முத்தானால், வெற்பானே ! அதிசயிக்கும்படி ஆல்இலையில்,

ஆர்புனல் பள்ளி நாராயணன்பால் எந்தாய் அரங்கா ! - பிரளய காலத்தில் எங்கும் நிறைந்த வெள்ளநீரில் பள்ளி கொண்டு அருளுதலையுடைய நாராணயணனிடத்தில் சென்று, என்னடைய தந்தையே ! திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானே !

இரங்காய் என்ப போய்த் தலையில் இரக்கும் பணிப்பாய் சுமக்கும் - எனக்கு இரங்கியருள வேண்டும் என்று வேண்டி, பிரம கபாலத்தைக் கொண்டு, பிச்சையேற்று உண்ணும் ; மேலும், பாம்பும் பாயாகிய திருவனந்தாழ்வானைச் சுமந்துகொண்டிருக்கும்;

தன்தாதை அவர்தா மரைத்தாள் விளக்கும் - அச்சிவபெருமானுடைய தந்தையாகிய பிரமன், அந்நாராயணப் பெருமானுடைய திருவடித் தாமரைகளைத் திருமஞ்சனம் செய்ததால் வந்த தீர்த்தத்தை உடைய,

அலைஆறு சூடும் புராணங்கள் பாடும் - அலைகள் நிறைந்த நதியாகிய கங்கையை அச்சிவபெருமான் தன்தலைமேல் தரித்துள்ளார். புராணங்களெல்லாம் உன்புகழையே மகிழ்ந்து பாடும்.

ஆடும்பொடிப் பூசி ஆனந்த மாயே - (அவர்) வெண்ணீற்றை உடல் முழுவதிலும் பூசிக்கொண்டு, பேரானந்தத்தால் ஆனந்த நடனம் செய்கிறார்.

முத்தைக் கையுறையாகக் கொண்டு வந்த தலைமகனிடம் தோழி, தன் புத்தி சாதுரியத்தால் அதன் சிறப்பின்மையைக் கூறியது.

இப்பாடலில், வேய் தந்த முத்து (சிவபெருமான்) மண்டை ஓட்டினைக் கொண்டு பிச்சை எடுக்கும்; அரங்கனின் பள்ளியாகிய பாம்பினைத் தலையிலே சுமக்கும் ; திருமாலின் திருவடிகளைப் பிரமன், திருமஞ்சனம் செய்ததனால் உண்டான நீரைத் தலைமேல் தரித்திரிக்கும் ; திருமால் மீது பல புராணங்களைப் பாடிய மகிழ்ச்சியின் காரணமாக மகிழ்ந்து ஆடும் ; ஆதலின், வேய் தந்த சிவபெருமானாகிய முத்து சிறப்பின்மை உடையது என்று தலைவன் கொடுத்த முத்தைக் குறித்துக் தோழி கூறுவதாக அமைந்தள்ளது.

**வேய்தந்த முத்து**

வேதங்கள் பிரளய காலத்தில் தமக்கு ஆபத்து ஒன்றும் இல்லாதிருக்க வேண்டுமென்று வேண்டியபடி, சிவபெருமானின் கருணையினால் அவை மூங்கில்களாக வந்து பிறக்க, அவற்றில் தானே முத்தாகத் தோன்றினான். ஆதலின் சிவபெருமானை, 'வேய் தந்த முத்து' என்றார்.

**சிவபெருமான் கங்கையைத் தரித்த வரலாறு :**

முப்பத்து மூன்றாம் பாடலின் உரையில் கூறப்பட்டுள்ளது.

**அரவம் பூண்ட கதை :**

ஒரு காலத்தில் சிவபெருமான் தன்னை மதியாத தாருகாவனத்து முனிவர்களுடைய அகந்தையை அழிக்கவும் அவர்களுடைய மனைவியரின் கற்புநிலையைப் பரிசோதிக்கவும் அவர்களுடைய இல்லங்களுக்குச் சென்று, பிச்சைப் பெற்றுத் தன்னை நோக்கிக் காதல்கொண்ட அம்முனி பத்தினிகளின் கற்புநிலையைக் கெடச் செய்ய, அது கண்டு பொறாது கோபம் கொண்ட அம்முனிவர்கள் அபிசார யாகம் ஒன்று செய்து அவ்வோமத் தீயில் இருந்து எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, முயலகன், வெண்டலை முதலியவற்றைச் சிவனைக் கொன்றுவரும்படி ஏவ, சிவபெருமான் தன் மேல் பொங்கிவந்த நாகங்களை ஆபரணமாகவும், பூதங்களைத் தனது கணங்களாகவும் கொண்டு, மானைக் கையிலேந்திப், புலியைத் தோலை உரித்து, முயலகனின் முதுகில் காலை ஊன்றி, வெண்டலையைக் கையால் பற்றி சிரமேல் அணிந்து, அவற்றையெல்லாம் பயனற்றதாகச் செய்துவிட்டான் என்பர்.

'தலையில் இரக்கும்' என்றது. பிரமகத்தி தோசத்தால் சிவபெருமான் பிரமகபாலத்தில் பிச்சையேற்றதைக் குறிக்கின்றார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

திருமழிசையாழ்வார், திருமால் சிவபெருமானுடைய அத்துயரம் நீங்க திருமார்பினின்றும் மணமுள்ள தீர்த்த நீரைக் கொடுத்தருளினார் என்பதை,

"சலங்கலந்த செஞ்சடைக் கறுத்தகண்டன் வெண்தலை
புலன்கலங்க உண்டபாதகத்தன்வன் துயர்கெட
அலங்கல்மார்பில் வாசநின் கொடுத்தவன் அடுத்தசீர்
நலங்கொள் மாலைநண்ணும் வண்ணம்எண்ணு வாழிநெஞ்சமே"
-(திருச்சந்த விருத்தம் : 113)

என்று எழிலுற எடுத்தோதுகிறார்.

எம்பெருமாள், அனைத்து உலகங்களையும் தன் ஒரு வயிற்றில் அடக்கிக்கொண்டு சிறிய வடிவத்தோடு சிறிய இலையில் பள்ளி கொண்டருளுதலால், 'வியப்பாலிலையார் புனற் பள்ளி நாராயணன்' என்றும், உருத்திரன் நாகாபரணன் ஆதலால், 'பணிப்பாய் சுமக்கும்' என்றும், எம்பெருமானைக் குறித்து பல்வேறு புராணங்கள் பாடப்பட்டிருப்பதால்' 'புராணங்கள் பாடும்' என்றும் கூறினார்.

வெற்பன் - மலைநாடன். வேய்தந்த முத்து - மூங்கில் பெற்ற முத்து. சிவபெருமான், ஆர்புனல் - நிறைந்த நீர். தலை - பிரம கபாலம். பணிப்பாய் - பாயாகிய பாம்பு, ஆதிசேடன். சூடுதல் - தரித்தல்.

**தவம்**

கட்டளைக் கலித்துறை

62. *ஆனந்த மாயரங் கற்கே உயிர்கள் அடிமையென்னும்*
*ஞானந்த னாலைம் பொறிவாசல் சாத்திநற் றாளைப்பற்றி*
*ஈனம் தரும்பற்று மற்றென்றும் யானென தென்னுமபி*
*மானந் தவிர்த்திருப் பார்க்கிது போலில்லை மாதவமே.*

ஆனந்த மாயரங் கற்கே உயிர்கள் அடிமையென்னும் - திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானுக்கு இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்களும் அடிமையென்று,

ஞானந்தனா னலம்பொறி வாசல் சாத்தி - அறிகின்ற தெளிவின் காரணத்தால், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களின் வழிகளை அடைக்கும் படியாகச் (சிற்றின்ப வழிகளில் செல்லாமல் மனதைக் கட்டுப்படுத்தி) செய்து,

நற்றாளைப் பற்றி ஈனம்தரும் பற்று மற்றென்றும் - திருவரங்கப் பெருமானுடைய திருவடிகளைச் சரணமாக அடைந்து, தாழ்வைத் தரக்கூடிய ஆசைகள் ஒழியப்பெற்று, எந்நாளும்,

யான்என தென்னும்அபி மானம் - நான், என்னுடையது என்னும் அகங்காரம் முதலானவற்றை,

தவித்திருப் பார்க்கிது போலில்லை மாதவமே! - மனதிலிருந்து முற்றிலும் நீங்கப் பெற்று இருப்பார்க்கு இதுபோல் பெரியதவம் வேறு எதுவும் இல்லை.

இறைவனுடைய தியானத்தை வற்புறுத்துதல் 'தவம்' என்னும் உறுப்பின் இலக்கணமாகும்.

இப்பாடலில், திருவரங்கப் பெருமானுக்கு இவ்வுலக உயிர்களெல்லாம் அடிமை என்பதை அறிந்து, ஐம்பொறிகளை அடக்கி, அகங்காரத்தை விடுத்து, அவன் திருப்பாதங்களைச் சரணடைவதே மாதவம் என்பதாகக் கூறுகின்றார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

"அரியபுலன் ஐந்தடக்கி ஆய்மலர் கொண்டார்வம்
புரிய பரிசினால் புல்கில் - பெரியனாய்
மாற்றாது வீற்றிருந்த மாயவலியால் வண்கைநீர்
ஏற்றானைக் காண்ப தெளிது."

- (இயற்பா - முதல் திருவந்தாதி :50)

என்ற பாசுரத்தில் ஐம்புலன்களை அடக்கி, எம்பெருமானைப் போற்றினால் அவனை அடையலாம் என்பர் பொய்கையாழ்வார். மேலும், இந்திரியங்களாகின்ற கொழுத்த யானைகள் ஐந்தினையும் போகமாகிய மதநீரில் ஒடுக்கி, சப்தம் முதலிய விஷயங்களாகிய தெருவில் திரியாதபடி நன்றாக அடக்கி, கூரிய மெய்யான ஞானத்தாலே பெருமானை உணர்கின்றவர்கள் அவனது திருவடிகளை அடைவர் என்பதை,

"வாரி சுருக்கி மதக்களி றைந்தினையும்
சேரி திரியாமல் செந்நிறீஇ - கூரிய
மெய்ஞ்ஞானத் தாலுணர்வார் காண்பரே மேலொருநாள்
கைந்நாகம் காத்தான் கழல்"

-(இயற்பா - முதல் திருவந்தாதி : 47)

என்று எழிலுற எடுத்தோதுவர். இவை, இப்பாடலோடு ஒப்பிட்டு எண்ணத்தக்கவை யாகும்.

உயிர்கள் - ஆன்மாக்கள். ஞானம் - தத்துவ ஞானம். ஐம்பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி. பற்றுதல் - சரணடைதல். ஈனம் - இழிவு. யான் எனது என்னும் அபிமானம் - அகங்காரங்கள். ஆனந்தம் - பேரானந்தம். மாதவம் - பெரிய தவம்.

## தவம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

63. மாத வங்களென் றோத வங்களின்
மருவு சீவனென் றொருவன் நீபெரும்
பூதம் அல்லையிந் திரியம் அல்லைஐம்
புலனும் அல்லைநற் புந்தி இல்லைகாண்
சீத ரன்பரந் தாமன் வாமனன்
திருவ ரங்கனுக் கடிமை நீயுனக்
கேதும் இல்லையென் றறிய றிந்தபின்
நீதின் மாதவம் இல்லை எங்குமே.

மாதவங்களென் றோதவங்களின் - பெரிய தவங்கள் என்று உலகத்தோரால் சொல்லப்படுகின்ற வீணான செயல்களில்,

மருவு சீவனென் றொருவன்நீ - பொருந்துகின்ற ஆன்மா என்கின்ற ஒருவனாகிய மனமே நீ,

பெரும் பூதமல்லை இந்திரியம் அல்லை - பெரிய நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம் என்ற சொல்லக்கூடிய பஞ்சபூதங்களாக விளங்கவும் வில்லை. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாகவும் விளங்கவில்லை.

ஐம்புலனும் அல்லைநற் புந்தி இல்லைகாண் - ஐம்பொறிகளுக்கு உரிய உணர்வுகளாகவும் இல்லை. நல்ல அறிவும் பெறவில்லை என்பதைக் காண்பாயாக. (ஆதலால் நீ

சீதரம் பரந்தாமன் வாமனன் திருவரங்கனுன் கடிமைநீ - திருமகளை மார்பில் அணிந்து இருப்பவனும் பரம பதத்தை உடையவனும் வாமன அவதாரம் செய்தவனுமாகிய திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானுக்கு அடிமையானவன் 'நீ' என்பதை உணர்வாயாக.

உனக்கு ஏதும் இல்லை என்றறி, அறிந்தபின் - உனக்குத் தன்னிச்சையாகச் செயல்படுவதற்கென்று ஒன்றும் இல்லை என்பதை மனமே நீ உணர்வாயாக. அங்ஙனம் உணர்ந்தபின்,

ஈதின் மாதவம் இல்லை எங்குமே – இதனைப் போன்றதொரு பெரிய தவம் இவ்வுலகில் எங்கும் இல்லை.

இப்பாடலில், தன்னுடைய மனதிற்குத் தானே கூறுவது போல, பெரிய தவங்களினால் பயன் எதுவும் இல்லை. ஆன்மாவிற்குத் தனித்தன்மை இல்லை என்று சீவாத்மாவின் தன்மையை உணர்த்துகிறார் ஆசிரியர்.

தன்னுடைய தன்மையைத் தான் உணர்ந்து அதனைத் தன் மனதிற்கு உணர்த்துவதைப் போல, 'மனமே ! நீ ஐம்பூதங்களாகவும், ஐம்பொறிகளாகவும், ஐம்புலன்களாகவும் விளங்க வில்லை. நல்ல அறிவும் உனக்கில்லை, நீ திருவரங்கனுக்க அடிமையாகி அவனிச்சையின்படி செயல்படுவாயாயின் அதனைக் காட்டிலும் சிறந்த தவம் இல்லை என்பது எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

"காயிலை தின்றும் கானில் உறைந்தும் கதிதேடித்
தீயிடை நின்றும் புவலம் வந்துத் திரிவீர்காள் !
தாயிலும் அன்பன் பூமகள் அன்பன் தடநாகப்
பாயன் முகுந்தன் கோயி லரங்கம் பணிவீரே"
– (பாடல் எண் :18)

என்று இக்கருத்தை இந்நூலிலேயே கூறியிருப்பது சுட்டத்தக்கது.

அவங்கள் – வீண்தொழில்கள், சீவன் – ஆத்மா. பூதம் – ஐம்பூதம் (மண், விண், நீர், நெருப்பு, காற்று) இந்திரியம் – பொறிகள், பஞ்சேந்திரியம் – மெய், வாய், கண், மூக்கு, செவி, ஐம்புலன் – ஐம்பொறிகளுக்குரி உணர்ச்சிகள், புந்தி – புத்தி. பரந்தாமன் – பரம பதத்தை உடையவன்.

## இரங்கல்

### கட்டளைக் கலித்துறை

64. எங்காந்த ளங்கைநல் லீரென்செய் கேனிரண் டேந்திழையார்
தங்காந்த னென்றறிந் தாலுநில் லாது தரைநெய்க்கும்
அங்காந்த செம்பவ ளத்தெம்பி ரானரங் கன்புயங்கள்
செங்காந்த மால்வரை யோவிரும் போவென்றன் சிந்தனையே.

எங்காந்தள் அங்கைநல் லீரென்செய்கேன் - எம்முடைய தோழியராகிய காந்தள் மலர்போலும் அழகான கைகளையுடைய நல்ல பெண்களே ! நான் என்ன செய்வேன் ?

இரண்டேந் திழையார்தம் காந்தன்என் றறிந்தாலும் - திருமகள் நிலமகள் ஆகிய இருவரிடத்து ஆசையுடைய கணவன் என்று என்மனம் அறிந்தாலும்,

நில்லாது தரைக்குநெய்க்கும் அங்காந்த - அது என்னிடத்தில் நில்லாது, (கிருஷ்ணாவதாரத்தில்) மண்ணை உண்ணுதற்கும் நெய்யை உண்ணுதற்கும் அழகாகத் திறந்த,

செம்பவளத் தெம்பிரான் அரங்கன் புயங்கள் - சிவந்த பவளத்தை ஒத்த திருவாயையுடைய திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள எம்பிரானின் திருத்தோள்கள்,

செங்காந்த மால்வரையோ விரும்போவென்றன் சிந்தனையே - சிவந்த காந்தத்தாலாகிய பெரிய மலைகளோ (காந்தத்தை நோக்கிக் கவரப்படும் இரும்பே என் மனம் (அப்பெருமானானயே என்றும் சிந்திக்கின்றதே !)

திருவரங்கப் பெருமான்மீது கொண்ட ஈடுபாட்டினால், மனம் காந்தத்தால் கவரப்பட்டு இரும்பைப் போல அவனை நோக்கியே செல்கிறது. மற்றவற்றை மனம் விரும்பவில்லை என்பதை எடுத்துரைத்துள்ளார் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

தலைமகனைக் களவொழுக்கத்தில் கூடிப் பிரிந்து தலைமகள், அப்பிரிவுத் துயரை ஆற்றியிருக்கும் வல்லமை இல்லாதவளாகி, தன்னுடைய நிலைமையைத் தோழியர்க்கு வெளிப்படையாக உரைத்தது.

அங்காத்தல் - திறத்தல். தரை - மண். இரண்டு ஏந்திழையார் - திருமகள், நிலமகள்.

களி

பதினான்குசீர் ஆசிரிய விருத்தம்

சிந்தை யில்குடி கொண்டி ருந்து
திருக்க றுத்தடி மைக்கொளும்
திருவரங்கன் பொருப்பு யர்ந்த
திருப்பு யம்புகழ் களியரேம்
புந்தி மிக்கது வந்து மிக்கது
போத மாதர்கள் எழுவர்தம்
பூசை யேமக பூசை என்றது
புதுமை அன்றிது புத்தர்காள்!
அந்த ரத்திமை யோர ருந்தும்
மருந்தும் வெள்ளைய தன்றியே
அரிய சாதிகொ ளாத மானிடர்
அகலி டத்தினில் இல்லையே!
மந்தி ரத்தினி லாத தேவதை
வான கத்தினில் இல்லையே!
வடிவி லாதவை அண்ட கோளம்
வளைந்த வைப்பினும் இல்லையே!

சிந்தையில் குடிகொண்டிருந்து திருக்கறுத் தடிமைகொள்ளும் – (அன்பாய் நினைப்பவரது) உள்ளத்தில் நீங்காது தங்கியிருந்து அவ்வடியார்களது குற்றங்கள் அனைத்தையும் நீக்கி, அவர்களைத் தன்னுடைய அடிமையாக ஏற்றுக்கொள்ளும்.

திருவரங்கன் பொருப்புயர்ந்த திருப்புகழ் களியரேம் – திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் மலைபோன்ற உயர்ந்த திருத்தோள்களைப் புகழ்ந்து போற்றுகின்ற கள்ளைக் குடிப்பவர் நாங்கள்.

புந்தி மிக்கது புக்கது போத – மகிழ்ச்சி நிறைந்திருக்கக் காரணமாகிய, கள் மயக்கத்தினால் உண்டாகும் கிளர்ச்சி மிகுதியாக வந்து நேர்ந்தது.

மாதர்கள் எழுவர்தம் பூசையே மகபூசை என்றது – சப்தமாதர்கள் என்று சொல்லப்படும் ஏழு பெண்கள் செய்யும் பூசை மகபூசை என்று சொல்லப்படுவதாகும்.

புதுமை அன்றிது புத்தர்காள் - (யாகத்திற்குச் செய்யப்படும்) இத்தகைய பூசை என்பது புதுமையானது இல்லை என்பதை புத்தர்களே ! நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

அந்திரத்து இமையோர் அருந்தும் மருந்தும் வெள்ளை - வானுலகத்தில் உள்ள தேவர்கள் பருகக் கூடிய மருந்தாகிய அமிழ்தமும் (நாங்கள் பருகும் கள்ளைப் போல) வெண்மையானது தான்.

அன்றியே அரியசாதி கொளாத மானிடர் - மேலும், சொல்லுவதற்கு அரிய சாதியைப் பெற்றில்லாத மனிதர்கள்.

அகலிடத்தில் இல்லையே - (யாரும்) இந்த இடமகன்ற உலகத்தில் தோன்றவில்லையே !

மந்திரத்தினி லாத தேவதை வானத்தினில் இல்லையே - மந்திரத்திற்கு வசப்படாத தெய்வங்கள் தேவலோகத்திலும் இல்லை (என்பதை அறிவீராக)

வடிவிலாதவை அண்டகோளம் வளைந்த வைப்பினும் இல்லையே - அண்ட கோளத்திற்கு உட்பட்ட இடங்களில் உருவமில்லாத பொருட்கள் இல்லையே ! (இதனை உணர்வீராக !)

கட்குடியர் அக்கள்ளைச் சிறப்பித்துக் கூறுவதாகப் பாடுவது 'களி' என்ற கலம்பக உறுப்பின் இலக்கணமாகும்.

இப்பாடலில், திருவரங்கப் பெருமானைப் போற்றிப் பாடுதல் மனதிற்கு இன்பம் பயப்பதாக அமையும். அங்ஙனம் எம்பெருமானுக்கு ஆளாகிப் பாடினால், எம்பெருமான் அடியார்களின் குற்றங்களைப் போக்கி, அவர்களை ஆட்கொண்டு அருளுவான் என்பதை உணர்த்துகிறார் ஆசிரியர்.

கட்குடியர் துர்க்காபூசை செய்தல் இயல்பாதலின் அதனைப் பெருமைப்படுத்திக் கூறினார். கட்குடித்தலையும் குடி என்பார். ஆதலின் 'சிந்தையில் குடிகொண்டிருந்து' என்றும், 'களியர்' என்பதற்குக் கட்குடியர் என்றும் பொருளாதலால், களியரேம் என்றும், அமிருதமும் கள்ளும் வெண்ணிற ஒற்றுமை உடைமையால், இமையோ ரருந்து மருந்தும் வெள்ளை' என்றும், சாதி, மந்திரம், வடிவு என்பன கள்ளுக்கும் பெயராதலால், அதனை உட்கொள்ளாத மனிதர்கள் பூமியில் இல்லை என்றும், அது கொள்ளாத தேவர் வானுலகத்தில் இல்லை என்றும், அது பெறாத பொருள்கள் அண்டம் முழுவதிலும் இல்லை என்றும் களி என்றும்

உறுப்பிற்குப் பொருந்தச் சிலேடையாகக் கூறினரென்க[12] என்ற உரைத்திறம் இங்கு எண்ணி இன்புறத் தக்கது.

திருக்கு – குற்றம், பொருப்பு- மலை. புயம் – தோள். களியர் – கள் குடியர். புந்தி – புத்தி, அறிவு. இமையோர் – கண் இமைத்தல் இல்லாதவர், தேவர். மாதர் எழுவர் – அபிராமி, மாயேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி. மருந்து – அமிர்தம், தேவதை – தெய்வம். வடிவம் – உருவம்.

குறளடி வஞ்சிப்பா

66. இல்லறமெனத் துறவறமெனச்
சொல்லறம்பிற துணையன்றெனப்
பவக்கடலுள் துலக்கறுப்பான்
காவிரியிடை பூவிரிப்பொழில்
சிலமந்திகள் சினைதாவப்
பலதெங்கின் பழக்குலையுதிர
அடர்கமுகின் மடறொடிதரத்
தேமாங்கனி சிதறுபுவிழ
முடப்பலவின் குடக்கனியுக
வரம்பைக்கனி வரம்பிற்புக
வியன்மருங்கின் மலர்ப்புபொய்கையுள்
துயில்வலம்புரி துண்ணனவுறத்
தாஅட்டாமரைத் தவிசுறைதரு
சூஉட்டோதிமம் பேஎட்டுடனெழ
மயிற்சேவல் மனங்களிப்பக்
குயில்பேடைக் குலமொளிப்ப
மழைமுகிலென முழவதிர்தர
திருவரங்கப் பெருநகருள்

22. திருவரங்கக் கலம்பகம் (மூவர் உரை), பக்.94.

அரவணைமிசை அறிதுயிலமர்ந்
தருள்புரி,
திருநா ரணனைச் சேர்ந்தனம்
சீரணார விந்தம் தஞ்சமென் றிறந்தே.

இல்லறமெனத் துறவறமெனச் சொல்லறம்பிற துணையன்றென - இல்லறம் என்றும் துறவறம் என்றும் இருவகையாகச் சொல்லப்படுகின்ற அறமும் மற்றும் உள்ள பொருள் இன்பங்களும் துணையல்ல என்பதை நன்குணர்ந்து,

பவக்கடலுள் துலக்கறுப்பான் காவிரியிடைப் பூம்பொழில் - பிறவியாகியக் கடலினுள்ளே கட்டுப்பட்டு இருப்பதை நீக்கும் பொருட்டு, காவிரியிடையே உள்ள பூக்கள் நிறைந்திருக்கின்ற சோலைகளில்,

சிலமந்திகள் சினைதாவப் பலதெங்கின் பழக்குலையுதிர - சில பெண் குரங்குகள் மரக்கிளைகளில் தாவி விளையாட, பல பெண் குரங்குகள் தென்னை மரங்களின் மீது ஏறித் தாவுவதால் முதிர்ந்த பழங்கள் உதிரவும்,

அடர்கமுகின் மிடறொடிதர தேமாங்கனி சிதறுபுவிழ - (அதனால், அருகிலுள்ள) அடர்ந்த கமுகினுடைய கண்டப் பகுதி ஒடிந்து வீழவும், அது வீழந்ததால் அருகிலுள்ள இனிய மாமரங்களில் இருந்து மாம்பழங்கள் சிதறி விழவும்,

முடப்பலவின் குடக்கனியும் வரம்பைக்கனி வரம்பிற்புக - அவை வீழ்ந்ததால், வளைந்த பலாமரத்தினது குடம் போன்ற பலாப்பழங்கள் கீழே சிந்தவும், அவை வீழ்ந்ததால் அருகில் உள்ள வாழைப்பழங்கள் வயல் வரப்புகளில் விழவும்,

வயன்மருங்கின் மலர்ப்பொய்கையுள் துயில்வலம்புரி துண்ணனவுற - வயல்களுக்குப் பக்கத்தில் உள்ள பூக்கள் நிறைந்த தடாகத்தில் தூங்கின்ற வலம்புரிச் சங்குகள் திருக்குற்று அலறவும்,

தாஅட்தாமரை தவிசுறைதரு சூஉட்வோதிமம் பேட்டுடன்எழ - காம்புகளை உடைய தாமரை மலராகிய இருக்கையில் உறைந்திருக்கக் கூடிய உச்சியையுடைய அன்னப்பறவைகள், தங்கள் பேடைகளுடன் அச்சத்தினால் எழுந்திருக்கவும்,

மயிற்சேவல் மனங்களிப்பக் குயில்பேடை குலமொளிப்ப
பெண்மயில்களும் ஆண்மயில்களும் (இவ்வோசைகளால்) மனமகிழ்ச்சியுற்று ஆடவும், ஆண் குயில்களின் கூட்டமும் பெண் குயில்களின் கூட்டமும் அச்சத்தால் மறைந்து கொள்ளவும்

மழைமுகிலென முழுவதிர்தரு திருவரங்கப் பெருநகருள் - மழை மேகங்கள் ஒன்றோடொன்று மோதுவதால் ஏற்படும் இடியோசை போன்ற முழுவு முதலான தோல்கருவிகளில் இருந்து எழும் ஒலியானது எங்கும் அதிர, திருவரங்கமாகிய பெரிய நகரத்தில்,

அரவணைமிகை அறிதுயிலமர்ந் தருள்புரி திருநாரணனை - திருவனந்ததாழ்வானாகிய பாம்பின் மீது பள்ளிகொண்டு, யோக நித்திரையில் ஆழ்ந்து, அடியவர்க்கெல்லாம் அருளை வழங்குகின்ற திருநாராயணனை,

சேர்ந்தனம் சரணாரவிந்தம் தஞ்சமென் றிரந்தே ! - அவனது திருவடித் தாமரைகளே அடைக்கலம் தரக்கூடியவை என்பதை அறிந்து அவனை தியானித்துச் சென்று சேர்ந்தோம்.

அறம், பொருள், இன்பம் நமக்கு இறுதிவரை துணையாக வரக்கூடியவை அல்ல. இயற்கை எழில்மிக்க, காவிரியிடைத் திருவரங்கப் பெருநகரில் எழுந்தருளி, பாம்பணையில் பள்ளி கொண்டு யோக நித்திரையில் ஆழ்ந்துள்ள திருவரங்கநாதர், பிறவிப் பெருங்கடலின் கட்டுக்களை நீக்கக் கூடியவன் என்பதை உணர்த்தும் வண்ணம் ஆசிரியர் இப்பாடலை அமைத்துள்ளார்.

'அறம்' என்பது இல்லறம், துறவறம் என்ற இரு பிரிவுகளை உடையது. 'இல்லறம்' எனப்படுவது இல்வாழ்க்கைக்கு ஏற்ற நெறியின்படி வாழ்ந்து, அதற்குத் துணையாக விளங்குகின்ற கற்பு மனைவியோடு செய்கின்ற அறமாகும். 'துறவறம்' எனப்படுவது மீண்டும் பிறத்தலைக் கண்டு அஞ்சி, வீடுபேற்றினை அடையக் கருதி, உலக ஆசைகளை முற்றிலுமாகத் துறந்தவர்க்கு உரியதான அறம். பிற துணை என்பன பொருளும் இன்பமாகும்.

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசி தறிவாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற்றிசை போய துண்டே"
- (சீவ. சிந் - நாமகள் இலம்பகம் :31)

என்ற சீவகசிந்தாமணிப் பாடலில், ஏமாங்கத நாட்டை திருத்தக்கதேவர் பாடியிருப்பதை அடியொற்றி இப்பாடலை இயற்றியுள்ளார் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

இப்பாடலில், பிறவியாகியக் கடலிலுள்ளே கட்டுப்பட்டு இருப்பதை நீக்கம்பொருட்டுத் திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கக்கூடிய திருவரங்கப் பெருமானின் திருவடிகளைத் தஞ்சமடைந்தோம் என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். இதே கருத்தினை நம்மாழ்வார்,

"அணியனாகும் தனதாள் அடைந்தார்க் கெல்லாம்
பிணியும் சாரா பிறவிகெடுத் தாளும்"
- (திருவாய்மொழி : 9:10:8)

என்று, எம்பெருமான் தனது திருவடியைப் பணியும் அன்பர்களின் பிறவியையும் ஏனைய பிணிகளையும் தீர்த்தருளக் கூடியவன் என்கிறார். மேலும்,

"சரணமாகும் தனதா ளடைந்தார்க் கெல்லாம்
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்"
- (திருவாய்மொழி 9:10:5)

என்று தனது திருவடியைச் சரணம் அடைந்தவர்களுக்கு மறுமையில் வைகுந்தப் பேற்றை அருளிச் செய்யக் கூடியவன் எம்பெருமான் என்கிறார். இவை ஒப்பு நோக்கத்தக்கன.

சொல் அறம் - சொல்லப்படுகின்ற அறம், பவக்கடல் - பிறவிக்கடல், துலக்கு - கட்டுப்படுதல், மந்தி - பெண்குரங்கு. சினை - மரக்கிளை. தெங்கு - தென்னை. மிடறு - கண்டம். ஒடிதரல் -

ஒடிந்துபோதல். தேமாங்கனி - இனிய மாம்பழங்கள். முடம் - வளைவு. குடம்கனி - குடம்போன்ற பழங்கள். அரம்பை கனி - வாழைப் பழங்கள். வரம்பு - வரப்பு. மருங்கு - அருகில். பொய்கை - தடாகம். தவிசு - இருப்பிடம். சூட்டு ஓதிமம் - உச்சியையுடைய அன்னப் பறவைகள். முழவு - தோல் இசைக்கருவி.

**மடக்கு**

எழுசீர் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

67. இரவியை இரவின் மதியினை மதியுள்
இறையினை இறையுமெண் ணரிய
கரவனைக் கரவின் முனிவனை முனிவர்
கருத்தனை கருத்தனைத் துடைத்தான்
பரமனை பரம பதத்தனைப் பதத்துள்
பாரனைப் பாரந் தூதும்
அரவனை அரவின் அரங்கனை அரங்கத்
தடிகளை அடிகள்சே வியுமே.

இரவியை இரவியின் மதியினை மதியுள் இறைவனை - சூரியனானவனை, இரவில் விளங்குகின்ற சந்திரனானவனை, அறிவில் உறைகின்ற எம்பெருமானை,

இறையும் எண்ணரிய கரவனை - சிறிது நிறைத்துப் பார்ப்பதற்கும் அரிதான மறைப்பு வேலைகளான மாயவேலைகளைச் செய்பவனை,

கரவின் முனிவனை முனிவர் கருத்தனை - கபடமில்லாத தவம் செய்பவனாய் இருப்பவனை, அத்தவ முனிவர்களின் எண்ணத்தில் நிறைந்திருக்கக் கூடியவனாக விளங்குபவனை,

கருத்தனை துடைத்துஆள் பரமனை - (தன்னை அடைக்கலமாகச் சேர்ந்தவர்களது) மானுடப் பிறப்பிற்குக் காரணமான கருவினைத் துடைத்து நீக்கிப், பிறப்பைப் போக்கி அருளுகின்ற கடவுளை,

பரம பதத்தனை பதத்துள் பாரனை - பரம பதத்தை உடையவனை, திருவடியில் இருந்து இவ்வுலகை உண்டாக்கியவனை,

பாரநத்து ஊதும் அரவணை அரவின் அரங்கனை - பெரிய பாஞ்சசன்னியத்தை ஊதுகின்ற ஓசையுடையவனை, திருஅனந்தாழ்வான்மீது பள்ளிகொண்டு எழுந்தருளி இருக்கக் கூடிய திருவரங்கனை,

அரங்கத் தடிகளை சேவியுமே - அத்தகைய திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கக் கூடிய திருவரங்கநாத எம்பெருமானை, அவருடைய திருவடிகளை வணங்குங்கள்.

செய்யுளின் இடையிடையே சொல், சீர் ஆகியன மீண்டும் பொருள் வேறுபாட்டுடன் அமையுமாறு பாடுவது மடக்கு என்பதாகும்.

"எழுத்தின் கூட்ட மிடைபிறி தின்றியும்
பெயர்த்தும் வேறு பொருள்தரின் மடக்கெனும் பெயர்த்தே"
- (தண்டி :92)

என்று தண்டியலங்காரம் இதற்கு இலக்கணம் கூறும்.

இப்பாடலில், அமைந்துள்ள 'கரவில் முனிவன்' என்ற தொடருக்கு 'முதலையினிடத்துக் கோபத்தை உடையவன்' என்று வேறு பொருளும் கூறலாம். 'முனிவர் கருத்தனை' (கர்த்தனை) என்ற தொடருக்கு, 'முனிவர்களின் தலைவனை' என்றும் பொருள் கொள்ளலாம். 'பதத்துள் பாரனை' என்ற தொடருக்குத், (விக்கிரம அவதாரத்தில்) தன்னுடைய ஒரு திருவடியுள் இப்பூமியை அடக்கியவனை என்றும் பொருள் கொள்ளலாம். 'அரவின் அரங்கனை' என்ற தொடருக்குக் (கிருஷ்ணாவதாரத்தில்) 'காளிங்கன் என்னும் பாம்பினை அரங்காகக் கொண்டு நடனம் புரிந்தவன்' என்றும் பொருள் கொள்ளலாம்.

இரவி - சூரியன். மதி - சந்திரன், அறிவு. இறை - இறைவன், சிறிது. கரவன் - மாயவேலைகளை உடையவன். கரவு - வஞ்சனை, முதலை. கருத்தன் - தலைவன், எண்ணமாக இருப்பவன். பதம் - திருவடி. பாரம் - பூமி. நத்து - சங்கு. அரவம் - ஓசை, பாம்பு.

## பனிக்காலம்

கலிநிலைத்துறை

68. சேவிக்க வாழ்விக்கும் எம்கோன் அரங்கன் திருக்கோயில்சூழ்
காவில் கலந்தாசை தந்தேகி னார்நெஞ்சு கல்நெஞ்சமோ
வாவிப் புறத்தன்ன மேயின்ன மேகோ வரக்கண்டிலேன்
பாவிக்க நேகம் தனிக்காலம் இந்தப் பனிக்காலமே.

சேவிக்க வாழ்விக்கும் எம்கோன் அரங்கன் - தன்னைக் கண்டு வணங்கியோர் அனைவரையும் சிறப்புற வாழ வைக்கக் கூடிய திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள, எம்முடைய தலைவனான திருவரங்கப் பெருமானின்,

திருக்கோயில் சூழ்காவில் கலந்தாசை தந்தேகினார் – திருவரங்கப் பெரியக் கோயிலைச் சூழ்ந்துள்ள மலர்ச்சோலையில் ஒன்றாகக் கூடியிருந்து ஆசையைத் தந்து சென்றவரது மனம்,

கல்நெஞ்சமோ ! வாவி புறத்தன்ன மேயின்னமே – கல்போன்ற இரக்கமற்ற நெஞ்சமோ ! தடாகங்களின் புறத்தே இருக்கக்கூடிய அன்னப் பறவையே (பனிக்காலம் வந்த பின்னும்) இன்னமும்,

கோவரக் கண்டிலேன் பாவிக்கு - என்ன காரணத்தினாலோ என் தலைவன் வரவில்லை. அவனைக் காணாதவளாகிய பாவியாகிய எனக்கு,

அநேகம் தனிக்காலம் இந்தப் பனிக்காலமே - அதிகமாகத் தனியே இருக்கின்ற இந்தப் பனிக்காலம் நீண்ட காலமாக விளங்குவது.

தலைவியோடு கூடியிருந்து ஆசையை அவள் மனதில் தோற்றுவித்துப் பிரிந்த தலைவன், பனிக்காலம் வந்த பின்னும் வராதவனாக இருக்கிறான். ஆதலின் தனித்திருக்கக் கூடிய பனிக்காலம் மிக நீண்ட காலமாக விளங்குகிறது என்ற தன்னுடைய நிலையை அன்னப்பறவையினிடத்தில் கூறி இரங்குகிறாள் தலைவி.

கணவனைப் பிரிந்ததாகிய தீவினையை உடையவளாக இருப்பதால் தன்னைப் 'பாவியேன்' என்றுரைக்கிறாள். கணவனைப்

பிரிந்த நிலையில் ஒவ்வொரு நொடிப்பொழுதும் பல ஊழிக் காலமாகத் தோன்றும். இதனை, 'என் அன்புடைய தலைவன் அநேக நாட்கள் என்னோடு சேர்ந்திட்டாலும், அப்போது அக்காலமானது ஒரு நாழிகையைப் பலகூறுகள் ஆக்கினபின்பு உள்ள மிகச்சிறிய காலமாகிவிடும். அவ்வாறு இல்லாமல் தலைவனைப் பிரிந்து இருக்கும் பொழுது ஒரு நாழிகைப் பொழுதே ஒரு ஊழிக் காலத்தைப் போல பெரிதாக வளர்ந்து பிரிவுத்துன்பத்தை உண்டாக்கும். இவ்வாறு இரவு பெருமையும் செய்கிறது, சிறுமையும் செய்கிறது என்று இருளின் தன்மையைத் தலைவி உரைக்கிறாள் என்று,

"பலபல ஊழிகள் ஆயிடும் அன்றியோர் நாழிகையைப்
பலபல கூறிட்ட கூறாயிடும் கண்ணன் விண்ணனையாய்
பலபல நாளன்பர் கூடிலும் நீங்கிலும் யாம்மெலிதும்
பலபல சூழலுடைத்து அம்ம வாழிஇப் பாயிருளே"
-(இயற்பா - திருவிருத்தம்:16)

என்ற நம்மாழ்வாரின் பாசுரத்தில் கூறியிருப்பது காலம் குறித்துத் தலைவியரின் கருத்தை உணர்த்துவதாகும்.

தஞ்சைவாணன் கோவையில் தூதின் பொருட்டு ஏற்பட்ட பிரிவினால் வருந்திய தலைவி முன்பனி காலம் வந்த பிறகும் தலைவன் வராமையால், வருத்தம் செய்கின்ற முன்பனி நாளிலும் வந்து காத்தருளார் என்று புலம்புகின்றாள்.

"மலிகின்ற வண்புகழ் வாணன்தென் மாறையை வாழ்தலர்போல்
மெலிகின்ற சிந்தையு மேனியுங் கொண்டு விளர்ப்பெனும்பேர்
பொலிகின்ற கஞ்சுகம் போர்த்திருந் தேனைப் புரந்தருளார்
நலிகின்ற முன்பனி நாளில்நண் ணார்முனை நண்ணினரே."
- (தஞ்சைவாணன் கோவை :415)

என்ற பாடல், இப்பாடலுடன் ஒப்புநோக்கத்தக்கது.

கா - சோலை. ஏகுதல் - செல்லுதல். பாவி - தீவினை உடையவன்.

## குறம்

69. காலம் உணர்ந்த குறத்திநான்
  கருதினை ஒன்றது சொல்வேன்
பாலகன் உச்சியில் எண்ணெய்வார்
  பழகிய தோர்கலை கொண்டுவா !
கோல மலர்க்கையின் மங்கைநின்
  கொங்கை முகக்குறி நன்றுகாண் !
ஞாலம் உவந்திடை நாளையே
  நண்ணுவை நம்பெரு மாளையே.

காலம் உணர்ந்த குறத்திநான் கருதினை ஒன்றது சொல்லுவேன் - கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களிலும் நடக்க இருப்பனவற்றை முன்னரே உணர்ந்த குறத்தி நான். நீ மனதில் எண்ணியிருக்கும் ஒன்றை உனக்கு நான் சொல்லுவேன்.

பாலகன் உச்சியில் எண்ணெய்வார் பழகிய தோர்கலை கொண்டுவா ! - என்னுடைய குழந்தையின் தலையுச்சியில் பூசுவதற்காக எண்ணெய் கொண்டுவந்து வார்ப்பாயாக. நீ உடுத்திய பழைய சீலையைக் கொண்டு வந்து தருவாயாக.

கோல மலர்க்கையின் மங்கைநின் கொங்கை முகக்குறி நன்றுகாண்! அழகிய மலர்போன்ற கைகளையுடைய மங்கையே ! உன்னுடைய முலைக்கண்களின் குறியானது நன்றாக விளங்குகிறது.

ஞாலம் உவந்திடை நாளையே நண்ணுவை நம்பெரு மாளையே - இவ்வுலக உயிர்களெல்லாம் மகிழும்படியாக, நாளையே நீ திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்க நாதப் பெருமானிடத்தில் சென்று சேர்வாய்.

குறம் என்பதற்குக் 'குறிசொல்லுதல்' என்பது பொருளாகும். தலைவி, தான் விரும்பிய தலைவனுடன் சேரும் வாய்ப்பினைக் குறமகள் ஒருத்தி, குறிபார்த்து உரைப்பதாகப் பாடல் அமைப்பது குறம்' என்னும் கலம்பக உறுப்பின் இலக்கணமாகும்.

இப்பாடலில், தலைமகனைக் கண்டு மையலுற்று நிற்கும் தலைமகள், தன்னிடம் வந்த குறி கண்டறிந்து கூறவல்ல குறத்தியிடம், குறி வினவுகிறாள். அக்குறத்தி, தன்னுடைய முக்காலமும் குறி கூறவல்ல குறிகூறும் திறத்தை எடுத்துரைக்கிறாள். அதன் பின்னர், தன் குழந்தையின் தலை உச்சியில் வைப்பதற்கு எண்ணெயையும், தனக்குப் பழைய சீலை ஒன்றையும் தருமாறு கேட்கிறாள். பிறகு முலைக்கண்களின் குறியானது நன்றாக இருப்பதால், நாளையே நீ திருவரங்கநாத எம்பிரானைச் சேர்வாய் என்ற நல்வாக்கினை எடுத்துரைக்கிறாள் என்பதாக ஆசிரியர் சிறப்புற அமைத்துள்ளார்.

மதுரை மீனாட்சியம்மை குறத்தில் அமைந்துள்ள,

*"ஒருகாலம் கஞ்சியுமென் குஞ்சுதலைக்*
*கெண்ணெயும் ஓர்உடுப்பும் ஈந்தால்*
*பொருகால வேல்கண்ணாய் ! மனத்துநீ*
*நினைத்தெலாம் புகல்வன் கண்டாய் !*
*வருகாலம் நிகழ்காலம் கழிகாலம்*
*மூன்றும்ஒக்க வகுத்துப் பார்த்துத்*
*தருங்காலம் தெரிந்துரைப்ப(து) எளிதரிதன்*
*றெங்கள்குற சாதிக் கம்மே."*

- (மதுரை மீனாட்சியம்மை குறம் :24)

என்ற பாடலில், குறத்தியானவள் மூன்று காலத்தையும் தெளிவாக ஆராய்ந்து சொல்லுவதாகக் கூறுவது, குழந்தையின் தலைக்கு எண்ணெயும் தனக்கு ஓர் உடையும் வேண்டுவது போன்றவை இப்பாடலோடு ஒப்புநோக்கத் தக்கன.

காலம் - முக்காலம், உச்சி - தலை. கலை - சீலை. கோலம் - அழகிய. கொங்கை முகம் - முலைக்கண். ஞாலம் - உலகம். நண்ணுவாய் - சேர்வாய்.

## மேகவிடு தூது

### கட்டளைக் கலித்துறை

70. பெருமாலை யார்க்குரைப் பேனுமக் கேவிண்டு பேசினல்லால்
கருமாலை யாயெழும் கார்குலங் காள்தொண்டர் காற்பொடிதான்
திருமாலை கொண்ட திருமா லரங்கர்தம் தெய்வத்துழாய்
மருமாலை வாங்கிவம் மின்னந்தி மாலை வருமுன்னே.

பெருமாலை யார்க்குரைப்பேன் உமக்கே விண்டு பேசினல்லால் – (எனக்கு உண்டான) பெரிய மயக்கம் குறித்து உன்னிடத்தேயன்றி வேறு யாரிடத்தில் எடுத்துரைப்பேன்.

கருமாலை யாயெழும் கார்குலங்காள் தொண்டர் காற்பொடிதான் – கரியதொரு மாலையைப் போல தொடர்ச்சியாக ஆகாயத்தில் எழுகின்ற கரிய மேகக் கூட்டங்களே ! தொண்டரடிப் பொடியாழ்வார் செய்த,

திருமாலை கொண்ட திருமாலங்கர்தம் தெய்வத்துழாய் மருமாலை – திருமாலை என்னும் திவ்விய பிரபந்தமாகிய மாலையை, ஏற்றுக்கொண்டு அருளிய, திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்க எம்பிரானுடைய, தெய்வத்தன்மையுடன் கூடியதான நறுமணம் பொருந்திய திருத்துழாய் மாலையை,

வாங்கியவம் மின்னந்தி மாலை வருமுன்னே – (தனிமையில் இன்னலைச் செய்யும்) மாலைப் பொழுதானது வருவதற்கு முன்னே வாங்கி வாருங்கள்.

தலைவி, பிரிந்து சென்ற தலைவனிடத்து மேகத்தை தூதுவிடுப்பதாகப் பாடுவது 'மேகவிடு தூது' என்னும் உறுப்பின் இலக்கணம். இது கலம்பக உறுப்புகளுள் ஒன்றாக அமைகிறது.

இப்பாடலில், தலைவனைப் பிரிந்த தலைவி, காதல் நோயால் துன்புறுகின்றாள். இன்னது செய்வதென்று அறியாது புலம்புகின்றாள். ஆகாயத்தில் தொடர்ந்து செல்லும் மேகக் கூட்டங்களைக் காணுகிறாள். நிறத்தால் தலைவனுடன் ஒத்ததாக விளங்கும் காரணத்தால், தனக்கும் தன்னுடைய தலைவராக விளங்கும் திருவரங்கருக்கும் இனிமை பயப்பதாக இருக்கும் என்று கருதி, மேகக் கூட்டங்களை நோக்கி,

'என்னுடைய இந்நிலைமையை என்னுடைய தலைவராக திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருமாலிடத்தில் கூறி, அதற்கு இரங்கி, அவர் அருளிச் செய்கின்ற திருத்துழாய் மாலையை வாங்கி வந்து தரவேண்டும்' என்று வேண்டுகிறாள். மேலும், பிரிவாற்றாமையின் காரணமாகத் தனிமையில் இன்னலைச் செய்யும் மாலைப்பொழுது வருவதற்கு முன்னர் தூது சென்று, தலைவரிடம் இருந்து விரைவாக மாலை வாங்கி வருமாறு கூறுகின்றாள் என்று அமைத்துள்ளார் ஆசிரியர்.

தூது, இலக்கிய உறுப்பாக விளங்கியது. அதன் பின்னர் அதன் செல்வாக்கால், தனித்த இலக்கிய வகையாக மலர்ந்தது.

> "எகினமயில் கிள்ளை எழிலியொடு பூவை
> சகிகுயில்நெஞ் சந்தென்றல் வண்டு – தொகைபத்தை
> வேறுவே றாய்பிரித்து வித்தரித்து மாலைகொண்டான்
> புறிவா வென்ற தூது."

என்ற பாடல், தூது செல்வதற்கு ஏற்றவற்றைத் தொகைப்படுத்திக் கூறும். மேகத்தைத் தன் தூதிற்கு ஏற்றதில்லை என்று கருதும் தலைவியை அழகர் கிள்ளைவிடு தூதில் காணலாம்.

> "வண்டலையும் தாறான்முன் மாதரையெல் லாந்தூற்றும்
> கொண்டலையும் தூதுவிடக் கூடுமோ."
> – (அழகர் கிள்ளை விடு தூது : கன்னி 203)

என்ற பாடலடிகளில் திருமகளின் காதலனும், வண்டுகள் மொய்க்கம் மலர்மாலை சூடியவனும் ஆகிய அழகரிடம் பெண்களையெல்லாம் தூற்றித் திரியும் (பெரிய பூமியெங்கும் மழைநீரைத் தூவித் திரியும்) மேகத்தைத் தூதுவிட முடியுமோ ? என்று தலைவி, வினாவினை எழுப்புவதாக அமைந்துள்ளார் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராக விளங்கும் தொண்டரடிப் பொடியாழ்வார் நூல்கள், திருமாலை, திருப்பள்ளி எழுச்சி முதலியன. இவற்றுள், திருமாலை நாற்பத்து ஐந்து பாசுரங்களைக் கொண்டு விளங்குகிறது. இத்திருமாலை நூலின் சிறப்புக் கருதிய திருவரங்கப் பெருமாள் அரையர்,

"மற்றொன்றும் வேண்டா மனமே மதில்அரங்கன்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் – உற்ற
திருமாலை பாடும்சீர்த் தொண்டர் அடிப்பொடிஎம்
பெருமானை எப்பொழுதும் பேசு."

– (திருமாலை : தனியன்)

என்றுரைக்கிறார். இவரைப் போலவே இந்நூலின் சிறப்பை உணர்ந்த பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், 'திருமாலை என்னும் திவ்வியப் பிரபந்தமாகிய மாலையைக் கொண்டருளிய திருமால்' என்று அரங்கரைப் போற்றுகின்றார்.

"மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள்! வேங்கடத்துச்
சாமத்தின் நிறங்கொண்ட தாடாளன் வார்த்தையென்னே!
காமத்தீ யுள்புகுந்து கதுவப்பட்டு இடைக்கங்குல்
ஏமத்தோர் தென்றலுக்கிங் கிலக்காய்நான் இருப்பேனே"

– (நாச்சியார் திருமொழி 8:2)

என்ற பாசுரத்தில் ஆண்டாள் நாச்சியார் சிறந்த முத்துக்களையும் பொன்னையும் கொண்டு பொழிகிற காளமேகங்களே ! திருமலையில் எழுந்தருளி இருக்கின்ற நீலநிறம் உடையவனான எம்பிரானுடைய செய்தி எதாகிலும் உண்டோ ? என வினாவினைத் தொடுத்துக், காமத்தீ உள்புகுந்து கவ்வ, அதனால் வருந்தி இரவில் நடுயாமத்தில் தென்றல் காற்றுக்கு நான் இலக்காகி இங்கே இருப்பேனோ ? தகுதியோ ? என்று தலைவி புலம்புவதாக அமைத்துள்ளது இப்பாடலோடு ஒப்பிட்டு எண்ணத்தக்கது. நாச்சியார் திருமொழியால் எட்டாம் திருமொழியில் அமைந்துள்ள பாசுரங்கள் பதினொன்றும் மேகம்விடு தூதாக அமைந்திருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

கார்குலம் – கரிய மேகக் கூட்டம். மாலை – மயக்கம், மாலைப் பொழுது. விண்டு – விவரித்து. தொண்டர் கால்பொடி – தொண்டர் அடிப்பொடியாழ்வார். திருமாலை – தொண்டரடிப் பொடியாழ்வார் இயற்றிய இலக்கியங்களுள் ஒன்று. மரு – மணம். வம்மின் – வாருங்கள்.

## நேரிசை வெண்பா

71. முன்னம் பிறந்த பிறப்போ முடிவில்லை
இன்னம் பிறப்பிக்க எண்ணாதே – தென்னரங்கம்
மேவிக் கிடந்தானே வீற்றிருக்கு நின்பதத்தென்
ஆவிக் கிடந்தான் அருள்.

முன்னம் பிறந்த பிறப்போ முடியவில்லை – (இப்பிறவிக்கு முன்னே) நான் பிறந்த பிறவிகளுக்கோ இவ்வளவு என்று அளவில்லை.

இன்னம் பிறக்க எண்ணாதே – என்னை இனிமேலும் பிறவி எடுக்கும்படி, நின் திருவுள்ளத்தில் கருதாமல்,

தென்னரங்கம் மேவிக் கிடந்தானே – தென்னரங்கத்தில் திருவனந்தாழ்வான் மீது பள்ளி கொண்டு, யோக நித்திரையில் கிடந்த கோலத்தில் இருந்தவனே !

வீற்றிருக்கும் நின்பதத்தென் ஆவி கிடந்தான் அருள் – ஒப்பற்றவனாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே ! உன்னுடைய திருவடிகளில், உன் கருணையால் என் உயிர்க்கு இடம்தரல் வேண்டும்.

பலபிறவிகள் எடுத்து துயருற்று வருந்திய எனக்கு மேலும் பிறவிகள் இல்லாதவாறு பிறவிப்பிணி நீக்கிப், பரமபதத்தை அளிக்க வேண்டும் என்று வேண்டுகிறார் ஆசிரியர்.

பல்வேறு பிறவிகளாகத் தான் தோன்றி வருந்திய நிலைமையினை மாணிக்கவாசகர்,

“புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்.......”

(சிவபுராணம் : பாடலடிகள் 26 -31)

என்று எடுத்துரைக்கிறார்.

திருமழிசைபிரான், 'பிறந்து இறந்து பேரிடர்ச் சுழிக்கண் நீங்குமா,

மறந்திடாது மற்றெனக்கு மாய நல்க வேண்டுமே' (திருச்சந்த விருத்தம் :98) எனப் பிறவி நோயை நீக்க இறைவனை வேண்டுவதைக் காணலாம்.

பிறவிப் பிணியை நீக்கும் வழியை அறிந்து கொண்ட தன்மையை நம்மாழ்வார்,

"பிடித்தேன் பிறவிகெடுத் தேன்பிணி சாரேன்
மடித்தேன் மனைவாழ்க்கையுள் நிற்பதோர் மாயையைக்
கொடிக்கோ புரமா டங்கள்சூழ் திருப்பேரான்
அடிசேர்வ தெனக்கு எளிதாயின வாறே"
- (திருவாய்மொழி 10:8:3)

என்று எம்பெருமானின் திருவடியைச் சார்வது எனக்கு எளிதான தன்மை என்பதால், அப்பரமனின் திருக்கழல்களைப் பற்றினேன். அதன் பயனாகப் பிறவிப் பிணியைக் கடந்தேன் என்கிறார்.

பிறப்பாகிய கடலுக்கு ஒரு மரக்கலத்தைப் போன்று விளங்கி, உலக உயிர்களைக் காப்பவன் திருமால் என்பதனை,

"மாலைக்கோ லித்திரியும் வையகத்தார் தம்பிறவி
வேலைக்கோர் வங்கமாம் வேங்கடமே – சோலைத்
தருமா தரைநட்டான் தண்முல்லை யாயர்
தருமா தரைநட்டான் சார்பு."
- (திருவேங்கடமாலை :3)

என்ற பாடலில் எடுத்துரைத்துள்ளார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

முன்னம் – இதற்கு முன்னர். பிறப்பு – பிறவிகள். பதம் – பரமபதம். ஆவி – உயிர்.

## இரங்கல்

மடக்கு

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

72. அரும்புன் னாகத் தடங்காவே யவாவென்
னாகத் தடங்காவே
அம்போ ருகக்கண் பொருந்தேனே அழநீ
ருகக்கண் பொருந்தேனே
பரம்புங் கடலூர் நாவாயே பாவிக்
கடலூர் நாவாயே
பார்மீ துயர மறியலையே படுமென்
துயர மறியலையே
கருங்கட் கயலே மாசுறவே கரைவேற்
கயலே மாசுறவே
கண்டற் போதுகு வாலுகமே காங்குல்
போதுகு வாலுகமே
குரும்பை தழைக்கும் கரும்பனையே குயல்வந்
தழைக்கும் கரும்பனையே
குருகீர் நந்த மறங்கரையே கொணரீர்
நந்த மறங்கரையே.

அரும்புன் னாகத் தடங்காவே யாவென் னாக தடங்காவே - அரிய பெரிய புன்னாக மரங்கள் நிறைந்திருக்கம் சோலையே ! ஆசையானது என்மனதில் அடங்கவதில்லை.

அம்போ ருகக்கண் பொருந்தேனே! அழநீ ருகக்கண் பொருந்தேனே - தாமரை மலரினிடத்தில் பொருந்தி இருக்கக்கூடிய வண்டே ! நான் அழுவதால் பெருகுகின்ற கண்ணீர் காரணமாகக் கண்களை மூடி உறங்குவது இல்லை.

பரம்புங் கடலூர் நாவாயே பாவிக் கடலூர் நாவாயே - பரவிய கடலில் ஓடக்கூடிய மரக்கலமே ! தீவினையேனாகிய எனக்குப் பகையாக விளங்கக் கூடியது அலர் தூற்றுகின்ற ஊராருடைய நாவும் வாயுமாகும்.

பார்மீ துயர மறியலையே படுமென் துயர மறியலையே - கரையின்மீது உயர்ந்து வீழ்ந்து மீளும் கடல் அலையே ! நீ, தலைவியாகிய

நான் படுகின்ற துயரத்தை நீ சிறிதும் தெரிந்து கொள்வது இல்லை.

கருங்கட் கயலே மாசுறவே கரைவேற் கயலே மாசுறவே – கரிய கண்களை உடைய கயல்மீனே ! பெரிய சுறா மீனே ! துன்பத்தில் உருகுபவளாக வருந்துகின்ற எனக்குக் குற்றமுள்ள உறவினர்களும் அயலாரேயாவர்.

கண்டற் போதுகு வாலுகமே கங்குல் போதுகு வாலுகமே – தாழை மலர்கள் மகரந்தத் துகள்களைச் சிந்துகின்ற வெண்மணல் குன்றே, இரவுப் பொழுதானது எனக்கு யுகங்களின் கூட்டமாகும் (மிக நீண்ட காலப் பொழுதாகும்).

குரும்பை தழைக்கும் கரும்பனையே குயில்வந் தழைக்கும் கரும்பனையே – பனங்குரும்பைகளானவை தழைக்கும் கரிய பனைமரமே! குயில் வந்து கரும்பனாகிய மன்மதனை அழைத்து நின்றது.

குருகீர் நந்த மரங்கரையே கொணரீர் நந்த மரங்கரையே – நாரைகளே ! சங்குகலானவை பொருந்திய அழகிய கரையே ! நம்முடைய திருவரங்கப் பெருமானை (என் துன்பத்தைப் போக்கி, இங்கு அழைத்துக் கொண்டு வாருங்கள் !

தலைவனைப் பிரிந்து வாடுகின்ற நெய்தல் நிலத்துத் தலைமகள், அங்குள்ள பொருள்களை நோக்கித் தான்படும் வருத்தம் கூறி இரங்கியது.

இப்பாடலில், திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானிடம் தலைவி ஒருத்தி மனதைப் பறிகொடுக்கிறாள். பிரிவாற்றாமையால் கடற்கரையில் தான்காணும் புன்னைமரச் சோலை, வண்டு, மரக்கலம், கடல்அலை, சுறாமீன், வெண்மணல் குன்று, பனைமரம், நாரை முதலானவற்றை அழைத்துத் தான்படுகின்ற துன்பங்களை எடுத்துக் கூறி, திருவரங்கரை அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று தூது அனுப்புவதாக ஆசிரியர் அமைத்துள்ளார்.

இப்பாடலில் மடக்கணி அமைந்துள்ளதால், இருபொருள்படும் பல தொடர்கள் அமைந்திருக்கக் காணலாம். 'அரும்புன் னாகத் தடங்காவே' என்ற தொடருக்கு, அரும் புன்னாகத் + தடம் + காவே – அரிய புன்னை மரங்கள் நிறைந்த சோலையே ! அவாஎன் ஆகத்து + அடங்காவே – ஆசை என் மனதில் அடங்காதே என்றும், 'அம்போ ருகக்கண்

பொருந்தேனே' என்ற தொடர், அம்போருகக்கண் + பொருந் + தேனே - தாமரை மலரிடத்து பொருந்தியுள்ள வண்டே. அழுநீருகக் + கண்பொருந்தேனே - அழுவதால் கண்ணீர்வழிய உறங்கேனே என்றும், 'பரம்புங் கடலூர் நாவாயே' என்ற தொடருக்குப் பரம்பும் கடல் + ஊர் + நாவாயே - பரவிய கடலில் ஓடும் மரக்கலமே ! பாவிக்கு அடல் + ஊர் + நா + வாயே - தீவினையாளாகிய எனக்கு அலர் தூற்றுகின்ற ஊரின் நாவும் வாயும் பகையாகும். 'பார்மீ துயர மறியலையே' என்ற தொடருக்குப், பார்மீது + உயர + மறியலையே - கரைமீது உயரமாக வந்து மீளும் அலையே ! படும் + என் + துயரம் + அறியலையே - நான் துயரப் படுவதை அறியவில்லை என்றும், 'கருங்கட் கயலே மாசுறவே' என்ற தொடருக்குக் கருங்கண் + கயலே + மாசுறவே - கருங்கண் கயல்மீன், பெரிய சுறா மீனே! கரைவேற் கு + அயலே + மாசு + உறவே - துயரால் உருகுபவர்களுக்குக் குற்றமுடைய உறவு அயலாகும் என்பது பொருளாகும்.

'கண்டற் போதுகு வாலுகமே' என்ற தொடருக்குக், கண்டல் + போதுகு + வாலுகமே - தாழை, மகரந்தம் சிந்தும் வெண்மணல் குன்றே ! கங்குல் போது குவால் + உகமே - இரவுப் பொழுது குவியலான யுகமாகும். என்றும், 'குரும்பை தழைக்குங் கரும்பனையே' என்ற தொடருக்குக், குரும்பை + தழைக்கும் + கரும்பனையே - குரும்பை தழைக்கின்ற கரிய பனைமரமே ! குயில்வந் தழைக்கும் கரும்பனையே - குயிலானது கரும்புவில்லை உடையவனான மன்மதனை அழைக்கும். என்றும், 'குருகீர் நந்த மரங்கரையே ! என்ற தொடருக்குக், குருகீர் + நந்து + அமர் + கரையே - நாரைகளே ! சங்குகள் பொருந்திய கரையே ! குருகீர் + நம்தம் + அருங்கரையே - நம்முடைய அரங்கரை அழைத்துக் கொண்டு வாருங்கள். என்றும் இத்தொடர்களைப் பிரித்துப் படிக்க, பொருள் சிறக்கக் காணலாம். மடக்கணியின் நயத்தை அறிந்து கொள் இப்பாடல் சிறந்ததொரு சான்றாக அமைந்துள்ளது.

புன்னாகம் - புன்னை மரம். அம்போருகம் - தாமரை. தேன் - வண்டு. பரம்பு - பரவிய. நாவாய் - மரக்கலம். மறி அலை - மடங்கி விழும் அலை. மாசு - குற்றம். கண்டல் - தாழை. வாலுகம் - வெண்மணல் குன்று. குவால் - அதிக. கரும்பன் - மன்மதன். நந்து - சங்கு.

## நேரிசை ஆசிரியப்பா

73. கரைபொரு தொழுகும் காவிரி ஆறே!
ஆற்றிடைக் கிடப்பதோர் ஐந்தலை அரவே!
அரவம் சுமப்பதோர் அஞ்சன மலையே!
அம்மலை பூத்ததோர் அரவிந்த வனமே!
அரவிந்த மலர்தொறும் அதிசயம் உளவே!
கடல்விளிம் புகுத்த கண்ணகல் ஞாலம்
உடன்முழு தளந்த தொருதா மரையே!
வகிரிளம் பிறையான் வார்சடை தேங்கப்
பகீரதி சான்றதோர் பங்கே ருகமே!
யாவையும் யாரையும் படைக்க நான்முகக்
கோவை ஈன்றதோர் கோக னகமே!
திருமகட் கினிய திருமனை யாகிப்
பருமணி இமைப்பதோர் பதும மலரே!
சடைத்தலை தாழ்த்துச் சங்கரன் இரப்ப
முடைத்தலை தவிர்த்தோர் முளரிமா மலரே!
ஆங்குமண் டோதரி அணிந்தமங் கலநாண்
வாங்கவில் வாங்கிய வனசமும் ஒன்றே!
விரிந்துபுக ழிலங்கை வேந்தர்க்குத் தென்றிசை
புரிந்தருள் மலர்ந்ததோர் புண்ட ரீகமே!
மண்டிணி ஞாலமும் வானமும் உட்பட
அண்டமுண் டுமிழ்ந்ததோர் அம்போ ருகமே!
கடைசிவந் தகன்று கருமணி விளங்கி
இடைசில வரிபரந் தினியவாய் நெடியவாய்
இன்பம் தழீஇய இருபெருங் கமலம்
துன்பம் தழீஇய தொண்ட னேனையும்
உவப்புடன் ஒருகால் நோக்கிப்
பவக்கடல் கடக்கும் பரிசுபண் ணினவே!

**கரைபொரு தொழுகும் காவிரி ஆறே - இரு கரைகளையும் தொட்டு அரித்துச் செல்லும் காவிரி ஆறே!**

ஆற்றிடைக் கிடப்பதோர் ஐந்தலை அரவே - அந்த ஆற்றிற்கு இடையே வீழ்ந்து கிடக்கின்ற ஐந்து தலைகளை உடைய ஒரு நாகம் உள்ளது.

அரவம் சுமப்பதோர் அஞ்சன மலையே - அந்த அரவமாகிய திருவனந்தாழ்வான் தாங்குவதாகிய மைபோன்று கரிதான மலை ஒன்று உள்ளது.

அம்மலை பூத்ததோர் அரவிந்த வனமே - அம்மலையில் மலர்ந்த தாமரைகள் நிறைந்த மலர்க்காடு ஒன்று உள்ளது.

அரவிந்த மலர்தொறும் அதிசயம் உளவே - அத்தாமரை மலர்கள் ஒவ்வொன்றிலும் வியக்கத் தக்கதான செய்தி உள்ளது.

கடல்விளிம் புடுத்த கண்ணகல் ஞாலம் - கடலால் சூழப்பட்டதாக அமைந்துள்ள அகன்ற இடமான பூமி,

உடன்முழு தளந்த தொருதா மரையே - முழுவரையும் ஒரு தாமரை மலரானது ஒரு சேர அளந்தது (இடத்திருவடி)

வகிரிளம் பிறையான் வார்சடை தேங்க - துண்டுபட்ட இளம் பிறையினை அணிந்தவனாகிய சிவபெருமானுடைய வாரப்பட்ட நீண்ட சடையில் நிறைந்து தங்கும்படியாக,

பகீரதி சான்றதோர் பங்கே ருகமே - கங்கை நதியை வெளியில் உமிழ்ந்த ஒரு தாமரை மலர் (வலத் திருவடி)

யாவையும் யாரையும் படைக்க நான்முக - அனைத்துப் பொருள்களையும் அனைத்து உயிர்களையும் படைக்கும்படி நான்கு முகங்களை உடைய,

கோவை ஈன்றதோர் கோக னகமே - தலைவனாகிய பிரம தேவனை உண்டாக்கியது ஒரு தாமரை மலராகும் (திருநாபி)

திருமகட் கினிய திருமனை யாகி - திருமகள் தங்குவதற்கு இனிமையான இருப்பிடமாகி,

பருமணி இமைப்பதோர் பதும மலரே - பருத்த கௌஸ்துபரத்தினம் ஒளிரப் பெற்றது ஒரு தாமரை மலராகும். (திருமார்பு)

சடைத்தலை தாழ்ந்து சங்கரன் இரப்ப - சடாமுடியினை உடைய சிவபெருமான், தலைதாழ்ந்து வேண்டி நிற்ப,

முடைத்தலை தவிர்த்ததோர் முளரிமா மலரே - (அவன் கையில் ஒட்டிய) புலால் நாற்றத்தையுடைய பிரம கபாலத்தை நீக்கி அருளியது ஒரு தாமரை மலராகும் (வலத்திருக்கை)

ஆங்குமண் டோதரி அணிந்தமங் கலநாண் - இலங்கையில் இராவணன் மனைவியாகிய மண்டோதரி அணிந்திருந்த மாங்கல்ய சூத்திரத்தை,

வாங்கவில் வாங்கிய வனசமும் ஒன்றே - இழக்கும்படி செய்த வில்லை வளைத்தது ஒரு தாமரை மலராகும் (இடத்திருக்கை)

விரிந்தபுகழ் இலங்கை வேந்தர்க்குத் தென்திசை - பரந்துபட்ட கீர்த்தியை உடையவனாக விளங்கிய, இலங்கை வேந்தனாகிய விபீஷணனுக்காகத் தென்திசையை நோக்கி,

புரிந்தருள் மலர்ந்ததோர் புண்ட ரீகமே - எப்பொழுதும் அருளோடு மலர்ந்திருந்தது ஒரு தாமரை மலராகும் (திருமுகம்)

மண்டிணி ஞாலமும் வானமும் உட்பட - மண்ணுலகாகிய இப்புவியுலகையும் விண்ணுலகையும் அடங்கும்படி,

அண்டமுண் டுமிழ்ந்ததோர் அம்போ ருகமே - (பிரளய காலத்தில் இந்த அண்டம் முழுவதையும் உண்டு, (பிரளயம் நீங்கியபின்) உமிழ்ந்ததும் ஒரு தாமரை மலராகும் (திருவாய்)

கடைசிவந் தகன்று கருமணி விளங்கி - கண்ணின் கடைப் பகுதியானது சிவந்தனவாகி, அகன்றனவாக இடையே கருமையான கண்மணி விளங்கி,

இடைசில வரிபரந் தினியவாய் நெடியவாய் - இடையிடையே செவ்வரி படர்ந்து இனியனவாகவும் நீண்டனவாகவும்,

இன்பம் தழீஇய இருபெரும் கமலம் - இன்பம் நிறைந்தவாகிய, இரண்டு பெரிய தாரை மலர்கள் உள்ளன (திருக்கண்கள்)

துன்பம் தழீஇய தொண்ட னேனையும் - துன்பம் நிறைந்த அடியவனாக விளங்குகின்ற என்னையும்,

உவப்புடன் ஒருகால் நோக்கி - மகிழ்வோடு ஒருமுறை அருளோடு நோக்கி,

பவக்கடல் கடக்கும் பரிசுபண் ணினவே - பிறவியாகிய கடலைக் கடக்கும்படியான பெருமை உடையனவாகச் செய்தன.

காவிரி நதியினிடையே உள்ள திருவரங்கப் பெரிய கோயிலில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான், பாம்பணையில் பள்ளி கொண்டு, யோக நித்திரையில் ஆழ்ந்திருந்து அடியேனுக்குப் பிறவிக்கடலைக் கடக்கும் அருளை வழங்கினான் என்கிறார் ஆசிரியர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

இப்பாடலில் திருவரங்கப் பெருமான், ஒரு தாமரைக் காடாக உருவகிக்கப் பட்டுள்ளதைக் காணலாம். திருவிக்கிரம அவதாரத்தில், கடலால் சூழப்பட்டதாக அமைந்துள்ள அகன்ற இடமான பூமி முழுவதையும் ஒருசேர அளந்தது இடது திருவடியாகிய ஒரு தாமரை மலராகும். திருமால் உலகம் அளந்த காலத்தில், துண்டுபட்ட இளம்பிறையினை அணிந்தவனாகிய சிவபெருமானுடைய வாரப்பட்ட நீண்ட சடையில் நிறைந்து தங்கும்படியாக கங்கைநதியை வெளியில் உமிழ்ந்தது வலது திருவடியாகிய ஒரு தாமரை மலராகும். பொருள்களையும் அனைத்து உயிர்களையும் படைக்கும்படி நான்கு முகங்களை உடைய தலைவனாகிய பிரமதேவனை உண்டாக்கியது திருநாபியாகிய ஒரு தாமரை மலராகும். திருமகள் தங்குவதற்கு இனிமையான இருப்பிடமாய்ப் பருத்த கௌஸ்துபரத்தினம் ஒளிரப்பெற்றது திருமார்பாகிய ஒரு தாமரை மலராகும். சடாடமுடியினை உடைய சிவபெருமான், தலைதாழ்ந்து வேண்டி நிற்ப, அவன் கையில் ஒட்டிய புலால் நாற்றத்தையுடைய பிரம கபாலத்தை நீக்கி அருளியது வலது திருக்கையாகிய ஒரு தாமரை மலராகும். இலங்கையில் இராவணனின் மனைவியாகிய மண்டோதரி அணிந்திருந்த மாங்கல்ய சூத்திரத்தை இழக்கும்படியாகச் செய்ய, வில்லை வளைத்தது இடது திருக்கையாகிய ஒரு தாமரை மலாராகும்.

பரந்துப்பட்ட கீர்த்தியை உடையவனாக விளங்கிய, இலங்கை வேந்தனாகிய விபீடணனுக்காகத் தெற்குத் திசையை நோக்கி, எப்பொழுதும் அருளோடு மலர்ந்திருந்தது, திருமுகமாகிய ஒரு தாமரை மலராகும் இப்புவியுலகையும் விண்ணுலகையும் அடங்கும்படி இந்த அண்டம் முழுவதையும் பிரளய காலத்தில் உண்டு, பிரளயம் நீங்கியபின் உமிழ்ந்ததும் திருவாயாகிய ஒரு தாமரை மலராகும். கண்ணின் கடைப் பகுதியானது சிவந்தனவாகி, அகன்றனவாக இடையிடையே கருமையான கண்மணி விளங்கி, செவ்வரி படர்ந்து இனியனவாகவும் நீண்டனவாகவும் விளங்குவன திருக்கண் மலர்களாகிய இரண்டு தாமரைகளாகும்.

திருமாலின், திருவடிகள் இரண்டையும் திருக்கண்கள் இரண்டையும் தாரைமலர்களாக உருவகிக்கப் பட்டிருப்பதை,

"மாமுதல் அடிப்போ தொன்றுகவிழ்த் தலர்த்தி
மண்முழுதும் அகப்படுத்து ஒண்சுடர் அடிப்போது
ஒன்றுவிண் செலீஇ நான்முகப் புத்தேள்
நடுவியந் துவப்ப வானவர் முறைமுறை
வழிபட நெறீஇ தாமரைக் காடு
மலர்க்கண் ணோடு கனிவாய் உடையது."

-(திருவாசிரியம் :5:1-6)

என்ற பாசுரத்தில் நம்மாழ்வார், உலகங்களுக்கு எல்லாம் முதல் காரணமான, எம்பெருமானின் திருவடிகளாகிய மலர்களில் ஒன்றினை, உலகளந்தபோது, நிலத்தினில் நன்றாகப் பரப்பி, பூமிப் பரப்பெல்லாவற்றையும் அடக்கிக் கொண்டதையும், அழகிய ஒளி பொருந்திய மற்றொரு திருவடியாகிய மலர், பிரமனுடைய உலகமானது வியந்து மகிழ்ச்சி அடையவும் அங்குள்ள தேவர்கள் நன்னெறியை உணர்கின்ற வேதங்களில் சொல்லிய முறைப்படி, முறையாக வழிபடவுமாக விண்ணில் பறந்து நின்றதையும், தாமரை மலர்கள் போன்ற கண்களைப் பெற்று விளங்கியதையும் எடுத்துரைக்கிறார். எம்பெருமானின் திருவடி மலர்களையும் கண்மலர்களையும் சுட்டுவதன் வாயிலாக நான்கு தாமரை மலர்களையுடைய தாமரைக் காட்டைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தலைவியின் உண்மையான காதலைத் தோழி அன்னையர்க்குத் தெரிவிப்பதைப் போன்று அமைந்துள்ள,

"கருமாணிக்க மலைமேல் மணித்தடந் தாமரைக் காடுகள் போல்
திருமார்வு வாய்கண் கைஉந்தி கால்உடை ஆடைகள் செய்யபிரான்"

- (திருவாய்மொழி 8:9:1)

என்ற திருவாய்மொழி பாசுரத்தில், கரிய மாணிக்கம் போன்ற மலையின் மீது தாமரைக்காடுகள் விளங்குவதைப் போன்று, திருமகள் திகழும் திருமார்பு, திருவாய், திருக்கண்கள், திருக்கைகள், திருஉந்தி, திருவடிகள் ஆடைகள் ஆகிய சிவந்த வண்ணங்களை உடையவனாகத் திருமால் திகழ்வதை எடுத்துரைக்கிறார் நம்மாழ்வார். இப்பாசுரத்தில்

உருவகிக்கப்பட்டுள்ளபடியே பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் பாடலிலும் உருவகிக்கப்பட்டிருப்பது ஒப்புநோக்கத்தக்கதாகும்.

இப்பாடலில், ஒரு சொல் பன்மொழியாக, தாமரை மலரின் பல்வேறு பெயர்களான, அரவிந்தம், பங்கேருகம், கோகநகம், பதுமமலர், முளரி, வனசம், புண்டரீகம், அம்போருகம், கமலம் முதலானவை குறிப்பிடப்பட்டுள்ளன.

'கடல்விளிம் புகுத்த கண்ணகல் ஞாலம் உடன் முழு தளந்த தொரு தாமரையே ! ' என்றது கடலால் சூழப்பட்டதாக அமைந்துள்ள அகன்ற இடமான பூமி முழுவதையும் ஒரு தாமரை மலரானது ஒரு சேர அளந்தது (இடது திருவடி) எம்பெருமான் உலகை அளந்த கதையை இருபத்து ஒன்பதாம் பாடலின் உரையில் காண்க. 'வகிரிளம் பிறையான் வார்சடை தேங்கப் பகீரதி சான்றதோர் பங்கேருகமே' என்றது துண்டுபட்ட இளம்பிறை அணிந்தவனாகிய சிவபெருமானுடைய வாரப்பட்ட நீண்ட சடையில் நிறைந்து தங்கும்படியாக, கங்கை நதியை உமிழ்ந்தது ஒரு தாமரை மலராகும். (வலது திருவடி)

'யாரையும் யாரையும் படைக்க நான்முகக் கோவை ஈன்றதோர் கோகனகமே' என்றது அனைத்துப் பொருட்களையும் அனைத்து உயிர்களையும் படைக்கும்படி நான்கு முகங்களை உடைய பிரமதேவனை உண்டாக்கியது ஒரு தாமரை மலராகும் (திரு நாபி).

எம்பெருமான், தமது நாபிக்கமல வட்டத்துள் பெரிய ஒளிமிக்க தாமரை மலரை மலரச் செய்து, அந்தத் தாமரை மலரிலே நான்முகனைப் படைத்தான். அதற்குமேல் நான்முகன் நான்கு வேதங்களையும் எம்பெருமானிடம் ஓதிப்பெற்றான். அந்த வேதங்கள் கூறும் நெறிகள் அறம், பொருள், இன்பம், வீடு என்று சிறந்த நான்கு நெறியாயின என்பார் திருமங்கையாழ்வார். இதனை,

"............தன்நாபி வளையத்துப் பேரொளிசேர்
மன்னிய தாமரை மாமலர்பூத் தம்மலர்மேல்
முன்னம் திசைமுகனைத் தான்படைக்க மற்றவனும்
முன்னம் படைத்தனன் நான்மறைகள் அம்மறைதான்
மன்னும் அறம்பொருள் இன்பம்வீ டென்றுலகில்
நன்னெறி மேம்பட்டன நான்கன்றே ....................."

– (பெரிய திருமடல் :5)

என்று எழிலுற எடுத்தோதுவர். மேலும்,

"இந்து வார்சடை ஈசனைப் பயந்தநான் முகனைத்தன் எழிலாரும்
உந்தி மாமலர் மீமிசைப் படைத்தவன் உகந்தினிது உறைகோயில்"
- (பெரிய திருமொழி 4:2:9)

என்று மற்றொரு பாசுரத்தில் இதனை எடுத்துரைப்பர்.

'திருமகட் கினிய திருமனையாகிப் பருமணி இமைப்பதோர் பதும மலரே' என்றது திருமகள் தங்குவதற்கு இனிமையான இருப்பிடமாகி, கௌஸ்துபரத்தினம் ஒளிரப் பெற்றது ஒரு தாமரை மலராகும். (திருமார்பு)

எம்பெருமானின் திருமார்பில் பெரிய பிராட்டியாராகிய திருமகள் உறைவதால் 'ஸ்ரீதரன்' என்று திருநாமம் பெற்ற எம்பெருமானுடைய வண்டுகள் உலவும் குளிர்ந்த திருத்துழாய் மாலையை அணிந்து அதனால் நிலைபெற்று பெரிய பிராட்டியார் பொருந்துகின்ற இடமான நாராயணனே பரம்பொருள் என்பார் திருமழிசையாழ்வார்.

"திருநின்ற பக்கம் திறவிதென் றோரார்
கருநின்ற கல்லார்க்கு உரைப்பர் – திருவிருந்த
மார்பில் சிரீதரன்தன் வண்டுலவு தண்துழாய்த்
தார்தன்னைச் சூடித் தரித்து."

- (இயற்பா - நான்முகன் திருவந்தாதி :62)

என்ற பாசுரத்தில் இதனை எடுத்தோதுவர்.

'சடைத்தலை தாழ்த்துச் சங்கரன் இரப்ப முடைத்தலை தவிர்த்ததோர் முளரிமா மலரே' என்றது சடாமுடியினை உடைய சிவபெருமான், தலை தாழ்ந்து வேண்டி நிற்ப, புலால் நாற்றத்தையுடைய பிரம கபாலத்தை நீக்கி அருளியது ஒரு தாமரை மலராகும் (வலது திருக்கை) சிவபெருமான் சாபம் பெற்றகதை இருபத்தேழாம் பாடலின் உரையில் கூறப்பட்டுள்ளது.

'ஆங்குமண் டோதரி அணிந்தமங் கலநாண் வாங்கவில் வாங்கிய வனசமும் ஒன்றே' என்பது இலங்கையில் இராவணனின் மனைவியாகிய மண்டோதரி அணிந்திருந்த மாங்கல்ய சூத்திரத்தை இழக்கும்படி செய்த வில்லை வளைத்தது ஒரு தாமரை மலாராகும். (இடத்திருக்கை)

இராவணனால் கவரப் பட்ட சீதாபிராட்டி இலங்கையில் இருக்கின்ற செய்தியை அறிந்து, இராம, இலட்சுமணர் இருவரும் வானரங்களின் துணையோடு, இலங்கைமீது போர் தொடுத்தனர். இராவணனின்மீது அம்பை எய்து கொன்றான் இராமன். இராவணன் இறந்துபட்டதால் அவனுடைய மனைவியாகிய மண்டோதரி மாங்கல்ய சூத்திரத்தை இழந்தாள். இதனை,

*"வாணெடுங்கண் மலர்க்கூந்தல் மைதிலிக்கா இலங்கை*
*மன்னன்முடி ஒருபதும்தோள் இருபதும்போய் உதிர*
*தாணெடுந்திண் சிலைவளைத்த தயரதன்சேய் என்றன்*
*தனிச்சரண்வா னவர்க்கரசு கருமிடம்.........."*

- (பெரிய திருமொழி 3:10:6)

என்ற தன்பாசுரத்தில் விரிவாக எடுத்துரைப்பர் திருமங்கையாழ்வார்.

•

"விரிந்தபுக ழிலங்கை வேந்தர்க்குத் தென்திசை புரிந்தருள் மலர்ந்ததோர் புண்ட ரீகமே" என்றது பரந்துபட்ட கீர்த்தியை உடையவனாக விளங்கிய, இலங்கை வேந்தனுக்காகத் தென்திசை நோக்கி எப்போதும் அருளோடு மலர்ந்திருந்தது ஒரு தாமரை மலராகும். (திருக்கண்கள்) இது குறித்து விரிவான செய்தி முதல் பாடலில் கூறப்பட்டுள்ளது.

"மண்டிணி ஞாலமும் வானமும் உட்பட அண்டமுண் டுமிழ்ந்ததோர் அம்போ ருகமே" என்றது பிரளய காலத்தில் இந்த அண்டம் முழுவதையும் உண்டு பிரளயம் நீங்கிய பின் உமிழ்ந்ததும் ஒரு தாமரை மலராகும். (திருவாய்)

அஞ்சனம் - மை, அரவிந்த வனம் - தாமரைக்காடு. வகிர் - துண்டு, பகீரதி - கங்கை, பருமணி - பெரிய கௌஸ்துப இரத்தினம், சங்கரன் - சிவபெருமான். முடை நாற்றம் - புலால் நாற்றம், மங்கலநாண் வாங்குதல் - அமங்கலியாக்குதல். பவம் - பிறவி. பரிசு - பெருமை.

## கார்காலம்
## கலிநிலைத் துறை

74. பண்கொண்ட வேயூது செவ்வாய் அரங்கேசர் பொன்னிநாட்
டெண்கொண்ட பேராசை தந்தார் மறந்தார்கொல் இசைவண்டுகாள்!
விண்கொண்ட மலைமீது விண்மாரி பொழிகின்ற விசைபோலவென்
கண்கொண்ட முலைமீது கண்மாரி பொழிகின்ற கார்காலமே!

பண்கொண்ட வேயூது செவ்வாய் அரங்கேசர் - (கிருஷ்ணாவதாரத்தில்) இசையைத் தன்னகத்தே கொண்ட புல்லாங்குழலைச் சிவந்த வாயினால் இசைத்த, திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்க எம்பெருமானுடைய,

மறந்தார்கொல் இசைவண்டுகாள் ! - இசைபாடும் வண்டினங்களே ! (இப்பொழுது அவர் திரும்ப வருவதாகச் சொல்லிச் சென்ற கார்காலம் வந்துவிட்டது) அவர் என்னை மறந்து விட்டாரோ !

விண்கொண்ட மலைமீது விண்மாரி பொழிகின்ற விசைபோல - வான்வரை உயர்ந்துள்ள மலைமீது வானம் மழையைப் பொழிகின்ற வேகத்தைப் போல,

கண்கொண்ட முலைமீது கண்மாரி பொழிகின்ற கார்காலமே ! - கண் பொருந்தியதான முலைமீது கண்களில் இருந்து (தலைவனைப் பிரிந்த துன்பத்தைத் தருவதால்) கண்ணீர் மழை பொழிகின்ற மழைக்காலமாக இது விளங்குகின்றது.

தலைவி, கார்காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிப் பிரிந்து சென்ற தலைவன் அக்கார்காலம் வந்தும் திரும்பி வராததால் இரங்கிக் கூறுகிறாள். தலைவியின் பிரிவாற்றாமையை மிகுதிப்படுத்திக் காட்டுவதாகப் பாடுவது இத்துறையின் இலக்கணம். இது முல்லைத்திணையில் நிகழ்வதாகும்.

கார்காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற தலைவனின் பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவி, மலையின்மீது வானம் மழையைப் பொழிகின்ற மழைக்காட்சியைக் காணுகின்றாள். தலைவன் திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்ற கார்காலம் வந்ததை உணர்கின்றாள். வானம் மலைமீது மழையைப் பொழிவது போலவே, தலைவனின் பிரிவால் முலைமலைமீது கண்களில் இருந்து கண்ணீர்,

மழையாகப் பொழிகின்றது. தன்னுடைய நிலையினை அத்தலைவி, 'திருவரங்கர் எழுந்தருளியுள்ள காவிரியாறு பாய்கின்ற சோழவள நாட்டில் என்னுடைய தலைவன், என் எண்ணம் முழுவதையும் ஆட்கொண்டு மிகுந்த ஆசையை மனதில் உண்டாக்கினார். இப்பொழுது அவர் திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்ற கார்காலம் வந்து விட்டது. இசைபாடும் வண்டினங்களே! அவர் என்னை மறந்துவிட்டாரோ' என்று வண்டினங்களை அழைத்து தன் வருத்தத்தையும் ஐயத்தையும் வெளிப்படுத்துகிறாள்.

"தேமருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத்
தேனதனை வாய்மடுத்துன் பெடையும் நீயும்
பூமருவி இனிதமர்ந்து பொறியில் ஆர்ந்த
அறுகால சிறுவண்டே ! தொழுதேன் உன்னை
ஆமருவி நிரைமேய்த்த அமரர் கோமான்
அணியழுந்தூர் நின்றானுக் கின்றே சென்று
நீமருவி அஞ்சாதே நின்றோர் மாது
நின்நயந்தாள் என்றிறையே இயம்பிக் காணே."

- (திருநெடுந் தாண்டகம் :26)

என்ற பாசுரத்தில், 'சோலையில் தேனையுண்டு மகிழ்ந்திருக்கம் சிறிய ஆறுகால்களையுடைய வண்டே ! பசுக்கூட்டங்களை விரும்பி மேய்ப்பவனும் தேவர்களுக்குத் தலைவனும் திருவழுந்தூரில் நிற்பவனுமான எம்பெருமானிடம் 'ஒரு பெண்பிள்ளை உன்னை ஆசைப்படுகின்றாள் என்ற இந்தச் சிறிய வார்த்தையைச் சொல்லிப்பார்' என்பதாக திருமங்கையாழ்வார் எடுத்தோதியுள்ளது ஒப்பிடத்தக்கது.

பண் - இசை. வேய் - மூங்கில். எண் - எண்ணம். விண் - ஆகாயம். கண் கொண்ட மலை - முலை.

**கைக்கிளை**

கட்டளைக் கலித்துறை

75. காரக மோநம் வடதிரு வேங்கடக் கார்வரையோ
நீரக மோநெடு வானக மோதுயி னீடுபணிப்
பேரக மோதென் திருவரங் கப்பெருங் கோயிலென்னும்
ஊரக மோவிடந் தண்காவி நின்ற ஒருவருக்கே.

காரகமோ நம் வடதிரு வேங்கட கார்வரையோ - மேகங்களின் இருப்பிடமோ அல்லது வடக்கே உள்ள திருவேங்கடம் என்னும் பசுமையான மலையோ !

நீரகமோ நெடுவானகமோ துயினீடுபணிப் பேரகமோ - பெரிய நீரின் இடமோ ! நீண்ட பெரிய விண்ணுலகமோ ? நீண்ட உறக்கம் கொண்ட பாம்புகளின் பெரிய இருப்பிடமான நாகலோகமோ !

தென் திருவரங்கப் பெருங் கோயிலென்னும் ஊரகமோ - அழகிய திருவரங்கத்தில் உள்ள திருவரங்கப் பெரியக் கோயில் என்கிற ஊரினிடமோ !

விடந்தண் காவி நின்ற ஒருவருக்கே - குளிர்ச்சி பொருந்திய மலர்ச்சோலையில் நின்ற தலைவியாகிய ஒருத்திக்கு இடமாக விளங்குவது.

தலைவன் அறியாது, தலைவிமீது தலைவன் காதல் கொள்ளுவதும், தலைவன் உணராது, தலைவர்மீது தலைவி காதல் கொள்ளுவதும் 'கைக்கிளை' என்ற துறையின் இலக்கணம். இது ஒருதலை காமம் ஆகும்.

தலைவியைக் கண்ணுற்ற தலைவன், இவள் மானுடப் பிறவியோ! அன்றி மின்னல் கொடியோ ! வரையர மகளிரோ ! நீரர மகளிரோ ! வானர மகளிரோ ! நாகக் கன்னிகையோ ! என்று ஐயுறுகின்றான்.

"மின்னல் கொடி போன்று இருப்பதால், 'காரகமோ' என்றும், வரையர மகளிர் போன்றமையால், வடதிரு வேங்கட கார் வரையோ என்றும், நீரர மகளிர் போன்றமையால், 'நீரகமோ என்றும், வானர மகளிர் போன்றமையால், 'வானகமோ' என்றும், நாக கன்னியர் போன்றமையால், 'துயில்நீடு பணிப் பேரகமோ' என்றும், மானுட மாதர் போன்றமையால்,

'தென்திருவரங்கப் பெருங்கோயில் என்னும் ஊரகமோ' என்றும் விகற்பித்துக் கூறினான் என்ற மூவர்உரை[23] இங்கு சிந்திக்கத்தக்கது.

"போதோ விசும்போ புனலோ பணிகளது பதியோ
யாதோ வறிடுவ தேது மரிதி யமன்விடுத்த
தூதோ வனங்கன் துணையோ வினையிலி தொல்லைத்தில்லை
மாதோ மடமயி லோவென நின்றவர் வாழ்பதியோ !"
- (திருக்கோவையார் :2)

என்ற பாடலில் தலைவன் தலைவியைக் காணுகின்றான். இவள் திருமகள் முதலாகிய தெய்வமோ அன்றி மானிடப் பெண்ணே என்று ஐயுறுகின்றான். ஆதலின் தாமரைப்பூவோ ? ஆகாயமோ ? நீரோ ? பாம்புகளது பதியாகிய நாகருலகோ இவள் வாழும் பதி என்று மனதிற்குள் கூறிக்கொள்கிறான். இது, இப்பாடலோடு ஒப்பு நோக்கத்தக்கது.

காரகம் - மேக மண்டலம். கார்வரை - பெரிய மலை. நீரகம் - நீரினிடம். வானகம் - தேவலோகம். பணி - பாம்பு.

### வஞ்சித்துறை

76. ஒருநயம் பேசுவன்
திருவரங் கேசர்தாள்
மருவுமின் நாசமாம்
கருமவன் பாசமே

ஒருநயம் பேசுவன் - உலக மக்களே ! உங்களுக்கெல்லாம் ஒரு நல்ல வார்த்தையைச் சொல்வேன். கேட்பீர்களாக !

திருவரங் கேசர்தாள் மருவுமின் - திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானின் திருவடிகளைச் சேருங்கள்.

நாசமாம் கருமவன் பாசமே - வினைகளாகிய வன்மையான பற்றுகள் நம்மை விட்டு நீங்கிவிடும் பரமபதம் கிடைக்கும்.

23. திருவரங்கக் கலம்பகம், (மூவர் உரை) ப.106.

திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானின் திருவடிகளைப் பற்றுங்கள். அங்ஙனம் பற்றினால், பற்றற்றவராகி இருவினையும் நீங்கப் பெற்று நற்கதியை அடைவீர்கள் என்று ஆசிரியர், இவ்வுலகத்தோர்க்கு உபதேசமாக எடுத்துரைத்துள்ளார்.

எப்பொழுதும் தம்மையே வணங்குகிறவர்களுக்கு அருள் செய்பவர் எம்பெருமான். ஆகையால் அவரையே எப்பொழுதும் தொழுது, அவரையே எப்போதும் பற்றுக்கோடாக உறுதி செய்து கொண்டோம் என்று,

"தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத்
தம்மையே ஒக்க அருள்செய்வ ராதலால்
தம்மையே நாளும் வணங்கித் தொழுதிறைஞ்சி
தம்மையே பற்றா மனத்தென்றும் வைத்தோமே"
- (பெரிய திருமொழி 11:3:5)

என்ற பாசுரத்தில் எடுத்துரைக்கிறார் திருமங்கையாழ்வார்.

கருமவன் பாசம் - கருமம் + வல் + பாசம் - வினைகளாகிய வலிய பந்தங்கள்.

**தலைவி இரங்கல்**

எண்சீர் ஆசிரிய விருத்தம்

77. பாசமாய் அடியர்பால் நேசமாய் அடிகளும்
பைம்பொனா ராடையும் செம்பொன்மா மேனியும்
ஆசையா மலருநாள் வாசமார் பகலமும்
அஞ்சலென் றருள்செயும் கஞ்சமும் கருணையின்
தேசுலா வதனமும் மாசிலா முறுவலும்
சீரிதா எழுதுகத் தூரிமா மமுமெனக்
கீசனார் திருவரங் கேசனார் திகிரியும்
இலகுவெண் சங்குமே உலகமெங் கெங்குமே.

பாசமாய் அடியர்பால் நேசமாய் அடிகளும் - தன்மீது அன்புகொண்டுள்ள அடியார்களிடத்து மிகுந்த அருளை வழங்குகின்ற திருவடிகளும்,

பைம்பொனா ராடையும் செம்பொன்மா மேனியும் - பசம்பொன்னால் செய்யப்பட்ட ஆடையும் செவ்விய பொலிவுடையதாக விளங்கும் பெரிய கரிய மேனியும்,

ஆசையா மலருநாள் வாசமார் பகலமும் - காதலையுடைய செந்தாமரை மலரில் விளங்குபவளான திருமகள் தங்குமிடமாகப் பொருந்திய விரிந்த திருமார்பும்,

அஞ்சலென் றருள்செயும் கஞ்சமும் - தனனை அடைக்கலமாகச் சேர்ந்த அடியவரை 'அஞ்சேல்' என்று அருள் செய்யும் தாமரை மலர்போன்ற உள்ளங்கையும்,

கருணையின் தேசுலா வதனமும் மாசிலா முறுவலும் - அருள்ஒளி பெருகி நிற்கின்ற திருமுகமும், அதில் விளங்குகின்ற குற்றமற்ற புன்சிரிப்பும்,

சீரிதா எழுதுகத் தூரிநா மமுமென - சிறப்புடையதான மணமிக்க கஸ்தூரியால் எழுதப்பட்ட நாமதிலகமும்,

கீசனார் திருவரங் கேசனார் திகிரியும் - எம்பெருமானாக விளங்கும் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானின் சக்கரமும்,

இலகுவெண் சங்குமே உலகமெங் கெங்குமே - விளங்குகின்ற வெண்சங்கும் அனைத்து உலகங்களிலும் அனைத்து இடங்களிலும் விளங்குகிறது.

தலைவனைப் பிரிந்து ஆற்றாளாகிய தலைவி, அவனைப் பற்றியே எண்ணியிருக்க, அத்தலைவனின் உருவம் எங்கும் நிறைந்திருப்பது போல் தோன்ற, தலைவி இரங்கிக் கூறியது.

இப்பாடலில், திருவரங்கரைத் தன் தலைவனாகக் கருதி இருக்கும் தலைவி, அவனைப் பற்றியே நினைத்திருக்க, தன்மீது அன்பு கொண்டுள்ள அடியார்களிடத்து மிகுந்த அருளை வழங்குகின்ற திருவடிகளும், பசும்பொன்னால் செய்யப்பட்ட ஆடையும், செவ்விய பொலிவு உடையதாக விளங்கும் பெரிய கரிய மேனியும், காதலையுடைய செந்தாமரை மலரில் விளங்குபவளான திருமகள் உறைகின்ற விரிந்த திருமார்பும், தன்னை அடைக்கலமாகச் சேர்ந்த அடியவர்களை 'அஞ்சேல்' என்று அருள் செய்யும் தாமரை மலர்போன்ற உள்ளங்களையும், அருள்ஒளி பெருகுகின்ற திருமுகமும், அதில் விளங்குகின்ற குற்றமற்ற

புன்சிரிப்பும், சிறப்புடையதான மணமிக்க கஸ்தூரியால் எழுதப்பட்ட நாமதிலகமும், திருவரங்கப் பெருமான் கையில் ஏந்தியுள்ள சக்கரமும் விளங்குகின்ற வெண்சங்கும் உலகெங்கும் நிறைந்திருப்பது போல தலைவிக்குத் தோன்ற, இரங்கிக் கூறுவதாக அமைந்துள்ளது.

"மைக்குஞ் சரநிரை யாற்றஞ்சை வாணன் மருவலரைக்
கைக்கும் களங்கெழு பாசறை யூடு கயலும் வில்லும்
மொய்க்குஞ் சுடரிள வம்புலி தானு முயங்கியெல்லாத்
திக்குந் தொழவரு மேசுரு ளோலைத் திருமுகமே."

- (தஞ்சைவாணன் கோவை : 423)

என்ற பாடலில் தலைமகள், தலைவியின் உருவ வெளிப்பாடு கண்டு, பாசறையின்கண் கயல்போன்ற கண்ணும் வில்போன்ற புருவமும் மொய்க்கும் ஒலியையுடைய இளம்பிறை போன்ற நுதலும் கூடிச் சுருண்ட ஓலையையுடைய திருமுகமானது எல்லாத் திக்கிலும் யான்தொழுவரும் என்கிறான். இது இப்பாடலோடு ஒப்பு நோக்கத் தக்கது.

ஆடை - பீதாம்பரம். அகலம் - திருமார்பு. கஞ்சம் - தாமரை மலர். தேசு - ஒளி. திகிரி - சக்கரம்.

## தலைவன் இடம் அணித்து என்றல்

வஞ்சி விருத்தம்

78. எங்கணு நிறைந்துறையும் எம்பிரான்
கொங்கணுகி வண்டுமுரல் கோயில்சூழ்
உங்கள்வரை எங்கள்வரை ஒன்றியே
மங்கையுன கொங்கைகளை மானுமே.

எங்கணு நிறைந்துறையும் எம்பிரான் - அனைத்து உலகங்களிலும் அனைத்து இடங்களிலும் நிறைந்து தங்கியிருக்கும் எம்பிரான்,

கொங்கணுகி வண்டுமுரல் கோயில்சூழ் - வண்டுகள் தேனுக்காக நெருங்கி நிறைந்து ஒலிக்கின்ற திருவரங்கப் பெரிய கோயிலைச் சூழ்ந்திருக்கின்ற,

உங்கள்வரை, எங்கள்வரை ஒன்றியே - உங்களுடைய மலையும் எங்களுடைய மலையும் நெருங்கி,

மங்கையுன கொங்கைகளை மானுமே - பெண்ணே ! உன்னுடைய தனங்களை ஒத்தவையாகக் காணப்படுகின்றன.

தலைவியைப் பிரியக் கருதிய தலைவன், உங்களுடைய ஊரும் எங்களுடைய ஊரும் மிக நெருங்கி அமைந்துள்ளன என்று கூறி ஆற்றுப்படுத்துதல்; இடம் அணித்தென்றல் என்னும் துறையாகும்.

இப்பாடலில், தலைவன், தலைவியிடம், வண்டுகள் தேனைப் பருகுவதற்காக நெருங்கி நிறைந்து ஒலிக்கின்ற திருவரங்கப் பெரிய கோயிலைச் சூழ்ந்திருக்கின்ற உங்களுடைய மலையும் எங்களுடைய மலையும் உன்னுடைய தனங்களை ஒத்தனவாக நெருங்கி அமைந்துள்ளன என்கிறான். தஞ்சை வாணன் கோவையில்,

"மணிபொன் சொரியுங்கை வாணன்றென் மாறை மருவினர்போல்
தனிபொன் சொரியுந் தடமுலை யாயுயர் சந்தமுந்தி
அணிபொன் சொரியு மருவியெஞ் சார லகத்தலர்தேங்
கணிபொன் சொரியநன் சாரன்மென் காந்தளங் கையகத்தே"

– (தஞ்சை வாணன் கோவை :25)

என்ற பாடலுடன் இப்பாடல் ஒப்புநோக்கத்தக்கது.

கொங்கு – தேன். முரலுதல் – ஒலித்தல்.

## இரங்கல்

### கலிநிலைத்துறை

79. மானார் கேசன் மேலார் மாலார் வாழ்கோயில்
தேனார் காவில் பூவா ராயும் தேனேபால்
நானா போகத் தின்பம் கண்டார் நான்வாடப்
போனார் வாரா தேதோ வோதாய் போதாவே.

மானார் கேசன் மேலார் மாலாய் வாழ்கோயில் – கங்கையைத் தன் சடாமுடியின்மேல் தாங்கிக் கொண்டுள்ள சிவபெருமான் முதலிய தேவர்கள் பேரன்பு கொண்டு தங்குகின்ற திருவரங்கப் பெரியகோயிலில்,

தேனார் காவில் பூவாராயும் தேனே போல் - தேன் நிறைந்திருக்கின்ற மலர்ச் சோலையில், மலர்கள் தோறும் சென்று ஆராய்ந்து தேனைப் பருகுகின்ற வண்டைப் போல,

நானா போகத் தின்பங் கண்டார் நான் வாடப் போனார் - நாலாவிதமான போக சுகங்களைக் கண்டவரான என் தலைவர், நான் வாடிநிற்க, என்னை விட்டுப் பிரிந்து சென்றார்.

வாரா தேதோ வோதாய் போதாவே - ஏன் வரவில்லை என்பதைப் பெருநாரையே நீ சொல்லுவாயாக.

தலைமகனைப் புணர்ந்து பிரிந்து சென்ற தலைமகன், நீண்ட காலமாகியும் மீண்டு வராததால், தலைவி நாரையை நோக்கி இரந்து கூறியது.

இப்பாடலில், திருவரங்கத்தில் தேன் நிறைந்த மலர்ச்சோலையில் மலர்கள்தோறும் சென்று ஆராய்ந்து தேனைப் பருகுகின்ற வண்டைப் போன்று, பலமகளிரிடத்துச் சுகங்களைக் கண்டவரான என்னுடைய தலைவர், என்னை விட்டுப் பிரிந்து சென்றார். நீண்ட நாட்களாகியும் வராததால், ஏன் வரவில்லை என்பதை பெருநாரையே நீ சொல்லுவாயாக என்று இரந்து கூறுவதாக அமைந்துள்ளது.

நாரையிடம் இரங்கி தலைவியைப் போல,தலைவன் வராததால் வருந்திய தலைவியின் இரங்குதலை, 'அறியாமையுடையது ; நமக்குச் சொந்தமானது' என்று எண்ணி, ஒரு செயலை அதன்மூலம் செய்து கொள்ளக் கருதி, நம்முடைய நெஞ்சினைத் தூது அனுப்ப எண்ணியவர்கள் அதனைக் கைவிட்டு விடுதலே சிறந்ததாகும். ஏனெனில் எம்பெருமானுடைய திருவடிக்கு என் நெஞ்சினைத் தூது விட்டேன். ஆனால் அது அவன் வசமாகித் தன்னை இழந்து, தூதுவிட்ட என்னை மறந்தது. என்னையும் கைவிட்டு விட்டது. இன்று வரையிலும் எம்பெருமானையே தொடர்ந்து மிகவும் மகிழ்ச்சியுடன் உலாவிக் கொண்டிருக்கிறது.

"மடநெஞ்சம் என்றும் தமதென்றும் ஓர்கருமம் கருதி
விடநெஞ்சை உற்றார் விடுவோ ரமையுமப்பொன் பெயரோன்
தடநெஞ்சம் கீண்ட பிரானார் தம்மடிக்கீழ் விடப்போய்த்
திடநெஞ்ச மாயெம்மை நீத்தின்று தானும் திரிகின்றதே"

- (இயற்பா - திருவிருத்தம் : 46)

என்று தம்பாசுரத்தில் இதனைக் குறிப்பிடுவார் நம்மாழ்வார். இப்பாசுரம் பொருள்நிலையில் இப்பாடலோடு ஒப்புநோக்கத்தக்கது.

போதா – பெருநாரை, மான் ஆர் கேசன் – பெண்மானாகிய கங்கையைத் தலையில் தாங்கிய சிவபெருமான். தேன் – வண்டுகள். ஓதாய் – சொல்லு.

**மதங்கு : மடக்கு**

அறுசீர் ஆசிரிய விருத்தம்

80. போத வெனக்கெளி தானார் போத வனுக்கரி தானார்
நாத ரரங்கர் திருத்தாள் நாடி அரங்கின் நடக்கின்
ஓது மதங்கி நடித்தாள் உள்ள மதங்கி அரங்காம்
வேத மறைந்திட வல்லீர் ! விரைய மறைந்து விடீரே.

போத வெனக்கெளி தானார் போத வனுக்கரி தானார் – அடியவனாகிய எனக்கு மிக எளிமையானவரான திருவரங்கப் பெருமான், தாமரை மலரில் தோன்றிய பிரமனுக்கு மிகவும் அருமையானவரானார்.

நாத ரரங்கர் திருத்தாள் நாடி அரங்கில் நடக்கின் – திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கக் கூடிய அப்பெருமானுடைய திருவடிகளை வணங்க விரும்பி, அங்குள்ள கோயிலிலுள்ள சபைக்கு நீங்கள் சென்றீர்களேயானால்,

ஓது மதங்கி நடித்தாள் உள்ள மதங்கி அரக்காம் – அனைவராலும் சிறப்பித்துப் போற்றப்படுகின்ற மதங்கியானவள் நடனம் செய்தால், அதனைக் காண்பவருடைய மனமானது நெருப்பிலிட்ட அரக்கைப் போல உருகிப் போகும். (ஆகையால்)

வேத மறைந்திட வல்லீர் – நால்வகையான வேதங்களையும் ஓதக்கற்ற வல்லவர்களே !

விரைய மறைந்து விடீரே – (மதங்கியரது நடனத்தைக் காணாது) விரைவாக மறைந்து சென்று விடுங்கள்.

மதங்கி என்பவள் ஆடல் பாடல் கலைகளில் வல்லவளான இளம் வயதுப் பெண்ணாவாள். இரண்டு கைகளிலும் வாளை எடுத்துக் கொண்டு சுழற்றியபடி, தானும் சுழன்று ஆடக்கூடியவள். அத்தகைய நடனத்தைப் பாராட்டிக் கூறும் வண்ணம் பாடுவது 'மதங்கு' என்னும் உறுப்பாகும். இதனை மதங்கம், மதங்கியார் என்றும் வழங்குவர்.

ஒரு பாடலின் இடையே சொல், சீர் ஆகியன மீண்டும் பொருள் வேறுபாட்டுடன் அமையுமாறு பாடுவது மடக்காகும். இப்பாடலில் மதங்கும் மடங்கும் இணைந்து அமைந்துள்ளது. அனைவராலும் சிறப்பித்துப் போற்றக் கூடிய ஆடல் பாடல் கலையில் வல்லவளாக விளங்கும் மதங்கியின் நடனத்தைக் கண்டால், மனம் நெருப்பிலிட்ட மெழுகைப்போல உருகும். இதனால் சிந்தனை சிதறிப் போகும். தாமரை மலரில் தோன்றிய பிரமதேவனுக்கு அரிதானவராகவும் அடியவர்க்கு மிக எளியவராகவும் விளங்கக் கூடியவர், திருவரங்கத்தில் எழுந்தருளி இருக்கக்கூடிய திருவரங்கப் பெருமான். ஆதலால், வேதம் ஓத வல்லவர்களே ! மதங்கியின் நடனத்தில் மனதைப் பறிகொடுத்து விடாமல், விரைவாக மறைந்து சென்று விடுங்கள் என்று எச்சரிக்கை விடுக்கின்றார் ஆசிரியர். உலக ஆசைகளில் மனதைச் செலுத்தாமல், இறைவனுடைய திருவடிகளையே நினைத்திருப்பின், பரம பதத்தை அடையலாம் என்பது ஆசிரியரின் கருத்தாகும்.

அறைதல் - ஓதுதல். போதவன் - பிரமன். நடித்தல் - நடனமிடல். அங்கி + அரக்கு +ஆம் - நெருப்பிலிட்ட அரக்கு.

**பாண்**

எண்சீர் ஆசிரிய விருத்தம்

81. விடாதுபூ மடந்தைமார் விரும்பவாயர் மாதர்தோள்
வியந்துமுன் நயந்தவர்க்கு விற்குமெங்கள் கொங்கைதான்
அடாததென்று பாணவின்னம் அங்ஙனன்றி இங்ஙனம்
அரங்கரன்பு கூரவின்ப மாகவல்ல வல்லவே
எடாதிருக்கின் வாய்திறக்கு ளங்களைய உச்சிதோய்
எண்ணெய்பட்ட மெய்யிலிட்ட முத்தமுத்த ரீயமும்
படாமுகம் திறந்தசைத்து மழலைவாயின் மணமறாப்
பசுநரம்பு புடைபரந்து பால்சுரந்த முலையுமே.

விடாதுபூ மடந்தைமார் விரும்ப - சிறிதும் விட்டுப் பிரியாமல் திருமகளும் பூமகளும் விரும்பி கூடியிருக்கவும்,

ஆயர் மாதர் தோள் வியந்துமுன் நயந்தவர்க்கு - (அவ்விருவரையும் தவித்துக் கிருஷ்ணாவதாரத்தில்) ஆயர்குலப் பெண்ணாகிய நப்பின்னையின் தோள்களை அதிசயித்து விரும்பிக் கூடிய தலைவருக்கு,

விற்கு மெங்கள் கொங்கைதான் அடாததன்று - விலைக்கு விற்கும் எங்களது கொங்கைகள் தகாதன அல்ல.

பாண இன்னம் அங்ஙனன்றி இங்ஙனம் - பாணனே ! இன்னமும் அவ்வாறு இல்லாமல் இவ்வாறு

அரங்கரன்பு கூரவின்ப மகாவல்ல வல்லவே - திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானுக்கு அன்பு மிகும்படி இன்பம்தரத் தக்கவை.

எடாதிருக்கின் வாய்திறக்கு எங்களைய உச்சி தோய் - எடுத்துப் பால்கொடாது இருந்தால் வாய்திறந்து அழுகின்ற எங்கள் குழந்தையின் தலைஉச்சியில் தடவப்பட்ட,

மெய்யிலிட்ட முத்தமுத்த ரீயமும் - எங்கள் உடலில் அணிந்துள்ள முத்து ஆபரணங்களும் உத்தரீயம் என்று சொல்லப்படும் மேலாடையும்,

படாமுகம் திறந்துசைத்து மழலைவாயின் மணமறா - மேலாடை (சிறிது) குழந்தையால் திறக்கப்பட்டு, மழலைச் சொற்களையுடைய அக்குழந்தையின் வாயில் பால்மணம் மாறப் பெறாமல்,

பசுநரம்பு புடைபரந்து பால்சுரந்த முலையுமே - பச்சை நரம்புகள் புறத்தே பரந்துப்பட்டதாதக் தோன்றும்படி பாலைச் சுரக்கின்ற தனங்களும்,

பரத்தையரைப் புணர்தல் பொருட்டுத் தலைமகளைப் பிரிந்து செல்கிறான் தலைமகன். சிறிது காலத்திற்குப் பிறகு தலைமகளது கருத்தை அறிந்து அவளைச் சமாதானப்படுத்தி, அவளிடம் தான் வருவதாக பாணன் ஒருவனைப் பேசி வருமாறு அனுப்புகின்றான். அவ்வாறு அனுப்பப்பட்ட பாணனிடம் தலைவி வெகுண்டு கூறுவதாக அமைவது 'பாணனொடு வெகுளுதல்' என்னும் துறையின் இலக்கணமாகும்.

திருவரங்கநாதர், திருமகள், பூமகள் ஆகிய இரு தேவியர் இருக்க, ஆயர்குலப் பெண்ணாகிய நப்பின்னையை மணந்தவர். அத்தகைய அரங்கன், எங்களை விரும்புவதற்காக விலையாகக் கொடுத்த எங்களுடைய தனங்கள் குழந்தையைப் பெற்றுப் பாலூட்டுதலின் காரணமாகப் பச்சை நரம்புகள் புறத்தே பரந்துபட்டதாக விளங்குகின்றன. அவை அரங்கருக்கு அன்பு மிகும்படி இன்பம் தரத்தக்கனவேயாகும். அங்ஙனம் இருக்க, முன்னர் கூடின எங்களை இப்பொழுது வெறுப்பது சிறிதும் ஏற்படையதன்று என்று வெகுண்டு கூறுவதாக அமைந்துள்ளார் ஆசிரியர்.

"மைந்நாண் மலர்த்தொடை வாணன்தென் மாறையெம் மன்னவுந்
தந்தாண் முயங்கி அமிழ்தென வார்ந்தனிர் ஆர்வமுற்று
முந்நாண் மதிவட்ட மென்முலை மாதை முனிந்துநஞ்சென்
றிந்நாள் மிகவுவர்த் தீர்புல வாநிற்றிர் எங்களையே"

- (தஞ்சைவாணன் கோவை : 403)

என்ற தஞ்சை வாணன் கோவைப் பாடல், இப்பாடலோடு ஒப்பு நோக்கத்தக்கது.

பூமடந்தைமார் - திருமகளும் நிலமகளும், நப்பின்னை - கிருஷ்ணாவதாரத்தில் மணந்த மனைவியருள் ஒருத்தி, உத்தரீயம் - மேலாடை.

## இரங்கல்
### கட்டளைக் கலித்துறை

82. முலைகொண்ட பால்மணம் வாய்மாறிற் றில்லையம் மொய்குழலோ(டு)
அலைகொண்ட தின்னமென் கையணை யேயலை யாழிவற்றச்
சிலைகொண்ட செங்கை யரங்கேசர் தாள்கொண்ட தேசமெல்லாம்
விலைகொண்ட வாள்விழி யாள்சென்ற வாறெங்கன் வெஞ்சுரமே.

முலைகொண்ட பால்மணம் வாய்மாறிற் றில்லை - சிறுமகளின் வாயில் முலைப்பால் உண்டதால் ஏற்பட்ட பால்மணம் இன்னும் மாறவில்லை.

அம்மொய் குழலோ அலைகொண்டது – அவளுடைய அழகிய நெருங்கிய கூந்தலோ அலைந்துகொண்டே இருக்கிறது.

என் கையணையே ! ஆழிவற்ற சிலைகொண்ட – என்னுடைய கையே தலைவைத்துப் படுக்கும் தலையணையாக இருக்கிறது. கடல்நீர் வற்றும்படியாக அம்பினை எய்த,

செங்கை அரங்கேசர் தாள்கொண்ட தேசமெல்லாம் – சிவந்த திருக்கைகளையுடைய, திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கநாதரின் திருவடியால் அளந்து கொள்ளப்பட்ட உலகம் முழுவதையும்

விலைகொண்ட வாள்விழியாள் சென்றவா றெங்ஙன் வெஞ்சுரமே – தனக்கு விலையாகக் கொண்ட வாள்போன்ற கண்களையுடைய இவள் கொடிய பாலைநில வழியில் தலைவனுடன் போனவகை எவ்வாறோ !

களவுப் புணர்ச்சியின்கண் தலைவி, தலைமகனைப் புணர்ந்து உடன்போக்கு மேற்கொண்டு, அவனுடன் சென்றதை அறிந்த செவிலி இரங்குவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

பால்மணம் மாறாத வாயையுடைய தலைமகளாகிய இச்சிறுமகளின் கூந்தல் அலைந்து கொண்டே இருக்கிறது. என் கையையே தலையணையாகக் கொண்டிருந்தாள். கடல் சுவரும்படியாகக் கணைவிடுத்த சிவந்த கைகளையுடைய அரங்கேசர், திருவடிகளால் அளந்த உலகம் முழுமையையும் தனக்கு விலையாகக் கொண்ட தலைவி, கொடிய பாலைவழியில் போன வகை எவ்வாறோ என்று வருந்திய செவிலியின் கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது. நற்றாயின் கூற்றாகவும் இதனைக் கூறலாம்.

'தலைமகள் இளமைக்குச் செவிலி இரங்குதல்' என்றமைந்த திருவிருத்தப்பாவின் பாசுரம் ஒன்றில், 'என் மகளின் முலையோ இன்னும் முழுவதுமாக வளர்ச்சி பெறவில்லை ; அடர்ந்ததும் அழகியதுமான அவள் கூந்தலோ முழுவதுமாக வளராமல் இருக்கின்றன ; அவளுடைய ஆடையோ இடுப்பில் இன்னும் நன்றாகப் பொருந்தவில்லை. கடலால் சூழப்பட்ட உலகையெல்லாம் விலைபேசும்படியான அவள் கண்களோ மருண்ட பார்வையாக உள்ளன. இத்தகைய சிறுமியான இவள்,

இருக்கின்ற மலை, எம்பெருமானுடைய மலை என்று சொல்லுகிறாள் என்று செவித்தாய் தன் மகளின் இளமைக்கு இரங்குகிறாள்.

"முலையோ முழுமுற்றும் போந்தில மொய்பூங் குழல்குறிய
கலையோ அரையில்லை நாவோ குழறும் கடல்மண்ணெல்லாம்
விலையோ எனமிளி ரும்கண் இவள்பரமே பெருமான்
மலையே திருவேங் கடமென்று கற்கின்ற வாசகமே"
- (இயற்பா : திருவிருத்தம் : 60)

என்று நம்மாழ்வார் இதனை அழகுற எடுத்தோதுகின்றார்.

பெரியாழ்வார் திருமொழியில், 'மாயன்மேல் மகள் மாலுறும் கோலம் தாயவள் கூறல்' என்ற பகுதியில், 'இச்சிறு பெண் புழுதியை உடலில் பூசிக்கொண்டு, இன்னும் மழலைச் சொல் மாறாதவளாகச் சிற்றாடையைச் செம்மையாக இடுப்பில் கட்டத் தெரியாதவளாய்ச், சிறு மண்செப்பு, முச்சில் இவைகளைக் கையில் வைத்திருப்பவள் (மூன்றாம் பத்து :7:1) இவள் இந்தப் பருவத்தில் அடக்கமில்லாத பெண்களோடு கூடி, அதன் பலனாகத் தவறாகப் பேசி இவள் கண்ணபிரான்மீது விருப்பம் கொள்கிறாள்' என்ற தாயின் கூற்றின் வாயிலாக இதனை அறியலாம்.

இவ்விரு பாசுரச் செய்திகளும் இப்பாடலோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கன.

மொய்குழல் - நெருங்கிய கூந்தல். ஆழி - கடல். வெம்சுரம் கொடிய பாலை வழி.

**இரங்கல்**

**எண்சீர் ஆசிரிய விருத்தம்**

83. வெஞ்சமம் கருதும் கஞ்சனும் எருதும்
வேழமும் பரியும் வீழமுன் பொருதார்
தஞ்சமென் றவருக் கஞ்சலென் றருளும்
தாயிலன் புடையார் கோயிலின் புடையார்
மஞ்சுவண் டனமும் துஞ்சுதண் டலைவாய்
வல்லியொன் றதிலே எல்லியும் திகழும்
கஞ்சமுண் டதிலே நஞ்சமுண் டதிலே
கள்ளமுண் டதுவென் உள்ளமுண் டதுவே.

வெஞ்சமம் கருதும் கஞ்சனும் எருதும் - கொடிய போரைச் செய்ய எண்ணுகின்ற கம்சனும் (கிருஷ்ணாவதாரத்தில) கொல்லுவதற்காக ஏவப்பட்ட எருதின் உருவம் கொண்ட அரிட்டாசுரனும்,

வேழமும் பரியும் வீழமுன் பொருதார் - குவலயாபீடம் என்னும் பட்டத்து யானையும் குதிரையின் வடிவுடன் வந்த கேசி என்னும் அசுரனும் அழிந்து வீழும்படி முன் நாளில் போர் செய்தார்.

தஞ்சமென் றவருக் கஞ்சலென் றருளும் - அத்தகைய திருவரங்கப் பெருமான் தன்னை அடைக்கலமாக வந்து சேர்ந்தவரை 'அஞ்சவேண்டாம்' என்று அரவணைத்துக் காக்கின்ற,

தாயிலன் புடையார் கோயிலின் புடையார் - பெற்ற தாயைக் காட்டிலும் மிகுதியான அன்பை உடையவரது திருவரங்கப் பெரியகோயிலின் புறத்தே,

ஆர்மஞ்ச வண்டினமும் துஞ்சுதண் டலைவாய் - நிறைந்த மேகக் கூட்டங்களும் வண்டுக் கூட்டங்களும் தங்கி இருக்கின்ற குளிர்ச்சி பொருந்திய சோலையினிடத்தில்,

வல்லியொன் றதிலே எல்லியும் திகழும் கஞ்சமுன் டதிலே - கொடி ஒன்று (தலைவி) உண்டு. அதில் இரவிலும் விளக்கமுடையதான தாமரை (முகம்) ஒன்ற உண்டு. அதில்,

நஞ்சமுண் டதிலே கள்ளமுன் டதுவெண் உள்ளமுண் டதுவே - அந்த முகத்தில் விடம் போன்ற கண்களும், அந்தக் கண்களில் மனதைக் கவரும் கள்ளத்தனமும் உண்டு. அது என் உள்ளத்தைக் கவர்ந்தது.

தெய்வப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன், பாங்கன் ஒருவன் தன்னை நோக்கி, மெலிவிற்குக் காரணம் வினவியதற்கு விடையாகத் தான் உற்றதைக் கூறியது.

இப்பாடலில், 'திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமான், 'அடைக்கலம்' என்று தன்னிடம் சரணடைந்தவர்களுடைய அச்சத்தைப் போக்கி, தாயினும் அன்புடையவராக விளங்குபவர். அவர்தம் கோயிலின் புறத்தே இருந்த, மேகக் கூட்டங்களும் வண்டுக் கூட்டங்களும் தங்கி இருக்கின்ற சோலையில் தலைவன், தலைவியைக் காணுகின்றான். தன் மனதைப் பறிகொடுக்கிறான். பின்னர் அவளைக் காணாமல்

மெலிவடைகிறான். இந்நிலையில் பாங்கன் ஒருவன் எதிர்பட்டுத் தலைவனின் மெலிவிற்குக் காரணம் வினவ, 'சோலையில் கொடி போன்றதொரு பெண்ணைக் கண்டேன். இரவிலும் ஒளிரும் தாமரையைப் போன்று அவள் முகம் விளங்கியது. அம்முகத்தில் நஞ்சுத்தன்மை உடையனவாக இரண்டு கண்கள் இருந்தன. அக்கண்களில் கள்ளத்தனம் தெரிந்தது. அக்கள்ளத் தனத்தால் என்மனம் அவளித்தே கவரப்பட்டது' என்கிறான் தலைவன்' என்பதாக அமைத்துள்ளார் ஆசிரியர்.

திருவரங்கப் பெருமான் தன்னைச் சரணாக அடைந்தவர்க்குத் தாயைக் காட்டிலும் மிகுந்த அன்படையவராக விளங்கக் கூடியவர். அதனாலேயே 'தாயிலன் புடையார்' என்பர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். நம்மாழ்வார், தாயையும் தந்தையையும் மற்றையோரும் நீயே என்று "பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தை நீ மற்றையார் ஆவாரும் நீ" (பெரிய திருவந்தாதி :5) தன் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தன்னிடம் அடைக்கலம் என்று வந்தவர்க்கு 'அஞ்சேல்' என அருள்புரியக் கூடியவன் என்பதால், 'தஞ்சமென்றவருக் கஞ்சலென் றருளும்' பெருமானைக் காட்டுகிறார்.

*"அக்கரை என்னும் அனர்த்தக் கடலுள் அழுந்தியுன் பேரருளால்*
*இக்கரை யேறி இளைத்திருந் தேனைஅஞ் சேல்என்று கைகவியாய்"*
-(பெரியாழ்வார் திருமொழி 5:3:7)

என்று எம்பெருமானிடம், சம்சாரம் என்னும் பெருங்கடலில் அழுந்தி இளைத்திருந்து உனது அருளால் ஏறிய அடியேனை, அஞ்சாதே என்று கைகாட்டி அருள்வாயாக என்றார் பெரியாழ்வாரும்.

**அரிட்டாசுரனை அழித்த வரலாறு (கிருஷ்ணாவதாரத்தில்)**

கண்ணனைக் கொல்லுமாறு கம்சன், அரிட்டன் என்னும் அசுரனை ஏவினான். அவ்வரக்கன் எருதுவடிவம் கொண்டு பசுக்களையெல்லாம் முட்டினான். இடைச்சேரியை அச்சுறுத்திக் கொண்டு திரிந்தான். கண்ணனுடைய வயிற்றில் முட்டிக் கொல்ல வேண்டுமென்று

கண்ணன் வயிற்றைக் குறிபார்த்து பாய்ந்தான். கண்ணன், அவ்வெருது அசைய முடியாமல் அதன் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு, தன் காலினால் அவ்வெருதின் வயிற்றில் உதைத்தான். அதன் கழுத்தைப் பிடித்துக் கசக்கினான். கொம்புகளில் ஒன்றைப் பறித்து அதனாலேயே அவ்வெருதை அடித்துக் கொன்றான்.

இந்நிகழ்ச்சியை திருமங்கையாழ்வார்

"தம்பரம் அல்லன ஆண்மைக ளைந்தனி
யேநின்று தாம்செய்வரோ
எம்பெருமான்! உன்னைப் பெற்ற வயிறுடையேன்
இனியான் என்செய்கேன்?
அம்பரம் ஏழும் அதிரும் இடிகுரல்
அங்கனல் செங்கண்உடை
வம்பவிழ் கானத்து மால்விடை யோடு
பிணங்கநீ வந்தாய் போலும்."
- (பெரியதிருமொழி 10:7:13)

என்று தன் பாசுரமொன்றில் விளக்கமாக எடுத்தோதுவர்.

குவலயாபீடத்தை அழித்த கதையை முதல் பாடலில் முச்சீர் ஓரடி அம்போதரங்கம் நான்கின் உரையில் காணலாம்.

**கேசிகனைக் கொன்ற வரலாறு ( கிருஷ்ணாவதாரத்தில்)**

கண்ணபிரானைக் கொல்லப் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்த கம்சன், ஒரு நாள் கேசியென்னும் அசுரனைக் கண்ணனிடம் அனுப்பினான். அக்கேசி, குதிரையின் வடிவத்தை எடுத்துக் கொண்டு ஆயர்கள் அஞ்சி நடுங்குமாறு கனைத்துக் கொண்டு கண்ணன்மீது பாய்ந்து வந்தான். கண்ணன் தன்னுடைய கைகளைப் பெரிதாக்கி நீட்டினான். அதன் வாயில் தாக்கினான். பற்களை உதிர்த்து உதட்டைப் பிளந்தான். அதனுடைய உடலையும் இரு பிளவாக்கிக் கொன்றான்.

இந்நிகழ்வினை, குலசேகராழ்வார், 'மாவினைவாய் பிளந்துகந்த மாலை வேலை வண்ணனை என் கண்ணனை' (பெருமாள் திருமொழி 1:4) என எடுத்தோதுவர். இதனைத் திருமங்கையாழ்வார், 'மாவாயின் அங்கம் மதியாது கீறி' - (பெரியதிருமொழி 3:2:8) என்றும்,'வெஞ்சினத்து அரிபரி கீறிய அப்பன்' (பெரியதிருமொழி 4:2:7) என்றும், 'மாத்தொழில் மடங்க சென்று ( பெரியதிருமொழி 4:5:3) என்றும் பலவாறாக விவரிப்பர். 'மாபிளந்த கைத்தலந்த கண்ணன்.' (திருச்சந்த விருத்தம் :37) என்று இதனைச் சுட்டுவர் திருமழிசையாழ்வார்.

வெஞ்சமம் - கொடிய போர், எருது - கம்சனால் ஏவப்பட்ட எருதின் உருவம் கொண்ட அரிட்டாசுரன் என்ற அசுரன் வேழம் - கம்சனுடைய பட்டத்து யானை. குவலயாபீடம் என்ற பெயரைக் கொண்டது. பரி - கம்சனால் ஏவப்பட்ட குதிரையின் உருவம் கொண்ட கேசி என்னும் அசுரன், பொருதல் - போர் செய்தல். தஞ்சம் - அடைக்கலம். புடை - புறம். துஞ்சுதல் - தங்குதல். வல்லி - கொடி. எல் - இரவு. நஞ்சம் - விடம். கள்ளம் - கள்ளத்தனம்.

## வேனிற்காலம்
### எண்சீர் ஆசிரிய விருத்தம்

84. உண்டுமிழ் வாசமுடன் தண்டலை மாருதம்வந்
துலவிய சாளரமும் குலவியவான் நிலவும்
விண்டலர் பூவணையும் மென்பனி நீர்புழுகும்
வேனியி லும்முதிரா வேனிலும் ஆகியவால்
அண்டர் தொழும்பெருமான் அம்புய மின்பெருமாள்
அருமறை யின்பெருமான் அழகிய நம்பெருமாள்
புண்டரி கம்கமழும் தண்துறை ஓதிமமே!
புன்னைகள் சிந்தலரே இன்னமும் வந்திலரே!

உண்டுமிழ் வாசமுடன் தண்டலை மாருதம் வந்து - உட்கொண்டு வெளிவீசுகின்ற வாசனையுடன் குளிர்ந்த பூஞ்சோலையில் இருந்து இளங்காற்று வந்து செல்லும்.

உலவிய சாளரமும் குலவிய வானிலவும் – சன்னல்களும், விளங்குகின்ற சந்திரனுடைய ஒளியும்,

விண்டலர் பூவணையும் மென்பனி நீர்புழுகும் – விரிந்து மலர்கின்ற பூமெத்தையும் குளிர்ந்த பனிநீரும், கஸ்தூரிப் புழுகும்,

வேனிலும் முதிரா வேனிலும் ஆகியவால் – இளவேனில், முதுவேனில் என்று சொல்லப்பட்ட இருவேனில் காலமாக இது விளங்குகிறது.

அண்டர் தொழும் பெருமான் அம்புய மின்பெருமாள் – தேவர்கள் அனைவராலும் வந்து வணங்கப் பெறுபவனும், தாமரை மலரினுள் மின்னல்கொடி போன்ற திருமகளின் தலைவரான நம்பெருமானும்,

அருமறையின் பெருமான் அழகிய நம்பெருமாள் – அரிதான வேதங்களால் புகழப்படுபவனும் அழகிய நம்பெருமாளாக விளங்குபவனும்,

புண்டரி கம்கமழும் தண்துறை ஓதிமமே – தாமரை மலரின் மணம் கமழும் குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையைச் சார்ந்துள்ள அன்னப்பறவையே !

புன்னைகள் சிந்தலரே இன்னமும் வந்திலரே – புன்னை மரங்கள் சொரிகின்ற விரிந்த மலர்களே ! இன்னும் என்தலைவன் வரவில்லையே !

இளவேனில் பருவம் கழிந்து, முதுவேனில் பருவம் வந்தும், தன்தலைவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, அன்னத்திடமும், புன்னை மலர்களிடமும் இரங்குவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

இப்பாடலில், இளவேனில் பருவம் சென்று முதுவேனில் பருவம் வந்தும் தலைவன் வராமையால் பிரிவாற்றாமையால், தாமரை மலரின் மணம்கமழும் குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையில் உள்ள அன்னப் பறவைகளே ! புன்னை மரங்கள் சொரிகின்ற மலர்ந்து விரிந்த மலர்களே ! என அழைத்து, உட்கொண்டு வெளிவீசுகின்ற நறுமணத்தோடு பூஞ்சோலையில் இளங்காற்று வீசுகின்றது. வான்நிலா ஒளி வீசுகின்றது. விரிந்து மலர்ந்து பூக்களாலான மலர்ப்படுக்கையுடன் குளிர்ந்த பனிநீரும் கஸ்தூரிப் புழுகின் மணமும் எங்கும் நிறைந்துள்ளன. தேவர்களால் வணங்கப் படுபவரும், தாமரை மலரில் உள்ள மின்னல் கொடி போன்ற திருமகளுக்குத் தலைவரும், வேதங்களால் புகழ்ப்படுகின்ற பெருமைக்கு

உரியவருமான அழகிய மணவாளப் பெருமான் இன்னும் வரவில்லையே என்று தலைவி இரங்குவதாக அமைத்துள்ளார் ஆசிரியர்.

"நங்க ணிரங்க அரும்பொருள் தேட நடந்தவன்பர்
செங்க ணிருங்குயி லார்ப்பது கேட்கிலர் செந்தமிழோர்
தங்க ணிடும்பை தவிர்த்தருள் வாணன்றென் தஞ்சைவஞ்சி
திங்கள் நிவந்தது போற்கவி னார்முகத் தேமொழியே"

- (தஞ்சைவாணன் கோவை :421)

என்ற பாடலில் தலைவி, 'நம்முடைய கண்ணானது கலங்க, அரிய பொருள் தேட நடந்த அன்பர், இளவேனில் காலம் வந்து செங்கண்ணையுடைய கருங்குயில் ஆரவாரிப்பது கேட்கிலர். யான் என் செய்கேன்' என்று இரங்குகிளாள். இது இப்பாடலோடு ஒப்பு நோக்கத்தக்கது.

புண்டரிகம் - தாமரை. தண் - குளிர்ச்சி. ஓதிமம் - அன்னம். சாரளம் - பலகணி. அம்புயம் - தாமரை.

**இரங்கல்**

வேற்றொலி வெண்துறை

85. இன்னிசை வேயினர் மன்னிய கோயிலை எய்தார்போல்
பொன்னினை வாலவர் போனவி டத்தினில் போகாதோ
மின்னிய முகில்துளி என்றென் மேலெல்லாம்
வன்னியின் பொறிகளை வழங்கும் வாடையே.

இன்னிசை வேயினர் மன்னிய கோயிலை எய்தார்போல் - இனிய இசையைத் தோற்றுவிக்கும் வேய் குழலையுடைய நம்பெருமானின் நிலைபெற்ற திருவரங்கப் பெரிய கோயிலைச் சென்று சேராதவரைப் போல.

பொன்னினை வாலவர் போனவி டத்தினில் போகாதோ - பொன் பொருள் தேடவேண்டும் என்ற எண்ணத்தினால் அத்தலைவர் இருக்கின்ற இடம் நோக்கிப் போகவில்லையா?

மின்னிய முகில்துளி என்றென் மேலெல்லாம் – மின்னுகின்ற மேகங்களில் இருந்து வீழ்ந்த நீர்த்துளிகளாகிய மழைத்துளிகள், என் உடல் முழுவதிலும் பட்டு,

வன்னியின் பொறிகளை வழங்கும் வாடையே ! – தீப்பொறிகளை எனக்கு வழங்கும் வாடைக் காற்றாக விளங்குகிறது.

தலைவனைப் பிரிந்து, அப்பிரிவுத் துயரை ஆற்றாத தலைவி, தென்றல் வீசக் கண்டு வருந்தி, இரங்கிக் கூறியது.

இப்பாடலில், மழைநீர்த் துளியோடு தென்றல் காற்று இனிமையான குளிர்ச்சியைத் தருவதாகத் தலைவனுடன் கூடியிருக்கும் பொழுது விளங்கியது. தனித்திருக்கையில் அது வருத்தம் செய்கின்றது. குளிர்ச்சியைத் தரும் மழைத்துளிகளும் தீயைப் போல் சுடுவனவாக விளங்குவதால், தென்றலையும், மழைநீர்த் துளிகளையும் வெறுத்து தலைவி இரங்குவதாக அமைந்துள்ளார் ஆசிரியர். இத்தகைய ஒரு தலைவியின் வருத்தத்தை,

*'மல்லொடு கஞ்சனும் துஞ்ச வென்ற மணிவண்ணன்*
*அல்லி மலர்த்தண் துழாய்நி னைந்திருந் தேனையே*
*எல்லி யின்மா ருதம்வந்து ஆடும் அதுவன்றியும்*
*கொல்லைவல் லேற்றின் மணியும் கோயின் மைசெய்யுமே.*
– (பெரிய திருமொழி 11:2:3)

என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தில், மல்லர்களும் கம்சனும் துஞ்ச வென்ற மணிவண்ணனான கண்ணபிரானுடைய திருத்துழாய் மாலையைச் சிந்தித்துக் கொண்டிருக்கின்ற என்னை, அந்திப் பொழுதில் வீசும் காற்று, 'நான் இருக்கும் இடத்தில் வந்து வீசி நலிக்கிறது. அது அன்றியும் கொல்லையில் இருந்து வருகின்ற காளைகளின் கழுத்து மணி ஓசையும் இரவு வந்ததை உணர்த்துவதால் துன்புறுத்துகின்றது என்று, தலைவியைக் குளிர்ந்த காற்றும் துன்புறுத்துவதை விவரிப்பர்.

வேயினர்– வேய்குழலை உடையவர், கண்ணபிரான். மன்னுதல் – நிலைபெற்றிருத்தல். மின்னிய – மின்னலை உடைய. முகில் – மேகம். வன்னி – தீ. வாடை – காற்று.

## கால மயக்கு

அறுசீர் ஆசிரிய விருத்தம்

86. வாடை யாயிரு பனியுமாய்
வேனிலாய் வந்து காரென்றே
பேடை மாமயில் சாயலாய் !
அன்பர்மேல் பிழைக்கரு திடல்செம்பொன்
ஆடை நாயகன் திருமகள்
நாயகன் அரங்கநா யகனேறும்
ஓடை மாவிது மதமிது
பிளிறிய ஒலியது மழையன்றே.

வாடையாய் இருபனியுமாய் வேனிலாய் வந்து காரென்றே – கூதிர்காலம் கழிந்து, முன்பனி, பின்பனி காலங்களும் சென்று மழைக்காலமும் வந்தது என்று எண்ணியே,

பேடை மாமயில் சாயலாய் அன்பர்மேல் பிழைகருதிடல் – அழகிய பெண்மயிலை ஒத்தச் சாயலை உடைய பெண்ணே ! உன்மீது மிகுந்த அன்புடையவராகிய தலைவர் மீது குற்றம் எண்ணாதே !

செம்பொன் ஆடை நாயகன் திருமகள் நாயகன் அரங்க நாயகன் – சிவந்த அழகிய பீதாம்பரத்தை அணிந்த தலைவனும், திருமகளின் கணவனுமாகிய திருவரங்கப் பெருமாள்,

ஏறும் ஓடை மாவிது மதமிது பிளிறிய ஒலியது மழையன்றே – ஏறி நடத்துகின்ற முகபடாத்தையுடைய யானையாகும். மதம் பொருந்திய, அந்த யானையின் மதநீர்ப் பெருக்கின் ஓசையும் அந்த யானை பிளிருகின்ற ஓசையும்தான் இப்பொழுது கேட்கின்றது. மழைக்காலம் என்று தவறாகக் கருதாதே !

கார்காலத்தில் மீண்டும் வருவதாகக் காலம் குறித்துத் தலைவியைப் பிரிந்து சென்றான் தலைவன். கார்காலம் வந்தபின்னரும் திரும்பி வராத தலைவனை எண்ணி தலைவி வருந்துகிறாள். அது கண்ட தோழி, காலத்தை மாறுபடக் கூறி ஆற்றுவிக்கிறாள். இது 'பருவமன்றென்று கூறல்' எனப்படுவதாகும்.

இப்பாடலில் தலைவனின் வரவை எதிர்நோக்கி, தலைவி காத்திருக்கிறாள். தலைவன் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற கார்காலம் வந்தது. மழைப் பொழியும் ஓசையையும் இடி இடிக்கும் ஓசையையும் கேட்கிறாள். கார்காலம் வந்தும் தலைவன் இன்னும் வரவில்லையே என்று வருந்துகிறாள். அதுகண்ட தோழி, தலைவியின் வருத்தத்தை நீக்குதலின் பொருட்டு, 'அழகிய மயில் போன்ற சாயலையுடைய பெண்ணே ! கூதிர்காலம் கழிந்து, முன்பனிக்காலம், பின் பனிக்காலம் எனப்படும் இரு பனிக்காலங்களும் சென்று கார்காலம்மும் வந்துவிட்டதே ! நம்மீது அன்பினையுடைய தலைவர் இன்னும் வரவில்லையே என்று தவறாக எண்ணாதே ! இப்பொழுது மழை பொழிவது போவும் இடி இடிப்பது போலவும் தோன்றுவன யாவும், அழகான சிவந்த பீதாம்பரத்தை அணிந்த தலைவனும் திருமகளின் கணவனுமாகிய திருவரங்கப் பெருமானுடைய முகபடாத்தையுடைய மதயானையின் மதப்பெருக்கும் அது பிளிருகின்ற ஓசையுமாகும். எனவே இது கார்காலமன்று என்கிறாள்.

இப்பாடலோடு ஒப்பு நோக்கத் தக்க வகையில் திருவிருத்தப் பாசுரம் ஒன்று அமைந்துள்ளது. 'உலகம் நடுங்கும்படி கோபித்து நல்ல மதநீர் சொறிந்த கால்பிறாண்டி, கரிய பெரிய எருதுகள் போர் செய்கின்ற தன்மையானது வானத்தில் மேகங்கள், இடிஇடித்து மழை பெய்து ஒன்றோடொன்று மோதிக் கொள்வது போல் உள்ளது. இக்கார் காலமோ நம் எம்பெருமானுடைய நிறத்தைக் கொண்டது. ஆதலின் நம்மைப் பிரிந்து சென்ற தலைவனின் பிரிவுக் கொடுமையை நினைவூட்டுவதாக இக்காலம் உள்ளது. இங்கு கார்காலம் உண்மையாக வந்துவிட்டதா என்பதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை' என்று தலைவியிடம் தோழி கூறுவதாக அமைந்துள்ளது.

*"ஞாலம் பனிப்பச் செறித்து நன்னீரிட் டுக்கால் சிதைந்து*
*நீல வல்லேறு பொரா நின்ற வானமிது திருமால்*
*கோலம் சுமந்து பிரிந்தார் கொடுமை குழறு தண்பூங்*
*காலம் கொலோ அறியேன் வினையாட் டியேன்காண் கின்றவே"*

- (இயற்பா - திருவிருத்தம் : 7)

என்ற நம்மாழ்வாரின் பாசுரத்தில், பிரிவாற்றாமையால் வருந்துகின்ற தலைவியிடம் தோழி, இது கார்காலமா என்பதை அறிய முடியவில்லை என்று காலத்தை மயக்குகின்றாள்.

இருபனி - முன்பனி, பின்பனி. கார் - மழைக்காலம். பேடை - பெண்மயில். ஓடை - முகபடாம்.

## தழை

### கட்டளைக் கலித்துறை

87. மழைபோல் மரகதம் போலெம்பி ரான்வளர் கோயிலன்னீர்
பிழைபோம் இவர்க்கிதை யாருரைப் பாரிவர் பின்வந்தெய்த
தழைபோய் உறைத்த வருத்தம் பொறாமைகொல் சங்கரன்பால்
உழைபோய் ஒதுங்க முயல்போய் மதிபுக் கொளித்ததுவே.

மழைபோல் மரகதம்போல் எம்பிரான் வளர்கோயில் அன்னீர் - கார்மேகம் போன்றும் பச்சைநிற மணியான மரகத இரத்தினத்தைப் போன்றும் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான், திருஅனந்தாழ்வான் மீது பள்ளி கொண்டு அறிதுயில் கொள்ளும் பெரியகோயிலை ஒத்திருப்பவர்களே !

பிழைபோம் இவர்க்கிதை யாருரைப் பாரிவர் பின்வந்தெய்த - தவறிழைத்து விட்டுச் சென்ற இத்தலைவருக்கு இதனை எடுத்துச் சொல்லுபவர் யார் ? இவர் தொடர்ந்து பயன்படுத்திய,

தழைபோய் உறைத்த வருத்தம் பொறாமைகொல் - தழையானது சென்றுபட்ட வருத்தத்தைப் பொறுக்க இயலாமல் அல்லவா ?

சங்கரன்பால் உழைபோய் ஒதுங்க முயல்போய் மதிபுக் கொளித்ததுவே - சிவபெருமானிடத்தில் மானானது சென்று ஒளிந்து கொள்ள, முயலானது சந்திரனிடத்தில் சேர்ந்து மறைந்து கொண்டது.

இயற்கைப் புணர்ச்சியும் பாங்கற் கூட்டம் அல்லது இடந்தலைப்பாடும் நிகழ்ந்த பின்பு தோழிக்குத் தன்கருத்தைப் புலப்படுத்தி, அவள் மூலமாகத் தலைமகளைச் சேர்தலாகிய தோழியின் கூட்டத்தில் கருத்து வைத்த தலைமகன், அத்தோழியைத் தனியே கண்டு தன் கருத்தை வெளிப்படையாக விரையக் கூறி இரவாமல், குறிப்பாகக் கூறக்கருதித் தலைமகளும் தோழியும் ஒருங்குசேர நிற்கும் பொழுது தழையும் கண்ணியுமாகிய கையுறைகளை ஏந்திச் சென்று, அவர்களை

நோக்கி, வேட்டைக்கு வந்தவனைப் போலச் சில மொழிகளைப் புகல, தலைவியின் மனநிலையை அறிதற்பொருட்டு, அத்தலைமகனது நிலையைத் தோழி தலைமகளோடு நகைத்துக் கூறியது. தழை என்பது மலர்களையும் இளந்தளிர்களையும் இடையிடையே வைத்துக் கட்டிச் செய்யப்படுவதோர் ஆடை. இவ்வாறு தழை ஆடையை உடுத்துக் கொள்ளதல் குறிஞ்சி நிலத்து மகளிர் இயல்பு.

இப்பாடலில், தலைவியும் தோழியும் இருக்குமிடம் வரும் தலைவன், இங்கு யானெய்தமான் வந்த துண்டோ ? என வினாவைத் தொடுத்தவனாக, தோழி, கையில் தழையை வைத்துக் கொண்டு வேட்டையாடுபவரைப் போல வினவுகின்றாரே ! இவர் இவ்வாறு வம்புக்காக வினவுவது பிழையென்று இவரிடத்தில் யார் சொல்வது. இவர் இத்தழையைக் கொண்டு வந்து விட்டதனால் தான் கானகத்தில் உள்ள மான் அவ்வருத்தம் தாங்காது சங்கரனிடத்தில் போய் சேர்ந்தது; அவ்வாறே முயலொன்று சந்திரனிடத்துப் போய்ச் சேர்ந்தது'. எனத் தலைமகளோடு நகைத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. இதனைத் தலைமகள் தோழிக்குக் கூறியதாகவும் சொல்லுவர்.

*"பித்தினர் போலப் பலதொடுத்தார் பிறங்கைக் கலைக்கும்*
*வித்தினர் போல் விடையும் விடுத்தனர் மெய்ம்மையுளம்*
*பொத்தினர் போல வுரைக்கொத்த வில்லினரல்லர் பொற்பூங்*
*கொத்தினர் யாவர்கொல் சேயரு மல்லாக் குறிப்பினரே"*

என்ற பாடலும்,

*"மின்னே தழைகொண்டு வேழமெய்தார் அந்த வேழம்வந்து*
*பின்னே பிணைபிரியுங் கலையானது பேசிலின்னம்*
*கொன்னே புகழும் குறுமுய லாகவும் கூடுங்கொல்லோ*
*என்னே யுலகி லிவனையொப் பாரில்லை யேவினுக்கே"*

என்ற பாடலும்[23] இங்கு ஒப்புநோக்கத் தக்கன.

மரகதம் - பச்சைநிறமுடைய நவரத்தினக்கல். தழை தழையாடை, உழை – மான்.

..............................................................................................................

23. திருவரங்கக் கலம்பகம் (மூவர் உரை), பக். 116 – 117.

## காலம்

### தலைவி இரங்கல்

88. ஒளிக்குமிரு சுடர்க்கவளம் விழுங்கும் பேழ்வாய்
வருமுழக்கத் திந்திரவில் ஓடை நெற்றித்
துளிக்குமழை மதக்கொண்மூக் களிற்றை மின்னல்
தோட்டிமா ருதப்பாகர் துரக்கும் காலம்
அளிக்குலமும் களிக்குமயில் குலமும் பாடி
ஆடுபொழில் திருவரங்கர் அணையாக் காலம்
விளிக்குமலைக் கருங்கடலும் ஒறுக்கும் காலம்
வினையேற்கு விழிகடுயின் மேவாக் காலம்.

ஒளிக்குமிரு சுடர்க்கவளம் விழுங்கும் பேழ்வாய் - விளக்கம் பொருந்தியதாக இருக்கின்ற சந்திர சூரியர்களை உணவு உருண்டைகளைப் போல விழுங்கக் கூடிய பிளவுபட்ட வாயையும்,

உருமுழக்கத் திந்திரவில் ஓடை நெற்றி - இடியாகிய முழக்கத்தையும் இந்திர வில்லாகிய முகபடாத்தை அணிந்த நெற்றியை உடைய

துளிக்குமழை மதக்கொண்மூக் களிற்றை மின்னல் தோட்டி - பொழிகின்ற மழைநீராகிய மதநீரைக் கொண்டிருக்கக்கூடிய மேகமாகிய யானையை மின்னலாகிய அங்குசத்தால்,

மாருதப் பாகர் துரக்கம் காலம் - காற்றாகிய பாகர்கள் செலுத்துகின்ற காலம்.

அளிக் குலமும் களிக்குமயில் குலமும் பாடி ஆடும் - வண்டினங்களும் மேகங்களைக் கண்டு மயில்களின் கூட்டங்களும் தோகையை விரித்தாடி மகிழ்ந்து பாடி ஆடுகின்ற

பொழில் திருவரங்கர் அணையாக் காலம் - பொழில்களையுடைய திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கன் வந்து சேராத,

விளிக்குமலை கருங்கடல் ஒறுக்கம் காலம் - ஆரவாரம் செய்கின்ற அலைகளையுடைய கரிய நிறமுள்ள கடலும் துன்புறுத்தும் காலம்.

வினையேற்கு விழிக்கடுயின் மேவாக் காலம் - தீவினையை உடைய எனக்குக் கண்களில் தூக்கம் பொருந்தாத காலம்

தலைவியிடம், கார் காலத்தே திரும்பி வருவேன் என்று கூறிச் சென்ற தலைவன், கார்காலம் வந்தும் மீள வராதவனாக, தலைவி அக்கார்காலத்தைக் கண்டு இரங்கி கூறியது.

இப்பாடலில், ஒளிமிக்க சூரிய சந்திரர்களை உணவு உருண்டைகளைப் போல விழுங்கக் கூடிய பிளவுபட்ட வாயையும் இடியாகிய முழக்கத்தையும், இந்திர வில்லாகிய முகபடாத்தை அணிந்த நெற்றியையும் மழைநீராகிய மதநீரையும் உடைய மேகமாகிய யானை வர, மின்னலாகிய அங்குசத்தால் காற்றாகிய பாகர்கள் செலுத்துகின்ற கார்காலமாக இது விளங்குகின்றது. வண்டின் கூட்டங்களும் மயில் கூட்டங்களும் ஆடிப்பாடி மகிழ்கின்ற சோலையையுடைய திருவரங்கரின் தோள்களில் வந்து சேராத காலம். ஆகையால் ஆரவாரம் செய்கின்ற அலைகளையுடைய கரியகடலும் நோயைச் செய்கின்ற தீவினையையுடைய என்னுடைய விழிகளில் உறக்கம் பொருந்தாத துன்பம் தரும் காலமாக விளங்குகிறது என்னும் தலைவியின் கூற்று அமைந்துள்ளது.

தலைவி, தன் தலைவராகிய திருவரங்கப் பெருமான் அணைத்துக் கொள்வாராயின், மழை பொழிகின்ற கார்காலம் மகிழ்ச்சியை உடையதாக விளங்கும். கடலும் நோயைச் செய்யாது, கண்களும் உறங்கும் என்கிறாள்.

"பொருந்து மாமரம் ஏழும் எய்த புனிதனார்
திருந்து சேவடி என்ம னத்து நினைதொறும்
கருந்தண் மாகடல் கங்கு லார்க்கும், அதுவன்றியும்
வருந்த வாடை வரும்இ தற்கினி என்செய்கேன்"
- (பெரிய திருமொழி : 11:2:4)

என்று தலைவனின் பிரிவால் வருந்தும் தலைவி, கடலும் வாடைக்காற்றும் தன்னை வருத்துவதைக் கூறுவதாக விளக்குவர் திருமங்கையாழ்வார். 'மதயானை போலெழுந்த மாமுகில்காள்! என மேகங்களை விளித்து, தன் துயரைப் போக்கி உயிரைக் காவா விடில், உலகத்தவர்கள் எம்பெருமானை மதிக்க மாட்டார்களே என்று தலைவி கவலையுறுவதாக (நாச்சியார் திருமொழி 8:9) ஆண்டாள் எடுத்துரைப்பர்.

"அன்னையரும் தோழியரும் அடர்ந்துபொரும் காலம்
ஆனிபோய் ஆடிவரை ஆவணியின் காலம்
புன்னைகளும் பிச்சிகளும் தங்களின் மகிழ்ந்து
பொற்பவள வாய்திறந்து பூச்சொரியும் காலம்
செந்நெல்வயல் குருகினம்சூழ் கச்சிவள நாடன்
தியாகியெனும் நந்திதடந் தோள்சேராக் காலம்
என்னையவர் அறமறந்து போனாரே தோழி!
இளந்தலைக் கண்டேநிலவும் பிளந்தெரியும் காலம்."
- (நந்திக்கலம்பகம் :105)

என்ற நந்திக் கலம்பகப் பாடலிலும் காலத்தைக் கண்டு தலைவி இரங்குவதாகக் கூறப்பட்டுள்ளது.

இருசுடர் – சந்திரன், சூரியன். கவளம் – உணவு உருண்டை. பேழ்வாய் – பிளவுபட்ட வாய். உரு – இடி. ஓடை – முகபடாம், யானையின் முகத்தில் அணிவிப்பது. கொண்மூ – மேகம். களிறு – ஆண் யானை. மாருதம் – காற்று. அளி – வண்டு. ஒறுத்தல் – துன்புறுத்தல், நோய் செய்தல்.

## இளவேனிற் காலம்

### கலிநிலைத்துறை

89. மேவலர்வாழ் தென்னிலங்கை மலங்கவொரு காலிருகால் விற்குனித்தெய்
ஏவலர்வாழ் திருவரங்கத் தெமையிருத்தி போனவர்நாட் டில்லைபோலும்
கோவலர்வாய்க் குழலோசைக் கானிரைகள் செவியேற்கும் குறும்புன்மாலை
பூவலரின் மணம்பரப்பி இளவேனில் வரவுந்தப் பொதியத்தென்றல்.

மேவலர்வாழ் தென்னிலங்கை மலங்கவொருகால் – இராமவதாரத்தில் பகைவர்களாகிய அரக்கர்கள் வாழ்கின்ற தென் இலங்கையில் அவர்கள் அனைவரும் கலங்கும்படி ஒருதரம்,

இருகால் விற்குனித்தெய் யேவலர் வாழ் திருவரங்கத்து – கோதண்டத்தின் இருகோடிகளையும் வளைத்து எய்த, அம்பில் வல்லவராக விளங்கிய,

எமை இருத்திப் போனவர்நாட் டில்லை போலும் - என்னைத் தனியே இருக்கம்படிச் செய்து, சென்றவர் நாட்டில் இல்லைபோல் இருக்கிறது.

கோவலர்வாய்க் குழலோசைக் கானிரைகள் செவியேற்கும் - இடையர்கள் வாயினால் ஊதுகின்ற வேய்குழலின் இசையைப் பசுக்கூட்டங்கள் கேட்டு இன்புறுகின்ற,

குறும்புன் மாலைப் பூமலரின் மணம்பரப்பி - சிறுபொழுதாகிய மாலைப் பொழுதில் மலர்கள் நன்றாக விரிந்து நறுமணத்தை எங்கும் பரப்பும்.

இளவேனில் வரவந்தப் பொதிய தென்றல் - இளவேனில் காலம் வர பொதிய மலையினின்றும் தென்றல் காற்று இனிமையுடையதாக வீசியது.

தலைமகனைப் பிரிந்த தலைமகள், இளவேனிற் காலம் வந்தும், தலைவன் வராமையால் இரங்கிக் கூறியது.

இப்பாடலில், தென்னிலங்கையில் வாழ்கின்ற அரக்கர்களின் மனம் கலங்கும்படி, ஒருமுறை வில்லின் இருகோடிகளையிம் வளைத்து, அம்பெய்வதில் வல்லவரான நம்பெருமாள் வாழ்கின்ற திருவரங்கத்தில், என்னைத் தனியே இருக்கும்படி விட்டுவிட்டுப் பிரிந்து சென்றவர் தான் சென்ற நாட்டில் இப்பொழுது இல்லைபோல் இருக்கிறது. இடையர்களின் வேய்ங்குழலின் இசையைக் கேட்டுப் பசுக்கூட்டங்கள் மகிழ்ந்து நிற்கின்றன. சிறுபொழுதாகிய மாலைப் பொழுதின் மலர்கள் விரிந்து மணத்தைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன. பொதிய மலையில் இருந்து தென்றல் வீசிக் கொண்டிருக்கிறது. அத்தகைய இளவேனில் காலம் வந்தும் இன்னும் தலைவன் வராமல் இருக்கின்றானே என்று தலைவனைப் பிரிந்து தலைவி, தன் நிலைக்கு இரங்கிக் கூறியதாக அமைந்துள்ளது.

“மேவலர் வாழ் தென்னிலங்கை மலங்கவொருகால் இருகால் விற்குனிந்து எய்” என்றது இராமாவதாரத்தில் பகைவர்களாகிய அரக்கர்கள் வாழ்கின்ற தென்னிலங்கையில் கோதண்டத்தின் இருகோடிகளையும் வளைத்து எய்தவன் எம்பெருமான்.

தேர்ஆளும் வாள் அரக்கனாகிய இராவனனுடைய அழகிய இலங்கை அழியும்படி போரை நடத்தவல்ல வில்லினில் கொடிய அம்புகளைத் தொடுத்தவனே ! என்பார் திருமங்கையாழ்வார்.

"தேராளும் வாளரக்கன் தென்னிலங்கை
வெஞ்சமத்துப் பொன்றி வீழ
போராளும் சிலையதனால் பொருகணைகள்
போக்குவித்தாய் ! ................"
- (பெரியதிருமொழி 7:4:4)

என்ற பாசுரத்தில் இதனை எடுத்தோதுவர்.

மேலவர் - பகைவர், மலங்குதல் - கலங்குதல், கால் - முறை, முனை, குனித்தல் - வளைத்தல், ஏவலர் - அம்பெய்துவதில் வல்லவர், கோவலர் - இடையர்.

## இரங்கல்

### கட்டளைக் கலித்துறை

90. தென்றலைக் குங்குமச் சேற்றைப் பொறாள்சிறி யாள்பெரிய
துன்றலைக் குந்துடிக் கும்மென்செய் வாடுய ராலழைத்த
வன்றலைக் குஞ்சரம் காத்தாய் இலங்கை மலங்கவளைத்
தன்றலைக் குஞ்சரத் தாயரங் காவண்ட ராதிபனே.

தென்றலைக் குங்குமச் சேற்றைப் பொறாள் சிறியாள் - தென்காற்றையும் குங்கும்பூவோடு கலந்த சந்தனக் குழம்பையும் என் சிறிய மகள் பொறுக்க மாட்டாள்.

பெரிய துன்றலைக்கும் துடிக்கும் என்செய்வாள் - நீண்டு உயர்ந்த நெருங்கிய அலைகளைக் காணினும் துன்பத்தால் வருந்துவாள் அவளால் என்ன செய்ய முடியும் ?

துயரால் அழைத்த வன்றலைக் குஞ்சரம் காத்தாய் - முதலையானது தன் கால்களைக் கவர்ந்ததால் வருந்திய வலிய தலையையுடைய கஜேந்திரனைப் பாதுகாத்தாய்.

இலங்கை மலங்க வளைத்து அன்றலைக்கும் சரத்தாய் - இலங்கையில் அசுரர்களின் மனம் கலங்கும்படியாக கோதண்ட வில்லை வளைத்து, வளையச் செய்த அம்புகளை உடையவனே !

அரங்கா ! அண்டராதிபனே ! - திருவரங்கத்தில் எழுந்தருளியுள் திருவரங் கப் பெருமானே ! தேவர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்குபவனே !

தலைமகளை ஒருவழித் தணத்த தலைமகன், மீண்டு வந்து சிறைப்புறமாக நிற்றலை அறிந்து தோழி, தலைமகள் வருத்துதலைத் தலைமகன் கேட்கக் கூறுவது. இதனை செவிலியின் கூற்று என்றும் கூறுவர்'. இது செவிலியின் கூற்று என்பதே பொருத்தமுடையதாக உள்ளது எனலாம்.

இப்பாடலில், முதலை தன் கால்களைக் கவர்ந்ததால் வருந்திய வலிய தலையையுடைய கஜேந்திரனைப் பாதுகாத்தவனே ! இலங்கையில் அசுரர்களின் மனம் கலங்கும்படி கோதண்ட வில்லை வளைத்து அலையச் செய்த அம்புகளை உடையவனே ! திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமானே ! தேவர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்குபவனே ! தென்காற்றையும் குங்குமப்பூவோடு கலந்த சந்தனக் குழம்பையும் என்சிறிய மகள் பொறுக்கமாட்டாள். நீண்டு உயர்ந்து நெருங்கிய அலைகளைக் காணிறும் துன்பத்தால் வருந்துவாள் அவளால் என்ன செய்ய முடியும் என்பதாகக் கூறப்பட்டுள்ளது.

> "இறையோ இரங்கினும் ஈங்கோர் பெண்பால் எனவுமிரங்காது
> அறையோ என்நின்று அதிரும் கருங்கடல் ஈங்கிவள்தான்
> நிறையோ இனிஉன் திருவரு ளாலன்றி காப்பரிதால்
> முறையோ அரவணை மேல்பள்ளி கொண்ட முகில்வண்ணனே."
>
> - (இயற்பா - திருவிருத்தம் :47)

என்ற பாசுரத்தில் கூறப்பட்டுள்ள, கண்ணனைப் பிரிந்து வாடும் என் மகளைத் துன்புறுத்த வாடைக்காற்று வீசுகின்றது. சந்திரனும் தன்னியல்பிற்கு மாறாகக் கொடிய நெருப்பை வாரி இறைக்கிறான். அவளோ கண்ணன் குளிர்ந்த அழகிய திருத்துழாய் மேலுள்ள மிகுந்த ஆசையின் காரணமாகப் பசலைநோய் உற்றாள். இனி என் பெண்ணுக்கு என்னதான் வந்து சேருமோ' என்ற செவிலியின் கூற்றும், இப்பாடலோடு ஒப்பிடத்தக்கனவாகும்.

'ஆயரால் அழைத்த வன்றலைக் குஞ்சரம் காத்தாய்' என எம்பெருமாள், கஜேந்திரனைக் காத்ததை ஆசிரியர் எடுத்துரைத்தள்ளார். இதனை வரலாற்றைப் பத்தாம் பாடலின் உரையில் காணலாம்.

இவ்வருளிச் செயலைத் திருமங்கையாழ்வார், முன்னொரு காலத்தில் பொய்கைக் கரையில் முதலையினுடைய மிகப்பெரிய கொடுமை தீரவும் கஜேந்திரனுடைய துன்பம் நீக்கவும் எழுந்தருளி அந்த யானைக்கு உதவி செய்து காப்பாற்றிய எம்பெருமான் என்பதை,

"முதலைத் தனிமா முரண்தீர அன்று
முகுநீர் தடத்துச் செங்கண்வேழம் உய்ய
விதலைத் தலைசென் றற்கே உதவி
வினைதீர்த்த எம்மான் ........."
- (பெரியதிருமொழி 3:8:2)

எனத் தன்னுடைய பாசுரம் ஒன்றில் எடுத்தோதுவர்.

வல்தலை - வலிமையான தலை, குஞ்சரம் - யானை. சரத்தாய் - அம்புகளை உடையவனே !

**இரங்கல்**

**கட்டளைக் கலிப்பா**

91. அண்டர் போற்றும் திருவரங் கேசனார்
அணிய ரங்கத் திருமுற்றம் எய்தினால்
பண்டு போன வளைஆழி வாங்குவேன்
பாலி யாதுபா ராமுகம் பண்ணினால்
தண்டும் வாளுஞ்சி லையுமி ருக்கவே
சங்கும் ஆழியும் தாருமென் பேனவை
தொண்ட ருக்கொற்றி வைத்தோமென் றோதினால்
துளவ மாலையைத் தொட்டுப் பறிப்பனே !

அண்டர் போற்றும் திருவரங் கேசனார் - தேவர்களெல்லாம் போற்றித் துதிக்கின்ற திருவரங்கநாதரது,

அணியரங்கத் திருமுற்றம் எய்தினால் - அழகிய அரங்கமாகத் திகழும் திருவரங்கத்தின் முற்றத்தில் சென்று சேர்ந்தால்,

பண்டு போன வளைஆழி வாங்குவேன் - முந்நாளில் என்னிடமிருந்து கவர்ந்து சென்ற சங்கு வளையல்களையும் கணையாழியையும் வாங்குவேன்

பாலியாது பாராமுகமும் பண்ணினால் - அவற்றைக் கொடுக்காமல் அலட்சியம் செய்தாரானால்,

தண்டும் வாளும் சிலையும் இருக்கவே - (என்னுடைய சங்கு வளையல்களுக்கும் கணையாழிக்கும் ஈடாக, பஞ்சாயுதங்களில்) கதை, வாள், கோதண்டம் ஆகியவை உன்னிடத்திலேயே இருக்க,

சங்கும் ஆழியும் தாரும் என்பேன் - சங்கையும் சக்கராயுதத்தையும் என்னிடத்தே கொடுக்க வேண்டும் என்று சொல்லுவேன்

அவை தொண்டருக்கு ஒற்றிவைத்தோம் என்று ஓதினால் - அவற்றை என்னுடைய அடியார்களுக்கு ஒற்றிவைத்தோம் என்று கூறினார் என்றால்,

துளவ மாலையைத் தொட்டுப் பறிப்பனே - திருக்கழுத்தில் அணிந்துள்ள திருத்துழாய் மாலையைத் திருமேனி தீண்டிப் பிடுங்கிக் கொள்வேன்

தலைவனைப் பிரிந்த தலைவி, அப்பிரிவாற்றாமையால் மெலிந்தாள். தோழியர் முதலியோர் காரணம் உணராது பல செயல்களை மேற்கொள்ள, தலைவியானவள், தலைவனின் பிரிவாற்றாமையால் தனக்கு இந்நிலை ஏற்பட்டது என்கிறாள்.

இப்பாடலில் தலைவி, தேவர்களெல்லாம் போற்றி வணங்குகின்ற என் தலைவரான திருவரங்கன் எழுந்தருளியிருக்கும் கோயிலின் முன்றிலை நான் சென்றடைந்தால், (பிரிவாற்றாமையால் உண்டான உடல்மெலிவினால் வளையல், கணையாழி போன்றவைகழன்று விட்டதால் முந்நாளில் கவர்ந்து போன சங்கு வளையல்களையும் கணையாழியையும் மீண்டும் பெற்றுக் கொள்வேன். அங்ஙனம் தராவிடில், அதற்கு ஈடாக பஞ்சாயுதங்களில் சங்கையும் சக்கரத்தையும் தர வேண்டுவேன். அவற்றை அடியார்க்கு ஒற்றி வைத்துவிட்டோம் (ஈடாக வைத்தால், திரு இலச்சினை அடியார்களின் தோள்களில் இடல் என்ற

வைணவ மரபு) என்றால், திருத்துழாய் மாலையைத் திருமேனி தீண்டிப் பிடுங்கிக் கொள்வேன் என்று கூறுவதாக ஆசிரியர் அமைத்துள்ளார்.

கண்ணனின் பிரிவை எண்ணி வருந்தும் தலைவி ஒருத்தி,

வண்ணம் திரிவும் மனக்குழைவும்
மானமி லாமையும் வாய்வெளுப்பும்
உண்ணல் உறாமையும் உள்மெலிவும்
ஓதநீர் வண்ணனென் பானொருவன்
தண்ணந் துழாயென்னும் மாலைகொண்டு
சூட்டத் தணியும், பிலம்பன்தன்னைப்
பண்ணழி யப்பல தேவன்வென்ற
பாண்டி வடத்தென்னை உய்த்திடுமின்
- (நாச்சியார் திருமொழி 12:7)

என்று தன் உடல்நிறத்தின் மாறுபாடும் மனத்தளர்ச்சியும், மானம் இல்லாமையும், வாய்வெளுப்பும், உணவில் விருப்பம் இல்லாமையும்உள்மெலிவும் ஆகிய இவையெல்லாம் கடல் வண்ணனாகிய கண்ணபிரானுடைய திருத்துழாய் மாலையைக் கொண்டு வந்து சூட்டினால் நீங்கும் என்பதாக நாச்சியார் திருமொழியில், ஆண்டாள் நாச்சியாரின் இப்பாசுரம், இப்பாடலோடு ஒப்பு நோக்கத்தக்கது.

பண்டு - முன்னாள், வளை - சங்கு வளையல். ஆழி - கணையாழி. பாலித்தல் - கொடுத்தருளுதல். பாராமுகம் - அலட்சியம். தண்டு - கதை. ஆழி - சக்கரம். ஒற்றி - ஈடு, ஒத்துதல். துளவம் - திருத்துழாய்.

## கலிநிலைத்துறை

92. தொட்டுண்ட தயிர்வெண்ணெய் கன்றாய்ச்சி உரலோடு
சூழ்ந்துகட்ட
கட்டுண்டு கழலவிர கறியாம லிருந்தழுத கள்வன்யாரே
கட்டுண்டான் அரங்கனெனக் கட்டுரைப்பா ரானாலும் கங்கைசூழ
மட்டுண்ட கொன்றையான் மலர்மேலோன் அறிவரிய வடிவனன்றே

தொட்டுண்ட தயிர்வெண்ணெய் கன்றாய்ச்சி – (கிருஷ்ணாவதாரத்தில்) அன்று ஆய்ச்சி யசோதையானவள் வைத்திருந்த தயிரையும் வெண்ணெயையும் எடுத்து உண்ட காரணத்தால்,

உரலோடு சூழ்ந்துகட்ட கட்டுண்டு – உரலோடு பிடித்துச் சுற்றி கடைக்கயிற்றால் கட்ட, அவ்வாறு கட்டப்பட்டிருந்ததை,

கழல் விரகறியாமல் இருந்தழுத கள்வன் யாரே – கழற்றுவதற்கு வழியறியாமல், அங்கேயே அழுது கொண்டிருந்த கள்ளத்தனம் உடையவன் யார் ? (நம்முடைய திருவரங்கரல்லவா)

கட்டுண்டான் அரங்கனெனக் கட்டுரைப்பா ரானாலும் – திருவரங்கப் பெருமான் கடைக்கயிற்றால் கட்டப்பட்டான் என்று பலர் உறுதிபடக் கூறினாலும்,

கங்கை சூடி மட்டுண்ட கொன்றையான் – கங்கை நதியைக் தன்னுடைய சடாமுடியில் தரித்து, நறுமணமுடைய கொன்றைப்பூ மாலையை அணிந்துள்ள சிவபெருமானும்,

மலர்மேலோன் அறிவரிய வடிவனன்றே – தாமரை மலரில் தங்குகின்ற பிரமனும் அறிவதற்கு அரிதான வடிவத்தை உடையவனல்லவா ?

ஒருத்தி, தலைவனைத் தாழ்வுபடுத்திக் கூற, மற்றொருத்தி, தாழ்வுகள் செய்தான் ஆயினும் எல்லோருக்கும் மேலானவனாக இருக்கிறான் என்ற பொருள்பட இருவரின் கூற்றாகப் பாடல்களை அமைப்பது இலக்கிய மரபுகளுள் ஒன்றாகும். சாழல், ஏசல், அம்மானை போன்ற இலக்கிய வடிவங்களில் தடையும் தடைக்கு ஏற்ற விடையும் பாட்டில் அமையும்.

இப்பாடலில், கிருஷ்ணாவதாரம் எடுத்த அந்நாளில் தயிர், வெண்ணெய்க்காக இடைச்சியாகிய யசோதையால் உரலோடு பிடித்துக் கட்டப்பட்டுக் கயிற்றை அவிழ்க்க வழிதெரியாமல் அழுது கொண்டிருந்த கள்ளத்தனம் உடையவன் யார் ? என்ற வினைவை எழுப்பி, கட்டுப்பட்டானென்று உறுதிபடச் சொல்வாரானாலும் கங்கை நதியைத் தன்சடாமுடியில் தரித்திருக்கக் கூடிய, நறுமணம் மிக்க கொன்றைமலர் மாலையைச் சூடிய சிவபெருமானும், தாமரைப்பூவில் தங்குகின்ற பிரமனும் அறிவதற்கு அரிதான வடிவத்தை உடையவனல்லவா ? என்று விடையும்

கூறியுள்ளார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். இப்பாடலோடு ஒப்புநோக்கத்தக்க வகையில்,

"வண்ணக் கருங்குழல் ஆய்ச்சியால் மொத்துண்டு
கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டான் காணேடி
கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டான் ஆகிலும்
எண்ணற்கு அரியன் இமையோர்க்கும் சாழலே"
- (பெரியதிருவந்தாதி 11:5:5)

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரத்தில், ஒரு பெண், 'அழகிய கறுத்த கூந்தலையுடைய யசோதைப் பிராட்டியால் அடியுண்டு. குட்டையான கயிற்றால் கட்டுண்டு கிடந்தவன் காண்' என தலைவனின் தாழ்வினைக் கூற 'கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டான் ஆயினும் தேவர்களுக்கும் நெஞ்சம் நினைப்பதற்கும் அரியன்' என்கிறாள் மற்றொரு பெண். கண்ணபிரானின் சிறப்பினை வெளிப்படுத்துவதே இப்பாடலின் நோக்கம் என்பது இங்கு எண்ணத்தக்கது.

இதே போக்கில் அமைந்த,

"தாம்பால்ஆப் புண்டாலும் அத்தழும்பு தான்இளக
பாம்பால்ஆப் புண்டுபா டுற்றாலும் – சோம்பாதுஇப்
பல்லுருவை யெல்லாம் படர்வித்த வித்தாஉன்
தொல்லுருவை யாரறிவார் சொல்லு."
- (பெரிய திருவந்தாதி :19)

என்னும் பாசுரத்தில், யசோதை பிராட்டியின் கயிற்றினால் கட்டுண்டாலும், அத்தழும்புதான் இல்லாதபடி காளிங்கனாகிய பாம்பினால் கட்டுண்டு வருத்தம் அடைந்தாய். இத்தகைய வருத்தங்களைப் பெற்றாலும் சிறிதும் சோம்பல் இல்லாது இந்த உலகில் பற்பல வடிவம் கொண்ட உயிர்க் கூட்டங்களை உண்டாக்கவதற்கு மூலகாரணமாக நின்ற ஆதி பரம்பொருளே ! உன்னுடைய ஒப்பற்ற வடிவத்தை யாரேனும் அறிவார்களோ ? என்று தானே வினாவை எழுப்பி, விடையளிக்கிறார் நம்மாழ்வார்.

"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை அசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை"
– (சிலப். ஆய்ச்சியர் குரவை : முன்னிலைப் பரவல்)

என்ற சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை காதையில், கடல்போன்ற கரிய நிறத்தை உடைய கண்ணனே ! நீ முன்பு ஒருநாள் மந்தர மலையை மத்தாக நாட்டி, வாசுகி என்னும் பாம்பை கயிறாகக் கொண்டு, பாற்கடலின் நடுவிடத்தைக் கலக்கினாய் ! அங்ஙனம் கலக்கிய உன்கை யசோதைப் பிராட்டியின் கடைக்கயிற்றால் கட்டுண்ட கை என்கிறார் இளங்கோவடிகள். இப்பாலும் ஒப்புநோக்கத் தக்கது.

ஆய்ச்சி - இடைச்சி. கழலுதல் - விலகிப்போதல். விரகு - வழி. கட்டுரைத்தல் - உறுதிபடக் கூறல். மட்டு - நறுமணம். மலர்மேலோன் - பிரமன்.

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

93. வடியாத பவக்கடலும் வடிந்துமூல
மாயைகடந் தப்பால்போய் வைகுந்தம்சேர்ந்
தடியார்கள் குழாம்கூடி உனதடிக்கீழ்
அடிமைசெயும் அக்காலம் எக்காலந்தான்
கொடியாடு மணிமாட அயோத்தி மூவிர்
குடிதுறந்து திருவரங்கம் கோயில்கொண்ட
நெடியோனே ! அடியேன்நான் முயற்சியின்றி
நின்னருளே பார்த்திருப்பன் நீசனேனே.

வடியாத பவக்கடலும் வடிந்து மூலமாயைக் கடந்து – வற்றிப் போகாத பிறவிக் கடலும் வற்றும்படியாக மூல மாயையைக் கடந்து,

அப்பால்போய், வைகுந்தம் சேர்ந்தடியார்கள் குழாம்கூடி – அதன்பிறகு சென்று பரமபதத்தை அடைந்து, தொண்டர்களின் கூட்டத்தோடு இணைந்து,

உனதடிக்கீழ் அடிமைசெயும் அக்காலம் எக்காலம்தான் – உன்னுடைய திருவடிகளின் கீழ் தொண்டுகளைச் செய்யும் அந்தக் காலம் எந்தக் காலமோ ?

கொடியாடு மணிமாட அயோத்தி மூதூர் – கொடிகள் அசைந்து ஆடுகின்ற விலையுயர்ந்த மணிகள் பதிக்கப்பட்ட மாடங்களை உடைய பழைய நகரமான அயோத்தியில்,

குடிதுறந்து திருவரங்கம் கோயில் கொண்ட – (இராமாவதாரத்தில்) அந்நகரில் தங்குதலை விடுத்துத் திருவரங்கப் பெரியகோயிலைத் தன் இருப்பிடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும்,

நெடியோனே அடியேன்நான் முயற்சியின்றி – பெரியோனாக விளங்கபவனே ! உன்னுடைய அடியவனாகிய நான், எவ்வித முயற்சியினையும் மேற்கொள்ளாமல்,

நின்னருளே பார்த்திருப்பன் நீசனேனே ! – கடைப்பட்டவனாகிய நான், உன்னுடைய அருளை நினைத்து எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு இருப்பேன்.

அடியவர்களது பிறவிக்கடலை வற்றும்படி செய்து, மூலமாயையைக் கடந்து, பரம பதத்தை அடைந்து, தொண்டர்களோடு செய்யும் காலம் எக்காலமோ ? என்ற ஆசிரியர் தன் மனதிற்குத் தானே வினாவினைத் தொடுக்கிறார். அக்காலத்தை அறியாததனால், இராமவதாரத்தில், கொடிகள் அசைகின்ற விளையுயர்ந்த மணிகள் பதிக்கப்பட்ட பழமையான நகரமான அயோத்தியில் தங்குதலை விடுத்துத் திருவரங்கத்தில் தங்கியவனே! நான் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமல் உன் அருளை எண்ணிக் காத்து இருக்கிறேன் என்பதாக ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

சூரியகுலத்தில் தோன்றிய இக்ஷ்சுவாசு சக்கரவர்த்தி, பிரமதேவனைக் குறித்து பலநாள் பெருந்தவம் செய்தான். பிரமன் தவத்தைக் கண்டு மகிழ்ந்து, தான் பலகாலமாக வணங்கி வந்த திருமாலின் உருவச் சிலையை விமானத்துடன் அளித்தான். அயோத்தி வந்தடைந்த அப்பெருமானின் உருவசிலையை, இக்ஷ்சவாகு சக்கரவர்த்தியும் அவருக்குப் பின் தோன்றிய அவருடைய குலத்தவர்களும் வணங்கி வந்தார்கள். இராமபிரான், இராவணனைக் கொன்று திருவபிஷேகம் செய்து கொண்ட நாளில், தன் அன்பிற்கு உரியவனாக விளங்கிய விபீடணாழ்வானுக்கு அப்பெருமானின் உருவச்சிலையை அளித்தான்.

இலங்கைக்குத் திரும்பும் வழியில் விபீடணன் அப்பெருமான் சிலையை திருவரங்கத்தில் வைத்திருந்து, தங்கியிருந்து விட்டு, பறப்படும்பொழுது பெயர்த்தெடுக்க இயலாததால், அப்பெருமான் உருவச் சிலை விமானத்தோடு அங்கேயே நிலைகொண்டது. இதனாலேயே, 'கொடுயாடு மணிமாட அயோத்தி மூதூர் குடிதுறந்து திருவரங்கம் கோயில் கொண்ட நெடியோன் என்கிறார் ஆசிரியர். அதனால்தான்,

"குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலு மாகண்டு
உடலெனக்கு உருகு மாலோ என்செய்கேன் உலகத் தீரே"
- (திருமாலை :19)

என்று உருகுகிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

"வன்பெருவா னகம்உய்ய அமரர் உய்ய
மண்உய்ய மண்உலகில் மனிசர் உய்ய
துன்பமிகு துயர்அகல அயர்வொன் றில்லாச்
சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணியரங்கன் திருமுற்றத் தடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்
இசைந்துடனே என்றுகொலோ இருக்கும் நாளே"
- (பெருமாள் திருமொழி 1:10)

என்ற பாசுரத்தில், வானகம் வாழ, தேவர்கள் வாழ, இவ்வுலகம் வாழ, மண்ணுலகம் மாந்தர் வாழ, பாவங்கள் நீங்க, அகமகிழும் தொண்டர்கள் வாழ, அன்போடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும் திருவரங்க நாதனுடைய சன்னிதி முற்றத்தில் அடியார் தங்கள் கூட்டத்தைக் கண்டு அடியேனும் அவர்களுள் ஒருவனாக மனம்பொருந்தி, தொண்டு செய்து வாழந்திருக்கும் காலம், எப்போது வாய்க்குமோ ! என்று குலசேகராழ்வார் எம்பெருமானிடம் வேண்டி நிற்கிறார்.

குலசேகராழ்வார் தென்திசை நோக்கிப் பள்ளி கொண்டுள்ள திருவரங்கப் பெருமானிடத்துத் திருவரங்கத்தில் தொண்டர் குழுவோடு பணிசெய்ய வேண்டி நிற்க, பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், வைகுந்தத்தில் தொண்டர்களின் கூட்டத்தோடு இணைந்து பணிசெய்ய வேண்டி நிற்கின்றார். எம்பெருமானின் திருடிகளின் கீழ் தொண்டு செய்யும் அக்காலம் எக்காலமோ ! என்று ஏங்கி நிற்கின்ற நிலையில் இருவரிடமும் ஒருமித்தக் கருத்து நிலவுவதைக் காணலாம்.

பவக்கடல் - பிறவிக்கடல். மணிமாடம் - இரத்தினங்கள் இழைக்கப்பட்ட மாடம். மூதூர் - பழைய ஊர். குடி - தங்குதல். நெடியோன் - பெரியோன். நீசன் - கடைப்பட்டவன்.

**கட்டளைக் கலித்துறை**

94. நீசச் சமணர்க்கும் சூனிய வாதர்க்கும் நீதியற்ற
பூசல் பௌத்தருக்கும் சைவர்க்கும் யார்க்கும் புகலுகின்றேன்
நாசப் படாவுயிர் எல்லாம் முதல்தந்த நாதன்கண்டீர்
ஆசற்ற சீரரங் கத்தாதி மூலத் தரும்பொருளே.

நீசச் சமணர்க்கும் சூனிய வாதர்க்கும் - கீழ்மையையுடைய சமணர்களுக்கும் நாத்திகவாதிகளுக்கும்,

நீதியற்ற பூசல் பௌத்தருக்கும் சைவர்க்கும் யார்க்கும் - நீதி இல்லாத முறையில் வாதம் செய்கின்ற பௌத்தர்களுக்கும் சைவர்களுக்கும் மற்றைய பறச்சமயத்தார் யாராக இருப்பினும் அவர்களுக்கும்,

புகலுகிறேன் நாசப்படா உயிரெல்லாம் - ஒன்றைச் சொல்லுகிறேன். அழிவில்லாத உயிர்கள் அனைத்தையும்,

முதல்தந்த நாதன் கண்டீர் - முதலில் படைத்த தலைவனை அறிந்து. கொள்ளுங்கள். அவர்,

சீரரங் கத்தாதி மூலத் தரும்பொருளே - திருவரங்கத்தில் எழுந்தருளி இருக்கக்கூடிய ஆதி மூலமாகிய அறிதற்கு அரிய திருவரங்கப் பெருமானே.

புறச் சமயத்தார்களை இழிவுபடக்கூறி, எம்பெருமான் ஒருவரே உயிர்கள் அனைத்தையும் படைப்பராக விளங்குகிறார் என்கிறார் ஆசிரியர்.

கீழ்மையையுடைய சமணர்களுக்கும் நாஸ்திக வாதிகளுக்கும், நீதி இல்லாத முறையில் வாதம் செய்கின்ற பௌத்தர்களுக்கும் சைவர்களுக்கும் ஒன்றைச் சொல்லுகிறேன். அழிவில்லாத உயிர்கள் அனைத்தையும் முதலில் படைத்த தலைவன், அவனே ஆதி மூலமாக அறிவதற்கு அரியவனாக விளங்கும் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கப் பெருமான். அதனாலேயே, 'புலையறம் ஆகி நின்ற புத்தொடு சமணம் எல்லாம்' (திருமாலை : 7) என்று இகழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார். மேலும், வெறுப்பொடு கூடிய சமணர்களும் சைவர்களும் விதியில்லாத பௌத்தர்களும் உன்னை நிந்திக்கின்றனர். எனக்கு இலக்கு வாய்க்குமானால் அதற்கு மேல் எனக்குச் சக்தியும் கூடுமாகில் உன்னை நிந்தித்த அவ்விடத்திலேயே அவர்கள் தலையை அறுப்பதே செய்யத்தக்கது என்பதை,

"வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில்சாக் கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில் போவதே நோய தாகி
குறிப்பெனக் கடையு மாகில் கூடுமேல், தலையை ஆங்கே
அறுப்பதே கருமங் கண்டாய் அரங்கமா நகரு ளானே."
- (திருமாலை : 8)

என்று தம் பாசுரத்தில் குறிப்பிடுகின்றார். இதனையே திருவரங்கத் தமுதனார்,

"தூர்க்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனிய வாதரும் நான்மறையும்
நிற்கக் குறும்புசெய் நீசரும் மாண்டனர் நீள்நிலத்தே ........."
- (இராமானுச நூற்றந்தாதி :99)

என்று எடுத்துரைத்துள்ளார். எச்சமயத்தவராக இருப்பினும் அவர்களுக்கெல்லாம் தலைமையானவன் எம்பெருமானே என்பதை.

"இலிங்கத் திட்ட புராணத் தீரும் சமணரும் சாக்கியரும்
வலிந்து வாது செய்வீர்களும் மற்றுநுந் தெய்வமுமாக நின்றான்"
- (திருவாய்மொழி : 4:10:5)

என்றும், "விளம்பும் ஆறு சமயமும் அவையாகிய மற்றும் தம்பால் அளந்து காண்டற்கு அரிய னாகிய ஆதிபிரான்" என்றும் நம்மாழ்வார் எடுத்தோதுவர். அவனன்றி வேறு தெய்வம் என்பது எதுவும் இல்லை எனத் தொண்டரடிப் பொடியாழ்வார்,

"மற்றுமோர் தெய்வம் உண்டோ ? மதியிலா மானி டங்காள்
உற்றபோது அன்றி நீங்கள் ஒருவனென்று உரை மாட்டீர்
அற்றமேல் ஒன்று அறியீர் அவனல்லால் தெய்வம் இல்லை
கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமின் நீரே"
- (திருமாலை :9)

என்ற பாசுரத்தில் எடுத்துரைப்பார்.

அரங்கனை, 'ஆதி மூலத்து அரும்பொருள்' என்பார் பிள்ளை பெருமாள் ஐயங்கார். அவ்வரங்கன் இவ்வுலகுக் கெல்லாம் ஆதியாக விளங்கக் கூடியவன் என்பதைத் திருமழிசையாழ்வார்,

"ஆதியாதி ஆதிநீயோர் அண்டமாதி ஆதலால்
சோதியாத சோதிநீய துண்மையில் விளங்கினாய்
வேதமாகி வேள்வியாகி விண்ணினோடு மண்ணுமாய்
ஆதியாகி ஆயனாய மாயமென்ன மாயமோ ?"
- (திருச்சந்த விருத்தம் : 34)

என்று தமது பாசுரமொன்றில் எடுத்துரைத்துள்ளார்.

நீசர் - கீழ்மையை உடையவர். சூனிய வாதர் - அனைத்தும் சூன்யம் என்று வாதிப்பவர்கள். பூசல் - வாதம் செய்தல். நாசம் - அழிவு. ஆசு - குற்றம். சீரரங்கம் - சிறப்புடைய திருவரங்கம்.

### நேரிசை வெண்பா

95. *அரும்புண்ட ரீகத் தடியிணைக்கென் நெஞ்சம்*
*இரும்புண்ட நீராவ தென்றோ – விரும்பி*
*அறந்திருந்தும் கோயி லரங்கா! உனைநான்*
*மறந்திருந்து மேற்பிறவா மல்.*

அரும்புண்ட ரீகத் தடியினைக்கென் நெஞ்சம் – பெறுதற்கு அரிய தாமரை மலர்போன்ற திருவடி இணைகளில் என்னுடைய மனம்,

இரும்புண்ட நீராவ தென்றோ – பழுக்கக் காயச்சப்பட்ட இரும்பில் நீர் உட்கொள்ளப்படுவது போல் மீண்டும் வராமல் இருக்கப் போவது எந்நாளோ ?

விரும்பி அறந்திருந்தும் கோயி லரங்கா – அனைத்துத் தருமங்களும் விரும்பத்தோடு திருத்தமான வகையில் செய்யப்படுகின்ற, திருவரங்கக் கோயிலில் எழுந்தருளியிருப்பவனே !

உனை மறந்திருந்துமேல் பிறவாமல் – உனை நான் மறந்திருந்தாலும், அதனைக் கருதாது மீண்டும் இவ்வுலகில் பிறவாமல் இருக்க அருளை வழங்க வேண்டும்.

இனிமேலும் பிறவி என்பது உண்டாகாதவாறு, பழுக்கக் காய்ந்த இரும்பில் நீர் உட்கொள்ளப்படுவது போல என் மனமானது உன்திருவடிகளில் பொருந்தி யிருக்கப் போவது எந்நாளோ ? என்று ஏங்குகின்றார். நான் உன்னை மறந்தாலும் எந்தன் பிறவிப்பிணியை நீக்க வேண்டும் என்கிறார் ஆசிரியர்.

*"இரும்பு அனன்று உண்ட நீர்போல் எம்பெரு மானுக் கென்றன்*
*அரும்பெறல் அன்பு புக்கிட்டு அடிமை பூண்டு உய்ந்து போனேன்."*
– (திருக்குறுந்தாண்டகம் :5)

என்ற திருமங்கையாழ்வார் பாசர அடிகள் இங்கு சுட்டத்தக்கன.

எம்பெருமானாகிய உன்னைக் காணவேண்டும் என்ற ஆசையினால் பல பிறவிகள் எடுத்துவிட்டேன் ; இப்பிறப்பும் ஏற்றேன் ; துயர் அடைந்தேன். பிறவித் துன்பங்களைப் பொறுக்க முடியாமல்

உன்னை வந்தடைந்தேன் ; அடியேனை ஏற்றுக் கொள்வாயாக என்று வேண்டுகிறார் திருமங்கையாழ்வார்.

"நோற்றேன் பலபிறவி நுன்னைக் காண்பதோர் ஆசையினால்
ஏற்றேன் இப்பிறப் போஇடர் உற்றனன் எம்பெருமான்
கோல்தேன் பாய்ந்தொழு கும்குளிர் சோலைசூழ் வேங்கடவா !
ஆற்றேன் வந்தடைந் தேன்அடி யேனைஆட் கொண்டருளே"
-(பெரியதிருமொழி 1:9:8)

என்ற தன் பாசரத்தில் இதனை எடுத்தோதுவர். இது இப்பாடலோடு ஒப்பு நோக்கத்தக்கது.

அறம் - தருமம். மேல் பிறவாமல் - மீண்டும் வந்து பிறக்காமல் புண்டரீகம் - தாமரை. இரும்புண்ட நீர் - பழுக்கக் காய்ச்சிய இரும்பில் உட்கொள்ளப்பட்ட நீர்.

### கலிவிருத்தம்

96. பிறவியெனும் கடலழுந்திப் பிணிபசியோ டிந்திரிய
சுறவநுங்கக் கொடுவினையின் சுழலகப்பட் டுழல்வேனே
அறமுடையாய் என்னப்பா அரங்காவென் னாருயிருக்
குறவுடையாய் அடியேனை உயக்கொள்வ தொருநாளே !

பிறவியெனும் கடலழுந்திப் பிணிப் பசியோடு - பிறவியாகிய பெரிய கடலில் அழுந்தி, நோயும், பசியும் கொண்டு

இந்திரிய சுறவநுங்கக் கொடுவினையின் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளுமாகிய சுறாமீன்கள் விழுங்கும்படியாகிய கொடிய தீவினையான,

சுழலகப்பட் டுழல்வேனே -- சுழலினுள் சிக்கிக் கொண்டு சுழல் வேனோ ?

அறமுடையாய் ! என்னப்பா ! அரங்கா ! - அனைத்துத் தர்மங்களையும் உடையவனே ! என்னுடைய தலைவனே ! திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கக் கூடிய திருவரங்கநாத எம்பிரானே !

என் ஆருயிருக் குறவுடையாய் ! - என்னுடைய அரிய உயிருக்கு உறவாக விளங்குபவனே !

அடியேனை உயக்கொள்வ தொருநாளே ! – உன்னுடைய
அடியவனாகிய என்னை நன்மை அடையும்படி
ஆட்கொள்வதாகிய ஒருநாளும் உண்டா ?

பிறவிக்கடலில் இருந்து மீண்டு கரையேறுவதற்கான் நாள் வருமா ? என்று தன் ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

கரைகாண இயலாததாக இருப்பதால் பிறவியைக் கடலாகவும், கடலில் வீழந்தவரைச் சுறாமீன்கள் கொத்தித் தின்பது போலப் பிணி, பசி முதலியவை பிறவியில் உழல்கின்ற ஆத்மாவை வருத்துதலால், அப்பிணி, பசி முதலியவற்றைச் சுறாமீன்களாகவும், சுழலில் அகப்பட்டவர் அச்சுழலில் இருந்து மீளுதல் அரிதாவது போல இருவினையில் அகப்பட்டவன் அதனினின்றும் மீளுதல் அரிது. ஆகையால் இருவினைகளைச் சுழலாகவும் உருவகம் செய்துள்ளார்'
என்னும் மூவர் உரை விளக்கம் இங்க எண்ணத்தக்கது.[24]

பிறப்பி னோடு பேரிடர்ச் சுழிக்கண் நின்றும் நீங்குமஃது
இறப்ப வைத்த ஞான நீசரை கரைக்கொடு ஏற்றுமா
பெறற்கரிய நின்ன பாத பத்தி யான பாசனம்
பெறற்கரிய' மாயனே எனக்கு நல்க வேண்டும்.
– (திருச்சந்த விருத்தம் : 100)

என்ற பாசுரத்தில், பிறவிக் கடலாகிய பெருந்துன்பங்களை விளைவிக்கின்ற, இவ்வுலக வாழ்விலிருந்து நீங்குதற்கு உறுப்பான வழிவகைகளை மறந்தொழிந்த அறிவற்றவர்களைக் கரையில் கொண்டு வந்து சேர்க்கும் படியாகப் பெறற்கரிய உன் பக்தியாகிற மரக்கலத்தை அடியேனுக்கு வழங்கவேண்டும் என்பதை திருமழிசையாழ்வார் எடுத்துரைப்பது, இப்பாடலோடு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

இந்திரியம் – பொறிகள். சுறவம் – சுறாமீன். சுழல் – நீர்ச்சுழல்.

24. திருவரங்கக் கலம்பகம் மூவர் உரை), ப. 125.

## எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

97. ஒருபொருள் அல்லேன் இருவினை உடையேன்
உனதுதொண் டெனுந்துறை குளித்துன்
பெருகுதண் ணளியின் பாசந்தொட் டிழிந்து
பெரியதோர் முத்தியான் பெற்றேன்
திருவுமா மணியும் சங்கமும் ஏந்திச்
செய்யதா மரைபல பூத்துக்
கருநிற முடைத்தாய் நதிபொரு தரங்கம்
கலந்ததோர் கருணைவா ரிதியே !

ஒருபொருள் அல்லேன் இருவினை உடையேன் - ஒருபொருளாக மதிக்கப்படாதவனும் செல்வமற்றவனும் நல்வினை, தீவினை என்னும் இருவினைகளையும் உடையவனாகிய நான்,

உனதுதொண் டெனும்துறை குளித்துன் பெருகு தண்ணளியின் - உனக்குச் சேவகம் செய்வதாகிய வழியில் நீராடி (மூழ்கி) உன்னுடைய பெருகுகின்ற குளிர்ந்த திருவருளாகிய,

பாசந்தொட் டிழிந்து பெரியதோர் முத்தியான் பெற்றேன் - பெரியதோர் கயிற்றைப் பிடித்துக் கொண்டு இறங்கி, பரமபதமாகிய வீடுபேற்றினைப் (பெரிய சிறந்த முத்தை)

திருவுமா மணியும் சங்கமும் ஏந்தி - திருமகளாகிய செல்வங்களையும் பெரிய மணியாகிய கௌஸ்துப இரத்தினத்தையும் பாஞ்சசன்னியமாகிய சங்கையும் தரித்து,

செய்யதா மரைபல பூத்துக் கருநிற முடைத்தாய் - செந்தாமரை மலர்கள் பல மலர்ந்து, கரிய நிறம் உடையதாகி,

நதிபொரு தரங்கம் கலந்ததோர் கருணைவா ரிதியே ! - அலை மோதுகின்ற காவிரியாற்றில் சேர்ந்ததாகிய அருட்கடலே !

இறைவனிடம் அன்பு பூண்டால், ஒரு பொருளாக மதிக்கப்படாதவனும் முத்தியாகிய வீடுபேற்றை அடைய முடியும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இப்பாடலில் நதிகளையும் பெரிய இரத்தினத்தையும் சங்கையும் உடையதான பலதாமரைகள் ஒருங்கே கரிய நிறம் பெற்றதைப் போன்று, காவிரியாற்றிடம் சேர்ந்ததாகிய எம்பெருமானாகிய கருணைக் கடலிலே, ஒரு பொருளாக மதிக்கப்படாதவனும் இருவினைகளும் உடையவனுமாகிய தான் பெருமுயற்சியோடு திருவருளாகிய கயிற்றைப் பற்றிக் கொண்டு முத்துக் குளிக்கும் துறையில் மூழ்கி, முத்தியென்னும் முத்துக்களைப் பெற்றதாக ஆசிரியர் கூறுவதாக அமைந்துள்ளது.

திருமங்கையாழ்வார், எம்பெருமானிடத்து எல்லாக் குலங்களிலும் பிறப்பதும் இறப்பதுமாய் இளைத்துப்போனேன் ; ஒருவனை நன்மையும் இல்லாதவனாக இருக்கின்றேன் ; நல்ல தருமம் ஒன்றும் செய்து அறியேன் ; பலதுன்பங்களுக்கு ஆளானேன் என்கிறார். இதனை,

'குலந்தான் எத்தனையும் பிறந்தேயிறந்து எய்த்தொழிந்தேன்
நலந்தான் ஒன்றுமிலேன் நல்லதோர்அறம் செய்துமிலேன்
நிலந்தோய் நீள்முகில்சேர் நெறியார்திரு வேங்கடவா !
அலந்தேன் வந்தடைந்தேன் அடியேனைஆட் கொண்டருளே"
- (பெரியதிருமொழி 1:9:4)

என்று எடுத்தோதி, ஒரு பொருட்டாக மதிக்கப்படாதவனும் இருவினைகளும் உடையவனுமாக இருக்கின்ற தனக்கு அருளை வழங்குமாறு வேண்டுகிறார். அங்ஙனம் அருளுவானாயின், (அவனுடைய நாராயணா என்னும் நாமம்) 'அருளொடு பெருநிலம் வழங்கும்' என்கிறார். இப்பாடலில், திருமாலாகிய தோணி பிறவிக்கடலில் இருந்து நம்மை மீட்டுக் கரையேற்ற வழியாக இருப்பது என்பது உணர்த்தப்படுகிறது.

அறம் - தருமம், கொடுவினை - தீவினை.

கட்டளைக் கலித்துறை

98. வாரி யரங்கம் வருதிருப் பாவைக்கும் மண்மகட்கும்
சீரி யரங்கன் வளர்திருக் கோலமும் தென்திருக்கா
வேரி யரங்க விமானமும் கோயிலும் மேவித்தொழார்
பூரி யரங்கவர் கண்ணிரண் டாவன புண்ணிரண்டே

வாரி அரங்கம் வருதிருப் பாவைக்கும் மண்மகட்கும் - திருப்பாற்கடலில் தோன்றிய திருமகளுக்கும் புவிமகளுக்கும்

சீரி அரங்கன் வளர்திருக் கோலமும் - சிறந்த கணவராகிய திருவரங்கப் பெருமான் திருக்கண் வளர்கின்ற (திருவனந்தாழ்வான்மீது) திருக்கோலமும்,

தென்திருக்கா வேரி அரங்க விமானமும் - தென்திருக் காவிரி இடையில் அமைந்துள்ள திருவரங்கத்தில் உள்ள பெரிய கோயிலையும் அரங்க விமானத்தையும்,

மேவித்தொழார் பூரி அரங்கரவர் - விரும்பித் தொழாதவர் கீழானவராவார்.

கண்ணிரண் டாவன புண்ணிரண்டே - (அத்தகைய கீழ்மக்களுடைய) கண்களாக விளங்கக் கூடியவை பார்வையை வழங்கவல்ல கண்களல்ல. இரண்டு புண்களேயாகும்.

திருவரங்கத்தில் உள்ள பெரிய கோயிலையும் அரங்க விமானத்தையும் விரும்பித் தொழாதவர் கீழானவர். அவர்களுடைய கண்கள், கண்களாகக் கருதப்பட மாட்டா. அவை புண்களாகும் என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லா தவர்.
- (திருக்குறள் : 393)

என்ற குறளோடு, இப்பாடல் ஒப்புநோக்கத்தக்கது.

திருமங்கையாழ்வார், எம்பெருமானைக் காணாதவர் கண்கள் கண்களல்ல என்பர். நீண்ட வாசுகி என்னும் பாம்பைக் கடைக் கயிறாகச் சுற்றிப் பெரிய மந்தரமலையை மத்தாக நாட்டி ஆழ்ந்த கடலை

மதியாதவனாகியக் கடைந்து, அமுதத்தைத் தேவர்கட்குத் தந்து திருவுள்ளம் உகந்த பெருமானும் ஆபரணங்களை அணிந்த திருமார்வை உடையவனும், கருடனை ஏறிச் செலுத்துகின்ற பொன்மலை போன்றவனுமாகிய எம்பெருமானைக் காணாதவர்களுடைய கண்கள் ஒரு நாளும் கண்களே அல்ல என்றுரைப்பர்.

நீணாகம் சுற்றிநெடு வரைநட்டு ஆழ்கடலைப்
பேணான் கடைந்தமுதம் கொண்டுகந்த பெம்மானை
பூணார மார்பனைப் புள்ளூரும் பொன்மலையைக்
காணாதார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே
– (பெரிய திருமொழி 11:7:1)

என்று தம் பாசுரமொன்றில் எடுத்தோதுவர்.

வாரி – கடல். திருப்பாவை – திருமகள். மண்மகள் – நிலமகள். பெரிய கோயில் – திருவரங்கக் கோயில். பூரியர் – கீழ்மக்கள்.

### நேரிசை வெண்பா

99. புண்ணா ருடற்பிறவி போதுமெனக் கும்உனக்கும்
எண்ணா திருந்த தினிப்போதும் – கண்ணா
குழற்காளாய் ! தென்னரங்கக் கோயிலாய் நின்பொற்
கழற்காளாய் நின்றேனைக் கா.

புண்ணா ருடற்பிறவி போதுமெனக் கும்உனக்கும் – தசையினாலான உடற்பிறவியை எடுக்கும் பிறப்பு எனக்கும் போதும், உனக்கும்,

எண்ணா திருந்த தினிப்போதும் கண்ணா – என்னை நினையாமலே இருந்த காலங்கள் இனி வேண்டாம் கண்ணபெருமானே !

குழற்காளாய் ! தென்னரங்கக் கோயிலாய் – புல்லாங்குழலையுடைய காளையைப் போன்றவனே ! தென்திருவரங்கத்தில் உள்ள பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கக் கூடியவனே !

நின்பொற் கழற்காளாய் நின்றேனைக் கா – உன்னுடைய அழகிய கழல் அணிந்த திருவடிகளுக்கு அடிமையாக நிற்பவனாகிய என்னை நீ காத்தருள வேண்டும்.

என்னை உன் அடியவனாக நினைந்து, பிறவிப்பிணியைப் போக்கிக் காத்தருள வேண்டும் என்கிறார் ஆசிரியர்.

"உருவினார் பிறவிசேர் ஊன்பொதி நரம்புதோல் குரம்பை யுள்புக்கு
அருவிநோய் செய்துநின்று ஐவர்தாம் வாழ்வதற்கு அஞ்சி னாயேல்
திருவினார் வேதம் நான்கு ஐந்துதீ வேள்வியோடு அங்கமாறும்
மருவினார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே"

- (பெரிய திருமொழி 9:7:6)

என்று திருமங்கையாழ்வார், பிறவிப்பிணிக்கு அஞ்சி இறைவனோடு தன் மனதைப் பொருந்தும்படிக் கூறி, அவன் தன்னைப் பொருந்தியவர்களைக் காப்பான் என்பதை உணர்த்துகிறார்.

புண் ஆர் உடற்பிறவி - நோய்கள் நிறைந்த உடலையெடுத்துப் பிறக்கும் பிறவி. எண்ணுதல் - நினைத்தல். கா - காப்பாயாக.

## கலிநிலைத்துறை

100. காவிரிவாய்ப் பாம்பணைமேற் கருமுகில்போல்
கண்வளரும் கருணை வள்ளல்
பூவிரியும் துழாயரங்கர் பொன்னடியே
தஞ்சமெனப் பொருந்தி வாழ்வார்
யாவரினும் இழிகுலத்தோ ரானாலும்
அவர்கண்டீர் இமையா நாட்டுத்
தேவரினும் முனிவரினும் சிவனயனென்
றிருவரினும் சீரி யோரே.

காவிரிவாய்ப் பாம்பணைமேல் கருமுகில்போல் கண்வளரும் - காவிரி ஆற்றின் இடையில் திருஅனந்தாழ்வானாகிய பள்ளியின்மேல் கரியமேகத்தைப் போல அறிதுயில் கொள்ளும்,

கருணைவள்ளல் பூவிரியும் துழாயரங்கர் - அடியார்க்கு அருள்வள்ளலாக விளங்கும் பொலிவுமிக்க துழாய்மாலையை அணிந்துள்ள திருவரங்கப் பெருமானுடைய,

பொன்னடியே தஞ்சமெனப் பொருந்திய வாழ்வார் - அழகான திருவடிகளே அடைக்கலம் என்பதை உணர்ந்து, அதன்படி இருந்து வாழ்பவர்கள்,

யாவரினும் இழிகுலத்தோர் ஆனாலும் அவர் கண்டீர் - அனைவரைக் காட்டிலும் தாழ்ந்த குலத்தில் தோன்றியவர்களாக இருப்பினும், அவர்கள் தான்,

இமையா நாட்டத் தேவரினும் முனிவரினும் - இமையாத கண்களை உடைய தேவர்களைக் காட்டிலும் முனிவர்களைக் காட்டிலும்,

சிவனயனென் றிருவரினும் சீரியோரே ! - சிவபெருமான், பிரமன் என்று சொல்லக்கூடிய கடவுளரைக் காட்டிலும் சிறப்பினை உடையவர்கள்.

எம்பெருமானது திருவடிகளே தஞ்சமென்று உறுதியாக உடைய அடியவர்கள், தேவர்களைக் காட்டிலும் உயர்வாக எண்ணக்கூடியவர்கள் என்கிறார் ஆசிரியர்.

*"குலந்தாங்கு சாதிகள் நாலினும் கீழிழிந் தெத்தனை*
*நலந்தான் இல்லாத சண்டாள சண்டாளர் களாகிலும்*
*வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற் காளென்றுள்*
*கலந்தார் அடியார் தம்அடியார் எம்மடிகளே"*
- (திருவாய்மொழி 3:7:9)

என்ற பாசுரத்தில் இழிகுலத்தோராக, சண்டாளர்களாக இருப்பினும் அவர்கள் எம்பெருமானுக்கு அடியவராயின், அவ்வடியார்க்கு அடியவர் எமது தலைவராவார் என்பார் நம்மாழ்வார். இப்பாடலோடு ஒப்புநோக்கத் தக்கது. அத்தகைய இழிந்த குலத்தோராகிய அடியவர்கள் தேவர்களைக் காட்டிலும் முனிவர்களைக் காட்டிலும் சிவபெருமான், பிரமன் ஆகியோரைக் காட்டிலும் உயர்ந்தவர் என்கிறார் ஐயங்கார்.

எம்பெருமானின் அடியவர்கள், திருநாபிக் கமலத்தில் பிறந்த நான்முகனுக்கும், படமெடுத்தாடுகின்ற பாம்புகளை ஆபரணங்களாக உடம்பிலே அணிந்து கொண்டிருக்கும் சிவபெருமானுக்கும் நித்திய சூரியனுக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் மேம்பட்டவர் என்பார் திருமழிசையாழ்வார். இதனை,

"தமராவார் யாவர்க்கும் தாமரை மேலாற்கும்
அமரர்க்கும் ஆடரவத் தாற்கும் அமரர்கள்
தாள்தா மரைமலர்கள் இட்டிறைஞ்சி மால்வண்ணன்
தாள்தா மரையடைவோ மென்று"
- (இயற்பா - நான்முகன் திருவந்தாதி :91)

என்று தன் பாசுரத்தில் எடுத்தோதுவர்.

காவிரிவாய் – உபய காவிரி, பொன் அடி – அழகிய திருவடி. இமையா நாட்டம் – இமையாத கண்கள். அயன் – பிரமன்.

## எண்சீர் ஆசிரிய வண்ண விருத்தம்

101. மழைமுகி லெனவேப ணாமு கந்திகழ்
வரியர வணையேறி வாழ ரங்கர்தம்
எழில்பெறு மிருதாளி லேக லம்பகம்
எனுமொரு தமிழ்மாலை தான ணிந்தனன்
குழலிசை அளிமேவு கூரம் வந்தருள்
குருபரன் இருபாத போத கைந்தவர்
அழகிய மணவாள தாசன் என்பவன்
அடியவர் அடிசூடி வாழும் அன்பனே.

மழைமுகி லெனவே பணாமுகந் திகழ் – கார்முகிலை ஒத்துப் படங்களோடு விளங்குகின்ற,
வரியர வணையேறி வாழ ரங்கர்தம் – புள்ளிகளை உடைய அனந்தாழ்வானாகிய பாம்பின் அணைமீது அறிதுயில் கொண்டருளுகின்ற திருவரங்கப் பெருமானுடைய,
எழில்பெறும் இருதாளிலே, – அழகுமிக்க இரண்டு திருவடிகளிலே,
கலம்பகம் எனுமொரு தமிழ்மாலைதான் அணிந்தனன் – கலம்பகம் என்று சொல்லப்படுகின்ற தமிழால் செய்யப்பட்ட ஒரு மாலையை சூடிக் கொண்டான்.

குழலிசை அளிமேவு கூரம் வந்தருள் - புல்லாங்குழலின் இசையை ஒத்ததாக, வண்டுகள் இசைத்து, விரும்பி தங்குகின்ற கூரம் என்னும் பதியில் வந்து அவதரித்து அருள் செய்த,

குருபரன் இருபாதம் போதம் அடைந்தவன் - சிறந்த ஆசாரியருடைய இரு திருவடித் தாமரைகளைத் தஞ்சமாக அடைந்தவன்,

அழகிய மணவாள தாசன் என்பவன் - அழகிய மணவாள தாசன் என்கின்ற திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்,

அடியவர் அடிசூடி வாழும் அன்பனே - திருவரங்கப் பெருமானின் அடியார்களது திருவடிகளைத் தலைமேல் தாங்கி வாழும் பெருமாள் அன்பனாவான்.

தன்னைப் பிறர்போல கருதும் வண்ணம் பதிகம் கூறியது.

"யானே தவம்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான் - யானே
இருந்தமிழ் நல்மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது".

- (இயற்பா - இரண்டாம் திருவந்தாதி

என்ற பூதத்தாழ்வார் பாசுரம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இப்பாடலில், 'அடியவர் அடிசூழ வாழும் அன்பன்' என்ற தன்னைக் குறிப்பிடுவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். அடியவர்களின் அடியவர்கள் எமது தலைவர்களாவார்கள் என்பதை 'என்னம்மான் நீக்கமில்லா அடியார்தம் அடியார் அடியார் அடியார்எம் கோக்கள்" (திருவாய்மொழி 8:10:10) என்றும் 'கொடுமா வினையேன் அவனடியார் அடியே கூடும் இதுவல்லால், விடுமாறு என்பதுஎன் அந்தோ ? வியன்மூவுலகு பெறினுமே' (திருவாய்மொழி 8:10:10) என்றும் நம்மாழ்வார், எம்பெருமானுக்குச் செய்யும் சேவையினும் அவனுடைய அடியார்க்குச் செய்யும் சேவை பெருமையுடையது என்று எழிலுற எடுத்தோதுகிறார்.

பணாமுகம் - படங்களோடு கூடிய முகங்கள், வரி அரவு - புள்ளிகளையுடைய பாம்பு. அளி - வண்டுகள். கூரம் - கூரம் என்ற ஊர். குருபரன் - ஆசாரியன். அழகிய மணவாளதாசன் - பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

திருவரங்கக் கலம்பகம் - செய்யுள் முதற்குறிப்பகராதி.

எண் - பாடல்எண்.


| | |
|---|---|
| அண்ட முழுதும் | 47 |
| அண்டர் போற்றும் | 91 |
| அரங்க மாளிகை | 38 |
| அரவினடித்தாள் | 10 |
| அரும் பித்தளை | 43 |
| அரும் புண்டரீக | 95 |
| அரும் புன்னாக | 72 |
| ஆடும்பட நாகணை | 46 |
| ஆயினை மனை | 36 |
| ஆனந்த மாயரங் | 62 |
| இரங்கத்தனி | 23 |
| இரவியை இரவின் | 67 |
| இருங்குங்கும | 34 |
| இரும்புவனம் விரும்பு | 55 |
| இருளினும் வெளி | 28 |
| இல்லறமென துற | 66 |
| இன்னிசை வேயினர் | 85 |
| உண்டுமிழ் வாச | 84 |
| உருமாறிப் பல | 58 |
| ஊசல் வடம் போலும் | 59 |
| எங்கணு நிறைந்து | 78 |
| எங்காந்தளம் | 64 |
| எனக்கேதிரு | 2 |
| ஒருநயம் பேசுவன் | 76 |
| ஒருபொருளல்லேன் | 97 |
| ஒளிக்குமிரு சுடர் | 88 |
| கடல்வழிவிட | 22 |
| கரைபொருதொழு | 73 |
| கற்றாரெனினும் | 5 |

| | |
|---|---|
| காணாத புதுமை | 49 |
| காயிலை தின்றும் | 18 |
| காரகமோநம் | 75 |
| காலமுணர்ந்த | 69 |
| காலாயிரம் முடி | 3 |
| காவிரிவாய்ப் பாம் | 100 |
| குருகுறங்கு கானலே | 31 |
| கேசவனையே செவி | 20 |
| கொண்டல்காள் | 12 |
| கொற்றவன்தன் | 52 |
| சருகருந்தி | 40 |
| சிந்திக்கத் தித்திக்கும் | 44 |
| சிந்தையில் குடிகொண் | 65 |
| சீர்பூத்த செழுங் | 1 |
| செம்பொன்னரங்க | 48 |
| சேவடியான் மூவடி | 29 |
| சேவிக்கவாழ் | 68 |
| தாளிரண்டும் பார் | 57 |
| தானேதனக்கொத்த | 11 |
| திருவரங்கந்திரு | 41 |
| திருப்பொற் பாவை | 42 |
| தீண்டாவமும்பும் | 17 |
| துறைமதியாமல் | 51 |
| தென்றலைக் குங்கும | 90 |
| தேடுகின்றனை | 35 |
| தேனந்து சோலை | 45 |
| தேனமரும் சோலை | 27 |
| தொட்டுண்ட தயிர் | 92 |
| தொழப்பெறா | 37 |
| நகுகதிர் வழங்கு | 7 |
| நானந்த வைகுந்த | 9 |
| நீசச்சமணர்க்கும் | 94 |
| நீரிருக்க மடமங்கை | 24 |
| நேசத்தழைக்கு | 60 |

| | |
|---|---|
| பண்கொண்ட | 74 |
| பாசமாமடியர் | 77 |
| பாதியா யழுகிய | 15 |
| பிடிக்கும் பரசமய | பா-3 |
| பிறவியெனும் கடல் | 96 |
| புண்ணாருடற்பிறவி | 99 |
| புயநான்குடையானை | 8 |
| புலையாம்பிறவி | 16 |
| பெருமாலையார்க்கு | 70 |
| பெருவரங்கேச | 30 |
| பேசவந்த தூத ! | 53 |
| போதவெனக்கெளி | 80 |
| போயவனியில் | 13 |
| போனகம் பதினாலு | 32 |
| மண்டலமும் விண்டல | 6 |
| மருவுதந்தை | 14 |
| மழைபிறை சிலை | 56 |
| மழைபோன் மரகத | 87 |
| மழைமுகிலென | 101 |
| மறக்குமோ காவின் | 25 |
| மறைப்பாற்கடலை | பா-2 |
| மாதங்களென் | 63 |
| மானார் கேசன் | 79 |
| மானை எய்தவ | 27 |
| முலைகொண்ட | 82 |
| முன்னம்பிறந்த | 71 |
| முன்னமேழ்புரவி | 50 |
| மேவலர்வாழ்தென் | 89 |
| வடியாத பவக்கடலும் | 93 |
| வாடியோட வனச | 39 |
| வாடையாயிரு | 86 |
| வாயினிரங்கினை | 21 |
| வாரியரங்கம் | 98 |
| வாழுமவுலி | 33 |
| வானிட்ட கீர்த்தி | பா-4 |

| | |
|---|---|
| விடாதுபூமடந்தை | 81 |
| விலையானதிலை | 61 |
| வீரராங்காகிய | 19 |
| வெஞ்சமம் கருதும் | 83 |
| வேதந்தொகுத்து | பா-1 |
| வேலையுலகில் | 54 |
| வைகலந்த மூவிலை | 4 |

பின்னிணைப்பு : 1.

## தமிழில் உள்ள கலம்பகங்கள் – அகரநிரல்

1. அண்ணா கலம்பகம் – ..........................
2. அந்தாதிக் கலம்பகம் – ...........................
3. அநுமக் கலம்பகம் – மதுரகவி ஸ்ரீநிவாசனார்
4. அர்ச் சூசையப்பர் கலம்பகம் – செகராவு முதலியார்
5. அருணைக் கலம்பகம் – சைவ எல்லப்ப நாவலர்.
6. அழகர் கலம்பகம் – அரபத்த நாவலர்
7. அழகர் கலம்பகம் – கவி குஞ்சரம் ஐயர்.
8. அழைப்பிச்சான் கலம்பகம் – ..........................
9. அறம்வளர்த்த முதலியார் கலம்பகம் – அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன்
10. ஆதிக்கலம்பகம் – இராம கிருட்டிணன்
11. ஆளுடைய பிள்ளையார் கலம்பகம் – நம்பியாண்டார் நம்பி (திருஞானசம்பந்தர் திருக்கலம்பகம்)
12. இம்மானுவேல் கலம்பகம் – ஜே.பி. மானுவேல் (பதிப்.)
13. எடப்பாடி ஆறுமுகசாமி கலம்பகம் – கா.நா. நெல்லையப்பர்
14. எண்ணூர்க் கலம்பகம் – ஏ.எஸ். செகராவு முதலியார்
15. எவ்வுளூர்க் கலம்பகம் – இராமசாமி செட்டியார்.
16. கச்சிக் கலம்பகம் – காஞ்சி ஞானப்பிரகாசர்
17. கச்சிக் கலம்பகம் – பூண்டி அரங்கநாத முதலியார்
18. கண்டிக் கலம்பகம் – அப்துல் காதிர் புலவர்.
19. கண்ணப்பர் கலம்பகம் – புதுவை வி. துரைசாமி முதலியார்
20. கதிர்காமக் கலம்பகம் – கந்தப்ப அடிகள்

21. கலைஞர்க் கலம்பகம் - ............................
22. காசிக் கலம்பகம் - குமரகுருபரர்
23. காட்சிக் கலம்பகம் - ............................
24. காந்திக் கலம்பகம் - ............................
25. கிறித்துவக் கலம்பகம் - ............................
26. குமரகோட்டக் கலம்பகம் - புரசை. சபாபதி முதலியார்
27. குருகைக் கலம்பகம் - முத்துசாமி ஐயங்கார்
28. குவாலீர்க் கலம்பகம் - குலாம்காதிறு நாவலர்
29. குழைக்காதர் கலம்பகம் - ............................
(தென் திருப்பேறை)
30. குறுக்குத்துறைக் கலம்பகம் - தி.சு. ஆறுமுகம்.
31. குன்றக்குடிக் கலம்பகம் - தண்டபாணி சுவாமிகள்
32. கூடற் கலம்பகம் - ஆளவந்தார்
33. கைலைக் கலம்பகம் - குமரகுருபரர்
34. கொற்றந்தைக் கலம்பகம் - புகழேந்திப் புலவர்
35. கோவைக் கலம்பகம் - பி.ஆர். கிருஷ்ணமாச்சாரியார்
(கா. சதாசிவ முதலியார் பேரில்)
36. சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம் - துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்
37. சீகாளத்திக் கலம்பகம் - திருஎவ்வளூர் இராமசாமி செட்டியார்.
38. செஞ்சிக் கலம்பகம் - புகழேந்திப் புலவர்
39. செய்யூர் கலம்பகம் - முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார்
40. சென்னைக் கலம்பகம் - முருகதாச சுவாமிகள்
41. சென்னை மாநகர்க் கந்தசாமிக் கலம்பகம் - தண்டபாணி சுவாமிகள்
42. சேயூர்க் கலம்பகம் - அந்தகக் கவி வீரராகவ முதலியார்
43. சேறைக் கலம்பகம் - சேற்றூர் பொன்னாயிரங் கவிராய மூர்த்திகள்
44. ஞான விநோதன் கலம்பகம் - தத்துவராய சுவாமிகள்
45. தணிகைக் கலம்பகம் - கந்தப்ப ஐயர்
46. திருஎவ்வுட் கலம்பகம் - கோயம்பேடு வேங்கட கிருஷ்ணதாசர்
47. திருக்கச்சியூர்க் கலம்பகம் - இரட்டைப் புலவர்கள்
48. திருக்கண்ணபுரக் கலம்பகம் - டி.எஸ். ராஜகோபாலன்
49. திருக்கலம்பகம் - உதீசித் தேவர்
50. திருக்கழுக் குன்ற கலம்பகம் - திருஎவ்வளூர் இராமசாமி செட்டியார்
51. திருக்காவலூர்க் கலம்பகம் - வீரமாமுனிவர்

52. திருக்குடந்தைக் கலம்பகம் - நெல்லை எட்டிசேரி தி. சங்குப்புலவர்
53. திருக்குற்றாலக் கலம்பகம் - ............................
54. திருக் கோட்டியூர்க் கலம்பகம் - பெருங்கருணை முத்தழகர்
55. திருக் கோட்டாற்றுக் கலம்பகம் - கொட்டாம்பட்டி கருப்பையப் பாவலர்
56. திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம் - சீனிப்புலவர்
(துறைசை ஆதீன கர்த்தர்மீது)
57. திருச்சுசீந்தைக் கலம்பகம் - வீரவனந்தூர் பழனிக் குமர பண்டாரம்
58. திருச்செங்கோட்டுக் கலம்பகம் - சே. சுந்தரமுதலியார்
59. திருச்செந்திற் கலம்பகம் - துறைசை ஈசான தேசிகர் என்னும் சாமிநாத தேசிகர்.
60. திருச்செந்தூர்க் கலம்பகம் - ..................................
61. திருஞான சம்பந்தர் கலம்பகம் - மாணிக்கவாசகத் தம்பிரான்
62. திருத்தணிக்கைக் கலம்பகம் - கந்தப்பையர்
63. திருத்திணிகைக் கலம்பகம் - தொழுவூர் வேலாயுத முதலியார்
64. திருநல்லூர்க் கலம்பம் - வெண்பாப்புலி அரன்வாயில் வேங்கசுப்புப் பிள்ளை
65. திருநெல்வேலி சிவன் கலம்பகம் - தண்டபாணி சுவாமிகள்
66. திருநாராயணக் கலம்பகம் - கட்டளை வரதராஜ பிள்ளை
67. திருப்பரங்குன்றக் கலம்பகம் - நா. கனகராஸையர்
68. திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் - தொல்காப்பியத் தேவர்
69. திருப்பெருந்துறைக் கலம்பகம் - சாத்திரம் சாமிநாத முனிவர்
70. திருப்பேரூர்க் கலம்பகம் - சிரவை கந்தசாமி சுவாமிகள்
71. திருப்பேரூர்க் கலம்பகம் - எ.ரா. சபாபதிப்பிள்ளை
72. திருப்பேரூர் கலம்பகம் - கு. நடேசகவுண்டர்
73. திருப்பேரைக் கலம்பகம் - அனந்த கிருஷ்ண ஐயங்கார்
74. திருப்பேரூர்க் கலம்பகம் - புரசை சபாபதி முதலியார்
75. திருப்பேரூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கலம்பகம் - தா. சாமிநாதபிள்ளை
76. திருப்போரூர் வேம்படி விநாயகர் கலம்பம் - போரூர் வேலுத் தேசிகர்
77. திருமதீனக் கலம்பகம் - பிச்சை இபுறாகீம் புலவர்
78. திருமயிலக் கலம்பகம் - புதுப்பாளையம் அ. பெரியசாமிப்பிள்ளை
(திருமயிலாசலக் கலம்பகம்)
79. திருமலைக் கலம்பகம் - ..........................
80. திருவதிகைக் கலம்பகம் - உத்தண்ட வேலாயுத பாரதி

81. திருவரங்கக் கலம்பகம் - பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
82. திருவல்லிக்கேணி கலம்பகம் - அ. சங்கரலிங்கம் பிள்ளை
83. திருவாமாத்தூர்க் கலம்பகம் - இரட்டைப்புலவர்கள்
84. திருவாரூர்க் கலம்பகம் - ...................................
85. திரு.வி.க. கலம்பகம் - மறையரசன்
86. திருவிடைமருதூர்க் கலம்பகம் - திருஎவ்வளூர் இராமசாமி செட்டியார்
87. திருவிருதைக் கலம்பகம் - பாவூர் எம். பார்த்தசாரதி நாயுடு
88. திருவீரைக் கலம்பகம் - வீரவனல்லூர் பழனிக் குமரபண்டாரம்
89. திருவெங்கைக் கலம்பகம் - துறைமங்கலம் சிவப்பிரகாசர்
90. திருவெண்ணெய் நல்லூர்க் கலம்பகம் - பஞ்சலட்சண சரபம் இராசப்ப நாவலர்
91. திருவேட்டீசுவரர் கலம்பகம் - சிவானந்தசாகர யோகீசுவரர் (பதிப்.)
92. திருவேங்கடக் கலம்பகம் - முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார்
93. திருவேங்கடமுடையான் கலம்பகம் - எஸ்.கே. இராமராசன் என்ற கம்பராமன்.
94. திருவேரகக் கலம்பகம் - சுவாமிமலை நாராயணசாமிக் கவிராயர்
95. திருவொற்றியூர்க் கலம்பகம் - பூவை கலியாணசுந்தர முதலியார்.
96. தில்லைக் கலம்பகம் - இரட்டைப் புலவர்கள்
97. துரியோதனன் கலம்பகம் -...............................
98. துறைசை அம்பலவாணர் தேசிகர் கலம்பகம் - மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை
99. தென்தில்லைக் கலம்பகம் - பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்
100. நசரைக் கலம்பகம் - சாமிநாதப் பிள்ளை
101. நந்திக் கலம்பகம் - அ. கோபாலய்யர் (பதிப்.)
102. நாகைக் கலம்பகம் - சவ்வாதுப் புலவர்
103. நாகூர்க் கலம்பகம் - தண்டபாணி சுவாமிகள்
104. நெல்லைக் கலம்பகம் - குலாம் காதிறு நாவலர்
105. நேமக் கலம்பகம் - முத்தப்பச் செட்டியார்
106. பகுதாதுக் கலம்பகம் - குலாம் காதிறு நாவலர்
107. பதாயிகுக் கலம்பகம் - குலாம் காதிறு நாவலர்
108. பழனிக் கலம்பகம் - தண்டபாணி சுவாமிகள்
109. பாக்தாதுக் கலம்பகம் - ............................................... (முகையத்தீன் அப்துல்காதர் ஜய்லாணி ஆண்டகை அவர்கள் மீது)
110. பாலூர்க் கலம்பகம் - முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார்

111. பின்னத்தூர் கலம்பகம் - பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்
112. புதுவை கலம்பகம் - அ. பெரியசாமிப் புலவர்
113. புதுவைக் கலம்பகம் - தண்டபாணி சுவாமிகள்
114. புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் - படிக்காசுப் புலவர்
115. பெத்லேஹம் கலம்பகம் - ...............................
116. பேரூர் கலம்பகம் - ரா. சபாபதிபிள்ளை
117. மக்காக் கலம்பகம் - செய்க் அப்பதுல்காதிறு ஆலிம்புலவர்
118. மகிழ்மாக் கலம்பகம் - தொழுவூர் வேலாயுத முதலியார்
119. மதீனாக் கலம்பகம் - சீவரத்தினக் கவிராயர் என்னும் முகமது லெப்பை
120. மதீனாக் கலம்பகம் - குலாம் காதிறு நாவலர்
121. மதுரைக் கலம்பகம் - குமர குருபரர்
122. மதுரைக் கலம்பகம் - இளையான்குடி சோதுகுடி
அப்துல் காதிர் நாவலர்
123. மயிலாசலக் கலம்பகம் - தண்டபாணி சுவாமிகள்
124. மயூரக்கிரிக் கலம்பகம் - வயிநாகரம் அ. இராமசாமி செட்டியார்
125. மறைசைக் கலம்பகம் - யாழ்ப்பாணம் நீர்வேலி பீதாம்பரப் புலவர்
126. மாறன் கலம்பகம் - ........................................
127. முருகக் கடவுட் கலம்பகம் - நாராயணசாமிக் கவிராசர்
128. முருகக் கடவுட் கலம்பகம் - அரசஞ் சண்மகனார்
129. வரமங்கைக் கலம்பகம் - நரசிம்மாச்சாரியர் என்னும்
கவிபூஷணம் அப்பு ஐயங்கார்.
130. வாட்போக்கிக் கலம்பகம் - மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
131. விந்தைக் கலம்பகம் - பஞ்சலட்சண சரபம் இராசப்ப நாவலர்
132. வீரகேரளம்புதூர் நவநீதகிருட்டிணன் கலம்பகம் - தண்டபாணி
சுவாமிகள்
133. வீரமாமுனிவர் கலம்பகம் - செகராவு முதலியார்
134. வீரமாமுனிவர் கலம்பகம் - பேரா. சுந்தரமூர்த்தி
135. வேலூர் (சேலம்) சத்திர விநாயகர் கலம்பகம் - எஸ்.கே. இராமராசன்
(கம்பராமன்)
136. வேளூர்க் கலம்பகம் - ..................................
137. ஜகத்குரு சங்கரர் கலம்பகம் - எஸ்.கே. இராமராசன் (கம்பராமன்)
137. (பெயர் தெரியாத கலம்பகம்) - வடமலையப்பப் பிள்ளையன்

...

## பின்னிணைப்பு : 2

| வரிசை எண். | நூலின் பெயர் | நூலகச் சுவடி எண் | நூலகத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | அழகர் கலம்பகம் | 843 | டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகம், சென்னை. |
| 2. | காசிக்கலம்பகம் | ஆர்.2834 | கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை. |
| 3. | 〃 | ஆர்.5528 | 〃 |
| 4. | 〃 | 850 | டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகம், சென்னை. |
| 5. | 〃 | 851 | 〃 |
| 6. | 〃 | 852 | 〃 |
| 7. | 〃 | 167 | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 8. | 〃 | 168(ஏ) | 〃 |
| 9. | 〃 | 169 | 〃 |
| 10. | காட்சிக்கலம்பகம் | 3889(சி) | கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை. |
| 11. | 〃 | 6391 | 〃 |
| 12. | 〃 | 9020 | 〃 |
| 13. | குன்றக்குடிக் கலம்பகம் | 31 | கௌமார மடாலயம், சரவணம்பட்டி, கோயம்புத்தூர். |
| 14. | கோயில்கலம்பகம் | 44568(ஏ) | அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர். |

| | | | |
|---|---|---|---|
| 15. | சிவஞான பாலையர் கலம்பகம் | 286 | கீழ்த்திசை சுவடிகள் நூலகம், சென்னை |
| 16. | சிற்றம்பல தேசிகர் கலம்பகம் | 181 | தமிழ்ச் சங்கம், மதுரை. |
| 17. | சென்னைக் கலம்பகம் | 30 | கௌமார மடாலயம், சரவணம்பட்டி, கோயம்புத்தூர். |
| 18. | ஞானவிநோதன் கலம்பகம் | ஆர்.1531 | கீழ்த்திசை சுவடி நூலகம், சென்னை. |
| 19. | ,, | ஆர்.1533 | ,, |
| 20. | ,, | ஆர். 1534 | ,, |
| 21. | ,, | ஆர்.2378 | |
| 22. | ,, | 1881 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை |
| 23. | திருக்கலம்பகம் | 242 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை |
| 24. | ,, | 853 | ,, |
| 25. | ,, | 227 | ,, |
| 26. | ,, | ஆர்.289 | கீழ்த்திசை சுவடிகள் நூலகம், சென்னை |
| 27. | திருக்கலம்பகம் மூலமும் உரையும் | ஆர்.287 | ,, |
| 28. | திருக்காவலூர்க் கலம்பகம் | 477 | தேசிய அருங்காட்சியகம், கோபன்ஹேகன், டென்மார்க். |
| 29. | திருச்செந்தூர்க் கலம்பகம் | 854 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை |
| 30. | திருத்தணிகைக் கலம்பகம் | ஆர்.290 | கீழ்த்திசை சுவடிகள் நூலகம், சென்னை |
| 31. | திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் | 855 | டாக்டர் உ.வே.சா, நூலகம், சென்னை. |
| 32. | ,, | 856 | ,, |
| 33. | திருவரங்கக் கலம்பகத் திரட்டு | 839 | ,, |
| 34. | திருவரங்கக் கலம்பகத் திரட்டு | ஆர்.291 | கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை |
| 35. | திருவரங்கக் கலம்பகம் | ஆர்.292 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 36. | ,, | ஆர்.293 | ,, |
| 37. | ,, | ஆர்.294 | ,, |
| 38. | ,, | ஆர்.295 | ,, |
| 39. | ,, | ஆர்.2606 | ,, |
| 40. | ,, | ஆர்3430 | ,, |
| 41. | ,, | ஆர்.4353 | ,, |
| 42. | ,, | ஆர்.5045 | ,, |
| 43. | ,, | ஆர்.5071 | ,, |
| 44. | ,, | 834 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை. |
| 45. | ,, | 835 | ,, |
| 46. | ,, | 836 | ,, |
| 47. | ,, | 837 | ,, |
| 48. | ,, | 838 | ,, |
| 49. | ,, | 170 | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 50. | ,, | 171(பி) | ,, |
| 51. | ,, | 172 | ,, |
| 52. | ,, | 173 | ,, |
| 53. | ,, | 174 | ,, |
| 54. | ,, | 440 | ,, |
| 55. | திருவரங்கக் கலம்பகம், மூலமும் உரையும் | ஆர்.2683 | கீழ்த்திசை சுவடி நூலகம், சென்னை. |
| 56. | ,, | 711(பி) | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 57. | திருவருணைக் கலம்பகம் | 44576 | அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர். |
| 58. | ,, | 44568(பி) | ,, |
| 59. | ,, | ஆர். 2653 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை. |
| 60. | ,, | ஆர்.2801 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை. |
| 61. | ,, | ஆர்.5138 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 62. | ,, | 840 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை. |
| 63. | ,, | 84 | ,, |
| 64. | திருவருணைக் கலம்பகம் | 842 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை. |
| 65. | .. | 3889(டி) | கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம். |
| 66. | திருவாமாத்தூர்க் கலம்பகம் | ஆர்.2087 | ,, |
| 67. | ,, | ஆர்.2741 | ,, |
| 68. | ,, | ஆர்.2748 | ,, |
| 69. | ,, | 844 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை. |
| 70. | திருவாமாத்தூர்க் கலம்பகம் | 845 | ,, |
| 71. | ,, | 846 | ,, |
| 72. | ,, | 847 | ,, |
| 73. | ,, | 848 | ,, |
| 74. | ,, | 849 | ,, |
| 75. | ,, | 176 | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 76. | ,, | 363 | தேசிய அருங்காட்சியகம், கோபன்ஹேகன், டென்மார்க். |
| 77. | திருவெங்கைக் கலம்பகம் | ஆர்.2813 | கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை |
| 78. | திருவேங்கடக்கலம்பகம் | ஆர்.296 | ,, |
| 79. | ,, | ஆர்.2845 | ,, |
| 80. | தில்லைக்கலம்பகம் | ஆர்.297 | ,, |
| 81. | ,, | ஆர்.2701 | ,, |
| 82. | நசரைக்கலம்பகம் | 478(ஏ) | பிபிலோதேகு நேஷனல், பாரிஸ். பிரான்ஸ் |
| 83. | நசரைக்கலம்பகம் மூலமும் உரையும் | ஆர்.298 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை |

| | | | |
|---|---|---|---|
| 84. | நந்திக்கலம்பகம் | 857 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை |
| 85. | ,, | ஆர்.2739 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை. |
| 86. | ,, | ஆர்.2756 | ,, |
| 87. | ,, | 3006(ஏ) | இந்திய தேசிய நூலகம், கெல்கத்தா |
| 88. | ,, | 3110 | ,, |
| 89. | ,, | 265 | தமிழ்ச் சங்கம், மதுரை |
| 90. | நெல்லைக் கலம்பகம் | 5 | கௌமார மடாலம், சரவணம்பட்டி கோயம்புத்தூர். |
| 91. | மதுரைக் கலம்பகம் | ஆர்.299 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை. |
| 92. | ,, | 175 | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 93. | மயிலாசக் கலம்பகம் | ஆர்.2812 | கீழ்த்திசை சுவடிகள் நூலகம், சென்னை. |
| 94. | ,, | 25 | கௌமார மடாலயம், சரவணம்பட்டி, கோயம்புத்தூர் |
| 95. | மாறன்கலம்பகம் | ஆர்.428(ஜி) | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை. |
| 96. | வாட்போக்கிக் கலம்பகம் | 858 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை. |
| 97. | ,, | 859 | ,, |
| 98. | வீரைநவநீதகிருஷ்ணன் கலம்பகம் | 1 | கௌமார மடாலயம், சரவணம்பட்டி, கோயம்புத்தூர். |
| 99. | வேளூர்க் கலம்பகம் | 860 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை. |
| 100. | ,, | 861 | ,, |

பின்னிணைப்பு :3

## திருவரங்கம் தொடர்பான ஓலைச்சுவடிகள்.

| வ. எண். | நூலின் பெயர் | நூலகச் சுவடிஎண் | நூலகத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | அஷ்டப்பிரபந்தம் | 44566 | அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். சிதம்பரம். |
| 2. | அரங்கநாதர் ஊசல் | 271 (ஏ) | தவத்திரு சாந்தலிங்க அடிகளார், தமிழ்க் கல்லூரி, பேரூர், கோயம்புத்தூர் |
| 3. | ,, | 459 (எஸ்) | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், |
| 4. | ,, | ஆர்.6718 | ,, |
| 5. | அரங்கநாதர் தோத்திரம் | 1925 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை |
| 6. | ,, ஊஞ்சல் | 857(பி) | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 7. | அரங்கநாயகர் மாலை | 1926 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை |
| 8. | அரங்க மகாத்மியம் (1) | 9066(பி) | கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை |
| 9. | ,, விருத்தம் | 1927 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை |
| 10. | அரங்கன் அகவல் | 633 | ,, |
| 11. | அரங்கேச வெண்பா | 13 | தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோயம்புத்தூர் |

| | | | |
|---|---|---|---|
| 12. | ,, | ஆர்2851 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை |
| 13. | ,, | ஆர்.3192 | ,, |
| 14. | ,, | ஆர்.4526 | ,, |
| 15. | அரங்கேச வெண்பா | ஆர்5324 | கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை |
| 16. | ,, | ஆர்6468 | கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை |
| 17. | ,, | ஆர்6436 | ,, |
| 18. | ,, | 9204 | ,, |
| 19. | ,, | 9198 | ,, |
| 20. | ,, | 10388 | ,, |
| 21. | ,, | 19230 | ,, |
| 22. | ,, | 15409 | பிரஞ்சிந்திய நிறுவனம், பாண்டிச்சேரி |
| 23. | அரங்கேசவெண்பா மூலமும் உரையும் | ஆர். 2757 | கீழ்த்திசை சுவடிகள் நூலகம், சென்னை. |
| 24. | ,, ,, | ஆர்.132 | ,, |
| 25. | ,, ,, | ஆர்.133 | ,, |
| 26. | ,, ,, | ஆர்.134 | ,, |
| 27. | ,, ,, | ஆர்.135 | ,, |
| 28. | ,, ,, | ஆர்.4866 | ,, |
| 29. | ,, ,, | 1101 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை. |
| 30. | ,, ,, | 1102 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை |
| 31. | ,, ,, | 1103 | ,, |
| 32. | ,, ,, | 1104 | ,, |
| 33. | ,, ,, | 1105 | ,, |
| 34. | ,, ,, | 366 | ,, |
| 35. | சீரங்க அம்மானை | 3213 | ,, |
| 36. | சீரங்கக் கோயிலொழுகு | 31 | ராயல் ஏசியாடிக் சொஸைட்டி நூலகம், லண்டன். |

| | | | |
|---|---|---|---|
| 37. | சீரங்கத் தத்துவம் | 232 | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 38. | சீரங்க நாயகியார் ஊசல் | ஆர்.2113 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை |
| 39. | சீரங்க மகத்துவம் | ஆர்.2011 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை |
| 40. | சீரங்க மகத்துவம் | ஆர். 2011 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை |
| 41. | சீரங்க மகத்துவம் | ஆர்.4300 | ,, |
| 42. | சீரங்க மகத்துவம் வசனம் | ஆர். 551 | ,, |
| 43. | ,, | ஆர்.552 | ,, |
| 44. | ,, | ஆர்.579 | ,, |
| 45. | ,, | ஆர்.580 | |
| 46. | சீரங்க மகாத்மிய அமிர்தம் | 262 | பிபிலேதோடு நேஷனல், பாரிஸ், பிரான்ஸ் |
| 47. | சீரங்க மகாத்மியம் | 7991 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், திருவனந்தபுரம். |
| 48. | ,, | 10352 | ,, ,, |
| 49. | ,, | 10448 | ,, ,, |
| 50. | ,, | 10467 | ,, ,, |
| 51. | ,, | 41 | இந்திய அலுவலக நூலகம், லண்டன் |
| 52. | ,, | 332 | பிபிலோதேகு நேஷனல், பாரிஸ், பிரான்ஸ் |
| 53. | சீரங்கராயன் பள்ளு | 266 | தவத்திரு சாந்தலிங்க அடிகளார்,தமிழ்க் கல்லூரி, பேரூர், கோயம்புத்தூர். |
| 54. | திருவரங்க அட்டவணை | ஆர்.3568 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை. |
| 55. | திருவரங்கக் கலம்பகத் திரட்டு | 839 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை |
| 56. | ,, | ஆர்.291 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,சென்னை |
| 57. | ,, | ஆர்.292 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 58. | ,, | ஆர்.293 | ,, |
| 59. | ,, | ஆர்.294 | ,, |
| 60. | ,, | ஆர்.295 | ,, |
| 61. | ,, | ஆர்.2606 | ,, |
| 62. | ,, | ஆர்.3430 | ,, |
| 63. | ,, | ஆர்.4353 | ,, |
| 64. | ,, | ஆர்.5045 | ,, |
| 65. | திருவரங்கக் கலம்பகத் | ஆர்.5071 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை |
| 66. | ,, | 834 | டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை |
| 67. | ,, | 835 | ,, |
| 68. | ,, | 836 | ,, |
| 69. | ,, | 837 | ,, |
| 70. | ,, | 838 | ,, |
| 71. | ,, | 170 | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 72. | ,, | 171(பி) | ,, |
| 73. | ,, | 172 | ,, |
| 74. | ,, | 173 | ,, |
| 75. | ,, | 174 | ,, |
| 76. | ,, | 440 | ,, |
| 77. | திருவரங்ககட கவலம்பகம் மூலமும் உரையும் | ஆர்.2683 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை |
| 78. | ,, ,, | 711(பி) | சுரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 79. | திருவரங்கத்தந்தாதி | ஆர்.2437 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5 |
| 80. | ,, | 8094 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், திருவனந்தபுரம். |
| 81. | ,, | 3140(ஏ) | இந்திய தேசிய நூலகம், கல்கத்தா |
| 82. | ,, | 672 | டாக்டர் உ.வே.சா நூலகம், சென்னை |

| | | | |
|---|---|---|---|
| 83. | ,, | 125 | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர் |
| 84. | ,, | 230 | ,, |
| 85. | ,, | 381(பி) | ,, |
| 86. | ,, | 670 | ,, |
| 87. | மூலமும் உரையும் | ஆர்.422(சி) | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை. |
| 88. | ,, ,, | ஆர்.256 | ,, |
| 89. | ,, ,, | 671 | ,, |
| 90. | ,, ,, | 669 | ,, |
| 91. | திருவரங்கத்தந்தாதி மூலமும் உரையும் | 126 | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 92. | திருவரங்கத் தமிழ்விலைப் பதிகம் | 19 | கௌமாகர மடாலயம், சரவணம்பட்டி, கோயம்புத்தூர். |
| 93. | திருவரங்கத் திருவாயிரம் | 11 | |
| 94. | திருவரங்கத்து மாலை | ஆர்.2730 | சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர் |
| 95. | திருவரங்க நாயகியார் ஊசல் | 45834 | |
| 96. | திருவரங்க நிட்டூரப் பதிகம் | 19 | கௌமாகர மடாலயம், சரவணம்பட்டி, கோயம்புத்தூர். |
| 97. | திருவரங்கப் பதிகம் | 19 | |
| 98. | திருவரங்கப் பதிற்றுப்பத்தந்தாதி | ஆர்.2302 | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை |
| 99. | திருவரங்கர் ஊசல் | ஆர். 466(என்) | ,, |
| 100. | திருவரங்கர் தோத்திரம் | ஆர்.463(டி) | ,, |
| 101. | திருவரங்க இதழியல் அந்தாதி | 3 | கௌமாகர மடாலயம், சரவணம்பட்டி, கோயம்புத்தூர். |

102. ஸ்ரீரங்கப்பட்டணம்
ராஜாக்கள் வரலாறு ஆர்.2763 ,,
103. ஸ்ரீரங்க மகத்துவம் ஆர் .2872 ,,
104. ஸ்ரீரங்க க்ஷேத்திர மகாத்மியம் ஆர்.11646 ,,

## துணை நூல் பட்டியல்


1. அகப்பொருள், கா.ர. கோவிந்தராச முதலியார் (பதிப்) கழக வெளியீடு, சென்னை – 18. 14 ஆம் பதிப்பு, 2000
2. அபிதான சிந்தாமணி, ஆ. சிங்காரவேலு முதலியார், ஏசியன் எடுகேஷஉல் சர்வீஸஸ், புதுதில்லி, 1982.
3. அழகர் கலம்பகம், வேம்பத்தூர்க் கவிகுஞ்சரம் ஐயர், எம்., சடகோபராமானுஜாசாரியார், சென்னை, 1890.
4. அழகல் கிள்ளைவிடு தூது, செ. இராதாகிருஷ்ணன், முல்லை நிலையம், சென்னை – 17. முதற்பதிப்பு, ஜூலை 1998.
5. அஷ்ட பிரபந்தம், வை.மு. சடகோபராமாநுஜாசாரியர், சே. கிருஷ்ணமாசாரியா, வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் (உரையாசிரியர்கள்) , கணேச அச்சுக் கூடம், சென்னை, நள வருடம் (1914)
6. அஷ்ட பிரபந்தம், கோவிந்தராஜ ஐயங்கார், (பதிப்பு) நற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, சென்னை, 1903.
7. அஷ்ட பிரபந்தம், (விளக்கக் குறிப்புடன்) மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை (பதிப்பு), ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1955.
8. எம்பிரான் சதகம், கோபால கிருஷ்ணதாசர், ஸ்ரீ கோபால விலாச அச்சியந்திரசாலை, சென்னை, 1903.
9. கம்பராமாயணம், யுத்தகாண்டம், டாக்டர் பூவண்ணன், புலவர் அ. மாணிக்கம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 17. புதிய பதிப்பு, 2002.
10. கலம்பகத்திறன், டாக்டர் கு.வெ. பாலசுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 1. முதல்பதிப்பு, 1993.
11. கலைக்களஞ்சியம் (ஏழாம் தொகுதி) மு.சி. கேசவன், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

12. சங்க இலக்கியம் - பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதல்பாகம்) புலவர் அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17. முதற்பதிப்பு, 1999.

13. சங்க இலக்கியம் - பத்துப்பாட்டு மூலமும் உரையும், (இரண்டாம் பாகம்) புலவர் அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17. முதல் பதிப்பு 1999.

14. சடகோபர் சதகத்தந்தாதி, வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், திருவாமாத்தூர், கௌமாரசபை வெளியீடு, 1963.

15. சிலப்பதிகாரம், ஜெ. ஸ்ரீசந்திரன், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17. ஒன்பதாம் பதிப்பு, ஆகஸ்டு, 2001.

16. சிவபுராணம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1960.

17. சிற்றிலக்கியச் செல்வம், டாக்டர் ந.வீ. செயராமன், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், இரண்டாம் பதிப்பு, டிசம்பர் 1979.

18. சீவக சிந்தாமணி, டாக்டர் உ.வே. சாமிநாதையர், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், நவம்பர், 1986.

19. தஞ்சை வாணன் கோவை, சொக்கப்ப நாவலர் (உரை) கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, ஆகஸ்டு 1972.

20. தமிழ் இலக்கிய வரலாறு (16ஆம் நூற்றாண்டு) - முதல்பாகம், மு. அருணாசலம், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், முதல்பதிப்பு, 1969.

21. தமிழ் இலக்கிய வரலாறு, கா. சுப்பிரமணிய பிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை. ஏழாம் பதிப்பு, 1973.

22. தமிழ்ப் பண்பாட்டில் வைணவம், கு. அருணாசலக் கவுண்டர், சமுதாயம் பிரசுராலயம், டிசம்பர் 1982.

23. தமிழ்ப் புலவர் வரலாறு (பதினேழாம் நூற்றாண்டு) ச. சோம சுந்தர தேசிகர், 1939.

24. தமிழில் கலம்பக இலக்கியம், எஸ். சௌந்தர பாண்டியன், ஸ்டார் பிரசுரம், சென்னை - 5.

25. திருக்குறள், பரிமேலழகர் உரையுடன், பாரதி பதிப்பகம், சென்னை - 17. 1966.

26. திருக்கோவையார், நல்லூர் ஆறுமுக நாவலர் (பதிப்பு) வித்தியாநுபாலன யந்திரசாலை, நான்காம் பதிப்பு, துந்துபி வருடம்.

27. திருவரங்கத்தந்தாதி - ஓர் ஆய்வு. ப. இராமச்சந்திரன், கலைக்குயில் பதிப்பகம், திருச்சி - 21. முதல்பதிப்பு, டிசம்பர், 1986.

28. திருவருணைக் கலம்பகம், சோம. இளவரசு (உரை) மணிவாசகர் நூலகம், சிதம்பரம், முதல் பதிப்பு, நவம்பர் 1968.
29 அ. திருவேங்கடக் கலம்பகம், முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார், சே. கிருஷ்ணமாச்சாரி (பதிப்பு) கணேச அச்சுக் கூடம், பரிதாபி வருடம்.
30. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினியார்க்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1977.
31. நந்திக் கலம்பகம், 4 சி. புன்னைவனநாத முதலியார், செ.ரெ. இராமசாமி பிள்ளை (உரையாசிரியர்கள்) கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, ஜூலை 1968.
32. நளவெண்பா, கோ. இராஜகோபாலப்பிள்ளை (உரை) கா.ர. கோவிந்தராஜ முதலியார் பதிப். மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், 1914.
33. நாலாயிர திவ்ய பிரபந்தம் - 1, டாக்டர் எம். நாராயண வேலுப்பிள்ளை (தெளிவுரை ஆசிரியர்) வி.எஸ்.வி. இராகவதாஸன் (பதிப்பு) முல்லை நிலையம், சென்னை - 17. முதல் பதிப்பு, 2000.
34. நாலாயிர திவ்ய பிரபந்தம் -2, டாக்டர் எம். நாராயண வேலுப்பிள்ளை (தெளிவுரை ஆசிரியர்) வி.எஸ்.வி. இராகவதாஸன் (பதிப்பு) முல்லை நிலையம், சென்னை-17. முதல் பதிப்பு, 2000.
35. நாலாயிர திவ்ய பிரபந்தம் - 3, வ.த. இராம சுப்ரமணியம் (தெளிவுரை ஆசிரியர்) வி.எஸ்.வி. இராகவதாஸன் (பதிப்பு) முல்லை நிலையம், சென்னை - 17. முதற்பதிப்பு, 2000.
36. நாலாயிர திவ்ய பிரபந்தம் - 4, டாக்டர் துரை. இராசாராம் (தெளிவுரை ஆசிரியர்) வி.எஸ்.வி. இராகவதாஸன் (பதிப்பு) முல்லை நிலையம், சென்னை - 17. முதல் பதிப்பு, 2000.
37. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், முனைவர் ச. சிவகாமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113. முதல் பதிப்பு, பிப்ரவரி, 1994.
38. பரப்பிரம விவேகம், ஸ்ரீ கோபாலாசாரியர் ஸ்வாமி (பதிப்பு) ஆம்பதில் அச்சுக்கூடம், சென்னை, 1908.
39. பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், டாக்டர்உ.வே.சாமிநாதையர், நான்காம் பதிப்பு, சென்னை, 1956.
40. புகழ் மணக்கும் வைணவத் தலங்கள், சி. முத்துப்பிள்ளை, பைலட் பப்ளிகேஷன்ஸ், சென்னை - 1. முதல் பதிப்பு - 1976.

41. மதுரைக் கலம்பகம், பு.சி. புன்னைவனநாத முதலியார், (உரை) கழக வெளியீடு, சென்னை, பிப்ரவரி, 1969.

42. மதுரை மீனாட்சியம்மை குறம் மூலமும் உரையும், முனைவர் ந.முருகேச பாண்டியன், முனைவர் தி. பூங்குன்றன், குமரிப்பதிப்பம், நாகப்பட்டினம், முதல் பதிப்பு, 2000.

43. மணிமேகலை, ஜெ. ஸ்ரீ சந்திரன் (உரை), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17. மூன்றாம் பதிப்பு, 2002.

44. மேற்கோள் விளக்கக் கதை, அகரவரிசை - முதல் பகுதி, சு.அ. இராமசாமிப் புலவர், கழக வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு 1963.

45. மேற்கோள் விளக்கக் கதை அகரவரிசை, இரண்டாம் பகுதி, சு.அ. இராமசாமிப் புலவர், கழக வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 1963.

46. வீரகேரளம் புதூர் நவநீத கிருட்டிணன் கலம்பகம், டாக்டர், வே. இரா. மாதவன் (பதிப்.), பாவை வெளியீட்டகம், தஞ்சை, முதல் பதிப்பு, 1994.

47. வைணவ திவ்விய தேசங்கள் - 108 (பாகம்-1) ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை - 17. 2006.

48. வைணவ மரபும், மெய்ப்பொருளியலும், டாக்டர் பி.ஆர். நரசிம்மன், விஷ்ணு பதிப்பகம், மதுரை, முதற் பதிப்பு, மார்ச், 1987.

...



## வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, 'நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்' என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்,**
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

